
# 1969 அவ்யக்த முரளிகள்!



**பொருளடக்கம் - 43**

**18 ஜனவரி 1969** பிதாஸ்ரீ அவர்கள் அவ்யக்தம் ஆன பின்பு குல்ஜார் தாதி மூலம் அவ்யக்த வதனத்திலிருந்து பெற்ற தெய்வீகச் செய்தி!

**21.01.1969-1** அமிர்தவேளையில் பிராப்தமான தெய்வீகச் செய்தி! நிலையான மற்றும் துண்டிக்கப்படாத நிலை -இந்த பரிசை புத்தி என்ற பெட்டியில் பாதுகாப்பாக வைக்க வேண்டும்!

**21.01.1969-2** சரீரம் விலகியது ஆனால் கரமும் துணையும் அல்ல!

**22.01.1969** பாப்தாதாவின் கைக்குள் புத்தி என்ற கை இருந்ததென்றால் பரிட்சைகள் என்ற கடலில் அசையமாட்டீர்கள்!

**23.01.1969** ஸ்திதியின் நினைவை ஏற்படுத்தக்கூடியது எலும்புகளே ஆகும்!

**25.01.1969** சமர்பணத்தின் உயர்ந்த நிலை -ஒவ்வொரு சுவாசத்திலும் நினைவு!

**02.02.1969** அவ்யக்த சந்திப்பின் அனுபவத்திற்கான விதி!

**1969 அவ்யக்த முரளிகள்!**

**06.02.1969 மகிமை கேட்பதை விடுங்கள் மகான் ஆகுங்கள்!**

**15.02.1969 சிவராத்திரி சமயத்தில் அவ்யக்த பாப்தாதாவின் மகாவாக்கியம்! (சந்த்ரி தாதி உடல் மூலமாக)**

**04.03.1969 ஹோலிப் பண்டிகையின் சுபவேளையில்!**

**13.03.1969 அன்பு மற்றும் சக்தி என்றகுணங்களின் சமத்துவம்!**

**20.03.1969 ஏழு விஷயங்களை விடுங்கள் மேலும் ஏழு விஷயங்களை தாரணை செய்யுங்கள்**

**17.04.1969-1 அபுவில் ஆன்மீக பொருட்காட்சியகத்தின் திறப்புவிழா!**

**17.04.1969-2 பிராமணர்களின் முக்கியமான சமஸ்காரம் -சர்வம்ச தியாகி**

**08.05.1969 மனம், சொல், செயலை சீர் செய்வதற்கான யுக்தி!**

**17.05.1969 மந்திரக் கண்ணாடி!**

## 1969 அவ்யக்த முரளிகள்!

**18.05.1969** ஆன்மீக ஞான யோகத்தின் ஜோதிடர்!

**26.05.1969** சம்பூர்ண சினேகத்தின் அடையாளம்!

**09.06.1969** சோம்பலின் இனிமையான ரூபம் -அலட்சியம்!

**16.06.1969** பெரியதிலும் பெரிய தியாகம் -அவகுணங்களின் தியாகம்!

**18.06.1969** குழுக்களுடன் **(Party)** சந்திப்பு!

**26.06.1969** படிப்பினை அளிப்பதற்கான சொரூபம் -தன்னுடைய சொரூபத்தின் மூலம் படிப்பினை அளிப்பது!

**06.07.1969** டீச்சர் சகோதரிகளுக்காக அவ்யக்த பாப்தாதாவின் மகாவாக்கியங்கள்!

**16.07.1969** மதுபன்வாசி கோபர்களுடன் அவ்யக்த பாப்தாதாவினுடைய அவ்யக்த உரையாடல்!

**17.07.1969** அவ்யக்த ஸ்திதியை உருவாக்குவதற்கான யுக்திகள்!

**19.07.1969** ஜீரோ மற்றும் ஹீரோ ஆகுங்கள்!

**23.07.1969** வெற்றிக்கு ஆதாரம் பகுத்தறியும் சக்தி!

## 1969 அவ்யக்த முரளிகள்!

**24.07.1969** பிந்து ரூபத்தின் பயிற்சி!

**27.08.1969** உதவியைப் பெறுவதற்கான சாதனம் -தைரியம்! (சந்தரி தாதியின் உடல் மூலமாக)

**15.09.1969** நினைவின் ஆதாரத்தில் நினைவுச்சின்னம்!

**18.09.1969** திரிநேத்ரி, திரிகாலதர்சி மற்றும் திரிலோகநாதன் ஆவதற்கான யுக்திகள்!

**28.09.1969** முழு படிப்பின் சாரம் -சொல்லையும் செயலையும் சமமாக்குங்கள்!

**03.10.1969** சம்பூரண சமர்ப்பணத்தின் அடையாளங்கள்!

**16.10.1969** பகுத்தறியும் சக்தியை அதிகரியுங்கள்!

**20.10.1969** பிந்து மற்றும் சிந்து என்ற நினைவின் மூலம் சம்பூரண நிலை!

**25.10.1969** மாலையின் மணி ஆவதற்காக வெற்றியாளர் ஆகுங்கள்!

**09.11.1969** எதிர்காலத்தை அறிவதற்கான யுக்திகள்! (தீபாவளி சுப தினத்தில் அவ்யக்த பாப்தாதாவின் இனிய மகாவாக்கியங்கள்)

# 1969 அவ்யக்த முரளிகள்!

**13.11.1969** பாப்தாதாவின் நம்பிக்கைகள்!

**17.11.1969** பூமியிலிருந்து ஆகாயத்திற்குச் செல்வதற்கான யுக்திகள்!

**28.11.1969** லௌகீகத்தை அலௌகீகமாக மாற்றுவதற்கான யுக்திகள்!

**06.12.1969** சரள சுபாவத்தின் மூலம் புத்தியை விசாலமானதாகவும், தொலைநோக்கு உடையதாகவும் ஆக்குங்கள்!

**20.12.1969** தெளிவான நினைவு மூலம் திட்டங்களின் வெற்றி!

**25.12.1969** பற்றற்றவர் ஆவதற்காக உடல் மற்றும் மனதை அடகுப்பொருள் என புரிந்து கொள்ளுங்கள்!

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

# 18.01.1969 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பிதாஸ்ரீ அவர்கள் அவ்யக்தம் ஆன பின்பு குல்ஜார் தாதி மூலம் அவ்யக்த வதனத்திலிருந்து பெற்ற தெய்வீகச் செய்தி!

**1.** உடல் மற்றும் மனதிலுள்ள குழப்பத்தை அகற்றிவிட்டு, ஆத்ம அபிமானி ஆகுங்கள்!

இன்று நாம் வதனத்திற்குச் சென்றவுடன் பாப்தாதா கூறினார்---சாகார பிரம்மாவின் ஆத்மாவில் ஆதியிலிருந்து இறுதிவரை 84-ஜென்மங்களின் சக்கரத்தில் வந்த சமஸ்காரம் உள்ளது. இன்றும் வதனத்திலிருந்து வலம் வர சென்றிருந்தார். எப்படி விஞ்ஞானிகள் ராக்கெட் மூலம் சந்திரன் வரை சென்று விட்டார்கள். எவ்வளவு சந்திரனுக்கு அருகாமையில் செல்கிறார்களோ அவ்வளவு இந்த பூமியின் ஈர்ப்பிலிருந்து விடுபட்டு விடுகிறார்கள். பூமியின் ஈர்ப்பு முடிந்து விடுகின்றது. அங்கே சென்றடைந்ததும் மிகவும் இலகுவான உணர்வு ஏற்படுகின்றது. அவ்வாறே, குழந்தைகள் நீங்கள் எப்பொழுது சூட்சும வதனத்திற்கு வருகிறீர்களோ, அப்பொழுது ஸ்தூல கவர்ச்சி முடிந்து விடுகிறது. அங்கேயும் பூமியின் ஈர்ப்பு இருக்காது. இது தவம், சிந்தனை, புத்தி மூலமாகவும், அது விஞ்ஞானத்தின் மூலமாகவும் ஏற்படுகின்றது. அந்த மனிதர்கள் ராக்கெட்டில் செல்லும்பொழுது அவர்கள் திரும்பி வருவதற்கான தொடர்பு கீழே உள்ளவர்களிடம் உள்ளது ஆனால் இங்கே எப்பொழுது செல்ல விருப்பம் உள்ளது, எப்படி விருப்பம் உள்ளது என்பது உங்களது கையில் உள்ளது.

இதன்பின் பாபா ஒரு காட்சியைக் காண்பித்தார். ஒளி பொருந்திய மிக உயரமான மலை இருந்தது. அந்த மலையின் கீழே சக்தி சேனை மற்றும் பாண்டவர்களின் அணியும் இருந்தது. மேலே பாப்தாதா

நின்றுகொண்டிருந்தார் அதன்பின் மிகுந்த கூட்டம் கூடி விட்டது. நாங்கள் அனைவரும் அங்கே நிற்பது சாதாரணமாக அல்லாமல் கோவிலின் சாட்சாத்கார மூர்த்தி (விக்ரகங்கள்) நிற்பது போல் இருந்தது. அனைவரும் மேலே பார்ப்பதற்கு முயற்சி செய்து கொண்டு இருந்தனர் ஆனால் மேலே பார்க்க இயலவில்லை. அனைவரும் மிகவும் ஏங்கி கொண்டிருந்தனர். பிறகு சிறிது நேரத்தில், சக்திகள் மற்றும் பாண்டவர்கள் மூலம் தான் நன்மை ஏற்பட வேண்டும் என்று ஓர் ஆகாஷ்வாணி (ஆகாய ஒலி) போல் சப்தம் கேட்டது. அந்த சமயம் எங்கள் அனைவரின் முகத்திலும் மிகுந்த கருணை உணர்வு இருந்தது. அதன் பின்னர், சிலருக்கு சக்திகள் மற்றும் பாண்டவர்களிடமிருந்து அவ்யக்த பிரம்மாவின் காட்சியும், சிவபாபாவின் காட்சியும் கிடைத்தது. பிறகு அந்தக் காட்சி பார்ப்பதற்கு அற்புதமாக இருந்தது. சிலர் சிரித்துக் கொண்டிருந்தனர், சில நடிப்பதற்கு முயற்சித்துக் கொண்டிருந்தனர், சிலர் அன்புக் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தனர் ஆனால் அனைத்து சக்திகளும் தீப்பிழம்புக்குச் சமமாக தேஜஸ்வி ரூபத்தில் லைத்திருந்தனர்.

இதைப் பற்றி பாபா, இறுதி நேரத்தில் உங்களுடைய இந்த வியக்த சரீரம் கூட முற்றிலுமாக அசையாததாக ஆகி விடும். இப்பொழுது பழைய கணக்குவழக்கின் காரணத்தினால் சரீரத்தின் பக்கம் இழுக்கின்றது ஆனால், இறுதியில் முற்றிலுமாக நிலையானதாகவும் சாந்தமாகவும் ஆகி விடும். எவ்வித கலகம் அல்லது குழப்பம் மனதிலோ, உடலிலோ இருக்காது என்றுரைத்தார். இதைத்தான் ஆத்ம அபிமானி ஸ்திதி என்று பாபா கூறுகின்றார். காட்சி முடிந்தபின், அனைத்து குழந்தைகளும் இப்பொழுது ஆத்ம அபிமானி ஆவதற்கான முயற்சி செய்யுங்கள் என்று சொல்ல வேண்டும் என்று பாபா கூறினார். எந்தளவு சேவையில் கவனம் இருக்கிறதோ அந்தளவு ஆத்ம அபிமானி ஆக வேண்டும் என்ற முக்கிய விஷயத்திலும் கவனம் இருக்க வேண்டும்.

**2.** பழைய சமஸ்காரம் என்ற இலைகளை சமாப்தி செய்து விதை ரூப நிலையை உருவாக்குங்கள்!

இன்று நான் வதனம் சென்றதும் பாப்தாதா குழந்தைளாகிய நம் அனைவரையும் வரவேற்பதற்காக எதிரில் ஆஜராகி இருந்தார்கள். நான் சென்றடைந்ததும், எப்படி சாகார ரூபத்தில் திருஷ்டியினால்

நினைவைப் பெற்றோமோ அதே போன்று அனுபவம் ஏற்பட்டது ஆனால், இன்றைய திருஷ்டியில் விசேஷமாக அன்புக்கடலின் ரூபம் வெளிப்பட்டிருந்தது. ஒவ்வொரு குழந்தையின் நினைவும் கண்களில் நிறைந்திருந்தது. அனைத்து குழந்தைகளும் நினைவை அனுப்பி இருக்கிறார்கள் ஆனால், இதில் இரு வித நினைவு உள்ளது. சில குழந்தைகளின் நினைவு அவ்யக்தமாக இருக்கிறது. சிலரின் நினைவில் அவ்யக்த உணர்வின் கூடவே வியக்த உணர்வும் கலப்படமாகி உள்ளது என்று பாபா கூறினார். 75% குழந்தைகளின் நினைவு அவ்யக்தமானதாக இருந்தது ஆனால், 25% குழந்தைகளின் நினைவு கலப்படமாக இருந்தது. பின்னர், பாபா அனைவருக்கும் அன்பு மற்றும் சக்தி நிறைந்த திருஷ்டியை கொடுத்தார். ஒரு காட்சி உருவானது. அனைத்து குழந்தைகளின் குழு நின்று கொண்டிருந்தது. மேலும் மேலிருந்து அதிகமான மலர்களின் மழை பொழிந்து கொண்டிருப்பதைக் கண்டோம். முற்றிலுமாக நாற்புறமும் மலர்கள் அல்லாமல் வேறு எதுவும் தென்படவில்லை. குழந்தாய், பாப்தாதா அன்பு மற்றும் சக்தியை குழந்தைகளுக்குக் கொடுத்திருக்கிறார்கள் ஆனால் கூடவே தெய்வீக குணங்கள் என்ற மலர்களின் மழையை போதனைகளின் ரூபத்திலும் அதிகமாகச் செய்திருக்கிறார்கள் ஆனால், தெய்வீக குணங்களின் போதனையை ஒவ்வொரு குழந்தையும் அவரவர் சக்திக்கேற்பதான் நடைமுறைப்படுத்தி இருக்கிறார்கள் என்று பாபா கூறினார்.

இதன்பின் மற்றுமொரு காட்சியைக் காண்பித்தார். மூன்று வித ரோஜா மலர்கள் இருந்தன; ஒன்று இரும்பாலானது, இரண்டாவது லேசான பித்தளையினாலானது, மூன்றாவது உண்மையான ரோஜாவாக இருந்தது. பாபா கூறினார், குழந்தைகளின் முடிவும் (Result) கூட இவ்விதமே இருக்கிறது. இரும்பாலான மலரானது குழந்தைகளின் கடுமையான சமஸ்காரத்தின் அடையாளமாகும். இரும்பை மிகவும் அடிக்க வேண்டியதாக உள்ளது, எதுவரை சூடாக்கப்படவில்லையோ சம்மட்டியால் அடிக்கப்படவில்லையோ அதுவரை வளைக்க முடியாது. அவ்வாறே, சில குழந்தைகளின் சமஸ்காரம் இரும்பைப் போன்று கடுமையானதாக உள்ளது. அவர்கள் எவ்வளவுதான் சூளையிலேயே இருந்தாலும் மாறுவதில்லை. இரண்டாமவர்கள் வளைப்பதன் மூலம் அல்லது உழைப்பின் மூலம் சிறிது மாறுகிறார்கள். மூன்றாமவர்கள் இயற்கையிலேயே ரோஜாவாக இருக்கின்றனர். இவர்கள்

ரோஜாவிற்குச் சமமாக ஆவதற்கு எவ்விதத்திலும் உழைக்கவில்லை. இவ்வாறு உரைத்தவாறே பாபா உண்மையான ரோஜா மலரை தனது கையில் எடுத்து கொஞ்சம் சுழற்றினார். சுழற்றியவுடன் அதன் அனைத்து இதழ்களும் உதிர்ந்து விட்டன. மேலும், விதைகள் மட்டு மீதமிருந்தன. பின் பாபா கூறினார், "பாருங்கள் குழந்தைகளே, எப்படி இதன் இதழ்கள் எவ்வளவு சீக்கிரமாக மேலும் எளிதாக தனியாகி விட்டன. அவ்வாறே, குழந்தைகளும் முற்றிலுமாக, உடனடியாக, பழைய சமஸ்காரம், பழைய தேகத்தின் சம்பந்தம் என்ற இலையை உதிர்க்க வேண்டும். பின் விதை ரூப நிலையில் நிலைத்து விட வேண்டும். அப்படி முயற்சி செய்ய வேண்டும். ஒருவேளை சமயம் வரும்பொழுது ஏதாவது சமஸ்காரம் என்ற இதழ் ஒட்டியிருக்குமா? அதற்காக உழைக்க வேண்டிருக்குமா? கர்மாதீத் நிலை எளிதாக உருவாகி விடுமா அல்லது ஏதாவது கர்மபந்தனம் அந்த நேரம் தடை ஏற்படுத்துமா? என்று தன்னை சோதனை செய்யுங்கள். இச்செய்தியை அனைத்து குழந்தைகளுக்கும் கொடுக்க வேண்டும். ஒருவேளை ஏதாவது குறை இருக்கிறதென்றால் சோதனை செய்யுங்கள் மேலும் நிறைப்பதற்கு முயற்சி செய்யுங்கள்.

**3.** அன்பு மற்றும் ஒற்றுமைக்காக ஒவ்வொருவரின் கருத்திற்கும் மரியாதை கொடுங்கள் !

இன்று பாபா மதுபன் வருவதற்கான அழைப்பு கொடுப்பதற்காக வதனம் சென்றேன். இன்று பாபாவிற்கு எண்ணம் இல்லை என்பது பாப்தாதாவின் சமிக்ஞைகளால் தெரிய வந்தது. இவ்வாறு இருக்கையிலேயே பாபா கூறினார், "நல்லது குழந்தாய், அனைத்து குழந்தைகளும் அழைத்திருக்கிறார்கள். பாப்தாதா குழந்தைகளின் சேவாதாரியாக இருக்கிறார்கள்". இதைக் கேட்டு பாபா இப்பொழுது தான் மறுத்தார் ஆனால் உடனேயே சரி என்றும் கூறிவிட்டார். ஏன்? என்ற எண்ணம் எழுந்தது. உள்ளத்தின் சங்கல்பத்தை அறிந்து பாபா கூறினார், "குழந்தைகள் நீங்களும் கூட ஒவ்வொருவருடைய கருத்து, ஒவ்வொருவருடைய எண்ணங்களுக்கு மரியாதை அளிக்க வேண்டும் என்பதற்காக, பாபா அறிந்தே செயல் செய்து கற்பித்துக் கொண்டிருக்கிறார். யாராவது ஆலோசனை வழங்குகிறார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள் மேலும் உங்களுக்கு அது நல்லது என்று தோன்றவில்லை என்றாலும் கூட அவருடைய ஆலோசனையை

உடனே அவமதிக்கக் கூடாது. முதலில் அவருக்கு ஆமாம், ஏன் கூடாது? மிகவும் நல்லது என்று மரியாதை கொடுங்கள். இதனால் அவருடைய ஆலோசனைக்கான வேகம் குறைந்து விடும். பிறகு நீங்கள் அவருக்கு என்ன புரிய வைப்பீர்களோ அதை புரிந்து கொள்ள முடியும். ஒருவேளை நேரடியாகவே அவரது ஆலோசனையைத் துண்டித்தால் இரு சக்திகளும் மோதிக்கொள்ளும் மேலும் முடிவில் வெற்றி கிடைக்காது. அதனால் ஒருவருடைய எண்ணம் அதாவது கருத்திற்கு முதலில் மரியாதை கொடுப்பது அவசியமானதாகும். இதன் மூலம் தான் தங்களுக்குள் அன்பு மற்றும் ஒற்றுமை இருந்துகொண்டே இருக்கும்".

**4.** சாகார அலங்காரத்தினுடைய நடைமுறை சொரூபம் அவ்யக்த ஸ்திதியை உருவாக்கிக் காட்டுங்கள்!

இன்று நான் வதனத்திற்குச் சென்று சேர்ந்ததுமே பாப்தாதா எதிரில் இருந்தார்கள் ஆனால், பிரம்மாபாபாவின் கழுத்தில் மாலையின் குவியல்கள் இருந்தன. பின்னர், பாபா, இந்த மாலையை கழற்றிப் பாருங்கள் என்று கூறினார். மாலையை கழற்றினால் அவற்றில் சில பெரிய மாலைகளாக இருந்தன. சில சிறிய மாலைகளாக இருந்தன. பாபா, இதன் ரகசியம் என்ன? என்று நான் கேட்டேன். குழந்தாய், இவை அனைத்தும் புகார்களின் மாலையாகும். ஏனென்றால் குழந்தைகள் எப்பொழுது ஏகாந்தத்தில் அமர்கிறார்களோ அப்பொழுது பாபாவிற்கு அன்பில் புகார்களைத் தான் சொல்கிறார்கள். ஒவ்வொரு குழந்தையும் பாபாவிற்கு புகார்களின் மாலையை அவசியம் அணிவிக்கிறார்கள் என பாபா கூறினார். குழந்தைகளுக்கு நாடகத்தின் நினைவு இருக்கத்தான் செய்கிறது; ஆனால், அவசியம் அன்பிலும் அன்பானவர் ஆவார். அதனால், நாடகத்தில் திடீரென நடைபெற்ற அதிசயத்தைக் கண்டு ஒவ்வொரு குழந்தையும் உள்ளத்திலிருந்து புகார் செய்து கொண்டே இருக்கின்றது. குழந்தைகளுக்கு ஞானம் இருக்கவே செய்கிறது ஆனால் ஞானத்தின் கூடவே அன்பு மற்றும் சினேகமும் உள்ளது ஆதலால் இந்த புகார்களை தவறு என்று கூறவில்லை என்றுரைத்தார் பாபா. பிறகு, "பாபா தாங்கள் இதற்கு என்ன பதில் அளித்தீர்கள்", என்று நான் கேட்டேன். அதற்கு பாபா எப்படி குழந்தையோ அப்படி பதில் கொடுக்கிறேன்" என்று பாபா கூறினார். நானும் கூட பதிலாக குழந்தைகளுக்குப் புகார்களின் மாலையைத்தான் அணிவிக்கிறேன். அது என்ன?' என்றார் பாபா. பின்னர், பாபா, குழந்தைகள் மீது பாபாவிற்கு

என்ன ஆசை இருந்ததோ அதை சாகார ரூபத்தில் பாபாவிற்கு காண்பிக்கவில்லை. அதை இப்பொழுது அவ்யக்த ரூபத்தில் காண்பிக்க வேண்டும்" என்று கூறினார். பாபா கூறினார், இந்த புகாரும் கூட இனிமையான உரையாடலாக இருக்கிறது. இது கூட குழந்தைகளுடைய ஒரு விளையாட்டாக இருக்கிறது. சாகார ரூபத்தில் பாப்தாதா என்ன அலங்காரம் செய்வித்தார்களோ, அதை இப்பொழுது அவ்யக்த வதனத்தில் பாப்தாதா காண்பார்கள். இந்த காட்சி முடிவுற்றது. பிறகு, 'போக்' சுவீகாரம் செய்விக்கப்பட்டது. பிறகு, நான் பாபாவிடம், பாபா, நீங்கள் முழு நாளும் வதனத்தில் என்ன செய்கின்றீர்கள்? எனக் கேட்டேன். பாபா கூறினார், வாருங்கள் நான் உங்களுக்கு வதனத்தினுடைய அருங்காட்சியகம் (Museum) காண்பிக்கின்றேன். நீங்கள் அருங்காட்சியகம் (Museum) உருவாக்குவதற்கு முன்னரே திட்டம் தீட்டுகிறீர்கள், பாபாவினுடைய அருங்காட்சியகம் ஒரு வினாடியில் தயாராகி விடுகிறது என்று பாபா கூறினார். பிறகு, என்ன பார்த்தேன்? ஒரு மிகப் பெரிய அறை (Hall) இருந்தது. ஒரே அறையில் குழந்தைகள் நாம், அநேக மாதிரிகளின் (Models) ரூபத்தில் நின்று கொண்டு இருந்தோம். பாபா நாங்களே அருங்காட்சியகத்தில் நின்று கொண்டு இருக்கிறோம் என்று நான் கூறினேன். குழந்தாய், பாபாவினுடைய அருங்காட்சியகம் இது தான். இப்பொழுது நீங்கள் செல்லுங்கள். சென்று பாப்தாதா என்ன என்னவெல்லாம் அலங்கரித்து இருக்கிறார் என்று ஒரு மாதிரியைப் (Models) பாருங்கள் என்று பாபா கூறினார். எப்படி சித்திரம் உருவாக்குபவர் மூர்த்தியை அலங்கரித்து இருக்கிறார். பாபா கூறினார் பாருங்கள், பாப்தாதா எப்படியெல்லலாம் அலங்கரித்து இருக்கிறார்கள்? நான் மாதிரியின் (Models) அருகில் சென்றேன் ஆனாலும் எனக்கு குறிப்பாக எதுவும் தென்படவில்லை. முழுமையாக அலங்கரிக்கப்பட்ட மூர்த்தி தென்பட்டுக் கொண்டு இருந்தது. எது பெரிய அலங்காரமாக இருக்கிறதோ அதை சாகாரத்திலேயே குழந்தைகளுக்கு செய்து வந்து இருக்கின்றார் ஆனால், இப்பொழுது அவ்யக்த ரூபத்தில் என்ன அலங்கரித்து கொண்டு இருக்கின்றார்? சர்வ அலங்காரமும் இருக்கின்றன; ஆபரணங்களும் இருக்கின்றன ஆனால், ஆபரணத்தில் இடையில் ரத்தினங்களைப் பதித்துக் கொண்டு இருக்கின்றார் என்று பாபா கூறினார். பாபாவினுடைய கூற்றின் பின் சிலவற்றில் மிகையான ரத்தினங்கள் தென்பட்டன. பாபா, குழந்தைகளுக்காக முக்கிய போதனை

என்னவென்றால், அவ்யக்த ஸ்திதியில் நிலைத்திருந்து வியக்த உணர்வில் வாருங்கள். ஏகாந்தத்தில் அமரும்பொழுது அவ்யக்த ஸ்திதி உள்ளது, ஆனால் வியக்தத்தில் இருந்து கொண்டே அவ்யக்த உணர்வில் நிலைக்க வேண்டும். இதைத் தவற விட்டுவிடுகின்றனர். ஆதலால், ஏக்ரஸ்-கர்மாதீத் நிலையின் ரத்தினம் எதுவோ, அது குறைவாக உள்ளது. அதனால் எவருடைய வாழ்க்கையில் என்ன குறையைக் காண்கின்றேனோ அதை அலங்கரித்துக் கொண்டிருக்கின்றேன். எப்படி சாகார ரூபத்தில் இக்காரியம் செய்தேன், அதையே மீண்டும் அவ்யக்த ரூபத்தில் செய்கின்றேன். முழு நாளும் எவ்வாறு தந்தை குழந்தைகளை அலங்கரிக்கின்றாரோ, அவ்வாறு குழந்தைகளுக்கு உணர்வு வருகிறதா? என்று குழந்தைகளிடம் சென்று கேட்க வேண்டும். எக்குழந்தைகள் யோகயுக்த்தாக உள்ளனரோ அவர்களுக்கு பாபா இந்த நேரம் என்னுடன் உரையாடிக் கொண்டிருக்கின்றார். அலங்கரித்துக் கொண்டிருக்கின்றார் என்ற உணர்வு ஏற்படும். எப்படி நான் அவ்யக்த வதனத்தில் குழந்தைகளை சந்திக்கின்றேன். மகிழ்ச்சிப்படுத்திக் கொண்டிருக்கிறேன் என்பதை அவ்யக்த கூடம் தரிக்கும் குழந்தைகள் அனுபவம் செய்ய இயலும். நானும் முக்கியமான தருணத்தில் விசேஷமான குழந்தைகளை நினைவு செய்கின்றேன். அந்த உணர்வு குழந்தைகளுக்கு ஏற்பட்டிருக்கும், என்று உரைத்தார். "பாபா, நீங்கள் அனைவரையும் ஏன் அவ்யக்த வதனத்திற்கு அழைப்பதில்லை? இங்கேயே பெரிய சென்டர் திறந்து விடுங்கள். இப்பொழுது அனைத்து குழந்தைகளும் விடுபட்டு விட்டனர் என்று நான் கூறினேன். இந்த விடுபட்ட நிலை ஏற்பட்டுத்தான் ஆக வேண்டும். எப்பொழுதும் தயார் நிலையில் இருக்க வேண்டும். இது கூட நினைவு யாத்திரைக்கு பலம் கொடுக்கிறது. இந்த விடுபட்ட நிலை எளிதான நினைவிற்கான உபாயம் ஆகும். சமயம் அதிகம் இல்லை, பாபா எந்நேரத்திலும் எவரையும் அழைத்து விடுவார் என்பதை இப்பொழுது குழந்தைகளுக்குச் சொல்ல வேண்டும்.

**5.** சாகாரத்தில் இருந்தாலும் ஒளி, சக்தி ரூபம் ஆவதற்கு உள்நோக்குமுகம் உடையவராக இருங்கள்!

இன்று வதனத்திற்குச் செல்லும்பொழுதே ஒளியின் மேகங்களைக் கடந்து வதனத்தில் சென்று கொண்டு இருப்பதாக அனுபவம் ஏற்பட்டது. சூரியன் அஸ்தமிக்கும் நேரத்தில் செந்நிறமாகத் தென்படுவது போல

# 1969 அவ்யக்த முரளிகள்!

மேகங்களின் ஒளியானது தென்பட்டுக் கொண்டு இருந்தது. வதனத்திற்கு நான் சென்று சேர்ந்ததும் அங்கும் ஒளியின் மேகங்களுக்கு இடையில் பாப்தாதாவினுடைய முகம் சூரியன், சந்திரனிற்குச் சமமாக ஜொலித்துக் கொண்டு இருப்பதைக் கண்டேன். காட்சி மிக அழகாக தென்பட்டுக் கொண்டிருந்தது ஆனால் இன்றைய வாயுமண்டலம் முற்றிலும் சாந்தமாக இருந்தது. பாப்தாதாவுடன் கூடிய சந்திப்பிலும் கூட சாந்தி மற்றும் சக்தியினுடைய உணர்வு வந்து கொண்டிருந்தது. பின்னர் புன்னகைத்துக் கொண்டே பாபா கூறினார், குழந்தைகள் நீங்கள் சாகார சரீரத்தில், சாகார சிருஷ்டியில் இருக்கிறீர்கள் ஆனால், சாகாரத்தில் இருந்தாலும் அப்படிப்பட்ட ஒளி, சக்தி ரூபமாகி இருக்க வேண்டும். யாரேனும் பார்த்தால், இவர்கள் யாரோ பரிஸ்தாக்கள் சுற்றிக் கொண்டிருக்கின்றனர் என்று உணர வேண்டும் ஆனால், எப்பொழுது ஏகாந்தத்தில் அமர்ந்து உள்நோக்குமுக நிலையில் இருந்து தன்னை சோதனை செய்வீர்களோ அப்பொழுது தான் அந்நிலை ஏற்படும். இவ்விதமான நிலையின் மூலம் தான் ஆத்மாக்களுக்கு உங்கள் மூலம் காட்சி கிடைக்கும். இன்று வதனத்தில் ஒருபுறம் முற்றிலும் சாந்தி இருந்தது. மறுபுறம் அன்பு ரூபம் மிகுந்து இருந்தது. என்ன பார்த்தேன்? பாபாவின் கரங்களில் அனைத்து குழந்தைகளும் நிறைந்து இருந்தனர். கூடவே, அன்புக்கடலாகவும் இருந்தார். பாபா, சக்திகளாகிய நீங்களும் கூட சர்வ ஆத்மாக்களையும் இவ்வாறே, இப்பொழுது தனது அருகாமையில் கொண்டு வரவேண்டும். உங்களுடைய திருஷ்டியில் பாபாவிற்குச் சமமாக எப்பொழுது அன்பு மற்றும் சக்தியாகிய இவ்விரு சக்திகளும் இருக்குமோ அப்பொழுது ஆத்மாக்கள் அருகாமையில் வருவார்கள் என்று உரைத்தார்.

இதன் பின்னர், பாபா மூன்று காட்சிகளைக் காண்பித்தார். பாபாவிற்கு முன்னால் அதிகமான அட்டைகள் கிடந்ததைக் கண்டேன். இந்த அட்டைகளை ஒரு இயற்கைக்காட்சி (Scenery) ஆகும் விதமாக அலங்கரியுங்கள் என்றார் பாபா. ஏனென்றால், ஒவ்வொரு அட்டையிலும் இயற்கைக் காட்சியினுடைய வரைபடம் இருந்தது -சிலவற்றில் சித்திரமும் சிலவற்றில் சரீரமும் இருந்தன. நான் அவற்றை இணைப்பதில் ஈடுபட்டேன். சில தலைகீழாகவும், சில நேராகவும் இணைந்தது. பாப்தாதா மிகவும் சிரித்துக் கொண்டிருந்தார்கள். அதில் மிக அழகான சத்யுகக் காட்சிகள் இருந்தன.

ஒன்றில் கிருஷ்ணர் பாலகன் ரூபத்தில் ஊஞ்சலில் ஆடிக் கொண்டிருந்தார். கூடவே, பணியாட்கள் ஆட்டிக் கொண்டிருந்தனர். மற்றொன்றில் தோழன், தோழிகளினுடைய விளையாட்டு இருந்தது. அதாவது, சத்யுகத்தினுடைய தினசரி காரியம் இருந்தது. பின்னர், பாபா விடைகொடுக்கும் தருணத்தில் குழந்தாய், சக்தி சொருபம் ஆகுக! மேலும் அன்பு சொரும் ஆகுக! என்ற இச்செய்தியை அனைவருக்கும் கொடுக்க வேண்டும் என்று கூறினார்.

**6.** அன்பிற்கு திரும்பக் கொடுக்கும் பரிசு -தூய்மை மற்றும் யோகி ஆகுங்கள் !

இன்று இந்த தேகம் மற்றும் தேகத்தின் உலகைக் கடந்து நமது சூட்சும வதனத்திற்கு, எதை பிரம்மாபுரி என்றழைக்கிறோமோ, அங்கு சென்றதும் பரமாத்மா தந்தை ஒரு காட்சி காண்பித்தார். மிகப் பெரிய ஒரு கூட்டத்தைக் கண்டேன். பிறகு ஒருவர் நுழைவுச்சீட்டு கொடுத்துக் கொண்டிருக்கிறார். தனக்கும் நுழைவுச்சீட்டு கிடைக்கப் பெற ஒவ்வொருவரும் முயற்சித்துக் கொண்டிருந்தனர் ஆனால், சிறிது நேரத்தில் பார்த்தால் சிலருக்கு நுழைவுச்சீட்டு கிடைத்திருந்தது மேலும் சிலர் நுழைவுச்சீட்டு கிடைக்காமல் போயிற்று. யாருக்கு நுழைவுச்சீட்டு கிடைத்ததோ அவர்கள் உள்ளத்தில் மகிழ்ச்சியுடன் இருந்தனர். யாருக்குக் கிடைக்கவில்லையோ அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டிருந்தனர். அந்த நுழைவுச்சீட்டு எவ்விடத்திற்கானது, அதைப் பற்றி மற்றுமொரு காட்சியைக் கண்டேன். ஒரு பெரிய அழகிய வாயிற்கதவு இருந்தது, அது திடீரெனத் திறந்தது. எவரிடம் நுழைவுச்சீட்டு இருந்ததோ அவர்கள் அவ்வாசல் வழியாக உள்ளே சென்று விட்டனர். எவரிடம் நுழைவுச்சீட்டு இல்லையோ, அவர்கள் மிகுந்த பச்சாதாபத்துடன் பார்த்துக் கொண்டிருந்தனர். அந்த வாயிற்கதவில் சொர்க்கவாசல் என்று எழுதப்பட்டிருந்தது. பரமாத்மா தந்தை அனைத்து குழந்தைகள் மூலம் சத்யுக உலகம் சொர்க்கம் செல்வதற்கான நுழைவுச்சீட்டை கொடுக்க வைத்துக் கொண்டிருக்கிறார் ஆனால், இப்பொழுதில்லாமல் பின்னர் பெற்றுக் கொள்ளலாம் என்று சில குழந்தைகள் யோசித்துக் கொண்டு இருக்கின்றனர் ஆனால் இந்நுழைவுச் சீட்டு கிடைப்பது முடிந்து விட்டது மேலும் சொர்க்கம் செல்வதிலிருந்து வஞ்சிக்கப்பட்டவர் ஆகி விடுவர் என்ற நிலை ஏற்பட்டு விடக்கூடாது என்ற ரகசியத்தைப் பாபா

கூறினார். சில ஆத்மாக்கள் இது என்ன காரியம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது? எனக் கேட்கின்றனர், யோசிக்கின்றனர். இப்பொழுது யோசித்து யோசித்து தனது பாக்கியத்தை இழந்து விடாதீர்கள் என்ற படிப்பினையை பாப்தாதா குழந்தைகளுக்கு அளித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று பாபா கூறினார்.

பிறகு, மற்றுமொரு காட்சியைக் கண்டேன். நதி பாய்ந்து கொண்டிருந்தது. அந்த நதியில் மிகத் தொலைவிலிருந்து சிலர் வந்து ஸ்நானம் செய்து கொண்டிருந்தனர், சிலர் அங்கேயே அருகாமையில் இருந்தனர் ஆனால் ஸ்நானம் செய்யாமல் இருந்தனர். மாறாக அவர்களிடம் (அருகாமையில் இருப்பவரிடம்) சிலர் நதி எங்குள்ளது, நாங்கள் சென்று ஸ்நானம் செய்ய வேண்டும் என கேட்டு கொண்டிருந்தனர் ஆனால், யார் அருகாமையில் இருப்பவர்களோ அவர்களுக்கு நதியில் ஸ்நானம் செய்வதன் மகத்துவம் தெரியாமல் இருந்தது. மேலும் எவர் தாகத்தில் இருந்தனரே அவர்களுக்கும் அத்தாகத்தின் மதிப்பை குறைத்துக் கொண்டிருந்தனர். பிறகு, பாபா கூறினார், குழந்தாய், இது ஞானகங்கையாகும். கங்கையின் அருகிலிருப்பவர்கள் அபுநிவாசிகள் ஆவார்கள். தொலைவில் இருந்து வந்து இதில் ஸ்நானம் செய்கின்றனர் ஆனால் இங்கிருப்பவர்கள் இதன் மகத்துவம் அறியாமல் அவர்களை (தொலைவில் இருப்பவர்கள்) விலக்குகின்றனர். இந்த தவறு இழைப்பவகளாகவே அவர்கள் இருந்து விடலாகாது. ஆதலால் பாப்தாதாவிற்கு அனைவரும் குழந்தைகளே, கட்டளைப்படி நடக்கும் குழந்தைகளாக இல்லாதிருப்பினும் குழந்தைகள் பாபாவிற்கு பிரியமானவர்களே! இது விலைமதிக்கமுடியாத சமயமாகும். இது ஞானகங்கையில் ஸ்நானம் செய்வதற்காக கிடைத்துக் கொண்டிருக்கிறது. அதை ஒருபோதும் இழந்து விட வேண்டாம் என குழந்தைகளுக்கு பாபா படிப்பினை அளிக்கின்றார். பிறகு, சிறிது நேரத்தில் பலர் ஸ்நானம் செய்தனர், பலர் நீரை நிறைத்து வைத்துக் கொண்டனர் ஆனால் சிறிது நேரத்திற்குப் பின் நதியின் வழி மாறிவிட்டது. எவரெல்லாம் குளிக்கவில்லையோ, நிறைத்து வைக்கவில்லையோ அவர்கள் பிறரிடமிருந்து ஒரு ஒரு துளியாக யாசித்துக் கொண்டிருந்தனர். துடித்துக் கொண்டிருந்தனர். பாபா கூறினார், இந்த சமயம் இப்பொழுது வரவிருக்கிறது. பின்னர், பாபா அனைத்து குழந்தைகளுக்காக ஒரு மகா மந்திரத்தின் பரிசு

கொடுத்தார். ஒன்று பரமபிதாவாகிய எனது நினைவில் இருங்கள் மேலும் தனது வாழ்க்கையை தூய்மையாகவும் யோகியாகவும் ஆக்குங்கள் என்று பாபா கூறினார். இந்த மகாமந்திரத்தையே பாப்தாதா அன்பிற்குக் கைமாறாக, பரிசாக அனைவருக்கும் அளித்தார்கள்.

**7.** கர்மயோகத்தில் யோகபலத்தின் வெற்றி -ஒரு விசித்திரமான அனுபவம் !

இன்று எப்பொழுது வதனத்திற்குச் சென்றேனோ, சென்றதுமே சிவபாபா மற்றும் நமது பிரம்மாபாபா, இருவருமே ஒன்றாக அமர்ந்திருந்தனர். மேலும், அவர்களுக்கு எதிரில் ஒரு சிறிய மலை உருவாகி இருந்ததைக் கண்டேன். அது என்ன? அநேக கடிதங்களின் குவியல் இருந்ததைக் கண்டேன். அவ்வளவு கடிதங்கள் இருந்தன, ஒரு மலை போல் குவிந்து இருந்தன. நான் சென்றடைந்ததும் பிரம்மாபாபா என்னைப் பார்த்தார். மேலும், கூறினார், இஷு எங்கே இருக்கிறார்? எவ்வளவு கடிதங்கள் வந்து விட்டன. பாபா, நான் வந்திருக்கிறேன் என்று நான் கூறினேன். இஷு குழந்தையையும் உடன் அழைத்து வந்திருக்கிறீர்கள் அல்லவா! பாருங்கள். இஷு குழந்தையே, நான் இரண்டு நிமிடங்களில் இந்த அனைத்து கடிதங்களையும் முடித்து விடுகிறேன், என்று பாபா கூறினார். சிவபாபா சாட்சியாகி சிரித்துக் கொண்டு இருந்தார். சிறிது நேரத்தில் இஷு சகோதரியும் அங்கு தோன்றி விட்டார். இஷுவினுடைய முகமானது முற்றிலும் சாந்தமாக இருந்தது. குழந்தாய், என்ன யோசித்துக் கொண்டிருக்கிறீர்கள்? இன்று கடிதங்களுக்கான பதில் கொடுக்க வேண்டும், என்று பாபா கூறினார். அத்தருணம் சாகார வதனத்தின் சமஸ்காரம் முழுமையாக வெளிப்பட்டு இருந்தது. மம்மா நின்று கொண்டு பார்த்துக் கொண்டு இருந்தார்கள். அப்பொழுது சிவபாபா பிரம்மாபாபாவிடம், நீங்கள் எங்கு இருக்கிறீர்கள்? வதனத்தில் இருக்கிறீர்களா? என்று கேட்டார். பிறகு, ஒரு வினாடியிலே ரூபம் மாறி விட்டது. பாபா எதுவும் கூறவில்லை, முற்றிலும் மயான அமைதி (Dead Silence) ஆகி விட்டது. பாபா என்னிடம் குழந்தாய், இந்த கடிதத்தை திறந்து பாருங்கள் என்றார். நான் கூறினேன் -பாபா கடிதங்கள் அநேகம் இருக்கின்றன. குழந்தாய், இதற்கு ஒரு வினாடியே ஆகும் ஏனென்றால் அனைத்திலும் ஒரே விஷயம்தான் இருக்கிறது என்று பாபா கூறினார். இதன் பின்னர், பாபா அனைத்து கடிதங்களிலும் குழந்தைகளுடைய புகார்களே இருக்கின்றன.

இப்பொழுது பார்க்க வேண்டும், பாபா குழந்தைகளுக்கு விடை அளிக்கிறார். பாருங்கள், ஒரு வினாடியிலேயே அனைத்திற்கும் பதிலளித்து விடுகிறேன் என்றார். பிறகு, பாபா செந்நிற எழுத்துக்களில் இங்கே எழுதியது போலவே கடிதம் எழுதினார். கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது-பிராமண குல பூஷணர்கள், சுயதரிசன சக்கரதாரி, கண்ணின் மணிகளான குழந்தைகளுக்காக செய்தி என்னவென்றால், அனைத்து குழந்தைகளுடைய புகார்களின் கடிதம் சூட்சும வதனத்திற்கு வந்தடைந்தது. விடையாக பாப்தாதா குழந்தைகளுக்கு நாடகத்தினுடைய விதியின் பந்தனத்தில் சர்வ ஆத்மாக்களும் கட்டுண்டு இருக்கின்றன, அனைவரும் நடிப்பை நடித்துக் கொண்டு இருக்கின்றனர். அந்த நாடகத்தின் இனிமையிலும் இனிமையான பந்தனத்தின் அனுசாரம் இன்று அவ்யக்த வதனத்தில் நடிப்பை நடித்துக் கொண்டு இருக்கிறேன். அனைத்துக் குழந்தைகளுக்கும் உளமார்ந்த, அன்பான, அவ்யக்த ரூபத்தின் வாயிலாக மிக மிக மிக அன்பு நினைவுகளை ஏற்றுக் கொள்ளுங்கள். எவ்வாறு பாபாவின் ஸ்திதி இருக்கிறதோ அவ்வாறே குழந்தைகள் ஸ்திதியை வைத்துக் கொள்ள வேண்டும். இதுவே பாப்தாதாவின் கடிதமாக இருந்தது. பிறகு, பாபா எனக்கு 'போக்' சுவீகாரம் செய்வித்தார். குழந்தாய், இன்று சில புதிய குழந்தைகளும் வந்துள்ளனர். முதலில் நான் அவர்களை உண்ணச் செய்கிறேன் என்று பாபா சொன்னார். பிறகு, பாபா வதனத்தில் அனைத்து குழந்தைகளையும் தோற்றுவித்தார். பாபா சீக்கிரம் சீக்கிரமாக திருஷ்டியும் கொடுத்துக் கொண்டு இருந்தார். கரங்களால் உணவு அருந்தச் செய்து கொண்டிருந்தார் ஆனால் ஒவ்வொருவருக்கும் ஒரு வினாடி, என்ன திருஷ்டி கொடுத்துக் கொண்டிருந்தாரோ அந்த திருஷ்டியில் அநேக விஷயங்கள் நிறைந்திருந்தது. அதன் பின்னர் மூன்றாவது காட்சியும் நான் கண்டேன். நான் பாபாவிடம் அனைவரும் ஒரு கேள்வியை கேட்பதற்காகச் சொல்லி இருக்கிறார்கள் என்று கூறினேன். "என்ன கேள்வி இருக்கிறதோ அதை கேட்கலாம். பாபா ஒரு வார்த்தையில் பதிலளிப்பார்" என்று கூறினார் பாபா.

கேள்வி: அனைவரும் கேட்கின்றனர் இறுதி நேரத்தில் தாங்கள் எதுவும் சொல்லவில்லை வெளியில் நடந்த காட்சியை நாங்கள் அனைவரும் கேட்டோம் ஆனால் அகத்தில் என்ன இருந்தது -அந்த அனுபவத்தையும் கேட்க விரும்புகிறார்கள்.

ஆம் குழந்தாய், ஏன் கூடாது? பாபா தனது அனுபவத்தை சொல்வார். நல்லது. கேளுங்கள் -குழந்தாய் விளையாட்டு 10-15 நிமிடங்கள் மட்டும் தான் நடந்தது. அந்த கொஞ்ச நேரத்திலே அநேக விளையாட்டு நடந்தது. அதில் வெவ்வேறு அனுபவம் ஏற்பட்டது. முதல் அனுபவம் என்னவென்றால், முதலில் வலிமையுடன் யுத்தம் நடந்தது. எதனுடைய யுத்தம்? யோகபலம் மற்றும் கர்மவினையின் யுத்தம்! கர்மவினையும் முழு வேகத்தில் தன்பக்கம் இழுத்துக் கொண்டிருந்தது. மேலும் யோகபலமும் முழு வேகத்தில் தான் இருந்தது. சரீரத்தினுடைய கணக்குவழக்கு என்னவெல்லாம் மீதம் இருந்ததோ துரிதமாக யோக அக்னியில் எரிந்து கொண்டிருந்தது. மேலும், சபையில் அமர்ந்து மல்யுத்தம் பார்ப்பதைப் போல நான் சாட்சியாகி பார்த்துக் கொண்டிருக்கிறேன். அதாவது இரண்டின் வேகமும் முழுமையாக இருந்தது. சிறிது நேரத்திற்குப் பின் கர்மபோக் (வலி) முற்றிலும் வலிமையற்றதாகி விட்டது. முற்றிலுமாக வலி மறைந்து விட்டது. இறுதியில் யோகபலம் கர்மவினையின் மீது வெற்றியடைந்ததாக அனுபவம் ஆகிக் கொண்டிருந்தது. அச்சமயம் மூன்று விஷயங்கள் கூடவே நடந்துக் கொண்டிருந்தது. அவை எவை? ஒருபுறம், பாபா நீங்கள் என்னை தன்னிடம் அழைத்துக் கொண்டிருக்கிறீர்கள் என பாபாவிடம் உரையாடிக் கொண்டிருந்தேன்; மறுபுறம் குறிப்பாக சில குழந்தைகளின் நினைவு இல்லை ஆனால், அனைத்து குழந்தைகளினுடைய அன்பின் நினைவு சுத்தமான மோகம் என்ற ரூபத்தில் இருந்தது. பாக்கி, சுத்தமான மோகத்தினுடைய உணர்விற்கோ அல்லது இந்த சங்கல்பத்திற்கோ விடுதலை அளிக்கவில்லை அல்லது வேறு எந்த சங்கல்பமும் இல்லாமல் இருந்தது. மூன்றாவது பக்கம் சரீரத்திலிருந்து எப்படி ஆத்மா வெளியேறிக் கொண்டிருந்தது என்ற அனுபவமும் ஏற்பட்டுக் கொண்டிருந்தது. கர்மாதீத் விடுபட்ட நிலை பற்றி பாபா முன்பே முரளியும் நடத்தி இருக்கிறார். அதில் எவ்வாறு சப்தத்திலிருந்து சப்தமின்மை ஏற்படுகிறது. அவ்வாறே, முற்றிலும் மயான அமைதியின் அனுபவம் ஏற்பட்டுக் கொண்டிருந்தது. மேலும், எப்படி ஒவ்வொரு அங்கத்திலிருந்தும் ஆத்மா தனது சக்தியை நீக்கிக் கொண்டிருக்கிறது என்பதைப் பார்த்துக் கொண்டிருந்தேன். கர்மாதீத் நிலையினுடைய, மரணம் என்றால் என்ன என்பதினுடைய அனுபவம் ஏற்பட்டுக்

கொண்டிருந்தது. இதுவே எனது அனுபவம் என்று பாபா எடுத்துரைத்தார்.

பிறகு, நான் பாபாவிடம், பாபா, ஒருவேளை நாங்கள் அனைவரும் எதிரில் இருந்திருந்தால் பாபாவை தடுத்திருப்போம் என அனைத்து குழந்தைகளும் சொல்கிறார்கள் என்று கூறினேன். அதற்கு பாபா, குழந்தாய், தடுத்திருந்தால் இந்த நாடகம் எவ்வாறு நடைபெறும் எனக் கூறினார். பிறகு, பாபா இக்காட்சியானது இப்பொழுது செயற்கையாகத் தோன்றுகிறது, உண்மையான நாடகமாகத் தோன்றவில்லை, என்று நான் கூறினேன். குழந்தாய், அன்பின் இனிய நூல் இழையானது இணைந்திருக்கும் காரணத்தால் உங்களுக்கு இறுதி வரை இது அதிசயமாகவே தென்படும். மேலும் இப்பொழுதும் சம்பந்தம் உள்ளது. சாகார ரதம் சென்று விட்டது ஆனால் பிரம்மாவின் ரூபத்தில் அவ்யக்த நடிப்பை நடித்துத் கொண்டிருக்கிறார் என்று பாபா சொன்னார். நானும் அவ்வப்பொழுது சாகார வதனத்திற்குச் சென்று வருகிறேன். பிறகு எங்கே இருக்கிறீர்கள்? என்று சிவபாபா கேட்கிறார். இங்கே இருக்கும்போது சாகார வதனத்தில் எங்கு கட்டிடம் உருவாகிக் கொண்டு இருக்கிறதோ அங்கு வரை செல்கிறேன் என்று பாபா கூறினார். நான், பாபா அவ்வப்பொழுது பாபா வலம் வந்து கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது என்றேன். நான் வலம் வருகிறேன். அந்த உணர்வு குழந்தைகளுக்கு ஏற்படத்தான் செய்யும் என்று பாபா கூறினார். கருத்து என்னவென்றால் உரையாடல் நடந்து கொண்டிருந்தது.

பிறகு, பாபா ஒரு காட்சி காண்பித்தார். ஒரு சக்கரத்திற்கு உள்ளே பல சக்கரங்கள் தென்பட்டன. அச்சக்கரத்திலிருந்து வெளியேறுவதற்கு 4-5 வழிகள் தென்பட்டன ஆனாலும் வெளியேற இயலாத விதமாக சக்கரமானது உருவாக்கப்பட்டிருந்தது. பிரம்மாபாபாவினுடையது மட்டும் காண்பிக்கப்பட்டது, அது என்னவென்றால், சக்கரத்தில் சுற்றி சுற்றி புள்ளியில் (பூஜ்ஜியத்தில்) நின்று விட்டார். வெளியேறவில்லை. இது நாடகத்தின் பந்தனம். பிரம்மாவும் நாடகத்தின் வட்டத்திலிருந்து (சக்கரத்தில்) வெளியேற இயலவில்லை. நாடகத்தின் பந்தனத்திலிருந்து எவரும் விடுபட இயலாது. அந்த பூஜ்ஜியம், புள்ளி வரை சென்றடைந்து விட்டார். ஆனாலும் கூட நாடகத்தின் இனிமையான பந்தனம் உள்ளது என்று பாபா புரிய வைத்தார். இந்த

இனிய பந்தனத்தை விளையாட்டு ரூபத்தில் காண்பித்தார். பிறகு, பிதாஸ்ரீ பாதாம் ஊட்டினார். விடை கொடுத்து விட்டு, செல்வாய் குழந்தாய், நேரம் ஆகி விட்டது என்று கூறினார்.

**8.** ஒற்றுமைதான் பாதுகாப்பு சாதனம் !

இன்று வதனத்திற்குச் சென்றபோது எவருமே பார்வைக்குத் தென்படவில்லை. தொலைவிலிருந்து ஏதோ சப்தம் வந்து கொண்டிருந்தது. ஏதோ முக்கியமான காரியம் நடைபெற்றுக் கொண்டிருப்பது போல் தோன்றியது. நான் முதலில் சிறிது நின்றேன், ஆனால் பிறகு, முன்னேறிச் சென்று பார்க்கும்பொழுது சிவபாபா, பிரம்மாபாபா, மம்மா மற்றும் விஷ்வகிஷோர் ஆகிய நால்வரும் தங்களுக்குள் உரையாடிக் கொண்டிருந்தனர். மேலும், பெரிய வரைபடம் அவர்கள் முன் இருந்தது. அதில் சில அடையாளம் முதலியவை தென்பட்டன. மம்மா அனைத்து குழந்தைகளின் நிலைமை பற்றி கேட்டுக் கொண்டிருந்தார்கள். நான், மம்மா தாங்கள் பாபாவையும் அழைத்துக் கொண்டுவிட்டீர்கள் என்றேன். குழந்தைகளிடம் இருந்து தாய், தந்தையின் சாகார துணை விலகுவதை மம்மாவும் விரும்பவில்லைதான்; ஆனால், அது நாடகமாகும் என்றார் மம்மா. பின்னர், நான் பாபாவிடம் பாபா, இவை என்ன வரைபடங்கள் எனக்கேட்டேன். பாபா கூறினார், குழந்தாய் எவ்வாறு படைத்தளபதியிடம் எந்தெந்த இடத்தில் என்னென்ன நடைபெற்றுக் கொண்டிருக்கிறது, அடுத்து என்ன நடைபெற வேண்டும் முதலிய அனைத்து படங்களும் இருக்குமோ, அவ்வாறே, படைப்பு காரியத்தினுடைய உரையாடல் தான் நடைபெற்றுக் கொண்டிருந்தது, அதை பின்னர் கூறுவேன். அதன் பின் ஒரு காட்சியைக் காட்டினார்.

மூன்று குழுக்கள் இருந்தன. ஒன்று செந்நிற எறும்புகள் தங்களுக்குள் பந்து போல் ஒன்று சேர்ந்து கொண்டிருந்தன. பிரம்மாபாபா துவக்கத்தில் கண்டதைப் போன்ற காட்சியாக இருந்தது. இரண்டாவது குழுவானது மூலவதனத்தில் ஆத்மாக்கள் விட்டில்பூச்சி ரூபத்தில் இருந்தன. மேலும் மூன்றாவது குழுவானது பிராமணர்களாகிய நம்முடையதாக இருந்தது. அதில் அனைவரும் வட்ட வடிவில் அமர்ந்திருந்தோம். மேலும், நடுவில் பாப்தாதா இருந்தார்கள். இது மலருக்கு நடுவில் மகரந்தமும் நாற்புறங்களில் இதழ்களும் இருப்பது போல் தோன்றியது.

இதன் ரகசியத்தை பாபா விளக்கினார். குழந்தாய், பிரத்யட்சதாவின் தொடக்கத்திலும், கூட குழுவாகக் கண்டேன், இறுதியிலும் கூட ஆத்மாக்கள் குழு ரூபத்தில் தான் இருந்தாக வேண்டும். மேலும், தற்போது நடுவிலும் கூட குழு இருக்கிறது, குழுவின் சக்தி உள்ளதென்றால் எவரும் அசைக்க இயலாது. பாருங்கள், பாப்தாதா எங்கெங்கிருந்தெல்லாம் தேர்ந்தெடுத்து குழுவை உருவாக்கி உள்ளார்கள். அவ்வாறே, குழந்தைகளும் கூட குழுவாக செயல்பட்டால் மாயா போர் செய்யாது. எவ்வாறு ரோஜா மலர் அல்லது வேறு எந்த மலரானாலும் அதைத் தகுந்த இடத்தில் வைப்பார்கள். மேலும், தனி இதழாக இருந்ததென்றால் கையால் சீக்கிரம் கசக்கி விடுவார்கள். அவ்வாறே, குழந்தைகளின் குழுவும் மலர்ச்செண்டாக இருந்ததென்றால் வெற்றியை பிராப்தியாகப் பெற்றுக் கொண்டே இருப்பர், எவரும் போர் புரிய இயலாது. இவ்வாறு உரைத்தவாறே பாபா அனைத்து குழந்தைகளுக்கும் குழுவில் ஒற்றுமை தான் பாதுகாப்பிற்கான சாதனமாகும் என்று கூறச் சொன்னார்.

**9.** மலர்களின் அழகு, இலைகளுடன் இருக்கும்பொழுதே தென்படும், அதனால், பிரஜை என்ற இலைகளைத் தயார் செய்யுங்கள்!

இன்று எப்பொழுது வதனத்திற்குச் சென்றேனோ அப்பொழுது பாப்தாதா இருவரும் மிகவும் சுறுசுறுப்பாக இருந்தனர். இருவருக்கும் முன்பு அதிகமான மலர்களும் இருந்தன. இலைகளும் இருந்தன. மலர்ச்செண்டில் மலரும் வைக்கப்படுகிறது இலையும் வைக்கப்படுகிறது. இரண்டு மூன்று வித மலர்கள் தனித்தனியாக இருந்தன. அவற்றை பார்த்துக் கொண்டிருந்தார்கள். மேலும், தரம் வாரியாக பிரித்துக் கொண்டிருந்தார்கள். பாபா மற்றும் தாதா இருவரும் அக்காரியத்தில் சுறுசுறுப்பாக இருந்தனர். என்னைப் பார்க்கவே இல்லை. நான் அருகாமையில் சென்றவுடன் என்னைப் பார்த்து பாபா புன்னகைத்தார் மேலும் நான் நாள் முழுவதும் சுறுசுறுப்பாக இருக்கிறேன்; பார் குழந்தாய், எவ்வளவு பெரிய காரியம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது! இந்த மலர்கள், இலைகளை மூன்று தரம்வாரியாக தனித்தனியாக வைத்திருக்கிறோம் என்று கூறினார். முதலில் பாபா எனக்கு மலர்களைக் காண்பித்தார். அவற்றின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருந்தது. பிறகு நடுத்தரத்தைக் காண்பித்தார். அதில் மலர்கள் அதிகமாக இருந்தன ஆனால் கூடவே கொஞ்சம் இலைகளும்

இருந்தன. மலர்கள் நன்றாக இருந்தன ஆனால் எந்த இலைகள் வைக்கப்பட்டிருந்தனவோ, அவை கொஞ்சம் குறையுடைதாக இருந்தன. மூன்றாவது தரத்தில் இலைகள் மட்டுமே அதிகமாக இருந்தன மேலும் மலர்கள் மிகவும் குறைவாகவே இருந்தன.

இதைப் பற்றி பாபா புரிய வைத்தார். இந்த முதல் தர குழந்தைகள் யார் என்றால், யார் முற்றிலும் (பாபாவின்) உள்ளத்தில் இடம் பிடித்துள்ளனரோ அவர்களே ஆவர் மேலும் அப்படிப்பட்ட அன்பிற்குரிய ஒப்பற்ற குழந்தைகள் மிகவும் குறைவாக இருந்தனர். இரண்டாவது எண்ணில் உள்ள குழந்தைகள் மிகவும் நல்லவர்கள் தான், ஆனால் கொஞ்சம் ஏதாவது குறை இருக்கிறது. மலர் ஆகி இருக்கின்றனர் எனினும் கொஞ்சம் குறை என்பது இருக்கவே செய்கிறது. மூன்றாவது தரமானவர்கள் பிரஜைகள் ஆவர். அவர்களில் சிலர் மலர் ஆகின்றனர். எனினும் அவர்கள் கடைசியில் வரக் கூடியவர்களாக உள்ளனர். மற்ற அனைவரும் பிரஜைகளே! எனவே, மேலே குறிப்பிட்ட இரண்டும் தரமான குழந்தையினுடையது ஆகும். பாப்தாதா இப்பொழுது மலர்ச்செண்டை அலங்கரித்துக் கொண்டிருக்கிறார்கள். எப்பொழுது மலர்ச்செண்டு அலங்கரிக்கப்படுகிறதோ அதில் மலர்களை மட்டும் வைப்பதால் மலர்ச்செண்டு அழகு பெறுவதில்லை அதில் சில இலைகளும் தேவை! நீங்கள் மலராக இருக்கிறீர்கள் ஆயினும், உங்களுடன் இலைகளும் தேவை. நீங்கள் ராஜா ஆவீர்கள் என்றால் பிரஜையும் வேண்டும் அல்லவா! பிரஜைகள் என்ற இலைகளுக்கு நடுவில் மலர் அழகுடையதாக ஆகிறது. இங்கே இருந்து கொண்டே குழந்தைகள் உங்களுடைய மலர்ச்செண்டை உருவாக்குகிறேன். மேலும் ஒரு மலர் எத்தனை பிரஜைகளை உருவாக்கி இருக்கிறது என்பதையும் காண்கிறேன். யார் அதிக பிரஜைகளை உருவாக்கி உள்ளனரோ அவர்களுடைய மலர்ச்செண்டும் அழகாக உள்ளது. பிறகு, பாபா ஒரு கேள்வி கேட்டார். எப்பொழுது ஏதாவது தேவதையின் மூர்த்திக்கு மலர் சூட்டுகின்றனரோ அப்பொழுது மலர் மட்டுமே சூட்டுகின்றனர். இலைகளை நீக்கி விடுகின்றனர். ஏன்? இலைகளே மலரை பகட்டாக காண்பிக்கின்றது, பிறகும் இலைகளை ஏன் நீக்கி விடுகின்றனர்? பிறகு பாபா, குழந்தைகள் உங்களிடம் இருந்து தான் இந்த அனைத்து பழக்கவழக்கங்களும் உருவாகி இருக்கின்றன. முதலில் நீங்கள் அர்ப்பணம் ஆகும் பொழுது தனியாக இருந்தீர்கள்

ஆனால் மலரை ஒருவேளை சில காலம் வைத்திருக்க வேண்டுமாயின் இலைகளுடன் இருந்தால் தான் வைத்திருக்க இயலும். அவ்வாறே, நீங்கள் முதலில் அர்ப்பணம் ஆகும்பொழுது தனி மலராக அர்ப்பணம் ஆனீர்கள். பிறகு நீங்கள் 21-பிறவிகளுக்கு அழிவற்று செயல்பட வேண்டுமாயின் பிரஜைகள் என்ற இலைகளும் இணைக்கப்படுகின்றன. முதலில் நீங்கள் வந்தீர்கள் அப்பொழுது பிரஜைகள் இல்லை; ஆனால் இப்பொழுது மலர்களாகிய உங்களுடைய அழகே பிரஜை என்ற இலைகளோடு தான் இருக்கிறது. அதனால், பாப்தாதா கூறுகின்றனர் பிரஜைகளை உருவாக்குங்கள் என்று உரைத்தார்.

**10.** அன்பின் கூடவே சக்தி ரூபம் ஆகுங்கள் அப்பொழுது வெற்றி கிடைக்கும் **!**

இன்று நான் வதனத்திற்குச் சென்றதும், எவ்வாறு யாரேனும் சூரியனின் அருகில் சென்றால் சூரியனுடைய வெப்பம் அல்லது சக்தியினுடைய வேகம் அனுபவம் ஆகுமோ, அவ்வாறே இன்று வதனத்தில் நான் முன்னேறிச் செல்லும்பொழுது ஒரு சூளைக்கு எதிரில் செல்வது போன்றே அனுபவம் ஆனது. இன்று பாபா சிவப்பான ஒளியில் அவ்யக்த தோற்றத்தில் காட்சி அளித்தார். மேலும், சூரியனுக்குச் சமமாக கிரகணங்கள் வெளிப்பட்டுக் கொண்டிருந்தன. கீழே மிகப் பெரிய சபை இருப்பதைக் கண்டேன். அப்பேற்பட்ட பிராமணர்களுடைய சபை சாகார ரீதியில் ஒருபோதும் கூடியதில்லை. அனைத்து பிராமணர்கள் மீதும் அந்த கிரகணங்கள் விழுந்து கொண்டு இருந்தன. மேலும், நான் வதனத்திற்கு சென்றதும் என்னை நோக்கியும் அக்கிரகணங்களின் ஒளி, சக்தி வந்து கொண்டிருப்பதைக் கண்டேன். சிறிது நேரத்திற்குப் பின் நான் பாபாவிடம் அதே ரூபத்தில் சந்தித்துக் கூறினேன், பாபா, நான் 'போக்' எடுத்து வந்திருக்கிறேன். பாபா 'போக்' ஸ்வீகரித்துக் (பெற்றுக்) கொண்டே, உண்ணும் சமயம் எப்படி ஒளி, சக்தியின் ஸ்திதியில் இருக்க வேண்டும் என்பதைக் கற்பித்துக் கொண்டிருந்தார். பிறகு நான் பாபாவிடம் குழந்தைகளுக்கு அன்பு நினைவுகள் கொடுப்பீர்கள் அல்லவா! என கேட்டேன். இதைப் பற்றி பாபா அன்பின் ரூபத்தை அதிகமாகப் பார்த்தாகி விட்டது ஆனால் அன்பின் கூடவே சக்தி ரூபத்தின் ஸ்திதி, எதை பாபா குழந்தைகளிடம் உருவாக்க விரும்புகிறாரோ, அது இப்பொழுது வரை குறைவாகவே உள்ளது என்று உரைத்தார். ஆதலால் இன்று பாபா அன்பின் கூடவே சக்தியையும்

நிறைத்துக் கொண்டிருந்தார். இதன் மூலமாகவே சேவையில் வெற்றி கிட்டும். அன்பு மட்டுமல்லாது கூடவே சக்தியையும் நிறைக்க வேண்டும் என்ற செய்தியும் பாபா கொடுத்தார். குழந்தைகள் இந்த சிருஷ்டிக்கு ஒளி, சக்தியின் கிரணங்களை கொடுக்க வேண்டும் என்று பாபா தானே காட்சியாகவும் காண்பித்தார். இத்தனை நாட்களும் பாபாவுடன் அன்பு ரூபத்திலேயே சந்திப்பு நிகழ்ந்தது ஆனால், இன்று அன்பின் கூடவே ஒளி, சக்தியின் ரூபமும் இருந்தது. நான் அதைப் பெறுவதிலேயே ஈடுபட்டிருந்தேன். பின் சாகார வதனத்திற்கு திரும்பி வந்து விட்டேன்

**11.** முன்னரே **(Advance)** சென்றுள்ள ஆத்மாக்கள் புதிய சிருஷ்டியின் ஆதாரம் ஆவார்கள் **!**

இன்று நான் வதனம் சென்றதும் ஒரு சபை கூடியிருந்ததைக் கண்டேன் மேலும் வகுப்பு நடைபெற்றுக் கொண்டிருந்தது. முதலில் நான் மெதுவாக முன்னேறிச் சென்றேன். பாப்தாதா கண்களாலேயே வரவேற்றார். பின்னர், குழந்தாய், இவர்கள் அனைவரையும் சந்தியுங்கள் முதலில்! மேலும், இந்த 'போக்'ஐ அனைவருக்கும் உண்ணக் கொடு என்றார். பார்த்தது என்னவென்றால், முன்பே சரீரத்தை விட்டுச் சென்றுள்ள அனைவரையும் தோற்றுவித்து பாபா வகுப்பு நடத்திக் கொண்டிருந்தார். பிறகு, அனைவருக்கும் மதுவனத்தின் பிரம்மாபோஜனம் சுவீகாரம் செய்விக்கப்பட்டது. அக்குழுவில் அட்வான்ஸ் பார்ட்டியில் சென்ற அனைத்து ஆத்மாக்களும் இருந்தனர். பிறகு நான் ஒரு காட்சியைக் கண்டேன். அனேக கட்டிடங்கள் உருவாகிக் கொண்டிருந்தன. கட்டிடத்தில் மேற்கூரை போடும்பொழுது அதற்கு அதிக ஆதாரம் (சாரம்) கொடுக்கின்றனர். பிறகு, சிமெண்ட் உறுதியானதும் கம்பு மரப்பலகை முதலிய ஆதாரங்களை எடுத்து விடுவர். இவ்விதமாக கட்டிடத்திற்கு மேற்கூரை போடும் வேலையானது மிகவும் தடபுடலாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. நான் இந்த கட்டிடத்தைக் பார்த்துக் கொண்டிருந்தேன். மேலும், பாபா மறைந்து விட்டார். கட்டிடத்தை உருவாக்குவதற்கு முதலில் ஆதாரம் கொடுக்கப்படுகிறது. பின்னர் ஆதாரம் எடுத்து விடப்படுகிறது என்பதை காண்பித்தார். இக்காட்சியைப் பார்த்துக் கொண்டே இங்கே வந்து சேர்ந்து விட்டேன்.

**12.** அன்பின் கூடவே ஞானத்தின் அஸ்திவாரத்தை வலுவானதாக ஆக்குங்கள் !

இன்று நான் வதனம் சென்றடைந்தேன் ஆனால், பாபா தென்படவில்லை. சிறிது நேரத்திற்குப் பின் பாபாவைக் கண்டவுடன் நான் கேட்டேன், "நீங்கள் எங்கு இருந்தீர்கள்?. இன்று குருவார் (வியாழன்) தினமாக உள்ளது. அதனால் அனைத்து குழந்தைகளிடத்திலும் வலம் வரச் சென்றிருந்தேன். சாகார ரூபத்தில் இவ்வளவு குறைந்த நேரத்தில் அனைத்து இடங்களுக்கும் போய்ச் சேர இயலாது. இப்பொழுது அவ்யக்த வதனத்தில் அவ்யக்த விமானம் மூலம் ராக்கெட்டை விட வேகமாக போய்ச் சேர இயலுகிறது", என்று பாபா கூறினார் பாபா தாங்கள் வலம் வரும்போது என்ன பார்த்தீர்கள்? என நான் கேட்டேன். பெரும்பான்மையான குழந்தைகள் இதுவரை அன்பில் நன்றாகவே இருக்கின்றனர். இப்பொழுது என்ன நடக்கும் எனத் தெரியவில்லையே என்று பலருக்குள் கொஞ்சம் சங்கல்பம் இருக்கிறது ஆனால் குழுவினுடைய ஒத்துழைப்பு இதுவரை சரியாக இருக்கிறது. பாபா கூறியது என்னவென்றால், அன்பின் ஆதாரத்தில் இதுவரை குழந்தைகள் இருக்கின்றனர் ஆனால், இப்பொழுது அன்பின் கூடவே ஞானத்தின் அஸ்திவாரம் கொஞ்சம் தளர்ந்து உள்ளது. அதனால் குழந்தைகள் மீது வாயுமண்டலத்தின் தாக்கம் மிகவும் எளிதாக ஏற்பட முடிகிறது. அதனால், ஒவ்வொரு குழந்தையும் தன்னை சோதனை செய்ய வேண்டும். ஆயினும், வியக்த தேகத்தில் இருப்பதால் அன்பில் முதலில் வலிமை நன்றாக இருக்கிறது ஆனால், இந்த அன்பின் மீது நாட்கள் செல்லசெல்ல வாயுமண்டலத்தின் தாக்கம் சீக்கிரத்தில் ஏற்பட இயலுகிறது. அன்பில், சிவபாபா நன்மை புரிபவர் மற்றும் பாபா என்ன செய்தாரோ அது சரியே என்று சொல்கின்றனர். அன்பிற்கு வசப்பட்டு சங்கல்பத்தை நிறுத்தி விடுகின்றனர். பெரும்பான்மையோரின் அன்பின் விளைவானது அதிகமாகவே உள்ளது. வாயுமண்டலத்தின் தாக்கம் நம் மீது ஏற்படக் கூடாது. நமது தாக்கம் வாயுமண்டலத்தின் மீது ஏற்பட வேண்டும். அப்பொழுது தான் நியமப்படி நடக்க முடியும். பாபா, எங்களிடம் ஞானத்தினுடைய விஷயங்கள் தான் ஆதிக்கம் செலுத்துகின்றன என்று நான் கூறினேன். அதற்கு பாபா, குழந்தாய், ஞானத்தின் அஸ்திவாரத்தினால் தன்னை திருப்தியாக வைத்திருக்கும் குழந்தைகள் குறைவாகவே இருக்கின்றனர்", என்றார். இன்று பாபா இந்த முடிவை தெரிவித்தார். மேலும், கூறினார் அனைவருக்கும்

சென்று சொல்லவேண்டியது என்ன வென்றால், வாயுமண்டலத்தை நாம் மாற்ற வேண்டும், நம்மை வாயுமண்டலம் மாற்றலாகாது. பிறகு, 'போக்' சுவீகாரம் செய்வித்த பின் பாபா ஒரு காட்சியைக் காண்பித்தார்.

ஒரு மிகப் பெரிய அறை இருந்தது. அந்த அறையில் நாலா புறங்களிலிருந்தும் மிகுந்த துர்நாற்றம் வந்து கொண்டிருந்தது. அந்த அறையில் இரண்டு, மூன்று மிக நறுமணம் வீசும் அகர்பத்தி எரிந்து கொண்டு இருந்தது. மெல்ல மெல்ல அகர்பத்தியின் நறுமணமானது துர்நாற்றத்தைப் போக்கி விட்டது. பார் குழந்தாய், நாலாபுறமும் துர்நாற்றத்தின் வாசனை வீசிக் கொண்டிருந்தது. ஆயினும் இந்த அகர்பத்தியானது வாயுமண்டலத்தை மாற்றிவிட்டது. குழந்தைகள் உங்கள் மீது வாயுமண்டலத்தின் தாக்கம் ஏற்படும்பொழுது அகர்பத்தியின் உதாரணத்தை எதிரில் வையுங்கள். நாம் சர்வசக்திவான் தந்தையின் குழந்தைகள், ஒருவேளை வாயுமண்டலத்தின் தாக்கம் நம்மீது ஏற்பட்டால் இதை விட அகர்பத்தியே நல்லது. குழந்தைகள் நீங்கள் எப்பொழுது சக்திசாலியான நறுமணம் பரப்பக்கூடியவர் ஆவீர்களோ, அப்பொழுது இந்த வாயுமண்டலம் அமிழ்ந்து விடும் என்று பாபா கூறினார். இப்பொழுது ஒவ்வொரு குழந்தைக்கும் படிப்பினை கிடைத்துள்ளது. படிப்பினையை அனைவரும் மிக இனிய ரூபத்தில் கேட்கின்றனர். ஆயினும் எவ்வாறு இனிய ரூபத்தில் கேட்கின்றனரோ, அதே ரூபத்தில் தாரணையும் செய்ய வேண்டும். இனிப்பு மிக சீக்கிரத்தில் ஒட்டிக்கொள்கிறது. எவர் அவ்வாறு இனிமை ஆவார்களோ அவர்கள் தந்தையிடம் ஒட்டிக் கொண்டுவிடுவார்கள். நினைவு மற்றும் இனிமைத்தன்மை இல்லையெனில் தனித்தனியே இருப்பார்கள். உப்பான பண்டம் ஒருபோதும் ஒன்று சேர்வதில்லை. எவர் அவ்வாறு இருப்பாரோ அவருடைய நிலை யோகயுக்தாக இருக்காது. தற்பொழுது எவ்வாறு குழந்தைகள் கேட்டீர்களோ, அவ்வாறே தாரணை செய்தால் மிகுந்த பலம் கிடைக்கும் என பாபா உரைத்தார்.

**13.** இறுதி வினாசத்தின் காட்சியைக் காண்பதற்காக ஆடாத உறுதி நிலையை உருவாக்குங்கள் !

இன்று நான் வதனம் சென்றபொழுது பாபா மற்றும் தாதா இருவரும் எதிரில் நின்று கொண்டிருந்தனர். சென்றதும் கண்களின் சந்திப்பினால், எடுத்துச் சென்ற அனைவரின் அன்பு நினைவுகளைக் கொடுத்தேன்.

# 1969 அவ்யக்த முரளிகள்!

நான் நினைவுகளைக் கொடுத்துக் கொண்டிருக்கும்பொழுதே சாகார பாபா எனது கரத்தைப் பிடித்தார். அந்த கரத்தைப் பிடித்ததும் என்ன மந்திரம் எனத் தெரியவில்லை, அப்படியே கடலில் ஸ்நானம் செய்வது போல் அனுபவமானது. சிறிது நேரம் நான் அன்புக்கடலில் மூழ்கி விட்டேன். அதன்பின் நான் சர்வசக்திவான் பாபாவின் பக்கம் பார்த்தேன். பாபா கூறினார், குழந்தாய், தந்தையிடம் இரு முக்கிய குணங்கள் உள்ளன. அவற்றை குழந்தைகள் சாகார ரூபத்தில் அனுபவம் செய்துள்ளீர்கள். அவ்விரு குணங்கள் யாவை? எவ்வளவு ஞான சொரூபமானவரோ அவ்வளவு அன்பு சொரூபமானவர். குழந்தைகளும் கூட இவ்விரு குணங்களையும் தனது ஒவ்வொரு நடத்தையிலும் தாரணை செய்ய வேண்டும். பிறகு, நான் பாபாவிடம், சென்ற முறை தாங்கள் வதனத்தில் அட்வான்ஸ் பார்ட்டியில் சென்ற குழந்தைகளின் பெரிய குழுவை காண்பித்தீர்கள். இதன் ரகசியம் என்ன? என கேட்டேன். முழுமையான ரகசியத்தை பின்னர் உரைப்பேன். ஆயினும், சாகார ரூபத்திற்கு எக்குழந்தைகள் ஏதாவதொரு சேவைக்காக அல்லது சில கணக்குவழக்கை முடித்துக் கொள்ளச் சென்றுள்ளனர், அக்குழந்தைகளோடு சந்திப்பதற்காகவே அழைத்தேன். பாபா அவர்களிடத்தில், யார் யார், எவ்விதத்தில், எந்த ரூபத்தில் என்னென்ன செய்து கொண்டு இருக்கின்றனர் என்ற நிலைமையைக் கேட்டுக் கொண்டிருந்தார் என பாபா கூறினார். நான் கேட்டேன், பாபா, இவர்கள் எந்த ரூபத்தில் படைப்புக் காரியத்தில் சுறுசுறுப்பாக உள்ளனர்? குழந்தாய் இதை எதிர்காலத்தில் தெளிவுபடுத்துவேன். ஆயினும், சாரமாக உரைக்கிறேன் என்றார் பாபா. பாபா கூறினார், குழந்தாய் யுத்தம் நடைபெறும்பொழுது எந்தவொரு சேனையும் வெற்றி பெற வேண்டுமாயின் ஒருபுறம் மட்டுமல்லாது நாலாபுறங்களிலும் சேனையை அனுப்பி முழுமையாக முற்றுகையிடுவார்கள். இக்குழு மூலம் எக்குழந்தைகளெல்லாம் சென்று விட்டனரோ அவர்கள் நாலா திசைகளிலும் பரவி இருக்கின்றனர் எனத் தெரிய வந்துள்ளது. தற்பொழுது நாலா பக்கங்களிலும் படைப்பின் அஸ்திவாரம் போடப்பட்டுவிட்டது. தற்பொழுது கட்டளை கொடுப்பதற்கான அவசியம் மட்டுமே மீதம் உள்ளது.

பின்னர், பாபா நான்கு நிலைகளின் ஒரு ஏணியைக் காண்பித்தார். காண்பிக்கப்பட்ட முதல் நிலை என்னவென்றால், ஞானம் கேட்டல்,

சிந்தித்தல், புரிதல் மேலும் தீர்மானித்தல் ஆகும். சிலர் சிந்திக்கிறார்கள், சிலர் ஆராய்ந்து அறிகிறார்கள். இரண்டாம் நிலையாக உரைத்தது என்னவென்றால், இறுதி நேரம் எவ்வாறு வினாசம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது? எங்கே வெள்ளத்தால் மூழ்கிக் கொண்டிருக்கின்றனர்? எங்கே என்ன நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பது பற்றியதாகும். எனினும், சக்தி சேனை மற்றும் பாண்டவர்கள் முற்றிலும் அசையாதவர்களாக நின்றனர். மூன்றாம் நிலையாக, ஆத்மாக்கள் எவ்வாறு வெளிப்பட்டு பரந்தாமத்திற்குப் புகைக்கூண்டு போல் சென்று கொண்டிருக்கின்றனர் என்பதைக் காண்பித்தார். பின் பரந்தாமத்தின் காட்சியும் பாபா காண்பித்தார். சொர்க்கத்தில் ஆத்மாக்கள் எவ்வாறு சிறு சிறு குழந்தைகளுக்குள் பிரவேசித்துக் கொண்டிருக்கின்றனர் என்ற சொர்க்கக் காட்சியை நான்காவதாகக் காண்பித்தார். இந்த அனைத்து நிலைகளையும் ஏணிப்படி சித்திரத்தின் ரூபத்தில் காண்பித்தார். இந்த ஏணிப்படியைக் காண்பிப்பதன் ரகசியத்தை விளக்கியவாறே பாபா கூறினார், இப்பொழுது நம்முடைய நிலை என்னவாக இருக்கிறது என்பது குழந்தைகளின் புத்தியில் சுழன்றுகொண்டே இருக்க வேண்டும். தாரணை செய்ய வேண்டிய இறுதி நிலையை லட்சியமாக முன்பே புத்தியில் வைத்தால், முயற்சி வேகமாக நடைபெறும். வினாச நேரக்காட்சி என்ன காண்பிக்கப்பட்டதோ அதில் குழந்தைகள் உங்களின் நிலை அசையாததாக இருக்க வேண்டும். பிறகு, பாபா எனக்கு நிறைய வைரங்களை கையில் கொடுத்துக் கூறினார், இந்த வைரங்களை நெற்றிப் பொட்டாக அனைத்து குழந்தைகளுக்கும் வைத்து விட வேண்டும். இந்த வைரங்களை ஏன் கொடுத்துக் கொண்டு இருக்கிறேன்? ஏனெனில், வைரம் போல் ஆத்மா நெற்றியில் உள்ளது. ஆதலால், ஒவ்வொரு ஆத்மாவும் உண்மையான வைரமாகி ஜொலிக்க வேண்டும்.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

முரளியின் சாரம்

பார் குழந்தாய், நாற்புறமும் துர்நாற்றத்தின் வாயுமண்டலம் இருந்தது. ஆயினும், இத்தனை அகர்பத்தி வாயுமண்டலத்தை மாற்றிவிட்டது. அவ்வாறே, குழந்தைகள் உங்கள் வாயுமண்டலத்தின் தாக்கம் ஏற்படும்பொழுது அகர்பத்தி உதாரணத்தை எதிரில் வையுங்கள். நாம் சர்வசக்தி தந்தையின் குழந்தைகள். ஒருவேளை வாயுமண்டலத்

தாக்கம் நம்மீது ஏற்பட்டால் இதைவிட அகர்பத்தி நல்லதாக உள்ளது. எப்பொழுது குழந்தைகள் நறுமணமிக்கவர் ஆவீர்களோ அப்பொழுது வாயுமண்டலம் அமிழ்ந்து விடும்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 21.01.1969-1 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## அமிர்தவேளையில் பிராப்தமான தெய்வீகச் செய்தி! நிலையான மற்றும் துண்டிக்கப்படாத நிலை -இந்த பரிசை புத்தி என்ற பெட்டியில் பாதுகாப்பாக வைக்க வேண்டும்!

இன்று வதனம் சென்றதும் அனைத்து குழந்தைகள் தரப்பிலிருந்தும் பாபாவிற்கு அன்பு நினைவுகளை வழங்கினேன் மேலும் கோரிக்கை வைத்தேன். பிரம்மாபாபாவிடமும் கோரிக்கை வைத்தேன். எனது கரம் சிவபாபாவிடத்தில் உள்ளது. அவர் என்ன செய்விப்பாரோ அதை நான் செய்வேன் என்றார் பிரம்மாபாபா. நான் சிவபாபாவிடம், பாபா, தங்களது குழந்தைகள் அனைவரும் வந்துள்ளனர், தாங்கள் அனைவரின் ஆசைகளைப் பூர்த்தி செய்யக்கூடியவர், பாபா, எங்களது ஒரு ஆசையை பூர்த்தி செய்து விடுங்கள் என்றுரைத்தேன். பாபா உடனே ஒரு கிளையைக் காண்பித்தார் அதன் நடுவில் விதியை விலக்கினாலும் விலகாது என எழுதப்பட்டிருந்தது. நான் பாபாவிடம், ஒருவேளை இதுவே விதி என்றால் ஒன்று கூடியிருக்கும் அனைத்து குழந்தைகளும் சிவபாபா மற்றும் பிரம்மாபாபா இருவரையும் சந்திக்க விரும்புகின்றனர் என்றேன். எவ்வாறு எப்பொழுதும் பாப்தாதா குழந்தைகளுடன் சந்திப்பார்களோ, அவ்வாறு இன்றும் குழந்தைகளை சந்திப்பார்கள் என்று பாப்தாதா கூறினார்கள். பிறகு, சிவபாபா பிரம்மாபாபாவிடம்

தங்களுடைய கருத்து என்ன என்று கேட்டார், எப்பொழுது குழந்தை பெரியவர் ஆகி விடுகிறதோ அப்பொழுது தந்தையும் குழந்தையும் சமமாகி விடுகின்றனர். நானும்கூட அன்பிலும் அன்பான குழந்தையின் கருத்தில்லாமல் எதுவும் செய்ய இயலாது, முதலில் தந்தை, பிறகே குழந்தை; இப்பொழுதோ முதலில் குழந்தை பிறகே தந்தை. இருவருமே சமமாக மேலும் ஒருவருக்கொருவர் மிகுந்த சிநேகம் மற்றும் அன்பில் மூழ்கி இருந்ததை நான் வதனத்தில் கண்டேன். எவ்வாறு இரு நண்பர்கள் சந்திருக்கின்றனர், அவ்வாறே பாப்தாதா இருவரும் தங்களுக்குள் உரையாடல் செய்யும் காட்சி தென்பட்டுக் கொண்டிருந்தது. பிரம்மாபாபா தங்கள் உத்தரவு என்றார் மேலும் சிவபாபா குழந்தையின் விருப்பம் என்றார். இருவருமே புன்னகைத்துக் கொண்டிருந்தனர். ஒரு வினாடிக்காக குழந்தைகளுடன் சந்தித்து விட்டு வாருங்கள் என்று நான் கூறினேன். அச்சமயம் இருவர் பக்கமும் பார்த்தேன். சிவபாபா என்ன உரைத்தார். அது பிரம்மாபாபாவிற்குச் சம்மதமாக இருந்தது என்பது கண்களுக்குப் புலப்பட்டது. உடனே பாப்தாதா (குல்சார் தாதி) செய்தியைப் பெற்று வருபவர் உடலில் எழுந்தருளினார். மேலும் கூறினார் உங்களை ஆகாரி ஆக்குவதற்காக பாப்தாதா இப்பொழுதும் நிலையாக உள்ளனர் மேலும் நிலையாக இருப்பார்கள். இப்பொழுது பாப்தாதா ஆன்மிக ரத்தினங்களாகிய உங்களைச் சந்தித்த பிறகு விடைபெறுகிறார். பின்னரும் சந்திப்பார். எது நடைபெறுகிறதோ அதில் நன்மை உள்ளது. பாப்தாதா மற்றும் நன்மை. வேறு வார்த்தை இல்லை. அவ்வளவு தான். பாப்தாதா இந்த இரு இனிய வார்த்தைகளைக் கூறினார். மேலும் அவ்யக்த வதனம் சென்று செய்தியைப் பெற்று வருபவரிடம் (சந்தேஷி) எவ்வாறு இவ்வேளை பாபா ஒவ்வொருவருக்குள்ளேயும் உள்ள அன்பு மற்றும் நினைவைப் பார்த்து விட்டு வந்திருக்கிறார்களோ அவ்வாறு நினைவு மற்றும் அன்பை எப்பொழுதும் நிலையாக வைத்திருக்க வேண்டும். இந்த நினைவு மற்றும் அன்பு ஒரு கயிறு ஆகும். அக்கயிறை நிலையானதாக வைத்துக் கொள்ள வேண்டும். இக்கயிற்றின் காரணமாக இடையில் சந்தித்துக் கொண்டே இருப்போம் என்று சொன்னார்கள். பாபா கூறினார், படைத்தல் காரியம் எவ்வாறு ஆதியிலிருந்து நடைபெற்றதோ இறுதி வரை அவ்வாறே நடைபெறும், வித்தியாசம் இருக்காது. எக்குழந்தைகளை பாபா நிமித்தமாக வைத்துள்ளாரோ அவர்கள் வாயிலாக பாப்தாதா அனைத்து குழந்தைகளுக்கும் வழிகாட்டிக்

கொண்டே இருப்பார்கள். மேலும் எவ்வாறு பாப்தாதாவின் ஒன்றிணைந்த வழிகாட்டுதல் கிடைக்கும் என்பதை குழந்தைகள் அனுபவம் செய்து கொண்டே இருப்பார்கள். சங்கமயுகத்தில் பாபா, தாதா இருவரும் தனியாக ஆக இயலாது. அனைவருக்கும் இரண்டு வார்த்தைகளைச் சொல்ல வேண்டும். நிலையான மற்றும் துண்டிக்கப்படாத நிலை இவை பாப்தாதா இருவரின் பரிசாகும்! எவ்வாறு உயர்ந்த மனிதர்கள் எங்காவது சென்றார்கள் என்றால் பரிசு கொடுப்பார்கள். அவ்வாறு பாப்தாதா இருவரும், நிலையான மற்றும் துண்டிக்கப்படாத நிலை ஆகிய இரு பரிசுகளை வழங்குகிறார்கள். இவற்றை புத்தி என்ற பெட்டியில் அவ்வாறு வைக்க வேண்டும், எவ்வாறெனில் எவரேனும் அவற்றைத் திருட எவ்வளவுதான் முயற்சித்தாலும் கூட பரிசு உங்களிடமே இருக்க வேண்டும் என்று பாபா உரைத்தார். பின்னர் பாபா, இப்பொழுது சிறிது நேரத்திற்காக விடைபெறுகிறேன். பின் எப்படி எப்படி காரியம் இருக்குமோ அதற்கான வழிகாட்டுதலை வழங்கிக் கொண்டே இருப்பேன் என்று கூறினார்.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋ ❋❋❋❋❋❋❋

# 21.01.1969-2 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சரீரம் விலகியது ஆனால் கரமும் துணையும் அல்ல!

அனைவரும் அவ்யக்த மூர்த்தியாகி அமர்ந்துள்ளீர்களா? வியக்த ரூபத்தில் இருந்தபோதிலும் அவ்யக்த ஸ்திதியில் இருக்க வேண்டும். எப்பொழுது அவ்யக்த ஸ்திதியில் நிலைத்து விடுவீர்களோ அப்பொழுது அவ்யக்த ஸ்திதியில் எவ்வித சிக்கலும் இருக்காது. நிகழ்காலத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அனைத்து நாடகப் பாத்திரமும் குழந்தைகள் உங்களை அதிவிரைவில் அவ்யக்தம் ஆக்குவதற்கான சாதனமாகும். தடுமாறத் தேவையில்லை. துவக்கத்தில் யக்ஞத்தின் படைப்பும் கூட எளிதாக நடந்தது. எப்பொழுது நீங்கள், யக்ஞத்தின் ஸ்தாபனையின் துவக்கத்தில் வந்தீர்களோ, அப்பொழுது உங்கள் அனைவராலும் நம்பிக்கைக் கடிதம் எழுத வைக்கப்பட்டது. ஒருவேளை பிரம்மா சென்று விட்டாலும் கூட எங்களின் நிலை, எங்களின் நம்பிக்கை நிலைத்திருக்கும் என்பதையே நம்பிக்கையாக எழுதக் கூறப்பட்டது. அந்த நம்பிக்கைக் கடிதம் நினைவுள்ளதா? எவ்வகையிலும், எப்பேற்பட்ட நிலைமையின் அனுசாரமும், தடை வரும் வேளையிலும் ஐயம் வராமல் இருப்பதையே நம்பிக்கை என்றழைக்கப்படுகிறது. சூழ்நிலைகள் மாற்றமடைந்து தான் ஆக வேண்டும்; மாற்றமடைந்து கொண்டே இருக்கும் ஆயினும் நீங்கள் எவ்வாறு உலகமே மாறினாலும் நாங்கள் மாறமாட்டோம் என்ற பாடல் பாடுகிறீர்கள் இல்லையா! அவ்வாறு நிச்சயபுத்தி உடைய நீங்கள் அனைவரும் இன்றைய சபையில் அமர்ந்திருக்கிறீர்கள். உங்களுடைய மம்மா உங்கள் அனைவருக்கும் கூறியிருக்கிறார்கள் -நம்பிக்கையின் ஆதாரங்களாக இதுவரை எவையெல்லாம் நிற்கின்றனவோ, அவ்வனைத்து ஆதாரங்களும் நீக்கப்பட்டுத்தான் ஆக வேண்டும். மேலும் நீங்கினாலும் அதன் அஸ்திவாரம் உறுதியானதாக உள்ளது. ஒருவேளை அஸ்திவாரம் உறுதியாக இல்லையெனில் ஆதாரம் அவசியமாகிறது. ஆதாரம் எது பாபாவின் ஆதாரம், குழுவின் ஆதாரம்,

பரிவாரத்தின் நியமங்களின் ஆதாரத்தை விடக்கூடாது. எனினும், பரிட்சை வேளையில் என்ன காட்சி எதிரில் வருகிறதோ அதில் நம்பிக்கை உடையக்கூடாது. நம்பிக்கை முறிக்க முடியாதது, அது முறித்தாலும் முறியாதது. அப்பேற்பட்ட நிச்சயபுத்தி உடையவர்கள்தான் கழுத்து மாலையாக இருக்கிறார்கள்.

பிரம்மா உங்களுடைய மிகுந்த அன்பிற்குரியவரா என்ன? (இருந்தார் என்பதல்ல, ஆயினும் இருக்கிறார்) அவ்வாறெனில் அவர் கூறியதில்லையா என்ன? விஷயங்கள் அனைத்தும் கூறப்பட்டுள்ளன, தக்க சமயத்தில் நினைவு வருவது தான் தீவிர முயற்சி ஆகும். நினைவு செய்யுங்கள். அவரும் கூட குழந்தைகள் உங்களை வலுவடையச் செய்வதற்காக, பாப்தாதா குழந்தைகளை அவ்வளவு அலங்காரம் செய்திருக்கின்றார்; ஆயினும், குழந்தைகள் அவ்வளவு அலங்காரம் செய்தவர்கள் ஆகவில்லை எனக் கூறியிருக்கிறார். இது அத்தகைய வேளையே ஆகும். முன்பு அவர் தன்னை அகங்காரமற்றவர், பணிவுள்ளம் உடையவர் எனக் கூறிக் கொண்டே சில குழந்தைகளிடம், நான் கூட இப்பொழுது பரிபூரணம் அடையவில்லை. நானும் இப்பொழுது நிரந்தர ஆத்ம அபிமானி ஆகவில்லை என்று சொல்வார். எனினும், நீங்கள் தனது அனுபவத்தின் ஆதாரத்தினால் மூன்று நான்கு மாதங்களாக கவனம் கொடுத்திருந்தால், எதிரில் சந்திக்கும் சௌபாக்கியம் பிராப்தமாகக் கிடைத்திருந்தால், இந்த பிரம்மா இப்பொழுது சாகாரி அல்ல ஆனால் அவ்யக்த ஆகாரி ரூபம் தரித்திருக்கிறார் என்பதை அனுபவம் செய்திருப்பீர்கள். சில வருடங்களுக்கு முன் சிறுசிறு விஷயங்களையும் கேட்டார், சமயம் கொடுத்தார் ஆனால் இப்பொழுது என்ன பார்த்தீர்கள்? இந்த சிறுசிறு விஷயங்களைக் கேட்காததன் காரணம் என்னவென்றால் அந்த சமயம் நிரந்தர நினைவில் கழிந்தது. குழந்தைகள் நீங்கள் அவரின் நெற்றியில் நட்சத்திரம் ஜொலிப்புடன் தென்பட்டதை அவரது உடல் மூலம் ஒருபோதும் கவனிக்கவில்லையா என்ன? அவ்யக்த ஸ்திதியில் யார் இருந்தார்களோ அவர்கள் அவ்யக்த மூர்த்தியை அறிந்திருந்தார்கள், தெரிந்திருந்தார்கள். யார் அவ்யக்த நிலையில் இருக்கவில்லையோ அவர்கள் விலைமதிப்பற்ற ரத்தினத்தை முழுமையான ரீதியில் தெரிந்திருக்கவில்லை.

# 1969 அவ்யக்த முரளிகள்!

இப்பொழுதும் படைத்தல் காரியம் பிரம்மாவினுடையதே அன்றி எனதல்ல. இப்பொழுதும் குழந்தைகளின் பாலனையானது பிரம்மா மூலமாகத்தான் நடைபெறும். படைப்பின் இறுதிவரை பிரம்மாவின் நடிப்பு தான் உள்ளது. இப்பொழுது பிரம்மா மூலம் எவ்வாறு படிப்பு நடைபெறும்? என நீங்கள் அனைவரும் சிந்திப்பீர்கள். உண்மையில், சூழ்நிலையின் அனுசாரம் எப்படி, ஏன்? என்ற கேள்வி எழக்கூடாது ஆனால் சில குழந்தைகளின் உள்ளத்தில் கேள்வி என்ன ஆனால் அதிகமான கலக்கத்தின் கடலே ஆரம்பமாகி விட்டது. இந்த முதல் தேர்வுத்தாளில் (பேப்பர்) மிகக் குறைந்த நபர்களே தேர்ச்சி அடைந்துள்ளனர். கொஞ்சம் மனோதிடம் கொள்ளுங்கள். அழிவற்ற ஞானம், அழிவற்ற படிப்பு இருந்தபோதிலும் இக்கேள்விகளின் கலக்கம் ஏன்? ஆயினும் அக்கலக்கத்தை சாந்தப்படுத்துவதற்காகப் புரிய வைத்துக் கொண்டிருக்கிறார்கள். வகுப்பு எவ்வாறு நடைபெற்றதோ அவ்வாறே நடைபெறும். என்ன சொல்வது? பிரம்மாவின் உடல் தீர்மானிக்கப்பட்டது. அவர் உடல் மூலம் என்ன முரளி சொல்லப்பட்டதோ அதுவே முரளியாகும். மேலும் செய்தியை பெற்று வருபவர்கள் (சந்தேஷி) மூலம் சிறிது நேரத்திற்காக என்ன சேவை செய்கின்றார்களோ அது முரளி என கூற முடியாது. அந்த முரளியில் மந்திரம் இல்லை. பாப்தாதாவின் முரளியில்தான் மந்திரம் உள்ளது. ஆகையால் என்னவெல்லாம் முரளிகள் கூறப்பட்டுவிட்டதோ, அவை அனைத்தையும் மீண்டும் படிக்க வேண்டும். எவ்வாறு முன்பு தபால் சென்றதோ அவ்வாறே, முக்கிய சேவை கேந்திரங்களுக்கு அபுவிலிருந்து சென்றுகொண்டே இருக்கும். உங்களுக்கு ஒரு வருடத்திற்கு முன்பு நடைபெற்ற முரளி நினைவில் உள்ளதா என்ன? நேற்று என்ன படித்தீர்களோ அதுவே நினைவில் இருக்காது. சில கருத்துக்கள் அப்பேற்பட்டவை, அவற்றை பலமுறை படித்தபோதிலும் புத்தியில் தங்குவதில்லை. அதனால் முரளி மற்றும் கடிதத்தினுடைய தொடர்பு எவ்வாறு நடைபெற்றதோ அவ்வாறே நடைபெறும். எவ்வாறு நீங்கள் மதுவனத்திற்கு புத்துணர்வடைய வருகிறீர்களோ அவ்வாறே வருகை புரிவீர்கள். என்ன செய்வது, யாரைச் சந்திப்பதற்காக வருவது? இப்பொழுது இந்தக் கேள்வி எழுகிறது. யார் மூலம் புத்துணர்வடைவீர்கள்? யார் அதிர்ஷ்ட நட்சத்திரங்களாக இருக்கிறார்களோ, அதாவது யார் நிமித்தமாக, முக்கியமானவராக இருக்கிறார்களோ (தாதி) அவர்களுடன் முழுமையான சம்பந்தத்தை

இணைத்து, என்னவெல்லாம் உங்கள் சேவை கேந்திரத்தின் விளைவுகளாக இருக்கின்றன, பிரச்சனைகள் இருக்கின்றன, என்னவெல்லாம் சேவை கேந்திரங்களின் முன்னேற்றம் உள்ளது, யாரெல்லாம் புதுப்புது மலர்களாக அந்த நந்தவனத்தில் மலர்ந்துள்ளனரோ, அவர்களுக்கும் குழுவின் காட்சியைக் காண்பிப்பதற்காக மதுவனம் அழைத்து வர வேண்டும். கூடவே அப்பேற்பட்ட குழுவின் நடுவே பாப்தாதா நிமித்தமாகி இருக்கும் செய்தியை பெற்று வருபவர் (சந்தேஷி) மூலம் முழுமையாக சேவை செய்வார்கள்.

இப்பொழுது வேறு ஏதேனும் கேள்வி உள்ளதா? உங்களுடைய பிரம்மாபாபா 100-வருடத்திற்கு முன்பே சென்று விட்டாரே என்று மக்கள் கேட்பார்களே என்று நீங்கள் நினைப்பீர்கள். இது மிக எளிதான கேள்வியாகும், ஒன்றும் கடினமானது அல்ல. 100ன் அருகாமை வயதாகவே இருந்தது! 100-வருடம் என்று ஏன் சொல்லப்பட்டுள்ளதோ, அது பொய்யானதல்ல. ஒருவேளை ஏதாவது மீதம் இருக்கிறதென்றால் ஆகாரத்தின் (அவ்யக்த நிலை) மூலம் முடித்து விடுவார். 100-வருடங்கள் பிரம்மாவின் படைப்பிற்கான நடிப்பாகும், அது 100-வருடங்களில் நிறைவடைந்தே ஆக வேண்டும் ஆனால் நடுவில் பிரம்மாவிற்குப் பின்னர் பிராமணர்களின் நடிப்பு என்ன உள்ளதோ, அது இப்பொழுது நடைபெற இருக்கிறது. பிரம்மா பிராமணர்களை எதற்காக படைத்தார்? பிரம்மா தனது படைப்பை பார்க்கமாட்டாரா என்ன? உங்களுக்கு இப்பொழுது பொறுப்பின் கிரீடம் கொடுக்கமாட்டாரா என்ன? சத்யுகத்தின் தேவதைகள் எவ்வாறு உருவாகுவார்கள்? இங்கே உள்ள பொறுப்புதான் சத்யுகத்திற்கான அஸ்திவாரம் போடுகிறது. அதனால், குழந்தைகள் உங்களிடம் யாரெல்லாம் கேள்வி கேட்கின்றனரோ அவர்களுக்கு பிரம்மாவின் படைப்பு நடைபெற்றே ஆகும் என்று பதிலளியுங்கள்.

இப்பொழுது குழந்தைகளின் படிப்பின் வேளை முற்றிலும் அருகாமையில் உள்ளது. இது ஒவ்வொரு முரளியில் மம்மாவிற்கு பிறகு, சமிக்ஞை கொடுக்கப்பட்டிருக்கிறது. பரிட்சைக்கான நாள், தேதி சொல்லப்படுமா என்ன? முன்பே அறிவிக்கப்பட்டால் அதை பரிட்சை என கூற முடியுமா என்ன? எது திடீரென ஏற்படுகிறதோ அதுவே

பரிட்சை ஆகும். ஒருவரின் மனதில் என்ன ஏற்படுகிறதோ அது திடீரென ஏற்படுவதாக சொல்லப்படுவதில்லை. முடிவில் என்ன பார்க்கப்பட்டது? முழுமையாக தேர்ச்சி அடையவில்லை, ஏதாவது ஒரு குறை ஒவ்வொருவரிடமும் தென்பட்டது. ஆயினும் மிக்க நன்று. ஏனெனில் இது முயற்சி செய்வதற்கான சமயம் ஆகும். அதன் அனுசாரம் முடிவு நன்றாக உள்ளது என்றே சொல்லலாம். மற்றபடி தந்தை மற்றும் தாதா இருவருமே ஒரு விஷயத்தில் குஷியாக இருந்தனர். அது என்ன? குழந்தைகள் குழு மற்றும் அன்பு ஆகிய இரண்டினுடைய சான்று (Proof) அளித்தார்கள். எவ்வாறு ஒருவர் வருகிறார், எப்பொழுது வருகிறார், எந்த நோக்கத்தோடு வருகிறார், எந்த ஸ்திதியில் இருந்து சந்திக்கிறார் என்பதை பிரம்மா வதனத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்தார். இந்த முடிவை (Result) பாபா, தாதா இருவரும் இணைந்தே பார்த்துக் கொண்டிருந்தனர். ஆதலால் ஒவ்வொருவரும் தன்னை பார்க்க வேண்டும். மேலும் தனக்குள் என்ன குறை இருக்கிறதோ அதை நிறைக்க வேண்டும். மற்றபடி இன்றிலிருந்து அனைவருக்காகவும் யார் நிமித்தமாக இருக்கிறார் என்பதை நீங்கள் அறிந்தே இருக்கிறீர்கள். தீதி இருக்கிறார்கள் அவர்களுடன் குமாரக்கா (பிரகாஷ்மணி தாதிஜி) உதவியாளராக இருக்கிறார்கள். எவ்வாறு மற்ற அனைத்து கடிதத்தொடர்பு நடைபெற்றதோ அவ்வாறே தலைமையகத்திலிருந்து நடைபெற்றுக் கொண்டே இருக்கும். இவர்கள் இருவரும் உங்கள் அனைவரையும் பேணி வளர்ப்பார்கள். ஒருவேளை அவசியம் ஏற்பட்டது என்றால் அனைவருடைய சேவை கேந்திரங்களுக்கும் வலம் வந்துகொண்டே இருப்பார்கள் ஆனால் தற்போதுள்ள பரிட்சை என்ன? திடீரென நடப்பது என்பது பரிட்சையாக வந்தது ஆனால் என்ன பரிட்சை வரப் போகிறதோ அதைச் சொல்கிறோம். இப்பொழுது ஒருவழி. உள்நோக்குமுகம் மற்றும் அவ்யக்த ஸ்திதியில் நிலைத்திருந்து சம்பந்தத்தில் வாருங்கள். பாப்தாதா என்ன தேர்வைப் பற்றி கூறிக் கொண்டு இருக்கின்றார்களோ அதன் முடிவை பார்ப்பார்கள். இறுதி சமயத்தில் பிரம்மாவின் உடல் மூலம் என்ன படிப்பினை கொடுத்தாரோ அதை அனைவரும் கேட்டிருப்பீர்கள் மேலும் நினைவும் இருக்கும். இன்றைய தினம் இந்த குழுவின் நடுவில் கொஞ்சம் கொடுப்பதற்காகவும் வந்திருக்கிறீர்கள், கொஞ்சம் பெறுவதற்காகவும் வந்திருக்கிறீர்கள். எதைப் பெறுவீர்களோ அதை கொடுப்பதற்கும் தயாராக உள்ளீர்களா? என்ன நடக்கிறது என்று தெரியவில்லை, அப்படி

எதுவும் விஷயம் இருக்காது என்று ஏதாவது சங்கல்பம் யாருடைய உள்ளத்தில் எழுகிறதோ அவர்களை கை உயர்த்த வைக்கட்டுமா? ஒருவேளை அனைவரும் திருப்தியாக இருக்கிறீர்கள் என்றால் அதைக் கொடுப்பதிலும் திருப்தியாக இருப்பீர்கள். இன்று இந்த குழுவின் மத்தியில் இரண்டு விஷயங்களை தானம் கொடுக்க வேண்டும். எந்த இரண்டு விஷயங்கள்? முதல் முக்கியமான விஷயம் என்னவென்றால், இன்றிலிருந்து தங்களுக்குள் ஒருவர் மற்றொருவரின் அவகுணத்தைப் பார்க்கக்கூடாது, கேட்கக் கூடாது, மனதில் வைக்கக்கூடாது. ஒருவேளை யாராவது சகோதரி அல்லது சகோதரனுடைய ஏதாவது விஷயம் பார்ப்பதற்கு தென்பட்டால் நிமித்தமாக யார் ஆகியிருக்கிறார்களோ அவர்கள் மூலம் சமிக்ஞை கொடுக்கலாம். இரண்டாவது விஷயம் என்னவென்றால் சிலர் உங்களுடைய நம்பிக்கையை ஆட்டம் கொள்ளச் செய்வதற்காக விஷயங்களைச் சொல்வார்கள். இந்த அமைப்பு எவ்வாறு செயல்படுகிறது என்பதை இப்பொழுது பார்க்கலாம் என்ற சப்தத்தைப் பரப்புவார்கள் ஆனால் இவர்களுடைய ஆதாரம் அழிவற்றவர் என்பது அந்த மக்களுக்குத் தெரியாது. கவனத்தில் கொள்ள வேண்டிய மற்றுமொரு விஷயம் என்னவென்றால், எவரேனும் அசைக்க முயற்சித்தாலும், எவ்வாறு குழந்தைகள் உங்களுடைய கல்பத்திற்கு முந்தைய மகிமை உள்ளது, அங்கதனுக்கு சமமாக காலை அசைக்கக்கூடாது. அப்படிப்பட்ட நிச்சயபுத்தி உடையவர்கள், அசையாதவர்கள், ஏக்ரஸ்ஸாக (ஒரே ரசனை) இருப்பவர்கள்தான் வரப்போகிற இறுதித் தேர்வுத் தாளில் தேர்ச்சி அடைவார்கள். அதுமட்டுமின்றி பிரம்மா மூலம் இத்தனை பிராமணர்களைப் படைத்திருக்கிறார். எப்பொழுது தந்தையினுடைய குழந்தைகள் பெரியவர்களாகி விடுகின்றனரோ அப்பொழுது தந்தை பணியிலிருந்து ஓய்வு பெறமாட்டாரா என்ன? தந்தை ஓய்வு பெற்ற நிலையிலும் உங்களுடன் இருக்கின்றார் என்று இப்பொழுது புரிந்து கொள்ளுங்கள். குழந்தைகள் உங்களுக்கு காரியத்தைக் கொடுத்து விட்டு பார்த்துக் கொண்டிருப்பார். சரீரம் நீங்கி விட்டது ஆனால் கரமும் துணையும் நீங்கவில்லை. புத்தியினுடைய துணையும் கரமும் நீங்கவில்லை, அது அழிவற்றதாக நிலையாக இருக்கும். சொல்லப்பட்ட இரண்டு விஷயங்கள்: 1-ஆட்டம் கொள்வதை தானமாகக் கொடுக்க வேண்டும். 2-அவகுணம் பார்ப்பதை தானமாகக் கொடுக்க வேண்டும். இப்பொழுது அனைத்து குழந்தைகளும் இந்த தானம் செய்ய வேண்டும்.

சங்கல்பம் செய்து விட்டீர்கள் என்றாலே கொடுத்து விட்டீர்கள் என்று அர்த்தம். சங்கல்பம் செய்த பொருள் ஒருபொழுதும் திரும்பப் பெறப்படுவதில்லை. ஒருவேளை மாயா திரும்பப் பெறுவதற்கான முயற்சி செய்வித்தாலும் கூட, தன் மீது தானே சோதித்தால் தேர்ச்சி அடைந்து விடுவீர்கள்.

இத்தருணம், மற்றுமொரு விஷயத்தை உங்கள் அனைவரின் கவனத்திற்கும் கொண்டு வருகின்றார்கள். பாப்தாதாவின் கடைசி முரளியில் கிடைத்த படிப்பினை என்னவென்றால், இந்தக் காட்சி பார்ப்பதை அதிகமாக நடைபெறச் செய்தல் என்பது நேரத்தை வீணாக இழப்பதாகும். ஆதலால் இது கூடாது. செய்தியை பெற்று வருபவர் (சந்தேஷி மூலம் சென்டரில் என்ன பாகம் (Part) நடைபெற வேண்டும் என்பதை நீங்கள் சோதிக்க இயலவில்லை என்றும் ஆகி விடக்கூடாது. அதனால், இந்த நிமித்தமாகி இருக்கும் தீதி மற்றும் குமாரக்கா, எந்த செய்தியை பெற்று வருபவரை நியமிப்பார்களோ அவர்கள் மூலம் வழிகாட்டுதல் கிடைக்கும். இந்த நாடகப் பாத்திரத்திற்காகவும் கூட இவர்கள் யாரை நிமித்தமாக ஆக்குவார்களோ அவர்கள் மூலமே ரகசியம் வெளிப்படுத்தப்படும். 'போக்' வைக்கும் நேரம் சொர்க்கம் முதலியவைக்குச் செல்வது நேரத்தை வீணாக இழப்பதாகும் என்ற இந்த வழிகாட்டுதலும் கடைசி முரளியில் இருந்தது. ஏனெனில் சுற்றுவது அலைவது இத்தருணத்தில் அழகல்ல! இப்பொழுதோ நிரந்தர நினைவு யாத்திரை மற்றும் என்ன படிப்பினை கிடைத்துள்ளதோ அதை நடைமுறை வாழ்வில் தாரணை செய்வதற்கான சான்றளிக்க வேண்டும்.

ஒருவேளை பிரம்மாபாபாவிடம் அன்பு இருக்கிறது என்றால் அன்பின் அடையாளம் என்ன? இரண்டு கண்ணீர்த் துளி வடித்தது அன்பாகாது; ஆனால் எந்தப் பொருள் மீது அவருடைய (பிரம்மாபாபாவினுடைய) அன்பு இருந்ததோ அதன் மீது உங்களுடையதும் இருப்பதுவே அன்பு என்றழைக்கப்படுகிறது. அவரின் அன்பு சேவை மீது இருந்தது. இறுதியிலும் கூட சேவையின் சான்று கொடுத்தார் இல்லையா! சேவை மீது அன்பு, அவருடைய கட்டளைகள் மீது அன்பு இருப்பதுவே அன்பு என்று சொல்லப்படுகின்றது. மற்றபடி குழந்தைகள் நாம் விடை கொடுக்காமல் சாகார பாபாவை வதனத்திற்கு ஏன் அழைத்தார் எனத்

தெரியவில்லை என்று யாரும் எண்ண வேண்டாம் ஆனால் விடை கொடுக்க சொன்னால் நீங்கள் கொடுப்பீர்களா? ஆதலால் நாடகத்தில் முன்பே பார்த்தது என்னவென்றால், யாரெல்லாம் சென்று விட்டனரோ அவர்கள் விடைபெற்றுச் செல்லவில்லை. அதனால் பிராமண குலத்தின் நாடகத்தில் இது பழக்கமாக உள்ளது என புரிந்துகொள்ளுங்கள். நாடகத்தில் எது பதிவாகி உள்ளதோ அந்தப் பழக்கம் நடைபெற்றது. சாகாரமானவருடன் உங்கள் அனைவரின் மிகுந்த அன்பு இருந்தது என்பதை புரிந்திருக்கிறார்கள். இருந்தது என்பதல்ல, இருக்கிறதும் கூட. அன்பில்லையெனில் இந்த சபையில் எப்படி இருப்பீர்கள்? சாகாரத்தில் பின்பற்றுவதற்காக இவருடைய உடல் தான் இருந்தது, பின் அன்பு ஏன் இருக்காது? அன்பு இருந்தது மேலும் இருக்கிறதும் கூட. இது தந்தை, குழந்தைகளுடைய அடையாளமாகும். இதனால் சாகாரமானவரும் கூட வதனத்தில் புன்னகைத்துக் கொண்டிருக்கிறார். குழந்தைகளின் அன்பிருக்கிறது என்றால் ஏன் எனது அன்பு இருக்காது ஆயினும் நாடகத்தில் என்ன பாத்திரம் இருக்கிறதோ அது கல்யாணகாரியாக இருக்கிறது என்பதை அவர் அறிந்திருக்கிறார். அவர் தைரியம் இழக்கவில்லை. அவர் முழுமையாக ஆடாத, அசையாத, நிலையான நிலையில் இருந்தார். மேலும் இருக்கவும் செய்கிறார் ஆனால் குழந்தைகள் உங்கள் மீது ஆயிரம் மடங்கு அதிகமாக அவருக்குள் அன்பு உள்ளது. தற்பொழுது அன்பின் சான்று அளிக்க வேண்டும். இது கூட ஒரு ஒளிந்துகொள்ளும் விளையாட்டு ஆகும். ஆதலால் எண்ணங்களின் கடலைக் கடையுங்கள், குழப்பத்தினைக் கடையாதிர்கள். என்ன சக்தியைப் பெற்றுள்ளீர்களோ அதை பிரத்யட்சமாக வெளிப்படுத்துங்கள். பாரத மாதர் -சக்தியின்அவதாரம் -இதுவே இறுதி முழக்கமாக இருக்கும். குழந்தை தந்தையை வெளிப்படுத்தும் (Son Shows Father) நாடகத்தின் பதிவினை செய்விக்கும். சாகார பாபா, நான் குழந்தைகளுடன் சந்திப்பைக் கொண்டாட வருவேன் என்று கூறினார். ஒருவேளை இன்று வந்தார் என்றால் குழந்தைகள் கண்ணீர் வடிப்பார்கள். நல்லது.

✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱

# 22.01.1969 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பாப்தாதாவின் கைக்குள் புத்தி என்ற கை இருந்ததென்றால் பரிட்சைகள் என்ற கடலில் அசைய மாட்டீர்கள்!

நண்பகல் 'போக்' வைத்த சமயத்தில் வதனத்தின் சமாச்சாரம்!
இன்று வதனத்திற்குச் சென்றதும் எவ்வாறு பிரம்மாபாபா இங்கே சந்திப்பாரோ அவ்வாறே அங்கே பிரம்மாபாபா சந்தித்தார். பாபா, குழந்தைகளின் சாப்பாடு நேரத்தின் அனுசாரம் தாமதமாக வந்திருக்கிறீர்கள் என்று கூறினார். பாபா ஒன்று, ஒன்றரை மணி உங்களுடைய சாப்பிடும் சமயமாக இருந்தது என்று நான் சொன்னேன். பாபா எப்பொழுது குழந்தைகளுடன் உணவு உட்கொண்டாரோ அப்பொழுது குழந்தைகளினுடைய நேரத்தில் உணவு சாப்பிட்டார். அந்த நேரத்தை விட தாமதமாக வந்திருக்கிறீர்கள் என்று பாபா கூறினார். பிறகு பாபா, பிரம்மாபாபாவிடம், அழைத்துச் செல்லுங்கள் என்று கூறினார். சென்று பார்த்தது என்னவென்றால், எவ்வாறு இங்கே அலுவலகத்தில் நாற்காலியில் பாபா வந்து அமர்வாரோ, கடிதம் எழுதுவாரோ அதே நாற்காலி அதே அட்டை, அதே பென்சில் வைக்கப்பட்டிருந்தது. இந்த அனைத்து பொருட்களும் வதனத்திற்கு எப்படி வந்தன என்று நான் வியப்பால் பிரமித்து விட்டேன். பின்னர் பாபா, கையால் எழுதப்பட்ட கடிதத்தை என்னிடம் கொடுத்தார். நான் படித்தேன். அதில், சுயதரிசன சக்கரதாரிகளே! கண்மணிகளே! அன்பு நினைவுகளுக்குப் பிறகு, அவ்யக்த ரூபத்தில் அவ்யக்த ஸ்திதியில் நிலைத்திருக்கும் குழந்தைகளுடன் சந்திப்பு செய்து கொண்டிருக்கிறார்கள் என்று எழுதப்பட்டிருந்தது. இரண்டாம் பக்கத்தில், குழந்தைகளே, பாப்தாதாவினுடைய சாகார ரூபத்தின் மூலம் என்ன படிப்பினை கிடைத்திருக்கிறதோ, அதனுடைய விஸ்தாரம் செய்து கொண்டே இருக்க வேண்டும். இப்பொழுது மறவாதீர்கள், மறந்து நினைக்காதீர்கள். முடிவில் பாபா எவ்வாறு

கையெழுத்து போடுவாரோ அவ்வாறே போடப்பட்டிருந்தது. நான் என்னுடைய நேரத்தில் கடிதமும் எழுதினேன் பிறகு உணவிற்காக காத்துக் கொண்டு இருந்தேன் என்றார். பிறகு உணவு ஊட்டி விட்டேன். வதனத்திலும் பொருட்களை உண்கின்றேன்; ஆயினும் யக்ஞத்தின் உணவின் சுவை மிகவும் நன்றாக உள்ளது என பாபா கூறினார்.

பிறகு பாபா உணவை சுவீகாரம் செய்தார். எப்பொழுது நான் வந்துகொண்டு இருந்தேனோ அப்பொழுது பாபா ஒரு காட்சியைக் காண்பித்தார். ஒரு கடல் இருந்தது. அதில் மிக வேகமாக அலைகள் வந்துகொண்டிருந்தன. நீங்கள் இந்த கடலுக்கு நடுவில் செல்லுங்கள் என்று பாபா கூறினார். இவ்வளவு வேகமான அலைகளுக்குள் எப்படிச் செல்வேன் என நான் பயம் கொண்டேன். பிறகு பாபாவின் கட்டளைப்படி காலை வைத்தேன். எங்கே காலை வைத்தேனோ அங்கே வந்த அலை சாந்தமாகி விட்டது. பிறகு பாப்தாதா இருவரும் சிறு சிறு படகுகளை அக்கடலின் நடுவில் வைப்பதைக் கண்டேன் ஆனால் ஒரு படகு கடலின் அலை அடித்தவுடன் மறைந்து விட்டது. ஒன்று அலையினால் இங்கே அங்கே அலைந்து கொண்டு இருந்தது. மற்றும் ஒன்று எப்படி இருந்ததோ அப்படியே இருந்தது. நான் இதைக் காண்பதிலேயே தீவிரமாகி விட்டேன். பின்னர் அக்காட்சி முடிந்து விட்டது.

பாப்தாதா கூறியது என்னவென்றால், இந்த விளையாட்டை தந்தை நடைமுறையில் படைத்திருக்கிறார் எக்குழந்தைகளின் வாழ்க்கை என்ற படகு தந்தையின் கரத்திற்குள் இருக்குமோ அவர்கள் ஆடமாட்டார்கள். தற்பொழுது நீங்கள் பரிட்சைகள் என்ற கடலின் நடுவில் சென்றுகொண்டு இருக்கிறீர்கள். யாருடைய தொடர்பு அதாவது யாருடைய கரம் பாப்தாதாவின் கரத்தில் இருக்குமோ அவர்களுடைய இந்த வாழ்க்கை என்ற படகு ஆடாது, மூழ்காது. குழந்தைகள் நீங்கள் இதை நாடகத்தின் விளையாட்டு எனப் புரிந்து நடந்தீர்களென்றால் ஆட்டம் கொள்ளமாட்டீர்கள். மேலும் யாருடைய புத்தி என்ற கரம் துணை தளர்வடையுமோ அவர்கள் ஆட்டம் கொள்வார்கள். ஆதலால் குழந்தைகள் புத்தி என்ற துணையை உறுதியாக வைப்பதில் குறிப்பாக கவனம் கொள்ள வேண்டும்.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋❋

## 23.01.1969 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## ஸ்திதியின் நினைவை ஏற்படுத்தக்கூடியது எலும்புகளே ஆகும்!

இன்று நான் குழந்தைகள் உங்கள் அனைவருடனும் அவ்யக்த ரூபத்தில் சந்திப்பதற்காக வந்திருக்கிறேன். என்னுடைய எந்தக் குழந்தைகள் அவ்யக்த ரூபத்தில் நிலைத்திருக்கின்றனரோ அவர்களே இதைப் புரிந்து கொள்ள முடியும். குழந்தைகள் நீங்கள் அனைவரும் அவ்யக்த ரூபத்தில் நிலைத்திருந்து யாரை பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்? வியக்த ரூபத்திலா அல்லது அவ்யக்த ரூபத்திலா? நீங்கள் வியக்தமாக இருக்கிறீர்களா அல்லது அவ்யக்தமாக இருக்கிறீர்களா? ஒருவேளை வியக்தத்தில் பார்த்தீர்கள் என்றால் தந்தையைப் பார்க்க முடியாது. இன்று அவ்யக்த வதனத்திலிருந்து சந்திப்பதற்காக வந்திருக்கிறேன். அவ்யக்த வதனத்தில் சப்தம் கிடையாது. ஆயினும் இங்கே சப்தத்தில் வந்திருக்கிறேன். குழந்தைகள் உங்கள் அனைவருக்குள்ளும் என்ன சங்கல்பம் எழுந்துகொண்டு இருக்கிறது? இப்பொழுது இது அவ்யக்த சந்திப்பாகும். கல்பத்திற்கு முன்பு போல குழந்தைகளுடன் உரையாடல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. உரையாடல் செய்வதற்காக இனிமையிலும் இனிமையான பாபா குழந்தைகள் உங்கள் அனைவரையும் சந்திக்க அனுப்பி இருக்கிறார். என்ன இருந்ததோ அதுவே இப்பொழுதும் இருக்கிறது. இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு இனிமையிலும் இனிமையான பாபாவுடன் உரையாடல் நடந்து கொண்டு இருந்தது. உரையாடல் என்ன நடந்தது, தெரியுமா? பாபா கூறினார், வதனத்தின் அனுபவம் செய்வதற்காக தயாராக இருக்கிறீர்களா? என்ன பதில் கொடுத்திருப்பேன்? எது தந்தையின் கட்டளை -எப்படி நடத்துவீர்களோ, எங்கே அமரச் செய்வீர்களோ, எந்த ரூபத்தில் அமரச் செய்வீர்களோ -அதன் படி நடப்பேன் என்பதையே கூறினேன்.

# 1969 அவ்யக்த முரளிகள்!

குழந்தைகளுக்குள்ளே பாப்தாதா ஏன் விடை பெற்றுச் செல்லவில்லை என்ற இந்த சங்கல்பம் இருக்கும். பாபாவிடமும் இதைச் சொன்னேன். பாபா கூறினார், ஒருவேளை அனைத்து குழந்தைகளையும் அமரச் செய்து விடை கொடுக்கச் சொன்னால் விடை கொடுப்பார்களா? நீங்களும் கூட குழந்தைகளைக் கண்டு, சேவையைக் கண்டு குழந்தைகளின் அன்பில் வந்து விடுவீர்கள். அதனால், பாபா என்ன செய்வித்தாரோ அதுவே நாடகத்தில் பதிவாகியுள்ளது எனலாம். வியக்த ரூபத்தில் இல்லை என்றாலும், அவ்யக்த ரூபத்தில் சந்திப்பு செய்து கொண்டுதான் இருக்கிறார்கள். சேவையின் விருத்தியும் அப்படியே நடக்கிறது, குழந்தைகளின் நினைவும் அப்படியே இருக்கிறது ஆனால் அது வியக்தமானவருக்குள் அவ்யக்தமானவர் இருந்தார் மேலும் இது அவ்யக்தம் மட்டும் தான், இந்த வித்தியாசமே உள்ளது. யார் கண்களின் சந்திப்பை அறிந்திருப்பார்களோ அவர்கள் கண்களின் மூலம் இந்த சிறிய சந்திப்பில் தனக்காக படிப்பினையை, வழிகாட்டுதலைப் பெற்றுவிடுவார்கள். நீங்கள் அனைவரும் வதனத்திற்கு வந்து தான் ஆக வேண்டும். குழந்தைகளுடன் சந்திப்பதற்காக ஒவ்வொரு தருணமும், ஒவ்வொரு காலமும் தயாராக இருக்கின்றார்கள். இப்பொழுது எந்தளவிற்கு, குழந்தைகளின் புத்தி தெளிவாக இருக்குமோ, அதன் அனுசாரம் தான் அவ்யக்த சந்திப்பின் அனுபவத்தைச் செய்ய முடியும். சக்தி சொரூபத்தில் நிலைத்து இருக்கிறீர்களா? (தாதியிடம்) எப்படி துணையாக இருந்தாரோ அப்படியே இருக்கின்றார். தனியாக இல்லை. இப்பொழுது சக்தி சொரூப நடிப்பை பிரத்யட்சமாகக் காட்ட வேண்டும். தந்தையின் படிப்பினை என்ன கிடைத்துள்ளதோ அதை நடைமுறையில் செய்து காண்பிக்க வேண்டும். சக்தி சேனை அதிகம் உள்ளது. இப்பொழுது முழுமையான சக்தி சொரூபம் ஆக வேண்டும். இதுவரை குழந்தைகள் மற்றும் தந்தையின் அன்பில் செயல்பட்டு வந்தீர்கள். இப்பொழுது தந்தையிடமிருந்து என்ன சக்தி கிடைத்துள்ளதோ அந்த சக்தியினால் பிறரை அப்பேற்பட்ட சக்திவான் ஆக்க வேண்டும், அதே தந்தையின் அன்பிற்குரியவர்கள் தந்தையுடன் இறுதி வரை இருப்பார்கள்.

இப்பொழுது இனிமையிலும் இனிமையான பாபா குழந்தைகள் உங்கள் அனைவருடைய காட்சியைக் காண்பித்துக் கொண்டிருக்கின்றார். நீங்கள் அனைவரும் எலும்புகளை எடுத்துக் கொண்டு இருந்தீர்கள்.

எலும்புகளைப் பார்க்கக்கூடாது. ஸ்திதியை பார்க்க வேண்டும். இந்த எலும்புகள் நினைவு சொருபம் ஆகும். ஒவ்வொரு நரம்பிலும் ஸ்திதி இருந்தது. வெளிப்படையாக அந்த எலும்புகள் வைக்கப்பட்டுள்ளன ஆனால் அதற்கு பக்திமார்க்கத்தின் அர்த்தம் கொள்ளக்கூடாது. இந்த எலும்புகளில் என்ன ஸ்திதி நிரம்பி இருக்கிறதோ அதையே எப்பொழுதும் பார்க்க வேண்டும். சாதாரண மனிதர்களுக்கு இந்த விஷயங்கள் அவ்வளவாகப் புரியாது. குழந்தைகளுடைய அன்பு இருக்கிறது மேலும் சதா இருக்கும், 21-பிறவிகள் வரை இருக்கும். நீங்கள் அனைவரும் சத்யுக உலகிற்கு கூடவே செல்லமாட்டீர்களா? ராஜ்யத்தைக் கூடவே பெறமாட்டீர்களா? கூடவே இருக்கின்றார், கூடவே இருப்பார்-ஜென்ம ஜென்மங்கள் வரை தந்தை இருக்கிறார், தாதா (சகோதரன்) இல்லை அல்லது தாதா (தாத்தா) இருக்கிறார். தந்தை இல்லை என ஒருபொழுதும் நினைக்கக் கூடாது. நாங்கள் இருவரும் ஒருவரிடம் இருந்து ஒருவர் ஒரு நொடிப்பொழுது கூட பிரிய முடியாது. அவ்வாறே, நீங்களும் தங்களை மும்மூர்த்தி (திரிமூர்த்தி) என்றே புரிந்து கொள்ளுங்கள் அதனால்தான் திரிமூர்த்தியின் பேட்ஜை எப்பொழுதும் தன்னுடன் வைத்துக்கொள்ளுங்கள் என்று கூறுகிறார்கள். எப்பொழுது பிரம்மா, விஷ்ணு, சங்கர் ஆகிய மூவரையும் காண்கிறீர்களோ அப்பொழுது உங்களுடைய மும்மூர்த்தி நினைவு வர வேண்டும். அதாவது தனது சொருபம் மேலும் பாப்தாதாவின் நினைவு வரவேண்டும். மும்மூர்த்தி ஸ்திதி புகழ்பெற்றது ஆகும். இதில்தான் குழந்தைகள் உங்கள் அனைவரின் நன்மை இருக்கிறது. கல்யாணகாரி தந்தை என்ன சொல்கின்றார், என்ன செய்விக்கின்றார். அதில் தான் நன்மை இருக்கிறது. இந்த ஒவ்வொரு மகா வாக்கியத்தில் ஒவ்வொரு பார்வையில் மிகுந்த நன்மை உள்ளது ஆனால் ஸ்தூலத்தை ஒரு சில ஒப்பற்ற, மகாரதி குழந்தைகளே கண்டறியக்கூடியவர்களாக இருக்கிறார்கள். இப்பொழுது நீங்களும் கூட இவ்வளவு விரைவில் கர்மாதீத் நிலையில் நிலைத்திருப்பதற்கான முயற்சி செய்யுங்கள். எவ்வாறு இங்கே ஒவ்வொரு நேரமும் பாப்தாதாவுடன் கழித்தீர்கள், அவ்வாறே ஒவ்வொரு கர்மத்தில், ஒவ்வொரு நேரம் தன்னை அருகாமையில் (பாபாவுடன்) வைத்துக் கொள்ளுங்கள். குழந்தைகளே, இந்தப் படிப்பினையை நினைவில் வைக்க வேண்டும், ஒருபொழுதும் மறக்க கூடாது. சம்பந்தம், அன்பு நினைவுசொரூபம், கூடவே சரளதா சொரூபம், (எளிமை, லேசு) சமர்ப்பணம் மற்றும் ஒருவருக்கொருவர்

சகயோகி ஆகி வெற்றி அடைந்து கொண்டே இருக்க வேண்டும். வெற்றி, குழந்தைகள் உங்கள் அனைவருடைய நெற்றியின் நடுவில் ஜொலித்துக் கொண்டிருக்கிறது. இப்பொழுது அதிக நேரம் ஆகி விட்டது, வேறெதுவும் கூற வேண்டுமா? சூட்சும வதனத்தில் இருந்தாலும் கூட ஒவ்வொரு குழந்தையின் தினசரி காரியம், ஒவ்வொரு குழந்தையின் சார்ட் எதிரில் உள்ளது. வியக்த ரூபத்தைவிட இப்பொழுது மேலும் தெளிவான ரூபத்தில் வியக்த ரூபத்துடன் ஒப்பிட்டு பார்க்கின்றார். அதனால், அனைவருடைய முடிவையும் (Result) பார்த்துக் கொண்டு இருக்கிறார்.

எந்தளவு அவ்யக்த ஸ்திதியில் நிலைத்து இருப்பீர்களோ அந்தளவு அந்த அவ்யக்த ஸ்திதியினால் கர்மேந்திரியங்கள் மூலம் ஸ்ரீமத் எப்படி வழிகாட்டுகிறதோ அப்படி கர்மங்கள் செய்யப்படும் என்ற இந்த அனுபவத்தை குழந்தைகள் பெறுவார்கள். எவ்வாறு ஸ்ரீமத்தினுடைய ஒவ்வொரு காரியமும் நடைபெற்றுக் கொண்டு இருக்கிறதோ ஆதாரத்தினால் அவ்வாறு இப்பொழுது தனது அவ்யக்த ஆதாரத்தினால் காரியம் செய்யவேண்டும். எந்த பொருளுடன் தந்தையின் அன்பு இருக்கிறதோ அதன்மீது அந்தளவு அன்பு வைப்பதுதான் தன்னை சௌபாக்கியசாலி ஆக்குவதாகும். நாடி, நரம்பில் யாருடன் அன்பு இருந்தது? 5-தத்துவங்களினால் அல்ல, அன்பு குணங்களினால் ஏற்படுகின்றது. அன்பு இருந்தது என்றல்ல, இருக்கிறது மேலும் இருக்கும். அன்பு ஆத்மாவுடன் மற்றும் கடமையுடன் தான் இருக்கிறது. பிறகு சரீரம் என்ன! இறுதிவரை துணைவனாக இருப்பேன். யாருக்கு தந்தையிடம் அன்பு உள்ளதோ அவர்களே இறுதிவரை படைப்பு காரியத்தில் உதவியாளராக இருப்பார்கள். அதனால் அன்புடையவர் ஆவதற்கான முயற்சி செய்யுங்கள். எப்பேற்பட்ட மாயா வந்தாலும் மாயாஜீத் ஆக வேண்டும். எப்படி பேட்ஜ் அணிந்து கொள்கிறீர்களோ அப்படி நெற்றியில் இந்த வெற்றியின் பேட்ஜை அணிந்து கொள்ளுங்கள். மதுவனத்தின் வரைபடம் முழு உலகிற்கு முன்பு அருங்காட்சியகமாகத் திகழ வேண்டும். அழிவற்ற களஞ்சியமாக இருக்கிறது. இதனை இன்னும் அதிகமாக வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறு அனைத்து குழந்தைகளும் கடிதம் எழுதினீர்களோ அவ்வாறே எழுதிக் கொண்டே இருக்க வேண்டும். எப்படி வழிகாட்டுதல் பெற்றீர்களோ அப்படியே பெற வேண்டும். சரீரத்தின் விஷயம் வேறு, சேவையோ அதுவே தான்

இருக்கிறது. அதனால் என்ன விஷயமாக இருந்தாலும் மதுவனத்திற்கு எழுதிக் கொண்டே இருக்க வேண்டும். தனது முழுமையான தொடர்பு வைக்க வேண்டும். பிறருக்கும் தனது நிலையின் முன்னுதாரணத்தை அளிக்க வேண்டும். உங்களைப் பார்த்து பிறரும் அவ்வாறே செய்வார்கள்

விடை பெறும் நேரம்:

பாபா கூறினார், குழந்தைகள் நீங்கள் அறிந்தது என்னவென்றால், எதுவெல்லாம் நாடகத்தின் பாகமாக இருக்கிறதோ அதில் ஏதோ மறைமுகமான ரகசியம் நிறைந்து இருக்கிறது. என்ன ரகசியம் நிறைந்துள்ளது என்பதை நேரம் வரும்பொழுது சொல்வேன். இப்பொழுது உங்களுடைய அதே நினைவுச்சின்னம் ஆகாயத்தில் இருக்கிறது (நட்சத்திரங்கள்). இந்த பூவுலக நட்சத்திரங்கள் யாருடைய ஸ்ரீமத்படி நடந்து கொண்டு இருக்கின்றனர் என்று உலகத்தினர் இந்தக் கண்களால் காண்பார்கள்! பாபா கூறினார், அதிகநேரம் அங்கே இருக்கக்கூடாது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 25.01.1969 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சமர்பணத்தின் உயர்ந்த நிலை -ஒவ்வொரு சுவாசத்திலும் நினைவு!

அவ்யக்த ஸ்திதியில் நிலைத்திருந்து அவ்யக்தமானவரை வியக்தத்தில் காணுங்கள். இன்று ஒரு கேள்வி கேட்கின்றார்கள். சர்வ சமர்ப்பணம் ஆகி விட்டீர்களா? (சர்வ சமர்ப்பணம் ஆகி இருக்கிறோமே) இது அனைவருடைய எண்ணமா அல்லது யாருக்காவது வேறு ஏதாவது எண்ணம் உள்ளதா? சர்வ சமர்ப்பணம் என்று எது அழைக்கப்படுகிறது? சர்வம் என்பதில் இந்த தேகத்தின் உணர்வும் வருகிறது. தேகம் எடுத்து விட்டால் விடவும் வேண்டும் ஆனால் தேக உணர்வை நிக்கி சமர்ப்பணம் ஆக வேண்டும். நீங்கள் என்ன புரிந்துள்ளீர்கள்? தேகத்தின் அபிமானத்தில் இருந்தும் கூட முழுமையாக சமர்ப்பணம் ஆகி விட்டீர்களா? தேகத்தின் சம்பந்தம் மற்றும் மனதின் சங்கல்பங்களிலிருந்தும் கூட இறந்து விட்டீர்கள அல்லது இறந்து கொண்டே இருக்கிறீர்களா? நீங்கள் ஆத்மாவாக இருக்கிறீர்களா? இந்த தேகத்தின் அபிமானம் முற்றிலுமாக உடைந்து விட வேண்டும். அப்பொழுதே சர்வ சமர்ப்பணமான வாழ்க்கை என்று சொல்ல முடியும். யார் சர்வ தியாகி, சர்வ சமர்ப்பண வாழ்க்கை வாழக்கூடியவர்களாக இருப்பார்களோ அவர்களுடைய சம்பூரண நிலையே புகழப்படும். மேலும் எப்பொழுது சம்பூரணம் ஆவீர்களோ அப்பொழுது உடன் செல்வீர்கள். நீங்கள் ஆரம்பத்தில் பாபா சென்றால் நாங்களும் சென்று விடுவோம் என சங்கல்பம் செய்திருந்தீர்கள் இல்லையா! பிறகு அவ்வாறு ஏன் செய்யவில்லை ? இதுவும் கூட ஒரு அன்பு தான். இது பிற தொடர்புகளைத் துண்டித்து ஒருவருடன் தொடர்பை இணைக்ககூடிய சங்கிலியாகும். இது இறுதி நேரத்தின் அடையாளமாகும் என்று சொல்லி இருந்தீர்கள், ஆயினும்,ஏன் சரீரத்தை விடவில்லை? விடமுடியுமா? இப்பொழுது விடவும் முடியாது ஏனெனில் தனது சரீரத்துடன் எதுவரை கணக்குவழக்கு உள்ளதோ அதுவரை விடமுடியாது. நினைவின் மூலமோ அல்லது

அனுபவித்தோ கணக்குவழக்கை அவசியம் முடித்து தான் ஆக வேண்டும். ஏதாவது கடுமையான கணக்குவழக்கு மீதம் இருக்கிறதென்றால் இந்த சரீரம் இருக்கும், விட முடியாது.

சமர்ப்பணம் ஆகித்தான் இருக்கிறீர்கள், ஆனால் இப்பொழுது சமர்ப்பணத்தின் நிலை உயர்ந்ததாகி விட்டது. ஒவ்வொரு சுவாசத்தின் போதும் நினைவில் இருப்பதே சமர்ப்பணம் என்று சொல்லப்படுகின்றது. ஒரு சுவாசம் கூட நினைவில்லாமல் இருக்கக்கூடாது, ஒவ்வொரு சுவாசத்திலும் நினைவு இருக்க வேண்டும் மேலும் அப்படி யார் இருப்பார்களோ அவர்களுடைய அடையாளம் என்ன? அவர்களுடைய முகத்தில் என்ன தென்படும்? அவர்கள் முகத்தில் என்ன இருக்கும் தெரியுமா? (மகிழ்ச்சியான முகம்) மலர்ந்த முகம் தவிர வேறு என்ன இருக்கும்? யார் எவ்வளவு பொறுமை உடையவராக இருப்பார்களோ அவ்வளவு சக்தி அதிகரிக்கும். யார் ஒவ்வொரு சுவாசத்திலும் நினைவில் இருப்பார்களோ அவர்களுக்குள் பொறுமை என்ற குணம் அவசியம் இருக்கும். மேலும் பொறுமை உடையவர்களாக இருக்கும் காரணத்தால் ஒன்று அவர்கள் மகிழ்ச்சியாக இருப்பார்கள் மற்றும் இரண்டாவது சக்தி தென்படும். அவர்கள் முகத்தில் பலமற்ற தன்மை இருக்காது. அவ்வப்பொழுது எப்படிச் செய்வது, என்ன நடக்கும் என்று வாயிலிருந்து வெளிப்படுகின்றது. இந்த வார்த்தைகள் பலமற்றவர்களுடையவை, இவை வெளிப் படக்கூடாது. மனதில் எப்பொழுது வருகிறதோ அப்பொழுதே வாயிலிருந்தும் வருகிறது ஆனால் மனதில் வரக்கூடாது. மன்மனாபவ, மத்யாஜிபவ! மன்மனாபவ என்பதன் அர்த்தம் மிகவும் ஆழமானது. எவ்வாறு நாடகம் வினாடிக்கு விநாடி எந்த ரீதியில் எப்படி நடக்கிறதோ, அதன் கூடவே மனதினுடைய நிலை, அவ்வாறே நாடகம் என்ற தண்டவாளத்தில் நேராகச் சென்று கொண்டே இருக்க வேண்டும், கொஞ்சம் கூட அசையக் கூடாது. அது எண்ணத்திலும் சரி, வார்த்தையிலும் சரி. அப்பேற்பட்ட நிலை இருக்க வேண்டும். நாடகத்தின் தண்டவாளத்தில் சென்றுகொண்டு இருக்கிறீர்கள் ஆயினும் அவ்வப்பொழுது நின்று விடுகிறிகள், வாய் அவ்வப்பொழுது அசைந்து விடுகிறது, மனதின் நிலை ஆடுகிறது. பிறகு நீங்கள் பிடித்து நிறுத்த முயல்கிறீர்கள். இதுவும் பிறகு ஒரு கறை ஆகி விடுகிறது.

ஆயினும், ஒரு விஷயம் இதுவரை சிறிது வார்த்தைகள் வரை வந்திருக்கிறது, நடைமுறையில் வரவில்லை. எந்த விஷயம் வார்த்தைகள் வரை வந்திருக்கிறது ஆனால் நடைமுறையில் இல்லை. அது நாடகம் என்ற கேடயமே ஆகும் ஆனால் இன்னொரு விஷயமும் சொல்லிக் கொண்டிருந்தார். அது என்னவென்றால், இப்பொழுது சமயம் அருகாமையில் உள்ளது, சமயத்தின் அனுசாரம் உள்நோக்கு முகம் என்ற நிலை அதாவது வார்த்தைகளைக் கடந்து உள்நோக்குமுகம் ஆகி செயலில் அவ்யக்த ஸ்திதியை தாரணை செய்வதற்கான நிலை தென்பட வேண்டும், அது இப்பொழுதும் சிறிது குறைவாக உள்ளது. காரியமும் நடைபெற வேண்டும் மேலும் இந்த ஸ்திதியும் இருக்க வேண்டும். இவை இரண்டும் இணைந்து ஒரே சமமாக இருக்க வேண்டும். இப்பொழுது இதில் குறை உள்ளது. இப்பொழுது சாகாரமானவர் அவ்யக்த ஸ்திதி சொரூபத்தில் நிலைத்து இருக்கிறார் ஆனால் குழந்தைகள் நீங்களும் கூட அவ்யக்த ஸ்திதியில் நிலைத்து இருந்தால் அவ்யக்த சந்திப்பினுடைய அலௌகீக அனுபவத்தைச் செய்ய முடியும். முக்கியமான மற்றுமொரு விஷயமும் உள்ளது. உங்களுக்குள் இருக்க வேண்டிய ஒன்றின் மீது தற்போது கவனத்தை ஏற்படுத்துகின்றார். அது எது? யாருக்காவது தெரிய வருகிறதா? அதை சாகார ரூபத்திலும் முக்கியமானதாகச் சொன்னார், அது அமிர்தவேளை எழுவது. அமிர்தவேளையினுடைய வாயுமண்டலமும் அப்படியே இருக்கும். சாகாரத்தில் அமிர்தவேளையில் குழந்தைகளுடன் தொலைவில் இருந்தபோதிலும் சந்திப்பு செய்தார் ஆனால் இப்பொழுது அமிர்தவேளையில் பாபா வலம் வரும்பொழுது அந்த வாயுமண்டலத்தை காணவில்லை. ஏன், களைத்து விட்டீர்களா? இந்த அமிர்தவேளையின் அலௌகீகே அனுபவத்தில், களைப்பு நீங்கி விடுகிறது ஆனால் இந்த குறை தென்படுகிறது. மிக விரைவாக இந்த அவ்யக்த ஸ்திதியை ஒவ்வொரு குழந்தையும் அனுபவம் செய்ய வேண்டும் என்பது பாப்தாதாவின் சுபமான விருப்பமாகும். நீங்கள் சாகாரமானவருடன் சாகார ரீதியில் சந்தித்தபொழுது உங்களுடைய ஆகாரி ஸ்திதி உருவானது. இப்பொழுது எவ்வளவுக்கு எவ்வளவு அவ்யக்த ஆகாரி ஸ்திதியில் நிலைத்து இருப்பீர்களோ அவ்வளவே அலௌகீக அனுபவம் செய்வீர்கள்.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 1969 அவ்யக்த முரளிகள்!

முரளியின் சாரம்

யார் எவ்வளவு பொறுமை உடையவராக இருப்பார்களோ அவ்வளவு சக்தி அதிகரிக்கும். யார் ஒவ்வொரு சுவாசத்திலும் நினைவில் இருப்பார்களோ அவர்களுக்குள் பொறுமை என்ற குணம் அவசியம் இருக்கும். மேலும் பொறுமை உடையவர்களாக இருக்கும் காரணத்தால் ஒன்று அவர்கள் மகிழ்ச்சியாக இருப்பார்கள், இரண்டாவது சக்தி தென்படும். அவர்கள் முகத்தில் பலமற்ற தன்மை இருக்காது. அவ்வப்பொழுது எப்படிச் செய்வது, என்ன நடக்கும் என்று வாயிலிருந்து வெளிப்படுகின்றது இந்த வார்த்தைகள் பலமற்றவர்களுடையவை, இவை வெளிப்படக்கூடாது. மனதில் எப்பொழுது வருகிறதோ அப்பொழுதே வாயிலிருந்தும் வருகிறது ஆனால் மனதில் வரக்கூடாது. மன்மனாபவ, மத்யாஜிபவ!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋❋

# 02.02.1969 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# அவ்யக்த சந்திப்பின் அனுபவத்திற்கான விதி!

அன்பு சொருபமான குழந்தைகளே, ஞான சகிதமான அன்பு எதுவோ, அதுவே யதார்த்தமான அன்பாகும். உங்கள் அவருடைய அன்பு பாப்தாதாவையும் கூட இழுத்து வந்து விட்டது. அனைத்து குழந்தைகளுடைய உள்ளத்தில ஆசை தென்பட்டுக் கொண்டிருக்கிறது. அது எது? சில குழந்தைகள், தாங்கள் எங்களுக்கும் கூட தனது அவ்யக்த வதனத்தின் அனுபவத்தை செய்யுங்கள் என்ற செய்தி அனுப்பி உள்ளனர். அனைத்து குழந்தைகளின் இந்த ஆசைகள் இப்பொழுது நிறைவுபெறும் நேரம் வந்தே விட்டது. அனைவரும் செய்தியைப் பெற்று வருபவர் (சந்தேஷி) ஆகி விடுவோமா? என்று நீங்கள் கேட்பீர்கள், ஆனால் இல்லை. அவ்யக்த வதனத்தினுடைய அனுபவமும் குழந்தைகள் செய்வீர்கள் ஆனால் தெய்வீக புத்தியின் ஆதாரத்தில் இப்பொழுது என்ன அலௌகிக அனுபவம் செய்ய முடிகிறதோ, அது திவ்ய திருஷ்டி மூலம் செய்வதைக் காட்டிலும் மிகுந்த லாபகரமானது, அலௌகிகமானது மேலும் விசித்திரமானதாகும். அதனால் எந்தக் குழந்தைகளெல்லாம் அவ்யக்த வதனத்தில் சந்திப்பு செய்யவேண்டும் என விரும்புகின்றனரோ, அவர்கள் செய்ய முடியும். எப்படிச் செய்ய முடியும்? அமிர்தவேளையில் நினைவில் அமருங்கள். மேலும் இப்பொழுது நான் அவ்யக்த பாப்தாதாவுடன் சந்திப்பு செய்ய வேண்டும் என்ற இந்த சங்கல்பம் செய்யுங்கள், இது மட்டுமே வழியாகும். எவ்வாறு சாகாரத்தில் சந்திப்பதற்கான சமயம் தெரிந்து இருந்தபோது தூக்கம் வரவில்லை. மேலும் சமயத்திற்கு முன்பே புத்தி மூலம் இந்த அனுபவத்தில் இருந்தீர்கள். அவ்வாறு இப்பொழுதும் கூட அவ்யக்த சந்திப்பில் அனுபவத்தை பிராப்தியாக அடைய விரும்புகிறீர்கள் என்றால், அதற்கான எளிதான வழி என்னவென்றால், அவ்யக்த ஸ்திதியில் நிலைத்திருந்து உரையாடல் செய்யுங்கள். அப்பொழுது உண்மையாகவே தந்தையுடன் உரையாடிக் கொண்டு

இருப்பதாக அலுபவம் செய்வீர்கள். மேலும் இந்த உரையாடலில், செய்தியை பெற்று வருபவர் எவ்வாறு சில காட்சிகளைக் காண்கின்றனரோ அவ்வாறே, மிக ஆழமான, இனிய ரகசியத்தை புத்தியோகத்தினால் அனுபவம் செய்வீர்கள் ஆனால் ஒரு விஷயம் இதை அனுபவம் செய்வதற்கு அவசியமானதாக இருக்கிறது. அது என்ன? தெரியுமா? முழு நாளும் அவ்யக்த ஸ்திதியில் மற்றும் உள்நோக்குமுக ஸ்திதியில் யார் நிலைத்து இருப்பார்களோ அவர்களே அமிர்தவேளையிலும் கூட அவ்யக்த ஸ்திதியில் நிலைத்திருக்க முடியும். அவர்களே அமிர்தவேளையில் இந்த அனுபவம் செய்ய முடியும். அதனால் ஒருவேளை அன்பு இருக்கிறது மேலும் சந்திக்கும் ஆசை இருக்கிறது என்றால் இந்த வழி மிக எளியதாகும். செய்யக்கூடியவர்கள் செய்யமுடியும். மேலும் சந்திப்பினுடைய விசித்திரமான அனுபவத்தை பிராப்தியாக அடைய முடியும்.

வதனத்தில் இருக்கும்பொழுது சில குழந்தைகளுடைய உள்ளங்களின் ஒலி வந்தடைந்து கொண்டிருக்கிறது. சிவபாபா மிகவும் கடுமையானவர் என்று நீங்கள் எண்ணுவீர்கள் ஆனால் என்ன நடக்கிறதோ அதில் ரகசியம் மற்றும் நன்மை இருக்கிறது. அதனால், என்ன ஒலி வந்தடைகிறதோ அதைக் கேட்டு மகிழ்ச்சி அடைந்து கொண்டு இருக்கிறேன். பாப்தாதா நிர்மோகியாக இருக்கிறாரா என்ன? குழந்தைகள் நீங்கள் அனைவரும் நிர்மோகியாக இருக்கிறீர்களா? நிர்மோகி ஆகி விட்டீர்களா? பாப்தாதா நிர்மோகியாகவும், குழந்தைகளுக்குள் தூய்மையான மோகமும் இருக்கிறது என்றால், சந்திப்பு எப்படி இருக்கும்? பாப்தாதாவிற்குள் தூய மோகம் இருக்கிறதா? (சாகார பாபாவிற்கு குழந்தைகள் மீது தூய அன்பு இருந்தது) சிவபாபாவிற்கு இல்லையா? பாப்தாதாவிற்கு இருக்கிறதா? (எப்படி எங்களுக்கு இருக்கிறதோ அப்படி இல்லை) தூய்மையான மோகம் குழந்தைகளை விட அதிகமாக இருக்கிறது ஆனால் பாப்தாதா மற்றும் குழந்தைகளுக்குள் ஒரு வித்தியாசம் உள்ளது. அவர் தூய மோகத்தில் வந்த போதிலும் கூட நிர்மோகியாகவும் இருக்கிறார். மேலும் குழந்தைகள் சுத்த மோகத்தில் வருகிறார்கள் என்றால் கொஞ்சம் சொரூபமாகின்றனர். ஒன்று அன்பானவர் ஆகின்றனர் அல்லது விடுப்பட்டவர் ஆகின்றனர் ஆனால், பாப்தாதா விடுபட்டவராகவும் அதே சமயம் அன்பானவராகவும் ஆகின்றார். வித்தியாசம் என்ன

இருக்கிறதோ அதை அழித்து விட்டீர்கள் என்றால், என்ன ஆவீர்கள்? உள்நோக்குமுகம் உடையவர், அவ்யக்தம், அலௌகீக நிலை உடையவர் ஆவீர்கள். இப்பொழுது கொஞ்சம் கொஞ்சம் லௌகீக தன்மையும் கலந்து விடுகிறது ஆனால் எப்பொழுது இந்த வித்தியாசத்தை அழித்து விடுவீரகளோ, அப்பொழுது முற்றிலுமாக அலௌகீகம் மற்றும் உள்நோக்கு முகமுடையவராக, அவ்யக்த பரிஸ்தாவாகத் தென்படுவீர்கள். இந்த சாகார வதனத்தில் இருக்கும்பொழுதும் கூட ஃபரிஸ்தா ஆகி விடுவீர்கள். பிறகு நீங்கள், தாங்கள் வதனத்திற்குச் சென்று ஃபரிஸ்தாவாக ஏன் ஆனீர்கள்? இங்கேயே ஆகியிருக்கலாமே, என்று சொல்வீர்கள் ஆனால் இல்லை. எது குழந்தைகளுடைய காரியமோ அதை குழந்தைகளே செய்ய வேண்டும். எது தந்தையின் காரியமோ அதை தந்தை தான் செய்கின்றார். குழந்தைகள் இப்பொழுது படிப்பினுடைய அடையாளத்தைக் காட்ட வேண்டும். ஆசிரியருக்கு படிப்பினுடைய ஆதாரத்தைக் காண்பிக்க வேண்டாமா? ஆசிரியர் கல்வியைக் கற்பிக்க வேண்டியதாக இருக்கிறது. மாணவன் அந்த படிப்பின் நிருபணத்தைக் காண்பிக்க வேண்டியதாக இருக்கிறது. ஷோகேசில் (Showcase) சக்திகள், பாண்டவர்கள் வர வேண்டும். பாப்தாதாவோ மறைமுகமாக இருக்கிறார்கள்.

தற்பொழுது அனைவருடைய உள்ளத்திலும் இப்பொழுது அதிவிரைவில் நாடகத்தின் காட்சி நடந்து முடிந்து விட வேண்டும் என்ற சங்கல்பம் உள்ளது ஆனால் விரைவாக நடக்குமா? முடியுமா? நடக்குமா அல்லது நடக்கமுடியாதா? விதி என்ன உருவாகி உள்ளதோ, உருவான அது உருவாகியே இருக்கும் ஆனால் உருவான விதியில் புலப்படுவது என்னவென்றால், ஒருவேளை கல்பத்திற்கு முன்பு போல் சங்கல்பம் வருகிறது என்றால் சங்கல்பத்தின் கூடவே முன்பும் கட்டாயமாக முயற்சி தீவிரமாக செய்திருப்பீர்கள். அதனாலேயே நாடகத்தின் காட்சியை விரைவாக முடித்து விட்டு அவ்யக்த வதனவாசி ஆக வேண்டும் என்ற இந்த சங்கல்பமும் வருகிறது. ஆகித்தான் தீர வேண்டும் ஆனால் குழந்தைகள் உங்களுக்குள் அவ்யக்த வதனத்தைக் கூட வியக்தத்தில் இழுத்துக் கொண்டு வர முடியும் அளவிற்கு, அவ்யக்த வதனத்தினுடைய படத்தை வியக்த வதனத்தில் உருவாக்க முடியும் அளவிற்கு, அவ்வளவு சக்தி உள்ளது. ஒவ்வொருவருக்கும்

ஆசைகள் அதிகமாக இருக்கின்றன. எவ்வாறு இந்த சாகார உலகில் மிகப் பெரிய அலுவலகமான தொலைபேசி மற்றும் தந்தி அலுவலகம் இருக்கின்றதோ அவ்வாறே மிக சுத்தமான எண்ணங்களின் தந்திகள் வதனத்திற்கு வந்து கொண்டே இருக்கின்றன. இப்பொழுது என்ன செய்ய வேண்டும்?

சில குழந்தைகளுக்கு, பொதுநலத்தைப் பற்றிய சில கேள்விகளும் இருக்கின்றன. அவையும் வந்து சேர்கின்றன. சில குழந்தைகள், சாகாரமானவர் மூலமாக சூட்சுமவதனம் என்பது இல்லை என்பது சொல்லப்பட்டது. அவ்வாறாயின், பாபா எங்கு சென்றார்? எங்கிருந்து சந்திப்பதற்காக வருகிறார். எங்கே இந்த செய்தியை அனுப்புகிறார்கள்? ஏன் 'போக்' வைக்கிறீர்கள் என்று குழம்புகின்றனர். இதனுடைய ரகசியமும் இருக்கின்றது. ஏன் சொல்லப்பட்டது? இதற்கான மூலகாரணம் என்னவென்றால், நீங்கள் பார்த்திருப்பீர்கள், அவ்வப்பொழுது சிறு குழந்தைகள் ஏதாவது பொருளுக்கு பின்னாலேயே இருக்கிறார்கள் என்றால் அந்த பொருள் நல்லதாக இருந்தாலும் கூட எல்லை கடந்து அந்த பொருளுக்குப் பின்னால் செல்லும்பொழுது குழந்தைகளிடத்தில் என்ன செய்யப்படுகிறது? அந்த பொருளை அவர்களுடைய கண்களிலிருந்து மறைத்து இல்லவே இல்லை என்று சொல்லப்படுகிறது. இதனுடைய அதிகமான ஈடுபாடு என்ன ஏற்பட்டு இருக்கிறதோ அது கொஞ்சம் சரியாக வேண்டும் என்பதற்காகவே சொல்லப் படுகிறது. இந்த விதமாக, நிகழ்காலத்தில் சில குழந்தைகள் இந்த விஷயங்களில் கொஞ்சம் மாட்டி இருந்தார்கள். அவர்களை விடுவிப்பதற்காக இந்த சூட்சும வதனமே இல்லை என்று சாகாரத்தில் சொன்னார்கள். இதுவும் கூட இந்த விஷயத்திலிருந்து குழந்தைகளுடைய புத்தியை விடுவிப்பதற்காக சொல்லப்பட்டிருந்தது ஆனால் ஒருவேளை குழந்தைகளிடம் பொருள் மறைக்கப்படுகிறது என்றால் அந்த பொருள் அழிந்து விடுகிறது, இல்லவே இல்லை என்று அர்த்தமல்ல! மாட்டிக் கொண்டிருந்த பொருளிலிருந்து (ஸ்திதியை) விடுவிப்பதற்கான ஒரு யுக்தியே இது. ஆக இதுவும் யுக்தியாக இருந்தது. ஒருவேளை சூட்சுமவதனம் இல்லை என்றால் 'போக்' எங்கே வைக்கிறீர்கள்? இந்த பழக்கவழக்கம் ஏன் நிலையாக வைக்கப்பட்டுள்ளது? ஏதாவது அப்படிப்பட்ட காரியம் நடக்கிறது என்றால், தானும் கூட ஏன் செய்தி கேட்டு அனுப்பினீர்கள்? ஆக,

சூட்சுமவதனம் இல்லை என்பதில்லை. சூட்சுமவதனம் இருக்கிறது ஆனால் சூட்சுமவதனத்திற்கு வந்து செல்வதற்குப் பதிலாக தானே சூட்சும வதனவாசி ஆக வேண்டும். இதுவே குழந்தைகளிடத்தில் பாப்தாதாவினுடைய ஆசையாகும். வருவதும் செல்வதும் அதிகமாக இருக்கக்கூடாது. இது யதார்த்தமானது. வருமானம் எதில் உள்ளது? தந்தை குழந்தைகளுடைய வருமானத்தைப் பார்க்கின்றார். மேலும், வருமானத்திற்குத் தகுதியானவராக ஆக்குகின்றார். அதனால், இந்த அனைத்து ரகசியங்களையும் சொல்லிக் கொண்டிருக்கிறார். ஏன் சொன்னார்? மேலும் என்ன இருக்கிறது என்பது இப்பொழுது புரிந்ததா? சூட்சும வதனத்தினுடைய அவ்யக்த அனுபவத்தை அனுபவம் செய்யுங்கள். சூட்சும ஸ்திதியை அனுபவம் செய்யுங்கள். வந்து செல்வதற்கான ஆசை அல்ப காலத்திற்கானது. அல்ப காலத்திற்குப் பதிலாக சதா தன்னை சூட்சும வதனவாசியாக ஏன் ஆக்குவதில்லை? மேலும் சூட்சும வதனவாசி ஆவதினாலேயே மிக அதிசயமான அனுபவம் செய்வீர்கள். இந்த அனுபவத்திற்கும் மற்றும் செய்தியைப் பெற்று வருபவருடைய அனுபவத்திற்கும் எவ்வளவு வித்தியாசம் உள்ளது என்பதை நீங்கள் தானே வர்ணனை செய்வீர்கள். அது வருமானம் அல்ல. இது வருமானமாகவும் உள்ளது மற்றும் அனுபவமாகவும் உள்ளது. ஆக, ஒரே நேரத்தில் இரு பிராப்திகள் கிடைக்கின்றன. இது நல்லதா? அல்லது ஒன்றை மட்டுமே விரும்புகிறீர்களா?

சில குழந்தைகளின் மனதில் என்னவென்று தெரியவில்லை, அனைவரையும் உடன் அழைத்துச் செல்வோம் என பாப்தாதா கூறினார்கள், இப்பொழுது அவரோ சென்று விட்டார் என்ற இந்த கேள்வியும் இருக்கின்றது ஆனால், அவர் சென்று விட்டாரா? ஊர்வலம் இன்றி, குழந்தைகள் இன்றி முக்திதாமம் செல்ல முடியாது. ஊர்வலமின்றி தனியாகச் செல்ல முடியுமா? ஊர்வலம் தயாராக உள்ளதா? ஊர்வலத்துடனேயே செல்வோம் என்று தான் இதுவரை கேட்டு இருக்கிறீர்கள். ஊர்வலம் அலங்காரம் ஆகிக் கொண்டிருக்கும்பொழுது தனித்து எவ்வாறு செல்வோம்? இப்பொழுது சூட்சும வதனத்தில் தான் அவ்யக்த ரூபத்தின் மூலம் ஸ்தாபனை காரியம் நடைபெற்றுக் கொண்டே இருக்கும். எதுவரை ஸ்தாபனை காரியம் நிறைவடையவில்லையோ, அதுவரை, காரியம் வெற்றி

பெறாமல் வீடு திரும்பமாட்டோம். இணைந்தே செல்வோம் மேலும் சென்ற பிறகு என்ன செய்வோம்? தெரியுமா, என்ன செய்வோம்? இணைந்தே செல்வோம். மேலும் இணைந்தே இருப்போம். பிறகு இணைந்தே சிருஷ்டிக்கு வருவோம். குழந்தைகள் உங்களுடைய பாடலானது, ஒருபொழுதும் கரம் மற்றும் துணையை விட மாட்டோம் என்பதாகும். ஆக குழந்தைகளுடைய உறுதிமொழியாகவும் இருக்கிறது தந்தையினுடைய உறுதிமொழியாகவும் இருக்கிறது. தந்தை தனது உறுதிமொழியிலிருந்து மாற முடியாது. வேறு ஏதும் கேள்வி உள்ளதா? இல்லையெனினும் ஒவ்வொரு சமயத்திற்கேற்ப அனைத்தும் தெளிவாகி விடும். சிலருடைய மனதில் தெரியவில்லையே, பிறவி ஏற்படுமா அல்லது என்னாகும்? என்பதும் இருக்கிறது இல்லையா! ஜென்மம் ஏற்படுமா? எப்படி உங்களுடைய மம்மாவின் ஜென்மம் ஏற்பட்டிருக்கிறது அப்படி ஏற்படுமா? குழந்தைகள் உங்களுடைய விவேகம் என்ன சொல்கிறது? நாடகத்தின் விதியைக் காண முடியுமா? கொஞ்சம் கொஞ்சம் காண முடியுமா? நாங்கள் திரிகாலதர்சி தந்தையின் குழந்தைகள் என்று நீங்கள் அனைவருக்கும் சொல்கின்றீர்கள்.

அவ்வாறாயின், வரவிருக்கும் காலத்தை அறிந்திருக்கிறீர்களா? உங்கள் மனதினுடைய விவேகத்தின் அனுசாரமாக என்ன ஏற்பட வேண்டும்? அவ்யக்த ஸ்திதியில் நிலைத்திருந்து ஆம் அல்லது இல்லை என்று சொல்லுங்கள். அப்பொழுது பதில் வெளிப்படும். (இவ்விதமாக பாப்தாதா இரண்டு, நான்கு நபர்களிடம் கேட்டார்கள்) பெரும்பாலும் அனைவருக்கும் இருக்காது என்பதே எண்ணமாக இருந்தது. இன்றே பதிலை விரும்புகிறீர்களா அல்லது பிற்காலத்திலா? கலக்கம் ஏற்படவில்லை தானே! சிறு குழந்தைகள் குளத்தில் கல் எறிந்து அதனுடைய அலைகளில் விளையாடுகிறார்கள். இந்த ஒரு விளையாட்டு விளையாடப்படுகிறது. ஆக, இதுவும் ஒரு விளையாட்டாகும். தந்தை உங்கள் அனைவருடைய சிந்தனைக்கடலில் கேள்விகள் என்ற கல்லை எறிந்து உங்களுடைய புத்தி என்ற கடலில் அலைகளை உற்பத்தி செய்து கொண்டிருக்கிறார். அந்த அலைகளுடைய விளையாட்டை பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். தற்பொழுது உங்கள் அனைவருடன் இணைந்தே அவ்யக்த ரூபத்திலிருந்து ஸ்தாபனை காரியத்தில் ஈடுபட்டுக் கொண்டிருப்பார்கள். எதுவரை ஸ்தாபனையின் பாகம் (Part)

இருக்கிறதோ அதுவரை அவ்யக்த ரூபத்தில் உங்கள் அனைவருடன் இணைந்தே இருப்பார்கள். புரிந்து கொண்டீர்களா?

வதனத்தில் மம்மாவையும் தோற்றுவித்தார். என்ன உரையாடல் நடந்ததெனத் தெரியுமா? எவ்வாறு சாகார ரூபத்தில் சாகார வதனத்தில் மம்மா சொல்வார்கள், பாபா, தாங்கள் அமர்ந்திருங்கள், நாங்கள் அனைத்து காரியங்களையும் செய்து விடுவோம். இவ்விதமே வதனத்திலும் கூட இதையே கூறினார்கள், ஸ்தாபனை காரியம் என்ன செய்யவேண்டுமோ அதை நாங்கள் அனைவரும் செய்வோம். தாங்கள் குழந்தைகளுடன், குழந்தைகளை மகிழ்வித்துக் கொண்டே இருங்கள். இவ்வாறே சாகாரத்தில் சொன்னார்கள். இந்த உரையாடலே வதனத்திலும் நடந்தது. உங்கள் அனைவரின் மனதில் நமது மம்மா எங்கு சென்றார்கள் என்பது இருக்கும். இந்த ரகசியத்தை தெளிவுபடுத்துவதற்கான வேளை இதுவல்ல. அவர்கள் எங்கே, என்ன செய்துகொண்டு இருக்கிறார்கள் என்பதை சில காலத்திற்குப் பின் சொல்வோம். ஸ்தாபனை காரியத்திலும் உதவியாளராக இருக்கிறார்கள், ஆனால் வேறு பெயர், ரூபத்தில் இருக்கிறார்கள். நல்லது. இப்பொழுது நேரம் ஆகி விட்டது.

இன்று வதனத்தில் தொலைவிலிருந்து அதிகாலையில் இருந்தே நறுமணம் வந்துகொண்டு இருந்தது. எவ்வாறு அன்போடு பொருட்களை சமைத்துக் கொண்டு இருக்கின்றனர் என பார்த்துக் கொண்டு இருந்தார். (தாதிஜியிடம்) நீங்கள் பார்த்தீர்களா, சமையலறையில் வலம் வந்தீர்களா? பொருட்களின் நறுமணம் அல்ல, அன்பின் நறுமணம் வந்துகொண்டு இருந்தது. இந்த அன்பு தான் அவினாசி ஆக்குகின்றது. அழிவற்ற அன்பு இருக்கிறதல்லவா? ஒவ்வொருவருடைய நினைவும் வந்து சேர்கிறது. அதற்கான பதிலைப் பெறுவதற்காக அவஸ்தா (மனோநிலை) வேண்டும். பதில் உடனடியாக கிடைக்கிறது. எவ்வாறு சாகாரத்தில் குழந்தைகள் பாபா என்று சொன்னவுடன் குழந்தைகளுக்கு பதில் கிடைத்தது. இப்பொழுதும் பதில் உடனடியாக கிடைக்கிறது ஆனால் இடையில் வியக்த உணர்வை விடவேண்டியதாக இருக்கும் அப்பொழுதே அந்த பதிலைக் கேட்க முடியும். இப்பொழுதோ இன்னும் அதிகமாக நாலாபுறங்களிலும் சேவை செய்வதற்கான அனுபவம் செய்துகொண்டு இருக்கிறார். தற்பொழுது அவ்யக்தம் ஆன

காரணத்தினால் மற்றுமொரு தகுதி அதிகரித்து விட்டது. அது என்ன தெரியுமா? அது என்னவென்றால், முன்பு புறத்தை அறிந்தவராக இருந்தேன், இப்பொழுது அகத்தை அறிந்தவராக ஆகி விட்டேன். அவ்யக்த ஸ்திதியைக் கொணர்வதற்கான அவசியம் இல்லை. தானாகவே ஒரு நொடியில் அனைவருடைய படத்தையும் காண முடிகிறது. அதனால் முன்பை விட மற்றுமொரு குணம் அதிகரித்து விட்டதாகக் கூறுகிறார்கள். அவ்யக்த ஸ்திதியில் நறுமணத்தினாலேயே வயிறு நிறைந்து விடுகிறது உங்களுக்குத் தெரியுமா?

குழந்தைகளுக்காக ஒரு முக்கியமான படிப்பினையைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது சேவை செய்து தான் ஆக வேண்டும். இந்த லட்சியம் அனைத்து குழந்தைகளின் புத்தியில் உள்ளது. மேலும் லட்சியத்தை நிறைவேற்றவும் செய்வீர்கள். ஆயினும் இந்த லட்சியத்தை நிறைவேற்றுவதற்காக இடையில் ஒரு முக்கியமான தடை வரும். அது என்ன, தெரியுமா? முக்கியமான தடை சேவையில் தடங்கல் ஏற்படுத்துவதற்காக முக்கியமான தடை என்ன வரும்? எல்லோருக்கும் அல்ல, பெரும்பாலோருக்கு முன்பு வரும். அது என்ன தடை என்பதை முன்னரே சொல்லி விடுகிறார். சேவை செய்யும் பொழுது இதை கவனத்தில் கொள்ள வேண்டும் -நான் இதைச் செய்தேன், நான் தான் இதை செய்ய முடியும்; இந்த நான் வருவதைத்தான் ஞானத்தின் அபிமானம், புத்தியின் அபிமானம், சேவையினுடைய அபிமானம் என்று சொல்லப்படுகிறது. இந்த ரூபங்களில் வருங்காலத்தில் தடை வரும் ஆனால் முதலிலிருந்தே இந்த முக்கிய தடையை வர விடக்கூடாது, அதற்காக நான் நிமித்தமாக இருக்கின்றேன் என்ற இந்த ஒரு வார்த்தையை சதா நினைவில் வைக்க வேண்டும். நிமித்தம் ஆகும் போதே நிராகார், ந திர் அகங்காரி மற்றும் பணிவான உள்ளம், நிர்சங்கல்ப நிலையில் இருக்க முடியும்.

ஒருவேளை நான் செய்தேன், நான், நான் என்பது வந்தால் என்னவாகும் தெரியுமா? எவ்வாறு நிமித்தமாகுவதால் நிராகாரி, நிர் அகங்காரி, நிர்சங்கல்ப ஸ்திதி ஏற்படுகிறதோ, அவ்வாறே நான் நான் என்பது வருவதால் கர்வம், தளர்வு, உற்சாகமின்மை வந்து விடும். பிறகு இதனுடைய முடிவு என்னவாக இருக்கும்? போகப்போக

வாழ்ந்துகொண்டு இருந்தபோதிலும் இறந்து விடுகிறார்கள் என்பதே இறுதியில் முடிவாக ஆகிறது. ஆதலால் நான் நிமித்தமாக இருக்கிறேன் என்ற இந்த முக்கிய படிப்பினையை எப்பொழுதும் உடன் வைத்துக் கொள்ள வேண்டும். நிமித்தம் ஆவதினால் எவ்வித அகங்காரமும் உற்பத்தி ஆகாது. இல்லை எனில், ஒருவேளை நான் வந்து விட்டால் அபிப்ராய பேதத்தின் சக்கரத்தில் வந்து விடுவார்கள். அதனால், இந்த வீணானவற்றின் சக்கரங்களிலிருந்து தப்புவதற்காக சுயதர்ஷன சக்கரத்தை நினைவில் வைக்க வேண்டும். ஏனெனில், எப்படி மஹாரதி ஆவீரகளோ அப்படியே மாயாவும் மஹாரதி ரூபத்தில் வரும். சாகார ரூபத்தில் இறுதிவரை பாபா கர்மங்களை செய்து காண்பித்தார். என்ன கர்மங்களை செய்து காண்பித்தார், என்ன படிப்பினை கொடுத்தார், நினைவுள்ளதா? அது என்னவென்றால், நிர்அகங்காரி மற்றும் பணிவான உள்ளம் உடையவராகி ஒருவருக்கொருவர் அன்போடு நடந்து கொள்வதாகும். ஒரு மாதர்களின் குழுவை உருவாக்க வேண்டும். எவ்வாறு குமாரிகளின் பயிற்சி வகுப்பு நடந்ததோ அவ்வாறே மாதர்கள், யார் உதவியாளராக ஆக முடியும் அல்லது இருக்கிறார்கள், அவர்களுடைய குழுவை மதுவனத்தில் கூட்ட வேண்டும். குமாரிகளின் கூடவே தாய்மார்களின் குழுவும் வேண்டும். குழுகூடும் சமயம் வர வேண்டியதாக இருக்கும்.

அன்பைப் பார்க்கும்பொழுது நாடகம் நினைவிற்கு வந்து விடுகிறது. நாடகம் என்பது எப்பொழுது இடையில் வருகிறதோ, அப்பொழுது அமைதியாகி விடுகிறார்கள். அன்பில் வந்து விட்டால் என்ன நிலை ஏற்படும்? நதியாகி விடுவார்கள் ஆனால் இல்லை, நாடகம். என்ன கர்மம் நாம் செய்வோமோ அதை பிறகு அனைவரும் செய்வார்கள், அதனால், அமைதி காக்கவும். ஒருவேளை அனைவரும் உடன் இருந்திருந்தால் இறுதி கர்மாதீத் நிலையின் அனுபவம் என்ன ஏற்பட்டதோ அது நாடகத்தின் அனுசாரம் வேறாக இருக்கும் ஆனால் நாடகத்தில் அவ்வாறே இருந்தது. அதனால், சிலரே எதிரில் இருந்தனர். எதிரில் இருந்தபோதிலும் இல்லாததுபோல் இருந்தது. அன்பானது வதனத்திலும் கூட இருக்கிறது மேலும் இருக்கும். அழிவற்றதாக இருக்கிறது இல்லையா! ஆனால் அன்பை, நாடகம் அமைதியில் கொண்டு வருகிறது மேலும் இந்த அமைதியே சக்தியைக் கொண்டு வரும் என சொல்லியிருக்கிறார். பிறகு, அங்கே சாகாரத்தில் சந்திப்பு

நடக்கும், இப்பொழுது அவ்யக்த ரூபத்தில் சந்திக்கிறோம். பிறகு சாகார ரூபத்தில் சத்யுகத்தில் சந்திப்போம். அந்தக் காட்சி நினைவு வருகிறது இல்லையா! விளையாடுவோம், பாடசாலைக்கு வருவோம், சந்திப்போம். கண்மணிகளாகிய நீங்கள் சத்யுகத்தின் காட்சிகளை வதனத்தில் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். தந்தை என்ன பார்க்கின்றாரோ அதை குழந்தைகளும் பார்த்துக் கொண்டிருக்கின்றீர்கள் மேலும் பார்த்து கொண்டே இருப்பீர்கள்.

இப்பொழுது ஜுவாலா ரூபம் ஆக வேண்டும். உங்களுடைய ஜுவாலா ரூபத்தின் நினைவுச்சின்னம் உள்ளது தெரியுமா? ஜுவாலா தேவியும் இருக்கிறார், அவர் யார்? இந்த அனைத்து சக்திகளும் ஜுவாலா ரூப தேவி ஆக வேண்டும். அப்படி ஜூவாலையை கொழுந்து விட்டு எரியச் செய்ய வேண்டும். அந்த ஜுவாலையில் இந்த கலியுக உலகம் எரிந்து சாம்பலாகி விடும். நல்லது.

விடை பெறும் நேரம் பாப்தாதா கூறினார்கள் :
அனைத்து சென்டர்களிலும் அவ்யக்த நிலையில் நிலைத்திருக்கும் கண்மணிகளுக்கு, பாபா மற்றும் தாதாவினுடைய அவ்யக்த அன்பு நினைவுகளை சுவீகாரம் (ஏற்றுக் கொள்ளகளாக) செய்வீர்களாக! கூடவே, என்ன சமிக்ஞை கொடுத்திருக்கிறாரோ அதை மிக விரைவில் வாழ்வில் கொணர்வதற்கான தீவிர முயற்சி செய்ய வேண்டும். நல்லது, குட்நைட் அனைத்து சிவசக்திகள் மற்றும் பாண்டவர்களுக்கு தந்தையின் நமஸ்தே. ///**END**///

## 06.02.1969 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## மகிமை கேட்பதை விடுங்கள் மகான் ஆகுங்கள்!

அனைவரும் நினைவு யாத்திரையில் அமர்ந்து இருக்கிறீர்களா? படிப்பினுடைய சாரம் புரிந்து விட்டதா? அந்த சாரத்தை வாழ்வில் கொணர்ந்து, உலகிற்கு அந்த ரகசியத்தைச் சொல்லவேண்டும். படைப்பாளர் மற்றும் படைப்பினுடைய ஞானத்தைப் புரிந்து கொண்டீர்கள். நிறைய கேட்டுவிட்டீர்கள் ஆனால் இப்பொழுது என்ன கேட்டு இருக்கிறீர்களோ அதன் சொரூபமாகி அனைவருக்கும் காண்பிக்க வேண்டும். எப்படி காண்பிப்பீர்கள்? உங்களுடைய நடத்தையினால் தந்தை மற்றும் தாதாவினுடைய நடத்தை தென்பட வேண்டும். உங்களுடைய கண்களில் அந்த தந்தையையே பார்க்க வேண்டும். உங்களுடைய வார்த்தைகளினால் அவருடைய ஞானத்தைக் கேட்க வேண்டும். ஒவ்வொரு நடத்தையிலும் ஒவ்வொரு குணாதிசயம் அடங்கி இருக்க வேண்டும். தந்தையின் குணாதிசயம் மட்டுமல்ல; ஆனால் தந்தையினுடைய குணாதிசயத்தைப் பார்த்து குழந்தைகளும் குணசீலன் ஆக வேண்டும். உங்களுடைய சித்திரத்தில் அந்த அலௌகீக சித்திரத்தைக் காண வேண்டும். உங்களுடைய வியக்த ரூபத்தில் அவ்யக்த மூர்த்தி தென்பட வேண்டும். அப்படி முயற்சி செய்து பாப்தாதாவினுடைய உழைப்பினுடைய பலன் சொரூபத்தைக் காட்ட வேண்டும். எப்படி அஞ்ஞான காலத்தில் கூட சில குழந்தைகள் தந்தையைப் போலவே தென்படுவார்கள், அவர்களுடைய பேச்சு, நடத்தை, தந்தையினுடையதைப் போலவே தென்படும். இவ்விதமே யார் ஒப்பற்ற குழந்தைகளாக இருக்கின்றனரோ அந்த ஒவ்வொரு குழந்தையின் மூலம் தந்தையுடைய குணம் வெளிப்பட வேண்டும், அவசியம் வெளிப்படும். எவ்வாறு வெளிப்படும்? அதற்கான முக்கியமான முயற்சி என்ன செய்ய வேண்டும்? முக்கியமான விஷயம் என்னவென்றால், நினைவு யாத்திரை, அவ்யக்த ஸ்திதியில்

நிலைத்து இருந்து செய்ய வேண்டும். இதை சாகார ரூபத்தின் வாயிலாகவும் கேட்டு இருக்கிறீர்கள்.

இப்பொழுது குழந்தைகள் அதிகம் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. எனினும், சக்தி கூடவே இருக்கிறது, அதனால் எதுவும் கடினம் அல்ல. ஒரு விஷயத்தை மட்டும் அனைவரும் கவனத்தில் கொள்ள வேண்டும். அது என்னவென்றால், எதிர்கொள்ளும் பொழுது இடையில் தடையும் வரும். எதிர்நோக்குவதில் தடை என்ன வரும், தெரியுமா? (தேக அபிமானம்). தேக அபிமானமே மூல விஷயமாகும் ஆனால், எதிர்நோக்குவதற்காக இடையில் விருப்பம் தடையை ஏற்படுத்தும். என்ன ஆசை? எனது பெயர் இருக்க வேண்டும், நான் அப்பேற்பட்டவராக இருக்கிறேன், என்னிடம் ஏன் ஆலோசனை கேட்கவில்லை, எனக்கு ஏன் மதிப்பு கொடுக்க வில்லை? ஆகிய இந்த அநேக வித விருப்பங்கள் தடையாக வரும், ஆனால் நாம் எந்த விருப்பமும் கொள்ளக்கூடாது. எதிர்நோக்க வேண்டும் என்பதை நினைவில் வைக்க வேண்டும். ஒருவேளை ஏதாவது விருப்பம் கொண்டால் எதிர்நோக்க முடியாது. மேலும் அவ்யக்த ஸ்திதியில் மகான் ஆவதற்காக எந்த ஒரு விஷயத்தைக் கூறிக் கொண்டு இருக்கிறார்களோ அதை தாரணை செய்தால் மிக விரைவில் மற்றும் எளிதாக அவ்யக்த ஸ்திதியில் நிலைத்து விடுவீர்கள். அது என்ன விஷயம்? நாம் தற்பொழுது விருந்தாளியாக இருக்கிறோம். ஏனெனில், நீங்கள் அனைவரும் கூட சூட்சும வதனம் வழியாக வீடு செல்ல வேண்டும். நாம் விருந்தாளி என்று புரிந்து கொள்வதால் மகான் ஸ்திதியில் நிலைத்து விடுவீர்கள். விருந்தாளி (மெஹ்மான்) என்பதற்குப் பதிலாக ஒரு வார்த்தையில் சிறிது வித்தியாசம் வந்து விட்டால் வீழ்ச்சியும் வந்து விடும். அது என்ன வார்த்தை? விருந்தாளி (மெஹமான்) என புரிந்து கொள்ள வேண்டும் ஆனால் மகிமையில் வரக்கூடாது. ஒருவேளை மகிமையில் வந்து விட்டால் விருந்தாளி ஆகமாட்டார்கள். விருந்தாளி என புரிந்து கொண்டால் மகான் ஆவீர்கள். சிறிய வித்தியாசம் தான் மெஹ்மான் (விருந்தாளி) மற்றும் மஹிமா (மகிமை) ஆனால், சிறிய வித்தியாசம் கூட நிலையை மிகவும் ஏற்றம் இறக்க முடையதாகச் செய்து விடுகிறது.

# 1969 அவ்யக்த முரளிகள்!

நீங்கள் அனைவருக்கும் என்ன ஞானம் கொடுக்கின்றீர்கள்? திரிமூர்த்தியினுடைய ஞானம். எவ்வாறு திரிமூர்த்தியின் ஞானத்தைப் பிறருக்குக் கொடுக்கிறீர்களோ, அவ்வாறே தன்னிடம் கூட மூன்று விஷயங்களின் ஞானத்தை வைத்திருக்க வேண்டும். மூன்று விஷயங்களை விட்டு விடுங்கள் மேலும் மூன்று விஷயங்களை தாரணை செய்யுங்கள். எப்பொழுது இந்த மூன்று விஷயங்களை விடுவீர்களோ அப்பொழுதே சொரூபத்தில் நிலைத்திருப்பீர்கள், சேவையில் வெற்றியும் ஏற்படும். சேவையில் தடை ஏற்படுத்தும் எந்த மூன்று விஷயங்களை விட வேண்டும்? கூறுங்கள். ஒன்று, ஒருபோதும் எந்த சாக்குப்போக்கும் சொல்லக்கூடாது. இரண்டாவது, ஒருபோதும் யாரிடமும் சேவைக்காக சொல்ல வைக்கக்கூடாது, மூன்றாவது, சேவை செய்யும்பொழுது ஒரு போதும் தளரக் கூடாது. சாக்குப்போக்கு சொல்வது, சொல்ல வைப்பது மற்றும் தளர்ந்து போவது இந்த மூன்று விஷயங்களையும் விட்டு விட வேண்டும். மேலும், எந்த மூன்று விஷயங்களை தாரணை செய்ய வேண்டும்? தியாகம், தவம் மற்றும் சேவை ஆகிய இந்த மூன்று விஷயங்களை தாரணை செய்ய வேண்டும். தவம் என்றால் நினைவு யாத்திரை ஆகும். மேலும் சேவை இல்லாமலும் வாழ்க்கை உருவாக முடியாது. இவ்விரு விஷயங்களின் வெற்றி, தியாகம் இல்லாமல் கிடைக்க முடியாது. ஆதலால் மூன்று விஷயங்களை விட வேண்டும் மேலும் மூன்று விஷயங்களை தாரணை செய்ய வேண்டும். ஒருவேளை இந்த மூன்று விஷயங்களை தாரணை செய்தால் என்னவாக ஆவீர்கள்? உங்கள் புகழ் என்னவாக உள்ளதோ, அதன் சொரூபமாகி விடுவீர்கள். இங்கு அபுவிலும் உங்களுடைய புகழ் எந்த ரூபத்தில் உள்ளது. மேலும் எந்த ரூபம் நினைவுச்சின்னத்திற்கானது? தபஸ்யாவின் கூடவே மற்றுமொரு முக்கிய ரூபத்தின் நினைவுச்சின்னம் உள்ளது. யார் தில்வாடா கோவிலை கவனத்தோடு பார்த்திருப்பார்களோ அவர்களுக்கு நினைவு இருக்கும். எவ்வாறு தபஸ்விகளாக (உருவங்கள்) உள்ளனவோ, அவ்வாறே, மூன்று கண்கள் (திரிநேத்ரி) உடையவர்களாகவும் உள்ளன.

திரிநேத்ரியின் கூடவே திரிமூர்த்தியின் நினைவும் இருக்கிறது. ஆக எவ்வாறு திரிநேத்ரியினுடைய நினைவுச்சின்னம் உள்ளதோ, அவ்வாறு ஆக வேண்டும். மூன்றாவது கண் எது? ஞானத்தினுடையது. ஞானம் என்ற மூன்றாவது கண் தான் நினைவுச்சின்னத்தின் ரூபத்தில்

காண்பிக்கப்பட்டுள்ளது. தபஸ்வி மற்றும் திரிநேத்ரி. மூன்றாவது கண் நிலையாக இருந்தால்தான் தபஸ்வி ஆக முடியும். ஒருவேளை ஞானம் ன்ற மூன்றாவது கண் மறைந்து விடுகிறது என்றால் தபஸ்யாவும் இருக்காது. அதனால், இப்பொழுது திரிமூர்த்தி என்ற வார்த்தையையும் நினைவு செய்து தாரணைப்படி நடந்தால், சக்திகளுடைய மகிமை என்ன இருக்கிறதோ, அதுவாக ஆகி விடுவீர்கள். இப்பொழுதோ மறைமுகமாக உள்ளது. இப்பொழுது வரை சக்திகள் ஏன் மறைமுகமாக உள்ளனர்? ஏனெனில், இப்பொழுது வரை தன்னுடைய சுபாவம், தன்னுடைய சேவை மற்றும் தன்னுடைய சிரேஷ்ட தன்மைகள், தன்னிடமே மறைமுகமாக உள்ளன. தன்னிடமே மறைமுகமாக இருக்கும் காரணத்தினால் சிருஷ்டியிலும் மறைமுகமாகவே உள்ளது. எப்பொழுது தன்னிடத்தில் வெளிப்படுமோ அப்பொழுது சிருஷ்டியிலும் வெளிப்படும்!

இப்பொழுது வரப்போகிற சிவராத்திரி திருவிழா, அதை மிக விமரிசையாகக் கொண்டாட வேண்டும். மிகுந்த ஊக்கம் மற்றும் உற்சாகத்துடன் அறிமுகம் கொடுக்க வேண்டும். ஏனெனில் தந்தையினுடைய அறிமுகத்தில் குழந்தைகளின் அறிமுகமும் ஏற்படுகின்றது. குழந்தைகள் தந்தையினுடைய அறிமுகம் கொடுப்பார்கள். தந்தை பிறகு அவ்யக்தத்தில் குழந்தைகளின் அறிமுகத்தை, குழந்தைகளின் காட்சியை, ஆத்மாக்களுக்குக் கிடைக்கும்படி செய்து கொண்டே இருப்பார். இந்த சிவராத்திரியில் ஏதாவது புதுமை செய்து, காண்பிக்க வேண்டும். என்ன புதுமை செய்வீர்கள்? இதுவரை செய்த சொற்பொழிவுகள் எவ்வளவு யோகம் உள்ளதோ எவ்வளவு சக்தி உள்ளதோ, அதன் அனுசாரம் செய்து கொண்டு இருக்கிறீர்கள் ஆனால் இப்பொழுது குறிப்பாக சக்தி ரூபத்தில் இருந்து சொற்பொழிவு ஆற்ற வேண்டும். சக்தி ரூபத்தின் சொற்பொழிவு என்றால் என்ன? சவால் விடுவதாகும். என்ன சவால் விடுவீர்கள்? இன்னும் மிகுதியான வலிமையோடு சமயத்தின் அறிமுகத்தைக் கொடுங்கள். மேலும் இது தந்தையின் காரியம். இப்பொழுது சமயம் அதிகம் இல்லை. சிறிது கையிலிருந்து இழந்தாகி விட்டது, ஆயினும் இன்னும் சிறிது காலம் என்ன மீதமுள்ளதோ, அதையும் இழந்து விடாதீர்கள் என்று அவர்களுக்கு அடிக்கடி சொல்லுங்கள். அத்தகைய வலிமையுடன் சமயத்தின் அறிமுகத்தைக் கொடுங்கள். தற்காலத்தில்

விஞ்ஞானிகள் தொலைவில், தனது இடத்தில் இருந்தவண்ணமே, அணுகுண்டு வெடிக்கப்பட வேண்டிய இலக்கில் வெடிக்கச் செய்ய முடிகிறது. அப்பேற்பட்ட அணுகுண்டுகளைத் தயாரித்துக் கொண்டிருக்கின்றனர். விஞ்ஞான சக்தியை விட அமைதி சக்தி சிரேஷ்டமானதாகும் எவ்வாறு அந்த விஞ்ஞானிகள் குண்டுகளைத் தயாரிக்கின்றனர், அவ்வாறு இப்பொழுது சக்திகள் அமைதிசக்தியின் குண்டுகளை போடவேண்டும். துவக்கத்தில் சக்திகளின் சவால் தான் இருந்து வந்தது. இப்பொழுது துவக்கத்தில் இருந்தது போன்ற சவால் இல்லை. இப்பொழுது விஸ்தாரத்தில் வந்து விட்டனர். விஸ்தாரத்தில் வந்ததால் சவாலினுடைய ரூபம் மறைமுகமாகி விட்டது. இப்பொழுது மீண்டும் விதைரூப நிலையில் நிலைத்திருந்து சவால் விடுங்கள். அந்த சவால் மூலம் பலருக்குள் விதை விழ முடியும். எனினும், விதைரூப ஸ்திதியில் நிலைத்து இருந்தீர்கள் என்றால் அநேக ஆத்மாக்களுக்குள் சமயத்தின் அறிமுகம் மற்றும் தந்தையின் அறிமுகத்தின் விதை விழுந்து விடும். ஒருவேளை, விதைருப நிலையில் நிலைத்திராமல் விஸ்தாரத்தில் மட்டும் சென்று விட்டால் என்ன ஆகும்? அதிகமான விஸ்தாரத்தால் கூட மதிப்பு இருக்காது, வீணாக ஆகி விடும். ஆகவே, விதைரூப நிலையில் நிலைத்திருந்து, விதைரூபமானவரின் நினைவில் நிலைத்திருந்து, பிறகு விதை போடுங்கள். பிறகு பாருங்கள், அந்த விதையின் பலன் எவ்வளவு நன்றாக மற்றும் எளிதாக கிடைக்கிறது என்று! இதுவரை அதிக உழைப்பு செய்யப்பட்டிருக்கிறது, பிரத்யட்ச பலன் குறைவாக உள்ளது. இப்பொழுது உழைப்பை குறைத்து பிரத்யட்ச பலனை அதிகமாகக் காண்பியுங்கள். அனைவருக்குமே அன்பு இருக்கிறது. எனினும், அன்பின் சொரூபத்தையும் கொஞ்சம் காண்பிக்க வேண்டும். இவ்விதம் சதா இந்த நிலையில் இருக்க வேண்டும். ஆயினும், குறிப்பாக சிவராத்திரி வரை ஒவ்வொரு குழந்தையும், ஆரம்பத்தில் குழந்தைகள் உங்களுடைய பட்டி நிகழ்ச்சி எவ்வாறு நடந்ததோ, அவ்வாறு நாம் நினைவு யாத்திரையின் பட்டியில் தான் இருக்க வேண்டும். முற்றிலும் அவ்யக்த நிலையில் நிலைத்திருக்க வேண்டும் என புரிந்து கொள்ள வேண்டும். தன்னை சோதனை செய்வதில் கவனம் செலுத்துங்கள். பிறகு இந்த அவ்யக்த ஸ்திதியினுடைய பிரபாவம் எவ்வளவு ஏற்படும்! கடினமல்ல, மிகவும் எளிதானதாகும். காரியங்கள் செய்தபோதிலும் பட்டி நடைபெற முடியும்

இது உள்ளார்ந்த ஸ்திதி ஆகும். உள்ளார்ந்த ஸ்திதியின் பிரபாவம் அதிகமாக ஏற்படுகிறது.

அனைவரும் அமிர்தவேளையில் சந்திப்பு செய்கின்றீர்களா? இதுவரை அத்தகைய வாயுமண்டலம் வந்து சேரவில்லை. இதுவரை மதுவனத்தில் இருப்பவர்கள் கூட அன்பிற்கான சான்று அளிக்கவில்லை. நாலாபுறங்களிலிருந்தும் மிகக்குறைவான குழந்தைளே அன்பிற்கான சான்றை அளித்திருக்கின்றனர். குழந்தைகள் மீது, தந்தைக்கு எவ்வளவு அன்பு இருந்தது. அன்பினுடைய சான்றாக நடைமுறையில் எவ்வளவு சமயம் கொடுத்தார். என்ன கொடுத்தார்? குறிப்பாக தன்னுடைய உடல் நிலையைக் கூட பார்க்காமல் என்ன சான்று அளித்தார்? தன்னுடைய சரீர நிலையைக் கூட பார்க்காமல் எவ்வளவு சமயம் குறிப்பாக சக்திமிக்க ஒளியைக் (Search Light) கொடுத்தார். எவ்வளவு காலம் அன்பிற்கான சான்றளித்தார். அதன் விளைவு சரீரத்தின் மீது ஏற்படுகிறது என்று நீங்கள் கூறினீர்கள், எனினும், பாபா தன்னுடைய சரீரத்தைப் பார்த்தாரா? இது அன்பின் சான்றாகும். இப்பொழுது குழந்தைகளும் அவரது அன்பிற்குக் கைமாறாக சான்று அளிக்க வேண்டும். என்ன கர்மம் செய்து காண்பித்தாரோ அதையே செய்ய வேண்டும். அமிர்த
வேளையில் எவ்வாறு சாகார ரூபத்தில் செய்து காண்பித்தாரோ அவ்வாறே குழந்தைகளும் செய்ய வேண்டும். எழுந்து விட்டோம் மேலும் அமர்ந்து விட்டோம் என இந்த விஷயத்தில் தனது உள்ளத்தை மகிழ்வித்துக் கொள்கின்றனர். இதுவரை இந்த முடிவே (Result) பார்க்கப்பட்டது ஆனால் அந்த ஆத்மார்த்தமான சக்தி சொரூபமான நினைவு இருப்பதில்லை. சக்தி ரூபத்திற்குப் பதிலாக என்ன கலந்து விட்டது? சோம்பேறித்தனம்! சோம்பேறித்தனம் கலந்து விட்டதால் சந்திப்பு செய்தாலும் தொடர்பு தெளிவாக இருப்பதில்லை. ஆகவே சந்திப்பின் மூலம் என்ன அனுபவம் ஏற்பட வேண்டுமோ அது ஏற்படவில்லை. கலப்படம் இருக்கிறது. இங்கே ஆரம்பம் செய்தீர்கள் என்றால் மதுபன்வாசிகளைக் கண்டு அனைவரும் செய்வார்கள். மதுவனவாசிகள் குறிப்பாக அன்பானவர்களாக இருக்கின்றனர். அவர்கள் குறிப்பாக தியாகம் செய்ய வேண்டும். அன்பில் எப்பொழுதும் தியாகம் செய்யப்படுகிறது. நல்லது

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺
✺✺✺✺✺✺✺

## 15.02.1969 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## சிவராத்திரி சமயத்தில் அவ்யக்த பாப்தாதாவின் மகாவாக்கியம்! (சந்த்ரி தாதி உடல் மூலமாக)

இன்று யாரை வரவேற்பதற்கான தினம்? (தந்தை மற்றும் குழந்தைகள்) ஆனால் சில குழந்தைகள் தன்னையே மறந்து விட்டதால் தந்தையையும் மறந்து விட்டனர். இன்றைய தினம் முன்பு வரவேற்பு இருந்ததைப் போன்று இருக்கிறதா? எத்தனை தந்திகள் முன்பு வந்தன! ஆக, மறந்து விட்டீர்கள் இல்லையா? தந்தை இருக்கும்பொழுது பிறகு எவ்வாறு மறக்க இயலும் இதுவே நம்பிக்கை, இதுவே படிப்பு. படிப்பு நிலையாக நடைபெறுவது போல், காரியமும் முன்பு நடைபெற்றது போல் நடைபெற்றுக் கொண்டே இருக்கும். அந்த நம்பிக்கை இல்லையெனில் காரியத்திலும்கூட கொஞ்சம் நான் யாருடைய குழந்தையாக இருக்கிறேன் என்ற தனது நிலையை குழந்தைகள் புரிந்திருக்கின்றனரா? தந்தை சதா இருக்கின்றார் எனில் குழந்தைகளும் சதா இருக்கின்றனர் ஆனால் தேக அபிமானம் தனது சுயதர்மத்தை மறக்க வைத்து விடுகிறது. மறப்பதால் காரியம் எவ்வாறு நடைபெறும்? எவ்வாறு முன்னேற்றம் அடைவீர்கள்? தந்தை தனது அறிமுகத்தைக் கொடுத்து விட்டார். குழந்தைகளுக்கும் கூட தன்னுடைய அறிமுகம் கிடைத்திருக்கிறது. எவ்வளவு காலம் இந்த லட்சியத்தை உறுதி செய்விப்பதற்காக முயற்சி செய்யப்பட்டிருக்கிறது. அந்த முயற்சியின் பலன் எங்கே? நினைவு ஏற்படுத்துவதற்காக மட்டுமே இதைக் கூறிக் கொண்டு இருக்கிறேன். முரளி சொல்வதற்காக அல்ல, குழந்தைகளுடன் சந்திப்பதற்காகவே வந்திருக்கிறேன். அதிகமாக நினைவு செய்து கொண்டு இருக்கின்றனர். பாபா, தாங்கள் சென்றீர்கள் என்றால், புத்துணர்வு பெறுவார்கள் என்று குழந்தை (சந்த்ரி தாதி) கூறினார்கள். ஒருவேளை நம்பிக்கை இருக்கிறது என்றால் புத்துணர்வோடும் இருப்பிர்கள். பிறகும் கூட சிறிது நேரத்திற்கு

குழந்தைகளை சந்திப்பதற்காக வர வேண்டியதாகி விட்டது. குழந்தைகளே, சதா தன்னை சௌபாக்கியசாலி என புரிந்து கொள்ளவும் என்ற இந்த சுவமானத்தை நினைவுபடுத்தவே வந்திருக்கிறோம். யாருக்கு தந்தை, ஆசிரியர் மற்றும் சத்குருவிடம் முழுமையான தொடர்பு, முழுமையான ஈடுபாடு இருக்கிறதோ அவர்களையே சதா சௌபாக்கியசாலி என்று சொல்லப்படுகின்றது.

கன்னிப் பெண்ணின் நிச்சயதார்த்தத்திற்கு பிறகு என்ன ஆகிறது? பதியுடன் அன்பு ஏற்பட்டு விடுகிறது. அப்பொழுதே அவர்களை சதா சுமங்கலி என்று சொல்கின்றனர் ஆனால் அவர் எங்கே சுமங்கலியாக இருக்கிறார்? உள்ளுக்குள் என்ன நிறைந்து இருக்கிறது? கன்னிப் பெண் நூறு பிராமணர்களை விட உத்தமமானவராகக் கருதப்படுகிறார். நிச்சயதார்த்தம் செய்த பின் அசுத்தமாகும் காரணத்தால் உள்ளுக்குள் அபாக்கியசாலி ஆகின்றார். இது யாருக்கும் தெரிவதில்லை சதா சுமங்கலி யார் என்று தந்தைதான் சொல்கின்றார். எப்பொழுதும் பரமாத்மாவோடு முழுமையான அன்பு, ஈடுபாடு கொண்டவர்களே சதா சுமங்கலி ஆவர்.

இது படிப்பிற்கான காலமாகும். தந்தை தன்னுடைய காரியத்தை செய்து கொண்டு இருக்கிறார், வழிகாட்டுகின்றார். கற்பித்துக் கொண்டும் இருக்கின்றார். எதுவரை கற்பிக்க வேண்டுமோ அதுவரை கற்பித்துக் கொண்டே இருப்பார். அழிவு எதிரிலேயே இருக்கிறது, அதனுடைய தொடர்பு தந்தையுடன் உள்ளது. தந்தையினுடைய பிரிவு ஏற்பட்டு விட்டது என நினைக்காதீர்கள், பிரிந்தும் செல்லவில்லை விடைபெற்று விடவும் இல்லை. எதுவரை அழிவு ஏற்படவில்லையோ அதுவரை தந்தை துணையாக இருப்பார். சில காரியங்களுக்காக தந்தை வதனத்திற்குச் சென்று இருக்கிறார். சமயத்தின் அனுசாரம் அவை அனைத்தும் நடைபெற்றுக் கொண்டே இருக்கும். இதில் எந்த விடைபெறுவதும் இல்லை, எந்தப் பிரிவும் இல்லை. பிரிந்து விட்டதாகத் தோன்றுகிறதா? நீங்கள் விடை கொடுத்தீர்களா? ஒருவேளை விடை கொடுத்திருந்தால் பிரிந்தும் சென்றிருப்பார். விடை கொடுக்கவில்லை எனில் பிரிந்தும் சென்றிருக்க மாட்டார். நாடகத்தில் இந்தக் காட்சி நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது, தந்தையின் விளையாட்டு நடந்து கொண்டு இருக்கிறது. விளையாட்டில்

விளையாட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எதிர்காலத்தில் அதிகமான விளையாட்டைப் பார்க்க வேண்டியது இருக்கும். அவ்வளவு தைரியம் இருக்கிறதா? தைரியம் கொள்ளும்பொழுது அதிகம் பார்ப்பீர்கள். எதிர்காலத்தில் பலவற்றைக் காணப்போகிறீர்கள் ஆனால் மிகுந்த கவனத்துடன் அடியை எடுத்து வைக்க வேண்டும். ஒருவேளை கவனத்துடன் நடக்கவில்லை எனில் எங்காவது பள்ளம் இருந்தால், விபத்து ஏற்பட்டுவிடும். குழந்தைகளுடன் சந்திப்பதற்காக, சிறிது நேரத்திற்காக வந்திருக்கிறோம். அநேக காரியங்கள் செய்ய வேண்டும். வதனத்தில் இருந்துகொண்டு அதிகமாக செய்யவேண்டியதாக இருக்கிறது. குழந்தைகளின் உள்ளத்தையும் நிறைவடையச் செய்ய வேண்டியுள்ளது, பக்தர்களின் உள்ளத்தையும் நிறைவடையச் செய்ய வேண்டியுள்ளது. அனைத்து காரியங்களும் சங்கமயுகத்தில் தான் நடக்கிறது. தந்தையின் அறிமுகம் கிடைத்து விட்டது எனில் பொக்கிஷம், பரிசுச்சீட்டு (Lottery) கிடைத்து விட்டது என்பதாகும். தற்பொழுது குழந்தைகளுடைய சேவையைப் பூர்த்தி செய்திருக்கிறார். அனைவருடைய சேவையும் இப்பொழுது வதனத்தில் இருந்து செய்ய வேண்டும். எனது குழந்தைகளும் இருக்கின்றனர், மாற்றாந்தாய் குழந்தைகளும் இருக்கின்றனர். அனைவருடைய சேவையும் செய்ய வேண்டும். அதிகாலையில் வந்து திருஷ்டியினால் அறிமுகம் கொடுத்தாகியது. திருஷ்டி மூலம் சக்திமிக்க ஒளியை (search light) அனைவருக்கும் கொடுத்து சுகம் அளிப்பது தந்தை கடமையாகும்.

தற்பொழுது அனைவரும் அருங்காட்சியகத்தின் (Museum) சேவை செய்ய வேண்டும். அனைவருக்கும் தந்தையின் அறிமுகத்தை அளிக்க வேண்டும். தந்தை சேவைக்காக என்ன சித்திரங்களை உருவாக்கி வைத்தாரோ, அதை வைத்து சேவை செய்ய வேண்டும். விரல் கொடுப்பதால் மலையைத் தூக்க முடிகிறது இல்லையா! இதுவே, கோபகோபியர், விரல் கொடுத்து மலையைத் தூக்கியதாகப் புகழப்பட்டுள்ளது. விரல் கொடுக்கவில்லை எனில் மலையைத் தூக்க இயலாது. சிருஷ்டியின் ஆத்மாக்களை கடைத்தேற்றுவதே மலை தூக்குவதாகும். பிறகு அவர்களை உடன் அழைத்துச் செல்ல வேண்டும். குழு இருக்கிறது இல்லையா? இறுதியில் குழு ஒற்றுமையாக அனைவருடன் இணைந்து இருக்க வேண்டும். முதன்முதலில், காட்சியில் சிவப்பு நிறக் கூட்ட கண்டீர்கள். அது அப்பொழுது

புரியவில்லை ஆனால் இப்பொழுது அதே ஆத்மாக்களின் கூட்டத்தை, தம்முடன் அழைத்துச் செல்வதற்கான நிகழ்வு நாடகத்தில் உள்ள அனைவருக்கும் சேவை செய்ய வேண்டும். நல்லது.

அதிகாலை எழுந்து தந்தையின் நினைவில் இருங்கள். ஏனெனில் அச்சமயத்தில் தந்தை அனைவரையும் நினைவு செய்கின்றார். அச்சமயத்தில் சில சில குழந்தைகள் தென்படுவது இல்லை. தேடவேண்டியதாக உள்ளது. தனித்தனியான ரீதியில் நினைவு செய்தாலும், அவசியம் குழுவுடன் இணைந்தும் நடக்க வேண்டும். எந்த அளவிற்கு நினைவில் இருப்பீர்களோ அந்த அளவே தந்தையின் அருகாமையில் செல்வீர்கள். தந்தையை மறந்து விடுவதால் குழம்புகின்றனர். தந்தையை எப்பொழுதும் துணையாக வைத்துக் கொண்டால் மறக்க இயலாது.

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺
✺✺✺✺✺✺✺

# 04.03.1969 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஹோலிப் பண்டிகையின் சுபவேளையில்!

இன்று உங்களுக்கு விசேஷமான ஹோலிப்பண்டிகையா என்ன? ஹோலிப் பண்டிகை எவ்வாறு கொண்டாடப்படுகின்றது? ஹோலி கொண்டாடத் தெரியுமா? சங்கமயுகத்தின் ஹோலிப் பண்டிகை எது? நிகழ்கால நாடகக் காட்சியின் அனுசாரமாக ஹோலிப் பண்டிகையை எவ்வாறு கொண்டாடுவீர்கள்? நிகழ்காலத்தில் எத்தகைய ஹோலிப்பண்டிகை கொண்டாடுவதற்கான அவசியம் உள்ளது?

ஹோலியில் சில விஷயங்கள் செய்ய வேண்டியதாக உள்ளது. வர்ணப்பொடி பூசப்படுகின்றது. பழையவை எரிக்கப்படுகின்றன, கூடவே அலங்காரமும் செய்யப்படுகின்றது மேலும் சிலவற்றை அழிக்கவும் வேண்டியுள்ளது. என்னென்ன விஷயங்கள் ஹோலியில் செய்ய வேண்டுமோ, அவை அனைத்தும் இந்த சமயம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எதை எரிக்க வேண்டும், எதை அழிக்க வேண்டும், என்ன வர்ணப்பொடி பூச வேண்டும் மேலும் என்ன அலங்கரிக்க வேண்டும்? இவை அனைத்தையும் செய்வதையே கொண்டாட்டம் என்று சொல்லப்படுகின்றது. ஒருவேளை இந்த நான்கு விஷயங்களில் ஏதாவதொரு குறை இருந்தாலும் கொண்டாட்டம் என சொல்ல இயலாது. ஹோலிப் பண்டிகை தினங்களில் மிக அழகாக அலங்கரிக்கின்றனர். எவ்வாறு அலங்கரிக்கின்றனர்? தேவதைகளுக்குச் சமமாக அலங்கரிக்கின்றனர். நீங்கள் அனைவரும் அலங்காரம் செய்தவர்களாக இருக்கிறீர்களா? அலங்காரத்தில் ஏதும் குறை இல்லையே? அலங்காரத்தில் முக்கியமாக ஹோலியின் அலங்காரம் எது? பொம்மைகள் உருவாக்கும்போது முதன்முதலில் நெற்றியில் பல்ப் வைக்கின்றார்கள். இதுவும் கூட இந்த சமயத்தில் உள்ளதையே பின்பற்றப்படுகின்றது. <u>நெற்றியில் ஆத்ம தீபத்தை ஏற்றுவதே சங்கமயுகத்தில் உங்களுடைய முக்கியமான அலங்காரம் ஆகும்</u>. இதன் அடையாளமாக பல்ப் எரிக்கின்றார்கள் ஆனால் இவையனைத்து

விஷயங்களும் நடைபெறுவதற்காக ஹோலியின் அர்த்தத்தை நினைவில் கொள்ள வேண்டும். ஹோலி என்றால் நடந்தவை அனைத்தும் நடந்து முடிந்து விட்டன. என்ன காட்சி நடந்ததோ, அது நடந்து முடிந்து விட்டது, கடந்து விட்டது. தற்சமயம் இந்த ஹோலியினுடைய அதாவது, நாடகம் என்பது ஒரு கேடயம் என்ற முக்கியமான விஷயத்தில் கவனம் வைக்க வேண்டும். அந்த அளவிற்கு உறுதி ஆகும்போதே வர்ணம் கூட உறுதியாக ஒட்டிக் கொள்ளும். ஒருவேளை ஹோலியின் அர்த்தத்தை வாழ்வில் கொணரவில்லை எனில் வர்ணம் சரியாக ஒட்டாது. வர்ணம் உறுதியாக ஒட்டுவதற்காக ஒவ்வொரு நேரமும், எது கடந்து விட்டதோ அது நடந்து முடிந்து விட்டது என எண்ணுங்கள். அத்தகைய ஹோலி கொண்டாடிக் கொண்டு இருக்கிறீர்களா? அல்லது அவ்வப்பொழுது நாடகத்தின் காட்சியைக் கண்டு சிறிது எண்ணங்கள் கடையப்படுகிறதா? ஞானத்தைக் கடைவது வேறு விஷயம் ஆனால் நாடகக் காட்சியைக் கண்டு ஏன், என்ன, எப்படி என்று சிந்திப்பது என்பது எதைக் கடைவதாகும்? தயிரைக் கடையும் போதே வெண்ணெய் வெளிப்படுகிறது. ஒருவேளை தண்ணீரைக் கடைந்தால் என்ன வெளிப்படும்? ஒன்றும் வெளிப்படாது. முடிவில், ஒன்று களைப்பு ஏற்படுகின்றது, அடுத்தது நேரம் வீணாகிறது. ஆகையால், அது தண்ணீரைக் கடைவதாகும். அத்தகைய கடைதலுக்குப் பதிலாக ஞானத்தைக் கடைய வேண்டும்.

சாகார உருவத்தில் இறுதி தினங்களில் சேவைக்கான முக்கிய யுக்தி என்ன சொல்லப்பட்டது? முற்றுகை இட வேண்டும். வார்த்தை மூலம் சேவை என்ற ஒன்றும், அவ்யக்த கவர்ச்சி என்ற மற்றொன்றுமாகிய இரட்டை முற்றுகை இட வேண்டும். தானும் வெளி வர இயலாது, பிறரும் வெளி வர இயலாதபடி அத்தகைய முற்றுகை இட வேண்டும். முற்றுகை இடுவதற்கான முறை இதுவரை பயிற்சியில் தென்படவில்லை. அருங்காட்சியகம் உருவாக்குவது எளிதாகும். அருங்காட்சியகம் உருவாக்குவது ஒன்றும் முற்றுகை இடுவது ஆகாது, ஆனால் தனது அவ்யக்த ஈர்ப்பினால் அவர்களைக் ஈர்ப்பதே முற்றுகை இடுவதாகும். அது இப்பொழுது நடந்து கொண்டிருக்கிறதா? தற்பொழுது சேவைக்காக சமயம் கூட அதிகம் கிடைக்காது. உங்களுடைய சேவையில் தடங்கல் ஏற்படும்படி பிரச்சனைகள் வரும். அதனால், கிடைத்துக் கொண்டிருக்கும் நேரத்தில் யாருக்கு எவ்வளவு சேவை

செய்ய வேண்டுமோ அதை அதிகத்திலும் அதிகமாக செய்து விடுங்கள். இல்லாவிடில் சேவைக்கான சமயமும் முடிந்து விடும், அதாவது கடந்து விடும். ஆகையால், தற்பொழுது தன்னைத்தானே அதிகத்திலும் அதிகமாக சேவையின் பந்தனத்தில் பிணைக்க வேண்டும். இந்த ஒரு பந்தனத்தின் மூலம் தான் அனேக பந்தனங்கள் அழிந்து போகின்றன. தன்னைத் தானே ஈஸ்வரிய சேவையில் ஈடுபடுத்த வேண்டும். பிறர் சொல்லி ஈடுபடக் கூடாது. பிறர் சொல்வதால் என்னவாகும்? பாதி பலன் கிடைக்கும். ஏனெனில், யார் சொன்னார்களோ, தூண்டுதல் கொடுத்தார்களோ அவருக்கும் பங்கு ஏற்பட்டு விடுகிறது. கடையில் ஒருவேளை இரு பங்குதாரர்கள் இருக்கிறார்கள் என்றால் பங்கீடு செய்யப்படுகிறது இல்லையா! ஒருவர் இருக்கிறார் எனில் அவரே எஜமானராக இருப்பார். ஆதலால் ஒருவேளை எவரேனும் சொல்லி செய்தால், அக்காரியத்தில் பங்கீடு ஆகி விடுகிறது. மேலும் தானாகவே எஜமானராகிச் செய்தால் முழு சொத்தினுடைய அதிகாரி ஆகி விடுகின்றனர். ஆகையால், ஒவ்வொருவரும் எஜமானர் ஆகிச் செய்ய வேண்டும். எனினும், எஜமானத்தன்மையின் கூடவே குழந்தைத்தன்மையும் முழுமையாக இருக்க வேண்டும். அவ்வப்பொழுது எஜமானர் ஆகி எழுச்சி அடைகின்றனர், அவ்வப்பொழுது குழந்தையாகி விட்டு விடுகின்றனர். அதனால், விடவும்கூடாது, பிடித்துக்கொள்ளவும் கூடாது. பிடித்துக் கொள்வது என்றால் பிடிவாதத்தோடு பிடித்துக் கொள்ளக்கூடாது என்பது பொருள். ஏதாவது ஒரு பொருளை ஒருவேளை மிக அழுத்திப் பிடித்தால், அந்த பொருளின் ரூபம் மாறி விடுகிறது இல்லையா! மலரை அழுத்திப் பிடித்தால் என்னவாகும்? பிடிக்க வேண்டும் ஆனால் எந்த அளவு, எவ்வாறு பிடிக்க வேண்டும் என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும். பிடித்தால் மாட்டிக் கொள்கின்றனர் அல்லது விட்டுவிட்டால் முற்றிலுமாக விட்டுவிடுகின்றனர். இவை இரண்டையும் சமமாக ஆக்குவதே முயற்சி செய்வதாகும். எஜமானர் மற்றும் குழந்தை ஆகிய இரண்டு விதத்திலும் நடக்கக்கூடியவர்களாக இருப்பார்களோ, அவர்களை முக்கியமாக, ஒன்று -படைப்பு. அதன் கூடவே நிர்அகங்காரி, பணிவு மற்றும் அன்பு சொரூபம் ஆகியவற்றைக் கொண்டு அறியலாம். இந்த நான்கு விஷயங்களும் அவர்களுடைய ஒவ்வொரு நடத்தையிலும் தென்படும். ஒருவேளை இவை நான்கில் ஏதாவது குறை இருக்கிறதெனில், நிலையில் (Stage) ஏதோ குறை இருக்கிறது.

நல்லது. வதனத்தில் இன்று ஹோலி எவ்வாறு கொண்டாடப்பட்டது தெரியுமா? நீங்களும் ஹோலி கொண்டாடிக் கொண்டு இருக்கிறீர்கள் இல்லையா! அங்கு செய்தி பெற வந்தவர் (சந்தேஷி) வந்தவுடன் ஒரு விளையாட்டு விளையாடப்பட்டது. என்ன விளையாட்டு விளையாடப்பட்டது? (தாங்கள் அழைத்துச் சென்றால் காண்கிறோம்) புத்தி என்ற விமானம் உள்ளது தானே! புத்தி என்ற விமானம் திவ்ய திருஷ்டியை விட மேன்மை வாய்ந்தது ஆகும். இங்கேயே அது இருக்கவே முடியாது. இன்று மகிழ்ச்சி நிறைந்த தினம் இல்லையா! சந்தேஷிகள் வதனம் வந்தடைந்தனர். சாகார தந்தையோ (பிரம்மா) மறைக்கப்பட்டு இருந்தார். மிகுந்த அழகு பொருந்திய, மலர்களாலான மலை ஒன்று உருவாக்கப்பட்டு இருந்தது. அதன் உள்ளே சாகார தந்தை மறைந்து இருந்தார். தொலைவில் இருந்து காணும்பொழுது மலைதான் தென்பட்டது. சந்தேஷி வந்தபொழுது சாகார தந்தையைக் காணவில்லை. மிகவும் தேடினார் ஆயினும் புலப்படவே இல்லை. ஒளிந்து கொள்ளும் விளையாட்டு விளையாடுகின்றனர் இல்லையா! அத்தகைய விளையாட்டைக் கண்டார். திடீரென மலர்களுக்கு நடுவில் சாகார தந்தை அமர்ந்திருப்பது தெரிந்தது. அக்காட்சி மிகவும் நன்றாக இருந்தது. நல்லது. பிறகு, அவ்யக்த பாப்தாதா ஒவ்வொருவருக்கும் அமிர்தம் அளித்து 'போக்' கொடுத்துக் கொண்டு இருந்தார்கள். மேலும் ஒவ்வொருவருடன் சந்திப்பும் செய்து கொண்டு இருந்தார்கள். விசேஷமாக அருங்காட்சியகத்தில் இருப்பவர்களுக்கு அருங்காட்சியகத்திற்குள் யார் வந்து பார்த்தாலும், பார்த்த உடனேயே ஈர்க்கப்பட்டு விட வேண்டும். அத்தகைய அருங்காட்சியகத்தை தனது அவ்யக்த கவர்ச்சியின் மூலம் உருவாக்குங்கள் என அறிவுறுத்திக் கொண்டு இருந்தார்கள்.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 13.03.1969 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# அன்பு மற்றும் சக்தி என்ற குணங்களின் சமத்துவம்!

ஆத்ம அபிமானி ஆகி நினைவு யாத்திரையில் அமர்ந்திருக்கிறீர்களா? நினைவு யாத்திரையில் கூட முக்கியமாக எந்த குணத்தில் நிலைத்திருக்கின்றீர்கள்? நினைவு யாத்திரையில் இருந்தபோதிலும் முக்கியமாக எந்த குணம் சொருபத்தில் இருக்க வேண்டும்? தற்சமயம் உங்களுடைய முக்கியமான குணம் எது? (அனைவரும் தத்தம் கருத்தைக் கூறினர்). இச்சமயம் விசேஷமாக அனைவரும் அன்பு சொரூப நிலையில் இருக்கின்றனர்; ஆனால் அன்பின் கூடவே நிகழ்காலத்தில் சூழ்நிலைகளின் அனுசாரம் எவ்வளவு <u>அன்பு சொரூபம்</u> இருக்கின்றதோ அவ்வளவு <u>சக்தி சொரூபமும்</u> இருக்க வேண்டும். தேவிகளின் சித்திரங்களைக் கண்டிருக்கிறீர்களா? தேவிகளின் சித்திரத்தில் முக்கியமாக என்ன விசேஷ தன்மை உள்ளது? தன்னுடைய சித்திரங்களை எப்பொழுதேனும் கவனத்துடன் பார்த்திருக்கிறீர்களா? தேவிகளின் <u>சித்திரங்களை உருவாக்கும்பொழுது காளியைத் தவிர மற்ற தேவிகளின் கண்கள் எப்பொழுதும் கனிவாகவே காண்பிக்கின்றனர்</u>. <u>அன்பில் மூழ்கி இருக்கும் கண்களாக சித்திரம் வடிக்கின்றனர்</u>. கூடவே, அவர்களுடைய <u>முகத்தை வடிக்கும்பொழுது சக்தியின் சமஸ்காரம் வெளிப்படும்படி உருவாக்குகின்றனர்</u>. <u>எனினும் கண்களில் அன்பு, தயை, குளிர்ந்த தன்மை</u> <u>ஆகியவை தென்படுகின்றன</u>. தாய்மையினுடைய அன்பின் சமஸ்காரம் அந்தக் கண்களிலிருந்து வெளிப்படுகின்றது. அவர்கள் அமர்ந்திருக்கும் விதம் மற்றும் அவர்களுடைய வாகனம், அஸ்திர, சஸ்திரங்களைக் காட்டுவது சக்தி ரூபத்தை வெளிப்படுத்துகிறது. அவ்வாறே சக்திகளாகிய உங்களுக்குள் கூட இரண்டு குணங்கள் சமமாக இருக்க வேண்டும். எந்த அளவு சக்தி சொரூபமாக இருக்கறீர்களோ அந்தளவு அன்பு சொருபமாகவும் இருக்க வேண்டும். இதுவரை இரண்டும் இல்லை. அவ்வப்பொழுது அன்பின் அலையிலும், அவ்வப்பொழுது சக்தி ரூபத்திலும் நிலைத்திருக்கிறீர்கள்.

இரண்டுமே இணைந்திருக்க வேண்டும் மற்றும் சமமாக இருக்க வேண்டும். இதுவே சக்திரூபத்தினுடைய இறுதியான முழுமை நிலையின் அடையாளம் ஆகும்.

இத்தருணம், பாப்தாதாவிற்கு தனது குழந்தைகளின் நெற்றியில் என்ன தென்படுகிறது? தனது நெற்றியைப் பார்த்தீர்களா, என்ன இருக்கிறது? பிராப்தியை பார்க்கிறீர்களா அல்லது நிகழ்கால சௌபாக்கியத்தின் நட்சத்திரம் ஜொலித்துக் கொண்டிருப்பதாகப் பார்க்கிறீர்களா அல்லது வேறு ஏதேனும் உள்ளதா? (ஒவ்வொருவரும் அவரவர் கருத்தைச் சொன்னார்கள்). மூன்று சம்பந்தங்கள் மூலம் மூன்று விஷயங்கள் தென்படுகின்றன. அதனாலேயே உங்களுக்கு திரிசூலம் பரிசாக அனுப்பப்பட்டது. <u>மூன்று நட்சத்திரங்களும் தென்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஒன்று, எதிர்காலத்தினுடையது, இரண்டாவது, நிகழ்கால சௌளபாக்கியத்தினுடையது மற்றும் மூன்றாவது, பரந்தாமத்தில் உங்களுடைய ஆத்மாவின் சம்பூர்ண நிலை என்ன இருக்கப்போகிறதோ, அந்த சம்பூர்ண நிலையின் நட்சத்திரத்திரமாகும்</u>. மூன்று நட்சத்திரங்களுமே தென்படுகின்றன. இந்த மூன்று நட்சத்திரங்களைப் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும். அவ்வப்பொழுது நட்சத்திரங்களின் நடுவில் மேகங்கள் வந்து விடுகின்றன, அவ்வப்போது நட்சத்திரங்கள் இடத்தை மாற்றிக் கொள்கின்றன, அவ்வப்போது அழிந்து விடுகின்றன. இங்கேயும் அவ்வாறே உள்ளது. இடத்தை மாற்றுகின்றனர். அவ்வப்போது பார்த்தால் மிக உயரத்திலும், சில சமயம் நடுவிலும், சில நேரம் பார்த்தால் அதை விட கீழேயும் இருக்கின்றனர். இடத்தை இப்பொழுது மாற்றம் செய்யக் கூடாது. ஒருவேளை மாற்ற வேண்டுமெனில் முன்னேறிச் செல்லுங்கள். கீழே இறங்காதீர்கள். அழிவற்ற சம்பூர்ண நிலைக்கு சதா உயர்ந்து கொண்டே இருங்கள். அத்தகைய நட்சத்திரம் ஆக வேண்டும். அழிந்து போவதற்கான விஷயமே இங்கு கிடையாது. அனைவரும் நல்ல முயற்சியாளர்களே அமர்ந்திருக்கிறீர்கள். மற்றபடி இடத்தை மாற்றக்கூடிய பழக்கத்தை அழித்து விட வேண்டும்.

குமாரிகளுடைய முடிவு (Result) எப்படி உள்ளது? நீங்கள் தன்னுடைய முடிவைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? விசேஷமாக எந்த விஷயத்தில் முன்னேற்றம் இருப்பதாகக் கருதுகிறீர்கள்?

(ஒவ்வொருவரும் தன்னுடையதைச் சொன்னார்கள்). நினைவு யாத்திரையில் குறை இருக்கிறது ஆதலால் அவ்வளவாக உணர முடிவதில்லை. அமிர்தவேளையில் நினைவினுடைய அனுபவம் அவ்வளவாக ஏற்படுவதில்லை. ஆகையால் எவ்வாறு சாகாரத்தில் இங்கே திறந்த வெளியில் காற்றோட்டமாக உலாவச் செய்தார், லட்சியமும் கொடுத்தார், யோகத்தின் அனுபவமும் செய்வித்தார். இவ்விதமே, குமாரிகளுடைய நிமித்த ஆசிரியைகள், அவர்களை அரை மணிநேரம் ஏகாந்தத்தில் உலாவச் செய்ய வேண்டும். எவ்வாறு ஆரம்பத்தில் கடற்கரையில் நீங்கள் தனித்தனியாகச் சென்று அமர்ந்தீர்கள், சிலர் இங்கும் சிலர் அங்கும் சென்று அமர்ந்தீர்கள். அத்தகைய பயிற்சி செய்வியுங்கள். கூரைகளோ இங்கு மிகப் பெரியதாக இருக்கின்றன. பிறகு மாலை நேரத்தில் கூட 7.00 முதல் 7.30 வரையிலான இந்த நேரம் விசேஷமாக நன்றாக இருக்கிறது. எவ்வாறு அமிர்தவேளை சதோகுணமான வேளையாக இருக்கிறதோ அவ்வாறே, இந்த மாலை வேளை கூட சதோகுணமானதாக இருக்கிறது. இந்த நேரத்தில் தான் உலாவக்கூட செல்கின்றனர். அந்த சமயம் குழுவாக யோகம் செய்வியுங்கள் மேலும் இடை இடையே அவ்யக்த ரூபத்திலிருந்து வர்ணனை கொடுத்துக் கொண்டே இருங்கள். அப்போது எவருக்கேனும் புத்தியோகமானது இங்கு அங்கு அலைந்தாலும் கவனம் ஈர்க்கப்பட்டுவிடும். யோகம் என்ற பாடத்தில் குறை அதிகமாக இருக்கின்றது. சொற்பொழிவாற்றுவது, படவிளக்கக் கண்காட்சியில் புரியவைப்பது போன்றவற்றை இந்த நிகழ்கால பள்ளிகளின் குமாரிகளுக்கு ஒரு வாரம் பயிற்சி அளித்தாலே மிக நன்றாகப் புரிய வைத்து விடுவர். எனினும், இதுவோ வாழ்வில் அதீந்திரிய சுகத்தின் அனுபவம் செய்வது இல்லையா! அந்த சமயத்தில் பாப்தாதாவின் அழைப்பின் பெயரில் சென்று கொண்டு இருக்கின்றோம் என புரிந்து கொள்ளுங்கள். எவ்வாறு பாப்தாதா உலாவ வருகின்றனரோ அவ்வாறு புத்தி யோக பலம் மூலம் நீங்களும் உலாவ முடியும். நினைவு யாத்திரையின் அனுபவம் செய்யும்போது அவ்யக்த நிலையின் பிரபாவமானது உங்களுடைய கண்களிலிருந்து, நடத்தையிலிருந்து வெளிப்படையாகத் தென்படும். பிறகு அவர்கள் மூலம் மாலை உருவாக்குவார்கள். எவ்வாறு ஆரம்பத்தில் நீங்கள் தாமே மாலை உருவாக்கினீர்கள் இல்லையா!

# 1969 அவ்யக்த முரளிகள்!

இந்த குழுவிற்கு, ஊக்கம், உற்சாகம் சிறப்பாக இருக்கிறது. மற்றபடி ஒரு விஷயத்தை விசேஷமாக கவனத்தில் கொள்ள வேண்டும். அது என்னவென்றால், ஒருவர் மற்றவரின் சமஸ்காரங்களை அறிந்து, ஒருவருக்கொருவர் அன்போடு ஒருவருக்கொருவர் முற்றிலும் ஒற்றுமையுடன் இருக்க வேண்டும். எவ்வாறு, எவரிடமாவது விசேஷ அன்பு இருக்கிறது என்றால் அவருடன் எவ்வளவு கலந்து விடுகின்றனர். அவ்வாறே அனைவரும் ஒருவருக்கொருவர் கலந்து விட வேண்டும். எப்பொழுது குமாரிகள் அத்தகைய காட்சியை செய்து காண்பிப்பார்களோ அப்போதே இன்னும் பல குமாரிகள் சேவை செய்வதற்கு நிமித்தம் ஆவார்கள். மேலும் நிமித்தம் ஆகுபவர்களுக்கு அதற்கான பலனும் கிடைக்கின்றது. அநேகக் குமாரிகளை ஊக்கம், உற்சாகம் மற்றும் மேன்மைக்குக் கொண்டு வரக்கூடிய ஷோ-கேஸ் (Showcase) நீங்கள்! எவ்வளவு ஊக்கத்துடன் சாகாரமானவர், நிராகாரமானவர் ஆகிய இருவரும் இணைந்து இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருக்கின்றனரோ, அவ்வளவு இதற்கான பலனை காண்பிக்க வேண்டும். சில குமாரிகளின் மேன்மைக்கு நிமித்தம் ஆக முடியும், தன்னைப் போன்றே பிற குமாரிகளை விழுவதிலிருந்து தப்பிக்கச் செய்ய முடியும். குமாரிகளிடம் பாப்தாதாவிற்கு மிகுந்த அன்பு இருக்கிறது. ஏனெனில் பாப்தாதா பரம பவித்ரமாக (தூய்மையாக) இருக்கின்றார்கள். மேலும் குமாரிகளும் கூட தூய்மையாக இருக்கின்றனர். ஆகையால், தூய்மையானது ஈர்க்கின்றது. தற்போது முக்கியமான விசேஷத்தன்மை இதுவே தேவை. ஒவ்வொரு மகாரதியின் கடமை என்னவென்றால் தன்னுடைய குணத்தை பிறரில் நிறைக்க வேண்டும். எவ்வாறு ஞானத்தின் தானம் அளிக்கப்படுகிறதோ அவ்வாறு குணங்களின் தானமும் அளிக்க வேண்டும். ஞான ரத்தினங்களை தானம் செய்வதாலேயே மகாரதி என்று அழைக்கப்படுகின்றீர்கள். அதே போன்று குணங்களின் தானமும் கூட மிகப் பெரிய தானமாகும். ஞானமளிப்பது எளிதானதாகும். குணங்களை தானம் அளிப்பதில் சிறிது முயற்சி தேவை. குணங்களை தானம் அளிப்பதில் அனைத்து மகாரதிகளில் முதல் எண்ணில் இருப்பவர் யார்? ஜானகி. அவருக்குள் விசேஷமாக இந்த குணம் உள்ளது. ஆகையால் ஒருவருக்கொருவர் இந்த குணத்தை கிரஹிக்க வேண்டும்.

# 1969 அவ்யக்த முரளிகள்!

அபுவில் அமைக்கப்பட உள்ள அருங்காட்சியகத்தின் ஏற்பாடு பற்றி பாப்தாதா உரைத்தது :

தொலைநோக்குப் பார்வை மற்றும் பரந்த புத்தி உடையவராகி அருங்காட்சியகத்தைத் தயார் செய்ய வேண்டும். முதலிலேயே எதிர்காலத்தை யோசித்து நேரத்தை வெற்றிகரமானதாக ஆக்கும் குணத்தை தாரணை செய்ய வேண்டும். மேலும் தக்க சமயத்தில் தயார் செய்திடவும் வேண்டும். விரைவாகவும் நடைபெற வேண்டும். மேலும் முழுமையும் பெற வேண்டும். அப்போதே அதிசயம் எனப்படும். ஒருவேளை ஏதேனும் குறை இருந்தால் அக்குறையின் மீது அனைவரின் பார்வை செல்லும். அத்தகைய குறை இருக்கக்கூடாது. அனைவருடைய வாயிலிருந்தும் அதிசயமாக உள்ளது என்பது வெளிப்பட வேண்டும். தெய்வீகக் குடும்பம் முழுவதும் உங்களுடைய முகத்தை அருங்காட்சியகத்தின் கண்ணாடியில் காண்பார்கள். நல்லது.

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺
✺✺✺✺✺✺✺

## 20.03.1969 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஏழு விஷயங்களை விடுங்கள் மேலும் ஏழு விஷயங்களை தாரணை செய்யுங்கள்!

அனைவரும் எந்த நினைவில் அமர்ந்திருக்கிறீர்கள்? எந்த தேசத்தில் அமர்ந்திருக்கிறீர்கள் -வியக்த தேசத்திலா அல்லது அவ்யக்த தேசத்திலா? அவ்யக்தமானவரை வியக்தத்தில் கொண்டு வந்திருக்கிறீர்களா அல்லது நீங்கள் அவ்யக்தமாகி இருக்கிறீர்களா? இப்பொழுது எங்கிருந்து சந்தித்துக் கொண்டு இருக்கிறீர்கள்? அவ்யக்தமானவரை வியக்த தேசத்திற்கு அழைப்பு விடுத்து இருந்தீர்கள் ஆதலால் அவ்யக்த பாப்தாதா வியக்த தேசத்தில் அவ்யக்த ரூபத்தில் இருந்து சந்தித்துக் கொண்டு இருக்கின்றார்கள். அவ்யக்த ரூபத்தை வியக்தத்தில் கொணர்வதற்கு எவ்வளவு சமயம் தேவை? (இப்பொழுது ஆயத்தமாக உள்ளது, முயற்சி நடந்து கொண்டிருக்கிறது) எவ்வளவு கால அவகாசம் தேவையாக உள்ளது? சம்பூரண நிலையை இந்த சாகார ரூபத்தில் கொணர்வதற்கு எவ்வளவு கால அவகாசம் வேண்டும்? கண்ணாடியில் காண முடியும் இல்லையா! சம்பூரண நிலையின் சித்திரத்தை சாகாரத்தில் கண்டிருக்கிறீர்கள். சாகார உடல் சம்பூரண கர்மாதீத் நிலையில் இல்லையா? அதோடு ஒப்பிட்டுச் சொல்லுங்கள். அவரைப் போல ஆகியேத் தீர வேண்டும். குணங்களைத் தான் தாரணை செய்ய வேண்டும். அவரது இறுதி நிலை மற்றும் தனது நிகழ்கால நிலையில் எவ்வளவு வித்தியாசம் இருப்பதாக புரிந்திருக்கிறீர்கள்? அதற்காக எவ்வளவு கால அவகாசம் தேவை? சாகாரமானவருடைய சான்றை இந்தக் கண்கள் மூலம் கண்டிருக்கிறீர்கள். அவரது ஒவ்வொரு குணம், ஒவ்வொரு காரியத்தை தனது கர்மம் மற்றும் வார்த்தையோடு ஒப்பிட்டுப் பார்த்தால் தெரிய வரும். தற்போதை நேரத்தின் கணக்குப்படி 25% என்பது கூட அதிகம் ஆகும். முயற்சி செய்வதற்கான சமயம் மிகக் குறைவாக உள்ளது. ஆகையால் எவ்வாறு நினைவிற்கான அட்டவணை (சார்ட்) வைக்கின்றீர்களோ அதன் கூடவே இப்பொழுது இதற்கான அட்டவணையும் எழுத வேண்டும். சாகாரமானவர் என்ன கர்மம் செய்து

கொண்டு இருந்தாரோ, என்ன ஸ்திதி, என்ன நினைவு இருந்ததோ அவை அனைத்துடனும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். நல்லது.

இன்று குமாரிகளை சோதித்துப் பார்க்கின்றார்கள். அனைவரும் செய்து கொண்டு இருக்கும் முயற்சியில் முக்கியமாக ஏழு விஷயங்களை தாரணை செய்ய வேண்டும் மேலும் ஏழு விஷயங்களை விட வேண்டும். அவை யாவை? (ஒவ்வொரு குமாரியும் அவரவர் கருத்தைக் கூறினர்). விட வேண்டியதை அனைவரும் சொல்கின்றீர்கள், 5-விகாரங்கள் மேலும் ஆறாவது அலட்சியம் மற்றும் ஏழாவது பயம் ஆகும். இந்த பயம் கூட பெரிய விகாரம் ஆகும்! சக்திகளுடைய முக்கிய குணமே பயமின்மை ஆகும். ஆதலால், பயத்தையும் விட்டுவிட வேண்டும். நல்லது, இப்பொழுது என்ன தாரணை செய்ய வேண்டும்? தனது சொரூபத்தை அறிய வேண்டும். சுயசொரூபம், சுயதர்மம், சுயதேசம், சுகர்மம் (சுகம் தரும் கர்மம்), சுய லட்சியம், சுய லட்சணம் மற்றும் சுயதரிசன சக்கரதாரி! இந்த ஏழு விஷயங்களைத் தாரணை செய்ய வேண்டும். இவற்றை தாரணை செய்வதால் என்னவாக ஆவீர்கள்? சீதளாதேவி! காளி ஆகக்கூடாது. இப்போது சீதளாதேவி ஆக வேண்டும். விகாரங்கள் மீது காளி ஆக வேண்டும். அசுரர்கள் முன்பு காளி ஆக வேண்டும்; ஆனால் தன்னுடைய பிராமண குலத்தில் சீதளமானவராக வேண்டும். நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋❋

## 17.04.1969-1 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## அபுவில் ஆன்மீக பொருட்காட்சி திறப்புவிழா!

அனைத்து அன்பான குழந்தைகளுக்கும் தந்தையின் நமஸ்காரம். உங்களுடைய அன்பு எதன் மீது உள்ளது? (சிலர் தந்தை மீது என்றனர், சிலர் சேவை மீது என்றனர்). மேலும் எதன் மீது அன்பு உள்ளது? மேலும் ஒரு விஷயம் மீதமுள்ளது. பாப்தாதாவிடம் அன்பு இருக்கிறது ஆனால் கூடவே முயற்சி மீதும் அதிக அன்பு வைக்க வேண்டும். தெய்வீக குடும்பத்தின் மீது அன்பு, சேவை மீது அன்பு, பாப்தாதா மீது அன்பு இருக்கின்றது. எனினும், நிகழ்காலத்தில் முயற்சியின் மீது அதிக அன்பு வைக்க வேண்டும். எவர் ஒருவர் முயற்சியின் மீது அன்புடையவராய் இருப்பாரோ அவர் அனைவரின் அன்பிற்குரியவர் ஆகி விடுவார். முயற்சி மீது ஒவ்வொருவருக்கும் எந்தளவு அன்பு உள்ளது என்பதை ஒவ்வொரு வரும் சோதனை செய்ய வேண்டும். பாப்தாதா மீதும் கூட முயற்சி செய்விப்பதாலேயே அன்பு உள்ளது. முதலில் முயற்சியின் மீது அன்பிருந்தாலே பிராப்தி மீதும் அன்பு ஏற்படும். முயற்சி மீது அன்பு இல்லாதவரை தெய்வீக குடும்பத்தின் அன்பைப் பெறவும் முடியாது, கொடுக்கவும் முடியாது ஒருவேளை முயற்சியின் மீது அன்பு உள்ளது எனில், அவர்கள் பிறருடைய அன்பிற்குரியவராக முடியும். அன்பின் காரணத்தினாலேயே இங்கு கூடியிருக்கிறீர்கள். எனினும், பாப்தாதாவினுடைய அன்பில் இருக்கிறீர்கள். இப்பொழுது முயற்சி மீது கூட அன்பு வைக்க வேண்டும். ஏனெனில் இதே முயற்சிதான் குழந்தைகள் உங்களுடைய முழு கல்பத்தின் பிராப்தியை உருவாக்குகின்றது.

குழந்தைகளுக்கு எவ்வளவு அன்பு இருக்கிறதோ அவ்வளவு அதைவிட மிக அதிக அன்பு பாப்தாதாவிற்கும் உள்ளது. யாருக்கு எவ்வளவு அன்பு இருக்கிறதோ அவருக்கு அன்பிற்கான பதில் கிடைத்துக் கொண்டே இருக்கிறது. அவ்யக்த ரூபத்தில் இருந்துகொண்டு அன்பைப் பெற

வேண்டும். அன்பு என்ற அவ்யக்த பாடத்தை எவ்வளவு பயின்றிருக்கிறீர்கள்? நிகழ்காலத்தில் பாடம் என்னவென்றால் அவ்யக்த ரூபமானவரிடமிருந்து அன்பைப் பெற வேண்டும். மேலும் அன்பினால் சேவைக்கான சான்றளிக்க வேண்டும் அவ்யக்த அன்பின் பாடத்தை எந்த அளவு உறுதியானது ஆக்கியிருக்கிறீர்கள்? இப்போது முடிவு என்னவாக இருப்பதாக புரிந்துள்ளீர்கள்? பாதி வரை வந்து விட்டீர்களா? பெரும்பான்மையினரின் முடிவை (Result) கேட்கின்றார்கள். (சிலர் 25% என்றனர், சிலர் 75% என்றனர்) 25 சதவிகிதத்திற்கும் மற்றும் 75 சதவிகிதத்திற்கும் எவ்வளவு வித்தியாசம் உள்ளது!

பெரும்பான்மையினர் 25% எனப் புரிந்துள்ளனர். ஏன் அத்தகைய முடிவு ஏற்பட்டுள்ளது? இதற்கான காரணம் என்ன? 25% அவ்யக்த அன்பு உள்ளது எனில் மீதம் 75% எத்தகைய அன்பு உள்ளது? பெரும்பான்மையினருடைய முடிவு ஒருவேளை 25% இருக்கிறது எனில் வரக்கூடிய எதிர்காலத்தில் எவ்வாறு தேர்ச்சி அடைவீர்கள்? இப்போது அவ்யக்த அன்பு தான் முக்கியமானது. அவ்யக்த அன்பு தான் நினைவு யாத்திரைக்கு பலம் கொடுக்கின்றது. அவ்யக்த அன்பு தான் அவ்யக்த நிலையை உருவாக்குவதற்கு உதவி செய்கிறது என்ற இந்த முடிவு ஏன் ஏற்பட்டது? காரணத்தை யோசித்தீர்களா? சமயத்தின் அனுசாரம் இப்பொழுது இந்த முடிவு இருக்கக்கூடாது. மாறாக சமயத்தின் அனுசாரம் 75% இருக்க வேண்டும். அத்தகைய முடிவைக் (Result) கொணர்வதற்காக என்ன செய்யப் போகிறீர்கள்? அதற்கான வழி என்ன? (உள்நோக்கு முகம்) எப்போதும் உள்நோக்குமுகம் உடையவராக வேண்டும் என்று கூறுகிறீர்கள். எனினும் ஆகாததற்கான காரணம் என்ன?

பாப்தாதா மீது, சேவை மீது அன்பு இருக்கிறது ஆனால் முயற்சி மீது அன்பு குறைவாக உள்ளது. இதற்கான காரணமாகக் காணப்பட்டது என்னவென்றால், பெரும்பாலும் சூழ்நிலைகளைக் கண்டு குழப்பம் அடைகின்றீர்கள். சூழ்நிலைகளின் ஆதாரத்தில் ஸ்திதியை உருவாக்குகின்றீர்கள். ஸ்திதியினால் சூழ்நிலைகளை மாற்றுவதில்லை. சூழ்நிலைகள் மாறும்போதே ஸ்திதி உருவாகும் என நினைக்கின்றனர் ஆனால் சுயஸ்திதியின் சக்தியினால் தான் சூழ்நிலைகள் மாற வேண்டும். அது பரஸ்திதி(சூழ்நிலை), இது

சுயஸ்திதி. பரஸ்திதியில் ஆட்கொள்ளப்படுவதால் பலஹீனம் ஆகி விடுகின்றனர். சுயஸ்திதியில் இருப்பதால் சக்தி வந்து விடுகிறது. ஆகையால் சூழ்நிலையினால் ஆட்கொள்ளப்பட்டு விடக்கூடாது. <u>சுயஸ்திதிக்கு எத்தகைய சூழ்நிலையையும் மாற்ற முடியுமளவு சக்தி உள்ளது. சுயஸ்திதி பலஹீனம் ஆன காரணத்தினால் அவ்வபோது பரஸ்திதி பலமுள்ளதாகி விடுகின்றது</u>. பெரும்பாலான குழந்தைகள் பாபா, இந்த விஷயத்தை சரி செய்து விடுங்கள், பின்னர், நாங்கள் அப்படி ஆகி விடுவோம்; இந்த விஷயத்தினுடைய தடை உள்ளது என்பதையே கூறிக் கொண்டு இருக்கின்றனர். சிலர் மட்டுமே இந்த சூழ்நிலையை கடந்து காட்டுவோம் என்று தனது தைரியத்தைக் காண்பிக்கின்றனர். விண்ணப்பம் செய்வது சரியே எனினும் விண்ணப்பத்தின் கூடவே என்ன படிப்பினை கிடைத்துள்ளதோ அதை சொரூபத்தில் கொண்டு வருவதில்லை. அனைவருடைய விண்ணப்பங்களின் கோப்பு (File) அதிகமாக சேர்ந்து விட்டது. எவ்வாறு தர்மராஜரிடம் கணக்கு புத்தகம் இருக்கிறது இல்லையா? அவ்வாறு, நிகழ்கால சமயம் பாப்தாதாவிடம் குழந்தைகளுடைய விண்ணப்பங்கள் அதிகமாக உள்ளன. ஒவ்வொருவருடைய கோப்பும் (File) உள்ளது. முயற்சியின் மீது அன்பு வைக்க வேண்டும் என்பதே உரைக்கப்பட்ட முக்கியமான விஷயமாகும். தன்னைத் தானே நீங்கள் என்ன சொல்லிக் கொள்கிறீர்கள்? (முயற்சியாளர்). நீங்கள் முயற்சியாளராக இருக்கின்றீர்கள் எனில் முயற்சியைப் பற்றி அறியவில்லையா? தனது கோப்பை (File) அறிந்திருக்கிறீர்களா? தனது முயற்சியாக என்ன செய்ய வேண்டும் என்பது தெரியுமா? சாகார உருவத்தில் இறுதி ஸ்திதியை பார்த்தீர்கள் இல்லையா! சாகார உருவத்தில் கர்மம் செய்து காண்பித்தார், அதன் மூலம் இறுதி நிலை பற்றி அறிய முடிந்தது இல்லையா! இறுதி நிலையின் அனுசாரம், என்னவெல்லாம் குறை தென்படுகின்றதோ, அந்தக் குறையை விரைவாக நீக்குவது தான் முயற்சியின் மீது அன்புள்ளது என்பதாகும். மெதுவாக நீக்கக்கூடாது. எந்தவொரு விஷயத்தையும் பின்னர் செய்யலாம் என விட்டுவிடாமல் இப்பொழுதே செய்ய வேண்டும் என்ற முக்கியமான குணத்தை சாகார பிரம்மாபாபாவிடம் பார்த்திருக்கின்றீர்கள். எவ்வாறு அவர் இப்பொழுதே செய்தாரோ, அவ்வாறே இப்பொழுதே செய்ய வேண்டும். பின்னர் செய்யலாம் என்பது கூடாது. 10-15 நாட்களுக்குப் பிறகு செய்யலாம், மதுவனம் சென்று பின்னர் பயிற்சி செய்யலாம் என்று அதிகமாகக்

காத்திருக்கின்றனர். திட்டம் தீட்ட வேண்டும் என்பதை மறந்து விடுகின்றனர். திட்டம் தீட்டாமல், வாய்ப்பிற்காக அதிகம் காத்திருக்கின்றனர். காத்திருப்பதை விடுத்து ஏற்பாடு செய்வதில் ஈடுபட்டால் பிறகு 75% ரிசல்ட் வந்து விடும்.

<u>நிகழ்காலம் பெரும்பான்மையினருடைய முயற்சியின் பலன் 75% விட குறைவாக இருக்கக்கூடாது. சிலர் பிரச்சனைகளுடைய தீர்வுக்காக, சிலர் சம்பந்தங்களுக்காக, சிலர் தனது சரீரத்திற்காக, சிலர் சமயத்திற்காகக் காத்திருக்கின்றனர்</u>. இந்தக் காரணத்தையும் கூறிக் கொண்டு இருக்கின்றார்கள் ஆனால் எவ்வாறாயினும், எதிரில் எத்தகைய நிலைமை இருந்த போதிலும், இந்த சரீரத்தில் இருந்தபடியே நாம் சம்பூரணம் ஆக வேண்டும் என்ற லட்சியம் கொள்ளவேண்டும். இப்பொழுது கொஞ்சம் ஆதாரம் இருக்கும் காரணத்தினால் அடிமை ஆகி விடுகின்றனர். பிரச்சனைகளின் அடிமை ஆகின்றனர். ஒவ்வொருவரும் அவரவர் கதையை அமிர்த வேளையில் சொல்கின்றனர். சிலர் சரீரத்தினுடைய நோய் இல்லையெனில் நான் அதிக முயற்சி செய்வேன் என்கின்றனர். சிலர் பந்தனத்தை விலக்குங்கள், என்கின்றனர் ஆனால் ஒரு பந்தனம் விலகினால் இன்னொன்று வரும்; உடலினுடைய பந்தனம் விலகினால் மனதினுடையது வரும், பணத்தினுடையது வரும், உறவினர்களுடையது வரும், பிறகு என்ன செய்வீர்கள்? இவை தானாக விலகாது. தன்னுடைய சக்தியினால் விலக்க வேண்டும். சிலர் பாப்தாதா விலக்கி விடுவார்கள் என்றும் அல்லது தக்க சமயத்தில் விலகி விடும் என்றும் நினைக்கின்றனர் ஆனால் இவ்வாறு எண்ணக்கூடாது. இப்பொழுதோ நேரம் அருகாமையில் வந்து விட்டது. இந்த நேரத்தில் ஒருவேளை மந்தமான முயற்சி செய்துகொண்டிருந்தால் இந்த முயற்சி செய்வதற்கான சமயம் கைநழுவிப் போய் விடும். எத்தனை முறை மூச்சுவிடுகிறோம் என்று தெரியுமா? எண்ணிலடங்காத முறை இல்லையா! ஆகவே ஒவ்வொ சுவாசம், ஒவ்வொரு வினாடி வெற்றிகரமானதாக ஆக வேண்டிய தருணமே இத்தருணம். ஒருவேளை சிறிது சோம்பேறித்தனம் இருந்தால் கூட, எவ்வாறு சில குழந்தைகள் சாகாரமான இனிய சந்திப்பினுடைய சௌபாக்கியத்தை இழந்து விட்டனரோ, அவ்வாறே. இந்த முயற்சியினுடை சௌபாக்கிய சமயமும் கையை விட்டுச் சென்று விடும். ஆகையால், முன்னரே அறிவுறுத்துகின்றார்கள்.

முயற்சி மீது அன்பு வைத்து முயற்சியை அதிகரியுங்கள். மேலிருந்து அனைத்து விளையாட்டையும் பார்த்துக் கொண்டு இருக்கின்றார்கள். நீங்களும் பார்க்க முடியும். ஒருவேளை தன் உயர்ந்த நிலையில் நிலைத்திருந்து பார்த்தீர்களென்றால், தன் சகிதம் பிறருடைய விளையாட்டும் தெரியும். பாப்தாதா பார்த்துக் கொண்டு இருக்கின்றார்கள். சிரிப்பு வரும் விளையாட்டாக உள்ளது. பெரிய பெரிய மகாரதிகள் சிங்கத்தைக் கண்டல்லாமல் எறும்பைக் கண்டு பயம் கொள்கின்றனர். சிங்கத்தை மிக எளிதாக எதிர்த்து விடுகின்றனர் ஆனால் எறும்பை நசுக்குவதற்கான வழியை அறியவில்லை. இது மகாரதிகளின் விளையாட்டாக உள்ளது. குதிரைப்பனையினர் என்ன செய்கின்றனர் தெரியுமா? (பாய்ந்து ஓடுகின்றனர்). குதிரைப்படையினரின் விளையாட்டையும் காண்கின்றார்கள். மகாரதிகளின் விளையாட்டை உரைத்தாயிற்று. குதிரைப்படையினர்களுக்கு தைரியம், உற்சாகம் மிகுதியாக உள்ளது முயற்சியிலும் முன்னோக்கி அடி வைக்கின்றனர் எனினும் பாய்ந்தோடும்போதே (வழுக்கி விடுகின்றனர்). வழுக்கவும் இல்லை, விழவும் இல்லை, களைப்படையவும் இல்லை, களைப்படையாதவராகவும் இருக்கின்றனர், நல்ல முறையில் செல்கின்றனர் ஆனால் வழியில் வரக்கூடிய காட்சிகளில் கவர்ச்சிக்கப்பட்டு விடுகின்றனர். தன்னுடைய முயற்சியும் செய்கின்றனர் ஆயினும் பார்க்கக்கூடிய சமஸ்காரம் அதிகமாக உள்ளது. இது என்ன செய்து,கொண்டு இருக்கின்றனர், இதை எப்படி செய்கின்றனர், அப்படியே நாமும் செய்வோம் என்று பொறாமை கொள்கின்றனர். குதிரைப் படையினரிடம் காண்பதற்கு விருப்பம் கொள்ளும் கவர்ச்சி அதிகமாக உள்ளது. காலாட்படையினரிடம் ஒரு நகைச்சுவையான விஷயம் உள்ளது. விளையாட்டைப் பற்றி கூறிக் கொண்டு இருக்கிறார்கள் இல்லையா! அவர்கள் என்ன செய்கின்றார்கள்? இருப்பதோ மிகவும் சின்னஞ்சிறு விஷயம் ஆனால் அதை மிகப் பெரிய மலை ஆக்கி விடுகின்றனர். மலையை கடுகாக அல்லாமல், கடுகை மலையாக்கி அதில் தானும் குழம்பி விடுகின்றனர். ஒன்றுமே இல்லாத விஷயத்தை பெரியதாக்கி விடுகின்றனர். பிறகு அந்த உயரமான மலையைக் கண்டு தைரியம் இழந்து விடுகின்றனர். ஆயினும், நிகழ்காலம் இந்த மூன்று தரப்பினரில் பாதி பேர் தன்னை கொஞ்சம் மாற்றிக் கொண்டு இருக்கின்றனர். ஆகையால்,

அவர்களுடைய தைரியம், உல்லாசம் மற்றும் முன் வைக்கும் அடியைக் கண்டு பாப்தாதா ஆனந்தம் அடைகின்றார்கள். ஒவ்வொருவரிடமும் யார் யார் மகாரதி, குதிரைப்படை, காலாட்படையைச் சேர்ந்தவர்கள் எனக் கேட்டால் கூற முடியுமா? நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋❋

# 17.04.1969-2 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பிராமணர்களின் முக்கியமான சமஸ்காரம் -சர்வம்ச தியாகி!

விசேஷமாக, எதற்காக உங்கள் அனைவரின் குழு கூட்டப்பட்டுள்ளது? குழுவிற்காக முக்கியமாக நான்கு விஷயங்கள் அவசியமானவை. அவை:

1. தங்களுக்குள் ஒருவர் மீது ஒருவர் அன்பு கொள்வது, 2. நெருக்கமான சம்பந்தம், 3. சேவையினுடைய பொறுப்பு மற்றும் 4. ஞானம், யோகத்தின் தாரணையினுடைய சான்று! இந்த நான்கு விஷயங்களிலும் தயாராக இருக்கின்றீர்களா? ஒருவருக்கொருவர் அன்பானவராக எப்படி ஆகுவது? அன்பானவர் ஆவதற்கான சாதனம் என்ன? ஒருவரை ஒருவர் விலகிப்போவதற்கான காரணம் என்னவென்றால் ஒருவர் மற்றவரது சமஸ்காரம், ஒருவர் மற்றொருவரது சங்கல்பம் இணைவதில்லை! அனைவருடைய சங்கல்பம், சமஸ்காரம் ஒருமித்ததாக எப்படி ஆக முடியும்? (ஒவ்வொருவருடைய சமஸ்காரம் வெவ்வேறாக உள்ளது) சங்கமயுக பிராமணர்களின் முக்கியமான சமஸ்காரம் எது? சாகார ரூபத்திடம் முக்கியமான சமஸ்காரம் என்ன இருந்தது? பிரம்மாவின் சமஸ்காரம் எதுவோ, அதுவே பிராமணர்களின் சமஸ்காரம் ஆகும். சாகார பிரம்மாவினுடைய முக்கியமான சமஸ்காரம் என்ன இருந்தது? பிரம்மாவிடம் அந்த சமஸ்காரத்தை முழுமையான ரூபத்தில் பார்த்திருக்கிறீர்கள். எனினும், பிராமணர்களுக்குள் அவர்களால் இயன்ற அளவே யோகம், இயன்ற அளவே சக்தி காணப்படுகின்றது. அனைத்தையும் தியாகம் செய்வதே (சர்வம்ஸ தியாகி) அவருடைய முக்கியமான சமஸ்காரமாக இருந்தது. நிர் அகங்காரி என்றாலே சர்வ அம்ஸ தியாகி ஆவதாகும், தன்னுடைய அனைத்தையுமே தியாகம் செய்து விடுவதாகும். சர்வம்ச தியாகி ஆவதினால் சர்வகுணங்களும் வந்து விடுகின்றன. பிறருடைய அவகுணங்களைப் பார்க்காமல் இருப்பதுவும் தியாகமே ஆகும். தியாகம் செய்யும் பயிற்சி இருந்தால்

இதையும் தியாகம் செய்ய முடியும். சர்வம்ச தியாகி என்றால் தேகத்தின் உணர்வையும் தியாகம் செய்வது ஆகும். ஆதலால், பிராமணர்களின் முக்கியமான சமஸ்காரம் சர்வம்ச தியாகி என்பதாகும். இந்தத் தியாகத்தினால் முக்கியமாக எந்த கணங்கள் வருகின்றன? சரளத் தன்மை மற்றும் சகிப்புத் தன்மை வருகின்றன. யாரிடம் சரளத் தன்மை மற்றும் சகிப்புத் தன்மை இருக்குமோ அவர்கள் பிறரை அவசியம் கவர்ந்து கர்ப்பார்கள். மேலும் பிறருக்கு அன்பானவராகவும் ஆக முடியும். ஒருவேளை சரளத்தன்மை இல்லையெனில் அன்பும் இருக்கமுடியாது. ஒருவருக்கொருவர் அன்பானவர் ஆவதற்கான வழி இதுவேயாகும். ஒன்று தேக சகிதம் சர்வம்ச தியாகி ஆவது. இந்த சர்வம்ச தியாகத்தினால் சரளத்தன்மை, சகிப்புத்தன்மை தானே வந்து விடும். சர்வம்ச தியாகியின் அடையாளமே சரளத்தன்மை மற்றும் சகிப்புத்தன்மை ஆகும். சாகார ரூபத்தில் கூட எந்தளவு ஞானம் நிறைந்தவராக (பிரம்மாபாபா) இருந்தாரோ அந்தளவு சரள சுபாவம் உடையவராகவும் இருந்ததைக் கண்டீர்கள் இல்லையா? இந்த சரளத்தன்மையையே குழந்தைப் பருவ சமஸ்காரம் என்று சொல்லப்படுகின்றது. பெரியவருக்குப் பெரியவராக, குழந்தைக்குக் குழந்தையாக இருந்தார்.

உங்கள் அனைவருடைய நடத்தை தந்தை மற்றும் தாதாவின் சித்திரத்தை வெளிப்படுத்தக்கூடியதாக இருக்க வேண்டும். சொல்வதால் அல்லாமல், நடத்தை மூலம் சித்திரம் வெளிப்படும். அத்தகைய நடத்தை இப்பொழுது இருக்கிறதா? உங்களுடைய நடத்தை மூலம் பாப்தாதாவின் சித்திரம் பார்ப்பதற்குத் தெரிகிறதா? பார்ப்பதற்குத் தெரிகிறது ஆனால் அவ்வப்பொழுதே தெரிகிறது. எப்பொழுது அந்த ஸ்திதியில் இருந்து சேவை செய்கின்றீர்களோ அப்பொழுது உங்களுடைய வார்த்தை மூலம், முகத்தின் மூலம் இவர்களுக்கு ஞானம் கொடுக்கக்கூடியவர் மிக உயர்ந்தவர் என்று புரிந்து கொள்வார்கள். உங்களுடைய நடத்தை மூலம் பாப்தாதாவின் சித்திரத்தைக் காண்கின்றோம் என்று சொல்கிறார்கள் இல்லையா? ஆனால் அவ்வப்பொழுதே தெரிகின்றது. நீங்களும் புகைப்படக் கருவியாக (Camera) இருக்கின்றீர்கள். உங்களுடைய புகைப்படக் கருவியில் பாப்தாதாவினுடைய சித்திரம் பதிவாகியுள்ளது. அதை அவ்வப்பொழுது காண்பிக்கின்றீர்கள், ஏன்? அதே சித்திரத்தை நடத்தை

மூலம் ஏன் சதா காண்பிப்பதிலை? (முயற்சி நடந்துகொண்டு இருக்கிறது) இந்த முயற்சி என்ற வார்த்தை எதுவரை இருக்கப்போகிறது? இப்பொழுது எவ்வளவு காலம் முயற்சி செய்ய வேண்டும்? நாங்கள் முயற்சியாளர்களாக இருக்கின்றோம் என்று இறுதிவரை கூறிக் கொண்டே இருக்கப் போகிறீர்களா என்ன? இப்போது எவ்வாறு கூறிக் கொண்டு இருக்கின்றீர்களோ அவ்வாறே இறுதிவரை கூறுவீர்களா? முயற்சி என்ற வார்த்தை கூட இப்போது மாற வேண்டும். இறுதிவரை முயற்சியாளர்களாக இருப்பீர்கள் ஆனால் அந்த முயற்சியானது இப்பொழுது கூறுவது போல் இருக்காது. முயற்சி என்பதன் அர்த்தமே ஒருமுறை ஏற்பட்ட தவறு பிறகு இன்னொரு முறை அது ஏற்படாமல் இருப்பதே ஆகும். அத்தகைய முயற்சி செய்பவராக விளங்குகிறீர்களா? முயற்சி என்றாலே நடைமுறையில் கொண்டுவருவது ஆகும். ஒரே தவறு மீண்டும் மீண்டும் ஏற்பட்டால் அதை முயற்சி செய்தல் என்று எவ்வாறு சொல்ல முடியும். இவ்விதமான முயற்சி கூடாது ஆனால் முயற்சி செய்ய வேண்டும் என்ற லட்சியம் இருக்க வேண்டும்.

ஒருவருக்கொருவர் அன்பானவராக எப்படி ஆக முடியும்? கடிதப் போக்குவரத்து செய்வதாலோ, குழுவாக ஒன்றுகூடுவதாலோ மட்டும் ஆக முடியாது. இது ஸ்தூலமான விஷயமாகும். எப்போது சமஸ்காரம் மற்றும் சங்கல்பங்கள் ஒருவருக்கொருவர் ஒத்துப்போகுமோ அப்போதே ஒருவர் பிறருக்கு அன்பானவர் ஆக முடியும்! அதற்கான வழியும் உரைத்தாயிற்று. (சர்வம்ச தியாகி). சர்வம்ச தியாகியின் அடையாளம் என்னவாக இருக்கும்? (சரளத்தன்மை, சகிப்புத்தன்மை). இந்த விஷயங்களை எப்போது தாரணை செய்வீர்களோ அப்போதே அன்பானவர் ஆவீர்கள். சரளத்தன்மையைக் கொண்டு வருவதற்காக நிகழ்காலத்தில் ஒரு விஷயத்திற்கு மட்டும் அவசியம் கவனம் கொடுக்க வேண்டும். தற்காலம் இருக்கக்கூடிய ஸ்திதி, ஸ்துதியின் (புகழ்) ஆதாரத்திலேயே ஏற்படுகிறது என்று நிகழ்காலத்தில் பார்க்கப்பட்டது. புகழ்ச்சி மற்றும் இகழ்ச்சி ஆகிய இரு வார்த்தைகள் இருக்கின்றன அல்லவா! நிகழ்காலத்தில் புகழின் ஆதாரத்திலேயே ஸ்திதி உருவாகின்றது. அதாவது, என்ன செயல் செய்கின்றனரோ அதன் பலனைப் பெறும் விருப்பம் அல்லது ஆசை உள்ளது. கடமையின் பலனைப் பெறும் விருப்பம் அதிகமாகக் கொள்கின்றீர்கள்.

புகழ் கிடைக்கவில்லை எனில் ஸ்திதியும் இருப்பதில்லை. புகழ் கிடைத்தால் ஸ்திதியும் இருக்கிறது. ஒருவேளை இகழ்ச்சி ஏற்படுகிறது எனில் அனாதை ஆகி விடுகின்றனர். தனது ஸ்திதியை விட்டுவிடுகின்றனர். அனைத்து செல்வத்தின் அதிபதியையும் (தந்தையையும்) மறந்து விடுகின்றனர். எனக்கு புகழ் கிடைக்க வேண்டும் என ஒருபோதும் எண்ண வேண்டாம். புகழின் ஆதாரத்தில் ஸ்திதியை உருவாக்கக் கூடாது. புகழின் ஆதாரத்தில் ஸ்திதியை உருவாக்கினால் தடுமாறிக் கொண்டே இருப்பார்கள். யார் தனித்தன்மையுடன் விளங்குகின்றார்களோ அவர்களுடைய பிரபாவம் (மகிமை) நாளுக்கு நாள் தானே வெளிப்படும். அந்த மகிமையில் தானே பிரபாவிக்கப்பட்டு விடக்கூடாது. இங்கேயே பலனை ஏற்றுக் கொண்டால் எதிர்காலத்தில் கிடைக்க வேண்டிய பலன் முடிந்து விடும். எவ்வளவு மறைவாக முயற்சி செய்யப்படுகின்றதோ, அவ்வளவு குப்தமான உதவியாளராக ஆக முடியும். மேலும், அவ்வளவே குப்தமான பதவியும் கிடைக்கின்றது. பிறர் எவ்வளவு தான் மகிமை செய்தாலும் அவர்களுடைய மகிமையின் பிரபாவத்தில், தான் அதன் தாக்கத்தில் வந்து விடக்கூடாது. எந்த ஒரு காரியம் செய்யும்போதும் சங்கமத்தில் (நடுநிலையில்) நிலைத்திருந்து முடிவெடுக்க வேண்டும். ஏனெனில், நீங்கள் அனைவரும் தங்களை சங்கமயுகத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறிக் கொள்கிறீர்கள். ஆகையால், ஒவ்வொரு விஷயத்திற்கும் இரண்டு பக்கங்கள் இருக்கின்றன. அவ்விரு பக்கங்களின் சங்கமத்தில் (நடுவில்) இருந்து முடிவெடுக்க வேண்டும். அந்தப் பக்கமும் அதிகம் ஆகி விடக்கூடாது, இந்தப்பக்கமும் அதிகம் ஆகி விடக்கூடாது. சங்கமத்தில் இருக்க வேண்டும். சங்கமயுக பிராமணர்களாகிய உங்களுடைய காரியங்கள் என்ன நடக்கின்றனவோ அவை நடுநிலையில் இல்லை. இந்தப்பக்கமோ அல்லது அந்தப்பக்கமோ சென்று விடுகின்றது. எவ்வாறு நீங்கள் இல்லற மார்க்கத்தில் இருக்கின்றீர்கள் மற்றும் சேவையிலும் உதவியாளர்களாக இருக்கின்றீர்கள் எனில் இரண்டு பக்கமும் சமாளிப்பதற்காக நடுவில் இருக்க வேண்டும். இரண்டினுடைய நடுநிலையில் நிலைத்து இருக்க வேண்டும். சங்கமத்தில் இருந்தால்தான் இரண்டையும் சரியாகச் செய்வீர்கள். உங்களுடைய உணவுப் பழக்கவழக்கம், ஆடை அணிதல் முதலிய அனைத்தும்

நடுநிலையில்தான் இருக்கின்றன. இவ்விதமே முடிவும் எடுக்கின்றீர்கள். நடுநிலையில் நிலைத்திருந்து, இரு பக்கங்களின் விஷயங்களுக்கான முடிவெடுத்த பிறகு, செயல்பட வேண்டும். சில விஷயங்களில் உங்களது கவனம் விசேஷமாக ஒருபுறம் மட்டும் செல்வது தென்படுகின்றது ஆனால் இருக்க வேண்டியதோ நடுநிலையில். நடுநிலை என்றால் விதை சொருபம், புள்ளி சொருபம் ஆகும். எவ்வாறு விதை சூட்சுமமாக இருக்கின்றதோ, அவ்வாறு நடுநிலையும் சூட்சுமமானதாகும். அதில் நிலைத்திருப்பதற்கான தைரியம் வேண்டும் மேலும் உபாயம் தெரிந்து இருக்க வேண்டும்.

எங்கு குழந்தையாகி செயல்பட வேண்டும், எங்கு எஜமானராகி செயல்பட வேண்டும் என்ற லட்சியமும் கொடுக்கப்பட்டு உள்ளது. எங்கு எஜமானர் ஆக வேண்டுமோ அங்கு குழந்தை ஆகக்கூடாது. எங்கு குழந்தை ஆக வேண்டுமோ அங்கு எஜமானர் ஆகக்கூடாது. இதுகூட பலரால் தவறாகப் புரிந்து கொள்ளப்படுகின்றது. இந்த சோதனையும் அதிகம் செய்ய வேண்டும். குழந்தை நிலையும் முழுமையானதாக, தலைவன் என்ற நிலையும் முழுமையானதாக இருக்க வேண்டும். ஆதலால், சங்கமத்தில் நிலைக்க வேண்டும் என்று சொல்லப்பட்டது. குழந்தையாக மட்டும் ஆகக் கூடாது. இரண்டு குணங்களும் இருந்தால் அனைத்தையும் சரிவர செயல்படுத்த முடியும். குழந்தை நிலை என்றால் நிர்சங்கல்பம் உடையவர் ஆகி, என்ன கட்டளை கிடைக்கின்றதோ, வழிகாட்டுதல் கிடைக்கின்றதோ அதன்படி நடப்பது ஆகும். எஜமானர் என்றால் தன்னுடைய கருத்தை வெளிப்படுத்துவதாகும். எந்த இடத்தில் தலைவன் ஆக வேண்டும் என்ற அந்த இடத்தையும் விஷயத்தையும் பார்க்க வேண்டும். அனைத்து இடங்களிலும் எஜமானர் ஆகக்கூடாது, மேலும் தலைவனாக மட்டும் ஆகவும் கூடாது. எங்கு குழந்தை ஆக வேண்டுமோ அங்கு ஒருவேளை எஜமானர் ஆகி விட்டால் பிறகு சமஸ்காரங்களுடைய மோதல் ஏற்பட்டுவிடும். ஆகையால் தங்களுக்குள் ஒருவருக்கொருவர் உதவியாளர் ஆவதற்காக இரண்டு விஷயங்களையும் தாரணை செய்ய வேண்டும். இல்லையெனில் சமஸ்காரங்களின் மோதல் ஏற்படும். எங்கு குழந்தை ஆக வேண்டுமோ அங்கு தலைவன் ஆகி விடுகின்றனர். இருவர் தலைவன் ஆவதினால் பிறகு சமஸ்காரங்களின் மோதல் ஏற்படுகின்றது. தலைவனாகவும் ஆக வேண்டும், குழந்தையாகவும்

ஆக வேண்டும். கருத்தை வெளிப்படுத்தும்போது எஜமானர் ஆக வேண்டும். பிறகு எப்பொழுது முடிவெடுக்கப்படுகிறதோ, அப்பொழுது குழந்தை ஆகி விட வேண்டும். எந்த சமயம் குழந்தை ஆக வேண்டும், எந்த சமயம் தலைவன் ஆக வேண்டும் என்பதைக் கூட புத்தியால் தீர்மானிக்க வேண்டும். எந்த சமயம் எந்த சொரூபத்தை தாரணை செய்ய வேண்டும் என்பதைக் கூட சிந்திக்க வேண்டும். பலவேடதாரி ஆக வேண்டும் இல்லையா! எப்பொழுதும் ஒரே ரூபத்தில் இருத்தல் கூடாது. எப்படி சமயமோ அப்படி ரூபம் தரிக்க வேண்டும் எதிர்மறையான விதத்தில் பலவேடதாரி ஆகக்கூடாது, சரியான விதத்தில் ஆக வேண்டும்.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋❋

## 08.05.1969 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# மனம், சொல், செயலை சீர் செய்வதற்கான யுக்தி!

இன்று தந்தை முக்கியமாக, ஒரு விசேஷ காரியத்திற்காக வந்திருக்கின்றார். இங்கு அமர்ந்திருக்கும் அனைவரும் தன்னை நிச்சய புத்தி உடையவர் என புரிந்துள்ளீர்களா? (வரிசைக்கிரமம் உள்ளது) வரிசைக்கிரமமாக இருந்தாலும் நிச்சயபுத்தி உடையவராக இருக்கின்றீர்களா? நிச்சய புத்தி உடையவர் என்ற பட்டம் கொடுக்கலாமா? நம்பிக்கையில் வரிசைக்கிரமம் உள்ளதா அல்லது முயற்சியில் வரிசைக்கிரமம் உள்ளதா? நம்பிக்கையில் ஒருபோதும் சதவிகிதம் இருக்காது. நம்பிக்கையில் வரிசைக்கிரமும் இருப்பதில்லை. முயற்சியின் நிலையில் எண் (Number) இருக்க முடியும். நிச்சய புத்தியில் எண் இருக்காது. இருந்தால், ஒன்று நிச்சயம் இருக்கும் அல்லது சந்தேகம் இருக்கும். மனதிலோ வார்த்தையிலோ அல்லது செயலிலோ ஒருவேளை கொஞ்சம் சந்தேகம் வந்தாலும், மனதின் ஒரு எண்ணம் சந்தேகமானதாக இருக்கிறது என்றாலும் சந்தேகபுத்தி உடையவர் என்றே சொல்ல முடியும். அத்தகைய நிச்சய புத்தி உடையவராக அனைவரும் இருக்கின்றீர்களா? நிச்சயபுத்தியை எவ்வாறு அறிய முடியும்? அறிவதற்காக ஏதேனும் முக்கிய விஷயம் உள்ளதா? உங்கள் எதிரில் புதியவர் எவரேனும் வந்தால் அவரது சரித்திரம் பற்றி நீங்கள் அறிந்திருக்கவில்லை எனில் அவரை எவ்வாறு கண்டறிய முடியும்? (அதிர்வலைகள் வரும்). எந்த அதிர்வலைகள் வந்தால் அவர்களை அறிய முடியும்? இப்பொழுது இந்தப் பயிற்சி செய்ய வேண்டும். ஏனெனில் தற்போது பிரஜைகள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றனர். ஆகையால் பிரஜைகள் மற்றும் அருகாமையில் உள்ளவர்களைக் கண்டறிவதற்காக கண்டறியும் பயிற்சி மிக தேவையாக உள்ளது.

முக்கியமான விஷயம் என்னவென்றால் அவர்களுடைய கண்கள் மூலம் அத்தகைய அனுபவம் ஏற்படும் -எவ்வாறு ஒரு இலக்கை நோக்கி ஒருவருக்கு விசேஷ கவனம் இருக்கிறது எனில், அவரது கண்கள் எவ்வாறு இருக்கும்? அம்பு எய்யக்கூடியவர்கள் அல்லது இலக்கைக் குறி பார்த்து தாக்கக்கூடிய இராணுவத்தினர் முழுமையாக இலக்கை குறி பார்ப்பார்கள். அவர்களுடைய கண்கள், அவர்களுடைய விருத்தி அந்த சமயம் ஒரே இலக்கை நோக்கி மட்டுமே இருக்கும். அவ்வாறே, உறுதியான நிச்சயபுத்தி உடையவர்களுடைய முகத்தின் மூலம் அவர் இலக்கை நோக்கி கவனம் செலுத்துபவர் என்ற உணர்வு ஏற்படும். ஒரு இலக்கைப் பாருங்கள் அதாவது புள்ளியைப் பாருங்கள் என்ற முக்கிய போதனை உங்களுக்குக் கிடைத்திருக்கிறது. புள்ளியைப் பார்ப்பது கூட இலக்கைப் பார்ப்பதாகும். எனவே, நிச்சயபுத்தி உடையவர்களுடைய அடையாளம் என்னவாக இருக்கும்? முழுமையான குறிக்கோள் இருக்கும். இலக்கு கொஞ்சம் தவறினாலும் பிறகு தோல்வி ஏற்பட்டுவிடும். நிச்சயபுத்தி உடையவர்கள் கண்கள் மூலம் பார்த்துக் கொண்டிருந்தாலும் வேறு எதையோ பார்த்துக் கொண்டிருப்பதாக உணர்வு ஏற்படும். அதுவே அவர்களுடைய வார்த்தையாகவும் வெளிப்படும். இது தான் நிச்சயபுத்தி உடையவர்களின் அடையாளமாகும். குறிக்கோளை நோக்கி இருக்கும் நிலையானது போதை அளிக்கக் கூடியது. நிச்சயபுத்தி உடையவர்களை அவர்களுடைய குறிக்கோளை வைத்து மற்றும் போதை நிறைந்த ஸ்திதியை வைத்து கண்டறிய முடியும். இந்த பயிற்சியை இப்பொழுது செய்யுங்கள். பிறகு, தான் கண்டறிந்தது சரியாக உள்ளதா அல்லது இல்லையா என்று தீர்மானம் செய்யுங்கள். பிறகு, இந்த பயிற்சி செய்து செய்து கண்டறிதல் யதார்த்தம் ஆகி விடும். திருஷ்டியில் சிருஷ்டி என்று சொல்லப்படுகிறது இல்லையா! நீங்கள் அவர்களுடைய திருஷ்டி மூலம் அவர்களுடைய முழுமையான சிருஷ்டியை அறிய முடியும்.

<u>மனம், சொல், செயல் ஆகிய மூன்றையும் சரி செய்வதற்காக மூன்று வார்த்தைகளை மட்டும் நினைவில் கொள்ள வேண்டும். அந்த மூன்று வார்த்தைகள் எவை?</u> அந்த மூன்று வார்த்தைகள் தினந்தோறும் முரளியில் கூட வருகின்றன. அவை, <u>மனதிற்காக நிராகாரி, வார்த்தைகளுக்காக நிர்அகங்காரி, கர்மத்திற்காக நிர்விகாரி என்பதாகும்.</u> தேவதைகளுடைய வார்த்தை மற்றும் செயலுக்கான

சான்று இவை தானே இல்லையா! ஆதலால், நிராகாரி, நிர்அகங்காரி, நிர்விகாரி ஆகிய இந்த மூன்று விஷயங்கள் ஒருவேளை நினைவில் இருந்தது எனில் மனம், வார்த்தை, செயல் ஆகிய மூன்றுமே மிகச் சிறந்ததாக இருக்கும். எவ்வளவு நிராகாரி நிலையில் இருப்பீர்களோ, அவ்வளவே நிர்அகங்காரி மற்றும் நிர்விகாரியாகவும் இருப்பீர்கள். விகாரத்தினுடைய எந்த துர்நாற்றமும் இருக்காது. இதுவே முக்கியமான முயற்சியாகும். இந்த மூன்று விஷயங்களை நினைவில் வைப்பதால் என்னவாக ஆவீர்கள்? திரிகாலதர்சியாகவும் ஆகி விடுவீர்கள். மேலும் எதிர்காலத்தில் விஸ்வத்தின் எஜமானராகவும் ஆகி விடுவீர்கள். இப்பொழுது திரிலோகநாதன் மற்றும் திரிகாலதர்சி ஆவீர்கள். திரிலோக நாதன் என்பதின் அர்த்தம் புரிய வைக்கப்பட்டிருக்கிறது. யார் மூன்று உலகங்களின் ஞானத்தை நினைவு செய்கின்றாரோ அவரே திரிலோகநாதன் என்று அழைக்கப்படுகின்றனர். ஏனெனில் தந்தையுடன் இணைந்து குழந்தைகள் நீங்கள் அனைவரும் இருக்கின்றீர்கள். நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 17.05.1969 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# மந்திரக் கண்ணாடி!

இந்த அவ்யக்த சந்திப்பினுடைய மதிப்பை அறிந்துள்ளீர்களா? அவ்யக்த ரூபத்தில் சந்திப்பதற்கும் வியக்த ரூபத்தில் சந்திப்பதற்கும் வித்தியாசம் உள்ளது. வியக்த உணர்வை விட்டு விடுதலே அவ்யக்த சந்திப்பின் மதிப்பாகும். யார் எந்த அளவிற்கு இந்த மதிப்பைக் கொடுக்கிறார்களோ, அந்த அளவே விலை மதிப்பற்ற அவ்யக்த சந்திப்பினை அனுபவம் செய்கின்றார்கள். நான் எந்தளவு, எவ்வளவு சமயம் கொடுத்திருக்கிறேன் என்று இப்போது ஒவ்வொருவரும் தன்னைத்தான் கேட்க வேண்டும். நிகழ்காலத்தில் அவ்யக்த நிலையில் நிலைத்திருப்பதுவே அவசியமானதாக உள்ளது ஆனால், முடிவு (Result) என்னவாக இருக்கிறது என்பதை ஒவ்வொருவரும் தானே அறிந்து கொள்ள முடியும் மேலும் பிறரது முடிவையும் கூட நல்ல முறையில் அறிய முடியும். ஆகையால் அவ்யக்த ஸ்திதியை கொண்டு வருவதற்கான அவசியம் என்ன இருக்கிறதோ அதைப் பூர்த்தி செய்ய வேண்டும். உங்கள் அனைவருடைய வாழ்வில் அவ்யக்த ஸ்திதி இருக்கிறது என்று எவ்வாறு அறிய இயலும்? அவர்களது ஒவ்வொரு கர்மத்திலும் அலௌகீக தன்மை; அடுத்து, எந்த ஒரு கர்மம் செய்தாலும் கர்ம இந்திரியங்களின் மூலம் அதீந்திரிய சுகத்தினுடைய அனுபவம் ஏற்படும். அவர்களது கண்களில், அவர்களது நடத்தையில், ஒவ்வொரு தருணமும் அதீந்திரிய சுகம் நிறைந்திருக்கும். அலௌகீகத் தன்மை மற்றும் அதீந்திரிய சுகத்தினுடைய பிரகாசம் அவர்களது ஒவ்வொரு கர்மத்திலும் வெளிப்படும். இதன் மூலம் அவர்கள் வியக்தத்தில் இருந்தாலும் அவ்யக்த நிலையில் நிலைத்திருக்கின்றனர் என்பது தெரிந்து விடும். ஒருவேளை இந்த இரண்டு விஷயங்களை தன்னுடைய கர்மத்தில் காண்கிறீர்கள் எனில் அவ்யக்த நிலையில் நிலைத்திருக்கிறீர்கள் என்று புரிந்து கொள்ள வேண்டும். ஒருவேளை இல்லையெனில், பிறகு குறை உள்ளது எனப் புரிந்து முயற்சி செய்ய வேண்டும்.

அவ்யக்த நிலையை பிராப்தியாக அடைவதற்காக ஆரம்பத்திலிருந்து ஒரு சுலோகத்தை சொல்லி வந்திருக்கிறீர்கள். ஒருவேளை அது நினைவு இருந்தது என்றால் ஒருபோதும் எந்த மாயாவினுடைய தடைகளிலும் தோல்வி அடைய மாட்டீர்கள். அத்தகைய சர்வோத்தம சுலோகம் ஒவ்வொருவருக்கும் நினைவு இருக்கிறதா? ஒவ்வொரு முரளியில் வெவ்வேறு விதத்தில் அந்த சுலோகம் வருகிறது. மன்மனாபவ! நான் பாபாவினுடைய குழந்தையாக இருக்கிறேன். இது இருக்கத்தான் செய்கிறது எனினும் முயற்சி செய்யும்போது மாயாவின் தடை என்ன வருகிறதோ அதன் மீது வெற்றியை பிராப்தியாக அடைவதற்காக உள்ள சுலோகம் எது? சொர்க்கத்தின் சுயராஜ்யம் நம்முடைய பிறப்புரிமையாகும். மேலும் சங்கமயுகத்தில் தந்தையினுடைய பொக்கிஷம் பிறப்புரிமையாக உள்ளது. இந்த சுலோகத்தை மறந்து விட்டீர்கள். உரிமையை மறந்து விட்டீர்கள் எனில் என்னவாகும்? நாம் எந்தெந்த பொருளின் அதிகாரியாக இருக்கிறோம் என்பதை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள் ஆனால் அந்த அனைத்து பொருட்களும் நம்முடைய பிறப்புரிமையாகும். தன்னை உரிமையுள்ள அதிகாரி எனப் புரிந்து கொண்டால் மாயாவின் அடிமை ஆகமாட்டீர்கள். அடிமை ஆவதிலிருந்து தப்பிப்பதற்காக தன்னை அதிகாரி என புரிந்து கொள்ள வேண்டும். முதலில் சங்கமயுகத்தினுடைய சுகத்தின் அதிகாரியாக இருக்கிறோம். பிறகு எதிர்காலத்தில் சொர்க்கத்தினுடைய சுகங்களில் அதிகாரியாக ஆகின்றோம். தனது அதிகாரத்தை மறவாதீர்கள். தனது அதிகாரத்தை மறக்கும்பொழுதே ஏதாவது ஒரு விஷயத்திற்கு அடிமை ஆகின்றீர்கள். மேலும் அடிமையாக இருப்பவர்கள் ஒருபோதும் சுகம் நிறைந்தவர்களாக இருக்க முடியாது. அடிமையாக இருப்பவர்கள் ஒவ்வொரு விஷயத்திலும் மனம், சொல், செயலில் துக்கத்தையே அடைகின்றனர் மேலும் அதிகாரியாக இருப்பவர்கள் அதிகாரத்தின் போதை மற்றும் குஷியில் இருக்கின்றனர். குஷியுடன் இருக்ககூடிய காரணத்தினால் சுகங்களின் வளம் அவர்களது கழுத்தில் மாலையாக அணியப்பட்டிருக்கும். சத்யுக சுகங்களைப் பற்றித் தெரியுமா? சத்யுகத்தில் விளையாட்டுப் பொருட்கள் எப்படி இருக்கும்? அங்கு ரத்தினங்களோடு விளையாடுவீர்கள். நீங்கள் சத்யுக சுகங்களின் பட்டியல் மற்றும் கலியுக துக்கங்களின் பட்டியலை உருவாக்கினீர்கள் ஆனால் சங்கமயுகத்தினுடைய சுகங்களின்

பட்டியலை உருவாக்கினால் அதை விட இரு மடங்கு அதிகமாக இருக்கும். அதே சத்யுக சமஸ்காரத்தை இப்பொழுது நிறைக்க வேண்டும். சிறு குழந்தைகள் முழு நாளையும் விளையாட்டிலேயே மகிழ்வுடன் கழிப்பர். வேறு எந்த விஷயத்தினுடைய கவலையும் இருக்காது. இவ்விதமே ஒவ்வொரு நொடியும் சுகங்களின் பட்டியல், ரத்தினங்களின் பட்டியலை புத்தியில் ஓடச்செய்தால் அதாவது இந்த சுகங்கள் என்ற ரத்தினங்களோடு விளையாடினால் ஒருபொழுதும் நாடகம் என்ற விளையாட்டில் தோல்வி ஏற்படாது. இப்பொழுதோ, அவ்வப்பொழுது தோல்வி ஏற்பட்டு விடுகிறது.

பாப்தாதாவிற்கு குழந்தைகள் மீது எவ்வளவு அன்பு இருக்கிறது? பாப்தாதாவினுடைய அன்பு அழிவற்றது. மேலும் குழந்தைகளுடைய அன்பு சில நேரம் ஒருமாதிரியாகவும், சில நேரம் வேறுவிதமாகவும் உள்ளது, ஒரே மாதிரியாக இல்லை. அவ்வப்போது அதிக அன்பு மூர்த்தியாகத் தென்படுகின்றனர், அவ்வப்போது அன்பு மூர்த்திக்குப் பதிலாக என்ன மூர்த்தியாக ஆகி விடுகின்றனர்? அவ்வப்போது சினேகியாகவும், அவ்வப்போது சினேகமற்றவராகவும் ஆகி விடுகின்றனர். தன்னுடைய தோற்றத்தைக் காண்பதற்காக தன்னிடம் என்ன இருக்க வேண்டும்? கண்ணாடி. கண்ணாடி ஒவ்வொருவரிடமும் உள்ளதா? ஒருவேளை கண்ணாடி இருந்ததெனில் தனது முகத்தைப் பார்த்துக் கொண்டே இருப்பீர்கள். மேலும் அவ்வாறு பார்ப்பதினால் என்னவெல்லாம் குறை தென்படு கிறதோ அதை நிவர்த்தி செய்து கொண்டே இருப்பீர்கள். ஒருவேளை கண்ணாடியே இல்லையெனில் குறையை நிவர்த்தி செய்ய இயலாது. ஆதலால் ஒவ்வொரு நேரமும் தன்னிடம் கண்ணாடி வைத்துக் கொள்ள வேண்டும். எனினும் நம்மிடம் கண்ணாடி உள்ளது என நினைத்துக் கொண்டிருப்பீர்கள் ஆனால் அதுவோ இடை இடையில் மறைந்து விடும் மந்திரக் கண்ணாடியாக உள்ளது. ஒரு நொடிப்பொழுதில் மறைந்து விடுகிறது. எவ்வாறு கண்ணாடி அழிவற்றதாக நிலையாக இருக்கமுடியும்? அதற்காக முக்கியமான தகுதி என்ன இருக்க வேண்டும்? யார் அர்ப்பணமாகி உள்ளனரோ அவரிடமே கண்ணாடி இருக்கும். அர்ப்பணம் ஆகவில்லையெனில் கண்ணாடியும் அழிவற்றதாக இருக்காது. கண்ணாடியை தன்னிடம் வைத்துக் கொள்வதற்காக முதலில் தன்னை முழுமையாக அர்ப்பணம் செய்யவேண்டும். இதையே சர்வஸ்வ தியாகி

என்று சொல்லப்படுகிறது. சர்வஸ்வ தியாகியிடம் கண்ணாடி இருக்கும். எவர் அவ்யக்த நிலையில் இருக்கின்றாரோ அவரே அவ்யக்தமாக சந்திக்க இயலும்.

நிகழ்காலத்தில் அவ்யக்த ஸ்திதியில் அதிகமான குறை தென்படுகின்றது. இரண்டு விஷயங்களில் சரியாக இருக்கின்றனர். மூன்றாவது விஷயத்தில் குறை உள்ளது. ஒன்று வர்ணனை செய்தல் (கதன்), இரண்டாவது கடைதல் (மந்தன்). இந்த இரண்டு விஷயங்களும் சரியாக உள்ளன அல்லவா? இவை இரண்டும் சுலபமானதாக உள்ளன. மூன்றாவது விஷயம் கொஞ்சம் சூட்சுமமானது ஆகும். நிகழ்கால முடிவைப் (Result) பார்த்தோமேயானால் கடைவதை விட வர்ணிப்பதே அதிகமாக உள்ளது. மற்றபடி, மூன்றாவது விஷயம் எது? ஒன்று கடைவது, மற்றொன்று மூழ்கி இருப்பது. அது முற்றிலும் அன்பில் மூழ்கிய நிலையாகும். நிகழ்காலத்தில் கடைதலை விட வர்ணனையே அதிகம் உள்ளது. முதல் எண்ணில் (வர்ணிப்பதில்) வெற்றியாளராக இருக்கின்றனர். இரண்டாவது எண்ணான கடைதலிலும், மூன்றாவது எண்ணான மூழ்கிய நிலையிலும் இருக்க வேண்டும். இந்த நிலையில் குறை தென்படுகின்றது. இதை நிவர்த்தி செய்ய வேண்டும். யார் அன்பில் மூழ்கிய நிலையில் இருப்பார்களே அவர்களுடைய நடத்தை மூலம் என்ன தென்படும்? அலௌகீக தன்மை மற்றும் அதிந்திரிய சுகம். மூழ்கிய நிலையில் இருப்பவர்களிடம் இந்த குணம் ஒவ்வொரு நடத்தையிலும் வெளிப்படும். ஆதலால், இந்தக் குறை என்ன உள்ளதோ அதை நிவர்த்தி செய்வதற்கான தீவிர முயற்சி செய்ய வேண்டும். அனைவரும் முயற்சியாளர்களே! அதனால் தான் இந்நிலைக்கு வந்திருக்கிறீர்கள் ஆனால் இப்போதோ வெறும் முயற்சியாளராக ஆவதற்கான சமயம் அல்ல, இப்போது தீவிர முயற்சியாளர் ஆவதற்கான சமயம் ஆகும். ஆக வேண்டியதோ தீவிர முயற்சியாளர் ஆனால் ஆவதோ முயற்சியாளர் எனில் என்ன ஆகும்? இலக்கைவிட்டு தொலைவில் பின்தங்கி விடுவீர்கள். இப்போது தீவிர முயற்சியாளர் ஆவதற்கான சமயம் நடந்து கொண்டிருக்கிறது. இதன் மூலம் எவ்வளவு லாபம் எடுத்துக் கொள்ள வேண்டுமோ, அவ்வளவு எடுக்கிறோமா அல்லது இல்லையா என்பதை ஒவ்வொரு வரும் சோதனை செய்ய வேண்டும். ஆகவே, தன்னிடம் எப்பொழுதும் கண்ணாடியை வைத்துக் கொண்டீர்கள் என்றால் குறை உடனடியாகத் தெரிந்து விடும். மேலும்

தனது முயற்சியை தீவிரப்படுத்தி முன்னேறிச் சென்று கொண்டே.இருப்பீர்கள் என்று சொல்லப்படுகிறது.

நல்லது, இன்று குமாரிகளுடைய சேவைக்கான திலகம் இடும் நாள் ஆகும். உங்களுடைய அருங்காட்சியகத்தில் மகுடாபிஷேக சித்திரம் காண்பிக்கப்பட்டுள்ளது அல்லவா? ஆனால் உங்களுடைய சேவைக்கான திலகமிடும் தினத்தில் பாருங்கள் எவ்வளவு பெரிய சபை கூடியுள்ளது! அவ்வளவு குஷி இருக்கிறதா? ஆனால் எத்தனை நபர்களுக்கு முன்னிலையில் திலகம் வைத்துக் கொள்கிறீர்களோ, அவர்கள் அனைவரும் உங்கள் அனைவரையும் கவனிப்பார்கள் என்பதை நினைவில் வைக்க வேண்டும். அனைவரின் மத்தியிலும் திலகம் இடப்படுகின்றது என்பதை மறக்க வேண்டாம். அத்தகைய தைரியசாலி ஆக வேண்டும். இந்த திலகத்திற்கு மரியாதை அளிக்க வேண்டும். திலகத்திற்கு மரியாதை அளிப்பது என்றால் பிராமண குலத்திற்கு மரியாதை அளிப்பது ஆகும். பிராமண குலத்தின் நியமம் என்ன ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கிறது அல்லவா! யார் அத்தகைய புருஷோத்தம் ஆவதற்கான தைரியம் உடையகளோ அவர்களே திலகம் வைத்துக் கொள்ள முடியும். இந்த திலகம் சாதாரணமானது அல்ல. அங்கும் இவ்வளவு பெரிய சபையைக் காண்பீர்கள். கன்னிகைகளுடைய சேவைக்கான திலகம் இடப்படும் தினத்தில் பிராமணர்களாகிய நீங்க அனைவரும் ஒன்றுகூடி இருக்கிறீர்கள். சேவை செய்யக் கூடியவர்கள் ஒரு விசேஷமான குணத்தின் மீது கவனம் வைக்க வேண்டியதாக உள்ளது. யார் அனைத்து துறைகளிலும் சேவை செய்யக்கூடியவர்களோ அவர்கள் சூழ்நிலை எத்தகையதாக இருந்தாலும் தனது ஸ்திதியை ஏக்ரஸ் ஆக வைத்துக் கொள்ள வேண்டும் என்ற விஷயத்தில் விசேஷ கவனம் செலுத்த வேண்டும். அப்போதே அனைத்து சேவைகளினுடைய வெற்றி கிடைக்கும்.

குமாரிகளுக்காக நடைபெற இருக்கும் இரண்டாம் பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ளவிருக்கும் அனைவருக்கும் பாப்தாதா திலகமிட்டு, இனிப்பு வழங்கி உரைத்ததாவது:

இன்று அனைவருடனும் கண்கள் மூலம் சந்திப்பு நிகழ்ந்தது. தொலைவில் இருந்தபோதிலும் அவரவர் தகுதிக்கேற்ப, அவரவர் சக்திக்கேற்ப பாப்தாதாவின் அருகாமையில் இருக்கின்றனர். ஒருவர்

## 1969 அவ்யக்த முரளிகள்!

எவ்வளவு தான் தொலைவில் இருந்தபோதிலும் தன்னுடைய அன்பினால் பாப்தாதாவின் கண்களில் நிறைத்திருக்கின்றார். ஆகையாலேயே, கண்மணி என்று கூறுகிறார்கள். கண்மணிகளோடு இன்று கண்களின் மூலம் சந்திப்பு செய்துகொண்டு இருக்கின்றார்கள். ஒருவரை விட ஒருவர் என அனைவருமே அன்பிற்குரியவர்கள் தான். சாகாரத்தில் சமயம் வாய்த்தபோதெல்லாம். தொலைவில் இருந்தபடி சந்திப்பு மட்டும் செய்யும்படியான காலம் வரும் என்கிற அறிவிப்பு குழந்தைகளுக்குக் கிடைத்துக் கொண்டே இருந்தது, இப்போது அத்தகைய காலத்தையே பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். அனைவருடைய உள்ளமும் விரும்புகின்றது மேலும் பாப்தாதாவினுடைய உள்ளமும் விரும்புகின்றது. எனினும் அந்த காலம் இப்போது மாற்றம் அடைந்து கொண்டிருக்கிறது. காலமும், அந்த சந்திப்பின் சௌபாக்கியமும் இப்போது இல்லை. ஆதலால், இப்பொழுது அவ்யக்த உருவிலேயே அனைவருடனும் சந்திப்பு செய்து கொண்டு இருக்கின்றார்கள். நல்லது. அனைவருக்கும் வணக்கம் கூறி விடைபெறுகின்றோம்.

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

## 18.05.1969 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஆன்மீக ஞான யோகத்தின் ஜோதிடர்!

நீங்கள் அனைவரும் அழைத்தீர்களா அல்லது பாப்தாதா உங்கள் அனைவரையும் அழைத்திருக்கிறார்களா? யார் யாரை அழைத்தது? எந்தக் குழந்தைகள் தந்தையின் காரியத்தில் நிமித்தம் ஆகியுள்ளனரோ அவர்கள் நாம் ஒவ்வொரு நேரமும், ஒவ்வொரு சூழ்நிலையிலும் சதா தயார் நிலையில் மற்றும் அனைத்து சேவையும் செய்பவராக (ஆல்ரவுண்டு) இருத்தல் வேண்டும் என்ற விஷயத்தை நினைவில் வைக்க வேண்டும். ஒருவேளை இந்த இரு விஷயங்கள் அனைவரிடமும் வந்து விட்டால் சேவையினுடைய பிரமாணம் சிரேஷ்டமானதாக வெளிப்படும் ஆனால் இந்த விஷயங்கள் வரிசைக்கிரமமான முயற்சியின் அனுசாரமே உள்ளன. நான் என்ன செயல் செய்வேனோ, என்னைப் பார்த்து மற்ற அனைவரும் செய்வார்கள் என்ற இந்த சுலோகத்தை நிமித்தமாகியிருக்கும் குழந்தைகள் நீங்கள் நினைவில் கொள் வேண்டும். நாடக மேடையில் அனைவரின் முன்னிலையில் நான் நடிப்பை நடித்துக் கொண்டிருக்கின்றேன் என்று ஒவ்வொரு நேரமும் புரிந்து கொள்ளுங்கள். ஒன்று, தனக்குத் தானே ஒத்திகை பார்த்தல்; மற்றொன்று, மேடையில் அனைவரின் முன்னிலையில் நாடிப்பை நடித்தல். மேடையில் நடிப்பவர்களுக்குத் தன் மீது எவ்வளவு கவனம் இருக்கிறது! ஒவ்வொரு நடிப்பிலும் ஒவ்வொரு தருணமும் கவனம் இருக்கிறதா? கரங்கள் மீது, கால்கள் மீது, கண்கள் மீது மற்றும் அனைத்தின் மீதும் கவனம் இருக்கிறதா? ஒருவேளை ஏதாவதொரு விஷயத்தில் ஏற்ற இறக்கம் ஏற்பட்டால் நடிகரின் நடிப்பு சோபிக்காது, அவ்வாறு தன்னைப் புரிந்து கொண்டு செயல்பட வேண்டும்.

மூன்று நிமிடத்திற்கான பாடலைப் பதிவு செய்யும் போது எவ்வளவு கவனமாக இருக்கின்றனர்! நீங்கள் அனைவரும் கூட தங்களது 21-பிறவிகளுக்கானவற்றை பதிவு செய்து கொண்டு இருக்கின்றீர்கள்.

பதிவு செய்யும் நேரத்தில் மிகுந்த கவனம் வைக்க வேண்டும். பதிவு செய்யும்போது சிறிது ஏற்ற இறக்கம் ஏற்பட்டாலும் அந்த ஒலிநாடா உபயோகமற்றதாக ஆகி விடும். 21-பிறவிகளுக்காக சத்யுக ராஜ்யத்திற்காக நீங்கள் செய்யும் பதிவும் உபயோகமற்றதாக ஆகி விடக் கூடாது. சரியாகப் பதியவில்லையெனில் பிறகு தூரம் சென்று விடுவர். நம்முடைய ஒவ்வொரு செயலின் மீதும் அனைவரின் கண்கள் இருக்கின்றன என்பது நினைவில் இருக்க வேண்டும். தன்னை அனைவரும் பார்த்துக் கொண்டு இருக்கின்றனர் என்பதை உணரும்போது விசேஷ கவனம் செலுத்துகின்றனர். பார்ப்பவர்கள் எவரும் இல்லையெனில் கவளக்குறைவு ஏற்படுகிறது. தனிமையில் ஏதாவது செய்தாலும் சிருஷ்டியின் முன்னிலையில் இருக்கின்றேன். முழு சிருஷ்டியின் ஆத்மாக்கள் நாலா புறங்களிலிருந்தும் என்னைப் பார்த்துக் கொண்டு இருக்கின்றனர் என எப்பொழுதுமே நினைக்க வேண்டும்.

ஒருவேளை ஒவ்வொரு மலரும் அத்தகைய சம்பூர்ணமானதாக மற்றும் அழகானதாக ஆகி விட்டால் இந்தத் தோட்டத்தின் நறுமணம் எவ்வளவு பரவும்! ஆனால் ஏன் நறுமணம் பரவுவதில்லை ? அதற்கான காரணம் என்ன? நறுமணத்தின் கூடவே அவ்வபோது, நடுவில் வேறு பல விஷயங்களும் வந்து விடுகின்றன. எவ்வளவு தான் நறுமணம் இருந்தாலும் துர்நாற்றம் நறுமணத்தைவிட பரவக்கூடியதாக இருக்கிறது. அந்த சிறிதளவு நாற்றம் நறுமணம் முழுவதையும் அகற்றிவிடுகிறது. அழிவற்ற நறுமணம் உடையவர்களே சதா ரோஜா மலர் என்று அழைக்கப்படுகிறார்கள். ஒன்று -சதா ரோஜா, இரண்டாவது வகை -ரோஜா, மூன்றாவது வகை -ஆன்மிக ரோஜா. ஆன்மிக ரோஜ மலர்களே முதல் தரமானவர்கள். ஆன்மிக ரோஜா மலர்கள் ஆத்ம ஸ்திதியில் இருப்பார்கள். மேலும் எப்போதும் பரமாத்மாவின் அருகாமையில் இருப்பார்கள். இரண்டாம் தர ரோஜா மலர்கள் சேவை மிக நன்றாக செய்கின்றனர் எனினும் ஆன்மிக ஸ்திதியில் குறை உள்ளது. சேவையில், தாரணையில் சிறப்பாக உள்ளனர். சமஸ்காரம் குளிர்ந்த தன்மையுடையதாக உள்ளது. நீங்கள் தன்னை என்ன நினைக்கின்றீர்கள், எந்த ரக மலர் என நினைக்கிறீர்கள்? முட்கள் இங்கு இருக்க முடியாது. அனைவருமே ரோஜா மலர்கள்தான் எனினும்

ரோஜாவில் கூட வித்தியாசம் உள்ளது. ஆன்மிக ரோஜா மலர்களின் அடையாளம் என்னவாக இருக்கும்?

உங்களுக்கு, நெற்றியின் ரேகையைக் கண்டறியத் தெரிகிறதா? ஜோதிடர் ஆகி விட்டீர்களா? இல்லையா? பாப்தாதா அளிக்கும் ஞானம் மற்றும் யோகத்தின் ஜோதிடக் கல்வி மூலம் என்ன பார்க்கிறீர்கள்? ஒவ்வொருவருடைய முகத்தின் மூலம், கண்கள் மூலம், நெற்றி மூலம் அறிய முடிகிறது. இதிலும் விசேஷமாக நெற்றி மற்றும் கண்கள் வாயிலாக அறிய முடிகிறது. நீங்கள் ஜோதிடர் ஆகி ஒவ்வொருவரையும் அறிய முடிகிறதா? கண்களில் மற்றும் நெற்றியில் அந்த ரேகைகள் கண்டிப்பாக இருக்கின்றன. ஒருவரைக் கண்டறிவதுவே ஜோதிடக் கல்வியாகும். இந்தக் கண்டறிவதற்கான கல்வியானது, பலரிடம் குறைவாகவே உள்ளது. ஞானம் மற்றும் யோகத்தைக் கற்கின்றனர். ஆயினும் இந்த கண்டறியக்கூடிய ஜோதிடக் கல்வியையும் அறிந்து கொள்ள வேண்டும். எவரேனும் உங்கள் முன் வந்தால் நீங்கள் ஒரு நொடியில் அவர்களுடைய மூன்று காலங்களையும் அறிந்து விட வேண்டும். அதாவது, கடந்த காலத்தில் அவர்களது வாழ்க்கை என்னவாக இருந்தது மேலும் நிகழ்காலத்தில் அவர்களது விருத்தி, திருஷ்டி மற்றும் எதிர்காலத்தில் எந்த அளவு அவர்கள் தனது பிராப்தி உருவாக்க முடியும் என்பதை அறிய வேண்டும். இதை அறியக்கூடிய பயிற்சி வேண்டும். இந்த கண்டறிவதற்கான ஞானம் மிகவும் குறைவாகவே உள்ளது. இந்தக் குறையை இப்போது நிவர்த்தி செய்ய வேண்டும். வரப்போகும் காலத்தில் ஒருவேளை இந்த குணம் இல்லாதிருந்தால், குறை இருந்தால், ஏமாற்றத்திற்கு உள்ளாவீர்கள். உள்ளொன்றும் புறமொன்றும் இருக்கும்படியான அனேக ஆத்மாக்கள் உங்கள் முன் வருவார்கள். சோதிப்பதற்காக வருவார்கள். ஏனெனில் இவர்கள் மனப்பாடம் செய்ததை மட்டும் கூறுகின்றனர் என்று பலர் நினைக்கின்றனர். அதனால் பலர் வேடம் தரித்து, செயற்கையான உருவில், அறிவதற்காக வருவார்கள். வெவ்வேறு உருவில் வருவார்கள். ஆகையால் இவர் எதற்காக வந்துள்ளார்? இவரது விருத்தி எத்தகையது? என்பதை கவனத்துடன் அறிய வேண்டும். மேலும் அசுத்தமான ஆத்மாக்களிடம் கூட மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். அத்தகையோர் அதிகமாக இருப்பார்கள். நாளுக்கு நாள் பாவ ஆத்மாக்கள் அதிகரிக்கின்றனர். ஆபத்துக்கள், அகால

மரணங்கள், பாவச் செயல்கள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. அவர்களுடைய பூர்த்தி அடையாத விருப்பங்களுக்காக அசுத்த ஆத்மாக்களின் உருவில் அலைகின்றனர். ஆதலால் இதிலும் மிக ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். யாருக்குள்ளாவது அசுத்த ஆத்மா பிரவேசித்து விட்டால் அதை விரட்டுவதற்காக புகை போடுவார்கள், சூடு வைப்பார்கள், மிளகாய் வற்றலை உண்ணக் கொடுப்பார்கள். நீங்கள் அனைவரும் யோக அக்னியைப் பயன்படுத்த வேண்டும். ஒவ்வொரு கர்மேந்திரியமாக யோக அக்னியில் எரிக்க வேண்டும். பிறகு எதுவும் யுத்தம் செய்ய இயலாது. கொஞ்சம் ஏதாவது தளர்வு ஏற்பட்டால் ஏதாவதொரு கர்மேந்திரியம் தளர்வுற்று இருந்தாலும் பிறகு பவேசித்து விடும். அந்த அசுத்த ஆத்மாக்களும் கூட மிகுந்த சக்தி வாய்ந்தவர்களாக இருப்பார்கள். அந்த மாயையின் சக்தியும் குறைந்ததல்ல. இதில் மிகுந்த கவனம் தேவை மேலும் பல இயற்கையின் ஆபத்துக்கள் கூட தனது காரியத்தை செய்யும். அதை எதிர்கொள்வதற்காக தனக்குள் ஈஸ்வரிய சக்தியை தாரணை செய்ய வேண்டும். அந்த சமயம் அன்பு செலுத்தக்கூடாது. அந்த சமயம் சக்தி ரூபமாய் இருத்தல் அவசியமாகும். எந்த நேரம் அன்பு மூர்த்தியாக, எந்த நேரம் சக்திருபமாக ஆக வேண்டும் என்பதைக் கூட சிந்திக்க வேண்டும். இந்த அனைத்து விஷயங்களிலும் சக்தி ரூபத்தில் இருத்தல் அவசியமாகும். ஒருவேளை அத்தகையதொருவர் வந்தால், அவரிடம் அதிக அன்பு செலுத்தினால் ஏதாவது தீங்கு ஏற்பட்டுவிடும். பாப்தாதா மற்றும் தெய்வீக குடும்பத்தினரிடம் அன்பு செலுத்த வேண்டும். மற்ற அளைவரையும் சக்தி ரபத்திலேயே எதிர்கொள்ள வேண்டும். சில குழந்தைகள் கவனக்குறைவினால் அவர்களுடைய அன்புக்கு வசமாகி விடுகின்றனர். அந்த அன்பு அதிகரித்து பலஹீனமாகி விடுகிறது. ஆகையால் இப்போது சக்தி ரூபத்தின் அவசியம் தேவை!

பாரத மாதா சக்தியின் அவதாரம் என்ற இறுதி தே முழக்கத்திற்கான புகழ் உள்ளது. கோபிகை, மாதா என்று சொல்லப்படுவதில்லை. சக்தி ரூபத்தினுடைய நடிப்பிற்கான நேரம் இது. கோபியர்கள் என்ற ரூபம் சாகாரத்தில் இருந்தது. இப்போது அவ்யக்த ரூபத்தில் சக்தியின் நடிப்பே இருத்தல் வேண்டும். ஒவ்வொருவரும் தனது சக்தி ரூபத்தில் நிலைத்திருந்தீர்கள் எனில் அனைவரின் சக்தியும் ஒன்றிணைந்து அதிசயம் செய்து காண்பித்து விடும். நினைவுச்சின்னமாக இறுதி நேர

## 1969 அவ்யக்த முரளிகள்!

சித்திரம் என்னவாக காண்பிக்கப்பட்டுள்ளது? மலையைத் தூக்குவதற்கு விரல் கொடுத்ததாகக் காண்பிக்கப்பட்டுள்ளது. சக்தி என்ற விரலையே கொடுக்க வேண்டும். இதன் மூலமே கலியுக மலை அழிந்துபோகும். இதற்கு ஒவ்வொருவருடைய விரலும் தேவையாக உள்ளது. இப்போது அந்த விரலை முழுமையாகக் கொடுக்கவில்லை. விரல் அவசியம் கொடுக்கின்றனர் ஆனால் சிலருடையது அவ்வப்போது நேராக உள்ளது, சிலருடையது அவ்வப்போது வளைந்திருக்கிறது. எப்போது முழுமையாக விரல் கொடுப்பீர்களோ அப்போதே பிரபாவம் ஏற்படும். ஒன்றுபோல் விரல்கொடுக்க வேண்டும். இந்தக் கலியுக மலையைத் தூக்க விரைவில் விரல் கொடுத்து பிறகு, சத்யுக உலகைக் கொணர வேண்டும். சாகாரமானவரிடம் அன்பு இருக்கிறதெனில் மிக விரைவாக இந்த பழைய உலகத்தினின்று செல்வதற்கான ஏற்பாடு செய்யுங்கள். இப்போது சேவை எங்கே முடிந்திருக்கிறது என நீங்கள் சொல்வீர்கள் ஆனால் சேவை கூட எதற்காக தடைப்பட்டிருக்கிறது? ஒருவேளை நீங்கள் ஒவ்வொருவரும் சக்தி ரூபத்தில் நிலைத்து விட்டால், மறந்துபோய் அலைந்து கொண்டிருக்கும் உங்களுடைய பக்தர்கள், விரும்பாமலேயே காந்தத்தின் முன் வந்து விடுவர். தாமதம் ஆகாது. நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋❋

# 26.05.1969 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சம்பூர்ண சினேகத்தின் அடையாளம்!

அனைவரும் எந்த நிலையில் அமர்ந்திருக்கிறீர்கள்? ஈடுபாட்டுடன் அமர்ந்திருக்கிறீர்களா அல்லது அன்பில் மூழ்கிய நிலையில் அமர்ந்திருக்கிறீர்களா? எந்த நிலையில் இருக்கிறீர்கள்? தந்தை மீது ஈடுபாட்டை ஏற்படுத்துவதில் அதிக நேரம் செலவழிகிறதா அல்லது அன்பில் மூழ்கிய நிலையில் இருக்கிறீர்களா? தன்னை சோதித்திருப்பீர்கள். நல்லது. தன்னுடைய பரிட்சையின் முடிவைத் தெரிந்துகொள்ளும் விருப்பம் அனைவரிடமும் உள்ளது. அனைவருடைய உள்ளங்களிலும் விசேஷமாக இந்த எண்ணமே எழுந்து கொண்டிருக்கிறது. ஆகவே இன்று முடிவை வெளியிடுகிறார்கள். அனைவரும் அவரவர் தகுதிக்கேற்ப, அவரவர் சக்திக்கேற்ப எழுதி இருக்கின்றனர். மொத்தமான முடிவாக (Total Result) வெளிப்படுவது என்னவென்றால் <u>தந்தை மீது நிச்சயபுத்தி உள்ளது; ஆனால் எவ்வளவு தந்தை மீது நம்பிக்கை உள்ளதோ அவ்வளவு தந்தையின் மகா வாக்கியங்கள் மீது, கட்டளைகள் மீது நிச்சயபுத்தி உடையவராக இருக்க வேண்டும்</u> ஆனால், அந்த முயற்சியில் 50% உள்ளது. தந்தை மீதோ 100% நம்பிக்கை உள்ளது. எனினும் தந்தையினுடைய கட்டளைகள் மீது நம்பிக்கை உடையவர் ஆகி என்ன கட்டளை கிடைத்திருக்கிறதோ அதை உடனே செய்து முடிக்க வேண்டும். <u>பெரும்பான்மையாக, **50** சதவிகிதமானோரின் முடிவில் மட்டுமே கட்டளை மீது நிச்சயபுத்தி உள்ளது</u>. அவ்வாறு ஆசிரியர் மீதும் நம்பிக்கை புத்தி வேண்டும் ஆனால் அவருடைய அனைத்து படிப்பினையின்படி முழுமையான முறையில் நடக்க வேண்டும். அதனுடைய முடிவிலும் ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு சதவிகிதமே. அவ்வாறே, குரு ரூபத்திலும் கூட சத்குரு இருக்கிறார் என்ற பூரண நம்பிக்கை உள்ளது. எனினும் அவருடைய ஸ்ரீமத் நடப்பதில் மொத்த முடிவு 50% மட்டுமே உள்ளது. <u>தந்தை, ஆசிரியர், சத்குரு மீது மட்டும் நம்பிக்கை இருந்தால் போதாது; ஆனால் இந்த</u>

<u>நம்பிக்கையின் கூடவே அவரது கட்டளை, அவருடைய படிப்பினை மேலும் அவருடைய ஸ்ரீமத் மீதும் கூட சம்பூர்ண நிச்சயபுத்தி உடையவராகி நடக்க வேண்டும். இதில் குறை உள்ளது. அதை இப்போது நிவர்த்தி செய்ய வேண்டும்</u>.

அன்பின் அடையாளம் என்ன? சம்பூர்ணமான சினேகி என்பதை எதைக் கொண்டு அறியலாம்? அவரது முக்கிய லட்சணம் என்னவாக இருக்கும்? (சிலர் பதிலளிக்கின்றனர்) நீங்கள் அனைவர் கூறியதும் சரியே! எனினும் இன்னும் அதிகமாகத் தெளிவுபடுத்துகிறோம். ஒருவருக்கு யார் மீது அன்பு உள்ளதோ, அந்த அன்பிற்குரியவரின் உருவம் அவரது உருவத்தில் தென்படும். அவரது கண்களில் அன்பிற்குரியவரின் கண்கள் தென்படும். அவரது வாயிலிருந்து கூட அன்பான வார்த்தை வெளிப்படும். அவருடைய ஒவ்வொரு நடத்தையிலிருந்தும் சினேகியின் சித்திரமே தென்படும். அவருடைய கண்களில் அன்பானவரே தென்படுவார். அவருக்குள் அந்த அன்பானவரே நிறைந்திருப்பார். இத்தகைய நிலை உங்களிடம் இருக்க வேண்டும். இப்போது குழந்தைகள் மற்றும் தந்தையினுடைய சமஸ்காரங்களில் மிகுந்த வேறுபாடு உள்ளது. எப்போது சமமாகி விடுவீர்களோ அப்போது உங்களுடைய சமஸ்காரம் வெளிப்படாது. அவரே வெளிப்படுவார். ஒவ்வொருவரிடமும் தந்தையைக் காண்பர். உங்கள் அனைவரின் மூலம் தந்தையின் காட்சி கிடைக்கும் ஆனால் இப்போது இந்தக் குறை உள்ளது. அத்தகைய சினேகியாக நான் ஆகியிருக்கிறேனா என்று கேட்க வேண்டும். அன்பு செலுத்துவது சுலபமாகும். அன்பு சொருபம் ஆவதே இறுதி நிலை ஆகும். பரீட்சையின் முடிவு அறிவிக்கப்பட்டது. ஒன்று, இந்தக் குறை உள்ளது. நீங்கள் எழுதிய தேர்வில் மற்றுமொரு விஷயம் என்னவென்றால் <u>சகிப்புத்தன்மை மிகக் குறைவாகவே உள்ளது</u>. எந்தளவு சகிப்புத்தன்மை இருக்குமோ அந்தளவு <u>சேவையில் வெற்றி</u> கிடைக்கும். குழுவில் இருப்பதற்காகக் கூட சகித்துக்கொள்ளும் சக்தி தேவை. <u>வினாசம் என்கிற இறுதித் தேர்வில் தேர்ச்சி அடைவதற்காகவும்</u> சகித்துக் கொள்ளும் சக்தி வேண்டும். அந்த சகிப்புத்தன்மை பெரும்பாலானோரிடம் மிகக் குறைவாகவே உள்ளது ஆகையால் அதை இப்போது அதிகரியுங்கள். சகித்துக் கொள்ளும் சக்தியை எவ்வாறு பெறுவது? <u>எவ்வளவுக்கெவ்வளவு சினேகி ஆவீர்களோ அவ்வளவே</u>

சகித்துக் கொள்ளும் சக்தியும் வந்து விடும். எந்தளவு ஒருவர் மீது அன்பு உள்ளதோ, அந்தளவு அந்த அன்பில் சக்தி வந்து விடுகிறது. அன்புடனிருப்பதால் சகிப்புத்தன்மை எவ்வாறு வருகிறது, இதை எப்போதாவது அனுபவம் செய்ததுண்டா? உதாரணமாக பாருங்கள், ஒரு குழந்தைக்குத் தாய் இருக்கிறார். குழந்தைக்கு ஏதாவது ஆபத்து நேரிடில், தாய்க்கு அன்பின் காரணத்தினால் சகிப்புத்தன்மை வந்து விடுகிறது. குழந்தைக்காக அனைத்தையும் சகித்துக் கொள்ளத் தயாராகி விடுகிறார். அந்த சமயம் அன்பின் காரணத்தினால் தன்னுடைய உடல் அல்லது சூழ்நிலைகளைப் பற்றிய எந்தக் கவலையும் இருக்காது. அவ்வாறே ஒருவேளை நிரந்தர அன்பு இருக்கிறதெனில், அந்த அன்பானவருக்காக சகித்துக் கொள்வது என்பது ஒன்றும் பெரிய விஷயமாக இருக்காது. அன்பு குறைவாக உள்ளது. அதனாலேயே, சகிப்புத்தன்மையும் குறைவாக உள்ளது. இதுவே உங்கள் அனைவருடைய தேர்வின் முடிவாகும். இப்போது ஒரு மாதத்திற்குப் பின் முடிவு பார்க்கப்படும். அங்கே ஒவ்வொரு மூன்று மாதத்திற்குப் பிறகு தேர்வு வரும். இங்கே ஒரு மாதத்திற்குப் பின் எந்தளவு (பாபா மீது) சினேக ரூபம் ஆகியுள்ளீர்கள்? என்ற முடிவைப் பார்ப்பார்கள். முக்கியமானது நிர்பயதா (பயமற்ற நிலை) என்கிற குணம். இது தேர்வில் கொடுக்கப்படவில்லை, ஏனெனில் இது மிகவும் குறைவாக உள்ளது. ஒரு மாதத்திற்குள் இந்த நிர்பயதா குணத்தை தனக்குள் பூரணமாக நிறைப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். நிர்பயதா எவ்வாறு வரும்? அதற்காக செய்ய வேண்டிய முக்கியமான முயற்சி என்ன? நிராகாரி ஆக வேண்டும். எவ்வளவு நிராகாரி நிலையில் இருப்பிர்களோ அவ்வளவு பயமற்றவராக இருப்பீர்கள். சரீர உணர்வில் வருவதாலேயே பயம் ஏற்படுகிறது. அடுத்த ஒரு மாதத்திற்கான இந்த நாட்குறிப்பை முன்னரே கூறிவிடுகிறோம். குமாரிகளின் பயிற்சி வகுப்பு நிறைவடைந்ததும், சகிப்பத் தன்மை, பயமற்ற நிலை மற்றும் நம்பிக்கையின் அடையாளம் ஆகியவை எந்தளவு உள்ளது என்று நாம் கேட்போம். இந்த மூன்று விஷயங்களின் தேர்வு பிறகு நடைபெறும்.

குமாரிகள் மீது பாப்தாதாவிற்கு விசேஷ அன்பு ஏன் இருக்கிறது? குறிப்பாக எந்த விஷயத்தின் காரணத்தினால் பாப்தாதாவிற்கு விசேஷமான அன்பு உள்ளது? ஏனெனில் இவர்களுக்கு ஒருவேளை ஈஸ்வரிய அன்பு கிடைக்கவில்லையெனில் யாருடைய அன்பிலாவது

மாட்டிக்கொள்வார்கள் என்பதை பாப்தாதா புரிந்திருக்கிறார்கள். தந்தை கருணை உள்ளம் உடையவர் அல்லவா! கருணையின் காரணத்தாலேயே அன்பு உள்ளது. எதிர்காலத்தைக் காக்கும் பொருட்டே விசேஷ அன்பு உள்ளது. பாப்தாதாவின் அன்பிற்கான கைமாறு என்ன அளிக்கப் போகிறார்கள் என்பதை இப்போது பார்க்கலாம். தன்னைக் காப்பாற்றுவதே பாப்தாதாவின் அன்பிற்கான கைமாறு ஆகும். எந்தெந்த விஷயங்களில் தன்னைக் காக்க வேண்டும் என்று தெரியுமா? ஒன்று, மனம் சகிதமாக தூய்மை இருக்க வேண்டும். மனதில் எந்த சந்தேகமும் வரக்கூடாது. இரண்டாவது விஷயம், தனது வாயிலிருந்து எந்தவொரு தவறான வார்த்தையும் வெளிப்படக் கூடாது. வார்த்தைகளிலும் கட்டுப்பாடு, மனதிலும் கூட கட்டுப்பாடு வேண்டும். சாகாரத்தில் பாப்தாதாவின் வார்த்தைகள் எவ்வாறு இருந்தனவோ அத்தகைய வார்த்தைகளையே பேச வேண்டும். கர்மமும் கூட, சாகார உடல் மூலம் (பிரம்மாபாபா) எவ்வாறு செய்து காண்பித்தாரோ அத்தகைய கர்மங்களையேச் செய்ய வேண்டும். பிறர் உங்களைப் பார்த்து செய்யும்படியாக உங்கள் கர்மம் இருத்தல் வேண்டும். இது குமாரிகளுக்காக விசேஷமாக கூறப்படுகிறது மேலும் எதிலிருந்து தற்காத்துக் கொள்ள வேண்டும்? தீய சேர்க்கையிலிருந்து தப்பிக்கத் தான் வேண்டும். மற்றொரு விசேஷமான விஷயம் உள்ளது. ஆத்ம ரூபத்தில், சரீரத்தின் ரூபத்தில் உங்கள் அனைவரையும் கெட்ட வழியில் இட்டுச் செல்லக்கூடியவைகள் பல ரூபங்களில் எதிரில் வரும் ஆனால் அதில் ஏமாற்றமடைந்து விடக்கூடாது. அனேக பரீட்சைகள் வரும் எனினும் அவை ஒன்றுமல்ல. தேர்வுகளில் யார் தேர்ச்சி அடைய முடியும்? யாரிடம் முழுமையாகக் கண்டறியும் சக்தி உள்ளதோ, அவர்களே தேர்ச்சி அடைவர். எவ்வளவு கண்டறியும் சக்தி உள்ளதோ அவ்வளவே தேர்வில் தேர்ச்சி அடைவீர்கள். பகுத்தறியும் சக்தி குறைவாக உள்ளது. எம்மாதிரியான தடை, மாயை எந்த உருவில் வந்து கொண்டு இருக்கிறது? மேலும் ஏன் என் முன் இந்தத் தடை வந்தது என்பதை பகுத்தறிய இயலவில்லை, இதனால் முடிவு என்னவாகிறது? இந்த பகுத்தறிதல் குறைவாக இருக்கும் காரணத்தாலேயே தேர்வுகளில் தோல்வியுறுகிறீர்கள். பகுத்தறிதல் சிறப்பாக இருப்பவர்கள் தேர்ச்சி பெற இயலும். நல்லது.

☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂

## 09.06.1969 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## சோம்பலின் இனிமையான ரூபம் -அலட்சியம்!

அனைவரும் வியக்கத்தில் இருந்தாலும் அவ்யக்த நிலையில் இருக்கிறீர்களா? அவ்யக்த நிலை என்று எதைக் குறிப்பிடுகின்றனர் என்பதை அறிவீர்களா? முதலாவது அவ்யக்த நிலையை அறிதல். அறிந்த பின் பகுத்தறிதல் வேண்டும். இந்த இரு விஷயங்களின் ஞானம் உள்ளதா? அவ்யக்த நிலை என்று எது சொல்லப்படுகின்றது? (வியக்த உணர்வு இல்லாதிருப்பது) வியக்தத்தில் காரியம் செய்த போதிலும் வியக்தத்தின் உணர்வில்லாமல் எவ்வாறு இருக்க இயலும்? வியக்தத்தில் இருக்கும் போது அவ்யக்த நிலையில் இருக்கும் அனுபவம் எந்தளவு ஏற்படுகிறது? இன்று இதை அனைவரிடமும் கேட்க வேண்டியதாக இருந்தது. அதிகத்திலும் அதிகமாக, அவ்யக்த நிலையில், எவ்வளவு நேரம் இருக்கிறீர்கள்? அதிகத்திலும் அதிகமாக எவ்வளவு நேரம் இருக்க வேண்டும் என்பது தெரியுமா? (8-மணி நேரம்) சம்பூரண நிலையினுடைய கணக்கின்படி 8-மணி நேரம் கூட குறைந்ததிலும் குறைந்த நேரமே ஆகும். உங்களது நிகழ்கால முயற்சியின் கணக்குப்படி 8-மணி நேரம் என்பது அதிகமாகத் தெரிகிறதா? (எவரும் கை உயர்த்தவில்லை). நல்லது, யார் 6-மணி நேரம் வரை வந்து விட்டீர்களோ அவர்கள் கையை உயர்த்துங்கள் (எவரும் கை உயர்த்தவில்லை). நல்லது, 4-மணி நேரம் வரை வந்து விட்டவர்கள் கையை உயர்த்துங்கள். (சிலர் 4-மணி நேரத்திலும், சிலர் 2-மணி நேரத்திலும் கை உயர்த்தினர்). இந்த முடிவின் கணக்கின்படி முயற்சிக்கான சமயம் எவ்வளவு வேண்டும்? பாடமும் நிறைவுற்றது. திரும்பப் பயிலும் (Revision Course) காலமே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எனினும் பெரும்பான்மையோரின் முடிவு... இதற்கான காரணம் என்ன? அனைவரும் முயற்சியும் செய்கிறீர்கள், ஊக்கமும் உள்ளது லட்சியமும் உள்ளது ஆனாலும் ஏன் இயலவில்லை? (கவனம் குறைவாக உள்ளது). எந்த விஷயத்தின்

கவனம் குறைவாக உள்ளது? தகுதியானவர் ஆக வேண்டும், அருகாமையில் வர வேண்டும் என்பதில் அனைவரும் கவனம் செலுத்துகின்றனர். ஆயினும், முக்கியமாக எந்த விஷயத்தின் கவனம் குறைவாக இருப்பதினால் அவ்யக்த நிலை குறைவாக உள்ளது? அனைவரும் முயற்சியாளர்கள் இங்கு அமர்ந்திருக்கிறீர்கள். நான் முயற்சியாளர் அல்ல என்று சொல்பவர் எவரேனும் இருக்கிறீர்களா? முயற்சியாளராக இருப்பினும் ஏன் குறை உள்ளது? என்ன காரணம் உள்நோக்குமுகமாக நினைப்பதற்கு விருப்பம் கொண்டாலும் ஏன் இருக்க இயலவில்லை? வெளிநோக்குமுகத்தில் ஏன் வந்து விடுகிறீர்கள்? ஞான சொரூப ஆத்மாவாக அனைவருமே ஆகியுள்ளீர்கள். ஞானசொரூப ஆத்மாவாக, புத்திசாலியாக ஆனபோதிலும் அறிவற்றவர்களாக ஏன் ஆகின்றீர்கள்? அறிவு கிடைத்து விட்டது. அறிவை மேம்படுத்தும் பாடமும் முடிவுற்றுவிட்டது. படிப்பு முடிந்து விட்டது எனில் அறிவாளிகள் ஆகி விட்டதாக அர்த்தம் ஆகும். ஆனபோதிலும், அறிவற்றவராக ஏன் ஆகின்றீர்கள்?

முக்கியத் காரணமாகத் தென்பட்டது என்னவென்றால் சிலருக்குள் சோம்பேறித்தனம் வந்து விட்டது. சோம்பேறித்தனத்தின் இனிமையான ரூபம் அலட்சியம் ஆகும்! அலட்சியமும் பலவிதமாக இருக்கிறது. பெரும்பான்மையோரிடம் ஏதாவது ஒரு ரூபத்தில் அலட்சியம் மற்றும் சோம்பல் வந்து விட்டது. விருப்பமும் உள்ளது, முயற்சியும் உள்ளது எனினும், சோம்பலின் காரணத்தினால் எவ்விதத்தில் முயற்சி செய்ய வேண்டுமோ அதைச் செய்ய இயலவில்லை. புத்தியில் அதிக ஞானம் வந்து விடுகிறது. பிறகு அதை விட அதிகமாக சோம்பல் வந்து விடுகிறது. தன்னைக் குறைந்த அறிவுள்ளவர் எனப் புரிந்து கொள்பவர்கள் கூட தீவிர முயற்சி செய்து கொண்டு இருக்கின்றனர்; ஆனால் யார் தன்னை அதிபுத்திசாலி என எண்ணுகின்றனரோ, அவர்கள் அதிகம் சோம்பேறித்தனத்தில் வந்து விடுகின்றனர். அவ்வாறு ஆகிக் காட்டுவோம், இதைச் செய்து காட்டுவோம் என்று முதன் முதலில் முயற்சி செய்வதற்கான துடிப்பு இருந்தது. இப்போது அந்தத் துடிப்பு நின்று விட்டது. திருப்தி ஏற்பட்டுவிட்டது. ஞானமோ புரிந்து விட்டது. சேவையோ செய்து கொண்டு இருக்கிறோம். போய்க் கொண்டு தான் இருக்கிறோம் என தனக்குத்தானே திருப்தி அடைந்து விட்டனர். இவ்விதத் திருப்தியான ஆத்மா ஆகக்கூடாது. முயற்சியில் துடிப்பு

இருக்க வேண்டும். கட்டுப்பாட்டில் கட்டுண்டுள்ள (பந்தமான) தாய்மார்களோ துடிக்கின்றனர், முயற்சியும் தீவிரமாகச் செய்கின்றனர். மேலும் யார் கட்டுப்பாட்டில் பிணைக்கப்படாதவர்களோ அவர்கள் திருப்தியாக இருக்கின்றனர். அதனாலேயே, சோம்பேறித்தனமும் வந்து விடுகின்றது. பெரும்பான்மை முயற்சியாளர்களிடம் இந்த முடிவே தென்பட்டது. நான் முதல் எண்ணில் வரும் முயற்சியாளர் ஆகிக் கொண்டிருக்கிறேன் என்று எப்போதும் புரிந்து கொள்ளுங்கள். இன்னும் ஆகி விடவில்லை. மூன்று காலங்களின் ஞானம் புத்தியில் இருப்பதால் தன்னை அதிபுத்திசாலி என நினைக்கின்றனர். எங்கு குழந்தை ஆக வேண்டுமோ அங்கு தலைவன் ஆகின்றீர்கள், எங்கு தலைவன் ஆக வேண்டுமோ அங்கு குழந்தை ஆகி விடுகின்றீர்கள் என்பது முன்பே சொல்லப்பட்டது அல்லவா? இப்போது குழந்தை ரூபத்தின் இனிமையிலும் இனிமையான முயற்சி செய்து கொண்டு இருக்கிறீர்கள். ராஜ்யத்தின் அதிகாரியும் ஆகி விட்டீர்கள், திலகமும் வந்து விட்டது. எனினும், இந்த மந்தமான மற்றும் இனிமையான முயற்சி இப்போது போதுமானதல்ல. எவ்வளவு சக்திரூபத்தில் நிலைத்திருப்பீர்களோ அவ்வளவு முயற்சியும் சக்திசாலியாக இருக்கும். இப்போது முயற்சி சக்திசாலியானதாக இல்லை, மந்தமாக உள்ளது. அனைவரும் முயற்சியாளர்களாக இருக்கின்றனர் ஆனால், முயற்சி சக்திசாலியானதாக இருக்க வேண்டும். அந்த சக்தி, முயற்சியில் நிரம்பவில்லை. அதிகாலை எழுந்ததும் முயற்சியில் சக்தியை நிறைப்பதற்காக ஏதாவது ஒரு கருத்தை **(Point)** விசேஷமாக புத்தியில் நினையுங்கள். அமிர்தவேளையில் எவ்வாறு உரையாடல் செய்கிறீர்களோ அவ்வாறே தனது முயற்சியை சக்திசாலி ஆக்குவதற்காகக் கூட ஏதாவதொரு பாய்ண்ட்டை விசேஷமாக புத்தியில் நினைவு செய்யுங்கள். இப்போது விசேஷமான முயற்சி செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது. சாதாரண முயற்சி செய்யக்கூடிய நாட்கள் இப்போது கடந்து கொண்டிருக்கிறன. எவ்வாறு விசேஷமாக விழா முதலிய நிகழ்ச்சிக்கான ஏற்பாடு செய்கிறீர்கள் இல்லையா? அவ்வாறே இப்போது நேரம் குறைவாக உள்ளது. இதில் விசேஷமான முயற்சிக்கான நிகழ்ச்சியை ஏற்பாடு செய்ய வேண்டும் எனப் புரிந்து கொள்ள வேண்டும். இந்த விசேஷ முயற்சிக்கான லட்சியம் வைத்து முன்னேற்றம் அடைய வேண்டும். ஒருவேளை முடிவில் (Result) அத்தகைய மந்த நிலை இருந்ததெனில் வரப்போகும்

தேர்வுகளின் முடிவு என்னவாக இருக்கும்? கடுமையான பரீட்சைகள் வரப்போகின்றன. அவற்றை எதிர்கொள்வதற்காக முயற்சியும் கடுமையாக இருக்க வேண்டும். ஒருவேளை முயற்சி சாதாரணமாகவும், பரீட்சைகள் கடுமையானதாகவும் இருந்தால் முடிவு என்னவாக அமையும்?

நல்லது. இன்று கோபர்களோடு (சகோதரர்கள்) சந்திப்பு செய்கின்றார்கள். தனது முயற்சியில் திருப்தியாக இருக்கிறீர்களா? நடந்து கொண்டு இருக்கிறீர்கள், ஆனால் எத்தனை சதவிகிதத்தில்? நான் 75% ஸ்ரீமத்படி நடந்து கொண்டிருக்கிறேன் என நினைப்பவர்கள் கை உயர்த்துங்கள். (சிலர் கை உயர்த்தினர்). நல்லது, முக்கியமான ஸ்ரீமத் என்ன? அதிகத்திலும் அதிகமான நேரம் நினைவு யாத்திரையில் இருக்க வேண்டும் என்பதே முக்கியமான ஸ்ரீமத் ஆகும். ஏனெனில் இந்த நினைவு யாத்திரை மூலமே தூய்மைத்தன்மை, தெய்வீக குணங்கள் மற்றும் சேவையின் வெற்றி கூட கிடைக்கும். 75% ஸ்ரீமத்படி நடக்கின்றவர்களின் நாட்குறிப்பில் (சார்ட்) நினைவிற்கான சதவிகிதம் எவ்வளவு உள்ளது? நினைவிற்கான நாட்குறிப்பிலும் கூட 75% இருக்க வேண்டும். அத்தகையவர்களையே முழுமையிலும் முழுமையாக ஸ்ரீமத்படி நடக்கக்கூடியவர்கள் என்று சொல்லலாம். இன்று விசேஷமாக கோபர்கள் முதலில் அழைக்கப்பட்டனர். கோபியர்கள் பிறகே அழைக்கப்பட உள்ளனர். ஏனெனில், எப்போதெல்லாம் சந்திப்பு நிகழ்கிறதோ அப்போதெல்லாம் கோபியர்கள் விரைவாக வந்து விடுகின்றனர். கோபர்கள் பார்த்துக் கொண்டே இருந்து விடுகின்றனர். கோபர்களுக்கு பொறுப்பு கூட அளிக்க வேண்டியுள்ளது அல்லது அளிக்கப்பட்டு இருக்கிறது. துவாபரயுகத்திற்குப் பின் கிரீடமற்றவராக உங்களுடைய சித்திரம் காண்பிக்கப்பட்டுள்ளது அல்லவா! இங்கு பொறுப்பு எனும் கிரீடம் வைக்கப்பட்டு இருக்கிறது. எனினும் அவ்வப்போது அறிந்தே அதை இறக்கி வைத்து விடுகின்றனர். மேலும் மாயையும் இறக்கி வைத்து விடுகிறது. தலைமீது கொஞ்சம் சுமை உள்ளது என்று அறியாதவண்ணம் சத்யுகத்தில் கிரீடம் லேசானதாக இருக்கும். சத்யுகக் காட்சிகள் முன்னால் வருகின்றனவா அல்லது இல்லையா? சத்யுகத்தின் காட்சிகள் தானே முன்னால் வருகின்றனவா அல்லது கொண்டு வருகின்றீர்களா? எவ்வளவுக்கெவ்வளவு முன்னேற்றம் அடைவீர்களோ அவ்வளவுக்கவ்வளவு விரும்பாமலேயே

சத்யுகக் காட்சிகள் தானே முன்னால் வரும். கொண்டு வர வேண்டிய அவசியம் இருக்காது. எவ்வளவுக்கெவ்வளவு அருகாமையில் வருவீர்களோ அவ்வளவுக்கவ்வளவு காட்சிகளும் அருகாமையில் வந்துகொண்டே இருக்கும்.

சத்யுகத்திற்குச் செல்வது மற்றும் விளையாடுவது என்பது உறுதியானது. நான் ஸ்ரீகிருஷ்ணருடன் முதல் பிறவியில் வருவேன். அவருடைய குடும்பத்தில் வருவேன் அல்லது தோழன், தோழி ஆவேன் அல்லது பள்ளித்துணை ஆவேன் என்று இன்று இங்கு அமர்ந்திருப்பவர்களில் யார் நினைக்கிறீர்கள்? இந்த மூன்றில் ஏதாவது ஒன்றாவது கண்டிப்பாக ஆவேன் என்று யார் நினைக்கிறீர்கள், அத்தகைய நிச்சயபுத்தி யாரிடம் உள்ளது? (அனைவரும் கை உயர்த்தினர்). அருகாமையில் வரக்கூடியவர்களுடைய அடையாளம் சங்கமயுகத்தில் என்னவாக இருக்கும்? இங்கு யார் தன்னை அருகாமையில் இருப்பதாக நினைக்கிறீர்கள்? யக்ஞ சேவை மற்றும் பாப்தாதாவின் காரியத்தில் யார் அருகாமையில் இருப்பார்களோ அவர்களே அங்கு விளையாட்டு முதலியவைகளில் அருகாமையில் இருப்பார்கள். யக்ஞத்தினுடைய பொறுப்பு அல்லது பாப்தாதாவின் காரியத்தினுடைய பொறுப்பின் அருகாமையில் எவ்வளவுக்கெவ்வளவு இருப்பீர்களோ, அவ்வளவே அங்கும் அருகாமையில் இருப்பீர்கள். அருகாமையில் இருப்பதன் அடையாளம் எவ்வாறு இருக்கும்? எந்தளவு புத்தி, எந்தளவு உடல், மனம் செல்வம் மற்றும் எந்தளவு சமயத்தை லௌகீக பொறுப்புகளுக்காக செலவிடுகிறீர்களோ, அந்தளவு இந்தப் பக்கமும் செலவிடுகிறீர்களா? என்பதை ஒவ்வொருவரும் தன்னைத் தானே கேட்க வேண்டும். இந்தப் பக்கம் அதிகம் கொடுக்க வேண்டும். ஒருவேளை அதிகமாக இல்லையெனில் அதனுடைய கனம் ஒன்றுபோல் இருக்குமா? ஒருவேளை இருபக்கமும் ஒன்றுபோல் இருந்தால் கூட அருகாமையில் இருப்பதாக ஏற்றுக்கொள்ளப்படும். இந்தக் கணக்குப்படி தன்னைக் கண்டறியவேண்டும். இதுவரை உள்ள முடிவில் லௌகீக பொறுப்புகளின் சுமை அதிகமாகத் தென்படுகிறது. குறிப்பாக முக்கியமாக கோபர்கள் அவசியம் கவனத்தில் வைக்க வேண்டிய விஷயம் என்னவென்றால், இன்றைய தினத்தில் எவ்வளவு சமயம் லௌகீக பொறுப்பிற்காக செலவழித்தேன் மேலும் எவ்வளவு சமயம் அலௌகீக மற்றும் பரலௌகீக பொறுப்பிற்காக செலவழித்தேன்,

எவ்வளவு உதவியாளராக ஆனேன் என்று சோதிக்க வேண்டும். இந்த சோதனை செய்து கொண்டு இருந்தால் எந்த பக்கம் காலியாக உள்ளது என்று அறிய முடியும். அனைத்து விதமான சூழ்நிலைகளில் இருந்தபோதிலும் குறைந்ததிலும் குறைந்தது இரு பக்கமும் ஒன்று போல் இருக்க வேண்டியது அவசியம். குறைவாக இருக்கக்கூடாது. அந்த பக்கம் குறைவாக இருந்தாலும் பரவாயில்லை, இந்தப் பக்கம் குறைவாக இருக்கக்கூடாது. அப்போதே, லௌகீக பொறுப்பின் குறையைக் கூட சரி செய்ய முடியும். பரமாத்மா காரியத்தில் ஈடுபடுவதினால் லௌகீக காரியம் கூட வெற்றியடையும். சிலர், முதலில் லௌகீக காரியத்தை சரி செய்த பின் பரமாத்மா காரியத்தில் ஈடுபடலாமே எனக் கூறுகின்றனர். இது சரியல்ல! விசேஷமாக இந்தக் கவனம் வேண்டும். விசேஷமாக கோபர்கள் மீது பாப்தாதாவிற்கு ஒரு நம்பிக்கை உள்ளது. அந்த நம்பிக்கையை கோபர்கள் தான் பூர்த்தி செய்ய முடியும். கோபியர்களால் முடியாது. அது என்ன நம்பிக்கை? பாண்டவர்களின் முக்கியமான காரியமும் இதுவே. பலவிதமான மனிதர்கள் மற்றும் பலவிதமான பரீட்சைகள் வரவிருக்கின்றன மேலும் வந்துகொண்டும் இருக்கின்றன. அந்த பரீட்சை மற்றும் <u>மனிதர்களைக் கண்டறிவது விசேஷமாக கோபர்களின் வேலையாகும்.</u> ஏனெனில், பாண்டவர்களுக்கு சக்திகளைப் பாதுகாக்ககூடிய முக்கியமான காரியம் உள்ளது. சக்திகளின் வேலை அம்பு எய்வதாகும் ஆனால் ஒவ்வொரு விதமான பரீட்சை மற்றும் மனிதர்களைக் கண்டறிவது மற்றும் சக்திகளைப் பாதுகாப்பது பாண்டவர்களின் பணியாகும். இவ்வளவு பொறுப்பு எடுத்துக் கொள்ள முடியுமா? அல்லது சக்திகள் உங்களை பாதுகாக்க வேண்டிய அவசியம் உள்ளதா? ஆங்காங்கே, பாண்டவர்கள் தங்களுடைய பாதுகாப்பிற்காக பிறர் மீது நம்பிக்கை வைக்கின்றனர் ஆனால் பாண்டவர்கள் தங்களுடைய பாதுகாவலின் கூடவே நாலா புறங்களில் உள்ளவர்களையும் பாதுகாக்க வேண்டும். திருஷ்டி எல்லைக்குட்பட்டதாக இல்லாமல் எல்லைக்கு அப்பாற்பட்டதாக இருக்க வேண்டும். ஒருவேளை தன்னையே பாதுகாக்கவில்லை என்றால் பிறகு பிறரைப் பாதுகாப்பது கடினமாகி விடும். நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 16.06.1969 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பெரியதிலும் பெரிய தியாகம் -அவகுணங்களின் தியாகம்!

அனைவரும் எந்த சொரூபத்தில் அமர்ந்திருக்கிறீர்கள்? அன்பின் உருவாக அமர்ந்திருக்கிறீர்களா அல்லது சக்தியின் உருவாக அமர்ந்திருக்கிறீர்களா? இச்சமயம் எந்த உருவில் இருக்கிறீர்கள்? அன்பில் சக்தி இருக்கிறதா? இரண்டும் இணைந்து இருக்கமுடியுமா? இரு ரூபங்களும் இருக்கின்றன என்று ஏன் கூற முடியாமல் இருக்கிறீர்கள்? பாப்தாதாவிடம் ஏன் அன்பு இருக்கிறது? சிவதந்தையின் முக்கியமான குணம் எதுவோ அதில் அவருக்கு சமமாக வேண்டும் என்பதாலேயே பாப்தாதா மீது அன்பு உள்ளது. அந்த முக்கியமான குணம் எது? (சர்வசக்திவான்). அன்பு மட்டும் இருந்தால், அது எப்போது வேண்டுமானாலும் துண்டிக்கப்பட்டுவிடலாம்; ஆனால் அன்பு மற்றும் சக்தி ஆகிய இரண்டும் எங்கு ஒருங்கிணைந்து இருக்குமோ அங்கு ஆத்மா மற்றும் பரமாத்மாவின் சந்திப்பு கூட அழிவற்றது, அமரத்துவம் வாய்ந்ததாக இருக்கும். தன்னுடைய இந்த சந்திப்பை அழிவற்றதாக ஆக்குவதற்காக என்ன சாதனம் தேவைப்படுகிறது? அன்பு மற்றும் சக்தி ஆகிய இரண்டையும் தனக்குள் சமநிலையில் கொண்டு வரவேண்டும். அப்போதே ஆத்மா மற்றும் பரமாத்மாவின் சந்திப்பு நிகழ்கிறது என்று சொல்லலாம். சந்திப்பு திருவிழாவில் அமர்ந்திருக்கிறீர்கள், எனினும் சிலர் விழாவில் அமர்ந்திருந்தபோதிலும் இரண்டினுடைய சந்திப்பை மறந்து விடுகின்றனர்.

இன்று விசேஷமாக குமாரிகளுக்காகத்தான் வந்திருக்கிறோம். இன்றைய தினம் குமாரிகளுக்காக என்ன தினமாக அமைந்திருக்கிறது? (சந்திப்பு தினம்) உங்கள் அனைவருடைய முடிவும் (ரிசல்ட்) வெளிப்பட்டுவிட்டது. தனது முடிவைத் தானே அறிய முடிகிறதா? திரிகாலதரிசி ஆகி விட்டீர்களா? இந்தக் குழுவில் முதல் எண்ணில் எந்தக் குமாரி வந்திருக்கிறார்? (சந்திரிகா)! <u>முதல் எண்ணில்</u>

வருபவருடைய முக்கியமான கடமை, தன்னை போல் பிறரையும் முதல் எண்ணில் வருபவராக ஆக்குவது ஆகும். குமாரிகள் இப்போது மற்றுமொரு தேர்வு எழுத வேண்டும். அந்தத் தேர்வு செய்முறைத் தேர்வு ஆகும், எழுதும் தேர்வு அல்ல. இப்போது ஒரு மாத பயிற்சியின் முடிவில் முதல் எண் கிடைத்துள்ளது ஆனால் இறுதி முடிவிலும் கூட முதல் எண்ணில் வர முடியும். அதற்காக எந்தவொரு முக்கியமான விஷயத்தைப் புத்தியில் வைக்க வேண்டும்? தியாகம் மற்றும் சேவை என்பது இருக்கிறது ஆனால் மற்றுமொரு முக்கியமான விஷயம் உள்ளது. அனைத்தையும் விட உயர்ந்த பலி எது மற்றும் அனைத்தையும் விட உயர்ந்த தியாகம் எது? பிறருடைய அவகுணங்களை (பார்க்காது) தியாகிப்பதே உயர்ந்த தியாகம் ஆகும். அனைத்தையும் விட உயர்ந்த சேவை எது? யார் சிரேஷ்டமான சேவாதாரியாக இருப்பார்களோ, அவர்கள் முக்கியமாக எந்த ஒரு சேவை செய்வார்கள்? யார் தீவிர முயற்சியாளராக இருப்பார்களோ அவர்கள் தீவிர முயற்சியின் சான்றாக என்ன காண்பிப்பார்கள்? யார் அவர்கள் முன் வந்தாலும் ஒரு நொடியில் அவர்களை உயிருடன் இருந்து கொண்டே இறந்த நிலையை மர்ஜீவா மறு பிறவி அடையச் செய்வார்கள். ஒரு நொடியில் மர்ஜீவா நிலை அடைவதையே பலியாகுவது என்று சொல்லப்படுகின்றது. அரைகுறையாக ஆகக்கூடாது. அதே போன்று பிறர் எதிரில் வந்தவுடனேயே அவர்களை பலியாகச் செய்வதே சிரேஷ்டமான சேவையாகும். இப்போதோ நீங்கள் அம்பு எய்கிறீர்கள், அவர்கள் வெளியில் சென்றதும் உயிர் பெற்றுவிடுகின்றனர் ஆனால் ஒரு வினாடியில் பார்வையினாலேயே திருப்திப்படுத்திவிடும் சமயம் வரவிருக்கிறது. அப்போதே சேவையின் வெற்றி கிடைக்கும் மற்றும் மகிமை வெளிப்படும். இப்போது மர்ஜீவா எடுக்கச் செய்கிறீர்கள். பலியாகச் செய்வதில்லை. இரண்டு விஷயங்களின் குறை உள்ளது. அந்த விஷயங்கள் தனக்குள் வந்து விட்டால் தன்னுடைய (ஆன்மிக) நிறத்தை பிறர் மீதும் பூச முடியும். நீங்கள் பலியாகி விட்டீர்களா? (முயற்சியாளராக இருக்கிறோம்) அவ்வப்போது தவறு ஏற்பட்டுக் கொண்டே இருந்தால் அவர்களை முயற்சியாளர் என்று சொல்ல முடியுமா? இன்று முதல் நான் பலி ஆகி விட்டேன், பிறகு பழைய உலகத்தில் உயிர்த்தெழ மாட்டேன் என்று உறுதிமொழி செய்ய வேண்டும்! தைரியமானவர்களுக்குப் பிறகு உதவியும் கிடைக்கிறது. தைரியம் இருக்கும் காரணத்தினாலேயே

பாப்தாதாவிற்கு அன்பு ஏற்படுகிறது. இரு விஷயங்களின் குறையைப் பற்றி கூறிக் கொண்டிருந்தோம். ஒரு முக்கியமான குறை என்னவெனில் ஏகாந்தவாசியாக இருப்பதில் குறை மற்றும் இரண்டாவது குறை என்னவென்றால் ஒற்றுமையில் (ஏக்தா) குறை. ஏக்தா மற்றும் ஏகாந்தத்திற்கும் இடையில் மிகுந்த வேறுபாடு உள்ளது. ஏகாந்த நிலை என்பது ஸ்தூலத்திலும் உள்ளது, சூட்சுமத்திலும் உள்ளது. இரண்டிலுமே ஏகாந்த நிலையில் இருப்பது அவசியமாக உள்ளது. ஏகாந்தத்தினுடைய ஆனந்தத்தின் அனுபவி ஆகி விட்டால் பிறகு வெளிநோக்குமுகத்தில் வருவது பிடித்தமில்லாமல் போய்விடும். இப்போது வெளிநோக்குமுகத்தில் அனைவருடைய ஆர்வமும் அதிகம் இருக்கிறது. இந்த இரு விஷயங்களின் குறை பெரும்பான்மையோரிடம் உள்ளது. அவ்யக்த நிலையை அதிகரிப்பதற்கு இவை மிக அவசியமானதாக உள்ளன. ஆதலால் ஏகாந்த நிலை இருப்பதற்கு அதிக விருப்பம் கொள்ள வேண்டும். குமாரிகள் இப்போது செய்முறை (பிராக்டிகல்) கல்வி பயில வேண்டும்.

இப்போது குமாரிகளுக்கு மூன்று பரிசுகள் கொடுக்கப்போகிறோம். பரிசளிப்பது என்பது அன்பின் அடையாளம் ஆகும். மூன்று சம்பந்தங்களில் இருந்து மூன்று பரிசுகள் அளிக்கின்றார்கள். அவற்றை ஒருபோதும் மறக்கக்கூடாது. பாப்தாதாவின் பரிசை சதா தன்னுடன் வைத்துக்கொள்ள வேண்டும். பரிசு மறைத்து வைக்கப்படுகிறது அல்லவா! தந்தை என்ற ரூபத்தில் ஒரு படிப்பினையின் பரிசை நினைவில் வைக்க வேண்டும். என்ன படிப்பினை அளிக்கின்றார் எப்போதும் பாப்தாதா மற்றும் நிமித்தமாயிருக்கும் சகோதரிகள் மற்றும் தெய்வீக பரிவாரம் ஆகிய அனைவரிடமும் கட்டளைப்படி நடப்பவராகவும், நம்பிக்கைக்கு உரியவராகவும் இருக்க வேண்டும். இதுவே தந்தை என்ற ரூபத்தில் வழங்கக்கூடிய படிப்பினை என்ற பரிசாகும். மேலும், ஆசிரியர் என்ற ரூபத்தில் என்ன படிப்பினையை பரிசாக அளிக்கின்றார்? படிப்பு என்பது கிரகிக்கப்படுகிறது அல்லவா. எங்கு சென்றாலும் ஆசிரியர் என்ற ரூபத்தில் ஒன்று ஞானத்தை கிரஹித்தல், இரண்டாவது குணத்தை கிரஹித்தல் ஆகிய இந்த போதனைகளை எப்பொழுதும் நினைவில் வைத்தல் வேண்டும். மேலும், குரு என்ற ரூபத்தில், எப்போதும் அனைவரும் ஒன்றுபட்டிருக்க வேண்டும். ஒரே ரசனையில் மற்றும் ஒருவருடைய

<u>நினைவில் மட்டுமே இருக்க வேண்டும் என்ற போதனை அளிக்கின்றார்</u>. விஷ்ணுவிற்கு என்ன அலங்காரம் காண்பிக்கப்பட்டுள்ளதோ, அதை இப்போது சக்தி ரூபத்தில் தாரணை செய்ய வேண்டும். இந்த அலங்காரத்தை எப்போதும் தன்னுடைய எதிரில் வைத்துக் கொள்ளுங்கள். தந்தை, ஆசிரியர் மற்றும் குரு ஆகிய மூன்று சம்பந்தங்களிடமிருந்து படிப்பினையின் பரிசுகள் விசேஷமாக குமாரிகளுக்கு கிடைத்துள்ளது. யாரெல்லாம் இந்த பரிசை தன்னுடன் வைத்துக் கொள்கின்றனர் என்று பார்க்கலாம்.

அவர்கள் கூட சக்திவாய்ந்த அணுகுண்டுகளைத் தயாரித்துக் கொண்டிருக்கின்றனர் அல்லவா? நீங்களும் கூட இப்போது சக்திமிக்க அணுகுண்டு போட வேண்டும். எறும்பு ஊர்வது போன்ற சேவை அதிகம் செய்தாகி விட்டது. அணுகுண்டு போடுவதால் உடனே சுத்தம் ஆகி விடுகிறது. இப்போது விசேஷமாக, செய்தியைப் பரப்பும் சேவை செய்ய வேண்டும். இதையே அணுகுண்டு போடுவது என்று சொல்லப்படுகின்றது. எந்தளவு ஒருவர் சக்தி நிறைந்தவராக இருக்கின்றாரோ அந்தளவு சக்தி வாய்ந்த குண்டை பிறர் மீது வீசுவார்கள். இப்பொழுது அனைத்து வித சேவையும் செய்பவர் (All Rounder) ஆக வேண்டும். எவ்வளவுக்கெவ்வளவு ஆவீர்களோ அவ்வளவுக்கவ்வளவு சத்யுகக் குடும்பத்தினரின் அருகாமையில் வருவீர்கள். நாலா புறங்களிலும் சுற்றி சேவை செய்து தன்னை வெளிப்படுத்த (Show) வேண்டும். அப்போதே பயிற்சி அளித்ததன் பலன் கிடைத்ததாகக் கருத முடியும், செயல்முறை வகுப்பிற்குப் (Practical Course) பிறகே முடிவைப் பார்ப்போம். இப்போது ஒரு மாதத்திற்கு பின்னர் மதுவனம் வரும்போது தனியாக வரக்கூடாது. இப்போது பயிற்சி நிறைவடையவில்லை, செய்முறை பாடம் இன்னும் உள்ளது. தனியாக எவரும் திரும்பி வரக்கூடாது. சிலருக்கு வழிகாட்டியாகி வர வேண்டும், யாத்ரீகர்களை அழைத்து வர வேண்டும். பாப்தாதாவிற்கு இந்தக் குமாரிகள் மீது மிகுந்த நம்பிக்கை உள்ளது. நம்பிக்கையின் ரத்தினங்களை பாப்தாதா கண்களில் நிறைத்துக் கொள்கிறார்கள். நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋ ❋❋❋❋❋❋❋

# 18.06.1969 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# குழுக்களுடன் (Party) சந்திப்பு!

**1. பாடசாலைக்குச் செல்கிறீர்களா? பாடசாலையின் முதல் பாடம் என்ன?**

தன்னை மர்ஜீவா (உயிருடன் இருக்கும்போதே இறந்த நிலை) ஆக்குவது. மர்ஜீவா என்றால் தனது தேகத்திலிருந்து, உற்றார் உறவினரிடமிருந்து, பழைய உலகிலிருந்து மர்ஜீவா ஆகுவது ஆகும். இந்த முதல் பாடம் உறுதியானதாக ஆக்கப்பட்டுவிட்டதா? (சமஸ்காரத்திலிருந்து மர்ஜீவா ஆகவில்லை ). ஒருவர் இறந்துபோன பின் அவரது பழைய சமஸ்காரமும் முடிந்து விடுகிறது. இங்கும் கூட பழைய சமஸ்காரம் ஏன் ஞாபகம் வருகிறது? புதிய பிறவி எடுத்தபின் பழைய விஷயங்கள் கூட முடிந்து விட வேண்டும். மர்ஜீவா ஆவது முதல் பாடம் ஆகும். அதை உறுதியானதாக (பக்கா) ஆக்க வேண்டும். முன்பிருந்த பழைய சமஸ்காரம், இது பிறருடையது, எனது அல்ல என்று தோன்ற வேண்டும். முன்பு சூத்திரர்களைச் சேர்ந்தவர்களாக இருந்தோம். இப்போது பிராமணர்களைச் சேர்ந்தவர்களாக இருக்கிறோம். ஆகையால், பழைய சூத்திரர்களுடைய சமஸ்காரம் இருக்கக் கூடாது. பழைய சமஸ்காரத்தை ஏன் தனதாக ஆக்குகிறீர்கள்? பிறர் பொருளை தனதாக ஆக்குபவர்களை என்னவென்று அழைப்பது? திருடன்! ஆகவே, இந்தத் திருட்டைக் கூட ஏன் செய்கிறீர்கள்? இது சூத்திரர்களின் சமஸ்காரம், பிராமணர்களுடையது அல்ல. சூத்திரர்களுடைய பொருளை பிராமணர்கள் ஏன் ஏற்றுக் கொள்கிறீர்கள்? தொடக்கூடாதவர்கள் மீது ஆடை பட்டுவிட்டால் கூட குளிக்கின்றனர். சூத்திர சமஸ்காரம் பிராமணர்களுக்கு வந்து விட்டதெனில் என்ன செய்ய வேண்டும்? அதற்காக முயற்சி செய்ய வேண்டும். எவ்வாறு அழுக்கான பொருளை தொடுவதில்லையோ அவ்வாறு பழைய சமஸ்காரங்களிலிருந்து விலகியிருக்க வேண்டும், தொடக்கூடாது. நீங்கள் இவ்வளவு கவனம் வைத்தால்தான், பிறருக்கும் கவனத்தை ஏற்படுத்த முடியும்.

**2.** சேவையில் வெற்றி அடைவதற்கான முக்கியமான குணம் என்ன**?**
பணிவு! எவ்வளவு பணிவு உள்ளதோ அவ்வளவு வெற்றி கிடைக்கும். நிமித்தம் என்று புரிந்துகொள்வதன் மூலம் பணிவு வருகிறது. நிமித்தம் எனப் புரிந்து சேவை செய்ய வேண்டும். பணிவு என்ற குணம் இருந்தால் அனைவரும் உங்கள் முன் வணங்குவார்கள். யார், தான் தலை வணங்குகின்றார்களோ அவர்கள் முன் அனைவரும் தலை வணங்குவார்கள். நிமித்தம் எனப் புரிந்து காரியம் செய்ய வேண்டும். எவ்வாறு, தந்தை நிமித்தமாத்திரமாக சரீரத்தினுடைய (பிரம்மாவின்) ஆதாரத்தை எடுக்கின்றார், அவ்வாறு நீங்கள் நிமித்தமாத்திரமாக சரீரத்தை ஆதாரமாக எடுத்திருப்பதாகப் புரிந்து கொள்ளுங்கள். ஒன்று சரீரம் நிமித்தமாத்திரமாக இருப்பதாகப் புரிந்து கொள்ள வேண்டும். இரண்டாவது, சேவையில் தன்னை நிமித்தமாக இருப்பதாகப் புரிந்துகொள்ள வேண்டும். அப்போதே பணிவு வரும். பிறகு பாருங்கள், வெற்றி உங்கள் முன்பு செல்லும். எவ்வாறு பாப்தாதா தற்காலிகமாக தேகத்தில் வருகிறார்கள் அவ்வாறு தேகத்தை நிமித்தமான ஆதாரமாகப் புரிந்து கொள்ளுங்கள். பாப்தாதாவிற்கு தேகத்தின் மீது பற்றுதல் ஏற்படுகிறதா என்ன? ஆதாரம் எனப் புரிந்து கொண்டால் அடிமை ஆக மாட்டீர்கள். இப்பொழுது தேகத்தின் அடிமையாக இருக்கிறீர்கள், பிறகு தேகத்தை அடிமை ஆக்கி விடுவீர்கள்.

**3.** திருஷ்டி மூலம் சிருஷ்டி உருவாகின்றது என்று பாடப்பட்டுள்ளது**.** எத்தகைய சிருஷ்டி உருவாகின்றது மேலும் எப்போது உருவாகின்றது**?** திருஷ்டி மற்றும் சிருஷ்டிக்கான பாடல் மட்டும் ஏன் உள்ளது, வாய்க்கு என்று மகிமை ஏன் பாடப்படவில்லை**?** சங்கமயுகத்தில் முதன்முதலில் என்ன மாற்றம் செய்கிறீர்கள்**?** முதல் பாடம் என்ன கற்பிக்கிறீர்கள்**?**
சகோதரன் என்ற பார்வையோடு பாருங்கள். சகோதரப் பார்வை என்றால் முதலில் திருஷ்டியை மாற்றுவதன் மூலம் அனைத்து விஷயங்களும் மாறிவிடுகின்றன. திருஷ்டி மூலம் சிருஷ்டி உருவாகின்றது என்று பாடப்பட்டுள்ளது. எப்போது ஆத்மாவைப் பார்க்கின்றீர்களோ அப்போது இந்த சிருஷ்டி பழையதாகத் தென்படும். திருஷ்டியை மாற்றுவதற்கான முயற்சியே முக்கியமானதாகும். எப்போது இந்த திருஷ்டி மாறுகின்றதோ அப்போது ஸ்திதி மற்றும் சூழ்நிலையும் மாறிவிடுகிறது. திருஷ்டி மாறுவதால் குணம் மற்றும்

செயல் தானாகவே மாறிவிடுகின்றன. இந்த ஆன்மிகப் பார்வை இயற்கையானதாக ஆகி விட வேண்டும்.

**4.** யார் சங்கமயுகத்தில் தனக்குத் தானே ராஜா ஆகின்றார்களோ அவர்களே பிரஜைகளுக்கும் ராஜா ஆக முடியும்!
யார் இங்கு தனக்கே ராஜா ஆகவில்லையோ, அவர்கள் அங்கு பிரஜைகளின் ராஜாவாகவும் ஆக முடியாது, சங்கம யுகத்திலேயே அனைத்து சமஸ்காரங்களுக்கான விதை விதைக்கப்படுகின்றது. இங்கு விதைக்கும் விதை இல்லாமல் எதிர்காலத்தின் விருட்சம் உருவாக முடியாது. இங்கு விதை விதைக்கவில்லை எனில் மலர் எவ்வாறு மலரும். இங்கு தனக்கே ராஜா ஆவதால் என்னவாகும்? தன்னை அதிகாரி எனப் புரிந்துகொள்வீர்கள். அதிகாரி ஆவதற்காக தாராள மனப்பான்மை என்ற விசேஷ குணம் வேண்டும். எவ்வளவு தாராள மனப்பான்மை இருக்குமோ அவ்வளவு அதிகாரி ஆவீர்கள்.

**5.** பிராமணர்களின் முக்கியமான கடமையே கற்பது மற்றும் கற்பிப்பதாகும். இதில் சுறுசுறுப்பாக இருந்தால் பிற விஷயங்களில் புத்தி அலையாது!
ஆகவே தன்னைக் கற்பது மற்றும் கற்பிப்பதில் சுறுசுறுப்பாக வைத்துக் கொள்ளுங்கள். மனதினுடைய விருத்தி மற்றும் அவ்யக்த திருஷ்டி மூலம் சேவை செய்ய இயலும் என பாப்தாதா ஏற்கெனவே கூறியிருக்கிறார்கள். தன்னுடைய விருத்தி, திருஷ்டியின் மூலம் சேவை செய்வதற்கு எவ்வித பந்தனமும் இல்லை. எந்த விஷயத்தில் சுதந்திரமாக இருக்கின்றீர்களோ அதன் மூலம் சேவை செய்ய வேண்டும்.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 26.06.1969 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# படிப்பினை அளிப்பதற்கான சொரூபம் -தன்னுடைய சொரூபத்தின் மூலம் படிப்பினை அளிப்பது!

தந்தை யாரைப் பார்த்துக் கொண்டு இருக்கின்றார்கள்? குழந்தைகளைப் பார்த்துக் கொண்டு இருக்கின்றார்கள்? இன்று முரளியில் என்ன கேட்டீர்கள்? நீங்கள் அனைவரும் யாரை நினைவு செய்கின்றீர்கள்? (தந்தை, ஆசிரியர், சத்குருவை நினைவு செய்கின்றோம்) பாப்தாதாவும் குழந்தைகளை மட்டுமல்லாமல் மூன்று சம்பந்தங்களில் இருந்து மூன்று ரூபத்தில் பார்க்கின்றார்கள். அனைவருமே குழந்தைகள் தான். எனினும் ஆசிரியர் ரூபத்தில் என்ன பார்க்கின்றார்கள்? வரிசைக்கிரமமாக மாணவர்களைப் பார்க்கின்றார்கள். மேலும், குரு ருபத்தில் யாரைப் பார்க்கின்றார்கள் தெரியுமா? வரிசைக்கிரமமாக பின்பற்றக்கூடியவர்களைப் பார்க்கின்றார்கள். யார் பின்பற்றி இருக்கின்றார்கள் மற்றும் யார் இப்போது பின்பற்றப் போகிறவர்கள் ஆகிய இந்த இரு தரப்பினரையும் காண்கின்றார்கள். முக்கியமாக எதைப் பின்பற்ற வேண்டும்? குரு ரூபத்தில் என்ன படிப்பினை அளிக்கின்றார்களோ, அதில் முக்கியமாக எதைப் பின்பற்ற வேண்டும்? குரு ரூபத்தில் உரைத்த முக்கிய பின்பற்றுதலுக்கான விஷயம் எது? (நினைவு யாத்திரை) நினைவு யாத்திரை என்பது ஒரு சாதனம் ஆகும் ஆனால் அதைக் கூட எதற்காக செய்விக்கின்றார்கள்? (பிறருக்கு சத்கதி அளிப்பதற்காக). முதலில் நான் என்ன பின்பற்ற வேண்டும்? நினைவு யாத்திரை கூட எதற்காகக் கற்பிக்கப்படுகின்றது?

அசரீரி, நிராகாரி, பற்றற்றவர் ஆகுவது ஆகிய இவையே குரு ரூபத்தில் பின்பற்ற வேண்டிய முக்கியமான படிப்பினையாகும். நினைவு யாத்திரை கூட, சாகாரத்தில் இருந்தபோதிலும் நிராகாரியாக, பற்றற்றவராக மற்றும் அசரீரியாக ஆகுவதற்காகவே செய்கின்றீர்கள்.

எப்போது அசரிரி ஆவீர்களோ அப்போதே குருவுடன் இணைந்து செல்ல முடியும். முக்கியமான ரூபத்தில் இதையே பின்பற்றிக் கொண்டிருக்கின்றீர்கள் மேலும் பின்பற்ற வேண்டும். ஆசிரியர் ரூபத்தின் நடிப்பு இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறதா அல்லது முடிவடைந்து விட்டதா? திருப்புதல் பாடத்தை (Revise Course), ஆசிரியர் செய்வித்துக் கொண்டு இருக்கின்றாரா அல்லது தனக்குத் தானே செய்து கொண்டு இருக்கின்றீர்களா? (அவரது உதவி இருக்கின்றது) கற்பிப்பதில்லை ஆனால் உதவி செய்கின்றார். திருப்புதல் படிப்பிற்காக பள்ளிக்கு விடுமுறை அளிக்கப்படுகிறது. இதையே வீட்டுப்பாடம் (Homework) என்று சொல்லப்படுகின்றது ஆனால் ஆசிரியருடன் தொடர்பு இருக்கும். உடன் இருப்பதில்லை ஆனால் தொடர்பு மட்டும் இருக்கும். இறுதித் தேர்வு வரை தொடர்பு இருக்கும். திருப்புதல் பாடத்திற்காக ஆசிரியர் ஒவ்வொரு நேரமும் கூடவே இருப்பதில்லை ஆதலால் இப்போது ஆசிரியர் தொலைவில் இருந்தபடியே மேற்பார்வை செய்துகொண்டிருக்கின்றார். எந்த இடத்திலாவது ஏதாவது கஷ்டம் ஏற்பட்டால் நீங்கள் கேட்கலாம். எனினும், கற்பிக்கும் காலத்தில் எவ்வாறு உடன் இருந்தாரோ அவ்வாறு இப்போது உடன் இருப்பதில்லை. திருப்புதல் பாடத்தில் யார் யார் எவ்வளவு சக்தியுடன், எவ்வளவு முயற்சியுடன், ஊக்கம் உற்சாகத்துடன் பாடத்தைப் பயின்று கொண்டிருக்கின்றார்கள் என்பதை இப்போது மேலிருந்தபடியே நல்லமுறையில் பார்த்துக் கொண்டு இருக்கின்றார். மேலிருந்து காண்பதற்கு காட்சி எவ்வளவு நன்றாகத் தெரிகிறது. எவ்வாறு இங்கு மேலே (கதியில்) அமர்ந்து பார்ப்பதற்கும், கீழே அமர்ந்து பார்ப்பதற்கும் வித்தியாசம் உள்ளது அல்லவா! எவரேனும் இதை விட மேலே அமர்ந்து பார்த்தால் எவ்வளவு வித்தியாசம் இருக்கும்! புத்திபலத்தின் மூலம் உணர முடியும். என்ன அனுபவம் ஆகின்றது? இன்று அனுபவம் சொல்கின்றார்கள். அனுபவத்தைக் கேட்பது மற்றும் சொல்வது என்பது பரம்பரை பரம்பரையாக இருந்து வரும் வழக்கமாகும். வதனத்தில் இருந்துகொண்டு என்ன அனுபவம் செய்கின்றார்? ஆகவே வதனத்தில் இருந்தபோதிலும் ஆசிரியர் என்ற தொடர்பு இருக்கும் காரணத்தினால் சிலர் மிகுந்த அலௌகீகத் தன்மையுடன் பாடத்தைத் திரும்பப் பயின்றுகொண்டு (ரிவைஸ்) இருக்கின்றனர், சிலர் நேரத்தை விரயமாக்கிக் கொண்டிருக்கின்றனர், சிலர் நேரத்தை வெற்றிகரமானதாக ஆக்கிக் கொண்டிருக்கின்றனர் என்பதையும்

பார்த்துக் கொண்டு இருக்கின்றார். நேரத்தை இழந்துகொண்டு இருப்பவர்களைக் காணும்பொழுது என்ன ஏற்படுகிறது தெரியுமா? கருணை வருகிறது. ஆயினும், கருணையின் கூடவே சம்பந்தமும் ஈர்க்கின்றது. பிறகு இப்பொழுதே பாபாவிடம் அனுமதி பெற்று சாகார உருவில் சென்று அவர்களுக்கு கவனத்தை ஏற்படுத்த வேண்டும் என்று உள்ளம் விரும்புகின்றது ஆனால் சாகார உருவத்தின் நடிப்பு முடிவடைந்து விட்டதே! ஆகவே தொலைவில் இருந்து கொண்டே சக்தி (சகாஷ்) அளிக்கின்றார். பாபா எவ்வாறு சாகாரத்தில் சிவப்பு கொடி காண்பிப்பார் அல்லவா, அவ்வாறே வதனத்திலிருந்தும் காண்பிக்கின்றார். எனினும், அவ்யக்த ரசனையை அவ்யக்த உதவியை மிகச் சிலரே அடைகின்றனர் என்பது காணப்படுகின்றது.

எந்தவொரு வழியைப் பின்பற்றும் போதும் தடைகள் வருகின்றன. அந்தத் தடைகளைக் கடப்பதற்காக முக்கியமாக என்ன சக்தி வேண்டும் (சகிப்புத் தன்மை) சகிப்புத்தன்மைக்கு முன்னர் என்ன சக்தி தேவை? தடை ஏற்படுத்துவது எது (மாயை), தடைகளை எதிர்கொண்டு வெல்வதற்காக முதலில் பகுத்தறியும் சக்தி தேவை, பிறகு நிர்ணயிக்கும் சக்தி தேவை என்று முன்னரே கூறப்பட்டுள்ளது. இது மாயையா அல்லது யதார்த்தமா, லாபமா அல்லது நஷ்டமா, அல்பகால பிராப்தியா அல்லது சதாகால பிராப்தியா? என்று நிர்ணயம் செய்ய வேண்டும். நிர்ணயம் செய்த பிறகே சகிப்புத்தன்மையை தாரணை செய்ய முடியும். முதலில் பகுத்தறிய வேண்டும் பின்னர் நிர்ணயம் செய்ய வேண்டும். யாருடைய நிர்ணய சக்தி கூர்மையாக உள்ளதோ அவர்கள் ஒருபோதும் தோல்வி அடைய மாட்டார். தோல்வியிலிருந்து தப்பிப்பதற்காக தனது நிர்ணய சக்தி மற்றும் பகுத்தறியும் சக்தியை அதிகரிக்க வேண்டும். நிர்ணய சக்தியை அதிகரிப்பதற்காக என்ன முயற்சி செய்ய வேண்டும்? உடனே நினைவு யாத்திரை என்று நீங்கள் சொல்லி விடுகின்றீர்கள்; ஆனால் நினைவு யாத்திரைக்கும் பலம் கொடுக்கக்கூடிய ஞானம் அதாவது அறிவு எது என்பதும் தெளிவாக புத்தியில் இருக்க வேண்டும். மொத்தமாக புத்தியில் வைக்கப்பட்டுள்ளது ஆனால் மொத்தத்தில் ஆங்காங்கு குறைவு ஏற்பட்டுவிடுகின்றது. பள்ளியில் சில குழந்தைகள் ஒருவரை ஒருவர் காப்பியடித்து மொத்த கூட்டு எண்ணை காண்பித்து விடுவர் ஆனால் மொத்த கூட்டு எண் எவ்வாறு கணக்கிடப்பட்டது என ஆசிரியர்

கேட்டால் குழம்பிவிடுவர். அவ்வாறே, நீங்கள் மொத்தமாக நினைவு யாத்திரை என்று சொல்லி விடுகின்றீர்கள் ஆனால் அந்த மொத்தத்தை எவ்விதத்தில் ஏற்படுத்த இயலும் என்பதையும் அறிந்திருக்க வேண்டும். நிர்ணய சக்தியை அதிகரிப்பதற்காக முக்கியமாக எந்த விஷயத்தின் அவசியம் உள்ளது? (விசார் சாகார் மந்தன்). விசார் சாகர் மந்தன் (எண்ணங்கள் என்ற கடலைக் கடைதல்) செய்து செய்து கடலிலேயே மூழ்கி விட்டால் என்ன செய்வது? சிலர் விசார் சாகர் மந்தன் செய்வதற்காக அமர்கின்றனர் ஆனால் ஒரு சில அலைகள் தன்னுடன் இழுத்துச் சென்று விடுகின்றன. எவ்வாறு சரீரத்தின் ஏதாவதொரு ஸ்தூலமான சக்தி குறையும்பொழுது சக்தி நிறைந்த உணவு அளிக்கப்படுகின்றது. அவ்வாறே நிர்ணய சக்தியை அதிகரிப்பதற்காக அசரீரி, நிராகாரி மற்றும் கர்மத்தில் பற்றற்ற நிலை என்ற இந்த முக்கியமான உணவளிக்க வேண்டும். இவை பற்றி முன்பே கூறப்பட்டுள்ளது. நிராகாரி மற்றும் அசரீரி நிலை புத்தி வரையில் உள்ளது ஆனால் கர்மத்திலிருந்து பற்றற்றவராக இருக்க வேண்டும் மேலும் கர்மம் தனித்தன்மை வாய்ந்ததாக இருக்க வேண்டும். அந்த ஒவ்வொரு கர்மத்தையும் கண்டு மக்கள், இது தனித்தன்மை வாய்ந்ததாக உள்ளது, இது லௌகீகமானது அல்ல, அலௌகீகமானதாக உள்ளது என்று உணர்வார்கள். ஆகவே, நிர்ணய சக்தியை அதிகரிப்பதற்காக இது மிகவும் அவசியமானதாக உள்ளது. எந்தளவு இந்த விஷயங்களை தாரணை செய்வீர்களோ அந்தளவே தடைகளைக் கூட அழிக்க இயலும் மேலும் சிருஷ்டியில் வரப்போகும் தடைகளிலிருந்தும் தப்பிக்க இயலும். படிப்பினையோ அதிகமாக கிடைக்கின்றது ஆனால் இப்பொழுது என்ன செய்ய வேண்டும்? படிக்கும் பாடத்தின் சொரூபம் ஆக வேண்டும். கல்வியும் உங்களது சொருபமும் வெவ்வேறாக இருக்கக்கூடாது. உங்களுடைய சொருபமே பிறருக்கும் படிப்பினையை அளிக்கவல்லதாக இருக்க வேண்டும். சொரூபத்தின் மூலம் கல்வி பிறருக்கும் புகட்டப்படுகின்றது. சில விஷயங்களுக்கு வார்த்தைகளால் படிப்பினை அளிக்கப்படுவதில்லை ஆனால் தன்னுடைய சொருபத்தினால் பாடத்தின் படிப்பினை அளிக்கப்படுகின்றது. ஆகவே, இப்பொழுது படிப்பினையின் சொரூபம் ஆகி, தனது சொருபத்தின் மூலம் படிப்பினை அளிக்க வேண்டும். ஞானம் அதிகமாக கிடைத்துள்ளது. கல்வி நிறைவடைந்து விட்டது அல்லவா!

ஒரு கேள்வி கேட்கப்பட்டது. அது என்னவென்றால் இப்பொழுது பாப்தாதா வேறு ஒரு உடலில் வருகின்றார்கள். எவ்வாறு சாகார ரூபத்தின் மூலம் முரளி சொன்னார்களோ அவ்வாறே ஏன் நடத்தக்கூடாது? முன்பு போல் முரளி நடத்த இயலாதா என்ன? ஏன் மொழி மாறியது, ஏன் கூறும் விதம் மாறியது? போன்ற கேள்விகள் அனேகருக்கு எழுகின்றன. உங்களால் சொற்பொழிவு ஆற்ற இயலுகிறது எனில் பாப்தாதாவிற்கு எந்த உடல் மூலமும் முரளியை வழங்குவது கடினமானதாக இருக்குமா? ஆனால் ஏன் அவ்வாறு நடைபெறுவது இல்லை? (சிலர் தமது கருத்துக்களை தெரிவித்தனர்). எந்த உடல் மூலம் கற்பிப்பதற்கான நடிப்பு இருந்ததோ அந்த கல்வி முறை முடிவடைந்து விட்டது. இப்போது கல்வி கற்பிப்பதற்காக வருவதில்லை. கற்றுத் தரப்பட்ட கல்வி அந்த உடல் மூலமாக முற்று பெற்றுவிட்டது. இப்போது வருவது சந்திப்பதற்காக, மசிழ்விப்பதற்காகத்தான்! முக்கியமான விஷயங்கள் வேறு என்ன உள்ளன? அசரீரி, கர்மாதீத் நிலையை அடைந்து என்ன செய்தார்? ஒரு நொடிப்பொழுதில் பறவையாகி பறந்து விட்டார். சாகார சரீரத்திலிருந்து ஒரு நொடியில் பறந்து விட்டார் அல்லவா? ஆகவே இப்போது படிப்பு முடிவடைந்து விட்டது. உடன் அழைத்துச் செல்லும் ஒரு காரியம் மட்டுமே மீதமுள்ளது. ஆதலால் இப்போது சந்திப்பதற்காக, அவ்யக்த படிப்பினையால் மகிழ்விப்பதற்காக மற்றும் பறக்க வைப்பதற்காக மட்டுமே வருகின்றார்கள். படிப்பினுடைய விஷயங்கள் (Points) இப்போது கற்பித்தல் ரூபத்தில் நடைபெறாது. இப்போது திரும்பப் பயிலும் (ரிவைஸ் கோர்ஸ்) சமயம் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றது. எனினும், எவ்வளவு அவகாசத்தில் திரும்பப் படித்து முடிப்பிர்கள்? எவ்வளவு காலம் வரை பாடத்தை முடிப்பீர்கள்? எதுவரை திரும்பப் பயில்வது, எவ்வளவு கால அவகாசம் இப்போது தேவை என்பதை இப்போது அனைவரும் நிர்ணயம் செய்ய வேண்டும். சாகார உடலில் இருந்தவருடைய (பிரம்மாபாபா) ஒவ்வொரு கர்மம், ஒவ்வொரு ஸ்திதியோடு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். இந்த லட்சியம் வைத்து தன்னை சோதித்துப் பாருங்கள் எதுவரை பயில வேண்டும் என்பது பிறகே தெரிய வரும். எவ்வாறு தன்னை ஆராய்ந்து அறிய வேண்டும் என்று லட்சியம் கொடுக்கப்பட்டுவிட்டது. பின்னர், பதிலளிக்க வேண்டும்.

மற்றுமொரு கேள்வியும் கொடுக்கின்றார்கள். உங்களுடைய வீட்டுப்பாடம் (Home work) நடைபெற்று கொண்டிருக்கிறது. அதில் விசேஷ கவனத்தை ஏற்படுத்துகின்றார். நடைபெற்றது நாடகத்தின் அனுசாரமே நடைபெற்றது. சாகார ரூபத்தில் இருந்தவரை அவ்யக்தமானவராக ஏன் ஆக்கினார்? இதற்கும் சில ஆழமான ரகசியம் உள்ளது. இதன் ஆழத்தில் செல்ல வேண்டும். கடலினுடைய அலைகளில் குளிக்காமல், கடலின் ஆழத்தில் செல்ல வேண்டும். பின்பு என்ன ரத்தினங்கள் கிடைக்கின்றனவோ, அவற்றை எடுத்து வர வேண்டும். இதனுடைய ஆழமான ரகசியம் நாடகத்தில் என்ன பதிவாகியுள்ளது? என்பதை சிந்திக்க வேண்டும். இதில் ஏதோ ஆழ்ந்த ரகசியம் உள்ளது. ரகசியம் இல்லாமல் எந்தவொரு செயலும் நடைபெற இயலாது. நல்லது. இப்போது நேரம் ஆகி விட்டது.

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺
✺✺✺✺✺✺✺

## 06.07.1969 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## டீச்சர் சகோதரிகளுக்காக அவ்யக்த பாப்தாதாவின் மகாவாக்கியங்கள்!

அனைவரும் யாருடைய நினைவில் அமர்ந்திருக்கின்றீர்கள்? ஒருவருடைய நினைவு இருந்ததா அல்லது இருவருடையது இருந்ததா? யார் ஒருவருடைய நினைவில் இருந்தீர்களோ அவர்கள் கை உயர்த்துங்கள். மேலும் யார் இருவருடைய நினைவில் இருந்தீர்களோ அவர்களும் கை உயர்த்துங்கள். இப்போது அந்த இருவர் யார்? அவ்யக்த வதனவாசியா அல்லது வியக்த வதனவாசியா? நீங்கள் அனைவரும் ஆசிரியைகள் அல்லவா? உங்களிடம் யாராவது மாணவர் வந்தால் அவர்களுக்கு என்ன இலக்கைக் கொடுப்பீர்கள்? அனைவருக்கும் என்ன பாடம் புகட்டுவீர்கள்? நீங்கள் ஆசிரியர்கள் அல்லவா? ஆசிரியர்கள் தனது ஆசிரியரை வெளிப்படுத்துவார்கள். மாணவர்களை எவ்விதத்தில் பேணி வளர்ப்பீர்களோ, அவர்களுக்கு இலக்கைக் காண்பிப்பீர்களோ, அவர்கள் பின்னர் ஆசிரியரை வெளிப்படுத்துவார்கள். ஒருவேளை நீங்கள் மாணவர் வந்தவுடனேயே அவ்யக்த வதனத்திற்குச் செல்வதற்கான இலக்கை அளித்தால், அவர்கள் அதற்கான வழியை ஒருபோதும் கண்டதேயில்லை எனில் எவ்வாறு சென்றடைவார்கள். முதலில் முகவரி என்ன கொடுக்கப்படுகின்றது? நீங்கள் அருங்காட்சியகத்தில் என்ன புரிய வைக்கின்றீர்கள்? மாணவர்களுக்கு என்ன அறிமுகத்தை அளிக்கின்றீர்கள்? அவர்களுக்கு எந்த வழியை, எந்த இலக்கை காண்பிக்கின்றீர்கள்? விதையை யார் விதைத்தது? விதை விதை தான். அந்த விதை ஒருவேளை கெட்டுபோனாலும் சமயம் வரும் பொழுது சில கிளைகளாவது முளைக்கின்றன. மழை பொழிந்தால் முளைக்கின்றது. நீங்கள் விதையை மறந்து விட்டீர்கள் என்றால் பிறகு, எவ்வாறு வழிகாட்டுவீர்கள்? விதை எது?

ஆசிரியைகள் யுக்தியுக்தாக பதிலளிக்க வேண்டும். சிறு குழந்தைகள் அல்ல இல்லையா? சிறு குழந்தைகளுக்கு முதலிலேயே கற்றுத் தரப்படுகின்றது. நீங்களோ கற்றுக் கொண்டு, இவ்வளவு பரிபாலனையை அடைந்து இப்போது தேர்வு எழுத வந்திருக்கின்றீர்கள். கற்றலின் கூடவே தேர்வும் எழுதுவீர்கள். இரு காரியங்களும் இணைந்தே நடைபெறும். தந்தை அவ்யக்த வதனவாசி ஆகி விட்டார். ஆகவே நீங்கள் அனைவரும் கூட அவ்யக்த வதனவாசி ஆக வேண்டும். அவர் எந்த சிருஷ்டியில் இருந்துகொண்டு அவ்யக்தமானார்? நீங்கள் எங்கிருந்துகொண்டு ஆக வேண்டும்? (சாகார சிருஷ்டியில்). சிருஷ்டியோ முழு உருளையாக உள்ளது. சிருஷ்டியில் முழு மரம் அடங்கியுள்ளது ஆனால் சிருஷ்டியினுடைய இறுதி சங்கமயுகமாகும். சங்கமயுகமே மேன்மையானதாகும். அதுவே உங்கள் அனைவரையும் இங்கு கொண்டு வந்து சேர்த்தது. நீங்கள் தனது புகலிடத்தை மறந்து விட்டால் பிறகு என்ன ஆகும்? புகலிடம் அளித்தவரும் மறந்து போகும். புகலிடத்தைத் தொடர்ந்து நினைவு செய்யுங்கள். மேலும் பாப்தாதாவிடமிருந்து கிடைத்த கல்வியை தாரணை செய்யுங்கள். தாரணையின் மூலம் பொறுமை மிக்கவராக உள்நோக்குமுகம் உடையவராக ஆவீர்கள். அதன் மூலம் கலியுக ராவண ராஜ்யத்தை அழித்து விடுவீர்கள். இப்போது பயில்வதற்கான காலமாகும், கூடவே தேர்வு எழுதுவதற்கான காலமும் ஆகும். இது ஒரு விஷயம்.

இரண்டாவது விஷயம் ஒன்று உள்ளது. இதன் மீதும் சற்று கவனம் செலுத்துங்கள். இவ்வளவு காலம் வரை பாப்தாதாவின் மடியில் வளர்ந்தீர்கள். மேலும் அக்காலத்தில் என்னவெல்லாம் காரியம் செய்திருக்கிறீர்கள்? சிலர் வெட்கப்பட்டுக் கொண்டு தான் செய்தவற்றை பாப்தாதாவிடம் மறைத்திருக்கிறார்கள். தந்தையைப் பற்றி தெரிந்து கொண்டு அனைத்தையும் தந்தையின் முன் அர்ப்பணம் செய்யவில்லை. அத்தகைய தவறு ஏற்பட்டிருக்கிறது என்று யார் நினைக்கின்றீர்கள்? எவரும் தன்னுடைய மனதிற்கு தெரிந்து தவறு செய்யவில்லை; ஆனால் கவனக்குறைவினால் ஏற்பட்டுவிடுகிறது. இவை அனைத்தையும் எழுத வேண்டும். பாப்தாதாவிடம் எவரெல்லாம் கூறியிருக்கிறார்களோ, அவர்களும் கூட தமது முழு ஜாதகத்தை எழுத வேண்டும். இது இறுதி நேரம் அல்லவா? 84-பிறவிகளுடைய கணக்குவழக்கு இங்கேயே முடிந்து விடுகின்றது. சத்தியம் மற்றும்

தூய்மை என்ற வார்த்தைகளைக் கூறுகிறார்கள் ஆனால், ' சத்தியம் மற்றும் தூய்மை இரண்டிற்கும் உள்ள வித்தியாசம் என்ன என்பதன் அர்த்தத்தைப் புரிந்திருக்கவில்லை. இப்போது அதனுடைய ஆழத்தில் சென்று முழுவதுமாக எழுத வேண்டும்.

அவ்யக்த வதனத்திலிருந்து பாப்தாதா குழந்தைகளுடைய சேவை செய்வதற்காகவும் மற்றும் தூய்மை ஆக்குவதற்காகவும் வந்திருக்கின்றார்கள். தந்தை சேவை செய்கிறார். ஆதியிலிருந்து இறுதிவரை குழந்தைகள் உங்கள் அனைவருடைய சேவகனாக தந்தை இருக்கின்றார். சேலை செய்வதற்காக சதா தயாராக இருக்கின்றார். என்னுடைய குழந்தைகள் கிரீடம் போன்றவர்கள், கண்களின் நட்சத்திரங்கள் என்று தந்தைக்கு எவ்வளவு பெருமை இருக்கிறது. குழந்தைகளுக்காக சொர்க்கம் ஸ்தாபனை ஆகிக் கொண்டு இருக்கின்றது. அந்த சொர்க்கத்தில் வசிப்பவர் ஆக்குவதற்காக தயார்படுத்திக் கொண்டிருக்கின்றார். நான் லட்சுமி நாராயணர் ஆவேன் என்று யார் நினைக்கின்றீர்கள்? இத்தகைய லட்சியம் கிடைத்த பின்பும் கவனக்குறைவுடன் இருக்கின்றீர்கள். ஆகையாலேயே பாப்தாதா சேவை செய்வதற்காக வந்திருக்கின்றார்கள். இறுதி நிலையின் ஆதாரத்திலேயே எதிர்காலம் அமைகிறது. (அந்த் மதி சோ கதி) காலம் போதுமானதாக இல்லை. நேரம் மிக அருகில் வரப்போகின்றது. பெண் சிங்கங்களாகிய, சக்திகளாகிய நீங்கள் புஜங்களைத் தயார் செய்ய வேண்டும். அப்போதே எதிரியுடன் போர் புரிய இயலும். ஒருவேளை தன் மீது நம்பிக்கை இல்லை மேலும் பாப்தாதாவினுடைய முழுமையான அறிமுகம் இல்லையெனில், சக்தி சேனையாகவும் ஆக முடியாது, அந்த சக்தியின் அலங்காரமும் ஏற்படாது. ஒருவேளை தனக்குள் சக்தியை தாரணை செய்து விட்டால் பின்னால் வரக்கூடியவர்களுக்கும் கூட முழுமையான வழி கிடைக்கும். மேலும் அவர்கள் அனைவரும் சக்தி சேனையில் இணைந்து விடுவார்கள். ஆகவே தன்னை உண்மையான ஆபரணம் ஆக்குவதற்காக அனைத்து குறைகளையும் நீக்கித் தூய்மை ஆக வேண்டும். எத்தனை விதமான தங்கம் இருக்கிறது. சில 8-கேரட், சில 12-கேரட் ஆக உள்ளது. சுத்தம் சுத்தம்தான். கேரட் என்ற வார்த்தை நீங்க வேண்டும். தன்னை சீர்படுத்த வேண்டும். இப்பொழுது தன்னை சீராக்குவதற்கான சமயம் கிடைத்துள்ளது. இந்த விஷயத்தை நல்ல முறையில் கவனத்தில்

வைத்திட வேண்டும். பூமியே பிளந்தாலும் தர்மத்தை விடக்கூடாது. எது தர்மம், எது பூமி? தெரியுமா? ஒருமுறை உறுதிமொழி செய்ததை, பாப்தாதாவிற்கு கரத்தை கொடுத்த பிறகு தர்மத்தை விடக்கூடாது. பதிவிரதைகள் தமது தர்மத்தில் மிகவும் உறுதியாக இருப்பார். உண்மையிலும் உண்மையான சீதை, உண்மையான லட்சுமியான நீங்கள் மகாலட்சுமி ஆகப்போகிறவர்கள். தன்னுடைய லட்சியத்தை விட்டு ஒருவேளை கீழே இறங்கியிருந்தீர்கள் எனில் பின்னர் குதித்து லட்சியத்தில் அமருங்கள். பாப்தாதா குழந்தைகள் உங்களுடைய சேவை செய்வதற்காக சேவகன் ஆகி ஞானக் கல்வியை அளித்துக் கொண்டிருக்கின்றார்கள். கட்டளையிடுவதில்லை ஆனால் படிப்பினை கொடுக்கின்றார்கள். ஏனெனில் தந்தை ஆசிரியராகவும் இருக்கின்றார், சத்குருவாகவும் இருக்கின்றார். ஒருவேளை குழந்தைகளுக்குக் கட்டளை கொடுத்த பின் அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை எனில் அது நல்லது அல்ல. அதனால் படிப்பினை அளிக்கின்றார்.

இன்று அஸ்திவாரம் போடப்படுகின்றது. சிறு குழந்தைகளுக்குத் திலகம் இடப்படுகின்றது. என்ன செய்ய வேண்டும், எவ்வாறு ஆக வேண்டும் என்று அவர்களுக்கு வழி சொல்லப்படுகின்றது. உங்கள் அனைவருக்கும் ஏற்கெனவே வழி கிடைத்து விட்டது. நீங்கள் பிறருக்கு வழிகாட்டுவதற்கு நிமித்தம் ஆகியிருக்கின்றீர்கள். ஒருவேளை அந்த வழியில் ஏதாவது குழப்பம் ஏற்பட்டால் அதை நீக்க வேண்டும். இப்பொழுதும் கூட நீக்கவில்லையெனில் சக்திகளுக்கு எதிர்காலத்திற்காக என்ன பலம் கிடைத்துள்ளதோ, அது அழிந்து விடும் என்று புரிந்துகொள்ளுங்கள். அத்தகைய நிலை பாப்தாதாவிற்கு ஆங்காங்கு தென்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகையால் குழுவில் அனைவருடைய உள்ளங்களையும் ஒற்றுமையாக ஆக்குவதற்காக, முழுமையாக வழியைக் காண்பிப்பதற்காக உங்களை வரவழைத்துள்ளோம். உங்கள் அனைவருக்கும் குஷி இருக்கும். சிறுசிறு குழந்தைகளை எங்கேயாவது விழா முதலியவைக்கு அழைத்துச் சென்றால், புது ஆடை அணிந்துகொண்டு அங்கு செல்வோம் என்று மிகுந்த குஷி ஏற்படுகிறது அல்லவா! நீங்கள் அனைவரும் எத்தகைய புதிய ஆடை, அலங்காரம் செய்ய வேண்டும். ஒருபுறம் சேவகராகவும் ஆக வேண்டும். சேவகர் என்றால் பதீத ஆத்மாக்களை சீர்திருத்த வேண்டும். அச்சேவையை நிலையாகச் செய்யுங்கள். நீங்கள்

# 1969 அவ்யக்த முரளிகள்!

அனைவரும் வரப்போகிற ஆத்மாக்களை எவ்வாறு சீர்திருத்த வேண்டும்? எவ்வாறு தடைகளை விலக்க வேண்டும்? அம்பில் கூர்மை இருந்தால் ஒரே தடவையில் முழுவதுமாக அம்பு தைத்து விடும், அந்த ஆத்மாவிற்கும் முன்னேற்றம் ஏற்பட்டுவிடும். சின்னச் சின்னக் குழந்தைகள் யாரை சீர்திருத்தம் செய்வீர்கள்? எந்த மலையை தூக்கியிருக்கிறீர்கள்? மலையைத் தூக்குவதற்கு யார் நிமித்தமாக இருக்கின்றார்கள்? கோபகோபியர்கள்! எப்பொழுது கடமையை முழுமையாகச் செய்வீர்களோ அப்பொழுதே கோபிகை ஆக முடியும். அவ்வளவு வலிமை இருந்தால் மட்டுமே மலையைத் தூக்க முடியும். ஆகவே இந்த அனைத்து விஷயங்களைப் பற்றியும் தெளிவுபடுத்துவதற்காக தந்தை வரவேண்டியதாயிற்று.

மற்றபடி ஒரே தடவையில் பாப்தாதா திலகம் வைத்து விட்டார். குங்குமப்பொட்டா அல்லது சந்தனமா? குங்குமப் பொட்டு முகத்திற்கு அழகு, சந்தனம் ஆத்மாவிற்கு அழகு சேர்க்கிறது. நீங்கள் ஆபரணம் கூட தோற்றத்தை அழகுறச் செய்வதற்காக அணியக்கூடாது, உலகிற்குக் காண்பிப்பதற்காக ஆடை அணியக்கூடாது ஆனால், உலகத்தினர் விரும்புமாறு மற்றும் உள்ளம் விரும்புமாறு, அகத்தில் தன்னை அலங்கரிக்க வேண்டும், (குண) ஆபரணம் அணிய வேண்டும். உலகத்தினர் விருப்பமானது வெளிநோக்கு முகமாகும். உள்ளத்தின் விருப்பமானது உள்நோக்குமுகமாகும். ஆகவே உள்நோக்குமுகம் உடையவராகி தன்னை அலங்கரிக்க வேண்டும். உலகத்தினர் விருப்பத்தின்படி சொற்பொழிவு ஆற்றப்பட்டது, மகிழ்விக்கப்பட்டது ஆனால் சொற்பொழிவில் என்ன ரகசியம் புதைந்துள்ளதோ, அது ஒவ்வொன்றும் தன்னுடைய கர்மேந்திரியங்களில் நிரம்ப வேண்டும். அப்போதே அழகு பெறுவீர்கள். உங்கள் செயல்களில் இருந்து தெய்வீக குணங்கள் வெளிப்பட வேண்டும். அலங்கரிப்பதற்காகவே தெய்வீக குணங்கள் பற்றிய வகுப்பு நடத்தப்படுகின்றது. அவ்வாறு அலங்கரிக்கப்பட்டவராகி சங்கமயுகத்தைக் கழித்திட வேண்டும். பிறகு தன்னுடைய வீடு செல்ல வேண்டும். பிறகு, வீட்டிலிருந்து எங்கு செல்ல வேண்டும்? மாமனார் வீடு. கன்னிகை மாமனார் வீடு செல்கின்றார். ஒருவேளை எழுதப் படிக்கத் தெரியாதவராய், புத்திகூர்மை இல்லாதவராய் இருந்தாரெனில், மாமியார் மாமனார் இவரிடம் எழுவதற்கான, அமர்வதற்கான, நன்முறையில் நடந்து கொள்வதற்கான

புத்தி இல்லை என்று கூறுவார்கள். இப்போது நீங்கள் மாமனார் வீடு செல்ல வேண்டும். ஆகவே தந்தை காலடியைப் பார்ப்பதில்லை ஆனால் ஒவ்வொரு கர்மேந்திரியத்தையும் கவனிப்பார். காலடி என்ற வார்த்தை பெரிய அளவிலானது. ஒரு அடியில் கோடி பலன் கிடைக்கின்றது. அது தன்னுடைய நன்மைக்காகக் கிடைக்கின்றது ஆனால் கர்மேந்திரியங்களை அலங்கரிக்க வேண்டும். ஆபரணம் அணிந்து செல்ல வேண்டும். இப்போது அலங்கரிப்பதற்காக யாரிடம் வந்திருக்கின்றீர்கள்? பாப்தாதாவின் வீட்டிற்கு! அதாவது தன்னுடைய வீட்டிற்கு வந்திருக்கின்றீர்கள். அலங்காரம் செய்விப்பவர் யார்? விவாக நிச்சயம் செய்யப்பட்டவருக்கு ஆபரணம் செய்பவர் ஒருவர் இருப்பார். அணிவிக்கக்கூடியவர் வேறொருவராக இருப்பார். ஆகவே இப்பொழுது அலங்கரித்துக் கொண்டு செல்ல வேண்டும், புரிந்ததா?

நீங்கள் அனைத்தும் புரிந்து கொண்ட புத்திசாலியான ஆசிரியைகளாக இருக்கின்றீர்கள். 15-நாட்களின் முடிவை (Result) இறுதி முடிவாகக் கருதுங்கள். அவ்வளவு முயற்சி செய்து திறமையுள்ள ஆசிரியையாக அனைவரும் ஆக வேண்டும். பிறகு எப்பொழுது தன்னுடைய சேவை நிலையத்திற்குச் சென்று பராமரிப்பீர்களோ, அப்பொழுது வரக்கூடியவர்களுக்கு திருஷ்டி மூலமாக சத்யுக சிருஷ்டியைக் காண்பிக்க முடியும். (குண) ஆபரணங்களை நன்முறையில் அணிந்தால் மட்டுமே இந்நிலை சாத்தியமாகும். ஒருவேளை கவனக்குறைவினால் ஏதாவது ஒரு நகை கீழே விழுந்து விட்டால் நஷ்டமும் விளையும் மேலும் அலங்காரமும் அழகற்றதாகி விடும். ஆகையால், அழகைப் போக்கக்கூடாது, ஆபரணங்களைக் கழற்றக்கூடாது. இது ஒன்றும் பெரிய விஷயமல்ல, சிறிய விஷயம் என நினைத்தால் சகஜமாகப் புரிந்து விடும். ஒருவேளை மிகப் பெரிய, உயர்ந்த ஞானம் என்று சொன்னால் யாரும் வரமாட்டார்கள். 7-நாட்களில் ஜீவன்முக்தி என்ற பிராப்தி கிடைக்கின்றது என்று சொன்னால் லாட்டரியைப் பெற அனைவரும் வருவார்கள். அனைவரும் லாட்டரி வாங்குகின்றனர். பின்னர் லாட்டரியில் எவருக்காவது கொஞ்சம் கிடைத்தால் அதிர்ஷ்டம் இருப்பதாக நினைக்கின்றனர். வாய்ப்பு உள்ளது, யாருக்கு அதிர்ஷ்டம் ஏற்படுகிறது என்று பார்க்கலாம். சிலருக்கு பெரிய லாட்டரி கிடைக்கிறது, சிலருக்கு சிறியதாகக் கிடைக்கிறது. தேர்வு இறுதியில் நடைபெறும். 3-எண்கள் வெளிப்படுவார்கள். யார் எவ்வளவு முயற்சி

செய்வார்களோ அதன் அனுசாரம் எண் கிடைக்கும். அதிர்ஷ்டத்தை ஏற்படுத்திக் கொள்வது தன்னுடைய கையில் தான் உள்ளது. ஆகவே, இப்போது காத்திருக்கக் கூடாது, மாறாக ஏற்பாடு செய்து கொண்டே (தயாராக) இருக்க வேண்டும். நல்லது.

மிகுந்த பொக்கிஷம் கிடைத்து விட்டது. இப்போது அவற்றை தன்னிடம் சேமித்து வையுங்கள். மேலும் பசுவைப் போல் அசை போட வேண்டும். நீங்கள் அனைவரும் பசுக்களாகவும் இருக்கின்றீர்கள், கோபியர்களாகவும் இருக்கின்றீர்கள். மலையை எவ்வாறு தூக்க வேண்டும், பசுவாகி எவ்வாறு அசை போட வேண்டும் என்ற இந்த காரியத்தை இந்த பட்டியில் செய்ய வேண்டும். பல வேடத்தைத் தரித்து பல காரியங்களைச் செய்ய வேண்டும். பட்டியின் தினங்களுக்குள் அனைத்தையும் அனுபவம் செய்து விடவேண்டும். எந்தளவு முயற்சி செய்வீர்களோ அந்தளவு முடிவு வெளிப்படும். சம்பூரண நிலையை அடைவதற்கான லட்சியம் என்ன, சாதனம் என்ன என்பதை அறிய வேண்டும். சாதனம் கிடைத்து விட்டால் லட்சியத்தைப் பற்றிக் கொள்வீர்கள். ரத்தினங்களை பகுத்தறியவும் வேண்டும் அல்லவா? முழுமையான மதிப்பு கொடுக்க வேண்டும். நகையின் மதிப்பை பொற்கொல்லரே கண்டறிய இயலும். எவரிடம் கண்டறியும் தன்மை இல்லையோ அவரிடம் மதிப்பும் இராது. கையில் மெருகும் ஜொலிப்பும் இருந்தால் மட்டுமே அதன் மதிப்பை கணிக்க முடியும். அப்போதே மதிப்பும் இருக்கும். அதைப் பற்றித் தெரிந்தவர்கள் அறிந்து கொள்வார்கள். ஜொலிப்பு இல்லையெனில் யார் வாங்குவார்கள். உண்மையான நகையா அல்லது போலியானதா எனத் தெரியவில்லை, பணமும் கொடுத்து, நகையும் பயனற்றதாக ஆகி விட்டால் என்ன செய்வது? என்று எண்ணுவார்கள். ஆகவே உங்கள் அனைவருடைய அனைத்து அலங்காரங்களும் முழுமை பெற்றுவிட்டால், வாங்குபவர்களும் வருவார்கள் மேலும் நீங்கள் வதனவாசி ஆகி விடுவீர்கள்.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 16.07.1969 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# மதுபன்வாசி கோபர்களுடன் அவ்யக்த பாப்தாதாவினுடைய அவ்யக்த உரையாடல்!

இன்று எதற்காக அழைப்பு விடுத்தீர்கள்? சந்திப்பதற்காகத் தான் அழைத்தீர்களா அல்லது வேறு ஏதேனும் லட்சியம் உள்ளதா? நீங்கள் அனைவரும் இந்த கூட்டத்திற்கு எந்த அழைப்பின் பேரில் வந்திருக்கின்றீர்கள்? மதுபன்வாசி கோபர்களுடைய இந்த சந்திப்பு எந்த லட்சியத்துடன் நிகழ்கின்றது? குழந்தைகள் உங்கள் அனைவருடைய பரிவர்த்தனை (மாற்றம்) விழாவிற்காகவே பாப்தாதா வருகை புரிந்துள்ளார்கள். ஆகவே பரிவர்த்தனை மாற்றம் விழாவிற்கு வந்திருக்கின்றிகள். பட்டியில் எதற்காக அமர்ந்து இருந்தீர்கள்? பரிவர்த்தனைக்காக அமர்ந்திருந்தீர்கள். ஆகவே இன்று பரிவர்த்தனை விழாவில் சந்தித்துக் கொண்டு இருக்கின்றீர்கள். மாறுவதற்கான தீவிர விருப்பம் அனைவருக்குள்ளும் மிக அதிகமாகவே உள்ளது. உற்சாகமும் இருக்கிறது, தைரியமும் இருக்கிறது. இன்றைய பட்டியினுடைய நாட்குறிப்பு (சார்ட்) மூலம் இது தெரிய வருகிறது. இந்த கோபர்களின் பரிவர்த்தனையினுடைய உற்சாகத்திலிருந்து தங்களுக்கு (குமாரகா தாதிக்கு) என்னென்ன தெரிகின்றது? எவ்வாறு புயலைக் கண்டு மழை பொழியப் போகிறது என்று அறிய முடிகிறதோ, அவ்வாறு இந்த பரிவர்த்தனையினுடைய ஊக்கத்திலிருந்து தாங்கள் என்ன புரிந்திருக்கின்றீர்கள்? பரிவர்த்தனை எதை உணர்த்துகிறது? இந்த பரிவர்த்தனையின் ஊக்கமானது விசேஷமாக இப்பொழுது பிரத்யட்சத்திற்கான சமயம் அருகாமையில் உள்ளது என்பதை உணர்த்துகிறது. முதலில் பிரத்யட்சம் ஆகும் பிறகு இந்த சிருஷ்டியில் சொர்க்கம் பிரத்யட்சம் ஆகும். ஆகவே பிரத்யட்சம் ஆகப்போகிறது என்பதை உணர முடிகிறது.

நிகழ்காலத்தில் ஒவ்வொரு குழந்தையும் அவரவர் பிரத்யட்சத்தை பிரத்யட்ச ரூபத்தில் கொண்டு வருவதைக் காண முடிகிறது. முன்பு குப்தமாக இருந்தது. எவ்வாறு சூரியனின் பிரகாசத்தில் நட்சத்திரங்கள் மறைந்து இருக்கின்றன. சூரியன் மறைந்த பிறகு நட்சத்திரங்களின் ஜொலிப்பு வெளிப்படுகின்றது. அவ்வாறே, இப்பொழுது ஞானசூரியன் வியக்தத்தை விடுத்து அவ்யக்த வதனத்தில் நிற்கின்றார். ஆகவே வியக்த தேசத்தில் நட்சத்திரங்களாகிய நீங்கள் பிரத்யட்சமாகத் தெரிகின்றீர்கள். முன்பை விட இப்போது ஒருவரை ஒருவர் நன்கு அறிந்திருக்கிறீர்கள் அல்லவா? ஒவ்வொரு நட்சத்திரத்திலும் ஒரு உலகம் இருப்பதாகச் சொல்கின்றனர் அல்லவா? ஆனால் ஒவ்வொரு நட்சத்திரத்திலும் என்ன உலகம் உள்ளது என்பது தெரியாது. இந்த ஆகாய நட்சத்திரங்களில் எந்த உலகமும் இல்லை ஆனால் இந்த பூமியில் சைத்தன்ய நட்சத்திரங்களுக்குள் ஒவ்வொரு உலகம் உள்ளது. தன்னுடைய உலகத்தின் காட்சி கிடைக்கின்றதா? உங்கள் அனைவருடைய சங்கமயுகத்தின் சம்பூரண ரூபத்தை சிறிது காலத்திலேயே பார்ப்பீர்கள். சங்கமயுகத்தின் சம்பூரண ரூபம் எது எனத் தெரியுமா? சக்திகள் மற்றும் பாண்டவர்கள் என்ற ரூபம். இந்த சங்கமயுகத்தின் சம்பூரண சொரூபத்தை நீங்கள் அனைவரும் இப்போது பிரத்யட்சமாக தனக்குள் உணர முடியும். நம்முடைய பக்தர்கள் யார், பிரஜைகள் யார் என்பது தெரிந்து விடும். பிரஜைகள் ஆகப்போகிறவர்கள் அருகாமையில் வருவார்கள், பக்தர்கள் ஆகப்போகிறவர்கள் இறுதியில் உங்களது சரணங்களில் தலைவணங்குவார்கள். ஆகவே ஒவ்வொரு நட்சத்திரத்திற்குள் உருவான ராஜ்யம் அதாவது உலகம் இப்போது வெளிப்படப்போகிறது. எப்போது அத்தகைய பிரத்யட்சம் ஏற்படுமோ அப்போது அனைவரும் ஆஹா, பிரபு என்ற கோஷம் எழுப்புவார்கள். இப்போது அந்த சமயம் அருகில் வந்து கொண்டு இருக்கின்றது. ஆகவே இப்போது விரைவாக மாற்றத்தைக் கொண்டு வாருங்கள். நீங்கள் படைப்பாளர் அல்லவா! படைப்பாளர் எவ்வாறு இருப்பாரோ அவ்வாறே படைப்பும் இருக்கும். படைப்பாளர் தன்னுடைய படைப்பின் மீது கவனம் செலுத்த வேண்டும்.

இந்த சமயம் பாப்தாதாவிற்கும் கூட மகிழ்ச்சியாக உள்ளது. அன்பு மற்றும் துணிவு ஆகிய இரண்டையும் கண்டு மகிழ்ச்சி அடைகின்றார்கள். ஒவ்வொருவரிடமும் அன்பு மற்றும் துணிவு

உள்ளது. அதற்கான விதை மட்டுமல்லாமல் விதையினுடைய பிரத்யட்ச பலனும் கொஞ்சம் தெரிகிறது. அந்த பிரத்யட்ச பலனைக் கண்டு மகிழ்ச்சி அடைகின்றார்கள் ஆனால் கனி உருவாகும்போது அதை பராமரிக்கவும் வேண்டியிருக்கும். நீங்களும் கூட இந்தக் கனியை மிகவும் பாதுகாப்பாக வைக்க வேண்டும். ஏனெனில் அந்தக் கனியை பாப்தாதாவையே சுவீகரிக்கச் செய்ய வேண்டும் ஆனால் இடையில் மாயை என்ற குருவி பழத்தை எச்சில்படுத்தி விடாமல் எச்சரிக்கையாக பார்த்துக் கொள்ள வேண்டும். கனி கனிந்த பின் பறவைகள் அதை உண்பதற்காக மிகுந்த முயற்சி செய்யும். அவ்வாறே இந்த மாயையும் இந்தக் கனியை உண்பதற்கு முயற்சி செய்யும் ஆனால் நீங்கள் யாருக்காக கனியை கனிய வைத்துள்ளீர்கள்? ஆகவே, பூரணமாகப் பாதுகாக்க வேண்டும். இப்போது கனி வெளியிடப்பட்டுள்ளது, முழுமையாக கனிந்த பின் சுவீகாரம் (உண்பார்) செய்வார்கள். அதுவரை பராமரிக்க வேண்டும். கனியைப் பாதுகாக்க என்ன முயற்சி செய்வீர்கள்? அதற்கான சாதனம் உங்களிடம் என்ன உள்ளது? ஒருவேளை கனி சிறிதளவு எச்சில்படுத்தப்பட்டால் கூட, சுவீகாரம் செய்யப்பட மாட்டாது. இப்போது நம்பிக்கையோ மிக நன்றாகவே உள்ளது. அனைவருடைய நெற்றியில் ஆத்ம நட்சத்திரம் தெரிகிறது எனினும் அதன் கூடவே உங்கள் நெற்றியில் வேறு என்ன பிரகாசம் இருக்கின்றது? நம்பிக்கைகளின் நட்சத்திரம் பிரகாசித்துக் கொண்டிருப்பதை பாப்தாதா பார்த்துக் கொண்டு இருக்கின்றார்கள். இந்த நட்சத்திரங்களுக்கு முன்பு மேகத்தை மட்டும் வரவிடக்கூடாது. இல்லையெனில் நட்சத்திரம் மறைந்து போகும். பிரகாசித்துக் கொண்டிருக்கும் நம்பிக்கை நட்சத்திரம் என்ன தெரிந்து கொண்டிருக்கின்றதோ அதைப் பேணிக் காத்தல் வேண்டும். ஒருபோதும் எந்தவொரு காரியத்திலும், அது ஸ்தாலமானதோ அல்லது சூட்சுமமானதோ, ஒன்று ஒருபோதும் துணிவை இழக்கக்கூடாது, இரண்டாவது தங்களுக்குள் அன்பு நிலையானதாக இருக்க வேண்டும். அதன் பிறகு பாண்டவர்களுக்கு வெற்றி கிடைக்கும், வெற்றி முழக்கம் கேட்கும். இப்போதோ அவ்வப்போது கொஞ்சம் கொஞ்சம் கிடைக்கிறது. எப்போது வெற்றி கிடைக்குமோ அப்போது நாடகமும் முடிவடைந்து விடும். பின்னர் உங்கள் அனைவருடைய அவ்யக்த ஸ்திதியின் கொடியானது தொலைவிலிருந்தே காண்பதற்குத் தெரியும். உங்கள் அனைவரது அவ்யக்த, ஏக்ரஸ் நிலையின் கொடியானது முழு உலகை

ஆனந்தம் அடையச் செய்யும். இன்று பரிவர்த்தனைக்கான உறுதிமொழி கங்கணம் என்ன கட்டியிருக்கிறீர்களோ அதை நிரந்தரமாக வைத்துக் கொள்ள வேண்டும். கங்கணத்தை அவிழ்த்துக் விடக்கூடாது. எந்த ஒரு கங்கணம் கட்டினாலும் மேற்கொண்ட காரியம் வெற்றி பெறாதவரை, அது அவிழ்க்கப்படலாகாது. ஆகவே இந்தக் கங்கணத்தை ஒருபோதும் அவிழ்க்கக்கூடாது.

காலம் செல்லச் செல்ல மிகச் சிறந்த காட்சிகள் தோன்றும் ஆனால் அக்காட்சிகள் உங்களுடைய பரிவர்த்தனையே அருகில் கொண்டுவரும், தன்னுடைய மதிப்பும் கூட தெரிந்து விடும். எப்போது தன்னுடைய மதிப்பு தெரிந்து விடுமோ அப்போது போதை ஏற்படும். இப்பொழுது, அவ்வப்போது ஒருமாதிரி மதிப்பிடுகிறீர்கள், அவ்வப்போது வேறொரு மாதிரியாக மதிப்பிடுகிறீர்கள். கருத்தில் மாறுதல் ஏற்படுகின்றது. எவ்வாறு ஒரு பொருள் வாங்கப்படும்பொழுது முதலில் அதன் விலை கொஞ்சம் ஏற்ற இறக்கத்துடன் பேரம் பேசப்பட்டாலும் பிறகு இறுதியாக ஒரு விலை பேசி முடிவெடுக்கப்படுகின்றது. தன்னுடைய இறுதியான மதிப்பை இப்பொழுது நீங்கள் அறியவில்லை. அவ்வப்போது மிகுந்த மதிப்புமிக்கவராக நினைக்கின்றீர்கள், சில சமயம் குறைவாக நினைக்கின்றீர்கள் ஆனால் ஒவ்வொருவருடைய யதார்த்தமான மதிப்பு என்ன என்பது இப்பொழுது விரைவிலேயே தெரிந்து விடும்.

நீங்கள் அமர்ந்திருக்கும் இந்த மதுவனம் முழு உலகிற்கு மத்தியில் என்னவாக உள்ளது? மதுவனமானது முழு உலகிற்கு மத்தியில் பாப்தாதாவினால் மிகுந்த அன்போடு உருவாக்கப்பட்ட கண்ணாடிப் பெட்டகமாகும் (ஷோகேஸ்). கண்ணாடிப் பெட்டகத்தில் மிக நல்ல நல்ல பொருட்களை வைப்பார்கள். மற்ற பொருட்களை விட உயர்ந்த பொருளை கண்ணாடிப் பெட்டகத்தில் வைப்பார்கள். மதுவனம் முழு உலகிற்கும் ஷோகேஸ் ஆக உள்ளது. இந்த ஷோகேஸில் மதிப்பு வாய்ந்த ரத்தினங்களாகிய நீங்கள் வைக்கப்பட்டிருக்கின்றீர்கள். நாம் மதுவனம் என்ற ஷோகேஸில் மதிப்பு வாய்ந்த ரத்தினமாக இருக்கின்றோம் என்பது தெரியுமா? ஷோகேஸில் வைக்கப்படும் பொருட்கள் மீது விசேஷ கவனம் வைக்கப்படும். நீங்கள் அனைவரும் ஷோகேஸில் வைக்கப்பட்டிருக்கும் முக்கியமான ரத்தினங்கள் ஆவீர்கள். உங்களைக் கண்டு உள்ளே என்ன பொருள் இருக்கின்றது

என்று அனைவரும் புரிந்து கொள்வார்கள். ஒருவேளை ஒரு விஷயத்தை நினைவில் வைத்தீர்களெனில் ஷோகேஸில் காட்சிப்பொருள் ஆகி, உள்ளே இருப்பதை வெளிக்காட்டுவீர்கள். என்ன கர்மம் நான் செய்வேனோ, என்னைக் கண்டு பிறரும் செய்வார்கள்! நான் தனியாக இல்லை. என்னுடைய முன்னும் பின்னும் முழு ராஜ்யம் உள்ளது. எனது பிரஜைகள், எனது பக்தர்கள் என்னைப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். நான் தனித்து இல்லை என்று ஒவ்வொருவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

எந்தக் காரியம் தனித்து செய்யப்படுகின்றதோ அதற்காக இவ்வளவு சிந்திக்கத் வேண்டியதில்லை. இப்பொழுது தன்னை தனது பிரஜை மற்றும் பக்தர்களுக்கு மத்தியில் இருப்பதாகப் புரிந்து கொள்ள வேண்டும். அனைவரும் உங்களை பின்பற்றுவார்கள். நொடிக்கு நொடி நீங்கள் எடுத்துவைக்கும் அடியானது உங்களுடைய சமஸ்காரத்தின் ஆதாரத்தில் உள்ளது. அந்த சமஸ்காரமானது உங்களுடைய பக்தர்கள் மற்றும் பிரஜைகளுக்குள் நிறைகின்றது. தாயின் வயிற்றில் கர்ப்பம் இருக்கும்பொழுது எவ்வளவு பராமரிக்கின்றார்கள்! ஏனெனில் தாய் என்ன செய்வாரோ, என்ன உண்பாரோ அந்த சமஸ்காரம் குழந்தைகளுக்குள் பதிந்து விடும். என்ன கர்மம் நான் செய்வேனோ, என்னைக் கண்டு என்னுடைய பிரஜைகள் மற்றும் என்னுடைய துவாபரயுகத்திலிருந்து கலியுகம் வரை உள்ள பக்தர்களும் கூட அவ்வாறே ஆவார்கள், கோவில் கூட அவ்வாறே உருவாகும், மூர்த்தியும் அவ்வாறே உருவாகும், கோவிலுக்கான இடம் கூட அதற்கேற்றார் போலவே கிடைக்கும் என்று நீங்கள் அனைவரும் இத்தகைய கவனம் வைக்க வேண்டும். அதனால் நான் இப்பொழுது தனித்து இல்லை. மாஸ்டர் படைப்பாளரான என்னுடன் படைப்பும் இருக்கின்றது என்ற லட்சியத்தை வைத்துக் கொள்ளுங்கள். தாய், தந்தையானவர்கள் தனித்து இருக்கும்பொழுது என்ன வேண்டுமானாலும் செய்யலாம் ஆனால் தன்னுடைய படைப்பிற்கு முன்பு இருக்கும்பொழுது எவ்வளவு கவனம் கொடுப்பார்கள்! நீங்களும் படைப்பாளர்களே! படைப்பாளர் என்ன செய்வார்களோ அதையே படைப்புகளும் செய்வார்கள். தனக்கு பொறுப்பு உள்ளது என்று புரிந்து கொண்டால் சோம்பேறித்தனம் மற்றும் அலட்சியம் அழிந்து விடும். என்ன பொறுப்பு உள்ளது? என்ன கர்மம் நான் செய்வேனோ.....

ஒவ்வொரு நட்சத்திரமும் தனது உலகத்தை அறிந்து இருக்க வேண்டும். சிலருடைய உலகம் சிறியதாக உள்ளது, சிலருடையது பெரியதாக உள்ளது.

ஒரு விழா கொண்டாடப்படுவது வாழ்க்கை முழுவதும் நினைவுச்சின்னமாக இருப்பதற்காகவே. இந்த விழாவும் எதற்காக கொண்டாடப்படுகின்றது? இன்றைய தினம் நினைவுச்சின்னம் ஆகும். விழாவின் ஞாபகார்த்தமாக ஏதாவது கொடுக்கப்படுகின்றது அல்லவா! பாப்தாதா ஞாபகார்த்தமாக எதைக் கொடுக்கின்றார்கள்? விசேஷமாக மதுவனத்தில் உள்ளவர்களுக்கு பாப்தாதா இரு விஷயங்களுடைய பரிசை வழங்குகிறார்கள், துணிவு மற்றும் அன்பை விடக்கூடாது என்ற படிப்பினை கிடைத்து விட்டது. பரிசு என்ன கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள்? **1.**எனக்கு பாபா ஒருவரைத் தவிர வேறு யாரும் இல்லை என்ற இந்த ஒரே ஈடுபாட்டில் ஒவ்வொரு நொடியும் இருக்க வேண்டும், **2.**சிக்கனமாக இருக்க வேண்டும். அந்த ஒருவருடைய நினைவு மற்றும் சிக்கனம் ஆகிய இவை இரண்டும் இன்றைய விழாவிற்கான பரிசாகும். ஒருவர் எவ்வளவு தான் தன்பக்கம் ஈர்த்தாலும் எனக்கு ஒருவரைத் தவிர வேறு யாரும் இல்லை என்றிருக்க வேண்டும். இது மனதிற்கான விஷயம் ஆகும். சிக்கனம் என்பது கர்மத்திற்கான விஷயம். ஆகவே மனம் மற்றும் செயல் ஆகிய இரண்டும் சரியானதாக இருந்தால் வார்த்தைகளும் சரியானதாக இருக்கும். இந்த இரு விஷயங்களையும் விசேஷமாக கவனத்தில் வைக்க வேண்டும். சாகார ரூபத்தில் கூட ஒரே ஈடுபாட்டுடன், சிக்கனத்துடன் இருந்ததைக் கண்டீர்கள் அல்லவா? என்ன ஒரு மந்திரம் சொன்னார் என்பது நினைவில் உள்ளதா? குறைந்த செலவில் அதிக லாபம்! சிக்கனம் என்பதன் கூடவே இந்த மந்திரத்தையும் மறக்கக்கூடாது. சிக்கனமாகவும் இருக்க வேண்டும், கூடவே எவ்வளவு சிக்கனமாக இருக்கின்றீர்களோ அவ்வளவு பரந்த உள்ளமுடையவராகவும் இருக்க வேண்டும். பெருந்தன்மையில் சிக்கனம் அடங்கியுள்ளது. இதையே குறைந்த செலவில் அதிக லாபம் என்று சொல்லப்படுகின்றது!

நீங்கள் மற்ற அனைவரையும் விட அதிக பாக்கியசாலியாக இருக்கின்றீர்கள், ஏன்? யாருடைய வீட்டிற்கு அதிகமான விருந்தினர்

வருகின்றார்களோ, அவர்கள் மிகுந்த பாக்கியசாலிகள் என்று சொல்கின்றனர். ஆகவே நீங்கள் அதிக பாக்கியசாலிகள். ஏனெனில் அனைத்தையும் விட அதிக விருந்தினர் இங்கு வருகின்றனர் ஆனால் விருந்து உபசாரம் செய்ய வேண்டியது இருக்கும். தன்னுடைய வீட்டை விடுத்து வாழ்வு முழுவதுமே விருந்தினராகி விடும்படியாக விருந்து உபசாரம் செய்ய வேண்டும். உங்களுடைய விருந்து உபசாரம் அவர்களை சதா காலத்திற்கும் விருந்தினர் ஆக்கி விட வேண்டும். பாப்தாதா சாகாரத்தில் இதை செய்து காண்பித்து இருக்கின்றார்கள். ஒரு தினத்தின் விருந்தோம்பலில் முழு வாழ்க்கையின் விருந்தாளி ஆக்கி விட வேண்டும். அத்தகைய விருந்து உபசாரம் செய்ய வேண்டும். இதையே தந்தையை குழந்தை வெளிப்படுத்துவது என்று சொல்லப்படுகின்றது. நல்லது.

இந்த வகுப்பில் அனைவரையும் விட அதிக முயற்சியாளர் யார்? முதல் எண்ணில் உள்ளவர் யார்? ஒருவரை விட ஒருவர் என அனைவருமே சிறப்பானவர்களாக இருக்கின்றீர்கள். இதுவே அதிசயம் ஆகும். இந்தக் குழுவில் மட்டுமே அனைவருமே முதன்மையானவர்களாகி உள்ளனர். ஏனெனில் ஒருவர் ஒரு விஷயத்தில் விசேஷமான முயற்சி செய்திருக்கின்றார், இன்னொருவர் இன்னொரு விஷயத்தில் செய்திருக்கின்றார். ஆகையினாலேயே அனைவருமே முதல் எண்ணில் உள்ளனர். இந்தக் குழுவினர் தன் மீது முதல் எண்ணினுடைய முத்திரையைப் பதித்து விட்டனர். இந்த முதல் எண்ணின் முத்திரையை மறக்கக்கூடாது. முக்கியமான நான்கு விஷயங்களை மறத்தல் ஆகாது. **1.**படிப்பினை, **2.**எச்சரிக்கை, **3.**முத்திரை, **4.**ஒருவரை ஒருவர் முன்னேறச் செய்து உயர்வடைய வேண்டும். இந்த நான்கு விஷயங்களை ஒருபோதும் மறக்கக்கூடாது. நல்லது.

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

## 17.07.1969 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## அவ்யக்த ஸ்திதியை உருவாக்குவதற்கான யுக்திகள்!

அவ்யக்த ஸ்திதி பிடித்தமானதாக இருக்கிறதா அல்லது வியக்கத்தில் வருவது பிடித்தமானதாக இருக்கிறதா? அவ்யக்த ஸ்திதியில் சப்தம் உள்ளதா? சப்தத்தைக் கடந்து இருப்பதற்கு விரும்புகின்றீர்களா? நீங்கள் அனைவரும் சப்தத்தைக் கடந்து இருப்பதற்கான முயற்சி செய்கின்றீர்கள். அது பிடித்தமானதாகவும் உள்ளது. பிறகு, பாப்தாதாவை வியக்தத்தில் ஏன் அழைக்கின்றீர்கள்? ஒவ்வொரு வினாடியும் அவ்யக்த நிலையில் இருக்க வேண்டும். அதற்காக என்ன முயற்சி செய்ய வேண்டும்? ஒரு வார்த்தை மட்டும் கூறுங்கள். அந்த ஒரு வார்த்தை மூலம் அவ்யக்த ஸ்திதி உருவாக வேண்டும். எந்த ஒரு வார்த்தையை நினைவில் வைத்தால் அவ்யக்த ஸ்திதி உருவாகும்? எண்ணம், சொல், செயல் ஆகிய இந்த மூன்றுமே வியக்தத்தில் இருந்தபோதிலும் அவ்யக்தமானதாக இருக்க வேண்டும். இதற்காக ஒரு வார்த்தையைக் கூறுங்கள். (ஆத்ம அபிமானி ஆக வேண்டும்). ஆத்ம அபிமானி நிலை என்றால் அவ்யக்த ஸ்திதி ஆனால் அந்த ஸ்திதிக்காக என்ன நினைவு வேண்டும்? என்ன முயற்சி செய்ய வேண்டும்? பிறருக்குள் என்ன விஷயம் இருக்குமோ அது முன்னமே உங்களுக்குத் தெரிந்து விடும். மெள்ள மெள்ள அனைவருடைய ஸ்திதியும் அத்தகையதாகி விடும். இதற்காக பயிற்சி செய்வித்துக் கொண்டிருக்கின்றோம். எவ்வளவுக்கெவ்வளவு நீங்கள் அவ்யக்த ஸ்திதியில் நிலைத்திருப்பீர்களோ அவ்வளவுக்கவ்வளவு ஒருவர் வாயினால் சொன்னாலும், சொல்லாவிடினும், அவருடைய உள்ளத்தின் கருத்தை முன்னமே அறிந்து விடுவீர்கள். அத்தகைய காலம் வரப்போகின்றது. ஆகவே, இந்தப்பயிற்சியை செய்விக்கின்றோம்.

எந்த ஒரு வார்த்தையை நினைவில் வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருந்தோம். தன்னை விருந்தினர் எனப் புரிந்து கொள்ள வேண்டும். ஒருவேளை விருந்தினர் என புரிந்து கொண்டால், இறுதி நேர அவ்யக்த ஸ்திதியைப் பற்றிய வர்ணனை என்ன செய்யப்படுகின்றதோ, அந்த நிலை ஏற்பட்டுவிடும். தன்னை விருந்தினர் எனக் கருதினால், பிறகு வியக்தத்தில் இருந்தாலும் கூட அவ்யக்த நிலையில் இருப்பீர்கள். விருந்தினருக்கு எவர் மீதும் பற்று இருக்காது. நாம் இந்த சரீரத்தில் விருந்தினராக இருக்கின்றோம். இந்த பழைய உலகிலும் கூட விருந்தினரே. சரீரத்திற்கே நாம் விருந்தினர் எனில், சரீரத்தின் மீது என்ன ஈடுபாடு வைப்பது! இன்னும் சிறிது காலத்திற்காக மட்டுமே இந்த சரீரத்தைப் பயன்படுத்த வேண்டும். இங்கு விருந்தினர் ஆனால் அங்கு என்ன ஆவீர்கள்? எந்தளவு இங்கு விருந்தினர் ஆவீர்களோ, அந்தளவே பிறகு அங்கு விஷ்வத்தின் எஜமானர் ஆவீர்கள். இந்த உலகின் தலைவர்கள் அல்ல. இந்த உலகில் நாம் விருந்தினராக இருக்கின்றோம், புதிய உலகின் எஜமானர்களாக இருக்கின்றோம், வியக்த உணர்வில் நீங்கள் வந்து விடுவதற்கான காரணம் தன்னை விருந்தினர் எனப் புரிந்து கொள்ளாததே ஆகும். பொருட்கள் மீதும் கூட தனக்கு அதிகாரம் இருப்பதாக எண்ணுகின்றனர். ஆகையால் அதன் மீதும் பற்றுதல் ஏற்பட்டுவிடுகின்றது. தன்னை விருந்தினர் என்று கருதினால் பிறகு இந்த அனைத்து விஷயங்களும் அழிந்து விடும்

தன்னுடைய சேமிப்பையும் (Bank Balance) கணக்கி வேண்டும். சம்பாதிப்பது அனைத்தும் செலவழிந்து விடுகின்றதா அல்லது கொஞ்சம் சேமிப்பும் ஆகிறதா? மொத்தத்தை கணக்கிட்டு பார்த்துள்ளீர்களா? எவ்வளவு சேமித்திருக்கின்றீர்கள்? அந்த சேமிப்புக் கணக்கைப் பார்த்து தனக்குத் தானே திருப்தி ஏற்படுகின்றதா? இல்லை சேமிப்பு செய்வதற்காக இன்னும் கால அவகாசம் உள்ளதா? எவ்வளவு சமயம் உள்ளது? சமயமும் இல்லை, திருப்தியும் இல்லையெனில் பிறகு என்னவாகும்? தன்னுடைய சேமிப்பை அதிகரிக்க வேண்டும் என்பதில் இப்பொழுது அனைவரும் விசேஷ கவனம் செலுத்திட வேண்டும். குறைந்ததிலும் குறைந்தது தனக்குத் தானே திருப்தி ஏற்படும்படியாக சேமிப்பு இருத்தல் வேண்டும். தன்னுடைய வருமானத்தில் தானே திருப்தியாக இல்லையெனில் பிறருக்கு என்ன

கொடுப்பீர்கள்? ஒவ்வொருவரும் எவ்வளவு சேமித்திட வேண்டும்? தனக்காக மட்டும் சேமிப்பு செய்ய வேண்டுமா அல்லது பிறருக்காகவும் செய்ய வேண்டுமா? பிறருக்கு தானம் செய்வதற்கான சேமித்திட வேண்டாமா? உங்கள் அனைவரிடமும், அனைவரும் பிச்சைக்காரன் உருவில் இந்த பிச்சை கேட்பார்கள். அத்தகையதொரு சமயம் இப்பொழுது வரும். அப்போது அவர்களுக்கு என்ன கொடுப்பீர்கள்? அந்தளவு சேமிப்பு செய்ய வேண்டுமல்லவா! தனக்காக செய்து தான் ஆக வேண்டும் ஆனால் அதன் கூடவே அந்தகைய காட்சி அனைவரின் முன் தோன்றும். இன்று யார் தன்னை நிறைந்தவர்களாகக் கருதுகின்றார்களோ, அவர்களும் பிச்சைகாரன் உருவில், உங்கள் அனைவரிடமிருந்து யாசிப்பார்கள். எவ்வாறு பிச்சை அளிக்க முடியும்? சேமிப்பு இருந்தால் தானே கொடுக்க முடியும். வள்ளலின் குழந்தைகள் என்றால் அனைவரும் கொடுக்கக்கூடியவர்களே ஆவீர்கள். உங்கள் அனைவருடைய ஒரு வினாடி பார்வைக்காகவும், மதிப்பு வாய்ந்த வார்த்தைக்காகவும் கூட தாகத்துடன் இருப்பார்கள்! அத்தகைய இறுதிக் காட்சியை தன் எதிரில் வைத்து முயற்சி செய்யுங்கள். வாசலில் பசியுடன் வந்த ஆத்மா வெறுங்கையுடன் செல்லும்படியாக ஆகி விடக்கூடாது. சாகாரத்தில் என்ன செய்து காண்பித்திருக்கின்றார்? எந்தவொரு ஆத்மாவும் அதிருப்தியாகிச் செல்லக்கூடாது. எத்தகைய ஆத்மாவாக இருப்பினும் திருப்தியுடன் செல்ல வேண்டும். ஆகவே அப்பேற்பட்ட விஷயங்களை சிந்திக்க வேண்டும். தனக்காக மட்டுமல்ல.

நீங்கள் இப்பொழுது படைப்பாளராக இருக்கின்றீர்கள். படைப்பாளராகிய உங்கள் ஒவ்வொருவரின் பின் படைப்பும் உள்ளது. தாய், தந்தைக்கு குழந்தைகள் இல்லாதவரை அவர்களது வருமானம் அவர்களுக்காகவே செலவிடப்படுகின்றது. படைப்பு படைக்கப்பட்டu பின் படைப்பிற்கும் பூரண கவனம் செலுத்த வேண்டியிருக்கும். தனக்காக செய்த வருமானத்தை நீண்டகாலம் உண்டு களித்து விட்டீர்கள் ஆனால் இப்போது தன்னுடைய வருமானத்தின் மீதும் கவனம் செலுத்த வேண்டும். நீங்கள் தன்னுடைய படைப்பை பார்த்திருக்கிறீர்களா? எவ்வளவு படைப்பு உள்ளன? சிறிய அளவில் உள்ளதா அல்லது பெரிய அளவில் உள்ளதா? பாப்தாதா ஒவ்வொருவருடைய முடிவையும் காண்கின்றார்கள். ஒவ்வொரு நட்சத்திரத்திற்கும் எவ்வளவு படைப்பு

உள்ளது? இங்கு எந்தளவு படைப்பு இருக்குமோ அந்தளவு அங்கு பெரிய ராஜ்யம் இருக்கும். இங்கு எவ்வளவு படைப்பைப் படைத்திருக்கின்றீர்கள்? தனது படைப்பைப் பார்த்திருக்கின்றீர்களா? எதிர்காலத்தை அறிந்திருக்கின்றீர்களா? அனைவருமே படைப்பாளர்கள்தான் எனினும் படைப்பு பெரிய அளவில் உள்ளதா அல்லது சிறிய அளவில் உள்ளதா? (பெரிய அளவில் படைக்கவே விருப்பம் உள்ளது). பெரிய அளவு படைப்பின் கூடவே பிறகு பொறுப்புகளும் பெரியதாக இருக்கும். நல்லது.

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵ ✵✵✵✵✵✵✵

## 19.07.1969 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஜீரோ மற்றும் ஹீரோ ஆகுங்கள்!

இன்று எதற்காக அழைத்தீர்கள்? (சக்தியை நிறைத்து கொள்வதற்காக). சக்தியை நிறைத்துக் கொள்வதற்காக அழைத்தீர்கள் எனில், எந்த விஷயத்தில் சக்தியற்றவராக கருதுகின்றீர்கள்? விசேஷமாக எந்த விஷயத்தில் பலத்தை நிரப்ப வேண்டும்? சேவையில் கூட பலம் எதன் மூலம் நிரம்பும்? தனக்குள் எவ்வளவு பலம் நிறைந்துள்ளது என்பதை சோதிக்க வேண்டும். உங்கள் அனைவருடைய பெயரே சிவசக்தி ஆகும். ஆகவே, சக்திகளிடம் சக்தி இருக்கத்தான் செய்கிறது. அல்லது, சக்தி சொரூபம் ஆகிக் கொண்டிருக்கின்றீர்களா? எந்த ஆபரணம் பாப்தாதாவினுடைய, சிருஷ்டியினுடைய அலங்காரம் செய்வதற்குத் தயாராக இருக்கின்றது என்பதைக் காண்பதற்காகவே பாப்தாதா வந்திருக்கின்றார்கள். இப்பொழுது ஆபரணமோ தயாராகி விட்டது ஆனால் தயார் ஆன பிறகு என்ன செய்யப்படுகின்றது? மெருகேற்றப்படுகின்றது (Polish). இப்பொழுது மெருகேற்றப்படுவது மட்டும் பாக்கி உள்ளது. எந்த முக்கியமான விஷயத்தில் மெருகேற்றப்பட வேண்டும் என்றால் அனைவரும் அதிகத்திலும் அதிகமாக அவ்யக்த ஸ்திதியில் இருப்பதற்காக விசேஷமாக நேரம் ஒதுக்க வேண்டும். அவ்யக்த ஸ்திதியின் மெருகேற்றப்படுவதுதான் பாக்கி உள்ளது. தங்களுக்குள் உரையாடும் பொழுது ஆத்மா என்ற ரூபத்தில் பாருங்கள். சரீரத்தில் இருந்தபோதிலும் ஆத்மாவையே பாருங்கள். இது முதல் பாடம் ஆகும். இதுவே அவசியமாக உள்ளது. இதுவரையில் கேட்ட அனைத்து த தாரணைகளை வாழ்வில் கொண்டு வருவதற்காக இந்த முதல் பாடத்தையே பக்கா (உறுதி) செய்ய வேண்டும். இந்த ஆன்மிக திருஷ்டி நடைமுறையில் குறைவாக உள்ளது. சேவையில் அதிக வெற்றி கிடைக்க வேண்டும் என்றாலும் ஆத்ம ஸ்திதியில் இருந்து சேவை செய்ய வேண்டும். இதுவே வெற்றிக்கான முக்கிய சாதனமாகும். முதல் பாடமே பாலிஷ் செய்வது ஆகும். இதுவே அவசியமானதாகும். முழு நாளிலும் இந்த ஆன்மிக

# 1969 அவ்யக்த முரளிகள்!

திருஷ்டி, நினைவு எவ்வளவு உள்ளது என்று எப்பொழுதாவது சோதித்திருக்கின்றீர்களா? தன்னுடைய சேவைக்கான முடிவைக் (Result) கொண்டு இந்த ஸ்திதியை அறிய முடியும். இந்த நிலையானது விளக்கு போன்றதாகும் விட்டில்பூச்சிகள் தானாகவே விளக்கை நோக்கி கவரப்பட்டு செல்கின்றன.

நீங்கள் அனைவரும் ஆசிரியர்களே. மற்றபடி ஆசிரியரிலிருந்து என்னவாக ஆவதற்காக பட்டிக்கு வந்திருக்கின்றீர்கள்? நீங்கள் மிகவும் யோசிக்கின்றீர்கள் ஆனால் மிக எளிதானதாகும். தனக்குச் சமமாக ஆக்குவதற்காக அழைக்கப்பட்டிருக்கிறீர்கள். தனக்குச் சமமாக என்றால் ஜீரோ (Zero) ஆக்குவதற்காக அழைக்கப்பட்டுள்ளீர்கள். ஜீரோவில் விதை அதாவது புள்ளியும் அடங்கும். மேலும் ஏதாவது தவறான காரியம் ஏற்பட்டுவிட்டாலும் கூட அதையும் ஜீரோ (பூஜ்யம்) ஆக்கி விட வேண்டும். ஆகவே விசேஷமாக ஜீரோவை நினைவு செய்வதற்காக அழைக்கப்பட்டிருக்கின்றீர்கள். அனைவரையும் விட சிறிய உருவம் தந்தையினுடையதும் மற்றும் உங்கள் அனைவருடையதும் ஆகும். ஆகவே இப்பொழுது ஜீரோவை நினைவில் வைத்தீர்களென்றால் ஹீரோ (Hero கதாநாயகன்) ஆகி விடுவீர்கள். ஹீரோ நடிகனாகவும் இருப்பார், பாப்தாதாவிற்குப் பிரியமானவராகவும் இருப்பார். ரத்தினத்தையும் ஹீரா (ஹிந்தியில்) என்று சொல்லப்படுகின்றது மற்றும் முக்கிய நடிகரையும் ஹீரோ என்று சொல்லப்படுகின்றது. எதற்காக அழைக்கப்பட்டீர்கள் என்பதை இப்பொழுது புரிந்து கொண்டீர்களா? இரண்டு வார்த்தைகளை மட்டும் நினைவு கூர்வதற்காகவே அழைக்கப்பட்டிருக்கின்றீர்கள் -அவை ஜீரோ மற்றும் ஹீரோ (Zero, Hero). இந்த இரு விஷயங்களை நினைவில் வைத்தீர்கள் எனில் தந்தைக்குச் சமமாக சர்வ குணங்களிலும் சம்பன்னம் ஆகி விடுவீர்கள். விஸ்தாரத்தை அடக்கிக் கொள்ளப்படுகின்றது அல்லவா? 15-தினங்களாக அதிகம் பயின்றீர்கள். பிறகு பாப்தாதா உங்களுடைய விஸ்தாரத்தை சாரமாக எடுத்துரைக்கின்றார். மற்ற அனைத்தும் மறந்து போனாலும் இது மறக்காது. இதை நினைவில் வையுங்கள். பிறகு பாருங்கள், சேவையில் எவ்வளவு விரைவாக மாற்றம் ஏற்படுகிறதென்று! நாமும் மாற வேண்டும் மற்றும் சமயமும் மாற வேண்டும்! நம்முடைய வீட்டிற்குச் செல்ல வேண்டும் என்பதே உங்கள் அனைவரின் விருப்பமாக உள்ளது. வீட்டிற்குச் செல்வதற்கான

விருப்பம் இருக்கின்றது எனில் இந்த இரு விஷயங்களை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். பிறகு குறைகளுக்குப் பதிலாக அதிசயம் செய்து காண்பிப்பீர்கள். குறைகள் அழிந்து விடும்; பிறகு மேலும் எங்கு பார்த்தாலும், கேட்டாலும் அதிசயமே அதிசயமாகக் காண்பார்கள். ஆகவே, இந்த பட்டியில் என்னவாக ஆகிச் செல்வீர்கள்? ஜீரோ! ஜீரோவில் எந்த விஷயமும் இருக்காது. எந்தவொரு பழைய சமஸ்காரமும் இருக்காது. இங்கு விடுவதற்காக வந்திருக்கின்றீர்கள். ஆகவே எதை விட வேண்டியிருந்ததோ அதை நல்ல முறையில் விட்டுவிட்டுச் செல்கின்றீர்களா அல்லது கொஞ்சம் தன்னுடனும் எடுத்துச் செல்வீர்களா? எதை விட்டிருக்கின்றீர்கள் மற்றும் எவ்வளவு விட்டிருக்கின்றீர்கள்? சிறிது காலத்திற்காக விட்டிருக்கின்றீர்களா அல்லது சதா காலத்திற்காக விட்டிருக்கின்றீர்களா? குழுவின் சக்தியினால் விட்டு விட்டீர்களா அல்லது தன்னுடைய எந்த சக்தியினால் விட்டுவிட்டீர்களா? குழுவினுடைய சக்தி உதவி செய்கிறது எனினும் குழுவினுடைய சக்தியின் கூடவே தன்னுடைய சக்தியும் வேண்டும். எப்பொழுதாவது எதையாவது விடுகிறார்கள் எனில் அதை சதா காலத்திற்காக விடுதல் வேண்டும்.

பாப்தாதாவிற்கு நீங்கள் அனைவரும் பிரியமானவர்களே ஏனெனில், தந்தை கூட குழந்தைகள் உங்களுடைய உதவியுடன் காரியம் செய்வித்துக் கொண்டிருக்கின்றார். ஆகவே, காரியத்தில் உதவியாளராக இருப்பவர், பிரியத்துக்குரியவரே ஆவார் ஆனால் உதவியாளர் ஆவதன் கூடவே தைரியசாலியாகவும் ஆவது என்பது அவ்வப்பொழுது குறைவாகவே உள்ளது. சில சமயம் தைரியத்தை இழந்து விடுகின்றனர். ஒருவேளை தைரியம் உள்ளது என்றால் நிச்சயமாக உதவி கிடைக்கும். ஆகவே உதவியாளர் ஆவதன் கூடவே கொஞ்சம் தைரியசாலியாகவும் ஆகுங்கள். சின்னச்சின்ன விஷயங்களில் தைரியத்தை இழந்து விட வேண்டாம். தைரியசாலி ஆவதனால் உங்கள் அனைவரின் விருப்பமும் பூர்த்தியடையும். இப்பொழுது தைரியம் அவசியமாக உள்ளது. தைரியம் எவ்வாறு ஏற்படும்? ஒவ்வொரு சமயம், ஒவ்வொரு அடியில், ஒவ்வொரு சங்கல்பத்திலும் பலியாவதால் ஏற்படுகின்றது. யார் பலியாகின்றாரோ, அவரிடத்தில் தைரியம் அதிகம் இருக்கும். ஆகவே எவ்வளவுக்கெவ்வளவு தன்னை பலியாக்குகின்றீர்களோ,

அவ்வளவுக்கவ்வளவே கழுத்து மணி மாலையில் அருகாமையில் வருவீர்கள். இப்பொழுது பலியாவீர்கள் பிறகு பிரபுவின் கழுத்து மாலை ஆவீர்கள். ஒருவேளை பலியாகியபடியே கர்மங்களைச் செய்தீர்கள் என்றால் பிறரையும் கூட பலியாகச் செய்வீர்கள். அவர்களே வாரிசு என்று அழைக்கப்படுகின்றனர். இப்பொழுது பிரஜைகள் அதிகம் உருவாகின்றனர், வாரிசுகள் குறைவாக உருவாகின்றனர். எவ்வளவு அதிகமாக உருவாக்குவீர்களோ அவ்வளவே அருகாமையில் வருவீர்கள். ஆகவே இப்பொழுது வாரிசை உருவாக்குவதற்கான திட்டத்தை சிந்தியுங்கள். நல்லது. /// **END**///

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋❋

## 23.07.1969 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# வெற்றிக்கு ஆதாரம் பகுத்தறியும் சக்தி!

பாப்தாதா ஒவ்வொருவரையும் பார்க்கும்பொழுது என்ன பார்க்கின்றார்கள்? பாப்தாதா ஒவ்வொருவரிடத்திலும் நான்கு விஷயங்களைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். அவை எந்த நான்கு விஷயங்கள்? (ஒவ்வொருவரும் அவரவர் கருத்தைக் கூறினர்). ஒன்று கிரீடத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்; இரண்டாவது சிம்மாசனம்; மூன்றாவது முயற்சி; நான்காவது அதிர்ஷ்டம். இந்த நான்கு விஷயங்களை ஒவ்வொருவரிடமும் பார்த்துக் கொண்டிருந்தார்கள். சங்கம யுகத்தின் கிரீடம் எது என்பது தெரியுமா? இன்று பாப்தாதா சிம்மாசனதாரி மற்றும் கிரீடதாரி குழந்தைகளுடைய சபையில் வந்திருக்கின்றார்கள். கிரீடதாரிகள் தான் இக்குழுவில் அழைக்கப்பட்டுள்ளனர். எனினும், ஒவ்வொருவருடைய கிரீடமானது அவரவர் சக்திக்கேற்பவே உள்ளது. ஆகவே, இந்த சங்கமயுகத்தில் யார் யார் கிரீடதாரி மற்றும் சிம்மாசனதாரி ஆகி அமர்ந்திருக்கின்றார்கள்? யார் யார் பெரிய கிரீடத்தை அணிந்துள்ளார்கள் மற்றும் யாரெல்லாம் சிறிய கிரீடத்தை அணிந்துள்ளார்கள்? கிரீடத்தை சதா தலையில் வைத்துள்ளார்களா? அல்லது அவ்வப்போது கிரீடத்தை ஒதுக்கி வைத்து விடுகின்றார்களா? என்பதைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

நீங்கள் அனைவரும் தன்னைத் தான் அறிந்திருக்கின்றீர்கள் அல்லவா? ஏனெனில் அனைவரும் தேர்ந்தெடுக்கப்பட்ட ரத்தினங்கள் ஆவீர்கள். எனவே இந்த அறிமுகம் நிச்சயம் தெரிந்திருக்கும். தனது முயற்சி மற்றும் அதிர்ஷ்டத்தை அறிந்திருக்கின்றீர்களா? நீங்கள் தன்னை முழுமையாக அறிய முடிகிறதா? உதாரணமாக, நீங்கள் அட்வான்ஸ் பார்ட்டியில் (Advance Party) செல்கின்றீர்கள் என வைத்துக் கொள்ளுங்கள். இப்போதைய உங்களுடைய முயற்சியின் அனுசாரம் உங்களுடைய அதிர்ஷ்டம் என்னவாக இருக்கும் என்பதைப் புரிந்திருக்கின்றீர்களா? தன்னுடைய நிகழ்கால முயற்சி மற்றும்

அதிர்ஷ்டத்தை அறிந்திருக்கின்றீர்களா? எப்பொழுது தன்னை அறிய இயலுமோ அப்பொழுதே பிறரையும் அறிய இயலும்! இதை அறிந்து கொள்வதற்கான அவசியமும் உள்ளது. ஏனெனில் கண்டறியும் சக்தி உங்களுக்கு மிகவும் அவசியமானதாகத் தேவைப்படுகின்ற காலம் இப்பொழுது வந்து கொண்டிருக்கின்றது. சேவையில் வெற்றி பெறுவதற்கான முக்கியமான சாதனம் இது தான். எவ்வாறு கண்டறியும் சக்தி தீவிரம் ஆகுமோ அவ்வாறே வெற்றியும் கிடைக்கும். முழுமையாகக் கண்டறியாத காரணத்தால் அவர்களுக்கு என்ன தேவையோ, எந்த ரூபத்தினால் அவர்களுடைய அதிர்ஷ்டம் உருவாக முடியுமோ, அந்த ரூபம் அவர்களுக்குக் கிடைப்பதில்லை. ஆகவே தான் சேவையில் கூட குறைவாகவே வெற்றி கிடைக்கின்றது. குறைவான சேவையின் முடிவாகக் காணப்படுவது என்னவென்றால் பிரஜைகள் மிகுதியாகவும் வாரிசுகள் மிகக் குறைவாகவும் உருவாகின்றனர். நாடியை முழுமையாகப் பகுத்தறிய முடியாததே வாரிசுகள் குறைவாக உருவாகுவதற்கான காரணமாகும். நோயாளியை முழுமையாக ஆய்ந்து அறிந்த பின்னரே சரியான மருந்தளிக்க இயலும் அல்லவா? பிறகு நோயும் அகன்று விடும். விசேஷமாக நிமித்தமாகியிருக்கக்கூடிய பாண்டவர்களுக்கு, எதிர்காலத்தில் வரப்போகிற விஷயங்களைக் கண்டறியும் சக்தியும் வேண்டும், நிர்ணயம் செய்யும் சக்தியும் வேண்டும். நிர்ணயத்திற்குப் பிறகு நிவாரணம் செய்யும் சக்தியும் தேவை. அப்பொழுதே எதிர்கொள்ள இயலும். மேலும் எதிர்கொண்ட பிறகு யக்ஞுத்தினுடைய பிரத்யட்சதாவின் வெற்றியை அடைவீர்கள்.

உங்களை பாபா எதற்காக அழைத்திருக்கின்றார்? கணக்கிடப்படுகின்றது அல்லவா? ஏணிப்படியில் இறங்குவது மற்றும் ஏறுவதற்கான ஞானத்தைக் கற்பிக்கவே அழைத்திருக்கின்றார். இப்பொழுது எந்த விஷயத்தில் இறங்க வேண்டும் மற்றும் எந்த விஷயத்தில் ஏற வேண்டும். பெரியவர்கள் ஆகி விட்டீர்கள். பெரியவர்கள் ஆன பிறகு குழந்தை ஆவதற்கான ஏணியில் இறங்க வேண்டியது வரும்பொழுது உடனடியாக இறங்க முடிவதில்லை. ஒரு விநாடியில் எஜமானராகவும், அடுத்த விநாடியில் குழந்தை ஆவதற்கான அவசியம் உள்ளது. எங்கு குழந்தை ஆக வேண்டுமோ அங்கு எஜமானாக ஆவதாக கொஞ்சம் தெரிகிறது. நேரத்திற்கேற்ற சொருபத்தை எவ்வாறு கொண்டு வர

வேண்டும் என்பதைக் கற்பிப்பதற்காகவே அழைக்கப்பட்டிருக்கிறீர்கள். உதாரணமாக, நீங்கள் ஒரு குழுவில் இருக்கின்றீர்கள் என்றால், குழுவில் ஏதாவதொரு விஷயம் பற்றி கலந்து ஆலோசிக்கும்பொழுது, கருத்தை தெரிவிக்கும் நேரத்தில் தலைவன் ஆகி, கருத்தை தெரிவித்தல் மிக நன்று, ஆனால் குழுவில் நிமித்தமாகியிருக்கும் சகோதரன் அல்லது சகோதரி முடிவெடுக்கும் சமயத்தில் தனது புத்தியை முற்றிலுமாக குழந்தை நிலைக்கு கொண்டு வந்து விட வேண்டும். குழந்தை நிலையினுடைய தகுதி என்ன? தலைவனாகி கருத்தைச் சொல்லும்பொழுது உத்வேகத்துடன் சொல்வீர்கள். பிறகு குழந்தை நிலையில் முற்றிலும் சங்கல்பம் அற்றவர்களாக ஆகி விடுவீர்கள். இவ்விதம் குழுவுடன் இருக்கும்பொழுது நிமித்தமானவர் முன்பு எஜமானனுக்குண்டான புத்தியுடன் ஆலோசனை வழங்கிய உடனேயே குழந்தை நிலைக்கு புத்தியை மாற்றிவிட வேண்டும். இதில் தான் நன்மையும் உள்ளது ஆனால் எஜமானாகவே மட்டும் இருந்தால் அதன் முடிவு என்னவாக இருக்கும்? ஒன்று நேரம் விரயமாகி விடுகின்றது மற்றும் சக்தியும் வீணாகி விடுகின்றது. மேலும் ஒருவருக்கு ஒருவர் அன்பு செலுத்துவது என்பது அதிகரிப்பதற்குப் பதிலாக குறைந்து போவதற்கு வாய்ப்பு உள்ளது. ஆகவே, நீங்கள் எவ்வாறு பொறுப்புகளைப் பெறுவீர்களோ அவ்வாறே நீங்கள் இந்த ஏணியில் ஏறுவதும் இறங்குவதும் கூட அவசியமானதாக இருக்கும். ஆகவே, எதிர்கால சேவையின் வெற்றிக்காக முன்கூட்டியே இந்த படிப்பினை அளித்துக் கொண்டிருக்கின்றார். நீங்கள் அனைவரும் அனுபவிகளே. காலத்திற்கேற்ப சிறியவர் பெரியவர் ஆகி அனைவரும் தன்னுடைய சக்தி மற்றும் சுயபெருமையை தக்க வைத்துக் கொள்ள முயற்சிக்கின்றனர். வருங்காலத்தில் இந்தப் பிரச்சனை கொஞ்சம் அதிகமாகவே எதிரில் வரப்போகின்றது. ஆகையால் நிமித்தமாக ஆகியிருப்பவர்கள் மிகவும் பணிவான குணம் உடையவர் ஆக வேண்டும். பணிவு என்றால் தனது மதிப்பு-மரியாதையையும் தியாகம் செய்வதாகும். தியாகத்தினால் மேலும் அதிக பாக்கியம் கிடைக்கின்றது. எந்தளவு தியாகம் செய்வீர்களா அந்த அளவு அதிகமாக உங்களுக்கு சுய பெருமை கிடைக்கும். எந்தளவு தனது பெருமையைக் காத்துக்கொள்ள தானே முயல்வீர்களோ அந்தளவு அந்த பெருமையை இழந்து விடுவதற்குக் காரணம் ஆகி விடுவீர்கள். ஆகவே, பாலகன் மற்றும் எஜமான் என்ற ஏணியில் அதிவிரைவாக இறங்குங்கள் மேலும்

ஏறுங்கள். இப்பயிற்சியை அதிகரிக்க வேண்டும். இதற்காகவே நீங்கள் அழைக்கப்பட்டிருக்கின்றீர்கள். சூழ்நிலையைக் கண்டறியும் சக்தி இருக்கும்பொழுதே இதில் இப்பொழுது வெற்றி கிடைக்கும். சூழ்நிலையை பகுத்தாய்வதன் மூலமே சரியான தீர்வைக் காண முடியும். பகுத்தாயவில்லை எனில் விளைவு நேர் விரோதமானதாக அமைந்து விடும்.

பகுத்தறியும் சக்தியை அதிகரிப்பதற்கான முயற்சி எது? உள்ளத்தின் தூய்மையைவிட இவ்விஷயத்தில் புத்தியினுடைய தூய்மையானது அதிகம் வேண்டும். எண்ணம் என்ற சக்திக்கு பிரேக் (Brake) போடுவதற்கான வலிமை வேண்டும். மனதின் சங்கல்பமோ அல்லது புத்தியினுடைய தீர்மானமோ, எதுவாயினும் மனம் மற்றும் புத்தி ஆகிய இவ்விரண்டிற்கும் சக்தி வாய்ந்த பிரேக் வேண்டும் மற்றும் திசை திருப்புவதற்கான சக்தியும் வேண்டும். இவ்விரு சக்திகளும் மிகவும் அவசியமானவை ஆகும். இதையே நினைவின் சக்தி அல்லது அவ்யக்த சக்தி என்று கூறப்படுகின்றது. ஒருவேளை பிரேக் போட முடியவில்லை என்றாலும் அது சரியன்று, திசை திருப்ப இயலவில்லை என்றாலும் கூட அது சரியன்று. ஆகவே பிரேக் போடக்கூடிய மற்றும் திசை திருப்பக்கூடிய சக்தி இருக்குமாயின் புத்தியின் சக்தியை வீணாக இழக்கமாட்டீர்கள். சக்தி வீணாகாமல் சேமிப்பாகி விடும். எவ்வளவு சேமிப்பாகுமோ அவ்வளவே பகுத்தறியும் சக்தி மற்றும் நிர்ணயிக்கும் சக்தி அதிகரிக்கும். இந்த பயிற்சியை பட்டியில் செய்ய வேண்டும். தனது மனம் மற்றும் புத்தியை எந்தளவு பிரேக் போட முடிகிறது மற்றும் திருப்ப முடிகிறது என்று தன்னை சோதிக்க வேண்டும். ஏதாவதொரு விஷயத்தில் விபத்து ஏற்படுவதற்கும் கூட இவை இரண்டுமே காரணமாகின்றன. இது, குறிப்பாக பாண்டவர்களுக்காக, பாப்தாதாவினுடைய விசேஷமான சமிக்ஞை ஆகும்.

பட்டியில் அதிகமாகக் கேட்டிருப்பீர்கள். அதிகம் கேட்பதால் பிந்து சொரூபத்தில் நிலைப்பது கடினமாகி விடுகிறது என்பது இல்லை தானே? ஆனால் பிந்து ரூபத்தில் நிலைத்திருத்தல் என்பது குறைவாக இருப்பதற்கான காரணம், முதல் பாடத்தின் அனுபவக் குறைவே ஆகும். கர்மம் செய்து கொண்டே தன்னை அசரீரி ஆத்மா என உணர வேண்டும். முழு நாளும் இந்தப் பயிற்சியை அதிகம் செய்திட வேண்டும்.

விடுபட்டவராக இருந்து காரியம் செய்வது நடைமுறையில் இருக்க வேண்டும். இதை எந்தளவு அனுபவம் செய்வீர்களோ அவ்வளவே பிந்து ரூபத்தில் நிலைத்திருப்பீர்கள் ஆனால் இந்த கவனம் குறைவாக உள்ளது. நேரம் கிடைப்பதில்லை என்று நீங்கள் கூறுவீர்கள் ஆனால் லட்சியம் இருக்கிறதெனில் நேரத்தை ஒதுக்க இயலும். எவ்வாறு ஏதாவதொரு விசேஷ காரியம் உள்ளதெனில் அதற்காக நீங்கள் கவனம் வைத்து நேரத்தை ஒதுக்குகிறீர்கள் அல்லவா? சங்கமயுக காலத்தின் மிஞ்சியுள்ள இந்த குறைவான நேரத்தில் இதுவே விசேஷ காரியமாகும். விசேஷமான காரியம் எனப் புரிந்து இடையிடையில் சமயத்தை ஒதுக்கினீர்கள் எனில் ஒதுக்க இயலும். எனினும் பயிற்சி இல்லை, ஆகையால் யோசித்து யோசித்தே சமயம் கைகளை விட்டு நழுவிச் சென்று கொண்டிருக்கின்றது. நீங்கள் கவனம் வைத்தீர்கள் எனில் சூழ்நிலைக்கு ஏற்றவாறு தனது பயிற்சியை அதிகரிக்க இயலும். இந்தப் பயிற்சியில் அனைத்து குழந்தைகளும் ஈடுபட்டிருக்கின்றனர்.

உண்மையில் பிந்து ரூபத்தில் நிலைத்திருப்பது ஒன்றும் கடினமான விஷயம் அல்ல. பிந்து ரூபமானது பற்றற்ற நிலையாகும். நிராகார நிலையாகவும் உள்ளது, கூடவே பற்றற்ற நிலையாகவும் உள்ளது. நீங்களும் நிராகாரி மற்றும் பற்றற்ற நிலையில் நிலைத்திருந்தால் பிந்து ரூபத்தின் அனுபவம் செய்வீர்கள். நடந்தாலும், போனாலும், வந்தாலும் அவ்யக்த ஸ்திதியின் அனுபவத்தை செய்ய இயலும். பிறகு, எப்பொழுது விரும்பினாலும் அவ்யக்த ஸ்திதியில் நிலைப்பதென்பது எளிதாகி விடும். ஒரு நொடியின் அனுபவத்தினால் எவ்வளவு சக்தியை தனக்குள் நிறைந்திட இயலுகிறது என்பதையும் அனுபவம் செய்வீர்கள் மற்றும் பிரேக் போடக்கூடிய, திசை திருப்பக்கூடிய சக்தியும் அனுபவத்தில் வந்து விடும். ஆகவே பிந்து ரூபத்தினுடை ய அனுபவம் ஒன்றும் கடினமானதல்ல. சங்கல்பம் தான் கீழே கொண்டு வருகிறது. சங்கல்பத்திற்கு பிரேக் போடக்கூடிய வலிமை இருந்தால் அதிக நேரம் அவ்யக்த ஸ்திதியில் நிலைத்து இருக்க இயலும். தன்னை ஆத்மா என புரிந்து அந்த சொரூபத்தில் நிலைத்திட வேண்டும். சுய ஸ்திதியில் நிலைத்திருக்கும் பொழுது, தனது குணங்கள் அனைத்தும் அனுபவம் ஆகும். எந்த இடத்திற்குச் செல்லப்படுகின்றதோ அந்த இடத்தின் தன்மையானது விரும்பாவிடினும் அனுபவம் ஆகின்றது. நீங்கள் ஏதாவதொரு குளிர்ந்த இடத்திற்குச் சென்றால் விரும்பாவிடினும்

குளிர்ச்சியின் அனுபவம் ஏற்படும். இதுவும் அப்படித்தாள். ஆத்ம அபிமானி என்றால் தந்தையின் நினைவாகும். ஆத்மீக சொருபத்தில் பாபாவின் நினைவு இருப்பதில்லை என்பது ஏற்படவே முடியாது. எவ்வாறு, பாபா தாதா ஆகிய இருவரும் தனித்தனி அல்ல, அவ்வாறு ஆத்மிக நிச்சயபுத்தி இடமிருந்து தந்தையின் நினைவு கூட தனியாக இருக்க முடியாது!

ஒரு விநாடியில் தன்னை பிந்து ரூபத்தில் நிலைக்கச் செய்ய இயலாதா என்ன? ஒருவேளை இப்பொழுது இந்த பயிற்சி செய்யுங்கள் என்று அனைவருக்கும் கூறப்பட்டால் செய்ய இயலுமா? பிந்து ரூபத்தில் நிலைப்பதனால் பற்றற்ற நிலையின் அனுபவம் ஏற்படும் மற்றும் ஆத்மாவின் உண்மையான குணங்களின் அனுபவமும் ஏற்படும். இந்த பயிற்சியும் செய்யுங்கள். ஏனெனில் இப்பொழுது சமயம் குறைவாக உள்ளது, காரியம் அதிகமாகச் செய்ய வேண்டியது இருக்கின்றது. இப்பொழுது அதிக நேரத்தில் குறைவான காரியம் செய்கின்றீர்கள். வருங்காலத்தில் அத்தகையதொரு சமயம் வரவிருக்கிறது, அதில் உங்கள் அனைவருடைய வாழ்க்கையும் மிகவும் சுறுசுறுப்பானதாக (பிஸி) ஆகி விடும். மேலும் சமயம் குறைவாக இருப்பதாகவே தோன்றும். இந்த பகல் மற்றும் இரவை இரண்டு மணிநேரத்திற்குச் சமமாக உணருவீர்கள். குறைவான நேரத்தில் அதிக காரியம் செய்வதற்கு இப்பொழுதிருந்தே பயிற்சி செய்யுங்கள்.

நேரத்தை வெற்றிகரமானதாக ஆக்குவது கூட மிகப் பெரிய சக்தியாகும். எவ்வாறு தனது சக்தியை வீணாக்குவது என்பது சரியானதன்றோ, அவ்வாறே சமயத்தை வீணாக்குவது கூட சரியானதன்று. ஒவ்வொருவருடைய பிரஜையும் பிரசித்தமாவார்கள். பிரஜை பிரசித்தமாகும்பொழுது பதவியும் பிரசித்தமாகும். எதிர்கால பதவிக்கு முன்பே ஒவ்வொருவருடைய பிரஜைகள் மற்றும் பக்தர்கள் பிரசித்தமாவார்கள். சங்கமயுக சேவையில் வெற்றி சொரூபத்தின் நினைவுச்சின்னமானது பிரசித்தமாகும். அத்தகையதொரு சமயம் வரப்போகின்றது. அதில் நீங்கள் தனது வருமானத்தை செய்ய மாட்டீர்கள் ஆனால் பிறருக்காக மிகவும் பிஸியாகி விடுவீர்கள். இப்பொழுது தனது வருமானத்திற்கான சமயம் மிகக் குறைவாக உள்ளது. பிறகு பிறருடைய சேவை செய்வதில் தனக்கு வருமானம்

கிடைக்கும். இப்பொழுது கிடைத்திருக்கும் இந்த குறைவான சமயத்தின் முழுமையிலும் முழுமையான லாபத்தை எடுத்துக் கொள்ளுங்கள். இல்லையெனில், இந்த சமயம் தான் நினைவு வரும். ஆகவே எப்படி இருப்பினும், எங்கு இருப்பினும், சூழ்நிலைகள் மாறாது. கஷ்டங்கள் நீங்கியதும் வருமானம் செய்வேன் என்று எண்ணாதீர்கள். இது நாளுக்குநாள், இருப்பதை விட பெரிய ரூபம் தரிக்கும் ஆனால் இதில் இருந்தபோதிலும் தனது நிலையில் பரிபக்குவம் ஆக்க வேண்டும். ஆகையினால் தான் சமயத்தின் மீது கவனம் மேலும் தன்னுடைய சொருபத்தினுடைய நினைவின் மீதும், அதன் பிறகு ஸ்திதியின் மீதும் கவனம் வைக்க வேண்டும். நல்லது.

பொறுப்பு என்ற கீரீடம் பற்றி உரைத்தாயிற்று. சிம்மாசனம் எது? பணிவான உள்ளம் என்பது சிம்மாசனம். இதில் வீற்றிருப்பதனால் அனைத்து காரியங்களும் சரியாகச் செய்ய இயலும். சக்தி சேனைக்கு ஏக்ரஸ் என்ற சிம்மாசனம் அளிக்கப்பட்டது மற்றும் பாண்டவ சேனைக்கு பணிவான உள்ளம் என்ற சிம்மாசனம் அளிக்கப்பட்டது. அதில் அமர்ந்து பொறுப்பு என்ற கிரீடம் தரித்து எதிர்கால பதவியை உருவாக்குங்கள். சிம்மாசனத்திலிருந்து இறங்கக்கூடாது. இதில் அமர்ந்து காரியம் செய்தீர்களெனில் காரியம் வெற்றி அடையும். பாருங்கள் முழு நாளும் நீங்கள் என்ன காரியம் செய்கின்றீர்களோ, அதில் நான்கு விஷயங்கள் உங்களுடன் கூடவே இருக்கின்றன. சாதாரணமான மற்றும் ஸ்தூல விஷயத்தைக் கேட்கின்றேன். ஒன்று நாற்காலி உடன் இருக்கின்றது; இரண்டாவது பேனா (கலம் -ஹிந்தி); மூன்றாவது கோப்பு (ஃபைல்) மற்றும் நான்காவது இங்கும் அங்கும் செல்வது. இந்த நான்கையும் லௌகீகத்திலிருந்து அலௌகீகமாக மாற்றுங்கள். நாற்காலியில் அமரும்பொழுது சிம்மாசனத்தை நினைவு கூறுங்கள். பேனாவை (கலம் -ஹிந்தியில்) எடுக்கும்பொழுது கமலப் புஷ்பத்தை நினைவு செய்யுங்கள், கமலப்புஷ்பம் ஆகி பேனாவைப் பயன்படுத்த வேண்டும். கோப்பைக் (ஃபைல்) கண்டு, எனது கோப்பில் பாப்தாதா இப்பொழுது என்ன கையெழுத்திட்டிருப்பார் என்று தனது கணக்குவழக்கை நினைவு செய்யுங்கள். இங்கும் அங்கும் செல்வது என்பது ஏணியிலிருந்து இறங்குவது மற்றும் ஏறுவது ஆகும். இந்த பயிற்சி செய்யுங்கள். எங்கு புத்தியை ஈடுபடுத்த விரும்புகின்றேனோ அங்கு ஈடுபடுகிறதா அல்லது இல்லையா? எவ்வாறு கால்களை

விரும்பும்படி இயங்குகின்றன அல்லவா? அவ்வாறு உங்களது புத்தி கூட கால் போன்றது. இப்பொழுது புத்தியை லௌகீகத்திலிருந்து அலௌகீக விஷயங்களில் மாற்றம் செய்ய வேண்டும். அப்பொழுது மனோநிலையிலும் (ஸ்திதியிலும்)
கூட மாற்றம் வந்து விடும்.

இந்த குழுவின் ரத்தினங்களிடம் என்ன விசேஷ குணம் உள்ளது? ஒன்று -அனைவரும் அன்பானவர்களாக உள்ளனர்; இரண்டாவது -பெரும்பான்மையானோர் சமர்ப்பண புத்தியுடன் உள்ளனர்; மூன்றாவது -சேவைக்காக ஒவ்வொரு வினாடியும் தயாராக உள்ளனர். ஆகையால் எவரெடியாக (ever-ready) இருக்கின்றனர். இப்பொழுது பொறுப்பு என்ற கிரீடம் என்ன கிடைத்துள்ளதோ அதில் இந்த அனைத்து விசேஷத் தன்மைகளை ரத்தினங்களைப் போன்று பதிக்க வேண்டும். அப்பொழுதே பொறுப்பை பூரணமாக பராமரிக்க இயலும். இந்த குணங்கள் கிரீடத்தின் மணிகளாகும். அதாவது அழகாகும். இவற்றை நிலையாக வைத்துக் கொள்ள வேண்டும். எத்தகைய கர்மம் நீங்கள் செய்கிறீர்களோ உங்களைப் பார்த்து அனைவரும் பின்பற்றுவார்கள். மற்றுமொரு சுலோகத்தை அவசியம் நினைவு செய்ய வேண்டும்: சிறியவர்களுக்கு அன்பு கொடுங்கள் மற்றும் பெரியவர்களுக்கு மரியாதை கொடுங்கள்! அன்பு கொடுக்க வேண்டும், பின்னர் மரியாதை பெற வேண்டும். இதை ஒருபொழுதும் மறக்கக் கூடாது. இந்த குழு பொன் போன்றதாகும். எனினும், பொன்னிற்கு மெருகேற்றப்படுகின்றது. அதற்காக இடையிடையில் மதுவனத்தில் குழு கூட வேண்டும். நிமித்தம் ஆகியிருக்கும் சகோதரிகளின் ஆலோசனைப்படியே அவ்வப்பொழுது குழு ஒன்று கூடும். பட விளக்கக் கண்காட்சியிலும் ஏதாவது புதுமை கொண்டு வரவேண்டும். இப்பொழுதோ இங்குள்ள ஞானம் சிறப்பாக உள்ளது என்பதை மட்டுமே புரிந்திருக்கின்றனர். எந்த விஷயங்களைச் சொல்ல வேண்டுமோ அதைப் பற்றி கேட்காமலேயே நமக்கு இப்பொழுது இந்த சகஜமான வழி கிடைத்து விட்டது என்று பார்த்ததுமே புரிந்து கொள்ள வேண்டும். இதை லட்சியமாகக் கொண்டு கண்காட்சியை உருவாக்க முயற்சிக்க வேண்டும். மேலும் தலைப்பில் கூட கவர்ச்சி இருக்க வேண்டும். பரமாத்மாவின் அறிமுகத்தைப் பற்றியும் தலைப்பு வைக்கலாம். மேலும் எவரெல்லாம் விலகிச் செல்கின்றனரோ அவர்களை அருகாமையில் கொண்டு வர வேண்டும்.

அவர்கள் தார்மீக சிந்தனை உள்ளவர்களோ அல்லது வேறு விதமானவர்களோ; பிறகு அவர்களைத் தொடர்ந்து தொடர்பு கொள்ளவும் வேண்டும். தொடர்ந்து தொடர்பு கொள்ளாமல் வெற்றி கிடைக்காது. எவ்வாறு அருங்காட்சியகத்தில் சேவை செய்யப்பட்டது. அவர்களையும் தொடர்ந்து தொடர்பு கொள்ள வேண்டும். அவ்வப்போது அழைப்பு விடுக்க வேண்டும். சம்பந்தம் வைத்துக்கொள்ள வேண்டும். அதன் மூலம் அவர்களுக்கு ஈஸ்வரிய குடும்பத்தின் உணர்வு ஏற்பட வேண்டும். அப்பொழுதே சேவையில் வெற்றி கிடைக்கும்.

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

## 24.07.1969 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பிந்து ரூபத்தின் பயிற்சி!

இனிமையிலும் இனிமையான குழந்தைகள் யாருடைய எதிரில் அமர்ந்திருக்கின்றிர்கள்? மேலும், என்னவாக ஆகி அமர்ந்திருக்கின்றிர்கள்? தந்தை குழந்தைகள் உங்களை பிந்து ரூபமாக ஆக்குவதற்காக வந்திருக்கின்றார். நான் ஆத்மா பிந்து ரூபமாக இருக்கின்றேன். பிந்து எவ்வளவு சிறியதாக உள்ளது. மேலும் தந்தையும் எவ்வளவு சிறிய ரூபமுடையவராக இருக்கின்றார்! இவ்வளவு சிறிய விஷயம் கூட குழந்தைகளுடைய புத்தியில் வருவதில்லையா? தந்தை குழந்தைகளுடைய எதிரில் தான் இருக்கின்றார், தொலைவில் இல்லை. தொலைவில் உள்ள பொருளை மறந்து விடுகின்றீர்கள். எந்தப் பொருள் எதிரிலே உள்ளதோ அந்தப் பொருளை மறப்பதென்பது குழந்தைகள் உங்களுக்கு அழகல்ல. குழந்தைகளே! ஒருவேளை புள்ளியை மறந்து விட்டீர்கள் எனில் கூறுங்கள், எதன் ஆதாரத்தில் செயல்படுவீர்கள்? ஆத்மாவின் ஆதாரத்தில் தான் சரீரம் இயங்குகின்றது. நான் ஆத்மா. நான் பிந்து, பிந்துவின் குழந்தை என்ற இந்த போதை இருக்க வேண்டும். குழந்தை என்று கூறுவதால் தான் அன்புணர்வில் வந்து விடுகிறீர்கள். ஆகவே, இன்று குழந்தைகள் நீங்கள் பிந்து ரூபத்தில் நிலைத்து இருப்பதற்கான பயிற்சியை செய்விக்கட்டுமா? நான் ஆத்மா என்பதை மறந்து விடுவதற்கான அவசியமே இல்லை. தந்தையாகிய எனக்கு மறந்து விடுவதற்கான அவசியம் உள்ளதா? ஆம், அறிமுகம் கொடுப்பதற்காக எனது பெயர், ரூபம், குணம் காரியம் என்ன? நான் பிறகு, எப்பொழுது வருகின்றேன்? எந்த உடலில் வருகின்றேன்? என்பதை அவசியம் எடுத்துரைக்க வேண்டியதாய் உள்ளது. குழந்தைகள் உங்களுக்குத்தான் எனது அறிமுகத்தை அளிக்கின்றேன். அவ்வாறெனில், தந்தை தனது அறிமுகத்தை மறந்து விடுகின்றாரா என்ன? குழந்தைகள் அந்த ஸ்திதியில் ஒரு விநாடி கூட நிலைத்திருக்க இயலாதா? தனது பெயர், ரூபம் தேசத்தைக் கூட மறந்து விடுகிறீர்களா, என்ன? நான் ஆத்மா சரீரம் அல்ல என்பதே முதல் விஷயம். இதை

நீங்கள் அனைவருக்கும் கூறுகின்றீர்கள். ஆத்மா என்ற உணர்வில் அமர வைக்கும்பொழுது, பிறகு அவர்களுக்கு சரீரம் கூட மறந்து விடுகின்றது. ஒருவேளை ஆத்மா என்ற உணர்வில் அமர வைக்கவில்லை எனில் பிறகு தேக சகிதம் தேகத்தின் அனைத்து சம்பந்தக்களும் மறந்துபோகுமா என்ன? பிறரை நீங்கள் மறக்க வைக்கின்றீர்கள் எனில் தனது சரீரத்திலிருந்து விடுபட்டு பற்றற்ற தந்தையின் நினைவில் நீங்கள் அமர இயலாதா என்ன?

இப்பொழுது அனைத்து குழந்தைகளும் தன்னை ஆத்மா என புரிந்து அமருங்கள். எதிரில் யாரைக் காண வேண்டும்? ஆத்மாக்களின் தந்தையை! இந்த ஸ்திதியில் இருப்பதால் வியக்தத்திலிருந்து விடுபட்டு அவ்யக்த நிலையில் நிலைத்திட இயலும். நான் ஆத்மா, பிந்து ரூபமாக இருக்கின்றேன் என்பது நினைவில் வராதா என்ன? பிந்து ரூபம் ஆகி அமரத் தெரியவில்லையா? இவ்வாறு பயிற்சியை அதிகரித்துக் கொண்டே சென்றால் ஒரு விநாடி என்ன, எத்தனை மணி நேரமானாலும் இந்த நிலையில் நிலைத்திருந்து ரசனையைப் பெற முடியும். இந்நிலையில் நிலைத்து இருப்பதால், பேசுவதற்கான அவசியம் கூட இருக்காது. பிந்து நிலையில் அமர்வது என்பதொன்றும் உணர்வற்ற நிலை அல்ல. எவ்வாறு விதையில் முழு மரமும் அடங்கியுள்ளதோ அவ்வாறே ஆத்மாவாகிய எனக்குள் தந்தையின் நினைவு அடங்கியுள்ளது. அத்தகைய நிலையில் அமர்வதால் அனைத்து ரசனைகளும் வந்து விடும். மேலும் அதன் கூடவே, நான் யாருடைய எதிரில் அமர்ந்திருக்கின்றேன், தந்தை என்னை தன்னுடன் எங்கு அழைத்துச் சென்று கொண்டிருக்கின்றார் என்ற போதையும் இருக்கும். தந்தை குழந்தைகள் உங்களை தனித்து விடுவதில்லை. தந்தையினுடைய மற்றும் குழந்தைகள் உங்களுடைய வீடு எதுவோ, அங்கும் தன்னுடனேயே அழைத்துச் செல்வார். அனைவரும் இணைந்து சென்று தான் ஆக வேண்டும். ஆத்மா என பரிந்து பிறகு சரீரத்தில் வந்து காரியம் செய்தல் வேண்டும். எனினும், கர்மம் செய்து கொண்டிருக்கும்பொழுது கூட பற்றற்றவராக மற்றும் அன்பானவராக இருத்தல் வேண்டும். தந்தையும் குழந்தைகள் உங்களைப் பார்க்கின்றார். பார்த்தாலும் கூட தந்தை பற்றற்றவராகவும், அன்பானவராகவும் இருக்கின்றார் அல்லவா? நல்லது.

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

## 27.08.1969 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## உதவியைப் பெறுவதற்கான சாதனம் -தைரியம்! (சந்தரி தாதியின் உடல் மூலமாக)

இன்று சிறிய பூந்தோட்டத்தில் உலாவ வந்திருக்கின்றோம். ஆன்மிகக் குழந்தைகளுடன் எதிரில் சந்திப்பதற்காக வந்திருக்கின்றோம். இவர்கள் எனது கண்மணிகள் என தந்தை புரிந்திருக்கின்றார். கண்களின் மணியான குழந்தைகள் எப்பொழுதும் ஆன்மிக ரோஜாவைப் போல் நறுமணம் வீசிக் கொண்டிருக்கின்றனர். எந்தளவு தந்தையினுடைய நம்பிக்கை உள்ளதோ அந்தளவு குழந்தைகளுக்குள் தைரியம் உள்ளதா? இன்று குழந்தைகள் அழைக்கவில்லை. அழைக்காமலேயே தந்தை வந்திருக்கின்றார். இது அனாதியான, உருவான உருவாக்கப்பட்ட நியமம் ஆகும். சங்கமயுகத்தில் அலங்கரிப்பதற்காக தந்தை கேட்காமலேயே வர வேண்டியதாக இருக்கின்றது. இன்று குழந்தைகளிடம் கேள்வி கேட்கின்றார். இன்று பூந்தோட்டத்தில் அமர்ந்திருப்பவர்கள் தன்னை பூச்செண்டில் அழகு சேர்க்கத் தகுதி உள்ள மலராகக் கருதுகின்றீர்களா? ஒவ்வொருவரும் ராக்கி அணிந்திருக்கின்றீர்கள். ராக்கி பந்தனத்தின் ரகசியம் என்ன? இன்று தந்தை குழந்தைகளை சந்திப்பதற்காக வந்திருக்கின்றார். மிகப் பெரிய பொறுப்பை ஏற்றிருக்கின்றீர்கள். சிறு சிறு பொறுப்புகளை ஏற்றுக் கொள்பவர்கள் கூட எவ்வளவு களைப்படைகின்றனர். முழு சிருஷ்டியின் சுமை எவர் மீது உள்ளது? குழந்தைகளுக்கு ஏன் களைப்பு ஏற்படுகின்றது? ஏனெனில், தன்னை ஆன்மிக ரோஜா மலராகிய ஆத்மா என புரிந்து கொள்ளவில்லை. ஆத்மா என புரிந்து கொள்ளும்பொழுது தேகத்திலிருந்து விடுபட்டவராக மற்றும் அன்பானவராக இருக்க முடியும். தந்தை எவ்வாறு இருக்கின்றாரே அவ்வாறே குழந்தைகள் இருக்க வேண்டும். எந்தளவு தைரியம் இருக்கின்றதோ அந்தளவே தந்தை உதவி செய்து கொண்டே இருக்கின்றார். தைரியம் கொள்வதால்

உதவி கிடைக்கின்றது மேலும் உதவியினால்தான் மலையைத் தூக்க இயலுகிறது. கலியுக மண் மலையை அகற்றி சத்ய தங்கத்தை உருவாக்க வேண்டும். எவ்வாறு உருவாக்க வேண்டும்? இதற்கான விடை கேள்வியிலேயே அடங்கியுள்ளது. இன்று சிறிது நேரத்திற்காக சந்திப்பு செய்வதற்காக தந்தை வர வேண்டியதாகி விட்டது. தந்தைக்கு விருப்பம் என்பது உள்ளதா? அவர் விருப்பத்திலிருந்து விடுபட்டவராக இச்சையற்றவராக இருக்கின்றார். இருப்பினும் ஏன் விருப்பம் ஏற்படுகின்றது? நீங்கள் அனைவரும் விருப்பம் அற்றவராக ஆகி விட்டீர்கள் ஆனால் தந்தைக்கு இச்சை ஏற்பட்டுள்ளது. தந்தை குழந்தைகளை எவ்வாறு பராமரித்தார்? பராமரித்துக் கொண்டிருக்கின்றார் என்பதை குழந்தைகள் நீங்கள் அறிந்திருக்கவில்லையா? இவ்வளவு பொறுப்புகளை எவ்வாறு சிறப்பாக பராமரித்து தந்தையினுடைய விருப்பத்தையும் பூர்த்தி செய்தாரோ, அவ்வாறு இப்பொழுது குழந்தைகளுடையதையும் பூர்த்தி செய்து கொண்டு இருக்கின்றார். தந்தை ஒவ்வொரு குழந்தையின் விருப்பத்தைப் பூர்த்தி செய்ய வேண்டியிருக்கின்றது. கூடவே சில நேரம் தனது விருப்பத்தையும் செயல்படுத்த வேண்டியுள்ளது, குழந்தைகளின் விருப்பத்தை ஏன் பூர்த்தி செய்கின்றார்? குழந்தைகள் அனைவரும் கண்களின் மணிகளாக இருக்கின்றனர். ஆகவே தான் முதலில் குழந்தைகள்! பிறகே தந்தை. மிகச் சிறந்தவர்களை அவ்வப்போது தலை மீது கூட தூக்கி வைத்துக் கொள்ளப்படுகின்றது. முயற்சி செய்து செய்து சோர்ந்து விடுகின்றீர்கள். ஆகவே முயற்சியை அதிகரிப்பதற்கான முயற்சி செய்யுங்கள். ஆகவே தான், கங்கணத்தை பூரணமாக கட்டியிருக்கின்றீர்களா என்று கேள்வி கேட்கின்றார். பூமியே பிளந்தாலும் தர்மத்தை விட்டு விடாதீர்கள். இன்றைய தினம் விரோதிகள் கூட பகைமையை மறந்து நண்பர்கள் ஆகி விடுகின்றர்.

குழந்தைகள் சதா தனது அடியை முன் வைத்து முன்னேற்றிச் செல்ல வேண்டும். கிரிடம், சிம்மாசனம் முதலியவை என்ன கிடைக்க இருக்கின்றதோ அவற்றின் மீது பார்வை இருக்க வேண்டும். நான் இன்னார் ஆவேன் என்று சொல்வதோடு மட்டுமல்லாமல், இப்பொழுது செயல் வரை கொண்டு வருவதற்கான தாரணை செய்ய வேண்டும், லட்சுமி நாராயணர் எவ்வாறு நடக்கின்றார்கள், எவ்வாறு அடி எடுத்து வைக்கின்றார்கள், எவ்வாறு கண்களை கீழும் மேலும்

அசைக்கின்றார்கள், அவ்வாறே நடத்தை இருந்தால் லட்சுமி நாராயணர் ஆகி விடுவீர்கள். இப்பொழுது கண்களை மேலே உயத்தினிர்கள் எனில், என்னைப் போல் எவரும் இல்லை என்ற தேக அபிமானம் வந்து விடும். எனது, உனது என்பது வந்து விடும். பணிவு மனிதர்களுடைய கண்களை தாழ்த்தி விடுகின்றது என்று பக்தி மார்க்கத்தில் கூட கூறுகின்றார்கள். ஒவ்வொருவரும் தன்னை அலங்கரிக்க வேண்டும். சதா நறுமணம் வீசிக் கொண்டே இருங்கள். என்ன லட்சியம் கிடைத்துள்ளதோ அவ்வாறே, லட்சுமி நாராயணர் ஆக வேண்டும். சரியான வழிப்படி நடக்க வேண்டும். அடியை முன் வைத்து முன்னேற வேண்டும். பாபாவிடம் இன்று சந்தேஷி 'போக்' எடுத்து வந்ததும், குழந்தைகள் இங்கு அமர்ந்து கொண்டே இளவரசர்கள் ஆகி விட்டனர் என்று பாபா கூறினார். பாபாவினுடைய ஏழ்மைக் கால டோலியை மறந்து விட்டனர். வைபவங்கள் அங்கே கிடைக்கப் போகின்றன சங்கமயுகத்தில் ஏழ்மைக் கால டோலி நினைவில் வருகின்றது. அது தான் தந்தைக்கு அன்பிற்கு உகந்ததாக இருக்கின்றது. த சுதாமாவின் அவலுக்கு மதிப்புள்ளது அல்லவா! இந்த டோலியில் அன்பு நிறைந்துள்ளது. தயாரிப்பவர்கள் அன்பை நிறைத்துள்ளனர். தந்தை மேலும் அன்பை நிறைத்து குழந்தைகளுக்கு ஊட்டுகின்றார். (சிந்தி அல்வா ஊட்டினார்). தீதி சேவையை முடித்து விட்டு வந்திருக்கின்றார்கள். அனைத்தும் சரியாக இருந்ததா, அனைத்தும் நியமப்படி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றதா? பயம் கொள்வதற்கான விஷயம் ஒன்றுமில்லை. காலத்தின் ஒத்துழைப்பும் உள்ளது. குழந்தைகள் ஒவ்வொரு விஷயத்திற்கான முயற்சி செய்ய வேண்டும். சமயத்தை அனுசரித்து அழிவற்ற ஞான யக்ஞ குண்டத்தை நிறைக்க வேண்டும். சுவாகா செய்திட வேண்டும். யக்ஞம் நிலைத்திருக்க வேண்டும். அந்த (உலகிய) யக்ஞமோ 10-12 தினங்கள் செய்து முடித்த பின் அவ்விடம் முன்பிருந்தது போலவே ஆகி விடும். இதுவோ அழிவற்ற யக்ஞமாகும். சிவபாபாவினுடைய பொக்கிஷம் நிறைந்து இருந்தால் காலன், பகைவர்கள் விலகி விடுவார்கள். எப்பொழுது புது உலகம் செல்வீர்களோ அப்பொழுதே விலகிப்போகும். அனைத்தும் சரியாகவே நடைபெறும். குழந்தைகளுடைய புத்தி வல்லமை பொருந்தியதாகவும், தொலைநோக்குப் பார்வை உடையதாகவும் இருக்க வேண்டும். தொலைநோக்குப் பார்வை உடையவராக

ஆக்குவதற்காக கிரீடம், சிம்மாசனம் ஏற்கெனவே வழங்கப்பட்டுவிட்டது. நல்லது.

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵
✵✵✵✵✵✵✵

## 15.09.1969 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## நினைவின் ஆதாரத்தில் நினைவுச்சின்னம்!

சப்தத்திலிருந்து கடந்து செல்ல வேண்டுமா அல்லது தந்தையையும் சப்தத்தில் கொண்டு வர வேண்டுமா? நீங்கள் அனைவரும் சப்தத்திலிருந்து கடந்து சென்று கொண்டு இருக்கின்றீர்கள், பாப்தாதாவையோ சப்தத்தில் கொண்டு வந்து கொண்டிருக்கின்றீர்கள்! சப்தத்தில் வந்தாலும் அதிந்திரிய சுகத்தில் இருக்க முடிகின்றது எனில் பிறகு சப்தத்திலிருந்து கடந்து இருப்பதற்காக ஏன் முயற்சிக்க வேண்டியுள்ளது? ஒருவேளை சப்தத்தைக் கடந்து நிராகார ரூபத்தில் நிலைத்து இருந்து கொண்டு பின்னர் சாகாரத்தில் வந்தீர்கள் எனில் பிறரையும் கூட அந்த நிலைக்குக் கொண்டு வர இயலும். ஒரு நொடியில் நிராகார நிலை, மறுநொடியில் சாகார நிலையில் நிலைப்பதற்கான பயிற்சியை கற்றுக்கொள்ள வேண்டும். இப்பொழுது நிராகாரி நிலையின் அனுபவம் செய்கின்றீர்கள் எனில் மறுவிநாடி சாகார நிலையின் அனுபவம் செய்ய வேண்டும். எப்பொழுது அத்தகைய நிலை ஏற்படுமோ அப்பொழுதே சாகார உருவில், ஒவ்வொருவருக்கும் நிராகார ரூபத்தின் காட்சியானது உங்கள் மூலம் கிடைக்கும். தன்னுடைய காட்சியைக் கண்டிருக்கின்றீர்களா? பிராமண ரூபத்திலே தான் இருக்கின்றீர்கள். ஒருவேளை தனது காட்சியைக் கண்டுவிட்டீர்கள் எனில் தன்னுடைய எண்ணின் காட்சியையும் பார்த்து விட்டீர்களா என்ன? வேறு எவரேனும் உங்களது ரூபத்தின் காட்சியைக் கண்டிருக்கின்றனரா? தன்னுடைய உண்மையான ரூபத்தை மறந்து விட்டீர்களா? நிகழ்காலத்தில் நீங்கள் எந்த ரூபத்தின் மூலம் யுக்தி யுக்தாக சேவை செய்ய இயலும்? ஜெகத்மாதா!

இன்று விசேஷமாக தாய்மார்க்களுக்கான நிகழ்ச்சி நடைபெறுகிறது அல்லவா! மாதர் உருவில் தான் இருக்கின்றீர்கள். ஜெகத்மாதாவாகவும் ஆக வேண்டும். தாய் ஆகாமல் பாலனை அளிக்க இயலாது. இன்று

மாதர்கள் ஏன் அழைக்கப்பட்டிருக்கின்றனர்? ஆஸ்திக்கு அதிகாரி ஆகி விட்டீர்களா அல்லது ஆக வேண்டுமா? வாரிசு ஆகி விட்டீர்களா அல்லது ஆவதற்காக வந்திருக்கின்றீர்களா? வாரிசாக இருக்கின்றீர்கள் எனில் ஆஸ்தியும் அடைந்து விட்டீர்கள். அல்லது வாரிசு ஆகி விட்டீர்கள் ஆனால் ஆஸ்தி கிடைக்கவில்லையா? ஆஸ்திக்கு உரிமையாளராக ஏற்கெனவே ஆகி விட்டர்கள். இப்பொழுது எந்த காரியத்திற்காக வந்திருக்கின்றீர்கள்? பாப்தாதா, நிச்சயமாக ஏதாவது விசேஷ காரியத்திற்காக அழைத்திருப்பார்கள். படிப்பை தன்னுடைய சேவை கேந்திரங்களில் படித்துக் கொண்டு தான் இருக்கின்றீர்கள். படிப்பையும் (கோர்ஸ்) முடித்து விட்டீர்கள். முக்கியமான ஞானப் படிப்பினைப் பற்றியும் அறிந்து கொண்டீர்கள். மீதம் என்ன உள்ளது இப்பொழுது பற்றற்றவர் (நஷ்டமோகா) ஆக வேண்டும். உண்மையான சினேகி ஆகும்பொழுதே பற்றற்றவர் ஆவீர்கள். எவ்வாறு, எந்த ஒரு பொருளையும் நெருப்பில் போட்ட பின் அதன் ரூபம், நிறம் அனைத்தும் மாறிவிடுகின்றது. அவ்வாறு அசுரகுணம், உலகிய மரியாதைகள், கர்மபந்தனம் என்ற கயிறுகள், பற்று என்ற நூல் ஆகிய என்னவெல்லாம் கட்டிப்போட்டுள்ளனவோ அவை அனைத்தையும் எரிக்க வேண்டும். இந்த அன்பு என்ற நெருப்பில் விழுவதால் அவை அனைத்தும் விலகி விடும். எனவே தன்னுடைய நிறம், ரூபம் ஆகிய அனைத்தும் மாற வேண்டும். இந்த அன்பு என்ற நெருப்பில் விழுந்து பரிவர்த்தனையைக் கொணர்வதற்குத் தயாராக உள்ளீர்கள். எந்தப் பொருள் எரிந்து விடுகின்றதோ, அது பிறகு அழிந்து விடுகின்றது, அதைக் காண இயலாது. அவ்வாறு தன்னை பரிவர்த்தனை செய்வதற்குத் தைரியம் உள்ளதா?

உங்கள் அனைவரது நினைவுச்சின்னம் இப்பொழுது வரை நிலைத்திருக்கின்றது. எந்த விஷயத்தின் ஆதாரத்தில் உங்களுடைய நினைவுச்சின்னம் உருவாகியுள்ளது? எவ்வளவுக்கெவ்வளவு நினைவு இருக்கின்றதோ, அவ்வளவுக்கவ்வளவு அனைவரின் நினைவுச்சின்னம் உருவாகியுள்ளது. இப்பொழுது வரையிலும் கூட நிலைத்திருக்கின்றது. உங்களுடைய நினைவின் ஆதாரத்தில் உங்கள் அனைவரின் நினைவுச்சின்னம் உருவாகியுள்ளது. ஒருவேளை நினைவு குறைவாக இருக்கின்றது எனில் நினைவுச்சின்னமும் அதற்கேற்றார் போலவே இருக்கும். நினைவுச்சின்னத்தை நிலையாக வைத்திருக்க முயற்சி

செய்ய வேண்டும் என்றால் முதலில் நினைவை நிலையாகக் கொண்டிருங்கள். பிறகு அதன் ஆதாரத்தில் நினைவுச்சின்னம் உருவாகும்.

ஒவ்வொருவருடைய விசேஷ குணத்தின் மீது ஒவ்வொருவரின் கவனம் செல்ல வேண்டும். பிறரிடம் உள்ள விசேஷ குணத்தை ஒவ்வொருவரும் தனக்குள் தாரணை செய்தீர்களானால் என்னவாக ஆகி விடுவீர்கள்! சர்வகுண சம்பன்னம்! எவ்வாறு ஆத்மா ரூபத்தில் பார்க்கின்றீர்கள் அல்லவா! அவ்வாறு கர்மத்தில் வரும்பொழுது ஒவ்வொவருடைய விசேஷ குணத்தையும் காணுங்கள். அவ்வாறு செய்தால் பிறகு மற்ற விஷயங்கள் மறந்து போய்விடும். தனக்குள் குணங்களை நிறைப்பதற்கான பிரயத்தனம் செய்ய வேண்டும். இன்று மாதர்களுக்கு நிலவின் திலகம் வைக்கப்பட்டுள்ளது. நிலவின் குணம் எதுவோ அதை தனக்குள் தாரணை செய்ய வேண்டும் ஆனால் நிலவிற்கு சூரியனுடன் மிக ஆழ்ந்த சம்பந்தம் உள்ளது. ஆகவே, நிலவைப் போல் சம்பந்தம் மற்றும் குணத்தை தாரணை செய்ய வேண்டும். மேலும் நிலவின் கடமை என்ன? குளுமையின் கூடவே ஒளியும் கொடுக்கின்றது. நல்லது, இப்பொழுது விடைபெறுகின்றோம்.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋❋

## 18.09.1969 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# திரிநேத்ரி, திரிகாலதர்சி மற்றும் திரிலோகநாதன் ஆவதற்கான யுக்திகள்!

எதனைக் காண்கின்றீர்கள்? ஆகாரத்தைக் (சூட்சும) காண்கின்றீர்களா அல்லது அவ்யக்தத்தைக் காண்கின்றீர். ஒருவேளை தன்னுடைய அல்லது பிறருடைய உருவத்தைப் பாராமல் அவ்யக்த உருவத்தினைப் பார்த்தால் ஆகர்ஷண மூர்த்தி ஆகி விடுவீர்கள். ஒருவேளை வியக்த உருவத்தைப் பார்த்தால் ஆகர்ஷண மூர்த்தி ஆகமாட்டீர்கள். ஆகர்ஷண மூர்த்தி ஆக வேண்டும் என்றால், வியக்த உருவத்தைப் பார்க்காதீர்கள். வியக்த உருவத்திற்குள் ஆகர்ஷண ரூபம் என்ன உள்ளதோ, அதைப் பார்க்கும்பொழுதே தன் மூலம் பிறருக்கு ஆகர்ஷணம் ஏற்படும். எனவே, இப்பொழுது இந்த அவ்யக்த சேவையே மீதம் உள்ளது. வியக்தத்தில் ஏன் வருகின்றீர்கள்? இதற்கான காரணம் என்ன? அவ்யக்தம் ஆவது என்பது இருக்கின்றபோதிலும் வியக்தத்தில் ஏன் வருகின்றீர்கள்? வியக்தத்தில் வருவதாலேயே வீண் எண்ணங்கள் வருகின்றன மேலும் வீணான செயலும் ஏற்பட்டு விடுகின்றது. வியக்தத்திலிருந்து அவ்யக்தம் ஆகுவது ஏன் கடினமாக உள்ளது? வியக்தத்தில் சீக்கிரத்தில் வந்து விடுகின்றீர்கள், அவ்யக்தத்தில் நிலைப்பது கடினமாக உள்ளது. இதற்கான காரணம் என்ன? (மறந்து விடுகின்றோம்) ஏன் மறக்கின்றீர்கள்? தேக அபிமானம் ஏன் வந்து விடுகின்றது. வியக்தம் மற்றும் அவ்யக்தத்திற்கான வேறுபாடு என்ன என்பதை அறிந்தும் இருக்கின்றீர்கள், தெரிந்தும் இருக்கின்றீர்கள், அனுபவமும் செய்திருக்கின்றீர்கள். லாபம் மற்றும் நஷ்டம் என்ன என்ற அனைத்தும் தெரியும். நீங்கள் நினைவில் அமரும்பொழுது தேக அபிமானத்தில் இருந்து ஆத்ம அபிமானத்தில் எவ்வாறு நிலைக்கின்றீர்கள்? என்ன செய்கின்றீர்கள்? விஷயமோ மிக எளிதானதே! நீங்கள் அனைவரும் கூறிய அனைத்துமே முயற்சிக்கானதே.

ஆயினும், அறிந்திருப்பினும், ஏற்றுக் கொண்டிருப்பினும், தேகத்தின் ஈர்ப்பு இருப்பதுவே தேக அபிமானத்தில் வருவதற்கான காரணமாகும். இந்த ஈர்ப்பிலிருந்து விலகுவதற்கான முயற்சி செய்ய வேண்டும். ஏதாவதொரு ஈர்க்கக் கூடிய பொருள் இருக்கின்றது எனில் அதனுடைய ஈர்ப்பிலிருந்து விலக்குவதற்காக என்ன செய்யப்படுகின்றது? காந்தம், விரும்பாமலேயே அதன் பக்கம் ஈர்க்கின்றது. ஒருவேளை, நீங்கள் அந்த ஈர்ப்பிலிருந்து ஒரு பொருளை விலக்குவதற்கு என்ன செய்வீர்கள்? ஒரு பொருள் விரும்பாமலேயே அதனால் ஈர்க்கப்படுகின்றது மேலும் நீங்கள் அதனிடத்திலிருந்து அப்பொருளை விலக்க வேண்டுமெனில் என்ன செய்வீர்கள்? ஒன்று அதை தூரமாக எடுத்துச் செல்வீர்கள் அல்லது அது ஈர்க்க முடியாதபடி இடையில் வேறொரு பொருளை வைப்பீர்கள். தொலைவில் வைப்பது அல்லது இரு பொருட்களுக்கும் நடுவில் வேறொரு பொருளை வைத்து விலகச் செய்வது ஆகிய இரு வழிகள் உள்ளன. இவ்விதமே, இந்த தேக அபிமானம் அல்லது வியக்த உணர்வு என்பது காந்தம் போன்றது; விரும்பாமலேயே அந்த உணர்வில் வந்து விடுகின்றனர். நடுவில் என்ன வைப்பீர்கள்? தன்னை அறிந்து கொள்வதற்கு அவசியமானது எது? இதன் மூலமே தன்னையும், சர்வசக்திவான் தந்தையையும் முழுமையான முறையில் அறிய முடியும். ஒரே ஒரு வார்த்தை தான்! தன்னை மற்றும் சர்வசக்திவான் தந்தையை முழுமையான முறையில் அறிந்து கொள்வதற்காக நியமம் தேவை. எப்பொழுது நியமத்தை மறந்து விடுகின்றீர்களோ அப்பொழுதே தன்னையும் மறந்து விடுகின்றீர்கள், சர்வ சக்திவானையும் மறந்து விடுகின்றீர்கள். கவனக்குறைவாக இருக்கும் சமஸ்காரம்கூட ஏன் வருகிறது? ஏதாவதொரு நியமத்தை மறந்து விடுகின்றீர்கள். ஆகவே நியமமே தன்னையும் சர்வ சக்திவான் தந்தையையும் அருகாமையில் கொண்டு வருகின்றது. ஒருவேளை நியமத்தில் குறைவு உள்ளது எனில் சர்வ சக்திவானுடன் கூடிய தன்னுடைய சந்திப்பும் குறைந்து விடுகின்றது. எனவே, நியமமே நடுவில் வைக்க வேண்டிய விஷயமாகும். ஏதாவதொரு நியமத்தை விடும்பொழுதே மறைந்து விடுகின்றது. ஒருவேளை நியமம் சரியாக இருக்கின்றது எனில் தன்னுடைய ஸ்திதியும் சரியாக இருக்கின்றது என்பதாகும். மேலும் தன்னுடைய ஸ்திதி சரியாக இருக்கின்றது என்றால் அனைத்து விஷயங்களும் சரியாகவே இருக்கும். எனவே, இந்த தேகத்தினுடைய ஈர்ப்பானது அடிக்கடி தன்னை நோக்கிக் கவர்ச்சிக்கின்றது. நடுவில் இந்த

நியமத்தை வைத்து விட்டால் தேகத்தின் ஈர்ப்பானது கவர்ச்சிக்காது. இதற்காக மூன்று விஷயங்களை கவனத்தில் கொள்ளுங்கள். அவை சுயத்தின் நினைவு, நியமம் மற்றும் சமயம். இந்த மூன்று விஷயங்களை நினைவில் வைத்தால் என்னவாக ஆவீர்கள்? திரிநேத்ரி, திரிகாலதரிசி, திரிலோகநாதன். உங்கள் அனைவருடைய சங்கமயுகத்தின் பட்டமானது பிராப்தியாகக் கிடைத்து விடும். தன்னை அறிவதால் சர்வ சக்திவான் நடுவில் வந்து விடுகின்றார். ஆகவே, இந்த மூன்று விஷயங்கள் மீது கவனம் செலுத்துங்கள்.

எந்த ஒரு சித்திரத்தைப் பார்க்கும்போதும் (சித்திரம் என்றால் சரீரம்) சித்திரத்தைப் பார்க்காதீர்கள் ஆனால் சித்திரத்தின் உள்ளே இருக்கும் சைத்தன்யத்தை பாருங்கள் மேலும் அந்த சித்திரத்தின் சரித்திரங்களைப் (குணங்கள்) பாருங்கள். சைத்தன்யம் மற்றும் சரித்திரத்தைப் பார்த்தீர்களெனில் சரித்திரத்தின் பக்கம் கவனம் செல்வதால், சித்திரம் அதாவது தேகத்தின் உணர்விலிருந்து விலகி விடுவீர்கள். ஒவ்வொருவரிடமும் ஏதாவது சரித்திரம் நிச்சயமாக உள்ளது. ஏனெனில், பிராமண குல பூஷணர்களே சரித்திரவான்கள். ஒரு தந்தையினுடைய சரித்திரம் மட்டுமல்ல. எனினும் தந்தையுடன் யாரெல்லாம் உதவியாளர்களாக உள்ளனரோ அவர்களுடைய ஒவ்வொரு நடத்தையும் சரித்திரமே ஆகும். ஒருவேளை இந்த இரு விஷயங்களையும் பார்த்தீர்களெனில் விரும்பாமலேயே இழுக்கும் தேகத்தின் ஈர்ப்பானது விலகி விடும். நிகழ்காலத்தில் இந்த முக்கிய முயற்சி செய்ய வேண்டும். நாங்கள் மாறிவிட்டோம் என்று நீங்கள் கூறுகின்றீர்கள் எனில் பிறகு இந்த அனைத்து விஷயங்களும் மாறியிருக்க வேண்டும். பின்னர் பழைய சமஸ்காரம் மற்றும் பழைய விஷயங்கள் ஏன் வருகின்றன? தன்னை மாற்றுவதற்காக முதலில் இந்த உணர்வை மாற்றுங்கள். இந்த உணர்வை மாற்றுவதால் அனைத்து விஷயங்களும் மாறிவிடும். பற்றுதலில் வந்து விடுகின்றீர்கள் அல்லவா! பற்றுதலுக்குப் பதிலாக தன்னை சக்தி என புரிந்து கொண்டால் பற்றுதல் சமாப்தி ஆகி விடும். தன்னை சக்தி என புரிந்து கொள்ளாததனாலேயே அனேக வித பற்றுகள் வருகின்றன. தேகத்தின் மீது பற்றுதலோ, தேகத்தின் பொருட்களின் மீதோ, இவ்வாறு எதன் மீதாவது பற்றுதல் ஏற்பட்டால் அந்த சமயத்தில் நான் சக்தியாவேன் என்பதை நினைவில் கொள்ளுங்கள். சக்தியினிடத்தில்

பற்றுதல் எங்கிருந்து வரும்? பற்றுதலின் காரணத்தினாலேயே அந்த ஸ்திதியில் நிலைக்க இயலவில்லை. ஆகவே பற்றுதலை அழித்து விடுங்கள். அதற்காக நான் சக்தியாவேன் என்பதை நினையுங்கள்.

மாதர்களுக்கு விசேஷமாக என்ன தடை வருகின்றது? மோகம்! மோகம் எக்காரணத்தால் வருகின்றது? எனது என்பதினால் மோகம் வருகின்றது ஆனால் உங்கள் அனைவருடைய உறுதிமொழி என்ன? ஆரம்பத்தில் நீங்கள் அனைவரும் வந்தபொழுது உங்களுடைய உறுதிமொழி என்னவாக இருந்தது? நான் உங்களுடையவர்; எனவே அனைத்தும் உங்களுடையவை. நானும் உங்களுடையவர் மேலும் எனதனைத்தும் உங்களுடையவை என்பதே உங்களுடைய முதல் உறுதிமொழி. பின்னர் எனது என்பது மீண்டும் எங்கிருந்து வந்தது? உங்களுடையது என்பதை என்னுடையது என்பதோடு கலந்து விடுகின்றிர்கள். முதலில் செய்த உறுதிமொழியை மறந்து விடுகின்றீர்கள் என்பது இதன் மூலம் நிரூபணம் ஆகின்றது. என்ன கூறுவீர்களோ அதைச் செய்வோம், என்ன உணவளிப்பீர்களோ அதையே உண்போம், எங்கு அமரச் செய்வீர்களோ அங்கு அமர்வோம் என்று முதன் முதலில் அனைவரும் வாக்களித்துள்ளீர்கள். இந்த வாக்குறுதி நினைவிருக்கிறதா? தந்தை உங்களை அவ்யக்த வதனத்தில் அமரச் செய்கின்றார். நீங்கள் பிறகு வ்யக்த வதனத்திற்கு ஏன் வருகின்றீர்கள்? வாக்கின் படி நடப்பதில்லையா? எங்கு அமரச் செய்வீர்களோ அங்கு அமர்வோம் என்பதே வாக்குறுதியாகும். தந்தை, வ்யக்த வதனத்தில் இருங்கள் என்று கூறவில்லை. வ்யக்கத்தில் இருந்தாலும் அவ்யக்தத்தில் இருங்கள். முதல் பாடத்தை மறந்து விட்டால் பிறகு பயிற்சி (Training) என்ன செய்வீர்கள்? பயிற்சியில் (Training) முதல் பாடத்தில் உறுதியாக்குங்கள். என்ன வாக்கு அளித்திருக்கின்றோமோ அதைக் கடைபிடித்துக் காட்டுவோம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். (எந்த மாதர்கள் பயிற்சிக்கு (Training) வந்திருக்கின்றனரோ அவர்களிடம்) நீங்கள் அனைவரும் சமர்ப்பணம் ஆகி இருக்கின்றீர்களா? சமர்ப்பணம் ஆகி விட்டீர்கள் எனில் பிறகு மோகம் எங்கிருந்து வந்தது? ஒரு பொருள் எரிந்து அழிந்து விடுகிறது என்றால் பிறகு அதில் ஏதாவது இருக்குமா? எதுவும் இருக்காது. ஒருவேளை ஏதாவது மீதம் இருக்கின்றது என்றால் அம்பு தைத்து விட்டது எனினும் முழுவதுமாக எரியவில்லை என்று அர்த்தம். இறந்து விட்டீர்கள் ஆனால் எரியவில்லை. ராவணனைக் கூட

முதலில் வதைக்கின்றனர். பிறகு எரிக்கின்றனர். மறுபிறப்பு எடுத்து விட்டீர்கள் எனினும் எரிந்து முற்றிலும் சாம்பலாக ஆகவில்லை. சமர்ப்பணம் என்பதன் அர்த்தம் மிக ஆழமானதாகும். எனது என்பது எதுவுமே மிச்சம் இல்லை. சமர்ப்பணம் ஆகி விட்டால் உடல், மனம், செல்வம் ஆகிய அனைத்தையும் அர்ப்பணம் செய்ததாக ஆகும். மனதை அர்ப்பணித்து விட்ட பின் அந்த மனதில் தனது விருப்பப்படி, எண்ணத்தை எவ்வாறு எழுப்ப இயலும்? உடல் மூலம் விகர்மம் கூட எவ்வாறு செய்ய இயலும்? மேலும் செல்வத்தைக் கூட எவ்வாறு வீணான காரியங்களில் ஈடுபடுத்த இயலும்? இதிலிருந்து நிரூபணம் ஆவது என்னவென்றால் கொடுத்து விட்டு பிறகு திரும்பப் பெற்றுவிடுகின்றீர்கள். உடல், மனம் செல்வத்தைக் கொடுத்து விட்டீர்கள் என்றால் மனதில் என்ன எழுப்ப வேண்டும் என்பதற்கான ஸ்ரீமத் கிடைத்துள்ளது, உடலின் மூலம் என்ன செய்ய வேண்டும் என்பதற்கும் வழி கிடைத்துள்ளது. செல்வத்தினால் என்ன செய்ய வேண்டும் என்பதும் தெரியும். யாருக்குக் கொடுத்திருக்கின்றீர்களோ அவரது வழிப்படி தானே நடக்க வேண்டும். யார் மனதை கொடுத்து விட்டார்களோ அவர்களது நிலை என்னவாக இருக்கும்? மன்மனாபவ! அவர்களது மனம் அங்கேயே ஈடுபட்டிருக்கும். இந்த மந்திரத்தை ஒருபொழுதும் மறக்க மாட்டார்கள். யார் மன்மனாபவ நிலையில் இருப்பார்களோ அவர்களிடம் மோகம் இருக்க இயலுமா? எனவே, மோகஜித் ஆவதற்காக தனது வாக்குறுதியை நினைவு செய்யுங்கள். பயிற்சி முடிந்து கிளம்பும்பொழுது என்ன முத்திரை பதித்துச் செல்வீர்கள்? (மோகஜீத்) ஒருவேளை மோகஜீத் என்ற முத்திரை பதிந்து விட்டால் தபால் நேராக சரியான இடத்தைக் சென்றடைந்து விடும். மேலும் முத்திரை இடப்படவில்லை என்றால் தபால் செல்லவேண்டிய இடத்திற்குச் சென்றடையாது. ஆகையினால், அவசியம் முத்திரை பதித்துக் கொள்ள வேண்டும். இந்த மாதர்களுக்கே பிறகு சமர்ப்பண விழா நடத்துவோம். யார் முத்திரை பதித்திருக்கின்றார்களே அவர்களே இதற்கு அழைக்கப்படுவார்கள். மோகஜீத் ஆனவர்களுக்கே விழா நடத்தப்படும். ஆகவே, சீக்கிரம் சீக்கிரமாக தயார் ஆகுங்கள்.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 28.09.1969 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# முழு படிப்பின் சாரம் -சொல்லையும் செயலையும் சமமாக்குங்கள்!

எந்த ரூபத்தில் சந்திப்பு செய்து கொண்டு இருக்கின்றீர்கள்? அவ்யக்த ரூபத்திலா அல்லது அன்பு ரூபத்திலா அல்லது சக்தி ரூபத்திலா? தந்தை என்ற ரூபத்தில் சந்தித்துக் கொண்டிருக்கின்றீர்கள். ஆயினும், அன்பு ரூபத்தில் அல்லது சக்தி ரூபத்திலா அல்லது அவ்யக்த ரூபத்தில நிகழ்காலத்தில் எந்த விசேஷ ரூபம் உள்ளது? நாள் முழுவதிலும் இந்த மூன்று ரூபங்களில் அதிகமாக எந்த ரூபம் உள்ளது? இந்த மூன்றிலும் சிரேஷ்டமானது எது? (ஒவ்வொருவரும் தன்னைப் பற்றி உரைத்தனர்) இப்பொழுது கேள்வி மட்டுமே கேட்கின்றோம் பிறகு தெளிவுபடுத்துவோம். இப்பொழுது அனைவரும் எடுத்துக் கொண்ட அதிகப்படியான பயிற்சி வகுப்பிலிருந்து தடைகளை ஒரு வினாடியில் அழிக்க வல்ல எந்தவொரு சக்திசாலியான கருத்தை எடுத்திருக்கின்றீர்கள்? ஒவ்வொருவரும் வெவ்வேறு கருத்தைக் கூறினர். இப்பொழுது யாரெல்லாம் கருத்துக்களை கூறினீர்களோ அவர்கள் அனைவரும் இந்த கருத்தை (பாய்ண்ட்) பயன்படுத்தியதனால் எவ்வளவு நேரத்தில் தடை விலகியது என்ற தனது அனுபவத்தை மீண்டும் எழுதி அனுப்ப வேண்டும். எவ்வாறு ஒரு மருந்தை ஒருவர் பயன்படுத்திப் பார்த்த பிறகு அனேகர் அதன் லாபத்தைப் பெறுவது எளிதாகின்றது. இப்பொழுது வெளிப்பட்ட வெவ்வேறு கருத்துக்களின் சாரமாக இரு வார்த்தைகளை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். அதில் உங்களுடைய அனைத்து விஷயங்களும் அடங்கி இருக்க வேண்டும். இப்பொழுது எடுத்துக் கொண்ட இந்தப் பயிற்சியின் முக்கிய சாரத்தை இரண்டு வார்த்தைகளில் நினைவில் வைக்க வேண்டும். அவை என்ன சொல்கின்றீர்களோ அதைச் செய்தல் வேண்டும்! நாங்கள் பிரம்மாகுமாரிகள், பாப்தாதாவினுடைய கட்டளைப்படி நடப்பவர்கள், உதவியாளர்கள் என்று கூறுகின்றீர்கள். என்ன விஷயங்களைக் கூறுகின்றீர்களோ அதை செயல்படுத்த வேண்டும். சொல்வது மற்றும்

செய்வதில் வித்தியாசம் இருக்கக் கூடாது! இதுவே உங்கள் படிப்பின் சாரமாகும். விகாரம் என்பது கெட்டது என்று சில வருடங்களாக நீங்கள் கூறுகிறீர்கள். பிறருக்கும் சொல்கின்றீர்கள் ஆனால் தான் வீடு, கிரஹஸ்தத்திலிருந்து விடுபட்டவராகி நடப்பதில்லை எனில் தனது சொல்லும் செயலும் மாறிவிடுகின்றது. ஆகையினால் இன்றிலிருந்து என்ன சொல்வோமோ அதையே செய்வோம் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். என்ன சிந்திக்கின்றீர்களோ மற்றும் உலகிற்குக் கூறுகின்றீர்களோ அதை செய்து காண்பிக்க வேண்டும். சொல்ல மட்டும் கூடாது, செய்தல் வேண்டும். இப்பொழுது மீதம் உள்ள சேவை சொல்லால் நடைபெறாது ஆனால் தன்னுடைய செயலால் நடைபெறும். சொல், செயல் மற்றும் நடத்தை என்று சொல்கின்றார்கள் அல்லவா. எனவே, சொல், செயல் மற்றும் நடத்தை மூன்றுமே ஒன்றாக இருக்க வேண்டும். அப்பொழுதே கர்மாதீத் நிலையை வெகு சீக்கிரத்தில் அடைய இயலும். ஒவ்வொரு நேரமும் என்ன சொல்கின்றேனோ அதைச் செய்கின்றேனா? என்பதை சோதனை செய்யுங்கள். நாங்கள் சர்வ சக்திவானின் குழந்தைகள் என்று கூறுகின்றீர்கள் ஆனால் செய்வது என்ன? பலஹீனமான விஷயங்கள். இன்றிலிருந்து எதைச் சொல்வேனோ அதைச் செய்வேன் என்பதை உறுதி செய்யுங்கள். யார் செய்வார்களோ அவர்களைப் பார்த்து பிறரும் தானாகவே செய்வார்கள். நீங்கள் முயற்சி செய்வதற்கான அவசியம் இருக்காது. சொல்வது ஒன்றாகவும் செய்வது இன்னொன்றாகவும் இருக்கின்றது என்று இப்பொழுது வரை புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. புகார்களை முற்றுப் பெறச் செய்ய வேண்டும். புகார் முற்றுப் பெற்றுவிட்டால் பிறகு என்ன ஆகுவீர்கள்? அல்லாவாக அதாவது உயர்ந்தவராக ஆகி விடுவீர்கள். எந்தளவு அல்லாஹ் ஆவீர்களோ அந்தளவு நீங்கள் விரும்பாவிடினும் உங்கள் பெயர் புகழடையும். எனவே எடுத்துக் கொண்ட பயிற்சியின் முக்கிய சாராம்சம் இந்த படிப்பினையே ஆகும்.

அனைவரையும் விட பயங்கரமானவர், எவரை பார்த்து அனைவரும் பயம் கொள்வார்களோ அவர் யார்? உலகத்தின் விஷயம் உலகத்தோடு இருக்கின்றது ஆனால் இந்த தெய்வீக குடும்பத்தில் உள் ஒன்றும், புறம் ஒன்றுமாக இருப்பவர்களே அனைவரையும் விட பயங்கரமானவர்கள், தீங்கு விளைவிப்பவர்கள். அவர்கள் பிறரை நிந்திப்பவர்களை விட அதிகக் கொடியவர்கள். ஏனெனில் அவர்கள் யாருடைய

அருகாமையிலும் வர இயலாது, சினேகியாக இயலாது. அவர்களிடமிருந்து அனைவரும் விலகி இருப்பதற்கு முயற்சிப்பார்கள். ஆகையினால், இந்த பட்டியில் உங்களுக்கு இந்த படிப்பினை கிடைத்துள்ளது. இதை சத்தியம் மற்றும் தூய்மை என்று சொல்லப்படுகின்றது. தூய்மை எந்த விஷயத்தில் வேண்டும், சத்தியம் எந்த விஷயத்தில் வேண்டும் என்பதும் கூட மிக ஆழமான ரகசியமாகும். சத்தியம் என்னவென்றால், என்ன செய்கின்றோமோ அதையே வர்ணனை செய்தல் வேண்டும். என்ன சிந்திக்கின்றோமோ அதையே வர்ணனை செய்தல் வேண்டும். போலியான ரூபம் கூடாது. எண்ணம் சொல் செயல் மூன்று ரூபத்திலும் சத்தியம் வேண்டும். ஒருவேளை மனதில் ஏதாவது சங்கல்பம் எழுகின்றது எனில் அதிலும் சத்தியம் வேண்டும். உள்ளுக்குள்ளே எந்த ஒரு விகர்மத்தின் குப்பையும், எந்த ஒரு சுபாவம், பழைய சமஸ்காரங்களின் குப்பையும் இல்லாதிருப்பதே தூய்மை ஆகும். யார் அத்தகைய தூய்மையானவர்களாக இருப்பார்களோ அவர்களே சத்தியமானவர்களாக இருப்பார்கள். சத்தியமானவர்களை எவ்வாறு கண்டறிவது? சத்தியமானவர்கள் அனைவருக்கும் பிரியமானவர்களாக இருப்பார்கள். அதிலும் கூட அனைத்தையும் விட முதலில் அவர்கள் பிரபுவிற்கு பிரியமானவர்களாக இருப்பார்கள். சத்தியமானவர்களைக் கண்டு இறைவன் மகிழ்ச்சி அடைகின்றார். எனவே முதலில் பிரபுவிற்குப் பிரியமானவராக இருப்பார்கள். பிறகு தெய்வீக குடும்பத்திற்குப் பிரியமானவராக இருப்பார்கள். அவர்களை எவரும் வித்தியாசமான பார்வையில் பார்க்கமாட்டார்கள். அவர்கள் ஒருபொழுதும் குழம்ப மாட்டார்கள், பிறரையும் குழப்ப மாட்டார்கள். அத்தகைய பரிபக்குவ நிலை அவர்களது பார்வை, வார்த்தை மற்றும் செயலில் இருக்கும். யார் சத்தியமானவர்களோ அவர்கள் அன்பிற்குரியவராக இருப்பார்கள். நான் சத்தியமாக இருக்கின்றேன் ஆனால் என்னை புரிந்து கொள்ளவில்லை என்று சிலர் நினைக்கின்றனர். உண்மையான வைரத்தை ஒருபொழுதும் மறைக்க இயலாது. ஆகையினால் நான் அப்படி இருக்கிறேன் ஆனால் என்னைப் புரிந்து கொள்ளவில்லை என்று நினைப்பது கூட சத்திய நிலை அல்ல! உண்மை என்பதை ஒருபொழுதும் மறைக்க முடியாது. மேலும் உண்மையானவர்கள் அனைவருடைய அன்பிற்குரியவர்கள் ஆகின்றனர். நான் அருகாமையில் இல்லை ஆகையினாலேயே புகழ்

உடையவராகவும் இல்லை என்றும் சிலர் நினைக்கின்றனர் ஆனால் யார் உண்மையானவகளாக மற்றும் உறுதியானவர்களாக இருக்கிறார்களோ அவர்கள் தொலைவில் இருந்தாலும் அவர்களை மறைக்க இயலாது. அவர்கள் எவ்வளவு தொலைவில் இருந்தாலும் பாப்தாதாவிற்கு அருகாமையில் இருப்பார்கள். யார் தந்தைக்கு அருகாமையில் இருக்கின்றார்களோ அவர்கள் அனைவருக்கும் அருகாமையில் இருக்கின்றார்கள் என்பதாகும். எனவே சத்தியமானவர் ஆக வேண்டும்.

தூய்மையின் சான்று ஒருவரது நடத்தையில் தென்படுகின்றது. புரிந்துகொண்டால் மட்டும் போதாது ஆனால் கர்மத்தில் செய்து காண்பிக்க வேண்டும். என்ன கர்மா செய்தாலும் அது பிறருடைய சேவைக்கு நிமித்தமாக இருக்க வேண்டும். தன்னுடைய எண்ணம், சொல், செயலை சோதனை செய்யுங்கள். நீங்கள் தன்னைத்தான் என்ன கூறிக் கொள்கின்றீர்கள்? பாப்தாதாவும் கூட உங்கள் அனைவருக்கும் என்ன பட்டம் கொடுக்கின்றார்கள் என்பது நினைவிருக்கின்றதா? சேவாதாரி குழந்தைகள். யார் சேவாதாரிகளாக இருக்கின்றார்களோ அவர்களது ஒவ்வொரு சங்கல்பம், ஒவ்வொரு வார்த்தை மற்றும் ஒவ்வொரு செயல் சேவையைத் தான் செய்யும். சொற்பொழிவாற்றுவது, பிறருக்கு புரிய வைப்பது மட்டும் சேவையல்ல ஆனால் யார் சேவாதாரிகளோ அவர்கள் ஒவ்வொரு வினாடியும் சேவை தான் செய்து கொண்டே இருப்பார்கள். எனவே ஒவ்வொரு வினாடியும் என்னுடைய நடத்தை சேவை நிறைந்ததாக உள்ளதா? அல்லது எனது நடத்தை சேவையைக் கெடுக்கக்கூடியதாக உள்ளதா? என்று தன்னைத்தான் பார்க்க வேண்டும். பெயர் சேவாதாரி என்று இருக்கும்பொழுது கர்மமும் அத்தகையாகவே இருக்க வேண்டும். ஆகையினால் சொல்வதையே செய்யவும் வேண்டும். இதை நினைவில் வைப்பதால் முயற்சியில் சகஜமாக வெற்றி அடைவீர்கள். நான் இத்தனை மாணவர்களுக்குப் புரிய வைத்தேன், இத்தனை சொற்பொழிவுகள் ஆற்றி இருக்கிறேன், மிகுந்த சேவை செய்து இருக்கின்றேன் என்று சிலர் மிகுந்த குஷி அடைகின்றனர் எனினும் அவை அனைத்தும் எல்லைக்குட்பட்ட சேவையே. இப்பொழுது எல்லைக்கு அப்பாற்பட்ட சேவை செய்ய வேண்டும். எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்று ரூபங்கள் மூலமும் எல்லைக்கு அப்பாற்பட்ட

சேவை நடக்க வேண்டும். அத்தகையவர்களே உண்மையான சேவாதாரிகள் என்று அழைக்கப்படுகின்றனர். நான் சேவாதாரியாக ஆகி இருக்கின்றேனா? என்று இப்பொழுது பார்க்க வேண்டும். அத்தகைய சேவாதாரிகளே பிறகு மிகுந்த சினேகியாகவும் இருப்பார்கள். இப்பொழுது அனைவரும் அத்தகைய முத்திரை பதித்து விட்டீர்களா? அல்லது இப்பொழுதுதான் துணிச்சல் கொள்கின்றீர்களா? செய்தே ஆக வேண்டும் என்று தீர்மானித்தால் முத்திரை பதிந்து விட்டதாக அர்த்தம். தேர்வில் தேர்ச்சி பெறுவேனோ அல்லது தோற்றுப்போவேனோ என்று தன்மேல் ஏன் சந்தேகம் கொள்கின்றீர்கள்? புத்திசாலி மாணவர்கள் நான் முதல் எண்ணில் வருவேன் என்று நம்பிக்கையோடு கூறுவார்கள். ஒருவேளை முதலிலேயே தன்மீது சந்தேகம் கொண்டால் சந்தேகத்தின் முடிவு என்னவாக இருக்கும்? பிறகு வெற்றியாளராக ஆக முடியாது. எதுவரை நம்பிக்கை இல்லையோ, சிறிதளவேனும் சந்தேகம் இருக்கிறதோ, அதுவரை வெற்றியாளர் ஆக மாட்டார்கள். ஆஸ்தியை அடைந்தேத் தீருவோம் என்று நீங்கள் ஆரம்பத்திலிருந்தே கங்கணம் கட்டி இருக்கிறீர்களா அல்லது பார்க்கலாம் என்று நினைத்தீர்களா? கங்கணம் கட்டியிருப்பது என்றால் ஆகி விட்டதாக அர்த்தம்.

தன்னை நிச்சயபுத்தி உடையவர்கள் என்று கூறிக் கொள்கின்றீர்கள் எனில் எந்த ஒரு விஷயத்திலும் அதாவது தந்தையிடத்திலோ, தந்தையின் ஞானத்திலோ அல்லது தந்தையின் குடும்பத்திலோ சந்தேகம் அல்லது விகல்பம் வரக்கூடாது. நாம் சிவபாபாவின் குழந்தைகள் எனவே சர்வசக்திவானுடைய குழந்தைகள், நிச்சயபுத்தி உடையவர்கள். இதை சொல்வது யார்? சர்வசக்திவானின் குழந்தைகள் சொல்கின்றனர். நம்பிக்கை வைப்பதாலேயே வெற்றி கிடைக்கும். என்ன கிடைக்குமோ தெரியவில்லை என்று உள்ளுக்குள்ளே நினைத்தாலும், நம்பிக்கை இருந்தால் வெற்றி கிடைக்கும். ஒருவேளை நம்பிக்கை இல்லையெனில், உங்களுடைய கர்மமும் அத்தகையதாகவே இருக்கும். நான் செய்தே ஆக வேண்டும் என்று நம்பிக்கை வைத்தீர்கள் எனில் கர்மமும் அதற்கு ஏற்றார்போல் இருக்கும். ஒருவேளை பார்க்கலாம், செய்யலாம் என்று நினைத்தால் கர்மமும் பலகீனமாக ஆகி விடும். ஒருபொழுதும் தனக்குள் பலகீனத்துடைய, சந்தேகத்தினுடைய உணர்வு வரக்கூடாது. பலகீனமான எண்ணம் தான் சந்தேகம் ஆகும். இப்பொழுது எதுவரை

இந்த பழைய சமஸ்காரம் மற்றும் சங்கல்பம் இருக்கும்? பழைய சமஸ்காரமும் இருக்கக்கூடாது. சமஸ்காரம் என்பது பெரிய விஷயம் எனினும் பழைய சங்கல்பம் முற்றுப் பெற வேண்டும் அப்பொழுதே பட்டியின் மூலம் பக்குவமாகிச் செல்கின்றீர்கள் என்று சொல்லலாம். பட்டி என்பதன் அர்த்தம் தான் என்ன? சூளையில் அனைத்தும் எரிந்து அழிந்து விடுகின்றது, ரூபமே மாறிவிடுகின்றது. எந்த ஒரு பொருளையும் சூளையில் போடுவதால் அதனுடைய ரூபம், குணம் முதலிய அனைத்தும் மாறிவிடும். நீங்களும் கூட பட்டி செய்கின்றீர்கள் என்றால் ரூபம், குணம் மாற வேண்டும். செங்கல் தயாராக வேண்டும் எனில் முதலில் மண்ணால் ஆனதாக இருக்கிறது. பிறகு சூடு ஏற்றுவதால் அதனுடைய ரூபம், குணம், மாறிவிடுகிறது மேலும் காரியமும் மாறிவிடுகின்றது. இவ்விதமே தன்னுடைய ரூபம், குணம், கடமை ஆகிய மூன்றுமே மாறிவிட வேண்டும். இதுவே பட்டியின் முடிவாகும். இப்பொழுது கூறுங்கள் மாறிவிட்டீர்களா? அல்லது மாறுவீர்களா? உங்களுடைய ஊக்கங்களின் கூடவே பாப்தாதாவினுடைய உதவியும் உள்ளது. எவ்வளவு நீங்கள் தன்மீது நம்பிக்கை கொள்வீர்களோ அவ்வளவு பாப்தாதாவும் அவசியம் உதவியாளராக ஆகின்றார்கள். அன்பானவருக்கு அவசியம் சகயோகம் கிடைக்கின்றது. எவரிடமிருந்தாவது சகயோகத்தைப் பெற வேண்டும் எனில் சினேகி ஆக வேண்டும். சினேகி, சகயோகம் கேட்க வேண்டியதில்லை. பாப்தாதாவினுடைய சினேகியானால் பரிவாரத்திற்கும் சினேகி; எனில் அனைவருடைய சகயோகம் தானாகவே பிராப்தியாகக் கிடைக்கும். நிச்சயபுத்தி மற்றும் நஷ்டோமோகா (பற்றற்ற நிலை) ஆகிய இந்த இரண்டு விஷயங்களே முக்கியமானவை. இந்த திலகம் நெற்றியில் வைக்கப்பட்டுவிட்டது. என்ன சொல்வோமோ அதையே செய்வோம் என்ற சுலோகத்தையும் நினைவில் வைக்க வேண்டும். இதுவே மாதர்களுக்கான அலங்காரமாகும். மாதர்கள் அதிகம் அலங்காரம் செய்வார்கள் இல்லையா! எனவே, இந்த மாதர்களுக்கான அலங்காரம், ரத்தினங்களால் செய்யப்பட்டுள்ளது. ரத்தினரங்களால் செய்யப்பட்ட அலங்காரமே அனைத்தையும் விட ஜொலிப்புடையதாக இருக்கும். தங்கத்தில் கூட ரத்தினம் பதிக்கும்பொழுதே அதிகம் ஜொலிக்கின்றது. எனவே, பாப்தாதா இந்த மாதர்களை ரத்தினங்களால் அலங்கரித்திருக்கின்றார். ஏனெனில் சங்கமயுகத்தில் தங்கத்தை விட

அதிகமாக வைரம் ஆக வேண்டும். எவ்வளவுக்கெவ்வளவு தன்னை ரத்தினங்களால் அலங்கரிப்பீர்களோ அவ்வளவே உலகத்தின் பார்வை உங்கள் பக்கம் தானாகவே திரும்பும். என் பக்கம் பாருங்கள் என்று உலகிற்குச் சொல்வதற்கான அவசியமே இருக்காது. இந்த ஞான ரத்தினங்களின் அலங்காரம் தொலைவில் இருப்பவர்களின் கவனத்தையும் கவர்ந்திழுக்கும். ஆகவே, இந்த ரத்தினங்களுடைய அலங்காரத்தை சதா காலத்திற்காக நிலையாக வைத்துக் கொள்வேன் என்ற உறுதி கொள்ள வேண்டும்.

இன்று அமிர்தவேளையில் சில குழந்தைகளின் நினைவு விசேஷமாக வந்தது. சாகார ரூபத்தில் அதிகமாக உடன் இருந்தவர்களுடைய நினைவு இன்று விசேஷமாக வந்தது ஏனெனில், தற்காலத்தில் உடன் இருந்தவர்களுடைய முயற்சி முன்பை விட மிக நன்றாக உள்ளது. ஆகையினால், முயற்சியின் அன்பில் அவர்களுடைய நினைவு வந்தது. நிகழ்காலத்தில் மதுவனத்தில் உள்ளவர்களிடம் மாற்றத்தை, விசேஷமாகக் காணமுடிகின்றது. ஒவ்வொரு இடத்திற்கு, ஒவ்வொரு ரத்தினம் ஒளி வீசிக் கொண்டு திரும்பிச் செல்கின்றது. இப்பொழுது ஒவ்வொரு ஒளி வீசும் ரத்தினமும் சென்ற பின் தனக்குச் சமமாக பிறரை எவ்வாறு ஆக்கப் போகின்றீர்கள் என்பதை இப்பொழுது பார்க்கலாம். ஒருபொழுதும் தைரியமற்ற வார்த்தைகளைப் பேசக்கூடாது. முயற்சியற்றவராக, தைரியமற்றவராக இருக்கும் காலம் இப்பொழுது கடந்து விட்டது. இப்பொழுதோ உதவியாளர் ஆக வேண்டும் மற்றும் ஆகிக் காட்ட வேண்டும். இப்பொழுது அனைவரது உள்ளத்திலும் நாமும் விரைவாகச் செல்ல வேண்டும் என்பது இருக்கின்றது. சங்கமயுகத்தில் எவ்வளவு அதிகம் இருக்கின்றோமோ அவ்வளவு மிகவும் நல்லது என்று முன்பு கூறினீர்கள். ஏனெனில், சாகார தந்தையின் உடன் இருப்பதே சங்கமயுதத்தின் அதிர்ஷ்டம் ஆகும் என்று நினைத்தீர்கள். இப்பொழுதோ எங்கு நம்முடைய தந்தை இருக்கின்றாரோ அங்கு பின்பற்றுவோராக நாமும் செல்ல வேண்டும் என்று விரும்புகின்றீர்கள்.

உங்களுடைய நடத்தை, வார்த்தைகளை விட அதிக சேவை செய்யும். இரட்டை சேவையில் வெற்றி கிடைக்கும். அப்பொழுதே இரட்டை கிரீடம் கிடைக்கும். கூறுங்கள், ஒரு கிரீடதாரி ஆக வேண்டுமா அல்லது

இரட்டை கிரீடதாரி ஆக வேண்டுமா? அல்லது ஆகியிருக்கின்றோமா? சக்தி ரூபம் ஆவதற்கான சாதனம் என்ன? அவ்யக்த நிலையில் இருக்கும்பொழுதே சக்தி ரூபமாக ஆக இயலும். அவ்யக்த நிலையில் இருந்து கொண்டு வியக்தத்தில் வந்தாலும் சேவை நிமித்தமாகவே வர வேண்டும். சேவை நிறைவுபெற்றதும் பிறகு அவ்யக்த நிலையில் இருத்தல் வேண்டும். இத்தகைய பயிற்சி செய்ய வேண்டும். பலி ஆகக்கூடியவர்களுக்கு அதன் பிரதிபலனாக என்ன கிடைக்கின்றது? பலி ஆகக்கூடியவர்களுக்கு ஈஸ்வரிய பலம் அதிகமாகக் கிடைக்கின்றது. யார் முழுமையாக ஸ்வாகா ஆகின்றார்களோ அவர்களே சதா சுமங்கலி ஆகின்றார்கள். அவர்களது சுமங்கலித்தன்மை அழியாது. சதா சுமங்கலிகளாக இருப்பவர்களுக்கு அழிவற்ற திலகம் நிரந்தரமாக இருக்கும். சதா சுமங்கலிக்கு ஆத்ம ஸ்திதியில் நிலைத்து இருப்பதற்கான திலகமானது ஒவ்வொரு நேரமும் நெற்றியில் நினைவு இருக்கின்றது. சதா சுமங்கலிக்கு வேறு என்ன அடையாளம் உள்ளது? ஒன்று திலகம், இரண்டாவது கங்கணம் (வளையல்). இது சங்கமயுகத்தின் கங்கணம் ஆகும். இவை இரண்டினையும் ஒருபொழுதும் அகற்றமாட்டார்கள். சங்கம யுகத்தின் கங்கணத்தை அகற்றும்பொழுது சுமங்கலித்தன்மை அழிந்து விடுகின்றது.

இப்பொழுது விசேஷமாக அதிசயமான சேவை செய்ய வேண்டும். தன்னுடைய தொடர்பின் மூலம், ஒருபொழுதும் அழிய இயலாத அளவிற்கு அனைவர் மீதும் வண்ணம் பூசுங்கள். அருட்காட்சியகத்தில் செய்தியை மட்டும் பெற்றுச் செல்கின்றனர் ஆனால் இப்பொழுது ஒருபொழுதும் அழியவே முடியாத அளவிற்கு நமது தொடர்பின் வண்ணத்தை அழிவற்றதாக பூச வேண்டும் என்பதில் கவனம் வைக்க வேண்டும். இப்பொழுது நீங்கள் பயம் தாண்டி முன்னேறிச் செல்ல வேண்டும். முதலில் நடப்பதற்கான சமயம் இருந்தது, பிறகு ஓடுவதற்கான சமயம் வந்தது. இப்பொழுதோ உயரம் தாண்டுவதற்கான சமயம் ஆகும். ஒருவேளை ஓடிச் சென்றடைய முயற்சித்தால் வெகு தாமதம் (டூ லேட்) ஆகி விடும். உயரம் தாண்டி குதிப்பதற்கு நேரம் ஆவதில்லை. ஏக்ரஸ் நிலையில் இருப்பதற்காக ஒரே ஒரு சுத்த சங்கல்பம் கொள்ள வேண்டும். அது எந்த ஒரு சங்கல்பம்? ஒன்று சினேகி ஆவது, இரண்டாவது சேவாதாரியாக இருப்பது. அவ்வளவுதான்! இதைத் தவிர வேறு எண்ணம் கூடாது. சேவாதாரிக்கு

சேவையைப் பற்றிய எண்ணமே எழும். பட்டியின் லட்சியமான தான் மாறி பிறரை மாற்ற வேண்டும் என்பதை சதா நினைவில் வைக்க வேண்டும். இதுவே நம்பிக்கையின் அடையாளம் ஆதும் உங்கள் மீது என்ன முத்திரை பதிந்துள்ளது? நிச்சயத்தி பற்றற்ற நிலை மற்றும் சேவாதாரி என்பதன் முத்திரை. இந்தத் திரிமூர்த்தி முத்திரையின் அடையாளம் பதிந்துள்ளது. தனது இந்த அடையாளத்தை நிலையானதாக வைத்துக்கொள்ள வேண்டும். தனக்குச் சமமாக, பிறரையும் தன்னையும் விட உயர்ந்தவராக ஆக்க வேண்டும், குறைந்தவராக அல்ல! தன்னைவிட உயர்ந்தவராக ஒருவரை ஆக்குவதென்பது கூட தன்னுடைய உயர்வு அல்லவா! ஓம்சாந்தி.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋❋

## 03.10.1969 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## சம்பூரண சமர்ப்பணத்தின் அடையாளங்கள்!

யாரைக் காண்கின்றீர்கள்? யார் யாரைப் பார்த்துக் கொண்டிருக்கின்றீர்கள்? (இரண்டு, மூன்று நபர்கள் தனது கருத்தைக் கூறினார்கள்) இன்று பாப்தாதா தன்னுடைய முழுமையான விட்டில்பூச்சிகளைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். ஏனெனில், எந்தளவு விட்டில்பூச்சி ஆகியிருக்கின்றீர்கள் என்பதைக் காணவே வந்திருக்கின்றோம். பொதுவாக விட்டில்பூச்சி விளக்கை நாடிச் செல்கின்றன ஆனால் இங்கோ விளக்கு விட்டில்பூச்சிகளைச் சந்திக்கின்றது. யார் முழுமையான விட்டில்பூச்சிகளோ அவர்களுடைய லட்சணம் என்ன? அவர்களைக் கண்டறிவது எவ்வாறு என்பது உங்களுக்குத் தெரியுமா? (ஒவ்வொருவரும் விடையளித்தார்கள்) நீங்கள் அனைவரும் கூறியது யதார்த்தமானது. விட்டில்பூச்சியாக இருப்பவர் விளக்கினுடைய சினேகியாக இருப்பார்கள், அருகாமையில் இருப்பார்கள் மற்றும் சர்வ சம்பந்தங்கள் அந்த ஒருவருடனேயே இருக்கும் என்பதே முக்கியமான சாரமாக வெளிப்பட்டுள்ளது. எனவே, சர்வ சம்பந்தம், சினேகி, சமீபம் மற்றும் சாகசம் (தைரியம்). யார் சம்பூர்ண விட்டில்பூச்சியாக இருப்பார்களோ, அவர்களுக்குள் இந்த நான்கு விஷயங்களும் தென்படும். உங்கள் அனைவரையும் இங்கு பட்டிக்கு எதற்காக அழைக்கப்பட்டுள்ளது? சொல்லப்பட்ட நான்கு விஷயங்களையும் முழுமையான சதவிகிதத்தில் தாரணை செய்ய வேண்டும், ஒரு சதவிகிதம் கூட குறையக் கூடாது. சில குழந்தைகள் நாங்கள் விட்டில்பூச்சியாக இத்தனை சதவிகிதமே ஆகியுள்ளோம் என்று கூறுகின்றனர். யாரிடம் சதவிகிதத்தில் குறையுள்ளதோ அவர்களை சம்பூர்ண விட்டில்பூச்சியென்று சொல்ல முடியாது. அவர்கள் இரண்டாம் தர விட்டில்பூச்சி என்று கூறலாம். அவர்கள் சுற்றிச் சுற்றி வரக் கூடியவர்களாக இருப்பார்கள். உடனடியாக ஒரே முறையில்

விளக்கில் பலியாகக் கூடியவர்கள் ஒருவிதம். சிந்தித்து புரிந்து அடியெடுத்து வைக்கக் கூடியவர்கள் இரண்டாம் விதம். யார் சிந்தித்து, புரிந்து அடியெடுத்து வைப்பார்களோ அவர்களைச் சுற்றிச் சுற்றி வரக்கூடியவர்களென்றே சொல்லலாம். இரண்டாம் தர விட்டில்பூச்சிகள் பல விதமான சங்கல்பங்கள் தடைகள் மற்றும் கர்மங்களிலே சுற்றிக் கொண்டு இருப்பார். இன்று பாண்டவ சேனை பட்டிக்காக அழைக்கப்பட்டுள்ளது. எங்கேயாவது ஒரு நல்ல தொழிற்சாலை உள்ளதெனில் அதற்கு முத்திரை கிடைத்து விடுகின்றது. ஒருவேளை அந்த தொழிற்சாலைக்கு முத்திரை கிடைக்கவில்லை எனில் அதில் தயாரிக்கப்படும் பொருள் அவ்வளவாக விற்பனை ஆவதில்லை. இவ்விதம் நீங்கள் கூட பட்டிக்கு இங்கு வந்திருப்பது முத்திரை பதிப்பதற்காகவே ஆகும். தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் பொருளில் வாணிக உரிமைக் குறி (டிரேடு மார்க்) இடப்படுகின்றது அல்லவா! நீங்கள் பிறகு என்ன முத்திரை பதிப்பதற்காக வந்திருக்கின்றீர்கள்? சம்பூரண சரணாகதி அல்லது சம்பூரண சமர்ப்பணம் என்ற முத்திரை. ஒருவேளை முத்திரையைப் பதிக்கவில்லை எனில் என்ன ஆகும் என்று தெரியுமா? எவ்வாறு முத்திரை பதிக்கப்படாத பொருளின் மதிப்பு குறைந்து விடுகின்றதோ அவ்வாறே ஆத்மாக்கள் உங்களுக்கும் கூட சொர்க்கத்தில் மதிப்பு குறைந்து விடும். எனவே தன்னுடைய ராஜ்யத்தில் அருகாமையில் வருவதற்காக இந்த முத்திரையைப் பதித்தே ஆக வேண்டும். மாதர்களுக்கு நஷ்டோமோகா (பற்றற்ற நிலை) என்ற மந்திரம் கிடைத்துள்ளது மற்றும் பாண்டவ சேனைக்கு சம்பூரண சமர்ப்பணம் என்ற மந்திரம் கிடைத்துள்ளது. பாண்டவர்கள் இறுதி மலையில் ஏறி மறைந்து விட்டனர் என்று கூறப்படுகின்றது. மலைகளில் அல்ல ஆனால் உயர்ந்த ஸ்திதியில் மூழ்கி விட்டனர். தாழ்ந்த நிலையிலிருந்து முற்றிலும் உயர்ந்து அவ்யக்த ஸ்திதியில் மூழ்கி விட்டனர். அதாவது, அந்த அவ்யக்த ஸ்திதியில் சம்பூரணத்தன்மையை அடைந்தனர். இந்த பாண்டவர்களின் நினைவுச்சின்னமும் உள்ளது. அந்த நினைவுச்சின்னத்தை நினைவூட்டவும் நடைமுறையில் கொணர்வதற்காகவும் பட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சம்பூர்ண சமர்ப்பணம் என்று எது சொல்லப்படுகிறது? சம்பூர்ண சமர்ப்பணம் என்றால் உடல், மனம், செல்வம், சம்பந்தம் மற்றும் சமயம்

ஆகிய அனைத்தையும் அர்ப்பணம் செய்வது. ஒருவேளை மனதை சமர்ப்பணம் செய்திருந்தால் மனதை ஸ்ரீமத் அல்லாமல் பயன்படுத்த இயலாது. செல்வத்தை ஸ்ரீமத்படி பயன்படுத்துவது எளிதானது. உடலையும் கூட பயன்படுத்துவது எளிதானதாகும் ஆனால் மனம் ஸ்ரீமத் இல்லாமல் ஒரு சங்கல்பத்தைக் கூட உருவாக்கக் கூடாது. இந்த நிலையே சம்பூர்ண சமர்ப்பணம் என்று சொல்லப்படுகிறது. ஆகையினாலே தான் மன்மனாபவ என்ற முக்கிய மந்திரம் உள்ளது. ஒருவேளை மனமானது சம்பூர்ண சமர்ப்பணம் ஆகி இருக்கிறது எனில் உடல், மனம், செல்வம், சமயம், சம்பந்தம் ஆகிய அனைத்தும் விரைவிலேயே அதன் பக்கம் சென்று விடுகின்றன. எனவே, முக்கியமான விஷயமே மனதை சமர்ப்பணம் செய்வது, வீண் எண்ணம், விகல்பங்களை சமர்ப்பணம் செய்வதாகும். இதுவே சம்பூர்ண விட்டில்பூச்சியின் அடையாளமாகும். சம்பூர்ண சமர்ப்பணமானவர்களின் மனதில் அவரது (பாப்தாதாவினுடைய) குணம், கடமை மற்றும் சம்பந்தத்தைத் தவிர வேறு எதுவும் நினைவில் இருக்காது. இப்பொழுது கூறுங்கள், அத்தகைய முத்திரை பதிக்கப்பட்டுள்ளதா? தற்காலத்தில் உலகில் நீங்கள் அலுவலகங்களில் வேலை செய்யும்பொழுது, சிலசமயம் அலுவலகத்தில் உள்ள பொருட்களை தன்னுடைய வேலையில் பயன்படுத்துகிறீர்கள். இவ்விதம் நீங்கள் எதை சமர்ப்பணம் செய்து விட்டீர்களோ அது உங்களுடைய பொருள் கிடையாது. யாருக்குக் கொடுத்தீர்களோ அவருடையதாக ஆகி விட்டது. ஆகவே அவருடைய பொருளை நீங்கள் தன்னுடைய காரியத்தில் பயன்படுத்த இயலாது ஆனால் சமஸ்காரம் ஆன காரணத்தினால் அவ்வப்பொழுது ஸ்ரீமத்தின் கூடவே மன்மத், தேக அபிமானத்தினுடைய வழியை, சூத்திர வழியை ஆங்காங்கு பயன்படுத்துகிறீர்கள். ஆகையினாலேயே கர்மாதீத் நிலை அல்லது அவ்யக்த நிலை ஏக்ரஸ்ஸாக இருப்பதில்லை. ஏனெனில் மனம் வெவ்வேறு ரசனையில் இருக்கும்போது ஸ்திதி கூட வித விதமாக இருக்கிறது. ஒரே ரசனையில் இருந்தால் ஒரே ஸ்திதி இருக்கும். பாப்தாதா குழந்தைகளை லேசாக ஆக்குகின்றார்கள். மேலும் குழந்தைகள் அறிந்தே தன் மீது சுமையை எடுத்துக் வைத்துக் கொள்கின்றனர். ஏனெனில், 63-ஜென்மங்களாக விகர்மங்களின் சுமை, உலகிய மரியாதைகளின் (கட்டுப்பாடுகள்) சுமையை சுமக்கும் பழக்கம் உடையவராக ஆகியிருந்தீர்கள். ஆகையினால், சுமையை இறக்கி

வைத்த பிறகும் கூட தூக்கி வைத்து கொள்கின்றனர். யாருக்கு என்ன பழக்கம் இருக்கிறதோ அந்த பழக்கத்திற்கு கட்டுண்டவர் ஆகி விடுகின்றனர் அல்லவா! ஆகையினால், தன்னுடைய பழக்கத்தின் காரணத்தினால் தன்னுடைய பொறுப்பை தன் மீதே வைத்துக் கொள்கின்றனர். ஒவ்வொரு பாண்டவரும் ஒருவேளை சம்பூர்ண சமர்ப்பணம் ஆகிக் கிளம்பினால் என்னவாகும் சொல்லுங்கள்? எப்பொழுது பாண்டவ சேனை தயாராகி விடுமோ அப்பொழுது கௌரவர்கள், யாதவர்கள், மைதானத்திற்கு வந்து விடுவார்கள் பிறகு, என்னவாகும்? உங்களுடைய ராஜ்யம் உங்களுக்குப் பிராப்தம் ஆகி விடும். எதுவரை யோசிப்பது, பேசுவது கேட்பது, செய்வது முதலிய எதுவுமே ஸ்ரீமத் அல்லாமல் செய்யமாட்டோம் என்ற இந்த உறுதிமொழி அளிக்கவில்லையோ அதுவரை இந்த பட்டியின் மூலம் லாபத்தைப் பெற இயலாது. ஏதாவது ஆகி விட்டுத் தான் செல்வோம், ஏதாவது மாறிவிட்டுத் தான் செல்வோம் என்ற ஊக்கம் உற்சாகத்தோடு தான் வந்து இருக்கிறீர்கள் அல்லவா! இவ்வாறு யோசித்தே வந்து இருக்கிறீர்கள் அல்லவா, பயம் ஏற்படவில்லையே? எவ்வளவுக்கெவ்வளவு ஆழத்தில் செல்வீர்களோ அவ்வளவு பயம் மறைந்து விடும். எப்போது ஒரு விஷயத்தின் ஆழத்தில் செல்லவில்லையோ அப்பொழுதே பயம் ஏற்படுகிறது. எவ்வாறு கடலின் மேலே அலைகளின் பயம் ஏற்படுகிறது. எனினும், கடலுக்கு அடியில் ஆழத்தில் என்ன இருக்கிறது? முற்றிலும் அமைதி நிலவுகிறது மேலும் அமைதியின் கூடவே பிராப்தியும் கிடைக்கிறது. ஆகையினால் எப்பொழுதெல்லாம் ஏதாவது பயம் கொள்ளும்படியாக விஷயம் வருகிறதோ அப்போதெல்லாம், (ஞானத்தின்) ஆழத்தில் சென்று விட வேண்டும். அப்போது பயம் காணாமல் போய்விடும்.

இப்பொழுது என்ன லட்சியம், லட்சணத்தை செய்ய வேண்டும்? இதில் யார் முதல் எண்ணில் இருப்பார்களோ அவர்களுக்கு என்ன கொடுப்பார்கள்? எதிர்காலத்தில் ராஜ்யத்தைப் பெறத்தான் செய்வார்கள், எனினும் கூட பரிசு கிடைக்கும். ஆகையினால், ஒவ்வொருவரும் முதலி எண்ணில் வருவதற்கான முயற்சி செய்ய வேண்டும். இரண்டாவது எண்ணில் வருபவர்களுக்குக் கிடைக்காது. யார் வெற்றி அடைவார்களோ அவர்களே முதல் எண்ணை அடைவார்கள். வெற்றி அடைவதற்கான முயற்சி செய்யும்பொழுது முதல் எண்ணில் வந்து

விடுவீர்கள். நல்லது. உங்களுக்கு திலகம் (பிந்து) வைக்க வேண்டுமா அல்லது பிந்து ரூபமாகவே இருக்கிறீர்களா? திலகம் எத்தனை விதங்களாக இருக்கின்றன? உங்களுக்கு இன்று இரண்டு திலகங்கள் வைக்கின்றனர். சங்கமயுகத்தில் நோயற்றவர் ஆவதற்கான திலகம் மற்றும் எதிர்காலத்தில் ராஜ்ய பாக்கியத்தின் திலகம். பிந்து ரூபத்தை நினைவில் வைப்பதற்காக திலகம் இடுகிறார்கள். திலகம் வைத்து வைத்து பிந்து ஆகி விடுவீர்கள். எந்த ஒரு வீண் எண்ணம் வந்தாலும் அதற்குப் புள்ளி வைத்து விடுங்கள். அப்போது பிந்து ஆகி விடுவீர்கள்.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 16.10.1969 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பகுத்தறியும் சக்தியை அதிகரியுங்கள்!

இன்று விசேஷமாக என்ன பார்த்துக் கொண்டு இருக்கின்றோம்? பரிவர்த்தனை எவ்வாறு உள்ளது? இந்தக் குழுவில் வினாவிற்கான விடை அளிப்பதில் புத்திசாலி யார்? காணக்கூடிய மற்றும் பகுத்தறியக்கூடிய சக்தி எந்தளவு வந்திருக்கின்றது? நல்லது. யோக ஸ்திதியில் நிரந்தரமாக இருக்கக்கூடியவர் யார்? திவ்ய குணங்களின் தாரணையில் திவ்ய குணமூர்த்தியாக யார் தென்படுகின்றார்? இதை ஏன் கேட்கின்றார்கள்? ஏனெனில், ஒருவேளை பகுத்தறியும் பயிற்சி இருக்குமானால், உலகில் காரிய நிமித்தம் செல்லும்போது அசுர சம்பிரதாயத்தினருடன் சம்பந்தம் வைக்க வேண்டிய நிலையில், அனேக விஷயங்களில் வெற்றியாளர் ஆக இயலும். ஒருவேளை பகுத்தறியும் சக்தி இல்லையெனில் வெற்றியாளர் ஆக இயலாது. தன்னுடைய பரிவாரத்தில் சிறிதளவு உங்களால் பகுத்தறிய இயலுகிறது. இங்கே ஒவ்வொரு ரத்தினமும் ஒருவரைவிட ஒருவர் சிரேஷ்டமானவர். எனினும், பகுத்தறியும் பயிற்சி அவசியம் தேவை. இந்த பகுத்தறியக்கூடிய பயிற்சியை சிறிய விஷயமாகக் கருத வேண்டாம். இதன் ஆதாரத்திலேயே முன்னிலையில் எண்ணை (நம்பரை) அடைய இயலும். எந்தவொரு சூழ்நிலையையும், எத்தகைய சங்கல்பம் கொண்ட ஆத்மாக்களையும், நிகழ்காலம் மற்றும் எதிர்காலம் ஆகிய காலங்களையும் கண்டறியும் பயிற்சி தேவை. விசேஷமாக பாண்டவ சேனைக்கு இந்த பகுத்தறியும் சக்தி மிக அவசியமானதாக உள்ளது. ஏனெனில், கோபர்களாகிய உங்கள் முன் அனேக வித சூழ்நிலைகள் வருகின்றன. அவற்றை எதிர்கொள்வதற்காக புத்தியின் தூய்மை மிகவும் அவசியமானது ஆகும். பகுத்தறியும் சக்தி எவ்வாறு வரும்? அதற்கான முக்கிய சாதனம் என்ன? பகுத்தறியும் சக்தியை அதிகரிப்பதற்கான முக்கிய சாதனம் என்ன? பகுத்தறியும் வழி எதுவாக இருந்திட வேண்டும்? உங்கள் எதிரில் எவர் வந்தாலும் அவர்களை பகுத்தறிய இயலுமா? (ஒவ்வொருவரும் அவரவர் கருத்தைக் கூறினர்).

அனைவருடைய விடையும் ஒன்று தான். அவ்யக்த நிலை அல்லது நினைவு அல்லது ஆன்மீக ஸ்திதி ஆகிய அனைத்தும் சரிதான். ஆயினும், ஆன்மீக ஸ்திதியின் கூடவே யாருடைய புத்தியில் அதிக வீண் எண்ணம் எழுவதில்லையோ, புத்தி ஒருவருடைய நினைவில், ஒருவருடைய காரியத்தில் மற்றும் ஏக்ரஸ் ஸ்திதியில் இருக்குமோ அவர்களாலேயே யதார்த்த ரூபத்தில் பகுத்தறிய இயலும். அவர்கள் பிறரை விரைவில் கண்டறிய இயலும். யாருடைய புத்தியில் அதிக சங்கல்பம் எழுமோ அவர்களுடைய புத்தியில் பிறரை பகுத்தறியும் நேரத்தில் கூட தன்னுடைய வீண் சங்கல்பத்தின் கலப்படம் இருக்கும். ஆகையினால், யார் எத்தகையவர்கள் என்பதை பகுத்தறிய இயலாது. எனவே புத்தியின் தூய்மை என்பதே மூல ரகசியமாக வெளிப்பட்டுள்ளது. எவ்வளவு புத்தியின் தூய்மை' இருக்குமோ அவ்வளவே யோகயுக்த் நிலையில் இருக்க முடியும். எழக்கூடிய வீண் எண்ணம் மற்றும் விகல்பம் அவ்யக்த நிலை ஏற்படுவதில் தடையாக உள்ளன. அடிக்கடி இந்த சரீரத்தின் ஈர்ப்பில் வந்து விடுகின்றனர். இதற்கான மூல காரணம் புத்தியின் தூய்மை இல்லாததே ஆகும். புத்தியின் தூய்மை என்றால் புத்திக்குக் கிடைத்திருக்கும் மகா மந்திரத்தில் புத்தி மூழ்கி இருக்க வேண்டும். ஒருவருடைய நினைவை விடுத்து அனேக பக்கம் புத்தி செல்கின்ற காரணத்தால் சக்திசாலியாக இருப்பதில்லை. எப்பொழுது புத்தி அதிக காரியத்தில் ஈடுபட்டிருக்கின்றதோ அப்பொழுது புத்தியில் பலஹீனம் மற்றும் களைப்பின் உணர்வு ஏற்படுவதை அனுபவம் செய்திருப்பீர்கள். மேலும், எதையும் யதார்த்த ரூபத்தில் நிர்ணயம் செய்ய இயலாது. இவ்விதம் வீண் எண்ணங்கள், விகல்பங்கள் என்ன எழுகின்றனவோ அவை புத்தியை களைப்படைய வைத்து விடுகின்றன. களைப்படைந்த எந்த ஒரு ஆத்மாவாலும் கண்டறியவும் முடியாது. தீர்மானம் செய்யவும் இயலாது. எவ்வளவு தான் புத்திசாலியாக இருந்தாலும், களைப்பில் இருக்கும்பொழுது அவரது கண்டறிதல் மற்றும் தீர்மானித்தலில் வேறுபாடு ஏற்படுகின்றது. நாள் முழுவதும் இந்த எண்ணங்களினால் புத்தி களைப்படைந்து இருக்கும் காரணத்தினால் நிர்ணயம் செய்யும் சக்தி குறைந்து விடுகின்றது. ஆகையினால், வெற்றியாளர் ஆக முடிவதில்லை. தோல்வி அடைவதற்கான முக்கிய காரணமே புத்தியின் தூய்மை இல்லாததே ஆகும்.

உலகில் மந்திரவாதிகளிடத்தில் கைகளின் தூய்மை உள்ளது அல்லவா? நீங்கள் புத்தியின் தூய்மையினால் ஒன்றை எந்த நிலையிலிருந்தும் மற்றொரு நிலைக்கு மாற்ற இயலும். அவர்கள் கரங்களின் தூய்மையினால் விரைவாக மாற்றிவிடுகின்றனர், கால தாமதம் ஆவதில்லை. ஆகையினால், மந்திரவாதி என்று அழைக்கப்படுகின்றனர். உங்களிடமும் மாற்றம் செய்வதற்கான மந்திரம் வந்து விடும். இப்பொழுது மாற்றுவதற்குக் கற்றிருக்கின்றீர்கள், எனினும் மந்திர வித்தைக்கு சமமாக மாற்ற இயலவில்லை. அதாவது விரைவாக மாற்ற இயலவில்லை. கால அவகாசம் எடுக்கின்றது. மந்திரம் போடுவதற்காக எவ்வளவு நேரம் ஒருவருக்கு மந்திரத்தின் வித்தை நினைவிலிருக்கிறதோ அவ்வளவே அவரது மந்திரம் வெற்றி அடைகின்றது. உங்களுக்கும் கூட ஒருவேளை மகாமந்திரம் நினைவில் இருந்தால் மந்திரத்திற்குச் சமமாக உங்களது காரியம் இருக்கும். இப்பொழுது இதில் தாமதமாகின்றது. எனவே இப்பொழுது இந்த பட்டியிலிருந்து என்னவாகி வெளிவருவீர்கள்? (மந்திரவாதி). ஒருவேளை இத்தனை மந்திரவாதிகள் பாரதத்தின் ஒவ்வொரு மூலைக்கும் சென்றால் என்ன ஆகும். ஒரு மாதத்திற்குள் வேறு காட்சி தென்படும். இப்பொழுதோ தயார் செய்ய வேண்டியுள்ளது அல்லவா? ஒருவேளை இத்தனை மந்திரவாதிகள் மாற்றுவதற்கான காரியத்தை துவக்கி விட்டால் பிறகு என்ன செய்ய வேண்டியிருக்கும்? இத்தகையதொரு புதுமையை நீங்களும் காண விரும்புகின்றீர்கள் மற்றும் பாப்தாதாவும் விரும்புகின்றார்கள். இவர்கள் யார், எங்கிருந்து உதித்திருக்கின்றனர் என்ற வார்த்தை பரவ வேண்டும். ஒவ்வொரு இடத்தில் ஒரு அலௌகீக ஆத்மா அவதாரம் எடுத்து வந்திருக்கின்றது என்ற உணர்வு ஏற்பட வேண்டும். ஒரு அவதார புருஷர் அனேகம் செய்ய முடிகின்றது எனில் இங்கு எத்தனை அவதார புருஷர்கள் உள்ளனர். இங்கிருந்து செல்லும்போது ஈஸ்வரிய சேவைக்காக நான் இந்த சரீரத்தில் அவதரித்திருக்கின்றேன் என்று புரிந்து கொண்டு செல்ல வேண்டும். ஒருவேளை இதை நினைவில் வைத்துக் கொண்டு சென்றீர்கள் என்றால் உங்களுடைய ஒவ்வொரு நடத்தையிலும் அலௌகீக தன்மை வெளிப்படும். உங்களுடைய தெய்வீக குடும்பத்தைச் சார்ந்தவர்களும், லௌகீக குடும்பத்தைச் சார்ந்தவர்களும், இவர்கள் மிகச் சிறந்தவர்களாக மாறி வந்திருக்கின்றனர். நல்ல மாற்றம் அடைந்து வந்திருக்கின்றனர் என்று

உணர வேண்டும். எப்பொழுது உங்களுடைய மாற்றத்தின் உணர்வு ஏற்படுமோ அப்பொழுது நீங்கள் உலகை மாற்ற இயலும். ஒருவேளை உங்கள் அனைவருடைய மாற்றம் உணரப்படவில்லை என்றால் உலகை மாற்ற இயலாது. தான் மாறி உலகை மாற்ற வேண்டும். இந்த சரீரத்தை நிமித்தமாக, கடனாகப் பெற்று ஈஸ்வரிய காரியத்திற்காக, சில தினங்களுக்கு அவதரித்திருக்கின்றேன், காரியம் நிறைவு பெற்ற பின் சென்று விடுவேன் என்று புரிந்துகொண்டு செல்ல வேண்டும். இந்த நினைவை லட்சியமாகக் கொண்டு, அத்தகைய ஸ்திதியை உருவாக்கிய பிறகு செல்ல வேண்டும்.

இது பூந்தோட்டம் ஆகும். பாப்தாதா சைத்தன்ய பூந்தோட்டத்திற்கு வந்திருக்கின்றார்கள். கொஞ்சம் வார்த்தைகளிலிருந்து நறுமணத்தை எடுத்துக் கொள்கின்றார்கள், சிறிது கண்களிலிருந்து, சிறிது நெற்றியின் மணியிலிருந்து நறுமணத்தை எடுத்துக் கொள்கின்றார்கள். ஒவ்வொருவருடைய நெற்றி மணியின் ஒளியை பாப்தாதா பார்க்கின்றார்கள். அவ்வாறே, ஒருவேளை நீங்கள் அனைவரும் கூட நெற்றி மணியை மட்டும் பார்த்துக் கொண்டிருந்தால் பிறகு இந்த திருஷ்டி, விருத்தி சுத்தமானதாக சதோபிரதானமாக ஆகி விடும். நெற்றியின் மணியைப் பார்க்காமல் சரீரத்தின் ரூபத்தைப் பார்க்கின்றீர்கள். இதுவே திருஷ்டி சஞ்சலம் ஆகுவதற்கான மூல காரணம் ஆகும். ரூபத்தைப் பார்க்காதீர்கள் ஆனால் நெற்றியின் மணியைப் பாருங்கள். ரூபத்தை(உருவத்தை) காணும்பொழுது நாகத்தைக் காண்பதாக நினையுங்கள். நாகத்தின் நெற்றியில் மணி உள்ளதல்லவா? எனவே மணியைப் பார்க்க வேண்டும், நாகத்தை அல்ல. ஒருவேளை சரீர உணர்வில் பார்க்கின்றீர்கள் எனில் நாகத்தைப் பார்க்கின்றீர்கள் என்பதாகும். நாகத்தைப் பார்த்தீர்கள் மேலும் நாகம் கடித்து விட்டது! நாகம் தனது காரியத்தைச் செய்யும் நாகத்தில் விஷமும் உள்ளது. மணி உள்ள சில சில விசேஷ நாகங்கள் உள்ளன. கோபர்களாகிய நீங்கள் நாகத்தை எவ்வாறு கொல்ல வேண்டும், என்ன செய்வீர்கள்? நீங்கள் நாகத்தைப் பார்த்தாலும் பார்க்காதீர்கள், மணியைப் பாருங்கள். ஒருவேளை சரீரம் என்ற நாகத்தைப் பார்த்தால் பிறகு அதனுடையதாக ஆகி விடுவீர்கள், அதற்குச் சமம் ஆகி விடுவீர்கள் ஆனால் மணியைப் பார்த்தீர்களென்றால் பாப்தாதாவின் மாலையின் மணி ஆகி விடுவீர்கள். நாகத்திற்குச் சமமாக ஆக வேண்டுமா அல்லது

மாலையின் மணி ஆக வேண்டுமா? மணி ஆக வேண்டும் எனில் மணியைப் பாருங்கள். பிறகு, உங்கள் குறைகள் (Complaints) மாறி சம்பூரணம் (Complete) ஆகி விடுவீர்கள். புத்தியின் பகுத்தறிதல் மட்டும் தேவை. குறைகள் எங்கே, சம்பூரணம் எங்கே! இரண்டிற்கும் இரவிற்கும் பகலிற்குமான வேறுபாடு உள்ளது ஆனால், சிந்தி பாஷையில் எழுதினால் இரண்டு புள்ளிகளுடைய வேறுபாடு மட்டும் இருக்கும். இங்கும் கூட அவ்வாறே உள்ளது. ஒன்று தான், இன்னொன்று பாப்தாதா, இவையே இரு புள்ளிகள். இந்த இரு புள்ளிகள் மட்டும் நினைவிருந்தது எனில், குறைகளுக்குப் பதிலாக சம்பூரணம் ஆகி விடுவீர்கள். ஆகையினால், இன்றிலிருந்து இந்த உறுதிமொழியை தனக்குத் தானே எடுத்துக் கொள்ளுங்கள். பாப்தாதாவின் முன்னிலையில் அனேக உறுதிமொழிகள் செய்திருக்கின்றீர்கள் ஆனால் இன்று இப்பொழுதிலிருந்து மணியைத் தவிர வேறு எதையும் பார்க்க மாட்டேன். மேலும், தான் மாலையின் மணியாகி முழு சிருஷ்டியின் நடுவில் ஒளி வீசுவேன் என்று தனக்குத் தானே உறுதிமொழி செய்யுங்கள். தான் மணி ஆகும் பொழுதே ஒளி வீசுவீர்கள். ஒருவேளை மணி ஆகவில்லை எனில் ஒளி வீசமாட்டீர்கள். எப்பொழுது உறுதிமொழி செய்வீர்களோ அப்பொழுதே பிரத்யட்சம் ஏற்படும். தனக்குத் தானே முழுமையான ரீதியில் உறுதிமொழி செய்ய இயலவில்லை ஆகையினாலே, பிரத்யட்சமும் முழுமையான ரீதியில் ஏற்படவில்லை. தனக்குத் தானே உறுதிமொழி செய்வதில் குறை இருக்கும் காரணத்தால் பிரத்யட்சமும் குறைவாகவே ஏற்படுகின்றது. உறுதிமொழி செய்த சிறிது நேரத்திற்குப் பின் மறந்து விடுகின்றீர்கள். ஆயினும், இப்பொழுது உறுதிமொழியின் கூடவே பிரத்யட்சத்தையும் கொணர்வோம் என்றும் உறுதி கொள்ளுங்கள்.

பாண்டவ சேனை ஞான சொரூப ஆத்மா மற்றும் சக்தி சேனை அன்பு சொரூப ஆத்மா. யார் சினேகியாக இருக்கின்றாரோ அவர் யோகியாக இருப்பார். இப்பொழுதோ ஒவ்வொரு பாண்டவரின் நெற்றியில் ஊக்கம், உற்சாகம் ஜொலித்துக் கொண்டிருக்கின்றது. இந்த ஊக்கம் மற்றும் உற்சாகம் ஏக்ரஸ்ஸாக (ஒரே பாபாவின் மீதான ரசனை) சதா இருக்க வேண்டும். செய்யப்பட்ட உழைப்பிற்கான பலனைக் காண்பிக்க வேண்டும். ஒருவேளை பெற்ற உழைப்பிற்கு இங்கேயே பலனை காண்பிக்கவில்லை எனில் பிறகு சத்யுகத்தில் உழைப்பிற்கான பலனை

அளிக்க வேண்டியிருக்கும். ஆகையினால், என்ன உழைப்பைப் பெற்றீர்களோ அதற்குப் பதிலாக நிறைத்துக் கொடுக்க வேண்டும்.

ஒவ்வொரு சேவைக் கேந்திரத்திலிருந்தும் இந்தக் குமார் அவதாரம் எடுத்து இந்த பூமிக்கு வந்திருக்கின்றார் என்ற இந்த சமாச்சாரம் வர வேண்டும். அத்தகைய செய்தி எப்பொழுது வருகின்றதோ அப்பொழுதே பலன் வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது என்று புரிந்து கொள்ளுங்கள். இப்பொழுது அத்தகைய ஸ்திதியின் அவசியம் உள்ளது. எவ்வாறு பாப்தாதா இரவலாகப் (லோனாக) பெற்று வருகின்றார்கள் அல்லவா! தற்பொழுது இருவரும் இரவலாகப் பெறுகின்றார்கள். சிறிது நேரத்திற்காக வருகின்றார்கள். எதற்காக? சந்திப்பதற்காக! அவ்வாறே நீங்கள் அனைவரும் கூட நான் சேவை நிமித்தமாக, சிறிது நேரத்திற்காக, கடனாகப் பெற்று வந்திருக்கின்றேன் என்று புரிந்து கொள்ளுங்கள். எப்பொழுது அத்தகைய ஸ்திதி உருவாகுமோ அப்பொழுதே தந்தையின் பிரபாவம் உலகின் முன் தோன்றும். இரண்டு கணக்கையும் சரி செய்து விட்டீர்களா? அல்லது பெற்றுவிட்டு, (உழைப்பை) பின் கொடுக்கவில்லையா? ஆறு மாதங்கள் வரை ஏக்ரஸ்ஸாக இருப்பீர்கள் அல்லவா? அல்லது 15-நாட்களுக்குப் பின் விரும்புகின்றோம் ஆனால் என்ன செய்வது, இது நடந்து விட்டது, என்று கடிதம் எழுதுவீர்களா? இத்தகைய எந்தவொரு குறையும் வரக்கூடாது. பிறகு, தீதீயின் காரியம் இலகுவாகி விடும். நீங்கள், சுயம் சுமை உடையவர்கள் ஆனீர்கள் என்றால் அனைத்து காரியங்களும் சுமை உடையதாகி விடும்.

பாப்தாதாவின் ஆசை மற்றும் சுத்த சங்கல்பம் என்னவென்றால், ஒவ்வொருவரும் முதல் எண்ணில் வரவேண்டும் என்பதே. இந்த ஆசை இருக்கின்றது மேலும் இருக்கும். எனினும், முழு கல்பத்தில் இப்பொழுது என்ன ஸ்திதியை உருவாக்குவீர்களோ. அது தற்போதைய கணக்கின்படி முதல் எண் அல்லவா? இதுவே உண்மையான சம்பூரண நிலை ஆகும். இதற்காகவே கூறுகின்றார்கள் அனைவரும் நான் முதல் எண்ணில் வருவேன் என்ற லட்சியம் வைக்க வேண்டும். அனைவரும் எவ்வாறு முதல் எண்ணில் வர இயலும்? என்று யோசிக்க வேண்டாம். இதில் மகாதானி ஆக வேண்டாம். இரு விஷயங்களை முக்கியமாக நினைவில் வைத்திட வேண்டும். அவை, ஒன்று மணியைப் பார்க்க

வேண்டும், தேகம் என்ற நாகத்தைப் பார்க்கக்கூடாது. மற்றும் இரண்டாவது விஷயம், தன்னை அவதாரம் என்று புரிந்து கொள்ளுங்கள். இந்த சரீரத்தில் அவதாரம் செய்து காரியம் செய்ய வேண்டும். மேலும், ஒரு சுலோகத்தை சதா நினைவில் கொள்ள வேண்டும். அது, பாப்தாதா என்ன கூறுவார்களோ, என்ன செய்விப்பார்களோ, எவ்வாறு நடக்கச் செய்வார்களோ, அவ்வாறே செய்வோம், நடப்போம், பேசுவோம், பார்ப்போம். இது பாண்டவ சேனையின் முக்கியமான சுலோகம் ஆகும். என்ன சொல்வார்களோ அதை சிந்திப்போம். வேறு எதையும் சிந்தித்தல் கூடாது. இந்தக் கண்களால் வேறு எதையும் பார்க்கக் கூடாது, கண்களையும் கொடுத்து விட்டீர்கள் அல்லவா! நீங்கள் முழுமையான விட்டில்பூச்சி அல்லவா! விட்டில்பூச்சிக்கு விளக்கு அல்லாமல் வேறு ஏதாவது பார்வைக்குத் தெரியுமா என்ன? உங்களுடைய கண்கள் பிறவற்றை ஏன் காண்கின்றன? பிறவற்றைப் பார்க்கும் பொழுது அவை ஏமாற்றிவிடுகின்றன. தனக்கு ஏமாற்றத்தை அளிக்காதீர்கள் சம்பூரணம் என்றால் முழுமையான விட்டில்பூச்சி என்று அர்த்தம். இது முத்திரையாகும்.

முடிவு (ரிசல்ட்) நன்றாகவே உள்ளது எனினும் அதை அழிவற்றதாக வைத்துக் கொள்ள வேண்டும். அப்பொழுது எவ்வாறு விரும்புகின்றீர்களோ அவ்வாறே ஸ்திதியை உருவாக்க இயலும். இந்த மனதை டிரில் (பயிற்சி) செய்விக்க வேண்டும். ஒரு வினாடியில் சப்தத்திலும், அடுத்த வினாடியில் சப்தத்தைக் கடந்தும், ஒரு வினாடியில் சேவைக்கான சங்கல்பம் செய்வதாலும் மேலும் அடுத்த வினாடி சங்கல்பத்தைக் கடந்து சொருபத்தில் நிலைத்து விடுதலும் ஆகிய இந்தப் பயிற்சியை அவசியம் செய்யுங்கள். இந்தப் பயிற்சி மிகவும் அவசியமானதாக உள்ளது. சரீர உணர்விலிருந்து விடுபடவே இயலாது என்பது கூடாது. ஒரு வினாடியில் காரியத்திற்காக சரீர உணர்வில் வர வேண்டும், பிறகு அடுத்த வினாடியில் அசரீரி ஆகி விட வேண்டும். யாருக்கு இந்த பயிற்சி பக்காவாக (உறுதி) இருக்குமோ அவர்களே அனைத்து சூழ்நிலைகளையும் எதிர்கொள்ள இயலும். எவ்வாறு உடற்பயிற்சி காலையில் செய்யப்படுகின்றது, அவ்வாறு இந்த அவ்யக்த பயிற்சியைக் கூட அமிர்தவேளையில் விசேஷமாகச் செய்ய வேண்டும். முழு தினமும் செய்திட வேண்டும். எனினும், விசேஷமாக

பயிற்சி செய்வதற்கான நேரம் அமிர்தவேளை ஆகும். புத்தி மிகவும் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டு இருக்கும் நேரத்தில் இந்தப் பயிற்சியைச் செய்யுங்கள். சுறுசுறுப்பான சூழ்நிலையில் இருந்த போதிலும் தான் தனது புத்தியை விடுவிக்க முடிய வேண்டும். எனினும், என்னவெல்லாம் காரியம் செய்கின்றீர்களோ, அவற்றை விடுபட்ட நிலையில் இருந்து செய்தால் மட்டுமே, விடுவிக்க இயலும். ஒருவேளை அந்த காரியத்தில் பற்றுதல் இருந்தால் பிறகு ஒரு வினாடியில் விடுபட இயலாது. ஆகையினால், இந்தப் பயிற்சியை செய்யுங்கள். சூழ்நிலை எத்தகையதாக இருப்பினும் செய்யுங்கள். ஏனெனில், இறுதித் தேர்வானது அனேகவிதமாக அச்சுறுத்தக் கூடியதாகவும் மற்றும் நாம் விரும்பாமலேயே கூட தன் பக்கம் ஈர்க்கக்கூடிய சூழ்நிலைகளுக்கு மத்தியிலும் வரும். அதனுடன் ஒப்பிட்டால் நிகழ்கால சூழ்நிலைகள் ஒன்றுமே இல்லை. இறுதி நேர சூழ்நிலைகள் என்ன வரப்போகின்றனவோ, அந்த சூழ்நிலைகளுக்கு நடுவில் கேள்வித்தாள் தரப்படும். முதலிலிருந்தே இதற்கான ஏற்பாடு செய்ய வேண்டும். ஆகையினால், எப்பொழுது தன்னை மிகவும் சுறுசுறுப்பாக (பிஸியாக உணருகிறீர்களோ, ஸ்தூல காரியத்தில் புத்தி மிக சுறுசுறுப்புடன் இருக்கின்றதோ, நாலா புறங்களின் சூழ்நிலைகள் தன் பக்கம் ஈர்க்கக்கூடியதாக உள்ளனவோ, அத்தகையதொரு நேரத்தில் இந்தப் பயிற்சி செய்யுங்கள். அப்பொழுதே நாம் எந்தளவு பயிற்சி செய்ய முடிகிறது என்பது தெரிய வரும், இது மிகவும் அவசியமானதாகும். இந்தப் பயிற்சி செய்துகொண்டே இருந்தால் வெற்றியை அடைவீர்கள். ஒவ்வொரு பாடத்திற்கும் மதிப்பெண் உள்ளது. முக்கியமானது இதுவே ஆகும். ஒருவேளை இந்தப் பயிற்சியை நன்றாக செய்தால், நல்ல மதிப்பெண்கள் பெற இயலும். ஒருவேளை இந்த பாடத்தில் மதிப்பெண் குறைவானால் இறுதித் தேர்வில் முதல் எண்ணில் வர இயலாது. ஆகையினால், ஞானசொருப ஆத்மா ஆவதன் கூடவே சினேகியாகவும் ஆக வேண்டும் என்று கூறப்பட்டிருந்தது. யார் அன்பானவராக இருப்பாரோ அவர் அன்பை அடைகின்றார். இதனால் இன்னும் அதிக அன்பு ஏற்படுகின்றது. இப்பொழுதே தன் உணர்வைக் கூட மறந்து விட்டார்கள் என்று கூறுகின்றார்கள். தன் உணர்வு என்றால் தன்னுடைய சொரூபத்தின் நினைவைக் கூட மறந்து விடுகின்றனர். புத்தியின் ஈடுபாடு கூட

தந்தையைத் தவிர எங்கும் செல்லாது. அவ்வாறு இருப்பவர்களையே சினேகி என்று கூறமுடியும்.

இந்தக் குழுவின் விசேஷ குணம் என்னவென்றால் அனைத்து விஷயங்களையும் கற்றுக் கொள்வது, தாரணை செய்வது மற்றும் வருங்காலத்தில் கூட தன்னை அவ்வாறே, நடத்திக் கொள்வதற்காக, சாதகப் பறவைகளாக இருக்கின்றனர். சாதகப் பறவைகள் ஆகி விட்டீர்கள் எனினும், அதன் கூடவே குணவான்களாகவும் ஆக வேண்டும். சாதகப் பறவைகளாக இருப்பதே இந்தக் குழுவின் விசேஷத்தன்மை ஆகும். ஆயினும், சாதகப்பட்சியின் காரியமே தாகத்துடன் இருப்பதாகும். இந்தச் சித்திரத்தை குணத்தில் காண வேண்டும் அப்பொழுதே சாதகப் பறவைகள் என்பதன் கூடவே தகுதியானவர்கள் என்றும் கூறலாம். இப்பொழுது சாதகப் பறவை களாக இருக்கின்றீர்கள். பிறகு, முடிவு வெளிப்பட்ட பிறகு இரண்டு பட்டங்கள் கிடைக்கும். இப்பொழுது சாதக பறவைகள், பிறகு, வெற்றிமணி மாலையில் அருகாமையில் வருவதற்குத் தகுதியானவராகவும் ஆகி விடுவீர்கள். என்ன சுலோகம் சொல்லப்பட்டதோ மேலும் பட்டியின் முத்திரை என்று என்ன கூறப்பட்டதோ, அதை நிலையாக வைத்திருந்தால் இரண்டு குணங்களுமே வந்து விடும். நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋❋

## 20.10.1969 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பிந்து மற்றும் சிந்து என்ற நினைவின் மூலம் சம்பூரண நிலை!

இன்று எந்தக் குழுவில் பாப்தாதா வந்திருக்கின்றார்கள், இன்றைய தினம் குழுமியிருக்கும் குழுவை என்னவென்று கூறுவது? இன்றைய தினத்தின் குழுவானது ஞானசூரியன் மற்றும் நட்சத்திரங்களுடையது ஆகும். ஒவ்வொரு நட்சத்திரமும் அதனதன் பிரகாசத்தை வெளிப்படுத்தக் கூடியதாக உள்ளது. பாப்தாதா ஒவ்வொரு நட்சத்திரத்தின் பிரகாசத்தைக் காண்பதற்காக வந்திருக்கின்றார்கள். நீங்கள் அனைவரும் இந்த பட்டிக்கு வந்திருக்கின்றீர்கள் எனில் தன்னை என்னவாக ஆக்குவதற்காக வந்திருக்கின்றீர்கள்? பட்டியிலிருந்து என்னவாக ஆகி வெளிப்பட வேண்டும் என்பது தெரியுமா? (ஃபரிஸ்தா) நீங்கள் ஃபரிஸ்தா ஆகவில்லையா? இந்த பட்டியில் சம்பூரணத் தன்மையின் முத்திரையை பதித்துச் செல்ல வேண்டும். இப்பொழுது ஃபரிஸ்தா ஆவதற்கான முயற்சியாளராக இருக்கின்றீர்கள். எனினும், சம்பூரணத்தன்மையில் என்ன குறை உள்ளதோ, அந்தக் குறையை இந்த பட்டியில் ஸ்வாகா (அர்ப்பணம்) செய்வதற்காக வந்திருக்கின்றீர்கள். அப்படித் தானே! குறைகளை தூரம் ஆக்குவதற்காக எந்த விஷயத்தை நினைவில் வைப்பீர்கள்? இதன் மூலம் சம்பூரணத் தன்மையின் முழுமையான முத்திரை இடப்பட்டுச் செல்வீர்கள். இன்று பாப்தாதா மிக எளிதான விஷயம் பற்றிக் கூறுகின்றார்கள். மிகவும் எளியதிலும் எளிய, நினைவில் வைக்க வேண்டிய விஷயம் என்னவென்றால், நான் பிந்து வாக (புள்ளியாக) இருக்கின்றேன். மேலும், தந்தையும் பிந்து வாக இருக்கின்றார். ஆயினும், பிந்துவின் கூடவே சிந்துவாக (கடலாக) இருக்கின்றார் என்பதாகும். எனவே, பிந்து மற்றும் சிந்து என்பது தந்தை மற்றும் குழந்தைகளுடைய அறிமுகம் ஆகும். ஒருவேளை இந்த இரு வார்த்தைகளை நினைவில் வைத்தீர்கள் என்றால் கூட சம்பூரண நிலையை எளிதாக அடைய இயலும். பள்ளியில், சிறு குழந்தைகளுக்கு பயிற்றுவிக்கும் போது முதன்முதலில் என்ன கற்றுத் தருகின்றனர்?

முதலில் பிந்து தான் எழுதுவார்கள். அதற்கு அடுத்தபடியாக ஒன்று என்பதைக் கற்பிக்கின்றனர். இதுவும் ஒரு பிந்து, அடுத்து முன்னேறிச் செல்கின்றீர்கள். எனவே, பிந்துவின் நினைவு மற்றும் ஒன்று. அந்த ஒன்றில் அனைத்து விஷயங்களும் அடங்கி உள்ளன. ஒருவருடைய நினைவு மற்றும் ஏக்ரஸ் நிலை(ஒரே ரசனை), ஒருவர் காட்டும் வழி மற்றும் ஒருவருடைய கடமையில் உதவியாளர். ஒருவேளை ஒரு விஷயம் மட்டும் நினைவில் வைத்தால் தன்னை மிகவும் நன்றாக முன்னேற்ற இயலும். பிந்து மற்றும் ஒன்று. இது மட்டும் தான். இதற்குப் பின் விஸ்தாரத்தில் செல்வதற்கான அவசியமே இல்லை. விஸ்தாரத்தில் செல்ல வேண்டுமாயின் சேவைக்காக மட்டும் செல்ல வேண்டும். ஒருவேளை சேவை இல்லையெனில் பிந்து மற்றும் ஒன்று. அதற்குப் பிறகு, தனது புத்தியைப் பயன்படுத்துவதற்கான அவசியமே இல்லை. இந்த விஷயங்களை மட்டும் நினைவில் வைத்தால் கூட எளிதாக சம்பூரண நிலையை அடைய இயலும். இது எளிதானதா அல்லது கடினமானதா? எளிய வழி தான் ஆனால், எளிமையானதை கடினமானதாக யார் ஆக்குவது? (சமஸ்காரம்) இந்த சமஸ்காரம் கூட ஏன் உருவாகின்றது? தனது மறதி மட்டுமே இந்த அனைத்து விஷயங்களை உருவாக்குகின்றது. பழைய சமஸ்காரமோ, பழைய கர்மபந்தனமோ, நிகழ்கால தவறுகளோ, பிரச்னைகளோ எதுவாயினும் அதற்கான மூல காரணம் தன்னுடைய மறதியே ஆகும். தன்னுடைய மறதியின் காரணத்தால் இந்த அனைத்து வீணான விஷயங்களும் எளியதைக் கடினமாக்கி விடுகின்றன. நினைவு இருக்கிறது என்றால் என்னவாகும்? என்ன லட்சியத்தோடு வந்திருக்கின்றீர்கள்? நினைவை சம்பூரணமாக ஆக்கவும், மறதியை அசம்பூரணம் (நீக்குவது) ஆக்கவும் வந்திருக்கின்றீர்கள். மறதி உள்ளது எனில் மிகுந்த தடை உள்ளது என்று அர்த்தம் மேலும் நினைவு உள்ளது எனில், எளிது மற்றும் சம்பூரணத் தன்மையை அடைய இயலும். இரண்டு விஷயங்கள் கூறப்பட்டன. ஒருவேளை இந்த நினைவை உறுதி ஆக்கிக் கொண்டே சென்றால் மறதி தானாகவே ஓடிவிடும். நினையை விடவே இல்லை என்றால் மறதி எங்கிருந்து வரும்! சூரியன் அஸ்தமிப்பதனாலேயே இருள் சூழ்கின்றது. சூரியன் அஸ்தமிக்கவே இல்லை என்றால் இருள் எவ்வாறு வரும்? அவ்வாறே ஒருவேளை நினைவு என்ற சூரியனை சதா நிலையாக வைத்திருந்தால் மறதி என்ற இருள் வர இயலாது.

# 1969 அவ்யக்த முரளிகள்!

இந்த அலௌகீக டிரில்லை (பயிற்சி) அறிந்திருக்கின்றீர்களா? உலகில் தற்காலத்தில், உடற்பயிற்சி செய்பவர்கள் ஆரோக்கியமாக இருக்கின்றனர். ஆரோக்கியத்துடன் கூடவே சக்திமிக்கவர்களாகவும் இருக்கின்றனர். அவ்வாறே, இந்த அலௌகீக பயிற்சியை யார் எந்தளவு செய்கின்றார்களே, அந்தளவே ஆரோக்கியமாக இருப்பார்கள். அதாவது மாயாவின் வியாதி வராது. மேலும், சக்தி சொரூபமாகவும் இருப்பார்கள். எவ்வளவுக்கெவ்வளவு இந்த அலௌகீக புத்தியின் பயிற்சியை செய்துகொண்டே இருப்பீர்களோ, அவ்வளவுக்கவ்வளவு, லட்சியத்திற்கேற்ப ஆவீர்கள். பயிற்சியில், பயிற்சி அளிக்கும் ஆசிரியர் கூறுவது போல் கை, காலை அசைப்பர் அல்லவா? இங்கும் கூட, ஒருவேளை அனைவருக்கும் ஒரு நொடியில் சாகார நிலையில் இருந்து நிராகாரி ஆகி விடுங்கள் என்று கூறினால் ஆக இயலுமா? எவ்வாறு ஸ்தூல சரீரத்தின் கை, காலை, பயிற்சியின்போது வழிகாட்டுதலின் படி உடனடியாக இயக்குகின்றார்கள், அவ்வாறே ஒரு வினாடியில் சாகார நிலையிலிருந்து நிராகாரி ஆவதற்கான பயிற்சி உள்ளதா? சாகார நிலையிலிருந்து நிராகாரி ஆவதற்கு எவ்வளவு சமயம் ஆகின்றது? அதுவே தனது உண்மை சொருபமாக இருந்தபோதிலும் ஒரு வினாடியில் ஏன் நிலை இயலவில்லை? இப்பொழுது வரை கர்மபந்தனம் உள்ளது. இன்னும் கர்மபந்தனம் என்ற வார்த்தையை கேட்டு கொண்டே இருக்க வேண்டுமா என்ன? இந்த பழைய சரீரத்தை விடும் வரையிலும் கர்மபந்தனம் என்பதை கேட்டுக் கொண்டே இருக்க வேண்டுமா?

இந்த வகுப்பில் வினாவிற்கான விடை அளிப்பவர் யார்? அனேக பெயர்களைக் கூறினீர்கள். பிறகு, வினா-விடையைக் கடந்து செல்பவர் யார்? இந்த பட்டியில் கண்டறியும் சக்தி வரும். ஒவ்வொருவரும் நான் சம்பூரணம் ஆகி விட்டுத் தான் செல்வேன் எனும்படியாக முயற்சி செய்ய வேண்டும். அவ்வாறு இப்பொழுது முடியுமா? அல்லது இறுதியில் ஏற்படுமா? (முடியும்). பின்னர் இறுதி வரை இருந்து என்ன செய்வீர்கள்? (பிரஜைகளை உருவாக்குவோம்). தான் ராஜாவாக, கிரீடதாரியாக ஆவீர்கள் மற்றும் பிறரை பிரஜை ஆக்குவீர்களா? தனக்குச் சமமாகவும் உருவாக்க வேண்டும், பிரஜைகளையும் உருவாக்க வேண்டும். இல்லையெனில் பிரஜை இல்லாமல் யார் மீது ராஜ்யம் செய்வீர்கள்? இத்தனை அனைத்து நட்சத்திரங்களும்

சம்பூரணம் ஆகி விட்டுத் தான் செல்வார்கள் என்று எடுத்துக் கொள்ளலாமா? நான் சம்பூரணம் ஆவேன் மேலும் அனைவரையும் ஆக்குவேன் என்ற இந்த ஊக்கம் மற்றும் நம்பிக்கை ஒவ்வொருவருக்குள் இருக்க வேண்டியது அவசியம் ஆகும். இந்த ஊக்கம், உற்சாகம் சதா நிலையாக இருந்தால், அவசியம் லட்சியம் பிராப்தியாகி விடும். அத்தகைய சம்பூரணமானவர்கள் தான் இந்த யக்ஞ குண்டத்திலிருந்து வெளிப்படுவார்கள் என்று பாப்தாதாவிற்கு நம்பிக்கை உள்ளது

யக்ஞ குண்டத்தின் நினைவுச்சின்னத்தைக் கண்டிருக்கிறீர்களா? சேவைக்கேந்திரங்கள் அனைத்துமே யக்ஞம் தான். இருப்பினும், யக்ஞ குண்டத்திற்கு மகத்துவம் உள்ளது. கங்கை மற்றும் யமுனை ஆகிய இரண்டிற்கும் மகத்துவம் உள்ளது. எனினும், அவை சங்கமிக்கும் இடத்திற்கான மகத்துவம் அதிகம் ஆகும். அங்கு ஸ்நானம் செய்வது உயர்ந்ததாகக் கருதப்படுகின்றது. கங்கை, யமுனை அனேக இடங்களில் பாய்ந்தாலும் விசேஷமாக அவை சங்கமிக்கும் இடத்திற்கு ஏன் ஸ்நானம் செய்யச் செல்கின்றனர்? அதன் விசேஷ மகத்துவம் என்ன? சங்கமத்தின் மகத்துவத்தை நன்றாக அறிந்திருக்கின்றீர்கள் அல்லவா! எவ்வாறு விசேஷ இடங்களுக்கு விசேஷ மகத்துவம் உள்ளதோ, அவ்வாறு மதுவனத்தின் பட்டிக்கும் கூட விசேஷ மகத்துவம் உள்ளது. இந்த பட்டியின் மூலம் சம்பூரணத் தன்மையின் பரிசு தந்தை மூலம் கிடைக்கின்றது. இந்த சந்திப்பின் அதாவது சங்கமயுகத்தின் விசேஷ சௌபாக்கியம் குழந்தைகளுக்குக் கிடைக்கின்றது. இந்த சந்திப்பு தான் சம்பூரணத்தன்மையின் பரிசாக கிடைத்துள்ளது. இந்த சந்திப்பின் நினைவுச்சின்னமே நதிகளின் சங்கமம் ஆகும். எனவே, இந்த சந்திப்பே சம்பூரணத் தன்மையின் பரிசாகும். பட்டியிலிருந்து சம்பூரணம் ஆவதற்கான முத்திரையைப் பதித்து விட்டுத் தான் செல்வீர்கள், ஆயினும் அதன் கூடவே இந்த பட்டியில் கணக்கு போடுவதையும் நன்முறையில் கற்றுக் கொள்ள வேண்டும்.

கணக்கு முழுமையாகப் போடத் தெரியாத காரணத்தால் எங்கு கூட்ட வேண்டுமோ அங்கு கழித்து விடுகின்றனர், எங்கு கழிக்க வேண்டுமோ அங்கு கூட்டி விடுகின்றனர். ஆகையினால், நிலை தடுமாறுகின்றது. எந்த விஷயத்தில் இணைக்க வேண்டும் மற்றும் எந்த விஷயத்தில்

துண்டிக்க வேண்டும் என்ற கணக்கையும் முழுமையாகக் கற்றுக் கொள்ள வேண்டும். இல்லறத்தில் இருக்கும் காரணத்தால் எங்கு இணைக்கக்கூடாதோ அங்கு இணைத்து விடுகின்றனர். மேலும் எங்கு துண்டிக்கக்கூடாதோ அங்கு துண்டித்து விடுகின்றனர். இந்த சிறிய கணக்கு பெரிய பிரச்சனையாக ஆகி விடுகின்றது. ஆகையினால், இல்லறத்தில் இருந்தபோதிலும் எதைத் துண்டிக்க வேண்டும், எதை இணைக்க வேண்டும் என்பதைக் கூட முழுமையிலும் முழுமையாகக் கற்றுக் கொள்ள வேண்டும். மேலும், இணைக்கவும் வேண்டும் ஆனால் எதுவரை மற்றும் எந்த ரூபத்தில் இணைக்க வேண்டும்? நீங்கள் பட்டிக்கு அழைக்கப்பட்டிருக்கிறீர்களெனில், அதற்கான காரியத்தையும் கூறுவார்கள் அல்லவா! எந்தெந்த பாடத்தில் பரிபக்குவம் ஆக வேண்டும்? ஒன்று அலௌகீக ஈஸ்வரிய பயிற்சி (டிரில்) என்ற பாடம் மற்றும் இரண்டாவது கணக்கு போடுவது. இந்த இரு விஷயங்களை இந்த பட்டியில் கற்றுக் கொள்ள வேண்டும். ஒருவேளை இந்த இரு விஷயங்களில் சம்பூரணம் ஆகி விட்டால் மீதம் என்ன இருக்கும். சம்பூரணம் ஆகி விட்டுத் தான் செல்வீர்கள். நீங்கள் ஆகி விடுவீர்கள், எனினும், பிறரை ஆக்குவதற்கான காரியம் கூட பாக்கி இருக்கும். இதன் நிமித்தமாக செல்ல வேண்டும். சம்பந்தத்தின் காரணமாகச் செல்லக்கூடாது ஆனால், சேவை நிமித்தம் செல்ல வேண்டும். செல்லத் தான் வேண்டும் எனில் சேவையின் நிமித்தமாக மட்டும் செல்ல வேண்டும். எங்கு இருந்தாலும் தன்னை அவ்வாறு புரிந்து கொண்டு இருந்தால், பற்றற்ற மற்றும் அன்பான நிலை இருக்கும். எவ்வாறு பாப்தாதா சேவை நிமித்தம் வருகின்றார்கள், செல்கின்றார்கள் அல்லவா! அவ்வாறே நீங்கள் அனைவரும் கூட சேவைக்காக நிமித்தமாகி மட்டும் செல்ல வேண்டும் மற்றும் சேவையின் வெற்றியை அடைந்த பின்னர், எதிரில் வர வேண்டும்.

அவ்யக்த வதனத்தில், நிகழ்காலத்தில், பாப்தாதா ஒவ்வொரு குழந்தைக்கும் என்ன மந்திரம் கொடுக்கின்றார்கள்? விரைந்து செல்லுங்கள், விரைந்து வாருங்கள் (Go Soon, Come Soon) சேவைக்காகச் செல்லுங்கள் மேலும், துணைவனாகி விரைந்து வாருங்கள், பிறகு, செல்லுங்கள். எப்பொழுது இங்கு விரைந்து சென்று, விரைந்து வருவீர்களோ அப்பொழுது புத்தி மூலமாகவும் விரைவாக நடக்கும். புத்தியின் பயிற்சி கூட விரைந்து சென்று விரைந்து வருவது அல்லவா?

எப்பொழுது இந்த ஸ்தூல மந்திரத்தை நினைவில் வைப்பீர்களோ அப்பொழுதே அந்த நிலை ஏற்படும். இந்த மந்திரத்திற்கும் அந்த (உலகீய) மந்திரத்திற்கும் சம்பந்தம் உள்ளது. எனவே தான் யக்ஞ குண்டத்திற்கு மகத்துவம் உள்ளது என்று கூறப்பட்டது. இங்கு உங்களுக்குப் பரிசு என்ற ரூபத்தில் கிடைக்கின்றது. அங்கு முயற்சியின் ரூபத்தில் கிடைக்கின்றது. எனவே, யக்ஞ குண்டத்திற்கு விசேஷ மகத்துவம் உள்ளது அல்லவா! இங்கு வரதானம், அங்கு உழைப்பு. வரதானம் கிடைக்கும்போது, ஏன் உழைக்கின்றீர்கள்? இந்த யக்க குண்டத்திலிருந்து பேசும் கலையையும் கற்றுக் கொண்டு செல்ல வேண்டும். உங்களைப் பார்த்து பிறரும் கூட ஈர்க்கப்பட்டு யக்ஞ குண்டத்தில் ஸ்வாகா ஆகி விட வேண்டும். நீங்கள் அத்தகைய உதாரணமானவர்களாக ஆக வேண்டும்.

பாப்தாதா ஒவ்வொருவருடைய சித்திரத்தின் மூலம் ஒவ்வொருவருடைய அதிர்ஷ்டம் மற்றும் முயற்சியைக் காண்கின்றார்கள். எந்தளவு தன்னுடைய அதிர்ஷ்டத்தை உருவாக்குகின்றார்கள் என்பதைக் காண்கின்றார்கள். நீங்களும் கூட பிறரைக் காணும் பொழுது ஒவ்வொருவருடைய சித்திரத்தின் மூலம் அவரது முயற்சி, அவரது முயற்சியினுடைய விசேஷ குணம் ஆகியவற்றைக் காண வேண்டும். ஒவ்வொருவருடைய முயற்சியில் அவசியம் விசேஷ குணம் உள்ளது அந்த குணத்தைக் காண வேண்டும். ஒன்று நற்குணம் மற்றொன்று தீய குணம். இரு வார்த்தைகளும் எவ்வளவு ஒன்றுபோல் உள்ளது. எனினும், இது எத்தகையது, அது எத்தகையது! ஒருவேளை குணத்தைக் காணாவிடில் தீயகுணம் வந்து விடும். எனவே, ஒவ்வொருவருடைய குணத்தையும் காண வேண்டும். அவ்வாறு பார்த்தால் தீய குணம் அழிந்து விடும்.

யார் ஒருவருக்கொருவர் அன்பானவர்களாக இருக்கின்றார்களோ, அத்தகைய அன்பான குழந்தைகள் மீது பாப்தாதாவிற்கும் மிகுந்த அன்பு உள்ளது. அன்பே அருகில் கொண்டு வருகின்றது. எந்தளவு சினேகியோ அந்தளவு சமீபத்தில் இருப்பார்கள். ஆகவே, ஒருவருக்கொருவர் சினேகியாக இருக்கின்றீர்களா? அத்தகைய சினேகி குழந்தைகள் தான் தற்பொழுதும் மற்றும் எதிர்காலத்திலும் கூட சமீபத்தில் வர இயலும். விசேஷ சினேகிகள் நீங்கள், ஆகையினாலே இன்று விசேஷமாக

இரண்டு திலகம் வைக்கின்றார்கள் ஆனால், அது மிகச் சிறந்தது, லௌகீக ரீதியான திலகம் அல்ல. இரண்டு திலகங்கள் எவை? ஒன்று நிராகாரி, மற்றொன்று பற்றற்றநிலை. இந்த இரண்டு திலகங்களையும் ஒவ்வொருவருடைய நெற்றியில் அழிவற்றதாக நிலைக்கச் செய்வதற்காக அழிவற்ற ரூபத்தில் இருந்து தான் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த அழிவற்ற திலகங்கள் சதா நிலையானதாக உள்ளதா? திலகத்தை சுமங்கலியின் அடையாளம் என்று சொல்லப்படுகின்றது. இந்தத் திலகத்தை சதா நிலையானதாக வைத்துக் கொள்வதற்கான முயற்சி செய்ய வேண்டும். எந்தளவு பரிபக்குவத்துடன் இருப்பீர்களோ, அவ்வளவு பதவியை அடைய இயலும். ஒவ்வொருவரும் நான் தான் முதல் எண்ணில் இருக்கின்றேன் என்றே நினைக்க வேண்டும். ஒருவேளை ஒவ்வொருவரும் முதல் எண்ணில் இருந்தால் பிறகு, இரண்டாம் எண்ணில் யார் வருவார்கள்? தந்தையின் வகுப்பில் ஒருபொழுதும் எண்ணைக் கூற இயலாது. ஆசிரியரும் முதல் எண்ணில் உள்ளார். மாணவர்களும் கூட முதல் எண்ணில் உள்ளனர். எனவே, ஒவ்வொருவரும் நம்பர் ஒன் (முதல் எண்). ஆகவே, அத்தகைய வகுப்பினுடைய சித்திரம் மதுவனத்தில் இருக்க வேண்டும்.

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵ ✵✵✵✵✵✵✵

## 25.10.1969 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## மாலையின் மணி ஆவதற்காக வெற்றியாளர் ஆகுங்கள்!

பாப்தாதா குழந்தைகளைப் பார்க்கும்பொழுது முக்கியமாக எந்த விஷயத்தைப் பார்க்கின்றார்கள்? ஒவ்வொரு ரத்தினமும் தனக்குள் என்னென்ன மாற்றத்தைக் கொண்டு வந்திருக்கின்றனர் என்பதைக் காணவே இன்று வந்திருக்கின்றார்கள். எனவே, இன்று மாற்றத்தைக் காண்பதற்காக வந்திருக்கின்றார்கள். ஒவ்வொருவரும் அவரவர் சக்திக்கேற்ப மாற்றத்தை கொணர்ந்திருக்கின்றனர். எனினும், பாப்தாதா என்ன மாற்றத்தைக் காண விரும்புகின்றார்கள்? அதையும் அறிந்திருக்கின்றீர்கள் இல்லையா! பாப்தாதா மாற்றத்தின் கூடவே பரிபக்குவ நிலையையும் காண விரும்புகின்றார்கள். மாற்றம் காணப்பட்டது, எனினும், மாற்றத்தின் கூடவே தனக்குள் பரிபக்குவ நிலையையும் கொணர்ந்திருக்கின்றீர்களா? தந்தையை அழிவற்ற சத்தியம் என்று கூறுகின்றீர்கள் அல்லவா. அவ்வாறே, தந்தையின் கூடவே அழிவற்ற பரிவர்த்தனையைக் கொணர்த்திருக்கின்றீர்களா? கிடைத்திருக்கும் பொக்கிஷமும் அழிவற்றது, கிடைத்திருக்கும் பிராப்தியும் அழிவற்றது. எனவே, மாற்றத்தையும் அழிவற்றதாகச் செய்திருக்கின்றீர்களா? அல்லது, என்ன சூழ்நிலைகள் வரும்.என்று தெரியவில்லை, பரிபக்குவ நிலையில் இருக்க இயலும் அல்லது இயலாது என்பது தெரியவில்லை; சென்ற பின்னர் தான் தெரிய வரும் என்று யோசிக்கின்றீர்களா? வாக்குறுதி அளித்து விட்டுச் செல்கிறார்கள், எனினும், எந்தளவு அதை நிறைவேற்றுகின்றீர்கள் என்று பார்க்கலாம். ஒரு தரப்பினர் இதை யோசிக்கின்றார்கள். பிறகு மற்றொரு தரப்பினர் நிச்சய புத்தி உடையவர்கள். இவர்களுக்கு தந்தையின் கூடவே, தன் மீதும், என்ன மாற்றத்தைக் கொண்டு வந்திருக்கின்றோமோ அதை சதா நிலையாக வைத்திருப்போம் மேலும் என்ன வாக்களித்து விட்டு செல்கின்றோமே செய்து காண்பிப்போம் என்ற நம்பிக்கை முழுமையாக உள்ளது. இவர்கள் சம்பூரண நிச்சயபுத்தி உடையவர்கள் ஆவார்கள்.

# 1969 அவ்யக்த முரளிகள்!

இன்னும் சிலர் தைரியத்தை தாரணை செய்வதற்கான முயற்சி செய்கின்றார்கள். எனினும், இப்பொழுது ஒருவேளை அவ்வாறே, செய்து கொண்டிருந்தால் பின்னர் இறுதி வரையிலும் கூட முயற்சித்துக் கொண்டே இருப்பீர்களா என்ன? அத்தகைய முயற்சியாளர்களை ஒரே வெட்டில் பலியாகுபவர்கள் என்று கூற இயலுமா? தேவிகளுக்குப் பலி கொடுக்கும்பொழுது சக்திகளாயினும், தேவிகளாயினும் ஒரு வெட்டில் பலியாகவில்லை எனில் அதை ஏற்றுக் கொள்வதில்லை. அவ்வாறிருக்க, அத்தகையோரை பாப்தாதா சுவீகாரம் (ஏற்றுக் கொள்ள) செய்ய இயலுமா? ஒருவேளை இங்கு பாப்தாதா சுவீகரிக்கவில்லை எனில் சொர்க்கத்தில் உயர்ந்த பதவி கிடைக்காது. ஆகையினாலேயே, சிந்திப்பதையே சொல்ல வேண்டும், சொல்வதையே செய்ய வேண்டும் என்று கூறப்பட்டது. சிந்தனை, சொல், செயல் ஆகிய மூன்றும் ஒன்றாக இருக்க வேண்டும். எனினும், நிகழ்காலத்தில் குழந்தைகள் அதிகம் சிந்திக்கின்றனர், அதிகம் பேசுகின்றனர் ஆனால் செயலில் வரும்பொழுது கூறியதைக் குறைவாக நிறைவேற்றுகின்றனர். ஆகையினால், இந்த பட்டியில் பக்குவமாகிச் செல்ல வேண்டும். அதாவது பக்காவாக வாக்களித்து விட்டுச் செல்ல வேண்டும்.

முதலில் வாக்களிப்பதற்கு தைரியம் உள்ளதா அல்லது தைரியத்தை தாரணை செய்வீர்களா? தைரியசாலி குழந்தைகளின் அடையாளம் என்ன? அவர்கள் ஒருபொழுதும் தோல்வியைத் தழுவமாட்டார்கள். ஒருவேளை நீங்கள் அனைவரும் தைரியசாலிகள் எனில் அவசியம் இன்றிலிருந்து ஒருபொழுதும் தோல்வி அடைய மாட்டீர்கள். நீண்ட காலமாக யார் வெற்றியாளர்கள் ஆகின்றார்களோ அவர்களே வெற்றிமாலையின் மணி ஆகின்றனர். ஒருவேளை வெற்றி மாலையில் மணியாக விரும்புகின்றீர்கள் என்றால் வெற்றியாளர் ஆவதற்கான மாற்றத்தைக் கொண்டு வர வேண்டும். பரிவர்த்தனையில் மிக முக்கிய விஷயங்களை சோதனை செய்ய வேண்டும். மிக எளிதானதே. இரு வார்த்தைகளை நினைவில் வைக்க வேண்டும். ஒன்று, ஆகர்ஷண மூர்த்தி ஆக வேண்டும் மற்றும் இரண்டாவது, மலர்ந்த முகம். ஆகர்ஷிக்கக்கூடியது ஆத்மாவே! ஆன்மீக ஸ்திதியினால் தான் ஒருவரை ஒருவர் ஆகர்ஷிக்க (ஈர்க்க) இயலும். ஒருவேளை இந்த இரண்டு விஷயங்களை தனக்குள் தாரணை செய்து விட்டால் சம்பூரண வெற்றியாளர் ஆவீர்கள்.

பெரும்பான்மையான குழந்தைகளிடம் முக்கியமாக என்ன விஷயம் உள்ளது என்பதையும் இன்று கூறிக் கொண்டிருக்கின்றார்கள். நிச்சயபுத்தி உடையவர்களாக இருக்கின்றீர்கள், அதனாலேயே இங்கு வந்திருக்கின்றீர்கள். தந்தை மீது நம்பிக்கை உள்ளது, ஞானத்திலும் கூட நம்பிக்கை உள்ளது ஆயினும், தன்மீது உள்ள நம்பிக்கையில் சிலசமயம் தடுமாற்றம் ஏற்படுகின்றது. கட்டுப்படுத்தும் சக்தி (Controlling Power) இல்லாததே முக்கியமான குறைபாடு ஆகும். அது இல்லாத காரணத்தினாலேயே, புரிந்திருப்பினும், சிந்தித்திருப்பினும் தன்னை உணர்ந்திருப்பினும் கூட அதே செயலை செய்து விடுகின்றனர். கட்டுப்படுத்தும் சக்தி அவசியமாக உள்ளது, எண்ணம், சொல் மற்றும் செயலின் கூடவே லௌகீக உறவினர்கள் மற்றும் தெய்வீக பரிவாரத்தின் சம்பந்தத்தில் வரும்போதும் என்ன செய்ய வேண்டும், என்ன பேச வேண்டும், என்ன பேசக்கூடாது மற்றும் என்ன செய்யக்கூடாதோ, அதைக் கட்டுப்படுத்த வேண்டும். இந்த சக்தி முழுமையாக இல்லாத காரணத்தால் வெற்றி கிடைப்பதில்லை. ஆகவே, இந்த கட்டுப்படுத்தும் சக்தியின் குறைபாட்டை எவ்வாறு நீக்குவீர்கள்? ஒரு பொருளை மிக வலிமையோடு கட்டுப்படுத்த வேண்டுமாயின், சில பொருட்களை லேசாக விட வேண்டி இருக்கும் என்பதை சில சமயம் கோபர்கள நீங்கள் கண்டிருப்பீர்கள். எப்பொழுதாவது பட்டம் பறக்க விட்டிருக்கின்றீர்களா? பட்டத்தைக் கட்டுப்படுத்த மேலும் உயரத்தில் பறக்கச் செய்ய என்ன செய்யப்படுகின்றது? இதுவும் அத்தகையதே ஆகும். தனது புத்தியைக் கட்டுப்படுத்த சில விஷயங்களை லேசாக ஆக்க வேண்டும். அனைத்தையும் விட லேசான விஷயம் எது? ஆத்மா (புள்ளி) தன்னைக் கட்டுப்படுத்த வேண்டுமெனில், தன்னை முற்றிலும் லேசான பிந்து (புள்ளி) ரூபத்தில் நிலைக்கச் செய்ய வேண்டும். கட்டுப்படுத்துவதற்காக முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். ஆகவே, நீங்களும் புள்ளி வையுங்கள். நடந்து முடிந்தவைகளை முற்றிலும் மறந்து விடுங்கள். பார்த்தீர்கள், செய்தீர்கள் பிறகு முற்றிலும் அதை சமாப்தி (முடிவு) செய்து விடுங்கள். சமாப்தி செய்வது என்றால் புள்ளி, முற்றுப்புள்ளி வைப்பது ஆகும். கமா எழுதத் தெரிகிறது, கேள்விகுறி எழுதத் தெரிகிறது ஆச்சரியக்குறியும் போடத் தெரிகிறது எனினும் முற்றுப்புள்ளி வைக்கத் தெரியவில்லை. தாளில் இந்த அடையாளங்களை எழுதுவது எளிது ஆனால்,

தன்னுடைய கர்மங்கள் மீது முற்றுப்புள்ளி வைப்பதில் கஷ்டம் ஏன்? தாளில் அடையாளக் குறிகள் இடுகின்றீர்கள் அல்லவா! மேலும், எந்த அடையாளக்குறியை எங்கு போட வேண்டுமோ அங்கு போட்டால் தான் திறமைமிக்கவர் என்று கூறப்படுகிறது. ஒருவேளை கமாவிற்குப் பதில் எவராவது முற்றுபுள்ளி வைத்து விட்டால் திறமைசாலி என்று கூற இயலாது. எங்கு கேள்விக்குறி இட வேண்டுமோ அங்கு கேள்விக்குறி போடவில்லையெனில் கூட திறமைமிக்கவர் என கூற இயலாது. இங்கும் கூட கேள்விக்குறி எந்த விஷயத்திற்கு, ஆச்சரியக்குறி எந்த விஷயத்திற்கு, முற்றுப்புள்ளி எந்த விஷயத்திற்கு வைக்க வேண்டும் என்பதை முழுமையாக அறியாத காரணத்தால் திறமைமிக்கவர் ஆவதில்லை. இப்பொழுது புரிந்ததா, ஏன் கட்டுப்படுத்த இயலவில்லை என்று? ஏனெனில், அச்சமயத்தில் ஞானம் என்ற பெட்ரோல் குறைந்து விடுகின்றது. ஒருவேளை ஞானம் என்ற பெட்ரோல் இருந்தால் கட்டுப்பாடு இருக்கும். ஆகையினால், தன்னுடைய புத்தி என்ற டேங்க்கில் பெட்ரோலை நிறைத்து வையுங்கள். கூட்டல் மற்றும் கழித்தல் கணக்கை கற்றுக் கொண்டீர்கள் அல்லவா? மேலும் மீதம் எவ்வளவு என்று கண்டறியவும் கற்றுக் கொண்டீர்களா? கூட்டத் தெரிகிறது, கழிக்கத் தெரிகிறது என்று மட்டுமல்லாமல் சேமிக்கவும் கற்றுக் கொள்ளுங்கள். ஒருவேளை சேமிப்பு இல்லை எனில் பிறருக்கு வழங்க இயலாது, தன்னையும் முன்னேற்ற இயலாது. சேமிப்பு செய்யப்படுவதே பிறருக்கு கொடுப்பதற்காகத்தான் மேலும் தனக்கு அவசியமான நேரத்தில் பயன்படுத்துவதற்காகத் தான். எனவே, எவ்வளவு சேமிப்பு செய்துள்ளேன் என்பதையும் பார்க்க வேண்டும். வருமானம் செய்வது மற்றும் செலவு செய்வது மட்டும் நடக்கிறதா அல்லது சேமிப்பும் செய்யப்படுகிறதா? எப்பொழுதேனும் கணக்கு பார்த்திருக்கின்றீர்களா? 25% சேமிப்பென்பது மிகக் குறைவே ஆகும். ஒருவேளை 25% சேமிப்பு செய்திருந்தால் இப்போதைய கணக்குப்படி பாப்தாதா என்ன பொறுப்பு கொடுப்பார்கள்? இங்கிருப்பதைவிட அதிகமான நினைவை எத்தனை நாட்களில் செய்வீர்கள்? தீவிர முயற்சியாளர் ஒருபோதும் வினாசத்தின் நேரத்தை சிந்திக்க மாட்டார்கள் ஒருவேளை நீண்ட காலமாக சம்பூரணத் தன்மையின் சமஸ்காரம் இருந்தால் இறுதியில் கூட சம்பூரணம் ஆக இயலும். ஒருவேளை இறுதியில் ஆனீர்கள் என்றால், பிறகு பாப்தாதாவும் இறுதியில் கொஞ்சம் கொடுப்பார்கள். யார் இப்பொழுதே

செய்கின்றார்களோ பாப்தாதாவும் சத்யுகத்தின் ஆரம்பத்தில் வாருங்கள் என்று கூறுவார்கள். பாப்தாதா ஒவ்வொரு ரத்தினத்தின் மீதும், இவர் அனேகரை நம்பிக்கை உடையவர் ஆக்குவார் என்ற நம்பிக்கை கொண்டுள்ளார்கள். யார் அனேகரை நம்பிக்கை உடையவராக ஆக்கக்கூடியவரோ, அவர் தன் மீது, இறுதி நேரத்தின் போது மட்டும் எவ்வாறு நம்பிக்கை கொள்ள இயலும்! நல்லது.

இந்தக் குழுவின் பட்டியும் நிறைவு பெற்றது. நிறைவு பெற்றதா அல்லது ஆரம்பம் ஆகியுள்ளதா? இந்தக் குழுவிற்குத் தேர்வு வைக்கவில்லை, என்ன உதாரணம் பார்த்திருக்கிறீர்களோ, அதை சதா காலத்திற்காக நிலையாக வைத்திருந்தால், பின்னர் பரிட்சிக்கப்படுவீர்கள். எந்தவொரு பொருள் உறுதி ஆக்குவதற்காக என்ன செய்யப்படுகிறது? அஸ்திவாரத்தை உறுதி ஆக்குவதற்காக ஆழமான அஸ்திவாரம் அவசியமாகிறது. எவ்வளவுக்கெவ்வளவு ஆழம் இருக்குமோ அவ்வளவு உறுதியானதாக இருக்கும். மேலோட்டமாக அஸ்திவாரம் போடப்பட்டால் உறுதித்தன்மை இருக்காது. எந்தளவு ஆழமாக ஞானம் தாரணை செய்யப்பட்டிருக்குமே அந்தளவே தனக்குள் உறுதித்தன்மை கொண்டு வரப்பட்டிருக்கும். அனைவரும் ஏதாவது மாற்றத்தைக் கொண்டு வந்திருக்கின்றீர்கள். எனினும், ஏதாவது ஏதாவது என்று ஏன் சொல்லப்படுகிறது? ஏனெனில், நடைமுறையில் கொணர்ந்த பிறகே இறுதிச் சான்றிதழ் அளிக்கப்படும். இப்பொழுது சான்றிதழ் அளிக்க மாட்டோம். ஒவ்வொரு குழந்தையும் ஊக்கம், உற்சாகத்துடன் தனது புருஷார்த்தத்தை முன்னேற்றம் அடையச் செய்வதில் மிகுந்த முனைப்புடன் இருப்பதைக் கண்டு இப்பொழுது பாப்தாதா மகிழ்ச்சி அடைகின்றார்கள். ஆயினும், நடைமுறை தேர்வின் முடிவு வெளிவந்த பின்பே சான்றிதழ் கிடைக்கும். பட்டி நிறைவு பெற்றுவிட்டது என்று எண்ண வேண்டாம், ஆனால், பட்டி ஆரம்பமாகியுள்ளது. இப்பொழுது கேட்டிருக்கின்றீர்கள். பின்னர் செய்ய வேண்டும். செய்த பிறகு, சான்றிதழ் கிடைக்கும்.

இந்தக் குழுவின் முக்கிய சிறப்பம்சமாக ஒற்றுமை காணப்பட்டது ஆனால், ஒற்றுமையின் கூடவே மற்றுமொரு வார்த்தையையும் சேர்க்க வேண்டும். ஒற்றுமையின் (ஏக்தா) கூடவே ஏகாந்தப் பிரியர்களாகவும் ஆக வேண்டும். எவ்வாறு ஒற்றுமையில் முதல்

எண்ணில் இருக்கின்றீர்களோ, அவ்வாறு ஏகாந்தத்திலும் கூட முதல் எண்ணில் வர வேண்டும். இதை தாரணை செய்தால் இந்தக் குழு அனேகரை விட முன்னால் செல்ல முடியும். ஒற்றுமையின் கூடவே ஏகாந்தவாசியாக எவ்வாறு ஆவது என்பதையும் கூட தனக்குள் நிரப்ப வேண்டும். யாருடைய புத்தியின் தொடர்பு அனேக தரப்பிலிருந்து துண்டிக்கப்பட்டிருக்குமோ, மேலும் ஒருவர் மீது அன்பு வைத்திருப்பாரோ அவரே ஏகாந்தபிரியர் ஆவார். ஒருவர் மீது அன்பு கொண்டிருக்கும் காரணத்தால் ஒருவருடைய நினைவில் மட்டும் இருக்க இயலும். அனேகர் மீது அன்பு கொண்டிருந்தால் ஒருவருடைய நினைவில் மட்டும் இருக்க இயலாது. அனேக விஷயங்களிலிருந்து புத்தியோகம் துண்டிக்கப்பட்டிருக்க வேண்டும். ஒருவரிடம் இணைந்திருக்க வேண்டும். அதாவது, ஒருவரைத் (பாபா) தவிர எனக்கு வேறு யாருமில்லை என்ற ஸ்திதி உடையவரே ஏகாந்தப்பிரியர் ஆக இயலும். இல்லையெனில், ஏகாந்தத்தில் அமர்வதற்கு முயற்சித்தாலும் கூட அனேக பக்கம் புத்தி அலையும், ஏகாந்தத்தின் ஆனந்தத்தை அனுபவம் செய்ய இயலாது. சர்வ சம்பந்தங்கள் மற்றும் சர்வ ரசனைகளை அந்த ஒருவரிடமிருந்து பெறக் கூடியவர்கள் தான் ஏகாந்தப்பிரியர் ஆக இயலும். அப்பொழுதே ஒருவர் மூலம் அனைத்து ரசனைகளையும் பிராப்தியாக அடைய இயலும். பின் அனேக பக்கம் செல்வதற்கான அவசியம் என்ன இருக்கிறது? ஆனால், யார் ஒருவர் மூலம் அனைத்து ரசனைகளைப் பெறும் பயிற்சியாளராக இல்லையோ, அவர் பிற அனேக வழிகளிலிருந்து ரசனையைப் பெற முயற்சி செய்வார்கள். எனவே, ஒரு பிராப்தி கூட கிடைக்காது. மேலும், ஒரு தந்தையிடம் புத்தியோகம் ஈடுபட்டிருந்தால் அனேக பிராப்திகள் கிடைக்கும். ஒன்று என்ற வார்த்தையை மட்டும் நினைவில் வைத்திருங்கள். இதில் அனைத்து ஞானம் அடங்கி விடுகிறது, நினைவும் வந்து விடுகின்றது, சம்பந்தமும் வந்து விடுகின்றது, ஸ்திதியும் உருவாகி விடுகின்றது. மேலும், கூடவே பிராப்தி என்ன கிடைக்கின்றதோ அதுவும் ஒன்று என்ற வார்த்தையினால் தெளிவாகி விடுகிறது. ஒருவருடைய நினைவு, ஏக்ரஸ் ஸ்திதி மற்றும் முழு ஞானமும் கூட ஒருவருடைய நினைவிற்கானது தான் கிடைக்கின்றது. பிராப்தியும் கூட ஒரே நிலையில் இருக்கிறது.

# 1969 அவ்யக்த முரளிகள்!

இன்று மிகுந்த மகிழ்ச்சி உள்ளது, நாளை மறைந்து விடுகிறது என்றிருந்தால் இதில் பிராப்தி இல்லை. கிடைக்கக்கூடிய அதீந்திரிய சுகமும் ஏக்ரஸ்ஸாக இருப்பதில்லை. சில நேரம் அதிகமாகவும், சில நேரம் குறைவாகவும் உள்ளது. இப்பொழுது ஏக்ரஸ் நிலையில் நிலைத்திருப்பதற்கான தேர்வு எழுதுவதற்காக சென்று கொண்டு இருக்கிறீர்கள். தேர்வில் எத்தனை மதிப்பெண்கள் பெறுகிறீர்கள் பார்க்கலாம்! நாம் பிறருக்கு செய்து காட்டுவோம், நம்முடைய கர்மம் மற்றும் நம்முடைய நடத்தை மூலம் பிறருக்கு கல்வி கற்பிப்போம் என்று முயற்சி செய்யுங்கள். எந்த ஒரு விஷயத்திலும் தேர்ச்சி பெறாதவர் ஆகி விடக் கூடாது என்பதற்காக சகஜமான விஷயத்தை பாப்தாதா கூறிக் கொண்டிருக்கிறார்கள். எந்த ஒரு விஷயத்திலும் தோல்வி அடையாமல் இருப்பதற்காக தந்தையைப் பின்பற்றுங்கள் என்ற ஒரு விஷயத்தை நினைவில் கொள்ள வேண்டும். சாகார ரூபத்தில் என்ன செய்து காண்பித்தாரோ அதைப் பின்பற்றுங்கள். அப்பொழுது எந்த விஷயத்திலும் தோல்வி அடையமாட்டீர்கள். எப்பொழுதாவது தோல்வி அடையும்படியான விஷயம் எதிரில் வந்தால் தந்தையைப் பின்பற்றிக் கொண்டிருக்கின்றேனா? என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். இத்தனை வருடங்களாக சாகார ரூபத்தில் என்ன கர்மம் செய்தாரோ, அந்த ஒரு ஒரு காட்சியும் எதிரில் வந்து விடுகின்றது. எப்பொழுது தந்தையைப் பின்பற்றுவீர்களோ, அப்பொழுது ஏதாவது புறம்பான காரியம் செய்யும் தருவாயில் அக்காரியத்தை நிறுத்திவிடுவீர்கள். மேலும் இந்த செயலை நான் செய்யலாமா? என்று சிந்தித்து தீர்மானம் எடுப்பீர்கள். தந்தையைப் பின்பற்றுங்கள். தந்தை என்று சொல்லும்போது இருவரையுமே குறிக்கின்றது. தந்தையைப் பின்பற்றுங்கள் என்பது நினைவில் வருவதால் தோல்வி அடையமாட்டீர்கள், கறையற்றவர் ஆகி விடுவீர்கள். தந்தை மற்றும் தாதா குழந்தைகளைக் கறையற்றவராக ஆக்க விரும்புகிறார்கள். மாலையில் அருகாமையில் கொணர்வதற்காக இந்த எளிய யுக்தியைக் கூறிக் கொண்டிருந்தார்கள். உங்களுக்குக் கூறப்பட்ட யுக்தியை உங்களுக்கு முன்பு வேறு யாரும் பிரயோகம் செய்து விடக்கூடாது என்பதில் கவனம் வேண்டும். பாப்தாதா ஒவ்வொரு நட்சத்திரத்தின் மீதும் நம்பிக்கை கொண்டுள்ளார்கள். ஆகையினாலேயே நம்பிக்கைக்குரிய நட்சத்திரங்கள் என்று கூறுகின்றார்கள்.

விசேஷ அன்பு உள்ளது, ஆகையினாலேயே, இத்தகைய சமயத்திலும் வந்திருக்கின்றீர்கள். தியாகமும் செய்திருக்கிறீர்கள் அல்லவா! தனது தூக்கத்தைத் தியாகம் செய்திருக்கிறீர்கள். இதுவும் கூட அன்பின் வெளிப்பாடே ஆகும். பாப்தாதா இப்பொழுது அன்பிற்கான கைம்மாறு செய்கின்றார். இப்பொழுது சென்ற பின்னர், முடிவைப் பார்ப்பார்கள். நீங்கள் செல்கிறீர்கள் வருவதற்காக. செல்ல வேண்டும், வர வேண்டும். செல்லத் தான் வேண்டும். ஆயினும், செல்வது வருவதற்காகவே! எவ்வளவுக்கெவ்வளவு அவ்யக்த நிலையின் அனுபவியாக ஆகிக் கொண்டே செல்வீர்களோ, அவ்வளவே அவ்யக்த மதுவனத்திற்கு வசீகரிக்கப்பட்டு வருவீர்கள். இப்பொழுது இது வியக்த மதுவனம் அல்ல. நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋❋

## 09.11.1969 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## எதிர்காலத்தை அறிவதற்கான யுக்திகள்! (தீபாவளி)

பாப்தாதா ஒவ்வொரு தீபத்தையும் ஒரு காலத்தின் திருஷ்டியோடு பார்த்துக் கொண்டிருக்கிறார்களா அல்லது மூன்று காலத்தையும் பார்க்கின்றார்களா? தந்தை திரிகாலதரிசியாக இருக்கின்றாரா அல்லது தாதாவும் திரிகாலதரிசியாக இருக்கின்றாரா? நீங்களும் திரிகாலதரிசியாக இருக்கின்றீர்களா அல்லது ஆகிக் கொண்டு இருக்கிறீர்களா? ஒருவேளை திரிகாலதரிசியாக இருக்கிறீர்கள் என்றால் தனது எதிர்காலத்தை அறிவீர்களா? நான் என்னவாக ஆகப்போகிறேன் என்பதை அறிவீர்களா? பாண்டவ சேனையில் தன்னுடைய எதிர்காலத்தை அறிவீர்களா? என்னவாக ஆவீர்கள்? மேலும் எந்த ராஜ்யத்தில் வருவீர்கள் என்பது தெளிவாக உள்ளதா? லட்சுமி நாராயணர் ராஜ்யம் என்றாலும் எந்த எண்ணில் வருவீர்கள்? (ஒவ்வொருவரும் அவரவர் எண்ணத்தைத் தெரிவித்தனர்). நீங்கள் முன்னேறிச் செல்லச் செல்ல தனது எதிர்கால பெயர், ரூபம், தேசம், காலம் ஆகிய நான்குமே தெளிவாகி விடும். எந்த தேசத்தில் ராஜ்யம் செய்ய வேண்டும், எந்த பெயரோடு, எந்த ரூபத்தில் மற்றும் எந்த சமயத்தில் வருவீர்கள் என்பது தெளிவாகத் தெரிந்து விடும். முதல் ராஜ்யத்தில் என்னவாகுவீர்கள், இரண்டாம் ராஜ்யத்தில் என்னவாகுவீர்கள் என்ற முழு ஜாதகமும் ஒவ்வொருவருக்கும் தெளிவாகத் தெரியும்! பாப்தாதா ஒருவரைப் பார்க்கும் பொழுது முன்பு என்னவாக இருந்தார், இப்பொழுது என்னவாக இருக்கின்றார், பின்னர் எதிர்காலத்தில் என்னவாக ஆகப்போகின்றார் என்ற மூன்று காலங்களையும் பார்க்கின்றார்கள். ஒவ்வொரு தீபத்திலும் இந்த மூன்று காலங்களைப் பார்க்கின்றார்கள். முன்பு என்னவாக இருந்தோம் மேலும் இப்பொழுது என்னவாக இருக்கின்றோம் என்ற இரு காலங்களை நீங்கள் தெளிவாக அறிந்துள்ளீர்கள் ஆனால் எதிர்காலத்தில் என்ன ஆகப்போகின்றீர்கள் என்பதை எந்தளவு யோக யுக்தாக இருப்பிர்களோ,

அந்தளவு எதிர்காலத்தைக் கூட தெளிவாக அறிந்து விடுவீர்கள். நிகழ்காலம் தெளிவாக உள்ளது. நிகழ் காலத்தில் இருக்கிறதா அல்லது இல்லையா என்று ஒருபொழுதும் சங்கல்பம் எழுவதில்லை. நடப்பது என்னவென்று தெரியவில்லை என்ற இந்த எண்ணம் ஒருபொழுதும் எழாத இவ்விதம் எதிர்காலம் கூடத் தெளிவாக இருக்கும். அத்தகைய தெளிவான போதை ஒவ்வொருவருடைய புத்தியிலும் வரிசைக்கிரமமாக வந்து விடும். எவ்வாறு சாகார ரூபத்தில் தாதா, தந்தை இருவருக்கும் அவர்களுடைய எதிர்காலம் தெளிவாக இருந்தது. பெயரும், ரூபமும், தேசமும் மற்றும் காலமும் தெளிவாக இருந்தது. எந்த சம்பந்தத்தில் வருவார்கள் என்பது, சம்பந்தம் கூட எந்த ரூபத்தில் வருவார்கள் என்பதைத் தெளிவாக அறிந்திருந்தனர். இப்பொழுது சிலரது உள்ளத்தில் கொஞ்சம் வருகின்றது ஆனால் சில காலத்திற்குப் பின், இது நடக்கத்தான் போகின்றது என்று நிச்சயபுத்தி உடையவராகக் கூறுவீர்கள். ஒருவேளை இப்பொழுது நீங்கள் கூறினாலும் கூட பிறர் நம்பிக்கை கொள்ளலாம் அல்லது நம்ப மறுக்கலாம். எனினும் சிறிது காலத்தில் உங்களுடைய நடத்தை, உங்களுடைய முயற்சி, உங்களுடைய எதிர்கால சித்திரத்தை பிரசித்தி செய்யும். இப்பொழுது உங்களது முயற்சி மற்றும் எதிர்காலத்திற்கும் இடையில் கொஞ்சம் வேறுபாடு உள்ளது ஆனால் சமயம் மற்றும் உங்களுடைய முயற்சி சமமாகும் பொழுது எவருக்கும் சங்கல்பம் எழாது.

நீங்கள் அனைவரும் தீபாவளி கொண்டாடினீர்கள். தீபாவளியில் என்ன செய்கிறார்கள்? ஒரு தீபத்தின் மூலம் அனேக தீபங்களை ஏற்றுகிறார்கள். எனவே, அனேக தீபங்கள் ஒரு தீபத்துடன் தொடர்பு கொள்வதே தீபாவளி ஆகும்! ஒவ்வொரு தீபத்தின் தொடர்பும் அந்த ஒரு தீபத்துடன் இணைந்திருப்பதே தீபாவளி ஆகும்! தீபத்தில் என்ன உள்ளது? அக்னி. தொடர்பும் இருக்கும் அக்னியும் இருக்கும். தொடர்பு இல்லையெனில் அக்னியும் இருக்காது. தீபமாகிய நான் தொடர்பை இணைத்து அக்னி ஆகியிருக்கிறேனா? என்று பார்க்க வேண்டும். உலகில் பிரசித்தி பெற்ற தீபங்கள் எத்தனை விதம் உள்ளன? (ஒவ்வொருவரும் அவரவர் எண்ணத்தைக் கூறினார்கள்). ஒன்று இருளை நீக்கி வெளிச்சத்தைக் கொடுக்கக்கூடிய மண்ணாலான ஸ்தூலமான தீபம், இரண்டாவது ஆத்ம தீபம், மூன்றாவது குல தீபம் மற்றும் நான்காவது எது? ஆசைகளின் தீபம் என்கிறார்கள் அல்லவா!

தந்தைக்கு குழந்தைகள் மீது ஆசை உள்ளது. எனவே நான்காவது ஆசைகளின் தீபம்! இந்த நான்கு விதமான தீபங்களும் பிரசித்தி பெற்றவை. இந்த நான்கு தீபங்களில் ஒவ்வொருவரும் எத்தனை தீபத்தை ஏற்றுகின்றீர்கள்? மண்ணாலான விளக்கை பல பிறவிகளாக ஏற்றியிருக்கிறீர்கள். ஆத்மா என்ற தீபம் ஏற்றப்பட்டுவிட்டதா? இந்த நான்கு விதமான தீபங்களும் எப்பொழுது ஏற்றப்படுகிறதோ அப்பொழுதே தீபாவளி கொண்டாடப்பட்டதாகக் புரிந்து கொள்ளுங்கள். குல தீபம் அணைந்து விடும்படியாக எந்த செயலையும் செய்யக்கூடாது. பாப்தாதா குழந்தைகள் மீது ஆசைகளின் தீபத்தை ஏற்றுகிறார் ஆனால் அது அணைந்து விடுகின்றது எனும்படியான எந்த நடத்தையும் இருக்கக் கூடாது. ஏக்ரஸ் மற்றும் ஆடாத அசையாததாக இருக்க வேண்டும். இந்த அனைத்து தீபங்களும் எரிந்துகொண்டு இருக்கின்றனவா? எவருடைய தீபம் ஏற்றப்பட்டு இருக்கிறதோ அவரால் பிறரின் தீபத்தை ஏற்றாமல் இருக்க முடியாது.

பாப்தாதாவிற்கு குழந்தைகள் மீது முக்கியமான ஆசைகள் என்னென்ன உள்ளன? ஒவ்வொரு குழந்தையும் முதல் எண்ணில் செல்ல வேண்டும். அதாவது, ஒவ்வொருவரும் வெற்றி ரத்தினம் ஆக வேண்டும் என்பதே ஒவ்வொரு குழந்தை மீதும் பாப்தாதா வைத்திருக்கும் ஆசையாகும்! வெற்றி ரத்தினத்தின் அடையாளங்கள் என்னவாக இருக்கும்? (பல விடைகள் அளிக்கப்பட்டன) நீங்கள் என்ன கேட்டீர்களோ அதையே நீங்கள் அனைவரும் பதிலாக உரைத்தீர்கள் ஆகையினால் அவை சரியே! வெற்றியாளராக இருப்பவர்களின் லட்சணத்தை நீங்கள் அனைவரும் உரைத்தீர்கள் மேலும் கூடவே யார், தான் வெற்றியை பிராப்தியாக அடைந்தது மட்டுமல்லாது, பிறரையும் தன்னைவிட மேலான வெற்றியாளர் ஆக்குவார்களோ அவர்களையே உண்மையான வெற்றியாளர் என்று சொல்லப்படுகின்றது. எவ்வாறு பாப்தாதா தன்னைவிட குழந்தைகளை முன்னால் வைத்தார்கள் அல்லவா! அவ்வாறே வெற்றி ரத்தினங்களாக இருப்பவர்கள் தன்னுடைய தொடர்பின் நிறத்தை அனைவர் மீதும் பூசுவார்கள். இதுவே அவர்களது வெற்றியின் அடையாளம் ஆகும். யார் முன்னால் வந்தாலும் வெற்றியாளர் ஆகித்தான் செல்வார்கள். அத்தகைய வெற்றி ரத்தினங்கள் வெற்றி மாலையில் எந்த எண்ணில் வருவார்கள்? தான் வெற்றியாளர் ஆகியிருக்கின்றீர்கள். எனினும் பிறரும் உங்களுடைய

தொடர்பின் நிறத்தினால் வெற்றியாளர் ஆக வேண்டும். இந்த சேவையே எஞ்சியிருக்கிறது. கோடியில் ஒருவர்தான் வெற்றியாளர் ஆவார்கள் என்பதல்ல ஆனால் ஒருவர் எத்தகையவராக இருக்கிறாரோ அத்தகையவரையே உருவாக்குகின்றனர். அனேகரை வெற்றியாளர் ஆக்கவல்ல வெற்றி ரத்தினமே, மாலையின் முக்கிய மணியாக இருப்பார். எனவே வெற்றியாளரின் அடையாளமே தனக்குச் சமமாக வெற்றியாளரை உருவாக்குவது ஆகும். இப்பொழுது இந்த சேவையே பாக்கி உள்ளது. அனேகரை வெற்றியாளராக ஆக்க வேண்டும், தன்னை மட்டும் ஆக்கக்கூடாது. தீபாவளியில் அனைத்து தீபங்களும் ஏற்றப்பட்டிருக்கும். தீபாவளி எனும் பொழுது அனேக ஏற்றப்பட்ட தீபங்களின் மாலை ஒவ்வொருவருடைய கழுத்திலும் சூடப்பட்டுள்ளதா? எப்பொழுது அத்தகைய சுடர்விடும் தீபங்களின் மாலையை ஒவ்வொரு ரத்தினமும் தனது கழுத்தில் சூடுவீர்களோ, அப்பொழுதே வெற்றி முரசு முழங்கும். எவ்வாறு தெய்வீக குணங்களின் மாலையை சூடியிருக்கின்றீர்களோ, அவ்வாறு அனேக சுடர் வீசும் தீபங்களின் மாலையை தனது கழுத்தில் சூட வேண்டும். இங்கு எவ்வளவு தீபங்களின் மாலையை தனது கழுத்தில் சூடுவீர்களோ அவ்வளவு பிரஜைகள் இருப்பார்கள். சில மாலை மிக நீளமாக உள்ளது, சில மாலைகள் கழுத்தில் சூடும் அளவு மட்டும் உள்ளது. எனவே, எந்த மாலையை சூட வேண்டும்? மிகப் பெரிய மாலை. அத்தகைய மாலையினால் தன்னைத்தான் அலங்கரித்துக் கொள்ள வேண்டும். எத்தனை தீபங்களின் மாலையை இதுவரை சூடியுள்ளீர்கள்? எண்ண இயலுமா அல்லது எண்ணில் அடங்காத அளவு உள்ளனவா? தீபங்களில் கூட சுடர்விட்டு பிரகாசிக்கும் தீபமே பிடித்தமானதாகின்றது. மங்கலாக எரியக்கூடியது பிடித்தமானதாக ஆவதில்லை. நல்லது.

மதுவனத்தின் மலர்களிடத்தில் என்ன விசேஷத் தன்மைகள் இருக்க வேண்டும்? பெயரே மதுவனம்; எனவே முதல் விசேஷத்தன்மை இனிமை ஆகும். இனிமை என்பது எத்தகையவரையும் மகிழ்விக்க வல்லது. இனிமைத்தன்மையை தாரணை செய்யக்கூடியவர்கள் இங்கும் மகான் ஆகின்றார்கள் மேலும் அங்கும் பதவியை அடைவார்கள். இனிமையானவர்களை அனைவரும் மகான் ரூபத்தில் காண்பார்கள். எனவே இந்த இனிமைத்தன்மை என்ற விசேஷ குணம் இருக்க வேண்டும். இனிமைத்தன்மை (மதுரதா) மூலம் தான்

மதுசூதனனின் பெயரை புகழடையச் செய்ய இயலும். இதன் பெயர் மதுவனம் ஆகும். மது என்றாலே மதுரத்தன்மை (இனிமை) மற்றும் வனம் என்பதில் என்ன விசேஷத்தன்மை உள்ளது? வனத்திற்கு வைராக்கிய விருத்தி உடையவர்களே செல்கிறார்கள். எனவே, எல்லையற்ற வைராக்கியமான புத்தியும் வேண்டும். பின்னர் இதில் அனைத்து விஷயங்களும் வந்து விடும். மேலும் உங்கள் அனைவரையும் பின்பற்றுவதற்காக இங்கு வருவார்கள். இவர்கள் எவ்வாறு இத்தகையவர்கள் ஆனார்கள் என்று அனைவரும் சிந்திப்பார்கள். அனைவரது வாயிலிருந்தும் மதுவனம் மதுவனமே தான் என்று வெளிப்படும். எனவே, இனிமைத்தன்மை மற்றும் எல்லையற்ற வைராக்கிய விருத்தி என்ற இந்த இரண்டு விசேஷத்தன்மைகளை தாரணை செய்ய வேண்டும். இவற்றை அன்பு மற்றும் சக்தி என்றும் கூறலாம். உங்கள் அனைவருக்கும் பாப்தாதா மீது, அனைவரையும் விட அதிக அன்பு உள்ளதல்லவா மேலும் பாப்தாதாவிற்கு மதுவனத்தில் உள்வர்கள் மீது விசேஷ அன்பு உள்ளது. ஏனெனில் எத்தகையவராக இருப்பினும் சர்வஸ்வ தியாகியாக உள்ளனர். ஆகையினால் கவர்ச்சிக்கின்றனர். எனினும், சர்வஸ்வ தியாகியாக இருப்பதன் கூடவே இப்பொழுது அன்பு மற்றும் சக்தியையும் நிறைக்க வேண்டும். எந்த விசேஷத்தன்மையை நிறைக்க வேண்டும் என புரிந்து கொண்டீர்களா?

குமாரிகள் அதிசயம் செய்து காண்பிக்க வேண்டும். குமாரிகளுடைய ஒவ்வொரு செயலும் அதிசயிக்கத்தக்க வகையில் இருக்க வேண்டும். எண்ணம், சொல், மற்றும் செயல் அதிசயிக்கத்தக்கதாக இருக்க வேண்டும். குமாரிகள் பவித்ரமாக இருக்கும் காரணத்தினால் தன்னுடைய தாரணையை தீவிரப்படுத்த முடியும். ஒவ்வொருவருடைய வாயிலிருந்தும், இவர்களுடைய செயல் அதிசயிக்கத்தக்கதாக உள்ளது என்பது வெளிப்படும் வகையில் அதிசயிக்கத்தக்க செயல்களைச் செய்து காண்பிக்க வேண்டும். எவ்வாறு பாப்தாதாவின் ஒவ்வொரு வார்த்தையைக் கேட்கும்பொழுதும் இன்றைய முரளி அதிசயிக்கத்தக்கதாக உள்ளது என்று வாயிலிருந்து வெளிப்படுகின்றது அல்லவா? அவ்வாறே, குமாரிகளுடைய ஒவ்வொரு கர்மமும் அதிசயிக்கத்தக்கதாக இருக்க வேண்டும். பாப்தாதாவைப் பின்பற்ற வேண்டும். முயற்சி செய்வோம்

என்று கூறக்கூடாது. எதுவரை முயற்சி செய்வீர்களோ அதுவரை கவர்ச்சி ஏற்படாது. ஒருவேளை ஈர்ப்பை தாரணை செய்ய வேண்டும் எனில் முயற்சி என்ற வார்த்தையை முடிவுறச் செய்யுங்கள். இப்பொழுது கவர்ந்து ஈர்க்கும் ரூபமுடையவர் ஆக வேண்டும். தந்தையைப் பின்பற்ற வேண்டும். பாப்தாதா எப்பொழுதேனும் முயற்சி செய்வோம் என்று கூறியிருக்கிறார்களா? பின்னர், நீங்கள் ஏன் முயற்சி செய்வோம் என்று கூறுகின்றீர்கள்? குமாரிகள் அதிசயம் செய்தால் துணைவன் துணையாகவும் இருப்பார். இல்லையெனில், துணைவன் சாட்சியாகி விடுவார். ஆகையினால், துணைவனை துணையாக வைத்துக் கொள்ள வேண்டும். இல்லையெனில் சாட்சி ஆகி விடுவார். சாட்சியாக இருப்பது பிடிக்கின்றதா அல்லது துணைவனாக இருப்பது பிடிக்கின்றதா? என்ன முயற்சி செய்கின்றீர்களோ அதற்கான பலனும் இங்குதான் கிடைக்கின்றது. இந்த அன்பு மற்றும் எதிர்கால பதவி கிடைக்கின்றது. அனைவருடைய சினேகி ஆவதற்காக முயற்சி செய்ய வேண்டும். யார் எந்தளவு முயற்சி செய்கின்றார்களோ, அந்தளவே சினேகி ஆகின்றார்கள். தேவையான நேரத்தில் சினேகியின் நினைவு தான் வருகின்றது. சில விஷயங்களில் முயற்சியின் நினைவு வருகின்றது. பாபா கூட ஏன் நினைவில் வருகின்றார்? முயற்சி செய்ததனாலேயே சினேகம் உள்ளது. முயற்சியினால் சினேகி ஆக வேண்டும். எவ்வளவு அதிக முயற்சி செய்கின்றீர்களோ அவ்வளவு அனைவருடைய சினேகி ஆவீர்கள். முயற்சியின் பலன் தான் அன்பு. யார் முயற்சி செய்கின்றார்களோ, அவர்களை ஒவ்வொருவரும் அன்பான பார்வையுடன் பார்ப்பார்கள். யார் முயற்சி செய்யாதிருப்பார்களோ, அவர்களை அன்பான பார்வையோடு பார்க்கமாட்டார்கள். மாணவர்கள் ஆசிரியரின் குணத்தை அவசியம் தாரணை செய்ய வேண்டும். அன்பு தான் சம்பூரணம் ஆக்குகின்றது. அன்பின் கூடவே சக்தியும் தேவை. எப்பொழுது இரண்டும் இணைகின்றதோ அப்பொழுது அன்பு மற்றும் சக்திசாலியான நிலையானது மிகவும் தனிப்பட்டதாகவும் மற்றும் மிகவும் அன்பானதாகவும் இருக்கிறது. யார் மீது அன்புள்ளதோ, அவருக்குச் சமமாக ஆக வேண்டும். இதுவே அன்பிற்கான சான்றாகும். சமமாக விளங்குவதில் எந்தளவு நான் அருகாமையில் வந்திருக்கின்றேன்? என்று தன்னை சோதனை செய்ய வேண்டும். எவ்வளவுக்கெவ்வளவு சமமாக விளங்குவதில் அருகாமையில் இருப்பீர்களோ அவ்வளவே

கர்மாதீத் நிலையின் அருகாமையை சென்றடைவீர்கள். இதுவே சமமான நிலையை கணக்கிடும் கருவியாகும். தனது கர்மாதீத் நிலையை அறிய வேண்டும். அன்பு வைப்பதால் மட்டும் சம்பூரணம் ஆக மாட்டீர்கள். அன்புடன் கூடவே சக்தியும் இருந்தால் தானும் சம்பூரணம் ஆகி பிறரையும் கூட சம்பூரணம் ஆக்குவீர்கள். ஏனெனில், சக்தியின் மூலம் அந்த சமஸ்காரம் நிறைந்து விடுகின்றது. எனவே, இப்பொழுது அன்பின் கூடவே சக்தியையும் நிறைத்துக் கொள்ள வேண்டும்.

எந்த குணங்கள் மூலம் அனைவருடைய உள்ளங்களை வெற்றிக் கொள்ள முடியும்? அனைவரையும் திருப்திபடுத்த வேண்டும். தந்தையிடம் இந்த விசேஷ குணம் இருந்தது, அதையே பின்பற்ற வேண்டும். அனைவரும் மதுவனத்தின் பட்டியலில் இருக்கின்றீர்களா அல்லது ஆல்ரவுண்டர் (allrounder) பட்டியலில் இருக்கின்றீர்களா? ஒன்று எல்லைக்குட்பட்ட பட்டியல் மற்றொன்று எல்லைக்கு அப்பாற்பட்ட பட்டியல். ஆல்ரவுண்டர் (allrounder) மற்றும் எவர்ரெடி (ever ready) இந்தப் பட்டியலில் இடம் பெற்றிருந்தால் என்ன செய்ய வேண்டும் எனத் தெரியுமா? ஒரு வினாடியில் தயாராக வேண்டும். சங்கல்பங்களையும் கூட ஒரு வினாடியில் நிறுத்த வேண்டும். ராணுவ வீரர்களின் பெட்டி படுக்கை எப்பொழுது தயார் நிலையில் இருக்கும். எண்ணங்களின் பெட்டி படுக்கையையும் கட்டி வைக்க வேண்டும். படுக்கையும் தயாராக இருக்க வேண்டும். எப்பொழுதும் தயாராக (எவர்ரெடியாக) இருப்பவர்களின் சங்கல்பங்களின் பெட்டி படுக்கையும் தயார் நிலையில் இருக்க வேண்டும். எந்த சூழலை எதிர்கொள்வதற்காகவும் பெட்டி படுக்கை தயாராக இருக்க வேண்டும்.

ஆன்மீகக் குழந்தைகளே, ஆத்மாக்கள் நீங்கள் சப்தங்களைக் கடந்து தன்னுடைய வீட்டிற்குச் செல்வதற்காக முயற்சி செய்ய வேண்டும். ஆகையினால், இந்த பழைய உலகத்தில் இருந்தாலும் தேகம் மற்றும் தேகத்தின் சம்பந்தங்களிலிருந்து விடுபட்ட உள்ளமுடையவராக இருக்க வேண்டும். பதீத உலகத்தில் இருந்தாலும் தந்தை தூய்மை ஆவதற்கான சக்தியை அளிக்கின்றார். முயற்சி செய்து நீங்கள் சதா தூய்மை ஆக வேண்டும். குழந்தைகளே, குணத்தை கிரகிப்பவராக ஆக வேண்டும். புகழ்ச்சி-இகழ்ச்சி, லாபம்-நஷ்டம், வெற்றி-தோல்வி ஆகிய

அனைத்திலும் திருப்தியாக இருக்க வேண்டும் மற்றும் கருணை உள்ளம் உடையவர் ஆக வேண்டும். நல்லது.

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺
✺✺✺✺✺✺✺

# 13.11.1969 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பாப்தாதாவின் நம்பிக்கைகள்!

அசரிரி ஆகி, பின்னர் சரீரத்தில் வரும் பயிற்சி உறுதி ஆகிக் கொண்டிருக்கிறதா? எவ்வாறு பாப்தாதா அசரீரி நிலையிலிருந்து சரீ ரத்தில் வருகின்றார்கள், அவ்வாறு குழந்தைகள் நீங்கள் அனைவரும் கூட அசரிரி ஆகி பிறகு சரீ ரத்தில் வர வேண்டும். அவ்யக்த நிலையில் நிலைத்திருந்து பிறகு வியக்தத்தில் வர வேண்டும். அத்தகைய பயிற்சியை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறீர்களா? பாப்தாதா வரும்பொழுது யாரை சந்திப்பதற்காக வருகின்றார்கள்? (ஆத்மாக்களை) எத்தகைய ஆத்மாக்கள்? யார் முழு உலகத்திலும் மிகச் சிறந்த ஆத்மாக்களாக இருக்கின்றனரோ, அந்த சிரேஷ்ட ஆத்மாக்களோடு பாப்தாதாவின் சந்திப்பு நடக்கின்றது. நாம் தான் முழு விஷ்வத்திலும் சிரேஷ்ட ஆத்மாக்கள் என்ற போதை இருக்கின்றதா? சிரேஷ்ட ஆத்மாக்களுக்குத் தான் சர்வ சக்திவானுடைய சந்திப்பின் சௌபாக்கியம் பிராப்தம் ஆகின்றது. பாப்தாதா பிருக்குட்டியின் நடுவில் ஒளிவீசும் நட்சத்திரத்தையே காண்கின்றார்கள். நட்சத்திரங்களாகிய உங்களை எந்தெந்த பெயர்களால் அழைக்கப்படுகின்றது. ஒன்று அதிர்ஷ்ட நட்சத்திரங்களாகவும் இருக்கின்றீர்கள் மற்றும் கண்களின் நட்சத்திரங்களாகவும், (மணிகளாகவும்) இருக்கின்றீகள். மேலும் எத்தகைய நட்சத்திரமாக இருக்கின்றீர்கள்? இப்பொழுது குழந்தைகளுடைய எந்தக் காரியம் எஞ்சியுள்ளதோ, அந்தப் பெயரை மறந்து விட்டீர்கள். எதற்காக முயற்சி செய்ய வேண்டுமோ அதை மறந்து விட்டீர்கள். தனது கடமையை நினைவு கூறுங்கள். பாப்தாதாவினுடைய நம்பிக்கைகளின் நட்சத்திரங்கள். இந்தக் கடமையே இப்பொழுது எஞ்சியுள்ளது. பாப்தாதா குழந்தைகள் மீது என்ன நம்பிக்கைகள் வைத்திருக்கின்றார்களோ, அந்தக் காரியத்தை பூர்த்தி செய்து விட்டீர்களா? பாப்தாதா ஒவ்வொரு நட்சத்திரத்தின் மீதும், ஒவ்வொருவரும் அனேகருக்கு அறிமுகம் கொடுத்து தகுதியானவராக ஆக்க வேண்டும் என்ற நம்பிக்கை

வைத்திருக்கின்றார்கள். ஒருவர் மூலம் தான் அனேகர் உருவாக வேண்டும். நான் அத்தகையவராக ஆகியிருக்கிறேனா? அனேகரை உருவாக்கி இருக்கின்றேனா? என்று சோதனை செய்யுங்கள். இதிலும் கூட எண்ணிக்கை அதிகரித்துள்ளனர் எனினும் தரமானவர்களை உருவாக்க வேண்டும். எண்ணிக்கையை அதிகரிப்பது எளிது ஆனால் தரமானவர்களை உருவாக்க வேண்டும். இந்த நம்பிக்கையை பாப்தாதா நட்சத்திரங்கள் மீது வைத்திருக்கின்றார்கள். இந்தக் காரியம் இப்பொழுது பாக்கி உள்ளது. அதிக எண்ணிக்கையை உருவாக்குவது என்பது நடைபெற்றுக் கொண்டு தான் இருக்கின்றது. எனினும் இப்பொழுது தரமான ஆத்மாக்களை உருவாக்கும் சேவை பாக்கி உள்ளது. தரமான ஒரு ஆத்மா அதிக எண்ணிக்கையை தானே அழைத்து வருவார்கள். ஒரு தரமான ஆத்மா அனேகரை அழைத்து வர இயலும். தரமானவர்கள் அதிக எண்ணிக்கையில் ஆத்மாக்களை வரவழைக்க இயலும். இப்பொழுது பாக்கியுள்ள இந்தக் காரியத்தை பூர்த்தி செய்ய வேண்டும். தன்னுடைய சேவையின் தரத்தின் மூலம் நீங்கள் சுயம் திருப்தியாக இருக்கின்றீர்களா? எண்ணிக்கையைக் கண்டு மகிழ்கின்றீர்கள் ஆயினும் தரத்தைக் கண்டு சேவை மூலம் திருப்தி அடைய வேண்டும். தரமான ஆத்மாக்களை எவ்வாறு வரவழைப்பீர்கள்? எவ்வளவுக்கெவ்வளவு ஒருவரிடம் தெய்வீக பண்புகள் இருக்குமோ அவ்வளவே தரமான ஆத்மாக்களை உருவாக்குவார்கள்.

சில குழந்தைகள், தன்னுடைய முயற்சியிலும் மற்றும் சேவையிலும் அனேக வித முயற்சிகளை மிக அதிகமாக மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. சிலர் அதிக முயற்சி செய்ய வேண்டியுள்ளது, சிலர் குறைந்த முயற்சியே செய்ய வேண்டி யுள்ளது. இதற்கான காரணம் என்ன? சில நேரம் சிலர் கடினமாக முயற்சிக்க வேண்டியுள்ளது, சிலநேரம் அவர்களுக்கு எளிதாகவும் இருக்கிறது. இது ஏன்? தாரணையின் குறைபாட்டின் காரணத்தினாலேயே கடின முயற்சி செய்ய வேண்டியுள்ளது. சிலரது கடமைகளைக் கண்டு உலகத்தினர் இவர்களுடைய அதிர்ஷ்டத்தில் இல்லை என்று கூறிவிடுகின்றனர். இங்கு அவ்வாறு சொல்வதில்லை. எந்த விசேஷ குறைபாட்டின் காரணத்தினால் கடின முயற்சி செய்ய வேண்டியுள்ளது? ஸ்ரீமத் அனுசாரம் நடக்க வேண்டும். ஆனாலும் ஏன் நடக்க முடியவில்லை? எந்தக் காரியம் ஆனாலும் சரி, அது முயற்சியோ (புருஷார்த்தம்)

அல்லது சேவையோ, அதில் கஷ்டப்பட்டு முயற்சி செய்ய வேண்டியிருப்பதன் காரணம் என்னவென்றால் அனைத்து ஞான விஷயங்களும் புத்தியில் உள்ளன ஆனால் இந்த விஷயங்களின் ஆழத்தில் செல்வதில்லை. கூர்மையான புத்தி ஒருபோதும் உழைக்க வேண்டியதில்லை. மந்த புத்தியின் காரணத்தினால் அதிகம் உழைக்க வேண்டியுள்ளது. ஸ்ரீமத் அனுசாரம் நடப்பதற்கு கூர்மையான புத்தி தேவை. ஆழ்ந்து செல்வதற்கான பயிற்சி செய்ய வேண்டும். வேறு வார்த்தைகளில் கூற வேண்டுமானால் என்ன கேட்டீர்களோ அதைச் செய்ய வேண்டும். எவ்வாறு தயிரைக் கடைந்தால் வெண்ணெய் கிடைக்கிறது. அவ்வாறே, இது கூட ஆழ்ந்து செல்வதற்கான விஷயம் ஆகும். ஆழ்ந்து சிந்திப்பதில் குறைபாடு இருக்கும் காரணத்தினாலேயே பிரயத்தனிக்க வேண்டியிருக்கிறது. ஆழ்ந்து சிந்திப்பதற்குப் பதிலாக விஷயத்தை மேலோட்டமாகக் காண்கின்றீர்கள். சேவை நேரத்தில் கூட கூர்மையான புத்தி இருக்க வேண்டும். ஞானத்தின் ஆழத்தில் சென்று பிறருக்குச் சொல்ல வேண்டும் மற்றும் அந்த ஞானத்தின் ஆழத்திற்கு அவரையும் கொண்டு செல்ல வேண்டும். அப்பொழுதே அவருக்கும் குறைந்த முயற்சி ஏற்படும் மேலும் உங்களுக்கும் குறைந்த முயற்சியே தேவைப்படும். இவ்வாறு ஆழ்ந்து சிந்திப்பதில் தான் குறைபாடு தான் உள்ளது. இப்பொழுது இந்த முயற்சியே செய்ய வேண்டும்.

சரீரத்திற்குக் கூட சக்தி எப்பொழுது கிடைக்கின்றது? உணவை நன்றாக மென்று உண்ணும் போது அது சக்தியாக மாறுகின்றது. மென்று உண்ணும் உணவு என்னவாக ஆகின்றது? ரத்தமாக ஆகி விடுகிறது. எப்பொழுது ரத்தமாக ஆகின்றதே அப்பொழுது சக்தி வந்து விடுகின்றது. எனவே, இப்பொழுது வெளிப்படையான, மேலோட்டமான ரூபத்தைக் காணாமல் ஆழ்ந்து செல்வதற்கு முயற்சி செய்யுங்கள். எந்தளவு ஒவ்வொரு விஷயத்திலும் ஆழ்ந்து செல்வீர்களோ அந்தளவு ரத்தினத்தைக் கண்டறிய முடியும். மேலும், ஒவ்வொரு விஷயத்தின் மதிப்பும் தெரிந்து விடும். எந்தளவு ஞானத்தின் மதிப்பு, சேவையின் மதிப்பு உங்களுக்குத் தெரியுமோ அந்தளவு நீங்கள் மதிப்பான ரத்தினமாக ஆகி விடுவீர்கள். ஞான ரத்தினங்களை நீங்கள் குறைவாக மதிப்பிடுவதால் தானும மதிப்பானவராக ஆக இயலவில்லை. ஒவ்வொரு ரத்தினத்தின் மதிப்பையும் கண்டறிய முயற்சி செய்யுங்கள். நீங்கள் பாப்தாதாவின் மதிப்பான ரத்தினங்கள் அல்லவா! மதிப்பு

வாய்ந்த ரத்தினங்கள் என்ன செய்யப்படுகின்றன? மறைத்து வைக்கப்படுகின்றன. பாப்தாதாவினுடைய மதிப்பு வாய்ந்த ரத்தினங்களை பாப்தாதா மறைத்து வைத்துக் கொள்கிறார்கள். மாயாவிடமிருந்து மறைக்கின்றார்கள். மாயாவிடமிருந்து மறைத்து பிறகு எங்கு வைத்துக் கொள்கிறார்கள்? எவ்வளவுக்கெவ்வளவு மதிப்பு வாய்ந்த ரத்தினங்களாக இருப்பீர்களே அவ்வளவுக்கவ்வளவு பாப்தாதாவின் இதய சிம்மாசனத்தில் வீற்றிருப்பீர்கள். எப்பொழுது இதய சிம்மாசனதாரி ஆவீர்களோ அப்பொழுதே ராஜ்ய சிம்மாசனதாரி ஆகுவீர்கள். சங்கம யுகத்தின் சிம்மாசனம் எது? சிம்மாசனம் உள்ளதா அல்லது யாசிப்பவர்களாக இருக்கின்றீர்களா? சங்கமயுகத்தில் என்ன சிம்மாசனம் கிடைத்துள்ளது? பாப்தாதாவினுடைய உள்ளம் என்ற சிம்மாசனம். இது முழு உலகத்தின் அனைத்து ஆசனங்களையும் விட சிரேஷ்டமானதாகும். சத்யுகத்தில் எவ்வளவு பெரிய சிம்மாசனம் கிடைத்தாலும் இந்த சிம்மாசனத்திற்கு முன் அது எம்மாத்திரம்? இந்த சிம்மாசனத்தில் அமர்ந்திருப்பதால் மாயா எதுவும் செய்ய இயலாது. இதிலிருந்து இறங்கவும் ஏறவும் தேவையில்லை. இதன் மீது அமர்ந்திருப்பதால் மாயாவின் அனைத்து பந்தனங்களிலிருந்தும் விடுபட்டு இருப்பீர்கள். நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋❋

## 17.11.1969 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பூமியிலிருந்து ஆகாயத்திற்குச் செல்வதற்கான யுக்திகள்!

இங்கு நடைபெறும் பட்டிக்கு எதற்காக வந்திருக்கின்றீர்கள்? தேகத்தில் இருந்தாலும் விதேகி ஆகி இருப்பதற்கான பயிற்சி செய்வதற்காக வந்திருக்கின்றீர்கள். எப்பொழுது இங்கு பாதம் பதிக்கின்றீர்களோ அப்பொழுதிலிருந்தே இந்த ஸ்திதி இருக்க வேண்டும். என்ன லட்சியம் வைக்கப்பட்டுள்ளதோ, அதை நிறைவேற்றுவதற்காக பயிற்சி மற்றும் கவனம் தேவை. பாப்தாதா ஒவ்வொருவரையும் புதிய விஷயத்திற்காகவே அழைக்கின்றார்கள். அதர்குமாரர்கள் தன்னுடைய இல்லற வாழ்க்கை என்ற தலைகீழான ஏணியில் ஏறியிருந்தனர். அந்த தலைகீழான ஏணியிலிருந்து கீழே இறங்குவதற்காக விசேஷமாக அதர்குமாரர்கள் அழைக்கப்பட்டிருக்கின்றனர் மேலும் தலைகீழான ஏணியிலிருந்து இறக்கிய பிறகு எதன் மீது ஏற்றப்பட வேண்டும்? ஆகாயத்திலிருந்து பூமிக்கு இறங்க வேண்டும் பின்னர் பூமியிலிருந்து ஆகாயத்திற்கு ஏற வேண்டும். தலைகீழான ஏணியைப் பற்றிய ஞானம் சிறிதளவு உள்ளது. அந்த ஞானத்திலிருந்து அஞ்ஞானி ஆக்குவதற்காக மற்றும் சத்திய ஞானத்தின் அறிமுகத்தைக் கொடுத்து ஞான சொரூபமாக ஆக்குவதற்காக அழைக்கப்பட்டிருக்கிறது. முதலில் இறக்க வேண்டும் பிறகு ஏற்ற வேண்டும். எதுவரை முழுவதுமாக இறங்கவில்லையோ அதுவரை ஏறவும் இயலாது. அனைத்து விஷயங்களிலும் தன்னை இறக்குவதற்குத் தயாராக இருக்கின்றீர்களா? எவ்வளவு பெரிய ஏணியிலிருந்து இறங்க வேண்டும்? தலைகீழான ஏணி எவ்வளவு நீளமானது? இதுவரை செய்த முயற்சியின் மூலம் ஏணியிலிருந்து முழுவதுமாக இறங்கி விட்டதாக எண்ணுகிறீர்களா அல்லது இப்பொழுது வரை இறங்கிக் கொண்டிருக்கிறீர்களா? முழுமையாக இறங்கிய பின் ஏறுவதற்கு தாமதமாகாது ஆனால், இறங்கிக் கொண்டிருக்கும்பொழுதே எங்கேயாவது நின்று விடுகிறீர்கள். என்ன லட்சியத்திற்காக அழைக்கப்பட்டிருக்கின்றீர்கள் என இப்பொழுது

புரிந்து கொண்டீர்களா? 63-பிறவிகளில் ஏறிய தலைகீழான ஏணியிலிருந்து முழுவதுமாக இறங்க வேண்டும். இறங்குவது எளிதாக உள்ளதா அல்லது இறங்குவதே கடினமாக உள்ளதா? இறங்கி ஏறுவதற்கான முயற்சியே இப்பொழுது நீங்கள் செய்து கொண்டிருக்கிறீர்கள். இத்தகைய முயற்சி செய்கிறீர்களா அல்லது ஏறுவதற்கான முயற்சி மட்டும் செய்கிறீர்களா? சிலவற்றை அழித்துக் கொண்டிருக்கிறீர்கள், சிலவற்றை உருவாக்கிக் கொண்டிருக்கிறீர்கள். இரண்டு காரியமும் நடக்கிறது அல்லவா! எந்தக் கடைசி படியிலிருந்து இறங்க வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியுமா? இந்த தேக உணர்வை விட்டுவிட வேண்டும். எவ்வாறு சரீரத்தின் ஆடையைக் களையும் பொழுது எவ்வளவு எளிதாகக் களைகிறீர்கள் அவ்வாறே இந்த சரீரம் என்ற ஆடையைக் கூட எளிதாகக் களைய முடிய வேண்டும் மேலும் எளிதாக தேவையான நேரத்தில் தாரணை செய்யவும் முடிய வேண்டும். அனைவரும் இந்தப் பயிற்சியை முழுமையான விதத்தில் கற்றுக்கொள்ள வேண்டும். ஆயினும் சிலருக்கு இந்த தேக அபிமானம் ஏன் நீங்குவதில்லை, இந்த தேகம் என்ற சட்டை ஏன் எளிதாகக் களையப்படுவதில்லை? ஒருவருடைய ஆடை இறுக்கமாக இருந்தால் களைய இயலாது. இதுவும் அவ்வாறே. ஏதாவது சமஸ்காரங்களில் இந்த தேகம் என்ற ஆடை ஒட்டிக் கொண்டிருக்கிறது அதாவது இறுக்கமாக இருக்கிறது. ஆகையினாலேயே நீங்குவதில்லை. இல்லையெனில் இறக்குவது, ஏற்றுவது அல்லது இந்த தேகம் என்ற ஆடையைக் களைவது மற்றும் தாரணை செய்வது மிக எளிதாகும். எவ்வாறு இந்த ஸ்தூல ஆடையைக் களைவது மற்றும் அணிவது எளிதாக உள்ளது அல்லவா! இந்த தேகம் என்ற ஆடை எந்த சமஸ்காரத்தில் மாட்டியிருக்கிறது என்று பார்க்க வேண்டும். எப்பொழுது அனைத்து சமஸ்காரங்களிலிருந்தும் விடுபடுவீர்களோ அப்பொழுது உங்கள் நிலை கூட தனிப்பட்டதாகி விடும். ஆகையினால், பாப்தாதா கூட அனைத்து விஷயங்களிலும் ஈஸியாக (Easy) இருங்கள். எப்பொழுது தான் அனைத்திலும் எளிதாக (Easy யாக) இருப்பீர்களோ அப்பொழுது அனைத்து காரியங்களும் கூட எளிதாகி விடும். தன்னை இறுக்கமாக வைத்துக் கொள்வதால் காரியத்தில் கூட இறுக்கம் வந்து விடுகிறது. நீண்ட காலமாக முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறவர்களிடம் இப்பொழுது அனேக கடமைகளில் தனித்தன்மை வந்திருக்க வேண்டும். இப்பொழுது இந்த பட்டியில்

என்னவெல்லாம் இறுக்கம் உள்ளனவோ அவற்றையும் மற்றும் தலைகீழான ஏணியில் எஞ்சியுள்ள படிகளிலிருந்தும் தன்னை இறக்கவும் வேண்டும். மேலும் பிறகு லிப்ட்டில் (lift) ஏறவும் வேண்டும் ஆனால் லிப்ட்டில் அமர்வதற்காக என்ன செய்ய வேண்டும்? லிப்டில் யார் அமர இயலும்?

முழு உலகத்திலும், தந்தைக்குத் தகுதியான குழந்தைகளே சிரேஷ்டமான பரிசு ஆவார்கள். எனவே, லிப்ட்டில் ஏறுவதற்காக தந்தையின் பரிசு ஆக வேண்டும். மேலும் என்னவெல்லாம் உங்களிடம் இருக்கிறதோ அதையும் பரிசாக அளிக்க வேண்டும். அப்பொழுதே லிப்ட்டில் அமர இயலும். புரிந்ததா? இரண்டு காரியங்களையும் செய்து விட்டேனா என்று இப்பொழுது பார்க்க வேண்டும். பரிசு கொடுத்து விட்டேனா மற்றும் பரிசாகவும் ஆகி விட்டேனா? என்று பார்க்க வேண்டும். பரிசு மிகவும் பாதுகாக்கப்படுகிறது. மேலும் பரிசை காட்சிப்பெட்டியில் (ஷோகேஸ்) அலங்கரித்து வைக்கின்றனர் பரிசு எத்தகையதோ, அதற்கேற்றார் போல் காட்சிப்பெட்டியில் முன்னால் வைக்கின்றனர். உங்களுக்கு லிப்ட்டும் கிடைக்க வேண்டும் மற்றும் இந்த சிருஷ்டி என்ற காட்சிப்பெட்டியில் அனைவரையும் விட முன்னால் வர வேண்டும். அத்தகையதொரு பரிசாக நீங்கள் அனைவரும் தன்னைத்தான் ஆக்குங்கள். காட்சிப்பெட்டியில் அனைவரையும் விட முன்னால் இருப்பதற்காக அதர்குமாரர்கள் இரண்டு விசேஷமான விஷயங்களை கவனத்தில் வைக்க வேண்டும். காட்சிப் பெட்டியில் வைக்கப்படும் பொருட்களிடம் என்ன சிறப்புத்தன்மை இருக்கும்? (வசீகரம்). ஒன்று தன்னை, வசிகரிக்கக் கூடியவராக (attractive)ஆக்க வேண்டும் மற்றும் இரண்டாவது சுறுசுறுப்பானவராக (active) ஆக்க வேண்டும். இந்த இரு சிறப்புத்தன்மைகளையும் குறிப்பாக அதர்குமாரர்கள் தனக்குள் நிறைக்க வேண்டும். இந்த இரண்டு குணங்களும் வந்து விட்டால் பிறகு வேறு எதுவும் மீதம் இருக்காது. அவ்வப்பொழுது சுறுசுறுப்பில் குறை தென்படுகிறது. எனவே இந்த பட்டியிலிருந்து விசேஷமாக என்ன முத்திரை பதித்துச் செல்வீர்கள்? இரண்டு வார்த்தைகள் ஏற்கெனவே கூறப்பட்டது. வசீகரம் மற்றும் சுறுசுறுப்பு. இந்த முத்திரையைப் பதித்துச் சென்றால் உங்களுடைய நடத்தையும் மாறிவிடும். எந்தளவிற்கு இந்த முத்திரையை ஆழமாகப் பதிக்கின்றீர்களோ

அந்தளவு நடவடிக்கையும் கூட பக்காவாகவும் மாற்றமடைந்ததாகவும் காணப்படும். ஒருவேளை முத்திரை ஆழமாகப் பதிக்கப்படவில்லை என்றால் பின்னர் நடவடிக்கைகளில் மாற்றம் தென்படாது. பட்டிக்கு வருவது என்றால் தன்னுடைய ரூபம் மற்றும் நிறம் ஆகிய இரண்டுமே மாற்றமடைய வேண்டும் என்பதை ஏற்கெனவே கேட்டிருக்கிறீர்கள் அல்லவா?

பட்டியில் எந்த பொருள் போடப்பட்டாலும் அதிலிருக்கக் கூடிய அழுக்கு நீங்கி விடும். உங்களுடைய உண்மையான ரூபம் மற்றும் உண்மையான கடமையை இங்கிருந்து எடுத்துச் செல்ல வேண்டும். அது எந்த ரூபம்? என்ன மாற்றுவீர்கள்? இப்பொழுது நிறம் மாறிக் கொண்டிருக்கிறது. பிறகு ஒரே நிறம் அழுத்தமாக பதிந்து விடும். அதன்மீது வேறு எந்த நிறமும் படிய முடியாது மேலும் அந்த நிறத்தை எவரும் அழிக்கவும் முடியாது. அந்நிறம் அழியவும் இயலாது, வேறு நிறம் அதன்மீது படியவும் இயலாது. அனைத்து விஷயங்களிலும் சுறுசுறுப்பாக இருக்க வேண்டும். எத்தகைய நேரமாயினும், எத்தகைய சேவையாயினும் தயாராக (எவர்ரெடி) இருக்க வேண்டும். எந்த ஒரு காரியமாயினும், சுறுசுறுப்பானவர்கள், அக்காரியத்தை விரைவாகப் புரிந்து வெற்றியை பிராப்தியாக அடைவார்கள். சுறுசுறுப்பு இல்லாதவர்கள் காரியத்தைப் பற்றி யோசித்துக் கொண்டே இருப்பார்கள். யோசித்து யோசித்து நேரத்தையும் இழப்பார்கள், வெற்றியும் கிடைக்காது. சுறுசுறுப்பு (active) என்றால் தயாராக இருத்தல் (எவர்ரெடி) என்று அர்த்தம் மேலும் 1.அவர்கள் ஒவ்வொரு காரியத்தையும் அறிந்து கொள்வார்கள், 2.அதில் ஈடுபடுவார்கள் மற்றும் 3.வெற்றியும் அடைவார்கள். மூன்று விஷயங்களும் அவரிடம் இருக்கும். எவரிடம் சுமை இருக்குமோ அவரை சுறுசுறுப்பானவர் என்று சொல்ல இயலாது. யார் சுறுசுறுப்பாக இருப்பார்களோ அவர்கள் தயாராக மற்றும் சகஜமாக (easy) இருப்பார்கள். தான் சகஜமாக இருப்பதால் அனைத்து காரியமும் முயற்சியும் சகஜமாக இருக்கும். சுயம் சகஜமாக ஆகவில்லை எனில் முயற்சி மற்றும் சேவை ஆகிய இரண்டுமே சகஜமாக இருக்காது, கஷ்டங்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். சேவை கஷ்டமாக இருக்காது ஆனால் தன்னுடைய சமஸ்காரம், தன்னுடைய பலஹீனங்கள் கடினமான ரூபமாக ஆக்கி விடுகிறது. முயற்சியும் கடினமானது அல்ல, தனது பலஹீனங்களே

கடினம் ஆக்கி விடுகின்றது. இல்லையெனில், சிலருக்கு சகஜமாகவும், சிலருக்குக் கடினமானதாகவும் ஏன் உணர்வு ஏற்படுகின்றது? ஒருவேளை கடினமானது என்றிருந்தால் அனைவருக்கும் அனைத்து விஷயங்களும் கடினமானதாக இருந்திருக்க வேண்டும் ஆனால் ஒரே விஷயம் சிலருக்கு கடினமானதாகவும், சிலருக்கு எளியதாகவும் ஏன் இருக்கின்றது? தன்னுடைய பலஹீனங்களே கடினமான ரூபத்தில் வருகின்றது. ஆகையினால், இந்த இரண்டு விஷயங்களையும் தாரணை செய்ய வேண்டும்

எப்பொழுது தனக்குள் விசேஷத்தன்மைகள் இருக்குமோ அப்பொழுதே வசீகரிக்கக்கூடியவர் ஆக முடியும். வசீகரிக்கக்கூடியவர் ஆவதற்காக மகிழ்ச்சியாகவும் இருக்க வேண்டும். மகிழ்ச்சியாக இருப்பது என்றால் அதீந்திரிய சுகத்தில் ஆடுவது என்று அர்த்தம். ஞானத்தைச் சிந்தனை செய்து மகிழ்ச்சியாக இருப்பது, அவ்யக்த ஸ்திதியின் அனுபவத்தை செய்து அதிந்திரிய சுகத்தில் ஆடுவது என்பதையே மகிழ்ச்சியாக இருப்பது என்று சொல்லப்படுகின்றது. மகிழ்ச்சி கூட மனம் மற்றும் உடல் ஆகிய இரண்டிலுமே இருக்க வேண்டும். யார் அத்தகைய மகிழ்ச்சி உடையவராக இருக்கிறாரோ அவரே கவர்ச்சிக்கக் கூடியவர் ஆகின்றார். இயற்கை மற்றும் மாயைக்கு அடிமை ஆகாமல் இரண்டையும் அடிமை ஆக்க வேண்டும். அடிமை ஆகும் காரணத்தால் தன்னுடைய அதிகாரத்தை இழக்கின்றார்கள். எனவே அடிமை ஆகக்கூடாது, அடிமை ஆக்க வேண்டும். அப்பொழுதே தன்னுடைய அதிகாரத்தை பிராப்தியாக அடைவீர்கள். மேலும் எந்தளவு அதிகாரத்தை பிராப்தியாக அடைவீர்களோ அந்தளவு இயற்கை மற்றும் மக்கள் மூலம் மரியாதை கிடைக்கும். எனவே மரியாதையைப் பெறுவதற்காக என்ன செய்ய வேண்டியிருக்கும்? அடிமைத்தனத்தை விட்டுவிட்டு அதிகாரத்தை தனதாக்கிக் கொள்ள வேண்டும். அதிகாரத்தை தனதாக்கினால் தான் அதிகாரி ஆவீர்கள் ஆனால் அதிகாரத்தை விட்டுவிட்டு அடிமை ஆகி விடுகின்றீர்கள். சிறுசிறு விஷயங்களுக்கு அடிமை ஆகின்றீர்கள். தன்னுடைய படைப்பிற்கு அடிமை ஆகி விடுகின்றனர். லௌகீக குழந்தைகளிடம் அடிமையாகிறார்கள். அதுபோல், தன்னுடைய படைப்பு அதாவது சங்கல்பங்களுடைய அடிமை ஆகி விடுகின்றனர். எவ்வாறு லௌகீக படைப்பிற்கு அடிமை ஆகின்றீர்கள் அவ்வாறே இப்பொழுதும் கூட

தன்னுடைய படைப்பான சங்கல்பங்களுடைய அடிமை ஆகி விடுகின்றீர்கள். தன்னுடைய படைப்பான கர்மேந்திரியங்களுக்கும் கூட அடிமை ஆகி விடுகின்றீர்கள். அடிமை ஆவதனாலேயே தன்னுடைய பிறப்புரிமையை இழந்து விடுகிறீர்கள் அல்லவா? எனவே குழந்தை ஆகி விட்டீர்கள் மற்றும் அதிகாரம் கிடைத்து விட்டது. சுகம், சாந்தி மற்றும் தூய்மை தனது பிறப்புரிமை என்று கூறுகிறீர்கள் அல்லவா! குழந்தை ஆகி விட்டேன், தூய்மை, சுகம், சாந்தியின் அதிகாரத்தை பிராப்தியாக அடைந்து விட்டேனா? என்று தன்னைத்தான் கேளுங்கள். ஒருவேளை அதிகாரம் நீங்கி விட்டால் ஏதாவது விஷயத்திற்கு அடிமை ஆகி விடுகின்றீர்கள். எனவே, இப்பொழுது அடிமைத்தனத்தை விடுங்கள். தன்னுடைய பிறப்பு அதிகாரத்தை அடையுங்கள்.

எப்பொழுது பிரபாவம் ஏற்படும்? என்று கேட்கிறீர்கள். பிரபாவம் ஏன் ஏற்படவில்லை, காரணம் என்ன? ஏனெனில், இப்பொழுது வரை சில விஷயங்களில் தான் பிரபாவிக்கப்பட்டு இருக்கின்றீர்கள். எனவே, யார் சுயம் பிரபாவிக்கப்பட்டு இருக்கிறார்களோ அவர்களுடைய பிரபாவம் ஏற்படாது. பிரபாவத்தை ஏற்படுத்த விரும்புகிறீர்கள் என்றால் இந்த அனைத்து விஷயங்களின் பிரபாவத்தில் செல்லக்கூடாது. பின்னர் பாருங்கள், எவ்வளவு விரைவாக பிரபாவம் வெளிப்படுகிறது என்று! தனது நடத்தையின் மூலம் தானே வெளிப்படுத்த இயலும். அத்தகைய சௌபாக்கியம் முழு கல்பத்தில் ஒருமுறை தான் கிடைக்கின்றது. சத்யுகத்தில் கூட லௌகீக தந்தையுடன் இருப்பீர்கள், பரலௌகீக தந்தையுடன் இருக்கமாட்டீர்கள். 84-பிறவிகளில் எத்தனை அலங்காரம் செய்திருப்பீர்கள்! வெவ்வேறு விதமாக அதிக அலங்காரம் செய்திருக்கிறீர்கள். பாப்தாதாவினுடைய அன்பு என்னவென்றால், குழந்தைகளை அலங்கரித்து காட்சிப்பெட்டகத்தில் வைத்து சிருஷ்டியின் முன்பு வைக்க வேண்டும் என்பதேயாகும். எப்பொழுது அனைவரும் சம்பூரணம் ஆகிக் காட்சிப்பெட்டகம் அதாவது உலகத்தின் முன்பு வருவீர்களோ அப்பொழுது எவ்வளவு அலங்கரிக்கப்பட்டு இருப்பீர்கள்! சத்யுகத்தின் அலங்காரம் அல்ல, குணங்கள் என்ற ஆபரணங்களை தாரணை செய்ய வேண்டும்.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 28.11.1969 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# லௌகீகத்தை அலௌகீகமாக மாற்றுவதற்கான யுக்திகள்!

பட்டியின் இன்றைய தினம் எத்தகைய தினம் ஆகும்? இன்று சம்பூரண சமர்ப்பணம் ஆகுவதற்கான தினம் ஆகும்! அவ்வாறு புரிந்துகொண்டு பாப்தாதாவை அழைத்திருக்கிறீர்களா? சம்பூரண சமர்ப்பணம் ஆகுவதற்கு அனைவரும் தயாராக இருக்கிறீர்களா? அல்லது சம்பூரண சமர்ப்பணமாகி விட்டீர்களா? யார் சம்பூரண சமர்ப்பணம் ஆகி இருக்கிறீர்களோ இன்று அவர்களுக்கான விழாவாகும். இங்கிருக்கும் அனைவருமே சம்பூரண சமர்ப்பணம் ஆகி விட்டீர்களா? சம்பூரண சமர்ப்பணம் ஆனவர்களுடைய திருஷ்டி எவ்வாறு இருக்கும்? சுத்தமான திருஷ்டி, சுத்தமான விருத்தி இருக்கும் ஆனால் எந்த யுக்தியினால் விருத்தி, திருஷ்டி சுத்தம் ஆகிறது? ஒரே வார்த்தையில் கூற வேண்டுமாயின் திருஷ்டி மற்றும் விருத்தியில் ஆன்மீகத்தன்மை வந்து விடுகிறது. அதாவது திருஷ்டி, விருத்தி ஆன்மீகம் ஆகி விடுகிறது. உடலைக் காண்பதில்லை, எனவே திருஷ்டி சுத்தமான தூய திருஷ்டி ஆகி விடுகிறது. ஜடப்பொருளை கண்களால் காணவே இல்லை எனில் அதன் பக்கம் விருத்தியும் செல்லாது. திருஷ்டி செல்லவில்லை என்றால் விருத்தியும் செல்லாது. திருஷ்டி பார்க்கும் பொழுதே விருத்தியும் செல்கிறது. ஆன்மீக திருஷ்டி என்றால் தன்னையும், பிறரையும் ஆன்மா என்று பார்க்க வேண்டும். சரீரத்தைப் பார்த்தாலும் பார்க்கக்கூடாது. அத்தகைய பயிற்சி தேவை. எவ்வாறு ஒருவர் மிக ஆழ்ந்த சிந்தனையில் இருக்கின்றார் என்றால், அவர் என்ன செய்தாலும், நடந்தாலும், சாப்பிட்டாலும், குடித்தாலும் எதுவரை வந்து சேர்ந்திருக்கிறோம், என்ன சாப்பிட்டோம் என்பது அவருக்குத் தெரியாது. இவ்விதம், உடலை பார்த்தாலும் பார்க்காமல் ஆத்மாவை பார்ப்பதிலேயே மும்முரமாக (Busy) இருந்தீர்கள் என்றால் பிறகு எவராவது உங்களிடம் இது எவ்வாறு இருந்தது? என்று கேட்டால் தெரியாது என்று பதிலளிக்கும் நிலை ஏற்பட்டுவிடும் ஆனால், உலகிய

பொருளைக் கண்டாலும், அந்த உலகிய லௌகீக பொருளை அலௌகீகமாக மாற்றும் பொழுதே அந்த நிலை ஏற்படும். தனக்குள் பரிவர்த்தனை செய்வதற்காக லௌகீக பொருட்களைப் பார்த்தாலும், லௌகீக உறவினர்களைப் பார்த்தாலும், அவை அனைத்தையும் மாற்றம் செய்ய வேண்டியிருக்கும். லௌகீகத்தில் அலௌகீக தன்மையின் நினைவைக் கொணர வேண்டும். லௌகீக உறவினர்களைப் பார்த்தாலும், இவர்களும் கூட பிரம்மாபாபாவின் குழந்தைகள், எனது இளைய சகோதரர் என்று நினையுங்கள். அவர்களும் பிரம்மாவின் வம்சத்தினர் தானே! ஏனெனில், பிரம்மா படைப்பவராக இருக்கிறார். எனவே, அவர்கள் பக்தர்களோ, ஞானியோ அல்லது அஞ்ஞானியோ ஆனால் அவர்களும் சகோதரர்கள் அல்லவா! ஆகவே, லௌகீக உறவினர்களும் பிரம்மாவின் வம்சத்தினரே! அவர்கள் நெருக்கமான உறவினர்களானாலும் சரி அல்லது தூரத்து உறவினர்களானாலும் சரி. இவ்விதமாக எந்தவொரு லௌகிக பொருளைப் பார்த்தாலும், அலுவலகத்தில் பணிபுரிந்தாலும், தொழில் செய்தாலும், உணவு உட்கொண்டாலும், பார்த்தாலும், பேசினாலும், ஒவ்வொரு லௌகீக விஷயத்திலும் அலௌகீக தன்மையைக் கொணருங்கள். இந்த சரீரத்தினுடைய வேலைக்காக சென்று கொண்டு இருக்கின்றீர்கள் என்றால் இந்த சரீரத்தின் கால்கள் மூலம் லௌகீக காரியத்திற்காகச் சென்று கொண்டு இருக்கின்றேன் ஆனால், புத்தி மூலம் என்னுடைய அலௌகீக தேசத்தின் நன்மைக்கான காரியத்திற்காக சென்று கொண்டு இருக்கின்றேன் என்று நினையுங்கள். கால்கள் இங்கு நடந்து கொண்டு இருக்கின்றன ஆனால் புத்தி நினைவுயாத்திரை செய்து கொண்டு இருக்கின்றது. சரீரத்திற்கு உணவு கொடுத்துக் கொண்டு இருக்கின்றீர்கள் ஆனால் அப்பொழுது ஆத்மாவிற்கு நினைவு என்ற உணவு அளியுங்கள். இந்த நினைவு கூட ஆத்மாவின் உணவு ஆகும். எந்த நேரம் சரீரத்திற்கு உணவு அளிக்கின்றீர்களோ, அப்பொழுது சரீரத்தின் கூடவே ஆத்மாவிற்கும் கூட சக்தியினுடைய, நினைவினுடைய பலத்தைக் கொடுக்க வேண்டும்.

தன்னை மாற்றுவதற்கு என்ன செய்ய வேண்டும்? ஒவ்வொன்றையும் லௌகீகத்திலிருந்து அலௌகீகமாக மாற்ற வேண்டும். இதன் மூலம் உலகத்தினர் இவர்கள் ஒரு வினோதமான அலௌகீக ஆத்மா என்று

அறிந்துகொள்வர். லௌகீகத்தில் இருந்தபோதிலும் நாம் உலகத்தினரிடமிருந்து தனிப்பட்டவர்கள். தன்னை ஆன்மீக ரூபத்தில் தனிப்பட்டவராகப் புரிந்து கொள்ள வேண்டும். கடமையிலிருந்து விலகி பற்றற்று இருப்பது என்பது எளிதானது. இதன் மூலம் உலகத்தினரின் அன்பிற்கு உரியவர்கள் ஆகமாட்டீர்கள். எப்பொழுது சரீரத்திலிருந்து தனிப்பட்டு ஆத்மரூபத்தில் காரியங்களைச் செய்வீர்களோ, அப்பொழுதே உலகத்தினரின் அன்பிற்கு உரியவர்கள் ஆவீர்கள். எனவே, உலகத்தின் விஷயங்களில் இருந்து மட்டும் விடுபட்டவர் ஆகக்கூடாது. அதற்கு முன்னதாக தன்னுடைய சரீரத்திலிருந்து விடுபட்டவர் (பற்றற்றவர்) ஆக வேண்டும். எப்பொழுது சரீரத்திலிருந்து பற்றற்றவர் ஆவீர்களோ, அப்பொழுது அன்பிற்குரியவர் ஆவீர்கள். தன்னுடைய மனதிற்குப் பிரியமானவராக, பிரபுவிற்குப் பிரியமானவராக மற்றும் உலகத்தினருக்கும் பிரியமானவராக ஆவீர்கள். இப்பொழுது ஏன் மக்களுக்கும் பிரியமானவர்களாக இல்லை? ஏனெனில், தன்னுடைய சரீரத்திலிருந்து பற்றற்றவர் ஆகவில்லை, உறவினர்களிடமிருந்து மட்டும் பற்றற்றவர் ஆகுவதற்கு முயற்சி செய்கிறீர்கள். ஆகவே அவர்கள் தன்னை என்ன மாற்றி இருக்கிறார்கள் என்று புகார் செய்கிறார்கள். முதலில் தேகத்தின் உணர்விலிருந்து பற்றற்றவர் ஆகவில்லை. ஆகையினாலேயே புகா செய்கிறார்கள். முதலில் தேகத்திலிருந்து பற்றற்றவர் ஆனீர்கள என்றால் புகார் செய்ய மாட்டார்கள். முன்பை விட அதிகமாக உலகத்தினருக்கு பிரியமானவர்களாக ஆகி விடுவீர்கள். சிலர் தன்னையும் பார்க்கின்றனர், வெளி விஷயங்களையும் பார்க்கின்றனர். விஷயங்களை முதலில் மாற்றம் செய்கின்றனர், பின்பே தன்னை மாற்றுகின்றனர். ஆகையினால், பிரபாவம் ஏற்படுவதில்லை. பிரபாவத்தை ஏற்படுத்துவதற்காக முதலில் தன்னை மாற்றம் செய்யுங்கள். திருஷ்டி, விருத்தி, நினைவு, செல்வம் மற்றும் நேரத்தை மாற்றுங்கள். அப்பொழுதே உலகத்தினருக்கு பிரியமானவர்கள் ஆவீர்கள். ஏனெனில் சம்பூரண சமர்ப்பணம் ஆகி விட்டீர்கள் எனில் பிறகு என்ன செய்ய வேண்டும்? பேச்சு, நடத்தை எவ்வாறு இருக்க வேண்டும் என்பதைக் கூறிக் கொண்டு இருக்கிறார்கள்.

சம்பூர்ண சமர்ப்பணம் யார் செய்வித்தார்கள்? யாருக்கு செய்வித்தார்கள்? எவ்வளவு நேரத்தில் செய்வித்தார்கள் என்பதை

சாஸ்திரங்களில் உங்களுடைய நினைவுச்சின்னமாக கூறுகிறார்கள். நினைவுச்சின்னத்தின் நினைவு வருகிறதா? (ஜனக மஹாராஜாவின் உதாரணம்) அவரைக் குழந்தைகள் செய்வித்தார்கள்; ஆனால் தந்தை செய்வித்ததாகவும் நினைவுச்சின்னம் உள்ளது. வாமன அவதாரம் பற்றிச் சொல்கிறார்கள். வாமனன் என்றால் சிறியவர் என்று அர்த்தம். யாருடைய ரூபம் அனைவரையும் விட சிறியது? ஆத்மா மற்றும் பரமாத்மாவின் ரூபம். எனவே, தந்தை வந்து பலவானான மாயா பலியிடமிருந்து மூன்றடியில் அனைத்தையும் பெற்று விட்டார், அதாவது சம்பூரண சமர்ப்பணம் ஆக்கி விட்டார். நீங்களும் கூட சம்பூரண சமர்ப்பணம் செய்ய வேண்டும். அதாவது, மாயாவினுடைய பலம் அனைத்தையும் தியாகம் செய்ய வேண்டும். மாயாவிற்கு பலி ஆகி விடக்கூடாது ஆனால் ஈஸ்வரிய சக்தியில் பலவான் ஆக வேண்டும். எவ்வாறு அவர்கள் மூன்று அடி காண்பிக்கிறார்கள். சம்பூரண சமர்ப்பணம் செய்விக்கும் எந்த மூன்று விஷயங்கள் சொல்லப்பட்டு இருக்கின்றன? எண்ணம், சொல், செயலுக்காக என்ன படிப்பினை கிடைத்து இருக்கிறது? ஒருவேளை அந்த மூன்று விஷயங்களை நினைவில் வைத்திருந்தால் சம்பூர்ன சமர்ப்பணம் ஆகி விடுவீர்கள். அந்த மூன்று விஷயங்கள் எவை? ஒன்று, தேக சகிதம் அனைத்து சம்பந்தங்களின் தியாகம் செய்வது. என் ஒருவனை மட்டும் நினைவு செய்யுங்கள், இது மனதிற்கான விஷயம். வார்த்தைகளுக்காக என்ன போதனை கிடைத்திருக்கிறது? ஒவ்வொரு நேரமும் முத்துக்கள் வெளிப்பட வேண்டும். வாயிலிருந்து ரத்தினம்தான் வெளி வர வேண்டும். ஒருவருக்கொருவர் ஞானரத்தினங்களை தானமாக அளிக்க வேண்டுமே தவிர கல்லை அல்ல. மேலும் கர்மத்திற்காக, என்ன செயல் நான் செய்கின்றேனோ என்னைப் பார்த்து அனைவரும் செய்வார்கள். இரண்டாவது என்ன செய்வேனோ அதற்கான பலனை அடைவேன் என்பதையே நினைவில் கொள்ளுங்கள். இந்த இரு விஷயங்களும் நினைவில் இருப்பதால் செயலில் பலம் கிடைக்கிறது. உங்கள் தொடர்பில் வருபவர்களுக்கும் பலம் கிடைக்கிறது. புரிந்ததா? எண்ணம், சொல், செயலுக்காக இந்த முக்கியமான விஷயங்களை நினைவில் வைத்திருந்தால் நீங்கள் செய்திருக்கும் சம்பூரண சமர்ப்பணத்தை அழிவற்றதாக ஆக்க இயலும். இங்கு சம்பூரண சமர்ப்பணத்தின் போதை ஏறியிருக் கிறது. அது பின்னர், குறைந்து விடுகிறது என்பது கூடாது. ஒருவேளை நாம் சம்பூரண சமர்ப்பணம் ஆகியேவிட்டோம் என்ற

நினைவை உறுதியாகக் கொண்டிருந்தால், இந்த அழிவற்ற நினைவு உங்களை அழிவற்றவர் ஆக்கி விடும். ஒருவேளை நீங்கள் சிறிது தடுமாறினால் பிறகு பிரச்சனை தடுமாற வைக்கும். உங்களுடைய தடுமாற்றம் மற்றும் பிரச்சனைகளைப் பார்த்து, உலகத்தினரும் கூட வேடிக்கை பார்ப்பார்கள். பாப்தாதாவோ பார்த்து கொண்டே இருக்கிறார்கள்.

நீங்கள் யாருடன் இணைந்து இருப்பீர்கள்? துணைவர் பிடித்திருக்கும் விரலை விட்டுவிட்டால் என்ன செய்வீர்கள்? அனைவரும் தன்னுடைய துணையை தக்க வைத்துக் கொள்ளுங்கள். பாப்தாதாவோ ஏதாவதொரு ரூபத்தில் துணையாக இருப்பதற்கான அதாவது, விரலை பிடித்துக் கொள்வதற்கான முயற்சி செய்து கொண்டே இருக்கின்றார்கள். இறுதி மூச்சு உள்ளவரை முயற்சி செய்கின்றார்கள். மூச்சு நின்று விடும் தருவாயில் கூட உயிரளிக்கின்றார்கள் ஆனால் பிராணவாயு (ஆக்ஸிஜன்) கொடுக்க விடாமல் குழாயையே எடுத்துப் போட்டுவிட்டால் என்ன செய்வார்கள்! ஒருவேளை பாப்தாதாவினுடைய சகயோகம் வேண்டும் என்றால் உண்மையில் சகயோகம் என்பது யாசித்து பெறக்கூடியது அல்ல, சகயோகம் சினேகிக்கு இயல்பாகவே கிடைக்கிறது. நீங்கள் பாப்தாதாவினுடைய சினேகி ஆகுங்கள். அப்பொழுது சகயோகம் தானாகவே கிடைக்கும். கேட்க வேண்டிய அவசியமே இல்லை. பக்தன் என்ற ரூபத்தில் அரைக்கல்பமாக கேட்டுக் கொண்டே இருந்தீர்கள். இப்பொழுது குழந்தை ஆன பிறகும் கூட கேட்டுக் கொண்டிருந்தால் பக்தன் மற்றும் குழந்தைகளுக்கு இடையில் என்ன வித்தியாசம் இருக்கிறது? ஆனால் காரணம் என்னவென்றால், அஞ்ஞானியாகி சக யோகத்தை வேண்டுகிறீர்கள். அதிகாரி (உரிமையாளன்) என்று புரிந்து கொண்டால் பிறகு, வேண்டுவதற்கான அவசியமே இல்லை. கடந்தது கடந்து விட்டது. கடந்தவைகளைப் பற்றி சிந்தனை செய்யாது, கடந்த விஷயங்களிலிருந்து படிப்பினையை எடுத்துக் கொண்டு எதிர்காலத்தில் எச்சரிக்கையுடன் இருங்கள். ஒருவேளை கடந்து முடிந்த விஷயங்களைப் பற்றி யோசித்துக் கொண்டே இருந்தீர்கள் என்றால் இதுவும் ஒரு பிரச்சனை ஆகி விடும். ஏற்கெனவே பிரச்சனைகள் அதிகம் வருகின்றன. இதையும் ஒரு புதிய பிரச்சனையாக ஆக்கி விடுகிறீகள். கடந்தவற்றை மாற்றுவதற்காக

அந்த ரூபத்திலேயே சிந்தியுங்கள். இது ஏன்? எப்படி நடந்தது? இப்பொழுது என்ன ஆகும்? என்னால் தாண்ட முடியுமா? முடியாதா? இவ்வாறு கேள்வி எழுப்பாதீர்கள். கேள்விக்குறிக்குப் பதிலாக முற்றுப்புள்ளி வையுங்கள். முற்றுப்புள்ளி வைத்தல் என்பது எளிது. கேள்விக்குறியை சிலரால் எழுத இயலும் அல்லது இயலாமலும் போகும் ஆனால் இங்கு கேள்வி எழுப்புவது அனைவருக்கும் வருகிறது. புள்ளி வைத்துக் கொண்டே சென்றால் புள்ளி ரூபத்தை நினைக்க இயலும். அருங்காட்சியகத்திலோ (Museum) அல்லது கண்காட்சியிலோ நீங்கள் புரிய வைத்த பிறகு என்ன செய்கிறீர்கள்? அருங்காட்சியகம் அல்லது கண்காட்சி பார்த்த பின்னர் என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றிய கைப்பிரதியை (Notice) அனைவருக்கும் கொடுக்கிறீர்கள். இன்று பாப்தாதாவும் கேட்கிறார்கள், நீங்கள் பட்டிக்குப்பிறகு, என்ன செய்யப் போகிறீர்கள்? யக்ஞத்தின் காரியத்தை எவ்வாறு முன்னேற்றம் அடையச் செய்வீர்கள்? தன்னுடைய முன்னேற்றத்திற்கான சாதனமாக என்ன செய்யப் போகிறீர்கள்? தெய்வீக குணங்களைத் தாரணை செய்வது, சினேகி ஆகுவது ஆகிய இவற்றை எல்லாம் செய்து தான் ஆக வேண்டும் ஆனால் நடைமுறையில் என்ன செய்வீர்கள்? தன்னுடைய, பாப்தாதாவினுடைய, பரிவாரத்தினுடைய சினேகியாக, சகயோகியாக ஆகுவோம் என்று நீங்கள் ஏற்கெனவே கூறியிருக்கிறீர்கள் ஆனால் அதுவும் கூட எந்தெந்த விஷயங்களில் வேண்டும்? எண்ணம், சொல், செயலின் கூடவே உடல், மனம், பொருள் ஆகிய மூன்று ரூபத்திலும் தன்னை மாற்ற வேண்டும். உதவியாளர் மற்றும் நம்பிக்கைக்கு உரியவராக எப்பொழுது ஆவீர்களோ அப்பொழுது பாப்தாதா மற்றும் பரிவாரத்தினுடைய சினேகியாக மற்றும் சகயோகியாக ஆக இயலும்.

சகயோகியாக இருப்பவர்களின் அடையாளம் என்ன? அவர்கள் பரிவாரம் மற்றும் பாப்தாதாவின் சிந்தனைகள் மற்றும் கர்மங்களில் ஒருவருக்கொருவர் நெருங்கி இருப்பார்கள். பிறருடைய கருத்துக்களுக்கு இணங்கி நடப்பார்கள், ஆகவே கருத்து வேறுபாடு அழிந்து விடும். ஒன்று உதவியாளர் மற்றும் நம்பிக்கைக்கு உரியவர் ஆவதற்கான வழியும் கூறப்பட்டது. இரண்டாவது விஷயம், யாரெல்லாம் சம்பூரண சமர்ப்பணம் ஆகியிருக்கின்றீர்களோ அவர்கள் தன்னுடைய உடல், மனம், செல்வம் மற்றும் நேரம் ஆகிய நான்கு விஷயங்களை எங்கு ஈடுபடுத்த வேண்டும்? இல்லற மார்க்கத்தில்

கவனம் கொடுக்க வேண்டியதும் அவசியமானது தான் ஆனால் மேலே கூறப்பட்ட நான்கு விஷயங்களை நாம் யதார்த்தமான முறையில் பிரயோகம் செய்து கொண்டு இருக்கின்றோமா என்று உங்கள் மனதில் சோதித்துப் பார்க்கின்றீர்களா? சம்பூரண சமர்ப்பண ஆத்மா உடல், மனம், செல்வம் மற்றும் நேரத்தை எந்தளவு பிரயோகம் செய்துகொண்டு இருக்கின்றோம் என்ற கணக்கைப் பாருங்கள். எவ்வாறு தன்னுடைய வீட்டில் வரவு செலவு கணக்கு வைக்கின்றீர்கள் அவ்வாறு சம்பூரண சமர்ப்பணம் ஆகியிருப்பவர்கள் இந்தக் கணக்கையும் பார்க்க வேண்டும். உடலை எங்கு, எவ்வாறு ஈடுபடுத்தினேன் இதைச் சுருக்கமாக ஆனால் தெளிவாக எழுத வேண்டும் ஏனெனில் விரிவாக இருந்தால் அதில் தெளிவு இருக்காது. ஆகையினால், சுருக்கமாகவும் இருக்க வேண்டும் மற்றும் தெளிவாகவும் இருக்க வேண்டும். எவ்வளவுக்கெவ்வளவு சுருக்கமாக மற்றும் தெளிவாக எழுத இயலுமோ அவ்வளவு மனதின் ஸ்திதியும் தெளிவாக இருக்கும். சங்கல்பத்தைச் சுருக்கி விட்டால் சமாச்சாரமும் சுருங்கி விடும். மேலும் முயற்சி தெளிவாக இருக்கும் பொழுது சமாச்சாரமும் தெளிவாக ஆகி விடும். இதில் அனைத்து கணக்குவழக்கும் அடங்கி விடும்.

மூன்றாவது விஷயம் நினைவில் கொள்ள வேண்டியது என்னவென்றால், முயற்சியின் (புருஷார்த்தம்) குறைபாட்டின் காரணத்தினால் உங்களுடைய எண்ணம், சொல், செயல் இதுவரை எத்தகையதாக இருந்தாலும், அதை புத்தியால் முற்றிலுமே மறந்து விடுங்கள். இப்பொழுது புதிய பிறவி எடுத்து விட்டது போல், அவற்றை மறந்து விடுங்கள். முயற்சியின் பலஹீனத்திற்கான விஷயங்கள் என்னவெல்லாம் இருக்கின்றனவோ அவை அனைத்தையும் இங்கேயே விட்டு விட்டுச் செல்ல வேண்டும். பின்னர், பழைய சமஸ்காரங்களின் காரணத்தால் இவ்வாறு ஆகி விட்டது என்று கடிதங்களில் எழுதி அனுப்பக்கூடாது. சம்பூரண சமர்ப்பணம் ஆகி விட்டீர்கள் என்றால், தானமாகக் கொடுத்த பொருளை ஒருவேளை மீண்டும் கேட்டுத் திரும்பப் பெற்றால் அதற்கான விளைவு என்னவாகும் என்று சிந்திக்க வேண்டும். இதை நினைவில் வைத்திருந்தால் நான்கு விஷயங்களும் மாறிவிடும். வாயிலிருந்து ஒருபொழுதும் அத்தகைய வார்த்தைகள் வெளிப்படக்கூடாது!

பிரச்சனைகள் ஏன் வருகின்றன? ஏனெனில், ஞானத்தின் சில கருத்துக்களை தலைகீழான ரூபத்தில் தனக்குள் தாரணை செய்திருக்கின்றனர். ஏதாவது தவறு செய்து விட்டு, இன்னும் சம்பூரணம் ஆகவில்லையே, இன்னும் காலம் உள்ளது அல்லவா, முயற்சியாளராகத் தானே இருக்கின்றோம் என்று கூறுவார்கள். முயற்சியாளருக்கும் தவறு செய்வதற்கு அனுமதி கிடையாது ஆனால், தற்காலத்தில், முயற்சியாளர் என்றால் தவறுகள் மன்னிக்கப்படும் என்று நினைத்துக் கொண்டு இருக்கின்றனர். இவர்கள் இவ்வாறு செய்கிறார்கள். எனவே நானும் இவ்வாறு செய்ய வேண்டியதாக உள்ளது. இவ்வாறு கூறினால் ஞானிக்குப் பதிலாக அஞ்ஞானி ஆகி விட்டார்கள் என்று பொருள். எதை நினைவில் வைக்க வேண்டும்? என்ன செயல் செய்வேனோ அதற்கான பலனை அடைவேன். நான் என்ன செய்வேனோ, என்னைப் பார்த்து பிறரும் செய்வார்கள், அவர்களைப் பார்த்து நான் செய்யக்கூடாது. என்னைப் பார்த்து பிறரும் செய்யும்படியாக நான் செயல்களைச் செய்திட வேண்டும். சின்னச்சின்ன விஷயங்களை தலைகீழான ரூபத்தில் தாரணை செய்து விடுகின்றனர். ஞானத்தை சரியாகப் பயன்படுத்துவதற்குப் பதிலாக தலைகீழான ரூபத்தில் பயன்படுத்துவதால் முயற்சியில் பலஹீனம் வருகின்றது. இவை முயற்சிக்கு புறம்பான விஷயங்கள் ஆனால் இதுவே முயற்சி செய்யும் வாழ்க்கை என்று நினைக்கின்றனர். ஆகையினால், இந்த ஞானக்கருத்துகளை தன்னுடைய முயற்சியின் குறையை மறைப்பதற்கான சாதனமாக ஆக்கி வைத்திருக்கின்றனர். இந்த சாதனங்களை அழித்து விடுங்கள், அப்பொழுது அனைத்து பிரச்சனைகளும் தானே முடிந்து விடும். நான்கு சக்திகளை தாரணை செய்ய வேண்டும் அனைத்துமே ஒரே ஈஸ்வரிய சக்திதான் ஆனால் தெளிவுபடுத்துவதற்காகப் பிரித்து கூறப்படுகின்றன. 1. புலனடக்கும் சக்தி அதாவது சுருக்கிக் கொள்ளும் சக்தி, 2. ஒருங்கிணைக்கும் சக்தி, 3. சகித்துக்கொள்ளும் சக்தி, 4. எதிர்கொள்ளும் சக்தி! ஆனால் யாரை எதிர்கொள்ள வேண்டும்? பாப்தாதா அல்லது தெய்வீக பரிவாரத்தை அல்ல, மாயாவின் சக்தியை எதிர்கொள்வதற்கான சக்தி. இந்த நான்கு சக்திகளை தாரணை செய்தால் சம்பூரண சமர்ப்பணத்தை அழிவற்றதாக, நிலையானதாக ஆக்கி விட இயலும்.

ஒன்று சுருக்குங்கள், மற்றொன்று தேர்ந்தெடுங்கள் என்று கூறுகிறார்கள் அல்லவா? இதைச் செய்ய வேண்டும், இதை சிந்திக்க வேண்டும் என்று கூட எண்ண வேண்டாம், இவ்வாறு ஆக வேண்டும் என்பதும் வேண்டாம் -சுருக்கிக் கொண்டே செல்லுங்கள். மேலும் எவ்வளவு இயலுமோ அவ்வளவு சுருக்குங்கள். பத்து வார்த்தைகள் பேச வேண்டிய சூழ்நிலையில் அவற்றை சுருக்கி இரண்டு வார்த்தைகளில் ரகசியமாகக் கூறுங்கள். இவ்வாறு சுருக்கிக் கொண்டே வந்தால் முற்றிலும் குறைந்து விடும். இத்தகைய முயற்சியை இந்த பட்டிக்குப் பின்னர் செய்ய வேண்டும். மற்றொரு விஷயத்தையும் நினைவில் கொள்ள வேண்டும். அது என்னவென்றால் பாப்தாதா குழந்தைகள் உங்கள் அனைவரையும் சிருஷ்டியின் முன்பு பிரத்யட்சம் செய்து விட்டார்கள். எனவே, இப்பொழுது ஒவ்வொரு செயல் மூலமாகவும், ஒவ்வொரு விஷயத்தின் மூலமாகவும் பாப்தாதாவை அனேக ஆத்மாக்களின் முன்பு பிரத்யட்சம் செய்வது குழந்தைகள் உங்களுடைய வேலையாகும். அது உங்களுடைய கடமையாகும். தன்னுடைய இந்த சார்ட்டையும் (Chart) பாருங்கள். இதுவரை நாம் தந்தையின் செய்தியை கொடுத்திருக்கிறோம் எனினும் அந்த செய்தியினால் ஆத்மாக்களிடம் பாப்தாதாவின் அன்பு மற்றும் சம்பந்தத்தை பிரத்யட்சம் செய்திருக்கிறோமா? இல்லை! எனவே என்ன சேவை மீதம் இருக்கிறது? அரை குறை சேவை செய்யக்கூடாது. இப்பொழுது சம்பூரண சமர்ப்பணம் ஆகி இருக்கிறீர்கள் என்றால் சேவையும் கூட சம்பூரணமாகச் செய்ய வேண்டும். ஆகையினால் ஒவ்வொரு வரும் இன்று நான் எண்ணம், சொல், செயல் மூலம் எத்தனை ஆத்மாக்களுக்கு பாப்தாதாவினுடைய அன்பு மற்றும் சம்பந்தத்தை எந்தளவு பிரத்யட்சம் செய்து இருக்கின்றேன் என்பதையும் சோதிக்க வேண்டும். செய்தியைக் கொடுப்பது மட்டும் சேவை அல்ல. செய்தியைக் கொடுப்பது என்றால் அவர்களை தன்னுடைய உறவினர் ஆக்குவது என்று அர்த்தம். தன்னுடைய உறவினர் ஆக்குவது என்றால் சிவவம்சி பிரம்மாகுமார் அல்லது பிரம்மாகுமாரியாக ஆக்குவது என்று அர்த்தம். இது தன்னுடைய உறவினரை உருவாக்குவது ஆகும். எப்பொழுது அவர்களை சினேகி ஆக்குவீர்களோ அப்பொழுதே தன்னுடைய உறவினர் ஆவார்கள். செய்தியை மட்டும் கொடுப்பது என்பது எறும்பைப் போன்று சிறிய சேவையாகும் ஆனால் இதுவோ பரந்த சேவையாகும். உலகத்தில் பாப்தாதா தன்னுடைய கடமையை

எவ்வாறு மறைமுகமான வேஷத்தில் செய்து கொண்டு இருக்கிறார்கள் என்ற விஷயத்தைப் பரப்புங்கள். அவர்களை இந்த அன்பு, சம்பந்தத்தில் கொணருங்கள். அனைவருமே உங்களுடைய உறவினர்கள் தானே! எனவே உறவினர்களுக்கு தன்னுடைய உறவினுடைய நினைவை ஏற்படுத்துங்கள். பிரிந்து சென்ற ஆத்மாக்களை சினேகி ஆக்குங்கள். இப்பொழுது மறைமுகமான ரூபத்தில் சேவை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பிரத்யட்ச ரூபத்தில் நடைபெறவில்லை. அருட்காட்சியகத்திற்கு வருகின்றனர், இந்த பிரத்யட்ச ரூபம் ஒரு வகை. எனினும் சேவையின் ரூபம் இப்பொழுது மறைமுகமாகவே உள்ளது. சேவையின் ரூபம் எப்பொழுது பிரத்யட்சம் ஆகுமோ அப்பொழுதே பிரத்யட்சம் ஏற்படும். சேவையை எவ்வாறு பெருகச்செய்வது என்பதற்கான புதுப்புது திட்டங்களையும் உருவாக்குங்கள். வார்த்தைகள் எவ்வாறு இருக்க வேண்டும். சங்கோஜமின்றி விளம்பரப்படுத்துவதற்காக, செய்தியைக் கொடுப்பதற்காகச் செல்லுங்கள். கண்காட்சியும் செய்து கொண்டே செல்லுங்கள் ஆனால் பிறகு அவர்களுக்கு என்ன கூறுகிறீர்களோ, அவற்றை நீங்களும் செய்யுங்கள். இப்பொழுது எத்தகைய நேரம் நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது மற்றும் என்ன காரியம் நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது என்பதை உலகிற்கு எவ்வாறு தெரியப்படுத்துவது என்பதைப் பற்றி நீங்கள் தங்களுக்குள் கலந்து ஆலோசனை செய்யுங்கள். எவ்விதத்திலாவது செய்தி சென்று சேர வேண்டும். செய்தித்தாள் மூலமாக சேவை நடைபெற வேண்டும் ஆனால் அது இன்னும் நடைபெறவில்லை. ஒரு குழுவாக, ஒருவரை ஒருவர் புரிந்து, சகயோகி ஆகி எல்லைக்கு அப்பாற்பட்ட சேவையில் எல்லையற்ற ரூபத்தை உருவாக்க வேண்டும்

இந்தக் குழுவில், எவ்வாறு பாப்தாதா விரும்புகின்றார்களோ, அவ்வாறே நாம் 100% செய்து காண்பிப்போம் என்ற இந்த ஊக்கம் அனைவரிடமும் வெளிப்படையான ரூபத்தில் இருக்கிறது. எவ்வாறு இது வெளிப்படையான ரூபத்தில் இருக்கிறதோ அவ்வாறே அது பூர்த்தியாகி விடும். அனைவருடைய மனதில், லௌகீக காரியத்திலிருந்து அனைவரும் முழுவதுமாக சமர்ப்பணம் ஆகி விட வேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது. அந்த நாளும் அருகாமையிலேயே உள்ளது ஆனால் எப்பொழுது மனதால் அர்ப்பணம் ஆவீர்களோ அப்பொழுதே

அந்த நாள் வரும். பிறகு, லௌகீக கடமைகளை அர்ப்பணம் செய்வதில் அதிக நேரம் ஆகாது. இம்முறை மனதால் சமர்ப்பணம் ஆகி விடுங்கள். யாருடைய முடிவு சிறப்பானதாகப் பார்க்கப்படுமோ அதன் அனுசாரமாக எண் வழங்கப்படும். பட்டி நடக்கிறதோ இல்லையோ ஆனால் மதுவனமே பட்டிதான். மதுவனத்திற்கு வந்து கொண்டே இருப்பீர்கள் மேலும் அமரர் ஆவதற்கான தன்னுடைய சான்றினை அளித்துக் கொண்டே இருப்பீர்கள். அனைத்தையும் விட உயர்ந்த சமர்ப்பணம், எண்ணங்களின் சமர்ப்பணம் செய்வதே ஆகும்! எந்த வீணாண எண்ணமும் வரக்கூடாது இந்த எண்ணங்களின் காரணத்தினால் தான் நேரம் மற்றும் சக்தி விரயம் ஆகின்றது. எனவே, சங்கல்பத்தினாலும் கூட சம்பூரண சமர்ப்பணம் ஆக வேண்டும். மனதில் இருக்கும் உற்சாகத்தை இப்பொழுது நடைமுறையில் கொண்டு வர வேண்டும். நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋❋

## 06.12.1969 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சரள சுபாவத்தின் மூலம் புத்தியை விசாலமானதாகவும், தொலைநோக்கு உடையதாகவும் ஆக்குங்கள்!

இன்றைய சபையில் எத்தகைய விசேஷமான நறுமணம் உள்ளது மற்றும் எத்தகைய விசேஷமான கவர்ச்சியும் உள்ளது? அனைவருக்குமே அன்பு இருக்கத் தான் செய்கிறது. நீங்கள் எதற்காக அழைக்கப்பட்டிருக்கிறீர்கள்? இங்கு வந்திருக்கும் அனைவரும் திரும்பிச் செல்வதற்கு தயாராகி வந்திருக்கிறீர்கள் என்று புரிந்து கொள்ளலாமா? எவர்ரெடி (eveready)யாக இருப்பவர்கள், சதா தயார் நிலையிலேயே இருக்கிறார்கள். அழைப்பு கிடைத்தவுடன் ஒரு வினாடியில் தன்னுடைய மீதம் இருக்கும் அனைத்தையும் அடக்கவும் இயலும் மற்றும் தாண்டவும் இயலும், நாடகத்தின் அழைப்பிற்கு (பிரம்மாபாபாவிற்கு) எவ்வளவு நேரம் எடுத்தது என்பதை நடைமுறையில் பார்த்தீர்கள் அல்லவா! ஒரு பக்கம் அடக்க வேண்டும். இன்னொரு பக்கம் உயரம் தாண்டி குதித்திட வேண்டும். இந்த இரு காட்சிகளைக் கண்டீர்கள். இது நாடகத்தில் எதற்காக நடந்தது? கற்பிப்பதற்காக நடந்தது. எனவே, அத்தகைய தயார் நிலையில் இருப்பவர் ஆக வேண்டும். இப்பொழுது தயாராக இருப்பவர்களின் வரிசை ஆரம்பமாகி விட்டது. இந்த வரிசையில் யாருடைய எண்ணும் வர முடியும். உங்கள் அனைவருடைய எண்ணத்தில் உள்ளது ஒருபொழுதும் நடைபெறாது ஆனால் நடைபெறும் பொழுது எளிதாக நடைபெறும். இந்த பிராமண குலத்தின் பழக்கம் ஆரம்பமாகி விட்டது. இந்த பழக்கம் (திடீரென்று சரிரம் விடுதல்) கூட நாடகத்தில் ஏன் உருவாகி இருக்கின்றது என்பதும் கூட மிகவும் மறைமுகமான ரகசியம் ஆகும். எனவே, விரைவாக அடக்கிக் கொள்ள இயல வேண்டும் மற்றும் தாண்டவும் இயல வேண்டும்; இதற்கான முயற்சியை முதலிலிருந்தே செய்து விடுங்கள்.

ஒடுக்கும் (அடக்கும்) சக்தி எவரிடம் இருக்க இயலும்? சரள சுபாவம் உடையவர்களிடம் ஒடுக்கும் சக்தி சகஜமாக வர இயலும். சரள சுபாவம் உடையவர்கள் அனைவருடைய சகயோகியாகவும் இருப்பார்கள். யார் அனைவருடைய சினேகியாக இருக்கிறார்களோ அவர்களுக்கு அனைவரின் மூலம் சகயோகம் கிடைக்கிறது. ஆகையினால், அவர்களால் அனைத்து விஷயங்களையும் எளிதாக எதிர்கொள்ளவும், அடக்கவும் இயலுகிறது. மேலும் எந்தளவு சரள சுபாவம் உடையவர்களாக இருப்பார்களோ, அந்தளவு மாயா குறைவாகவே எதிர்க்கும். அவர்கள் அனைவரின் அன்பிற்குரியவர்களாக இருப்பார்கள். சரள சுபாவம் உடையவர்களுக்கு ஒருபொழுதும் வீண் எண்ணம் எழாது, நேரம் வீணாகாது. வீண் எண்ணம் எழாத காரணத்தால் அவர்களுடைய புத்தி விசாலமாகவும், தொலைநோக்குடனும் இருக்கின்றது. ஆகவே அவர்கள் முன்பு, எந்த ஒரு பிரச்சனையும் எதிர்க்க இயலாது. எந்தளவு சரளத்தன்மை இருக்குமோ அந்தளவு தூய்மையும் இருக்கும். தூய்மை அனைவரையும் தன்பால் கவர்ச்சிக்கின்றது. தூய்மை என்றால் சத்தியம் மற்றும் சுத்தம் என்று பொருள். எப்பொழுது தன்னுடைய சுபாவத்தை சரளம் ஆக்குவீர்களோ அப்பொழுதே சத்தியம் மற்றும் தூய்மை இருக்கும். சரள சுபாவம் உடையவர்கள் பல உருவங்களை உடையவராகவும் ஆக இயலும். மிருதுவான பொருளை எத்தகைய உருவமாகவும் வடிவமைக்க இயலும். எனவே, இப்பொழுது தங்கம் ஆகியிருக்கிறீர்கள். எனினும், தங்கத்தை இப்பொழுது நெருப்பில் உருக்குங்கள், அப்பொழுதே வளையவும் இயலும். இந்தக் குறையின் காரணத்தாலேயே சேவையின் வெற்றியில் குறை ஏற்படுகிறது. தன்னை எவ்வாறு வளைப்பது? இதற்காகவே பட்டிக்கு வந்திருக்கிறீர்கள்.

ஒன்று வளைந்துகொடுக்கும் சக்தி, மற்றொன்று கட்டுப்படுத்தும் சக்தி. வளைந்து கொடுப்பது என்றாலும் எவ்வளவு நேரத்தில் வளைந்து கொடுக்க வேண்டும்? வளைந்து கொடுக்க வருகிறது எனினும், அவ்வப்பொழுது அதிக சமயம் எடுக்கிறது. வளைந்து கொடுப்பதற்கு காலதாமதம் ஆக்கக் கூடாது என்ற இந்த சங்கல்பம் செய்ய வேண்டும். சங்கல்பம் செய்யப்பட்டது மேலும் வெற்றி கிடைத்தது. உங்களுடைய ஒவ்வொரு எண்ணம், ஒவ்வொரு வார்த்தைக்கும் வெற்றி

கிடைக்கும்படி, இந்த பட்டியின் மூலம் பரிபக்குவம் ஆகிச் செல்ல வேண்டும். அவர்கள் (உலகத்தினர்) ரித்தி சித்தியை அடைகின்றனர், ஆனால் இங்கு அடைவது யோகத்தின் ரித்தி சித்தி ஆகும். நினைவினுடைய ரித்தி சித்தி என்றால் என்ன என்பதையும் கற்றுக் கொள்ள வேண்டும். யார் வெற்றியை அடைகிறார்களோ, அவர்களுடைய எண்ணம், வார்த்தை மற்றும் ஒவ்வொரு செயல் வெற்றிகரமானதாக ஆகின்றது. ஒரு எண்ணம் கூட வீணாக எழாது. வெற்றி பெறக்கூடிய சங்கல்பமே எழும். யாருடைய ஒரு சங்கல்பம் கூட வெற்றி பெறாமல் இருப்பதில்லையோ அவர்களையே சேவாதாரி என்று சொல்லப்படுகிறது. அதாவது வெற்றி கிடைக்க முடியாத எந்தவொரு சங்கல்பமும் எழக்கூடாது. உங்களுடைய ஒவ்வொரு சங்கல்பத்திற்கும் மதிப்பு உள்ளது ஆனால் எப்பொழுது தனக்குத் தான் மதிப்பு அளிப்பீர்களோ அப்பொழுது அனேக ஆத்மாக்கள் கூட ரத்தினங்களாகிய உங்களுடைய மதிப்பை அறிவார்கள்.

இந்த பட்டியின் மூலம் ஒவ்வொருவருடைய முகமும் சைத்தன்ய அருங்காட்சியமாக மாறி வெளி வர வேண்டும். பல அருங்காட்சியங்களை நீங்கள் உருவாக்கி இருக்கிறீர்கள் ஆனால் இப்பொழுது ஒவ்வொருவரும் தனது முகத்தை சைத்தன்ய அருங்காட்சியகமாக ஆக்க வேண்டும். இந்த சைத்தன்ய, முகம் என்ற அருங்காட்சியகத்தில் எத்தனை சித்திரங்கள் உள்ளன? இந்த முகம் என்ற அருட்காட்சியகத்தில் எந்தெந்த சித்திரத்தை மாட்டுவீர்கள்? அருங்காட்சியத்தில் முதலில் சித்திரங்களை அமைப்பார்கள். பின்னர், அலங்காரம் செய்யப்படுகிறது. அதன் பின் திறப்பு விழா நடத்தப்படுகிறது. பிறகு கருத்துக்கள் எழுதி வாங்கப்படுகின்றன. உங்களுடைய இந்த சைத்தன்ய அருங்காட்சியகத்தில் மூன்று முக்கிய சித்திரங்கள் உள்ளன. பிருக்குட்டி, கண்கள் மற்றும் வாய். இவற்றின் மூலமாகவே உங்களுடைய நினைவு, விருத்தி திருஷ்டி மற்றும் வார்த்தைகள் அறியப்படுகின்றன. திரிமூர்த்தி லட்சுமி நாராயணன் மற்றும் ஏணிப்படி ஆகிய இந்த மூன்றும் முக்கியமான சித்திரங்கள் அல்லவா? இவற்றில் முழு ஞானமும் அடங்கியிருக்கிறது. அவ்வாறே, இந்த முகத்தில் அனாதியிலிருந்தே இந்த சித்திரங்கள் பொருந்தி இருக்கின்றன. தொலைவில் இருந்தே இந்த சித்திரங்கள் தன்பால் வசீகரிக்கும்படி இவற்றினை அலங்காரம் செய்ய வேண்டும்.

கவர்ச்சிக்கப்படாமல் எவரும் இருக்க முடியாது என்கிற மாதிரி அலங்கரிக்க வேண்டும். நீங்கள் அருங்காட்சியகத்தை உருவாக்கும் பொழுது, யாரையும் அழைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டால், தொலைவில் இருந்தபடியே கவர்சிக்கும் அளவு அலங்காரம் செய்வதற்கு முயற்சி செய்கிறீர்கள் அல்லவா! அவ்வாறே, நீங்கள் ஒவ்வொருவரும் தன்னுடைய முக அருங்காட்சியகத்தை தயார் செய்ய வேண்டும். என்னவெல்லாம் கேட்டீர்களோ அவற்றை ஆழமாகச் சிந்தித்து ஒவ்வொரு நரம்பிலும் நிரப்ப வேண்டும். யாரெல்லாம் எந்தளவு ஆழமாகக் கேட்கின்றார்களே அந்தளவு தன்னுடைய நடத்தையில் பிரத்யட்ச ரூபத்தில் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்த சமஸ்காரங்களை பிரத்யட்சம் செய்வதற்காக ஒவ்வொரு விஷயத்தின் ஆழத்தில் செல்லுங்கள். மேலும் தன்னுடைய ஒவ்வொரு நரம்பிலும் அந்த சமஸ்காரத்தை நிரப்புங்கள். எந்த ஒரு விஷயத்தையும் தனக்குள் நிரப்புவதற்காக என்ன செய்யப்படுகிறது? ஒன்று ஆழத்தில் செல்லப்படுகிறது மற்றும் உள்ளுக்குள் பதிய வைக்கப்படுகிறது. இடித்து இடித்து உறுதியாக்கப்படுகிறது. இடிப்பது என்றால் ஒவ்வொரு விஷயத்தையும் ஆழமாக பதியவைப்பதாகும். இந்த பட்டியில் சமஸ்காரங்களை பிரத்யட்ச ரூபத்தில் கொணவர்வதற்கான உறுதிமொழி எடுத்துக் கொண்டு செல்ல வேண்டும். எந்தளவு தந்தையை பிரத்யட்சம் செய்வீர்களோ அந்தளவு தன்னை பிரத்யட்சம் செய்வீர்கள். தந்தையை பிரத்யட்சம் செய்வதன் மூலம் தந்தையின் கூடவே தன்னுடைய பிரத்யட்சமும் ஏற்படும். அத்தகையவராக ஆக வேண்டும் மற்றும் ஆக்க வேண்டும், புரிந்ததா?

இந்த குழுவிற்கு என்ன விரும்புகிறீர்களோ அதைச் செய்ய இயலுகிற சக்தி உள்ளது. சங்கல்பம் மட்டும் செய்தால் போதும் சிருஷ்டியே மாறிவிடும். அத்தகைய சக்திசாலியான ஆத்மாக்களாக இருக்கின்றீர்கள் ஆனால் இப்பொழுது என்ன சக்திசாலியான சங்கல்பம் செய்ய வேண்டும்? அதை மீண்டும் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும்.

சாதாரணமானவர்கள் எவரும் மதுவனத்தில் கால் வைக்க இயலாது என்ற மகிமை மதுவனத்திற்கு உள்ளது. மதுவனம் என்பது சௌபாக்கியத்தின் ரேகை ஆகும். இந்த கோட்டுக்குள் வேறு எவரும்

கால் பதிக்க இயலாது. இது அன்பின் ரேகை ஆகும். இந்த அன்பின் வளையத்திற்குள் பாப்தாதா இருந்து வருகின்றார்கள் என்பதை உங்கள் அனைவருக்கும் பாப்தாதா புரிய வைக்கின்றார்கள். தன்னுடைய தலையைத் துண்டித்து வைத்தாலும் கூட இதற்குள் வேறு எவரும் வர இயலாது. சாகார உருவில் அன்பு கிடைப்பது என்பது ஒன்றும் சிறிய விஷயம் அல்ல. வருங்காலத்தில் எப்பொழுது அனைவரும் அழுவதைக் காண்பீர்களோ, அப்பொழுது உங்களுக்கு இந்த அன்பின் மதிப்பு தெரிய வரும். அழுதபடி உங்களுடைய பாதங்களில் விழுவார்கள். நீங்கள் அனைவரும் அன்புக் கடலையே (பாபா) தனக்குள் அடக்கி வைத்திருக்கிறீர்கள். அவர்கள் ஒரு துளிக்காக தாகத்துடன் இருப்பார்கள். இத்தகைய சௌபாக்கியம் எவருக்காவது கிடைக்க இயலுமா? சர்வசம்பந்தங்களின் சுகம் மற்றும் ரசனை ஆத்மாக்களாகிய உங்களுக்குள் என்ன நிறைந்து இருக்கிறதோ, அது வேறு எவருக்கும் இருக்க இயலாது. எனவே, நாடகத்தில் தனக்குக் கிடைத்துள்ள இவ்வளவு உயர்ந்த பாக்கியத்தை எதிரில் வைக்க வேண்டும். எதிரில் வைப்பதால் அதற்குக் கைம்மாறு செய்ய வேண்டும் என்பது தானே நினைவு வரும். நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 20.12.1969 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# தெளிவான நினைவு மூலம் திட்டங்களின் வெற்றி!

இன்று பாப்தாதா என்ன பார்த்துக் கொண்டு இருக்கின்றார்கள்? எதைப் பார்ப்பதற்காக, என்ன செய்வதற்காக வந்திருக்கின்றார்கள்? இன்று பாப்தாதா தன்னுடைய மிக அன்பான குழந்தைகளை ஒரு உறுதிமொழி செய்விப்பதற்காக வந்திருக்கிறார்கள். உறுதிமொழி செய்வதில் இந்த ஆத்மாக்கள் ஆதியிலிருந்தே கைதேர்ந்தவர்கள். எவ்வாறு ஆரம்பத்தில் உறுதிமொழி செய்வதில் எவரும் தாமதிக்கவில்லை, எதையும் யோசிக்கவில்லை. இவ்விதமே இப்பொழுது கூட பாப்தாதா உறுதிமொழி பெறுவதற்காக வந்திருக்கின்றார்கள். முழு நாடகத்தில் அனேக ஆத்மாக்களுக்கு மத்தியில் ஆத்மாக்களாகிய நீங்கள் தான் தைரியசாலியாக பிரசித்தி பெற்று இருக்கின்றீர்கள். தைரியம் கொண்டதால், பாப்தாதாவிற்கு அருகாமையில் இருந்தீர்கள், மேலும் அன்பையும் பெற்றீர்கள், உதவியையும் அடைந்தீர்கள் மற்றும் உதவியும் செய்தீர்கள். அந்த சமஸ்காரங்களை மீண்டும் சோதனை செய்வதற்காக வந்திருக்கின்றார்கள். அனைவரும் சதா தயாராக இருப்பவர்கள் தானே! இப்பொழுதிலிருந்து ஒற்றுமை, தூய்மை, மென்மை, இனிமை மற்றும் எண்ணம், சொல், செயலில் மகான் தன்மை ஆகிய இந்த விஷயங்கள் ஒவ்வொருவருடைய ஒவ்வொரு அடியிலிருந்தும் வெளிப்பட வேண்டும் என்பதுவே உறுதிமொழி. பட்டிக்குப் பின்னர், சேவை மைதானங்களுக்குச் செல்ல வேண்டும் என்று ஏற்கெனவே சொல்லப்பட்டது அல்லவா? அந்த நாள் நினைவில் உள்ளது அல்லவா? உலகத்தினர் அனைவரும் என்ன கூறினார்கள்? இவர்கள் ஒரே அச்சிலிருந்து வெளிப்பட்டவர்கள், அனைவருடைய விஷயமும் ஒன்றாகவே உள்ளது, அனைவருடைய பழக்க வழக்கம், அனைவருடைய ஈர்ப்பு எங்கு பார்த்தாலும் ஒரே மாதிரியாகத் தெரிகின்றது என்பதே அனைவரின் வாயிலிருந்தும் வெளிப்பட்டது. அது எதனுடைய பிரபாவமாக வெளிப்பட்டது? அவ்யக்த பாலனையின்

பிரபாவம். வியக்தத்தில் இருந்தபோதிலும் அனைவருக்கும் அவ்யக்த ஃபரிஷ்தாக்களாக காட்சியளித்தீர்கள். அந்த 16-ஆண்டுகால பட்டி போல இது 16-நாட்களுக்கான பட்டி. உலகை மாற்றுவதற்காக இவர்கள் மாற்றமடைந்து வந்திருக்கின்றனர் என்பது இப்பொழுதிலிருந்தே ஒவ்வொருவருக்கும் தெரிய வேண்டும். முழு தெய்வீக பரிவாரத்திற்கும் இந்த குழுவின் மீது விசேஷ பார்வை உள்ளது. எனவே, விசேஷ ஆத்மாக்களாகிய நீங்கள் தன்னுடைய சிறப்புத்தன்மையைக் காண்பிக்க வேண்டும். என்ன சிறப்புத்தன்மையைக் காண்பிக்க வேண்டும்? ஏற்கெனவே கூறப்பட்ட ஐந்து விஷயங்களைக் காண்பிக்க வேண்டும். எப்பொழுது இந்த 5-விஷயங்களை ஒவ்வொரு செயலிலும் நினைவு செய்வீர்களோ அப்பொழுதே விசேஷ ஆத்மாக்களாக அனைவருக்கும் காட்சியளிப்பீர்கள். தனக்குள் விசேஷத்தன்மையை கொணரும்பொழுதே தந்தையைக் கூட பிரத்யட்சம் செய்ய இயலும்.

தன்னுடைய சம்பூர்ண சமஸ்காரங்களினால் தான் தந்தையை பிரத்யட்சம் செய்ய இயலும். சேவையின் திட்டங்களினால் மட்டும் அல்ல ஆனால் தன்னுடைய சம்பூர்ண சமஸ்காரங்களினாலும், தன்னுடைய சம்பூர்ண சக்தியினாலும் தந்தையை பிரத்யட்சம் செய்ய இயலும். திட்டங்களைத் தீட்டத்தான் வேண்டும் எனினும் திட்டங்களின் கூடவே தன்னுடைய முழுமையான அன்பும், தெளிவான நினைவும் இருக்கும்பொழுதே திட்டங்கள் வெற்றி பெறும். எவ்வித கலப்படமும் இருக்கக்கூடாது. தெளிவான நினைவின் மூலம்தான் வெற்றி பெற இயலும். திட்டம் தீட்டும் முன்னரே தெளிவான நினைவில் இருக்கின்றோமா என்று சோதனை செய்யுங்கள். ஆரம்பத்தில் செய்த வாக்குறுதி என்ன, அந்தப் பாடல் நினைவு இருக்கிறது அல்லவா? அதை மீண்டும் சாகார ரூபத்தில் கொணர வேண்டும். அதாவது புத்தியின் ஈடுபாடு உங்கள் ஒருவரிடம் தான் இருக்கின்றது என்பதன் காட்சி சாகார ரூபத்தில் அனைவருக்கும் ஏற்பட்ட வேண்டும். என்ன செய்வதற்காக வந்திருக்கின்றீர்கள் மற்றும் என்ன பார்ப்பதற்காக வந்திருக்கின்றீர்கள் என்பது இப்பொழுது புரிந்ததா? விதவிதமான விஷயங்களின் பேச்சு பாபாவிற்கு பிடிக்கிறது. இது உரையாடல் ஆகும். இதில் எவராவது தோல்வி அடைகின்றனரா? இப்பொழுதோ நீங்கள் அனைவரையும் தோல்வியுறச் செய்பவர்கள் ஆகி விட்டீர்கள். தோல்வி அடைய

விடுவதில்லை, இதுவும் சரிதான் எனினும் சில விஷயங்களின் தாக்கத்திற்கு ஆளாகிறீர்கள். தன்னுடைய விஷயத்தில் வெற்றியாளர் ஆவதற்கான கலையைக் கற்றுக் கொள்ள வேண்டுமெனில் குழந்தைகளிடமிருந்து கற்றுக் கொள்ள இயலும். அந்த சிறிய குறை மட்டும் அழிந்து விட்டால் இந்த அனைத்து ஆத்மாக்களும் உங்கள் அனைவரிடமும் பலியாகி விடுவார்கள். எவ்வாறு நீங்கள் அனைவரும் பாப்தாதாவிடம் பலியாகி இருக்கிறீர்களோ, அவ்வாறே உங்களுடைய பக்தர்கள் சக்திகளாகிய உங்களிடம் பலியாக வேண்டும் ஆனால் அந்த குறை மட்டும் நீங்க வேண்டும். எந்த விஷயத்தின் தாக்கத்திற்கு ஆளாகிறீர்களோ, அந்த விஷயம் அழிந்து விட வேண்டும். அனைவரையும் விட புத்திவான்களாக ஆகி விட்டீர்கள், உடனடியாக வியாபாரம் செய்து விட்டீர்கள். முழு சிருஷ்டியின் ஆத்மாக்களின் முன் தைரியசாலியாகவும் இருக்கின்றீர்கள், புத்திசாலிகளாகவும் இருக்கின்றீர்கள். ஆகையினால், அனைவரையும் விட புத்திசாலி குழந்தைகளின் குழு இந்தக் குழு என்று பாப்தாதா கூறுகின்றார்கள். தைரியசாலிகளாகவும் இருக்கின்றீர்கள். பிறர் எவ்வளவு தான் தைரியம் கொண்டிருந்தாலும், உடன் தானம் மகா புண்ணியம் என்று நீங்கள் கொண்டிருந்த தைரியம் வேறு எவரும் கொண்டிருக்க முடியாது. நதிகளில் அனைவரும் ஸ்நானம் செய்கின்றனர் ஆனால் நீங்கள் கடலில் ஸ்நானம் செய்கின்றீர்கள். கடலில் ஸ்நானம் செய்வதற்கும் மற்றும் நதிகளில் ஸ்நானம் செய்வதற்கும் வேறுபாடு உள்ளது அல்லவா? இதில் தேர்ச்சியும் பெற்றுவிட்டீர்கள். இப்பொழுது தேர்ச்சி பெறுவதற்கு ஒரு விஷயம் மீதம் உள்ளது. அந்த ஒரு விஷயத்தில் குறைவான மதிப்பெண்களே உள்ளன.

எந்த ஒரு உத்தரவும், எப்பொழுது வேண்டுமானாலும் எந்த ரூபத்தில் வேண்டுமானாலும், எவ்விடத்திற்காகவும், எவ்வளவு நேரத்திலும் பிறப்பிக்கப்படலாம். ஒரு நொடியில் தயார் ஆவதற்கான உத்தரவும் பிறப்பிக்கப்படலாம். எனில் நீங்கள் அனைவரும் அதற்குத் தயாராக இருக்கின்றீர்களா, அசுத்த இல்லறத்தை விடுவதற்காக ஏதாவது விஷயத்தை யோசித்தீர்களா என்ன? ஆபரணங்கள், ஆடைகள், குழந்தைகள் ஆகிய எதையும் பார்க்கவில்லை அல்லவா! இதுவோ தூய இல்லறம் ஆகும். இதில் பிறகு இந்த விஷயங்களைப் பார்ப்பதற்கான அவசியம் என்ன உள்ளது. முன்பு அன்பில் மட்டும் திளைத்திருந்தீர்கள்,

அன்பினால் இவை அனைத்தையும் செய்தீர்கள், ஞானத்தினால் அல்ல. அன்பு மட்டுமே அவ்வாறு தயாராக ஆக்கியது. இப்பொழுது அன்பின் கூடவே சக்தியும் உள்ளது. அன்பு மற்றும் சக்தி இருந்த போதிலும் இதில் தயாராக ஆகுவதில் தாமதம் ஏன்? எவ்வாறு துவக்கத்தில், அனைவரும் இத்தனை மணிக்கு மைதானத்திற்கு வர வேண்டும் என்ற அறிவிப்பு கிடைத்தது. அவ்வாறு இப்பொழுதும் மீண்டும் அவசியம் நடைபெறும் ஆனால் வெவ்வேறு ரூபத்தில் நடைபெறும். பாப்தாதா எதிர்காலத்தை அறிந்து உங்கள் அனைவருக்கும் அறிவிப்பு செய்வார் மேலும் நீங்கள் இந்த சேவையின் பந்தனத்தில் தன்னை கட்டுண்டு வைத்துக் கொள்ளலாம் என்று நினைக்கக் கூடாது. பந்தனத்தில் இருந்தாலும் பந்தனத்தில் இருக்கக்கூடாது. எந்த ஒரு ஆத்மாவின் பந்தனத்தில் வருவது என்பது பந்தன மற்றவர்களின் (நிர்பந்தன்) அடையாளம் அல்ல. ஆகையினால் அனைவரும் ஒரு விஷயத்தில் மதிப்போடு தேர்ச்சி (Pass with honour) பெற வேண்டும். எந்த விஷயம் உங்களுடைய கவனத்தில் கூட இருக்காதோ, கனவிலும் கூட இருக்காதோ, அந்த விஷயங்களின் அறிவிப்பு செய்யப்படும். மேலும் அத்தகைய தேர்வில் யார் தேர்ச்சி பெறுவார்களோ அவர்களே மதிப்புடன் தேர்ச்சி பெற்றவர்கள் ஆவார்கள். ஆகையினால், முதலிலேயே சொல்லிக் கொண்டு இருக்கின்றோம். முதலிலேயே சமிக்ஞை கிடைத்துக் கொண்டு இருக்கிறது. இதைத் தான் ஆழத்தில் செல்வது என்று சொல்லப்படுகிறது.

கூர்மையான புத்தி உடையவர்களின் விசேஷத்தன்மை என்னவாக இருக்கும்? கூர்மையான புத்தி உடையவர்கள் எத்தகைய சூழ்நிலையிலும் தன்னை வளைத்துக் கொள்ள இயலும். சூழ்நிலை எத்தகையதாக இருக்கிறதோ அதற்கு ஏற்றார் போல் தன்னை வளைத்துக் கொள்ள இயலும். எதிர் கொள்வதற்கான துணிவு அவர்களிடம் இருக்கும். அவர்கள் ஒருபொழுதும் பயப்படமாட்டார்கள் ஆனால் அதன் ஆழத்தில் சென்று தன்னை அதற்கேற்றார் போல் நடத்துவார்கள். இலகுவாக ஆகும் பொழுதே வளைந்திட இயலும். மென்மை மற்றும் வெப்பம் ஆகிய இரண்டும் இருந்தாலே வளைய இயலும். இவற்றில் ஒன்று குறைவாக இருந்தாலும் வளைய இயலாது. எந்த ஒரு பொருளையும் நெருப்பிலிட்டு மிருதுவாக ஆக்கிய பின்னரே வளைக்கப்படுகிறது. இங்கு எத்தகைய மென்மை மற்றும் வெப்பம் பற்றி குறிப்பிடப்படுகிறது? மென்மை என்பது பணிவு மற்றும் வெப்பம் என்பது

சக்தி ரூபம் ஆகும். பணிவு என்றால் அன்பு சொரூபம். ஒவ்வொரு ஆத்மா மீதும் எவருக்கு அன்பு இருக்குமோ அவர்களே பணிவாக இருக்க இயலும். அன்பு இல்லையெனில், கருணை உள்ளம் உடையவராகவும் ஆக இயலாது. பணிவான உள்ளம் உடையவராகவும் ஆக இயலாது. ஆகையினால், பணிவு மற்றும் சக்தி ரூபம், அதாவது எந்தளவு பணிவு உள்ளதோ, அந்தளவு பிறகு எஜமானாரகவும் இருக்க வேண்டும். சக்தி சொரூபத்தில் எஜமானர் என்ற தன்மையும், பணிவில் சேவை குணமும் உள்ளது. சேவையும் செய்ய வேண்டும் மற்றும் எஜமானாரகவும் இருக்க வேண்டும். சேவாதாரியாகவும் இருக்கின்றீர்கள். மேலும் விஷ்வத்தின் எஜமானர் என்ற போதையும் இருக்க வேண்டும். எப்பொழுது இந்த மென்மை மற்றும் வெப்பம் ஆகிய இரண்டும் இருக்குமோ, அப்பொழுது ஒவ்வொரு விஷயத்திலும் வளைந்து கொடுக்க இயலும் தன்னுடைய புத்தியின் தராசு வெப்பம் மற்றும் மென்மை ஆகிய இரண்டிலும் ஒரே சமமாக இருக்கிறதா? என்பதை ஒவ்வொருவரும் பார்க்க வேண்டும். அவ்வப்பொழுது மிகுதியான பணிவு கூட நஷ்டத்தை விளைவிக்கிறது. மேலும் அவ்வப்பொழுது எஜமானன் என்ற தன்மை அளவுக்கு மீறி இருப்பதுவும் நஷ்டத்தை ஏற்படுத்துகின்றது. ஆகையினால், இரண்டினுடைய சமநிலை தேவை. எந்தளவு சமநிலை இருக்குமோ அந்தளவு மகான் தன்மையும் இருக்கும். எந்த ஒரு விஷயத்தில் மதிப்போடு தேர்ச்சி பெற வேண்டும் என இப்பொழுது புரிந்ததா? இந்த இறுதித் தேர்வை முன்னமே அறிவித்துக் கொண்டு இருக்கின்றோம். ஒவ்வொரு நேரமும் பந்தனம் அற்றவராக இருக்க வேண்டும். சேவையின் பந்தனத்திலிருந்து கூட நிர்பந்தனம் (பந்தனமற்றவர்) ஆக வேண்டும். அறிவிப்பு கிடைத்தவுடன் தயாராகி மைதானத்திற்கு வந்து சேர்ந்து விட வேண்டும். இந்த இறுதித் தேர்வு தக்க சமயத்தில் நடைமுறையில் வெளிப்படும். இந்தத் தேர்வில் ஒருவேளை தேர்ச்சி பெற்றுவிட்டால் மற்றவை ஒன்றும் பெரிய விஷயம் அல்ல. இந்தத் தேர்வில் தேர்ச்சி பெற்றால் அவ்யக்த ஸ்திதி வந்து விடும். சரீரத்தின் உணர்விலிருந்தே விடுபட்டுவிட்டால் மற்றவை என்ன பெரிய விஷயம்! இதன் மூலம் தான் தன்னுடைய அந்த வாழ்க்கைப் படகின் கயிறுகளை எந்தளவு விடுவித்து இருக்கின்றீர்கள் என்பதை அறிய இயலும். ஒன்று தங்கத்தாலான சங்கிலி, மற்றொன்று இரும்பினாலாவது. இரும்புச்சங்கிலியை

விட்டுவிட்டீர்கள் ஆனால் இப்பொழுது தங்கச்சங்கிலியும் மிகவும் நுட்பமானது, இது எவருடைய பார்வைக்கும் புலப்படாது.

எவ்வாறு எந்த ஒரு பந்தனத்திலிருந்தும் விடுபடுகிறீர்கள் அவ்வாறே எளிதாக சரீரத்தின் பந்தனத்திலிருந்தும் விடுபட முடிய வேண்டும். இல்லையெனில், சரீரத்தின் பந்தனத்திலிருந்து விடுபடுவது கூட மிகவும் கடினமானதாக ஆகி விடும். நமது கதி நம்முடைய இறுதி வினாடியின் அடிப்படையிலேயே அமையும். இறுதியில் சரீர உணர்விலிருந்து சகஜமாக விடுபட வேண்டும். இதுவே மதிப்புடன் தேர்ச்சி பெறுபவர்களின் அடையாளம் ஆகும். எப்பொழுது தனது ஆடை இறுக்கமாக இல்லாதிருக்குமோ அப்பொழுதே இது சாத்தியம். ஒருவேளை இறுக்கமாக இருந்தால் எளிதாக விடுபட இயலாது. இறுக்கமாக உள்ளது என்றால் எதன் மீதோ பற்று உள்ளது என்று அர்த்தம். ஒரு வினாடியில் ஆடையைக் களைந்து விட முடியும் அளவு ஆடை தளர்வானதாக உள்ளதா? என்ற விஷயத்தை மட்டும் இப்பொழுது சோதனை செய்யுங்கள். ஒருவேளை எங்கேயாவது மாட்டிக் கொண்டு இருந்தால் களையும் போதும் சிக்கிக் கொள்ளும். ஆகையினாலேயே சதா தயார் நிலையில் இருக்க வேண்டும் என்று சொல்லப்படுகின்றது. யார் ஒவ்வொரு விஷயத்திலும் தயாராக இருப்பார்களோ அவர்களே சதா தயார் நிலையில் இருப்பார்கள். ஒரு வினாடியின் அழைப்பிற்குத் தயார் நிலையில் இருந்து காண்பித்தார் என்பதை நடைமுறையில் பார்த்தீர்கள் அல்லவா! குழந்தைகள் என்ன கூறுவார்களோ என்று யோசித்தாரா? குழந்தைகளை சந்திக்காமல் எவ்வாறு செல்வது என்று யோசித்தாரா? அறிவிப்பு கிடைத்தது, உடனே தயார் நிலையில் இருந்தார். ஆடையிலிருந்து விடுபட்டு இருந்ததால் ஆடையைக் களைவது கூட எளிதாக இருந்தது. ஆகையினால், இந்த முயற்சியை ஒவ்வொரு நேரமும் செய்ய வேண்டும். சரீரத்தில் இருந்தபோதிலும் விடுபட்டு இருந்தார் ஆகையினாலேயே ஒரு நொடியில் விடுபட்டுவிட்டார். இதுவே சங்கமயுகத்தின் மகிமை ஆகும். நீண்ட காலமாக பற்றற்று (விடுபட்டு) இருக்கக்கூடியவர்கள் ஒரு நொடியில் விடுபட்டுவிடுவார்கள். நீண்டகாலமாக பற்றற்று இல்லையெனில், இந்த சரீரத்தின் மீதுள்ள அன்பு (மோகம்) பரிதவித்து வருந்தச் செய்து விடும். ஆகையினால், இதன் மீதும் அன்பு கொள்ளக்கூடாது. இதிலிருந்து எவ்வளவு பற்றற்று இருப்பீர்களோ,

அவ்வளவே விஷ்வத்தின் அன்பானவர் ஆவீர்கள். ஆகவே, இப்பொழுது இந்த முயற்சியே செய்ய வேண்டும். ஏதாவது வியாதி முதலியவை வந்தால் தானே செல்வோம், அந்நேரம் தன்னை சரி செய்து கொள்ளலாம் என்று எண்ண வேண்டாம். அவ்வாறு அல்ல! மகன் தந்தையை பிரதிபலிப்பார் எனும்படி பின்நாளில் விசித்திரமான மரணம் குழந்தைகளுக்கும் ஏற்படும். அனைவருக்கும் ஒன்று போல் இருக்காது. மகன் தந்தையை பிரதிபலிப்பார் என்பதற்கேற்ப சில குழந்தைகளுக்கு நாடகத்தில் விசித்தரமான மரணம் ஏற்படும். யாரிடம் ஒரு விசேஷ குணம் இருக்குமோ அவரே இதைக் கூடச் செய்ய இயலும். மிகக் குறைவானவர்களுக்கே இந்த நடிப்பு உள்ளது. இறுதி வரை கூட தந்தையை பிரத்யட்சம் செய்து கொண்டே செல்வார்கள். இது கூட மிகப் பெரிய பாடம் ஆகும். இறுதி நேரம் கூட தந்தையை பிரத்யட்சம் செய்வார்கள். அத்தகைய ஆத்மாக்கள் அவசியம் சக்திசாலியாக இருப்பார்கள். யாருக்கு நீண்ட காலமாக அசரீரி நிலையில் இருப்பதற்கான பயிற்சி இருக்குமோ, அவர்கள் ஒரு வினாடியில் அசரீரி ஆகி விடுவார்கள். இப்பொழுது நீங்கள் நினைவில் அமர்கிறீர்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள், எத்தகைய தடைகளுக்கு நடுவில் அமர்ந்தாலும், எத்தகைய சூழ்நிலை எதிரில் இருந்தாலும், ஒரு வினாடியில், நினைத்தவுடன் அசரீரி ஆகி விட வேண்டும். ஒரு வினாடியில் அசரீரி ஆகுவது என்பது மிக எளிதானது தான். எனினும், எந்த நேரம், என்ன விஷயம் எதிரில் இருந்தாலும், சேவையில் மிகுந்த சிக்கல் எதிரில் இருந்தாலும், ஒரு நொடியில், ஒரு நொடி கூட அதிகம், சிந்தனையும் செயலும் இணைந்தே நடைபெற வேண்டும். அத்தகைய பயிற்சி தேவை. சிந்தித்த பின்னர், முயற்சி செய்ய கூடாது. இப்பொழுதோ நீங்கள் சிந்திக்கிறீர்கள். அப்பொழுது அந்த நிலையில் நிலைக்கிறீர்கள். சிந்திப்பது மற்றும் நிலைப்பது ஆகிய இரண்டும் இணைந்தே நடைபெறும். சிந்திப்பது மற்றும் நிலைப்பதில் வேறுபாடு இருக்காது என்ற நிலையில் யார் இருப்பார்கள்? சிந்தித்தவுடன் நடந்து விட்டது. இத்தகைய பயிற்சி உள்ளவர்களே சேவைக்கான பொறுப்பை ஏற்க இயலும். அவ்வாறு சிலர் நிமித்தமாக இருக்கிறார்கள் எனினும் மிகக் குறைவாகவே இருக்கிறார்கள். பெரும்பான்மையோர் இல்லை, சிறுபான்மையோரே உள்ளனர். அவர்கள் மீது இங்கேயே மலர் தூவப்படும். அவ்வாறு யார் மதிப்போடு தேர்ச்சி பெறுவார்களோ அவர்கள் மீது துவாபரயுகத்தின் பக்தர்கள், இறுதியில், இந்த சாகார

ரூபத்தில் மலர்களின் மழை பொழிவார்கள். அவர்கள் இறுதி வரை தந்தையை பிரத்யட்சம் செய்து விட்டுச் செல்வார்கள். அத்தகைய சேவை நிறைந்த மரணம் ஏற்படும். இந்த மரணத்தினால் கூட சேவை நடைபெறும். சேவைக்கு குழந்தைகளே நிமித்தமானவர்கள், தாய் தந்தை அல்ல. அவர்கள் மறைமுகமான (குப்த) ரூபத்தில் இருக்கின்றனர். சேவையில் தாய் தந்தை முதுகெலும்பாக உள்ளனர் மற்றும் குழந்தைகள் முன்னிலையில் இருக்கின்றனர். இந்த சேவையின் பாகத்தில் தாய் தந்தையின் நடிப்பு இல்லை. இதில் குழந்தைகள் தான் தந்தையை பிரத்யட்சம் செய்வார்கள். இத்தகைய சேவையின் இறுதியில் பதக்கம் கிடைக்கிறது. அத்தகைய பதக்கம் நாடகத்தில் சில சில குழந்தைக்குக் கிடைக்க உள்ளது. நாம் அத்தகைய பதக்கத்தை பெறுவதற்கு நிமித்தம் ஆக இயலுமா? என்று இப்பொழுது ஒவ்வொருவரும் தனக்குத் தானே தீர்ப்பளியுங்கள். மூத்த சகோதரிகள் மட்டுமே இவ்வாறு ஆக இயலும் என்பது அல்ல. யார் வேண்டுமானாலும் பதக்கத்தை பெறுபவர் ஆக இயலும். புதுப்புது ரத்தினங்கள் கூட அதிசயம் செய்து காண்பிப்பார்கள்.

இப்பொழுது சேவையில் புதுமையைக் கொணர வேண்டும். எவ்வாறு தனக்குள் புதுமையைக் கொண்டு வந்திருக்கிறீர்களோ அவ்வாறு சேவையில் கூட புதுமையைக் கொண்டு வர வேண்டும். புதுமையைக் கொண்டு வருவதற்கு 5-விஷயங்களை நினைவில் வைக்க வேண்டும். இவர்கள் எங்கிருந்து வந்திருக்கிறார்கள் என்று துவக்கத்தில் பேசப்பட்டது அல்லவா! ஆனால், ஆரம்பத்தில் வார்த்தைக்கு சக்தி இல்லாமல் இருந்தது. இப்பொழுது உங்களுடைய பேச்சில் சக்தி வந்து விட்டது ஆனால் அலௌகீக ஸ்திதியின் பலம் மறைமுகமாகி விட்டது, மறைந்து விட்டது. ஆகவே இப்பொழுது மீண்டும் அத்தகைய அலௌகீக தன்மையை அனைவருக்கும் காண்பிக்க வேண்டும். எவ்வாறு துவக்கத்தில், பட்டியிலிருந்து வெளிப்பட்ட ஆத்மாக்கள் எந்தளவு சேவைக்கு நிமித்தம் ஆனார்கள், இப்பொழுது மீண்டும் சிருஷ்டியின் காட்சியை மாற்றம் செய்வதற்கு நிமித்தம் ஆகி இருக்கிறார்கள் என்று அனைவரும் உணர வேண்டும். அதை விட இப்போதைய சேவை உயர்ந்தது. பல ஆயிரக்கணக்கான மக்களுக்கு நடுவில் இருந்தாலும் தொலைவில் இருந்தே நீங்கள் அலௌகீக மனிதராகத் தென்பட வேண்டும். அத்தகைய சக்தி சொரூபம் மற்றும் அன்பின் ரூபமாக ஆக

வேண்டும். இவர் ஒரு அலௌகீக மனிதர் என்று எந்தவொரு அஞ்ஞானியும் புரிந்து கொள்ள முடிந்தது என்று சாகார தந்தையைப் பற்றி வர்ணனை செய்கிறீர்கள். ஆயிரக்கணக்கானோருக்கு மத்தியில் அவர் வைரமாக ஜொலித்தார். எனவே தந்தையைப் பின்பற்றுங்கள். அவர்களுடைய அதிர்வுகளைத் தனக்குள் கொண்டு வரக் கூடாது, தன்னுடைய அதிர்வுகளால் அவர்களை அலௌகீகமாக ஆக்க வேண்டும். இந்த புதுமையைக் கொண்டு வர வேண்டும். இப்பொழுது சேவையின் காரணத்தால் உலகத்தினருடன் கொஞ்சம் சேர்ந்திருக்கிறீர்கள். சேவைக்காக சம்பந்தத்தில் இருந்த போதிலும் விடுபட்டு இருப்பதற்கான மந்திரத்தை மறக்கக் கூடாது. அந்த சம்பந்தம் வைக்க வேண்டியதாக இருந்தது ஆகவே வைத்து விட்டீர்கள். இப்பொழுது இவ்விதமான சம்பந்தம் வைப்பதற்கான அவசியம் இல்லை. சேவைக்காக தன்னை இலகுவாக்கிக் கொள்வதற்கும் அவசியம் இல்லை. அந்தக் காலம் முடிந்து விட்டது. இப்பொழுது லௌகீகத்திற்கு மத்தியில் அலௌகீகமாக காட்சியளியுங்கள். அனேக மனிதர்களுக்கு நடுவில் அவ்யக்த மூர்த்தியாகத் தோன்ற வேண்டும். அவர்கள் மனிதர்களாகத் தெரிவார்கள், நீங்கள் அவ்யக்தமாக தோற்றமளியுங்கள். இதுவே மாற்றம் ஆகும். துவக்கத்தில் பிறருடைய அதிர்வலைகளினால் (வைப்ரேசன்) அதாவது தொடர்பினால் தனக்குள் மாற்றம் கொண்டு வந்தீர்களா? ஆகையினாலேயே, பிரம்மாகுமாரிகளிடம் பிடிவாதம் மிகுதியாக உள்ளது என்று கூறினார்கள் ஆனால் அந்தப் பிடிவாதம் நல்லது தான் அல்லவா! இது ஈஸ்வரிய பிடிவாதம். ஆகவே இப்பொழுது அதிர்வலைகளுக்கு நடுவில் இருந்தாலும் தன்னை விடுபட்டவராக மற்றும் அன்பானவராக ஆக்க வேண்டும். இந்த சேவை செய்யமாட்டீர்களா? பேச்சினால் மட்டும் பலியாக மாட்டார்கள். நீங்கள் எவ்வாறு பலியானீர்கள்? உள்ளார்ந்த ஆத்ம அன்பினால் பலியானீர்கள். பிரஜைகள் அனேகரை உருவாக்கி இருக்கிறீர்கள். எனினும் இப்பொழுது பலியாகச் செய்ய வேண்டும். இந்த சேவை மீதம் இருக்கிறது. குறைவான வாரிசுகளையும், அதிகமான பிரஜைகளையும் உருவாக்கி இருக்கிறீர்கள். ஏனெனில் பேச்சினால் பிரஜைகள் உருவாகின்றனர் ஆனால் ஈஸ்வரிய அன்பு மற்றும் சக்தியினால் வாரிசுகள் உருவாகின்றனர். எனவே வாரிசுகளை உருவாக்க வேண்டும். இது முதல் நிலை முயற்சியாகும். பேச்சினால் ஒருவரை மாற்ற இயலாது ஆனால் அன்பு மற்றும் சக்தியினால் ஒரு

வினாடியில் ஸ்வாஹா செய்விக்க இயலும். எத்தனை வாரிசுகளை உருவாக்கி இருக்கிறீர்கள்? எத்தனை பிரஜைகளை உருவாக்கி இருக்கிறீர்கள்? வாரிசுகள் எந்தத் தரத்தைச் சேர்ந்தவர்கள்? மற்றும் பிரஜைகள் எந்தத் தரத்தைச் சேர்ந்தவர்கள்? மேலும் எவ்வளவு சமயத்தில் உருவாகி இருக்கிறார்கள்? போன்ற இவை அனைத்திற்கும் இறுதியில் மதிப்பெண்கள் கிடைக்கும் இறுதித் தேர்வைப் பற்றி இன்று கூறிக் கொண்டு இருக்கிறார்கள். எந்தெந்த கேள்விக்கு மதிப்பெண்கள் கிடைக்கின்றன? ஒன்று இந்தக் கேள்வி இறுதியில் வெளிவரும் முடிவில் (Result) இருக்கும். இரண்டாவது இறுதி வரை சேவை செய்வது மற்றும் மூன்றாவது ஆரம்பத்திலிருந்து இப்பொழுது வரை இருந்த நிலையில் எத்தனை முறை தோல்வி அடைந்திருக்கின்றீர்கள், முழு கணக்கும் அறிவிக்கப்படும். எத்தனை முறை வெற்றியாளர் ஆனீர்கள், எத்தனை முறை தோல்வி அடைந்தீர்கள் மற்றும் எவ்வளவு நேரத்தில் வெற்றி அடைந்தீர்கள். எந்த ஒரு பிரச்சனையையும் எதிர்கொள்வதற்கு எவ்வளவு காலம் ஆனது ஆகியவற்றிற்கு மதிப்பெண்கள் கிடைக்கும். எனவே, முழு வாழ்க்கையின் சேவை, சுய ஸ்திதி மற்றும் இறுதி வரை சேவைக்கான சான்றளித்தல் ஆகிய இந்த மூன்று விஷயங்களும் பார்க்கப்படுகின்றன.

இந்த மூன்று விஷயங்களின் கணக்குவழக்கு என்னென்ன என்பதை இங்கேயே ஒவ்வொருவரும் எதிரில் தெளிவாகப் பார்ப்பீர்கள். மேலும் அவற்றை எதிரில் கொண்டு வந்து தன்னுடைய முடிவை (Result) கூட முன்கூட்டியே சோதனை செய்ய இயலும். மேலும் என்ன குறை உள்ளதோ, அதை நிவர்த்தி செய்ய இயலும். இப்பொழுதும் கூட ஒருவேளை இந்த விஷயங்களில் குறை இருக்கிறது என்றால் அதை நிவர்த்தி செய்து விடுங்கள். சரி செய்து விட இயலும். அரை மணி நேரத்தில் கூட வண்டி சரி செய்து விடுகிறது. 6-மணி நேர தாமதத்தை அரைமணி நேரத்தில் ஈடுகட்டிவிடுகிறது. ஆகவே, இப்பொழுது சரி செய்து கொள்வதற்கான இறுதி வாய்ப்பு ஆகும். இப்பொழுது முடிவைப் பார்க்கலாம். எவ்வாறு துவக்கத்தில் எத்தனை உயர்ந்த ஆத்மாக்கள் நம்மிடம் வந்து சேர்ந்திருக்கின்றனர் என்ற செய்தி வந்தது. அத்தகைய செய்தி மீண்டும் வர வேண்டும். பட்டியின் அர்த்தமே மாறுவது ஆகும். நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋❋

## 25.12.1969 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பற்றற்றவர் ஆவதற்காக உடல் மற்றும் மனதை அடகுப்பொருள் என புரிந்து கொள்ளுங்கள்!

பாப்தாதாவை எங்கு, எதற்காக அழைத்திருக்கிறீர்கள்? இப்பொழுது எங்கு அமர்த்திருக்கிறீர்கள்? மதுவனத்தில்தான் இருக்கின்றீர்கள். எனினும், மதுவனத்தில் கூட தந்தை எங்கு வந்திருக்கின்றார்? பூந்தோட்டத்தில் அமர்ந்து இருக்கிறீர்களா அல்லது கூட்டத்தில் அமர்ந்து இருக்கிறீர்களா? பாப்தாதா ஆன்மீக ஆத்மாக்களைப் பார்த்துக் கொண்டு இருக்கின்றார்கள். அதன் கூடவே ஒவ்வொரு மலரிலிருந்தும் வெளிப்படும் ஆத்மாவின் நறுமணத்தையும் பெற்றுக் கொண்டு இருக்கிறார்கள். எவ்வாறு மனிதர்கள் மலர்களிலிருந்து சாறு எடுக்கின்றார்கள். அதை அத்தர் என்று கூறுகின்றார்கள். அதன் நறுமணம் மிகவும் நன்றாகவும் இனிமையானதாகவும் இருக்கும். எனவே இங்கு மதுவனத்தில் இருந்துகொண்டே இன்று ஆன்மீக உலகை வலம் வந்து கொண்டு இருக்கின்றார்கள். நீங்கள் அனைவரும் கூட ஆத்ம ரூபத்தில் இருந்து கொண்டு ஒவ்வொரு செயலையும் செய்ய வேண்டும். அப்பொழுது சேவை மற்றும் செயலில் பிரகாசம் மிளிரும். இப்பொழுது புதுமையை விரும்புகின்றீர்கள் அல்லவா? அல்லது எவ்வாறு நடைபெற்றுக் கொண்டு இருக்கிறதோ அதிலேயே திருப்தியாக இருக்கிறீர்களா? ஒவ்வொரு செயலில், ஒவ்வொரு சங்கல்பத்தில், பேச்சில் ஆன்மீகத் தன்மை இருக்கும் பொழுதே புதிய பிரகாசம் ஏற்படும். ஆன்மீகத்தன்மை எவ்வாறு வரும்? ஆன்மீகத்தன்மை சதா நிலையாக இருப்பதற்காக என்ன செய்ய வேண்டும்? எப்படி மாற வேண்டும்? (ஒவ்வொருவரும் வெவ்வேறு விடைகளைக் கூறினார்கள்). இந்த அனைத்து விஷயங்களுமே முக்கியமானவைகள், இவற்றில் அனைவரும் உறுதியாகவே இருக்கின்றீர்கள் ஆனால் ஆன்மீகத்தன்மை இல்லாதிருப்பதற்கான

காரணம் என்ன? நம்பிக்கைக்குரியவர்களாக, கீழ்ப்படிபவர்களாக ஏன் ஆக இயலவில்லை? சம்பந்தம் வைப்பதில் குறை உள்ளது. சம்பந்தத்தில் ஏன் குறை ஏற்படுகிறது? நிச்சயபுத்தி என்ற திலகம் அனைவருக்கும் வைக்கப்பட்டு இருக்கின்றது. கேள்வி என்னவென்றால் ஆன்மீகத்தன்மை சதா நிலையாக ஏன் இருப்பதில்லை? தன்னை மற்றும் பிறரை அதாவது, யாருடைய சேவைக்காக நாம் நிமித்தமாக இருக்கிறோமோ அவர்களை பாப்தாதாவின் அமானத் பொருள் (அடகுப் பொருள்) என புரிந்து நடக்க வேண்டும். இவ்வாறு புரிந்து கொள்ளாததே ஆன்மீகத்தன்மையில் நிலைத்திருக்காததன் காரணமாகும். எந்தளவு தன்னை மற்றும் பிறரை அடகுப் பொருள் என புரிந்து கொள்வீர்களோ அந்தளவு ஆன்மீகத்தன்மை வந்து விடும். அடகுப் பொருள் எனப் புரிந்து கொள்ளாததால் கொஞ்சம் குறை ஏற்படுகிறது. மனதில் எண்ணங்களை எழுப்பும் பொழுதும் கூட இந்த மனம் கூட ஒரு அடகுப்பொருள் எனப் புரிந்து எழுப்ப வேண்டும். இந்த அடகுப்பொருளில் எனது என்ற உரிமை கொண்டாடக் கூடாது. நீங்கள் பிறருக்கு, பொறுப்பாளர் (trustee) என்று கூறி புரிய வைக்கிறீர்கள் அல்லவா! அவர்களுக்கு பொறுப்பாளர் என்று கூறுகிறீர்கள் ஆனால் தன்னுடைய மனம், உடல் மற்றும் என்னவெல்லாம் நிமித்த ரூபத்தில் கிடைத்திருக்கிறதோ அதாவது மாணவர்கள் ஆனாலும், சேவை நிலையம் ஆனாலும், ஸ்தூலப் பொருளானாலும் அது அடகுப் பொருளே. அடகுப்பொருள் என்று புரிந்து கொள்வதால் பற்றற்றவர்கள் ஆகி விடுவீர்கள், புத்தி செல்லாது. பற்றற்றவரனால் தான் ஆன்மீகத்தன்மை வரும். அந்தளவு விளக்கில் விழுந்து தன்னை பலியாக்க வேண்டும்.

பலியாக்க வேண்டும் ஆனாலும் எந்த அளவிற்கு பலியாக்க வேண்டும்? இது என்னுடைய சமஸ்காரம் என்று கூறுகின்றீர்கள். இந்த என்னுடைய சமஸ்காரம் என்ற வார்த்தை கூட அழிந்து விட வேண்டும். என்னுடைய சமஸ்காரம் பிறகு எங்கிருந்து வந்தது? என்னுடைய சமஸ்காரங்களின் காரணத்தால் தான் இந்த விஷயங்கள் நடக்கின்றன. உங்களுடைய இயல்பே (Nature) மாறிவிடும் அளவிற்கு இதை அழிக்க வேண்டும். எப்பொழுது ஒவ்வொருவருடைய குணம் மாறுமோ அப்பொழுது உங்களுடைய அவ்யக்த சித்திரங்கள் உருவாகும். சங்கம யுகத்தின் சம்பூரண நிலையின் சித்திரம் எது? ஃபரிஷ்தா நிலையின் சிறப்புத்தன்மை என்ன? ஒன்று முற்றிலும் லேசான நிலை இருக்கும்.

லேசான நிலை இருக்கும் காரணத்தால் எத்தகைய சூழ்நிலையானாலும் அதற்கேற்றாற்போல் தன்னுடைய ஸ்திதியை உருவாக்க இயலும். எனவே பரிஷ்தா நிலையின் முக்கியமான விசேஷத்தன்மை என்னவென்றால் அவர்கள் அனைத்து விஷயங்களிலும் இலகுவாக இருப்பார்கள். சங்கல்பங்களிலும் லேசுத்தன்மை, பேச்சிலும் லேசுத்தன்மை, செயலிலும் லேசுத்தன்மை மற்றும் சம்பந்தத்திலும் லேசுத்தன்மை இருக்கும். இந்த நான்கு விஷயங்களில் இலேசுத்தன்மை இருப்பதுவே ஃபரிஷ்தா நிலையாகும். எந்தளவு இந்த 4-விஷயங்களில் இலேசுத்தன்மை உள்ளது என்று இப்பொழுது பார்க்க வேண்டும். யார் இலேசுத்தன்மையுடன் இருப்பார்களோ, அவர்கள் ஒரு வினாடியில் எந்த ஒரு ஆத்மாவின் சமஸ்காரங்களையும் கண்டறிய இயலும் மற்றும் எத்தகைய சூழ்நிலை எதிரில் வந்தாலும் அதை ஒரு வினாடியில் நிர்ணயம் செய்ய இயலும். இதுவே ஃபரிஷ்தா நிலையின் அடையாளமாகும். எப்பொழுது இந்த அனைத்து குணாதிசயங்களும் ஒவ்வொரு செயலிலும் வெளிப்படுமோ, அப்பொழுதே சம்பூர்ண நிலை அருகாமையில் இருக்கின்றது என்று புரிந்து கொள்ள வேண்டும். சாகார தந்தையிடம் சம்பூரண நிலை எந்த விஷயங்கள் தென்பட்டது. இந்த விஷயங்கள் மூலம் தன்னுடைய சம்பூரண நிலையைத் தானே கண்டறிய வேண்டும்.

இந்தக் குழுவினுடைய முக்கிய குணம் எது? அந்தக் குழு யக்ஞ சினேகி ஆவார்கள் மற்றும் இந்தக் குழு யக்ஞ சகயோகியும் ஆவார்கள். யக்ஞ சகயோகி என்பதில் அனைவரும் தேர்ச்சி பெற்றுவிட்டீர்கள். பாக்கி என்ன செய்ய வேண்டும்? பிறருடைய மனதில் என்ன சங்கல்பம் எழுமோ, அது உங்களிடம் முன்கூட்டியே வந்தடைந்து விடும்; சொல்வதற்கும், கேட்பதற்கும் அவசியம் இருக்காது. இத்தகை நிலையும் ஏற்படும். எப்பொழுது தன்னுடைய எண்ணங்கள் மீது முழு கட்டுப்பாடு இருக்குமோ அப்பொழுது பிறருடைய சங்கல்பங்களை அறிய இயலும். கட்டுப்படுத்தும் விசை (Break) சக்திசாலியாக இருக்க வேண்டும். ஒருவேளை தன்னுடைய சங்கல்பங்களை அடக்க இயலவில்லை எனில் பிறருடைய சங்கல்பங்களைப் புரிந்து கொள்ள இயலாது. எனவே, சங்கல்பங்களின் பெட்டியை மூடிக் கொண்டே செல்லுங்கள் என்று கூறப்பட்டது. எவ்வளவுக்கெவ்வளவு எண்ணங்களை அடக்கும் சக்தி இருக்குமோ, அவ்வளவுக்கவ்வளவு

# 1969 அவ்யக்த முரளிகள்!

பிறருடைய சங்கல்பங்களைப் புரிந்து கொள்வதற்கான சக்தியும் இருக்கும். தன்னுடைய சங்கல்பங்களின் விஸ்தாரத்தில் செல்லும் காரணத்தால் தன்னையே புரிந்து கொள்ள முடியவில்லை எனும் போது பிறரை எப்படிப் புரிந்து கொள்ள இயலும்? ஆகவே இந்த நிலை கூட வரிசைக்கிரமமான முயற்சியின் அனுசாரம் வந்துகொண்டே இருக்கும் இது கூட சம்பூரண நிலையின் அடையாளம் ஆகும். எந்த அளவு சம்பூரண நிலைக்கு அருகாமையில் வந்திருக்கிறோம் என்பதை இந்த விஷயங்கள் மூலம் தனக்குத் தானே கண்டறிய வேண்டும்.

இது ஆல்ரவுண்டர் (all rounder) குழு. ஆல்ரவுண்டரின் லட்சியம் என்னவாக இருக்கும்? லட்சணம் இருக்கிறது எனினும் இன்னும் உயர்ந்த லட்சியம் வைக்க வேண்டும். இது வரையில் நடைமுறையில் இருப்பதன் அனுசாரம் நீங்கள் எத்தகைய ராஜாவாக கணக்கிடப்படுவீர்கள்? இப்போதைய சேவையின் அனுசாரம் எந்த ராஜாவாக ஆவீர்கள்? முயற்சியின் மூலம் பதவி தெளிவாகத் தெரிந்து விடும். சூரியவம்சத்தினராகத் தான் இருப்பீர்கள் எனினும் ஒன்று விஷ்வத்தின் ராஜாவாக இருப்பார். விஷ்வ மகாராஜாவுடன் அவரது ராஜ்யத்தின் ராஜாக்களும் இருப்பார்கள். இப்பொழுது கூறுங்கள் நீங்கள் எந்த ராஜாவாக இருக்கிறீர்கள்? துவக்கத்தில் யார் வருவார்கள்? விஷ்வ மகாராஜா ஆவது மற்றும் விஷ்வ மகாராஜாவின் நெருக்கமான உறவினர் ஆவது இவற்றிற்கான சாதனம் என்ன? விஷ்வத்தின் நன்மையானது நடந்தேத் தீரும். எனினும் விஷ்வத்தின் மகாராஜாவாக ஆகக் கூடியவர்களின் இப்போதைய அடையாளம் என்னவாக இருக்கும்? இது கூட பிராமணர்களின் விஷ்வம் அதாவது சிறிய உலகம். யார் விஷ்வ மகாராஜாவாக ஆகப்போகிறவர்களோ, அவர்களுக்கு இந்த விஷ்வம் அதாவது பிராமண குலத்தின் ஒவ்வொரு ஆத்மாவுடன் சம்பந்தம் இருக்கும். யார் இங்கு இந்த சிறிய குடும்பத்தில், அனைவருடைய சம்பந்தத்தில் வருவார்களோ அவர்களே அங்கு விஷ்வத்தின் மகாராஜா ஆவார்கள். இப்பொழுது கூறுங்கள் நீங்கள் எத்தகைய ராஜா ஆவீர்கள்? சுயம் சிம்மாசனத்தில் அமர்பவர்கள் ஒருவகை மற்றும் அத்தகைய சிம்மாசனதாரி ஆகக்கூடியவர்களின் நெருக்கமான சகயோகியாக இருப்பவர்கள் மற்றொரு வகை. நெருக்கமான சகயோகியாக ஆவதற்காகக் கூட இப்பொழுது என்ன செய்ய வேண்டும்? முழுமையான தெய்வீக பரிவாரத்தின் அனைத்து

ஆத்மாக்களுக்கும் ஏதாவதொரு விதத்தில் சகயோகி ஆக வேண்டும். ஒன்று முழு குலத்தின் சேவைக்கு நிமித்தம் ஆவது, இரண்டாவது வெறும் நிமித்தமாக மட்டும் ஆவது. எனினும் ஏதாவது ஒரு விதத்தில் அனைவருடைய சகயோகியாகவும் ஆக வேண்டும். அத்தகையோரே பிறகு அங்கு அவர்களுடைய நெருக்கமான சகயோகியாக இருப்பார்கள். எனவே, இப்பொழுது தன்னைத்தான் பாருங்கள். விஷ்வ மகாராஜா ஆவீர்கள் அல்லவா? வரிசைக்கிரமமாக விஷ்வ மகாராஜாவாக யார் ஆகின்றார்கள் என்பதையும் நாளுக்கு நாள் பிரத்யட்சமாகப் பார்த்துக் கொண்டே செல்வீர்கள். இப்பொழுது ஆக இயலாது என்பது கிடையாது. இப்பொழுது கூட குதித்தெழ (ஜம்ப்) முடியும். ஈடுகட்டுவதற்கான சமயம் இதுவே ஆகும் ஆனால் மிகக் குறைவான சமயமே உள்ளது. சமயம் குறைவாக உள்ளது ஆகையினால் விசேஷ முயற்சி செய்ய வேண்டும். எனினும், ஈடுகட்ட இயலும்.

விஷ்வ மகாராஜாவின் சமஸ்காரம் என்னவாக இருக்கும்? இன்று பாப்தாதா விஷ்வத்தின் மகாராஜாவை உருவாக்கும் பாடத்தைக் கற்பிக்கின்றார்கள். அவர்களுடைய சமஸ்காரம் என்னவாக இருக்கும்? எவ்வாறு தந்தை அனைவருடைய அன்பிற்குரியவராகவும் இருந்தார். அனைவரும் அவருடைய அன்பிற்கு உரியவராக இருந்தனர். இதை நடைமுறையில் பார்த்தீர்கள் அல்லவா? இவ்வாறு ஒவ்வொருவருடைய உள்ளத்திலிருந்தும் அவர்களுக்காக அன்பு என்ற மலர் மழை பொழியும். எப்பொழுது அன்பு மலர்களை இங்கு பொழிவார்களோ, அப்பொழுதே இத்தனை ஜடச் சித்திரங்கள் மீது மலர் மழை பொழிவார்கள். எனவே, இங்கும் ஆத்மாவாகிய என் மீது எவ்வளவு அன்பு என்ற புஷ்பங்களின் மழை பொழிந்து கொண்டு இருக்கின்றது? என்று தன்னைப் பாருங்கள். அவர்கள் மறைந்திருக்க இயலாது. எந்தளவு அன்பின் புஷ்பம் கிடைக்குமோ அந்தளவு துவாபர யுகத்தில் பூஜைக்கு புஷ்பங்கள் அர்ப்பணிக்கப்படும். சில இடங்களில் சிலர் புஷ்பத்தை அர்ப்பணிப்பதற்காக எப்பொழுதாவது செல்கின்றனர். சில இடங்களில் ஒவ்வொரு நாளும் அனேக புஷ்பங்களின் மழையைப் பொழிகிறார்கள். தெரியுமா இதற்கான காரணம் என்ன? எனவே, அனைவருடைய அன்பு மலருக்குப் பாத்திரமானவர் ஆக வேண்டும் என்ற லட்சியம் கொள்ளுங்கள். அன்பு எவ்வாறு கிடைக்கிறது? ஒவ்வொருவருக்கும் தன்னுடைய சகயோகத்தை அளித்தால்

சகயோகம் கிடைக்கும். மேலும் எத்தனை பேருக்கு இங்கு சகயோகி ஆவீர்களோ அத்தனை பேருடைய அன்புக்குப் பாத்திரமானவர்கள் ஆவீர்கள். அவ்வாறே பிறகு விஷ்வத்தின் மகாராஜாவாக ஆவீர்கள். ஆகையினால் உயர்ந்த லட்சியம் வையுங்கள்.

இன்று ஒரு பக்தி மார்க்கத்தின் சித்திரம் நினைவிற்கு வருகிறது. இன்று பார்த்துக் கொண்டும் இருந்தார்கள். புன்முறுவல் செய்து கொண்டும் இருந்தார்கள். விரல் கொடுக்கக்கூடியவர்கள் தானே என்று பார்த்துக் கொண்டு இருந்தார்கள். விரல் கொடுத்தாகி விட்டதா அல்லது கொடுக்க வேண்டுமா? எந்தளவு விரல் வந்திருக்கிறது? ஒருவேளை இனிமேல் தான் விரலைக் கொடுக்க வேண்டும் என்றால் எந்தளவு விரலைக் கொடுக்க வேண்டுமோ அந்தளவு விரலைக் கொடுக்கவில்லை என்று அர்த்தம். மலையைத் தூக்கவில்லை, ஏன்? அவ்வளவு கனமாக உள்ளதா என்ன? இத்தனை பேருடைய விரல்கள் கிடைத்து விட்டது, பிறகும்கூட மலை ஏன் உயரவில்லை? எப்பொழுது அனைவருடைய சக்தியும் குழுவாகக் (மொத்தமாக) கிடைத்ததோ, அப்பொழுதே வெற்றி கிடைத்ததாக முந்தைய கல்பத்தின் நினைவுச்சின்னம் உள்ளது. ஆகையினால், சிறிது உயர்கிறது பிறகு இறங்கி விடுகிறது. ஒவ்வொருவரும் அவரவர் விரலைக் கொடுத்து கொண்டு இருக்கின்றனர். எனினும் இப்பொழுது குழுவாகக் கொடுக்க வேண்டிய அவசியம் உள்ளது. தன்னுடைய விரலைக் கொடுத்து இருக்கிறீர்கள் எனினும், எப்பொழுது அந்த பலம் வருமோ அப்பொழுது குழுவில் சக்தி நிரம்பி விடும்.

இப்பொழுது சக்தி சேனை பிரத்யட்சம் ஆக வேண்டும் அனைவரும் மலர் ஆகியிருக்கிறீர்கள் ஆனால் இப்பொழுது மலர்ச்செண்டில், ஒற்றுமையான ரூபத்தில் வர வேண்டும். இப்பொழுதோ சில மலர்கள் ஆங்காங்கு தன்னுடைய நிறத்தைக் காண்பித்துக் கொண்டு இருக்கின்றனர், சிலர் தன்னுடைய நறுமணத்தைப் பரப்பிக் கொண்டு இருக்கின்றனர், சிலர் தன்னுடைய ரூபத்தைக் காட்டிக் கொண்டு இருக்கின்றனர் ஆனால் ரூபம், நிறம், நறுமணம் ஆகிய இவை அனைத்தும் இணைந்து பூச்செண்டு ரூபத்தில் வந்து விட்டால், உலகின் முன்பு பிரத்யட்சம் ஏற்படும். குழுவாக, கூட்டாக ஏதாவது புதுமையை உலகிற்கு முன்பு காண்பிக்க வேண்டும். இதற்காக இப்பொழுது திட்டம்

போடுங்கள். ஒவ்வொருவரும் தனித்தனியாக இருக்கும் காரணத்தால் முயற்சி கூட அதிகமாகச் செய்ய வேண்டியதாக இருக்கிறது ஆனால் குழுவாக இருந்தால் குறைந்த முயற்சியில் அதிக வெற்றி கிடைக்கும். சங்கம யுகத்தின் குழுவை வெற்றியுடையதாக ஆக்கினால் சேவையில் வெற்றி கிடைக்கும்.

அனைவரும் தகுதியானவர்கள் ஆனால் சிந்திப்பதுடன் நின்று விடுகின்றனர். இப்பொழுது தன்னுடைய தகுதிகள் மூலம் பிறரையும் கூட தந்தைக்கு அருகாமையில் கொண்டு வருவதற்குத் தகுதி உடையவராக ஆக்குங்கள். இந்தக் குழுவானது ஆத்மாக்களுடைய சம்பந்தத்தை இணைக்கும் அஸ்திவாரம் போடக்கூடிய குழு ஆகும். எவ்வாறு அஸ்திவாரம் போடுவீர்களோ அவ்வாறே அவர்களுடைய எதிர்கால வாழ்க்கை அமையும். அனைத்து விஷயங்களிலும் எந்தளவு தான் உறுதியாக இருப்பீர்களோ அந்தளவு அனேகருடைய அஸ்திவாரத்தை உறுதியாக அமைக்க இயலும். எந்தளவு தனக்குள் அனைத்து தகுதிகளும் இருக்குமோ அந்தளவு தகுதி உடையவர்களே வருவார்கள். ஒருவேளை தனக்குள் தகுதிகள் குறைவாக இருக்கிறது என்றால் தரமும் குறைந்து விடும். ஆகையினால், நாம் அனைவரும் அஸ்திவாரம் போடக்கூடியவர்கள் என்று புரிந்து கொள்ளுங்கள். தன்னுடைய தகுதிகளின் மூலம் தான் தரம் அமையும். எப்பொழுது பாப்தாதாவினுடைய குணங்களை தனக்குள் சமமாகக் கொண்டு வருவீர்களோ, அப்பொழுதே தனக்குச் சமமாக பிறரையும் உருவாக்க இயலும். நல்லது.

✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳

## ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

## பொருளடக்கம்

☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂